# லெனினியக் கட்டத்தில்

# மார்க்சீயத் தத்துவம்

# லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவம்

ML 29

எல். என். சுவரோவ்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600 098

முதற்பதிப்பு: நவம்பர், 1986.
உரிமைப் பதிவு
Code No. B 210
தமிழாக்கம்:
நெல்லை எஸ். வேலாயுதம்

Tamil Translation of
MARXIST PHILOSOPHY
AT THE LENINIST STAGE
By
L. N. Suvorov
Original Published by
Progress Publishers, Moscow.

விலை: ரூ. 30-00

அச்சிட்டோர்:
பி. ஆர். வி. பிரஸ்,
11, சிங்கப்பெருமாள் கோயில் தெரு,
சென்னை-600 005.

# பொருளடக்கம்


பக்கம்

அறிமுகம் ... 1

அத்தியாயம் 1 மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தின் சத்தும் சாரமும் ... 18

1. மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டத்தின் கருத்தமைவின் தோற்றுவாய்கள். ... 18

2. மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டத்தின் மிக முக்கியமான அம்சங்கள். ... 31

அத்தியாயம் 2 அக்டோபர் புரட்சிக்கு முன் லெனினால் வளர்த்துச் செல்லப்பட்ட மார்க்சியத் தத்துவம் ... 55

1. ஒரு புதிய வகைக் கட்சிக்கான போராட்டம். ... 55

2 1905-1907ம் வருடத்திய ருஷ்யப் புரட்சி ...101

3. பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும் (Empirio Criticism) ...119

4. திருத்தல் வாதம் மற்றும் முதலாளித்துவத் தத்துவத்தை எதிர்த்துப் போராட்டம் ...150

5. தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள் ...159

6. ஏகாதிபத்தியம் மற்றும் சோஷலிஸ்ட் புரட்சிகளின் சகாப்தம் ...192

அத்தியாயம் 3 அக்டோபர் புரட்சிக்குப்பின் லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகள் ...246

1. லெனினும் சோவியத் தத்துவமும் ...246
2. சமுதாயத்தின் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பு பற்றி லெனின் ...279
3. 1920 களின் தத்துவார்த்த விவாதங்கள் ...301
4. சோவியத் சோஷலிசக் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிசத்தின் வெற்றியும் லெனினது தத்துவார்த்த மரபுரிமைச் செல்வமும் ...321
5. லெனினது தத்துவார்த்தக் கருத்துக்களும் இன்றையக் கால கட்டமும் ...333

அத்தியாயம் 4 லெனினது தத்துவார்த்த மரபுரிமைச் செல்வத்தின்பால் இன்றையச் சித்தாந்தப் போராட்டம் ...372

1. லெனினியமும் இருபதாம் நூற்றாண்டின் முதலாளித்துவத் தத்துவமும் ...372
2. லெனினியமும் குட்டி முதலாளித்துவத் தத்துவார்த்த நிலவரங்களும் ...391
3. லெனினியமும் சமூக சீர்திருத்தவாதத் தத்துவமும் ...411
4. லெனினியமும் நவீனத் திருத்தல் வாதமும் ...424

முடிப்புரை ...448

# அறிமுகம்

"26வது கட்சிக் காங்கிரசுக்கு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அறிக்கையில், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச்செயலாளர் லியோனித் இலியிச் பிரெஷ்னேவ் கூறியதாவது: முந்தைய எந்த நூற்றாண்டையும்விட இருபதாம் நூற்றாண்டு தன்னுடன் அதிகமான மாற்றங்களைக் கொண்டு வந்தது. இந்த மாற்றங்களுக்கான தெளிவான உறுதியான பங்களிப்புக்களை, சோஷலிச வெற்றிக் கனியைப் பறித்த முதல் நாடும், மகத்தான அக்டோபர் புரட்சியின் தாயகமுமான சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் ஒன்றியத்தைத் தவிர வேறு எந்த நாடும் வழங்கவில்லை. அதன் வெல்லற்கரிய லெனினியப் பதாகை உயர்த்திப் பிடிக்கப்பட்டதின் எழுபதாவது ஆண்டாகும் இது"[1]. சமகால சகாப்தத்திற்கு லெனினியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை இந்த வார்த்தைகள் உள்ளடக்கிக் காட்டுகின்றன.

மானுடச் சிந்தனை வரலாற்றில் எத்தனையோ ஆகச் சிறந்த தத்துவார்த்த மற்றும் சமூக—அரசியல் சித்தாந்தங்கள் இருந்திருக்கின்றன. அவற்றின் தலைவிதி வேறுவிதமாயிருந்தது: அவற்றில் சில ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒளிவிட்டுப் பிரகாசித்து சீக்கிரமே மங்கி மறைந்து போயின. சில சமகாலத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் பின்னர் மதிப்பைப் பெற்றன. எனினும் அவை அனைத்துமே ஒரு பொதுவான சட்டத்தின் ஆளுமைக்குட்பட்டே விளங்கின.

காலப்போக்கில் அவற்றின் தொடர்புடைப் பொறுத்தமும் போய்விட்டன.

இதர சித்தாந்தங்களிலிருந்து மார்க்சிய—லெனினியம் தனித்து நிற்கிறது. அதன் இலட்சியமும் கூட வேறுபட்ட ஒன்றே. மார்க்சும், எங்கெல்சும் இந்தத் தத்துவத்தைப் பறை சாற்றிய கணத்திலிருந்து, மனிதகுலம் மேலும் மேலும் பயணித்துக் கொண்டிருப்பதைப் போன்று காலம் செல்லச் செல்ல அதன் படைப்பாற்றலுடன் கூடிய புரட்சிகரப் பாத்திரம் என்றுமில்லாதபடி மகத்தான ஒன்றாகப் பரிமளிக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் வளர்ச்சிகளில் எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

லெனினியம் அதாவது 20ம் நூற்றாண்டின் மார்க்சியம். அதே இலட்சியத்தைக் கொண்டதாகும். எனவேதான் மார்க்சீயத் தத்துவத்தின் உயிர் மலர்ச்சியில் லெனினியக் கட்டம் என்ற பிரச்சினை இன்று முக்கிய விவாதப் பொருளாகிறது. லெனினது தத்துவார்த்தப் போதனைகள், அவரது சீடர்களால் செழுமைப்படுத்தப்பட்ட அந்த போதனைகள் மட்டுமே இப்பொழுது தத்துவத்தின் விஞ்ஞானப் போக்காக, மார்க்சீயத் தத்துவத்தின் வளர்ச்சியில் நமது சகாப்தத்தின் மார்க்சீயத்தில் பிரதானப் போக்காகத் திகழ்கின்றன.

'20ம் நூற்றாண்டின் இயக்குவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் வளர்ச்சி லெனினுடன் இணைந்தது—அது மார்க்சீயத் தத்துவத்தின் லெனினியக் கட்டம் என்று அழைக்கப்படுகிறது' என்பது உண்மையில் தர்க்கவியலுக்குட்பட்டதுதான். ஏனென்றால் மார்க்ஸ்—எங்கெல்ஸ் ஆகியோரின் மகோன்னத லட்சியத்தினது தலைசிறந்த வாரிசாக விளங்கிய லெனின்தான் மார்க்சிய ஆய்வியலின் வளர்ச்சியில் நவீனக் கட்டத்தைத் துவக்கி வைத்தார். ''வி.ஐ. லெனின் பிறந்த நூற்றாண்டு விழாத் தயாரிப்புக்கள் பற்றி'' என்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஒரு தீர்மானம் சுட்டிக்காட்டு

வதாவது: ''நவீன கால வரலாறு முழுவதுமே லெனின் என்ற நாமத்துடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்கிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ். ஆகியோரின் புரட்சிகரப் போதனை களை லெனின் அற்புதமான முறையில் செழுமைப்படுத் தினார். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தார். மகத்தானதொரு சமுதாயப் புரட்சியை நடத்தி உலகத்தின் முதல் சோஷலிச அரசாங்கத்தை நிறுவினார். உலகம் முழுவதின் வளர்ச்சிப் போக்கிலும் லெனினது கருத்துக்கள் இன்றளவும் மிக ஆழமான தாக்கத் தைக் கொண்டிருக்கின்றன.''[2].

1969-ம் ஆண்டு ஜூன் திங்களில் மாஸ்கோவில் நடந் தேறிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்களது கட்சிகளின் சர்வதேசக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட விளாதிமிர் இலியிச் லெனின் பிறந்த, நூற்றாண்டு விழா உரை வலியுறுத் துவதாவது: ''அது அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந் திருப்பது. ஏனென்றால் அது பிண்டப்பிரமாணமான உண்மை'' என அவரே அழைத்த மார்க்சியத்தைப் பற்றி லெனினது போதனைகளைப் பற்றிப் பேச இன்று நமக்கு அனைத்து உரிமையும் உண்டு. எவ்வாற்றானும், நாம் அதை நியாயப்படுத்தமுடியும்.''[3].

'இன்றைய உலகிற்கு லெனினது கருத்துக்கள் மகத்தான முக்கியத்துவம் வாய்ந்தவை; ஒட்டு மொத்தமாக உலகத்தின் வளர்ச்சி; சமாதானம் மற்றும் சமுதாய முன்னேற்றத்துக் கான போராட்டம், உலகத்திலுள்ள சோஷலிச சமுதாய நாடுகளில் வளர்ச்சியடைந்த சோஷலிசம் மற்றும் கம்யூனி ஸத்தைக் கட்டுதல் ஆகியவற்றைப் பகுப்பாய்ந்து வளர்த்துச் செல்வதில் லெனினது சித்தாந்தப் பாரம்பரியம் மிக முக்கிய மானதும் சாலப்பொருத்தமானதாகவும் உள்ளது' என சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் அண்மைக்கால காங்கிரஸ்கள் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளன.

''அனைத்து மார்க்சிய—லெனினியவாதிகள் மற்றும் அனைத்து உண்மையான புரட்சிகரப் போராளிகளின் புரட்சிகரச் சிந்தனை மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு லெனினியம் ஒரு வழிமுறை'' என ''விளாதிமிர் இலியிச் லெனின் பிறந்த நூற்றாண்டு விழா பற்றிய'' சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டியின் ஆய்வியல் கோடிட்டுக் காட்டியது.[4]

''விளாதிமிர் இலியிச் லெனின் பிறந்த 110வது ஆண்டு விழா பற்றி'' சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானத்தில் உள்ள வார்த்தைகளாவது: லெனினும் போல்ஷ்விக்[5] கட்சியும் வரலாற்றின் முதலாவது வெற்றிகரமான சோஷலிஸ்ட் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்துவது, அதற்கான தயாரிப்புக்களைச் செய்வது ஆகியவற்றுடன் வெகுஜனங்களின் பரந்துபட்ட நடைமுறையுடன் விஞ்ஞான சோஷலிசத்தை இணைத்துச் செல்வது என்ற மகத்தான இலட்சியத்தின்பால்பட்டுச் செயலாற்றின......... லெனினியம் தான் இன்றைய சகாப்தத்தின் மார்க்சியமாகும். அது ஒன்று மட்டுமே சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஒருங்கிணைந்த தொடர்ச்சியான வளர்ந்துவரும் சித்தாந்தமாகும்.''[6].

லெனினியத்தின் புரட்சிகரச் சத்தையும் சாரத்தையும் வருணிக்கும் போது லியோனித் பிரெஷ்னேவ் கூறியதாவது: ''உலகத்திற்கு விளக்கமளிப்பது மட்டுமல்ல அதை மாற்றியமைக்கவும் வேண்டும்'' என்ற மார்க்சின் அறைகூவலுக்கு எந்தவிதத் திசை திருப்பலும் இல்லாமல் லெனின் செவிமடுத்துச் செயல்பட்டார். நடைமுறையுடனும், வர்க்கப் போராட்டத்துடனும் நெருக்கமான தொடர்பேற்படுத்தி சித்தாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது லெனினது அந்தரங்க சுத்தியான குணநலமாகவிருந்தது. பாட்டாளி வர்க்கப்புரட்சி கொடிகட்டிப் பறந்த அந்த நாளில், 20ம் நூற்றாண்டின் புரட்சிகர இயக்கத்திற்கு இந்த குணநலன் அடிப்படைத் தேவையாகவிருந்தது.''[7]

இன்று லெனினியக் கருத்துக்களுக்கு நெறி பிறழாமல் விஸ்வாசத்துடனிருப்பது, கம்யூனிஸ இலட்சியத்திற்கு மனித குலம் முழுமைக்குமான முற்போக்கான வளர்ச்சி இலட்சியத்திற்கு விஸ்வாசத்துடனிருப்பதற்கான ஒரு தொடு கல்லாகும். மனித சமுதாயத்தின் எதிர்காலம் தொடர்பான பிரச்சினைகளுக்கு உண்மையான விஞ்ஞான ரீதியான அணுகும்முறை ஒன்றையே லெனினது கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன. எனவேதான் லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகளின்பால் இத்தகைய தீர்க்கமான சித்தாந்தப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியுள்ளன.

லெனினியத்தின் முக்கியத்துவத்தை திரித்துக் கூறுவது அல்லது ஏகடம் பேசி இழிவு படுத்துவது என்ற நமது எதிரிகளின் அனைத்து முயற்சிகளும் தோல்வியைத்தான் தழுவின. 20ம் நூற்றாண்டின் வரலாறு பூர்வமான அனுபவமும், எல்லாவற்றிற்கும் மேலாக சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியம் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் வளர்ச்சியும் மிக நேர்த்தியான முறையில் லெனினது கருத்துக்களில் பொதிந்துள்ள உண்மையை வெளிப்படுத்திக் காட்டியுள்ளன. நமது இந்நாட்களில், லெனினியம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட, சோதனைகளை வென்று புடம் போட்டெடுக்கப்பட்ட, அனைத்து உண்மையான புரட்சிகரப் போராளிகளதும், விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் ஆய்வியல் என்ற மகோன்னத லட்சியத்தின் மூலவர்களது சீடர்களதும், வழி வந்தவர்களதும் சித்தாந்த ஆயுதமாகும்.

லெனினியத்தின் வளர்ந்தோங்கி வரும் வல்லமையும், நின்று நிலவும் தன்மையும், நமது சகாப்தத்தின் உலகப் புரட்சிப் பரிமாண நடை முறையோடு அது நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். இன்றைய சமுதாய முன்னேற்றத்தின் வடிவங்களை ஒழுங்காக முறைப்படுத்தி விஞ்ஞான ரீதியாக ஆருடம் கூறுவதை வேறு எந்த சித்தாந்தத்தினாலும் செய்ய முடியாது. மானுடத்தின் வளர்ச்சிக்கு சரியான வழி

முறையைத் தீர்மானிக்க மார்க்சிய—லெனினியம் ஒன்றே நம்பற்குரிய நண்பனாக, வழி காட்டியாகப் பணியாற்ற முடியும், சமாதானத்திற்கான, சமுதாய முன்னேற்றம் மற்றும் உண்மையான சமூக நீதிக்கான போராட்டத்தில் மனித குலத்தை சித்தாந்த ரீதியான ஆயுத பாணியாக்க மார்க்சிய—லெனினியத்தினால் மட்டுமே முடியும் என்பதை உலகெங்கணுமுள்ள உழைக்கும் மக்கள் மேலும் மேலும் தேர்ந்து தெளிந்துள்ளனர்.

உலக சமூக வளர்ச்சியின் நவீன கட்டம் மூன்று முக்கிய சமூக சக்திகளின் எதிர் எதிர் செயல் விளைவுகளின் மூலமே தீர்மானிக்கப்படுகிறது. முதலாவது, மார்க்சும், லெனினும் வகுத்தளித்த பாதையை உணர்வு பூர்வமாகப் பின்பற்றும் மக்களையும் நாடுகளையும் உள்ளடக்கிய உலக சோஷலிச சமுதாயம். இரண்டாவது ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் முன்னாள் ஏகாதிபத்திய காலனி மற்றும் அரைக்காலனிகளை ஒழித்து அவ்விடத்தில் அமர்ந்துள்ள இளம் தேசீய ஜனநாயக அரசுகளின் பெரும் குழுக்கள். மூன்றாவது இன்னும் முதலாளித்துவ ஆட்சியின் கீழுள்ள நாடுகள். ருஷ்ய நாட்டில் சோவியத் அதிகாரம் மலர்ந்த ஆரம்ப வருடங்களுக்கு முன்பாகவே லெனின், 20ம் நூற்றாண்டின் சமூக வளர்ச்சியின் முரண்பட்ட இயக்கவியல் பற்றி தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்தார். ஒரு நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் இரண்டிலுமே முதலாளித்தத்துவத்திலிருந்து சோஷலிச மாற்றம் நிகழும் போது ஆறாமை கொள்ளும் முக்கிய சட்டதிட்டங்களை வரையறுத்துக் கொடுத்தார். சமூக வளர்ச்சியின் அனைத்துப் பரிமாணங்களையும் தீர்மானிக்கக் கூடிய முன்னேற்றகரமான சக்தி சோஷலிசமாகத்தான் இருக்க முடியும் என அவர் அறுதியிட்டுக் கூறினார். சோஷலிசத்தைக் கட்டுவதற்கான அடிப்படைச் சட்ட திட்டங்கள் பற்றிய ஒரு சித்தாந்தத்தை லெனின் தயாரித்தார். அதாவது: முதலாளித்தத்துவத்தைவிட மேலான சிறந்த ஒரு புதிய பொருள் முதல், தொழில் நுட்ப

அடிப்படையை உருவாக்குவது--ஒரு புதிய சமுதாய உறவு களை அமைத்து, புதியதோர் சோஷலிச உணர்வையும் பண் பாட்டையும் முகிழ்க்கச் செய்தல்; ஏகாதிபத்தியத்தின் உலகக் காலனி அமைப்பு வெகு சீக்கிரத்திலேயே தகர்ந்து தரைமட்ட மாகி விடும். முதலாளித்துவக் கட்டத்திற்குச்செல்லாமலேயே வளர்ச்சி குன்றிய நாடுகள் சோஷலிச மாற்றத்தைப் பெறக் கூடிய சாத்தியக் கூறு உண்டு என அவர் தீர்க்கதரிசனத் துடன் கூறினார். லெனின் அவர்களது இந்தத் தத்துவக் கூற்றின் மெய்ம்மையை ஆசிய, ஆப்பிரிக்க ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் ஜனநாயகப் போராட்டத்தின் மூலம் நாமறிகிறோம். இறுதியாக முதலாளித்துவ நாடுகளில் நடைபெறும் வர்க்கப் போராட் டங்களின் தோற்றங்களைப் பற்றிக் கவனிக்கும் போது லெனின் கூறியதாவது: ''உலக அரங்கில் ஏகாதிபத்தியம் அதிகரித்த அளவில் தனது செல்வாக்கை இழக்கும். உழைக்கும் மக்கள் தங்களது சக்திகளை ஒரு முகப்படுத்தி வலுப்படுத்தும் போது, முதலாளித்துவ உலகின் உள் முரண் பாடுகள் முற்றி ஏகாதிபத்தியத்தின் தொடர்புகள் இற்றுப் போய் அதன் உள்சேமிப்புகளும் தேய்ந்து அழிந்து போகும்.'' அவர்களால் 'ஜனநாயக நாடுகள்' என்றழைக்கப்படும் அந்த முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் உடைமை வர்க்கத்தினருக்கும் பெரும் பகுதியான உழைக்கும் மக்களுக்குமிடையேயான பொருளாதார அரசியல் மற்றும் சித்தாந்த முரண்பாடுகள் முற்றி மாச்சரியங்கள் அதிகரித்ததின் மூலம் லெனினது மேற் கண்ட முன்னரே மொழிந்த கூற்று முழுமையாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

வரலாற்றின் இன்றையக் காலகட்டத்தில் மனித சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய லெனினது கருத்துக்கள் இருபதாம் நூற்றாண்டின் முழுமையான சமுதாயப் பரிமாணத்தின்மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன என நாம் கூறுவதில் முழுக்க முழுக்க நியாயம் உண்டு. எனவே தான் இன்றும் லெனினது கருத்துக்கள் சாலப் பொருத்த

முடையதாயிருக்கின்றன. 1917ல் மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் போது லெனின் எழுதியதாவது: ''மார்க்சின் ஆய்வு முழுவதும் வளர்ச்சியை முன்னிறுத்திய ஆய்வே. அது நவீன முதலாளித்துவம் பற்றிய தொடர்ச்சியான, முழுமையான, பரிசீலித்துச் செய்யப்பட்ட, பொருட்செறிவுள்ள ஆய்வாகும். **எதிர்வரும்** முதலாளித்துவத்தின் அழிவு, **எதிர்கால** கம்யூனிஸத்தின் **எதிர்கால** வளர்ச்சி ஆகிய இரண்டிற்கும் இந்த ஆய்வை அமுலாக்கும் பிரச்சினையை மார்க்ஸ் எதிர் நோக்கினார் என்பது இயல்பானதொன்றே.''[8] லெனினது படைப்புக்குமே இந்த ஆய்வியல் முழுமையாகப் பொருந்துவதாகும். 1893; 1894ம் ஆண்டுகளில் அவர் தாராள நரோடிசத்தை எதிர்த்துப் போராடத் துவங்கிய நாள் முதலாக எழுதிய கட்டுரைகள் ஆற்றிய உரைகளிலிருந்து 1923ம் ஆண்டு அவர் எழுதிய கடைசிக் கட்டுரை வரை உள்ள படியே பொருள் முதல்வாத இயக்குவியலின் தீவிரமான வழி முறைகளை, 20ம் நூற்றாண்டின் ஏகாதிபத்திய சகாப்தம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சமூகப் பரிமாணங் களைப் பகுப்பாய்வு செய்யும் ஆக்க பூர்வமான அமுலாக்கத் திற்குப் பயன்படுத்தினார் என்பதைப் புலப்படுத்து கின்றன. ருஷ்ய நாட்டில் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி யடைந்த பிறகு லெனின், பொதுவாக உலக சமூக வளர்ச்சியின் புதிய நிலைமைகளைக் கொண்டுவரும் செயலில் ஈடுபட்டார். குறிப்பாக ருஷ்ய நாட்டின் 1917ம் வருடத்திய அக்டோபர் புரட்சி, சோவியத் அதிகாரத்தின் ஆரம்ப வருடங்கள், மற்றும் அக்டோபர் புரட்சியின் தாக்கத்தினால் கிளர்ந்தெழுந்து மேற்கு ஐரோப்பா ஆசிய நாடுகளில் தொடக்க நிலையிலுள்ள கம்யூனிஸ்ட் இயக்கங் களின் பல்வேறு படை அணிகளின் புரட்சிகர நடவடிக்கைகள் ஆகியவற்றின் அனுபவங்களிலிருந்து சித்தாந்த ரீதியான முடிவுகளைக் காண முயன்றார். அத்துடன் எதிர்வரும் உலக முதலாளித்துவத்தின் வீழ்ச்சி, இன்றைய உலகில் சோஷலிசம், கம்யூனிஸத்திற்காக மக்கள் நடத்தும் போராட்டங்களின் வளர்ச்சி ஆகியவற்றின் நிலைமைகளைப் பகுப்பாய்வு செய்

வதற்கும் லெனின் மார்க்சிய வழி முறைகளைக் கையாண்டார்.

லெனினியத்தின் வரலாற்று ரீதியான இலட்சியங்கள் அதன் சித்தாந்த நடைமுறைச் சாதனைகள் போன்று 20ம் நூற்றாண்டில் மனிதனின் சித்தாந்த வாழ்வில் வேறு எந்த சமுதாயப் பிரச்சினையும் இவ்வளவு துல்லியமாக விவாதிக்கப் படவில்லை. லெனினியக் கருத்துக்களின் உண்மையான முக்கியத்துவத்தை பொய்ம்மைப்படுத்துவதற்கும், சிறுமைப் படுத்துவதற்கும், திசை திருப்பிக் குழப்புவதற்கும் அதன் விரோதிகள் கையாண்ட மிகவும் நுணுக்கமான, பொய் புனை சுருட்டுக்கள் கொண்ட பிரசாரங்கள் எல்லாம் முற்றாகத் தோல்வியடைந்தன. இதற்கு நேர்மாறாக, நவீன உலகில் லெனினியத்தின் முக்கியத்துவமும் மதிப்பும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி வருகிறது. விஞ்ஞானம், கலை, இலக்கியத் துறையைச் சேர்ந்த மக்களும் அதே போல் புரட்சிகரத் தொழிலாளர் களும் லெனினியத்தின் பக்கம் வருகின்றனர். ஏனென்றால் லெனினியம் தனித்தன்மையைக் கொண்டது: பல்வேறு பட்ட முதலாளித்துவ, குட்டி பூர்ஷ்வா ஆய்வியல்களைப் போல் லெனினியம் வழியிலா வழியைக் கொண்டதல்ல. அதன் கருத்துக்களும், கணிப்புக்களும், முடிவுகளும் வரட்டுத் தனமானவை அல்ல. வளர்ச்சி பெற்ற நிலையில், சமுதாய வளர்ச்சியின் நடைமுறையின் மூலம் லெனினிய ஆய்வு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

சோஷலிசத்தை அடைவதற்கு ஒரு ''விசேட'' வழி பற்றிய கருத்தைப் பிரசாரம் செய்த தன்னுணர்வுக் கருத்து முதல்வாத சித்தாந்த கர்த்தாக்களைப் * (நரோடிசம்)[9] போலல்லாது லெனின் தனது அரசியல் மற்றும் சித்தாந்த நடவடிக்கைகளின் ஆரம்ப வருடங்களில் தெளிவாகச் செயல் பட்டார். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ,ருஷ்ய நாட்டின்

* நரோடிசம்—மொ.ர்.

சமுதாய வளர்ச்சிக்கு பிண்டப்பிரமாணமான யதார்த்தங்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டும்—முதலாளித்துவ உறவு முறைகளில் பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்திற்கும் இடையே காணப்படும்ஆழமான எதிர்மறைத் தன்மைகளைக் காணவேண்டும் என்றார்.20-ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளின் நிகழ்ச்சிப் போக்குகள் லெனினது மேற்கண்ட முடிவைச் சரியென நிரூபணம் செய்ததை நாமறிவோம்.

இந்தக் காலகட்டத்தில் லெனின் சர்வ்தேசீய ரீதியிலும் ருஷ்ய சமூக ஜனநாயகத்திலும் காணக்கிடைத்த சந்தர்ப்பவாதப் போக்குகளை அந்தச் சட்டபூர்வ மார்க்சியவாதிகளை,[10] பொருளாதாரவாதிகளை,[11] பெர்ன்ஸ்டெயினைப் பின்பற்றியவர்களை,[12] எதிர்த்துச் செயலாற்றினார். தவிர்க்க முடியாத நிலையில் பெர்ன்ஸ்டெயினைப் பின்பற்றுகிறவர்கள் மன்னிப்புக்கோரி முதலாளித்துவத்தைத் தாங்கிப் பிடிக்கும் நிலைக்குச் சாய்ந்து விட்டனர் என இந்தப் போராட்டத்தில் ஊர்ஜிதப்படுத்தினார். சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தொடர்ந்த வரலாறு லெனின் கூறியது முற்றிலும் சரி என நிரூபித்துவிட்டது.

முதல் ருஷ்யப் புரட்சியின் போது (1905-1907) ஒரு, புதுவகை கட்சிக்கான போராட்டத்தில் சமூக ஜனநாயகத்தில் இருந்த மென்ஷிவிசத்தை[13] முதலாளித்துவத்துடன் சமரசம் செய்து கொள்ளும் குட்டி முதலாளித்துவப்போக்கு என லெனின் அம்பலப்படுத்தினார். புரட்சியும் அதைத்தொடர்ந்த நிர்மூலமாக்குவதை[14] எதிர்த்த போராட்டமும் மென்ஷிவிசத்தைப்பற்றிய லெனினது கணிப்பை சரியானதெனக் காட்டின. புரட்சிகர இயக்கத்தின் தொடர்ந்த வரலாறு இறுதியாக, மென்ஷிவிசத்தின் எதிர்ப்புரட்சித் தன்மையினது சாரத்தை குட்டி முதலாளித்துவப் போக்கு என அம்பலப் படுத்தியது. 1905-1907-ம் வருடத்திய புரட்சி தோற்கடிக்கப்பட்டு பிற்போக்குச் சக்திகள் தலையெடுத்த ஆண்டுகளில் லெனின் தத்துவார்த்தத் துறையில் பெருமளவான படைப்புக்களை

உருவாக்கினார். தத்துவார்த்தத் துறையில் தலையாய நூலான **பொருள் முதல் வாதமும் அனுபவரீதியான விமர்சனமும்** (Materialism and Emprio Criticism) என்ற நூலை எழுதினார். இந்நூல் இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் முக்கிய பிரச்சினைகளை முறைப்படி எடுத்துக்காட்டியது; பிரதிபலிப்பு பற்றிய ஆய்வின் சத்தை வெளிப்படுத்தியது; முதலாளித்துவத் தத்துவத்தில் உள்ள கருத்து முதல் வாதம் மற்றும் வறட்டுக் கோட்பாடு போன்றவற்றை விமர்சிக்க மார்க்சியக் கோட்பாடுகள் மூலம் பகுப்பாய்வுகளைத் தந்தது; இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் புரட்சியைப் பற்றிய பொதுவான மார்க்சியத் தத்துவார்த்தப் பார்வையை வழங்கியது. இந்தப் படைப்பில் லெனின் வகுத்தளித்த நிலைபாடுகள், மார்க்சியத் தத்துவத்தின் தொடர்ந்த வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டின. அதேசமயத்தில் மேக்கிஸம் மற்றும் போக்டனோவின் திருத்தப்பட்ட மார்க்சியம்[15] ஆகியவை பற்றிய லெனினது விமர்சனமும் தத்துவத்தைப் பின்பற்றுவது பற்றி அவர் மேலும் சேர்த்த கோட்பாடும், முதலாளித்துவத் தத்துவம் மற்றும் திருத்தல்வாதத்தை எதிர்த்து மார்க்சிய—லெனினிய வாதிகள் நடத்திய சித்தாந்தப் போராட்டத்தின் அடிப்படைகளாக விளங்கின.

புதிய புரட்சிகர எழுச்சி மற்றும் முதல் உலக யுத்தத்தின் போது லெனின் பொருள் முதல் இயக்கவியலின் பொதுவான சித்தாந்தப் பிரச்சினைகள் பற்றி ஆய்ந்து அதை சமூக வளர்ச்சியின்பால் அமுலாக்கினார். ஏகாதிபத்தியம் மற்றும் சோஷலிசப் புரட்சிப் பற்றிய தனது ஆய்வியலைப் படைத்தளித்தார். துவக்கத்தில் ஒரே ஒரு நாட்டில் மட்டும் சோஷலிசம் வெற்றிக் கொடியை நாட்டுவது அடிப்படையாகவே சாத்தியமானதுதான் என்ற முடிவை வகுத்துக் கொடுத்த முதல் மனிதர் அவரே. அக்டோபர் புரட்சியின் போது அவரது முக்கிய படைப்பான '**அரசாங்கமும் புரட்சியும்**' என்ற நூலை அவர் எழுதினார். இந்நூல் இந்தப் பிரச்சினையில் மார்க்சிய ஆராய்ச்சியைப் பொதுமைப்படுத்

தியது. அதுவே பின்னர் ருஷ்ய நாட்டில் நடந்தேறிய முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சித்தாந்தத் திட்டமாகவும், புரட்சிக்குத் தயாரிப்புச் செய்து நடத்திச் செல்லும் சாதன மாகவும் திகழ்ந்தது.

அக்டோபர் புரட்சிக்குப்பின் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச மாற்றம் நிகழும் போது ஆளுமை கொள்ளும் சட்டங்கள் பற்றிய தனது போதனைகள் மூலம் லெனின் மார்க்சியத் தத்துவத்தைச் செழுமைப்படுத்தினார். சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப் பின் மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சிக்காக விஞ்ஞானத்தை அடிப்படை யாகக் கொண்ட ஒரு திட்டத்தையும் தயாரித்தளித்தார்.

ஒரே ஒரு நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே லெனினது சித்தாந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன—அதாவது புரட்சி இலட்சியத்திற்கு இன்றியமையாத, தத்துவார்த்தப் பிரச்சினைகளின் தீர்வுக்கு ஒரு சித்தாந்த ரீதியான பகுப்பாய்வை வழங்குவது. இந்தப் பிரச்சினைகளுக்கான லெனினது தீர்வு மார்க்சியத் தத்து வத்தின் வளர்ச்சியை ஒரு புதிய வரலாற்றுக் கட்டத்திற்கு இட்டுச் சென்றது. அவர் முன்வைத்த சித்தாந்த முன் யோசனைகள், 20-ம் நூற்றாண்டின் சமூக வளர்ச்சிப் போக்கில் அற்புதமான முறையில் ஊர்ஜிதமாகின. அவரது கருத்துக்களை மேலும் பகுப்பாய்ந்து அவற்றிற்கு திண்ணிய வெளிப்பாடுகளை வழங்கிய அவரது சீடர்கள் மற்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களது படைப்புக்கள், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இதர கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் செய்துள்ள வேலைகள், அவர்களது ஆவணங்கள் மற்றும் முடிவுகளில் பிரதிபலித்தவை, அதே போல், லெனினது கட்டளைகளுக்கேற்ப சோவியத் சோஷலிசக் குடியரசு ஒன்றியத்தில் மலர்ந்து மணம் வீசும் தன்னேரிலாத் தத்துவ ஞானிகளின் குழுவினரின் படைப் பாற்றல், இதர சகோதர சோஷலிஸ்ட் நாடுகளின் மார்க்சியத் தத்துவவாதிகளின் செயல்பாடு, மற்றும் முதலாளித்துவ,

வளர்முக நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களது படைப்புக்கள் ஆகிய அனைத்துமே மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டத்தின் தர்க்க ரீதியான தொடர்ச்சியேயாகும்.

இந்த நூல், வாசகர்களுக்கு வரலாற்று முக்கிய நிகழ்வுகளின் அடிப்படையில் லெனினது தத்துவார்த்தக் கருத்துக்கள் சரி என நிறுவி அதனுடன் அதை வளர்த்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டது. அத்துடன் லெனினியக் கட்டத்தின் வளர்ச்சியில் மார்க்சியத் தத்துவத்தின் தலையாய பிரத்தியேக அம்சங்களுடன் இணைத்து அதை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

## குறிப்புகள்

1. எல்.ஐ.பிரெஷ்னேவ். ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினது அறிக்கையும் உள் நாட்டு, வெளி உறவுக் கொள்கைகளில் கட்சியின் உடனடிக் கடமைகளும்.'' நோவோஸ்தி பிரஸ் ஏஜன்ஸி பிரசுராலயம் மாஸ்கோ 1981, பக்கம், 142.

2. ''வி.ஐ.லெனினது பிறந்ததின நூற்றாண்டு விழாவுக்கான தயாரிப்புகள் பற்றி'' ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானம்.'' மாஸ்கோ, 1968, பக்கம், 3 (ருஷ்ய மொழியில்).

3. ''கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளது சர்வதேசக் கூட்டம்.'' மாஸ்கோ, 1969 பிராக், சமாதானம் மற்றும் சோஷலிசப் பிரசுராலயம் 1969, பக்கம் 41.

4. ''விளாதிமிர் இலியிச் லெனினது பிறந்த தின நூற்றாண்டு விழா பற்றி, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஆய்வியல்'' மாஸ்கோ 1969 பக்கம் 5. (ருஷ்ய மொழியில்)

5. ''போல்ஷ்விக்குகள்''—1903 லிருந்து 1912 வரை லெனின் தலைமை தாங்கி நடத்திச் சென்ற ருஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் புரட்சிகர அணி. ருஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் (போல்ஷ்விக்ஸ்) கட்சி 1912ல் அமைக்கப் பட்டது. பின்னர் இக்கட்சிக்கு ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி(போல்ஷ்விக்ஸ்)எனப் பெயர் சூட்டப்பட்டது. ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்ஸ்) மற்றும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்ஸ்) ஆகியவை 1952ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரைப் பெற்றன. (சோ. யூ. க. க).

6. ''விளாதிமிர் இலியிச் லெனின் பிறந்த 100வது ஆண்டு விழா பற்றி'' மாஸ்கோ 1979, பக்கம், 4, (ருஷ்ய மொழியில்).

7. எல்.ஐ.பிரெஷ்னேவ்.''லெனினது வழியைப் பின்பற்றி சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்.'' மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1972, பக்கம், 255.

8. வி.ஐ.லெனின் ''அரசாங்கமும் புரட்சியும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 25, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கங்கள் 457-58.

9. **நரோடிசம்** (பாப்புலிசம்) — 1870களுக்கும் 1890களுக்கும் இடையில் தாராள மற்றும் புரட்சிகர ருஷ்ய அறிவாளி வர்க்கத்தினரிடம் காணப்பட்ட

சித்தாந்த மற்றும் அரசியல் போக்கு. இது முகிழ்த்து வரும் சுதந்திரமான விவசாயிகள் நல உரிமைகளைப் பிரதிபலித்தது (1861-ல் பண்ணையடிமைத்தனத்திலிருந்து விவசாயிகள் வர்க்கம் விடுவிக்கப்பட்ட பின்) 1870களின் பிற்பகுதியில் நரோடிசம் புரட்சிகரமானது, தாராளமானது என இரு கிளைகளாகப் பிளவுபட்டது. புரட்சிகர நரோட்னிக்குகள் 'நரோட்னயா வோல்யா' (மக்கள் விடுதலை) என்ற கட்சியைத் துவக்கினர். இந்தக் கட்சி ஜாரிஸத்தை பயங்கரவாதத்தின் மூலம் போராட முயற்சித்தது. (இரண்டாவது ஜார் அலெக்ஸாண்டர் படுகொலை செய்யப்பட்டதும் மற்றும் அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற பல பயங்கரவாத நடவடிக்கைகளும்) தாராள அணி 'சோர்னி பெரிடல்' (நில மறு பங்கீடு) என்ற கட்சியைத் துவக்கியது. இந்தக் கட்சி விவசாயிகளிடமும் தொழிலாளர்களிடமும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயன்றது. 1890களில் இக்கட்சி கிராமப்புற முதலாளித்துவத்தின் (குலாக்குகளின்) நல உரிமைகளைப் பற்றிப் பேசும் ஊதுகுழலாயிற்று 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இக்கட்சி ஒரு சோஷலிஸ்ட் புரட்சி வாதிகளின் கட்சிக்கு அடித்தளமாகப் பயன்பட்டது.

10. "சட்ட பூர்வமான மார்க்சியம்" —19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ருஷ்ய முதலாளித்துவ அறிவாளி வர்க்கத்தினரிடம் நிலவிய ஒரு சித்தாந்தப் போக்கு. இந்தப் போக்கை முன்வைத்தவர்கள் மார்க்சின் பொருளாதார ஆய்வை மட்டும் அங்கீகரித்தனர். அவரது தத்துவார்த்த அரசியல் கருத்துக்களை நிராகரித்தனர். பின்னர் 1905-ம் வருடப் புரட்சியின்போது துவங்கிய அரசியலமைப்புச் சட்டப்படியான ஜனநாயகக் கட்சியுடன் தங்களைக் கரைத்துக் கொண்டனர்.

11. ''பொருளாதார வாதிகள்''—பெர்ன்ஸ்டீனைப் பின்பற்றிய ருஷ்யர்கள் (கீழே பார்க்கவும்). அவர்கள் தானாகவே முகிழ்த்தெழும் ஒரு தொழிலாளி வர்க்க இயக்கம் என்ற ஆய்வுக்கு வக்காலத்து வாங்கினர். முதலாளித்துவத்தை எதிர்த்து அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் போராட வேண்டியதின் அவசியத்தை மறுத்தனர். பின்னர் 'பொருளாதார வாதிகள்' கட்சியின் தலைவர்கள் ருஷ்ய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முக்கிய கட்சிகளில் ஒன்றான அரசியல் அமைப்புச் சட்டப்படியான ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தனர்.

12. ''பெர்ன்ஸ்டீனியம்''— 1894 முதல் 1899 வரை எட்வர்ட் பெர்ன்ஸ்டீனால் மேற்கொள்ளப் பட்ட ஒரு புதிய காண்டியன், மார்க்சியத் திருத்தல் வாதம். அவரது சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்களை அவர் தனது சோஷலிசத்தின் முன்தேவைகளும் சமூக ஜனநாயகத்தின் கடமைகளும் என்ற 1890ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் எழுதப்பட்ட புத்தகத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இந்த சித்தாந்தம் இரண்டாவது அகிலத்தின் பல காங்கிரஸ்களினாலும் ஜார்ஜி பிளெக்கனோவ், கார்ல் கவுட்ஸ்கி, போன்ற மற்றும் பலராலும் விமர்சனம் செய்யப்பட்டு கண்டிக்கவும் பட்டது. 'இனி என்ன செய்ய வேண்டும்' (1902) என்ற தனது நூலில் பெர்ன்ஸ்டீனின் கருத்துக்களைப் பற்றி லெனின் ஒரு ஆழமான பகுப்பாய்வைத் தந்துள்ளார்.

13. ''மென்ஷ்விசம்''— ருஷ்ய சமூக ஜனநாயகத்தின் வலதுசாரி அணி. இது சந்தர்ப்பவாத, சமரசக் கருத்துக்களின் பதாகையைத் தூக்கிப் பிடித்தது. இது ''தொழிலாளர்களின் ஆதிக்கம்'' மற்றும் குட்டி பூர்ஷ்வா அறிவு ஜீவிகளின் நல உரிமைகளை வெளிப்படுத்தியது. இது லெனினியத்

தையும் போல்ஷ்விக்குகளையும் எதிர்த்து சுறுசுறுப் பாகப் போராடியது. இறுதியில் 1917 அக்டோபர் புரட்சியின்போது தோற்கடிக்கப்பட்டு 1920 களில் கலைக்கப்பட்டது.

14. 'நிர்மூலமாக்கும் வாதம்' (Liquidationism) 1906க்கும் 1912க்குமிடையில் ருஷ்ய சமூக ஜன நாயகத்தின் மென்ஷ்விக் அணியில் காணப்பட்ட ஒரு போக்கு. இது தொழிலாளி வர்க்கப் போராட் டத்தின் சட்ட விரோதமான வடிவங்களை நிர்மூல மாக்க வேண்டுமென வாதிட்டது. எனவே அதற்கு, அப்பெயர்.

15. "போக்டனோவின், மார்க்சியத் திருத்தல் வாதம்"—1905 புரட்சிக்குப் பின் ருஷ்ய சமூக ஜன நாயக வாதிகளிடம் காணப்பட்ட ஒரு சித்தாந்தப் போக்கு. இயக்கவியல் பொருள் முதல் வாதத்திற்கு மாற்றாக இது நேர்காட்சி வாதத்தை வைக்க முயன்றது. இது அதன் தலைவர் ஏ. போக்டனோ வின் (மாலினோவ்ஸ்கி) பெயரால் அழைக்கப் பட்டது. தனது பொருள் முதல்வாதம் மற்றும் அனுபவாீதியான விமர்சனம் என்ற நூலில் லெனின் இதை முழுமையாக விமர்சித்துள்ளார்.

அத்தியாயம் 1

# மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தின் சத்தும் சாரமும்

## 1. மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டம் என்ற கருத்தமைவின் தோற்றுவாய்கள்

மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டம் என்ற கருத்தமைவு லெனினது மறைவுக்குப்பின் சோவியத் அறிஞர்களால் வடிவமாக்கப்பட்டது. எடுத்த எடுப்பிலேயே அது உருவ அமைப்பைப் பெற்று விடவில்லை என்பதைச்சொல்லத் தேவையில்லை. அக்டோபர் புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே அது முகிழ்க்கத் துவங்கி விட்டது. குறிப்பாக லெனினது முதல் படைப்புக்கள் தோன்றியதும் தொடங்கியது. சில முதலாளித்துவ சோவியத் இயலாளர்கள் நிறுவ முயன்றது போல் இது 1924ல் லெனினியம் பற்றிய ஸ்டாலினது சொற்பொழிவுகளில் அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிந்தனையாளர் என்ற முறையில் அவரது சீடர்கள் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களால் மட்டுமல்லாது அவரது எதிரிகளினாலும் கூட லெனின் மிக உயர்வாக மதிக்கப்பட்டார்.

லெனினது படைப்புக்களில் மிகப் பெரும்பாலானவை அக்டோபர் புரட்சிக்கு முன் சட்ட விரோதமான முறையில்

பிரசுரிக்கப்பட்டன. சட்ட பூர்வமாக அவர் வெளியிட்ட சில படைப்புக்கள் இந்த நூற்றாண்டின் முதல் இருபத்து ஆண்டு களில் கல்வித் துறைச் சஞ்சிகைகளிலும் இதர பத்திரிகை களிலும் விரிந்து பரந்த அளவில் பரபரப்பை ஏற்படுத்தின. லெனின் எங்ஙனம் ஒரு தத்துவஞானியாக மலர்ந்தார் என்பது பற்றிய ஒரு கருத்தை இந்த ஆவணங்கள் நமக்கு வழங்குகின்றன.

சட்ட பூர்வமாகப் பிரசுரமான லெனின் முதல்படைப்பு "**ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி**" (1899) என்பதாகும். கறாராகக் கூறுவதென்றால் இது ஒரு தத்துவார்த்த நூல் இல்லை. ஆனால் சில பிரச்சினைகள் அந்நூலில்கையாளப் பட்ட முறை லெனினது தத்துவார்த்தக் கருத்துக்களின் சத்தையும் சாரத்தையும் புலப்படுத்தின. இந்நூலைப்பற்றிய பல கருத்துரைகளும் ஓரளவு இதைப் பிரதிபலித்தன. இவ்வாறாக அன்று ஒரு சமூக ஜனநாயகவாதியாகத் திகழ்ந்த பி. அவிலோவ், 'கல்வி' என்ற சஞ்சிகையில் எழுதியதாவது: "இலியினின் (வி.ஐ.லெனின்—ஆசிரியர்) இந்தப் புத்தகம் தலைசிறந்த தன்மையில் முறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு திட்டவட்டமான கருத்தோட்டம் மிகப் பொருத்தமாக இந்நூலில் வரையறுக்கப்பட்டுள்ளது." "மிகச் சிக்கலான நிகழ்வுப் போக்குகளிலும் கூட ஆசிரியர் தனது வழியைக் கண்டு அவற்றிற்கு சரியானபடி விளக்கமளித்துள்ளார். இவ்வாறாக பல் வேறுபட்ட தனித்தனியான உண்மைகளிலிருந்து நெய்யப்பட்ட பொருளாதாரப் பரிணாமத்தின் ஒருங்கிணைந்த சித்திரத்தை அவர் வாசகர்களுக்குக் காட்டுகிறார்" என அவர் மேலும் குறிப்பிடுகிறார்.[1] மற்றொரு விமர்சகர் பி.பெர்லின், "வாழ்க்கை" என்ற செய்தித்தாளில் எழுதியதாவது. "அளப்பரிய உண்மை விஷயங்களைக் கையாண்ட போதிலும் இதன் ஆசிரியர் அவற்றில் தன்னை இழக்கவில்லை. அவற்றின் ஆறாமைக்கும் தன்னை அனுமதிக்கவில்லை. ஏனென்றால் ஆய்வின் அளவு, எப்பொழுதுமே அவருக்குச் செல்ல வேண்டிய பாதையைக் காட்டி வந்தன."[2]

இன்று அநேக முதலாளித்துவ மற்றும் பூர்ஷ்வா திருத்தல்வாத சித்தாந்த கர்த்தாக்கள் "பொருள் முதல் வாதம் மற்றும் அனுபவரீதியான விமர்சனம்," என்ற நூலை எழுதுவதற்குமுன் லெனின் தத்துவத்தைப்பற்றிப் பேசவே யில்லை எனக் கூறுகின்றனர். லெனினது நண்பர்கள் மற்றும் அவரது சமகாலத்தவர்கள் தந்துள்ள சாட்சியங்கள் மூலம் இக்கூற்றை தவறு என எளிதில் நிரூபித்து விடலாம். 1894ல் எழுதிய தனது ஆரம்பகாலப் புத்தகமான "மக்களின் நண்பர்கள் எவ்வாறிருக்கிறார்கள் சமூக ஜனநாயகவாதிகளை எதிர்த்து அவர்கள் எங்ஙனம் போராடுகிறார்கள்" என்ற புத்தகத்தில் லெனின் நரோட்னிக்குகளின் அகவயப்பட்ட அணுகும்முறை மற்றும் கருத்து முதல்வாத நிர்ணயிப்புகளை மறுத்துப் பதிலிறுக்கும் போது பரந்த அளவுக்கு தத்து வார்த்த வாதங்களைப் பயன்படுத்தியுள்ளார். 1893-1894ம் ஆண்டுகளின் தனது நினைவலைகளில் நடாஷா க்ரூப்ஸ்கயா எழுதியதாவது: "இந்த நேரத்திலும் கூட, லெனின் மார்க்சின் போதனைகளை யாந்திரிகமாக திட்டப்படி புரிந்து கொள் வதற்கும் மேலாகச் செல்லும் திறமையைப் பெற்றிருந்தார். மிகவும் திட்பமான பிரத்தியேகமான முறையில், பரந்துபட்ட மக்களின் நலன்களோடு அவற்றைத் தொடர்புபடுத்தி, ஜீவ களையுடன் திகழும் மார்க்சிய உத்வேகத்தில் கேள்விகளை எழுப்பினார். நிகழ்வுகளை அவற்றின் பிரத்தியேக நிலைமை யிலும் வளர்ச்சிப் போக்கிலும் அவர் பரிசீலனை செய்வது அவரது அணுகும் முறை முழுவதிலுமாக உணரப்படக்கூடிய ஒன்று."[3]

நாடு கடத்தப்பட்ட நிலையில் லெனின் சூஸென்ஸ் கோவில் இருந்தபொழுது க்ரூப்ஸ்கயா, ருஷ்யக் கவிஞர்களது புத்தகங்களோடு லெனினைக் காணவந்தார். "தனது படுக்கையில் ஹெகலின் நூலுக்கு அடுத்து அந்தப் புத்தகங் களை விளாதிமிர் இலியிச் வைத்தார்" என தனது நினைவலைகளில் க்ரூப்ஸ்கயா எழுதுகிறார்.[4] லெனின், தத்துவத்தின்பால் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த

ஆர்வத்தை இது காட்டுகிறது. தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டத்திற்கான கழகத்தில் பணியாற்றிய லெனினது தோழர்களில் ஒருவரும் நாடுகடத்தப்பட்டு சைபீரியாவுக்கு சமீப தூரத்திலேயே வந்திருந்தவருமான ஒருவர் எழுதியதாவது:'' எனக்கு நினைவிருக்கிறது. அந்தச் சமயம் அவர் ஹெகல் எழுதிய '**தர்க்கவியல் விஞ்ஞானம்**' என்ற நூலைப் படித்தார். மிக உற்சாகத்துடன் எங்களிடம் அவரது தோழர்களிடம் அவர் கூறினார். ''இந்த நூலில் சிந்தனையின் வளமனைத்தும் அடங்கியுள்ளது அதைக் கவனிக்காமல் நம்மில் பலர் (எப்படியும் இதை அச்சமின்றி என்னுள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்) இன்னும்கூட ஹெகல் வழித்தத்துவத்தின் கருத்துக்களைப் புரிந்து கொள்ளத் தயாரில்லை''[5]. இவ்வாண்டுகளில் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டக் கழகத்தின் தனது மற்றொரு சகாவான எப். லெங்க்னிக்கோடு லெனின் விரிவான கடிதப் போக்குவரத்தை வைத்திருந்தார். அந்தச் சமயத்தில் கவுட்ஸ்கியின் நூல்களது பாதிப்புக்குள்ளாகியிருந்த லெங்க்னிக் 'டேவிட் ஹ்யூமையும்' 'இம்மானுவேல் காண்ட்'டையும் தலைசிறந்த தத்துவஞானிகளாகக் கருதியிருந்தார். ''எனது தோழர்கள் மூலம் நான் இந்தத் தத்துவஞானிகள் மீது கொண்டிருந்த மயக்கத்தை 'விளாதிமிர் இலியிச்' அறிந்திருக்க வேண்டும். உடனே அவர் என்னுடன் தத்துவார்த்த விஷயங்கள் சம்பந்தமாக ஜீவனுள்ள கடிதப் போக்குவரத்தை துவங்கி விட்டார்..........'' என லெங்க்னிக் எழுதுகிறார்.

''அவரது முதல் கடிதங்கள் என் இதயத்தின் அடிஆழத்தையே தொட்டு விட்டன. என்னுடைய கருத்து முதல் வாத தத்துவ ஞானிகளைக் கைகழுவி விட்டு நான் மார்க்சியத் தத்துவத்தைப் படிக்கத் துவங்கினேன்.''[6] பி. லெபிசின்ஸ்கி மேலும் கூறுகிறார். லெனின், லெங்க்னிக்குக்கு எழுதிய கடிதங்கள் சில சமயங்களில் உண்மையான தத்துவங்களாகவே இருந்தன.[7]

அவரது நெருங்கிய நண்பர்களில் ஒருவரும், சேர்ந்து பணியாற்றியவருமான ஜி. கிர்ஸிஸனோவ்ஸ்கி லெனினைப் பற்றித் தந்துள்ள கணிப்பு விசேடமானதொன்றாகும். அவர் எழுதுகிறார்: ''1893-ம் ஆண்டு கோடை காலத்தில் வி. ஐ. உலியனோவ் நம்மிடையே தோன்றியது, இடியுடன் கூடிய ஒரு புயல் வீசப் போவதின் தாக்கத்தை நம்மில் ஏற்படுத்தி நமக்கு நன்மையை அளித்தது. நம்மை விரும்பச் செய்தது. அந்தக் கணத்திலிருந்து நமக்குப் புதியதோர் வாழ்வு துவங்கியது...வோல்காவிலிருந்து நம்மிடம் வந்த விளாதிமிர் உலியனோவ் வெகு சீக்கிரத்திலேயே நமது ஸ்தாபனத்தின் பெரும் புள்ளியாகி விட்டார்......புலமை சான்ற மார்க்சிய ஞானிகளைப் போன்று,நாங்களும், மார்க்ஸ் என்னும் ஆயுதத்தை அவர் கையாளும் அற்புதத் திறமையைக் கண்டு அவர் பால் ஈடுபாடு கொண்டோம். நாட்டின் பொருளாதார நிலை பற்றி அவர் கொண்டிருந்த மேதா விலாசத்துடன் கூடிய ஞானத்தைக் கண்டு அவரிடம் எங்களை இழந்தோம்.''[8] ''லெனினது அரசியல், சித்தாந்த நடவடிக்கைகள் தொடங்கிய உடனேயே மார்க்சிய மெய்ஞானம் அவருள், அளப்பரிய ஒரு புதிய சக்தியாகக் குடிகொண்டு விட்டது'' என்கிறார் மற்றுமொரு பழைய போல்ஷ்விக் எஸ். மிக்கிவிக்ஸ். [9]

அவரது ஆரம்பகால தத்துவார்த்த நடவடிக்கைகளும் கூட லெனினை ருஷ்ய நாட்டு மார்க்சியவாதிகளின் முன்னணிக்குக் கொண்டு போய் விட்டன என்பதை இந்த உண்மைகளனைத்தும் சுட்டிக் காட்டுகின்றன. ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை அமைப்பதற்கான போராட்டத்தினால் லெனின் ஓர் அரசியல் வாதியாக, சித்தாந்த கர்த்தாவாக ருஷ்யர்களுக்கு மட்டுமல்லாமல் வெளி நாடுகளின் மார்க்சிய வாதிகளுக்கும் அறிமுகமானார். ஆகஸ்ட்பெபல், ரோஸாலக்ஸம்பர்க் மற்றும் ஐரோப்பிய சமூக ஜனநாயகத்தின் இதர தலைவர்கள் மற்றும் சித்தாந்த கர்த்தாக்களினால் லெனினது நடவடிக்கைகள் மிக உயர்வாக

மதிக்கப்பட்டன. 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் லெனின் ஏற்கனவே பரந்த அளவுக்கு ஒரு தலைசிறந்த மார்க்சிய சித்தாந்த கர்த்தாவாகவும் விசேட வல்லுநராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

1909-ல், தத்[illegible]த்தின் அடிப்படை நூல்களில் ஒன்றான அவரது ''பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்'' வெளிவந்தது, மார்க்சியத் தத்து வத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தின் ஒரு பெரிய திருப்பு முனையாகும். இந்த நூல் வெளி வந்ததுமே அது பெருமளவுக்கு மார்க்சிய மற்றும் மார்க்சியமல்லாத தத்துவச் சிந்தனை வட்டாரங்களின் கவனத்தை ஈர்த்தது. இதை எண்ணற்ற பல திறனாய்வுகளிலிருந்தும், இன்று வரை காணக் கிடைக்கும் பல கடிதங்களிலிருந்தும் இதர ஆவணங் களிலிருந்தும் அறியலாம்.

லெனினின் இந்த நூல் போல்ஷ்விக்குகளால் குதூகலத் துடன் வரவேற்கப்பட்டது. ''லெனினது இந்தப் படைப்பு அதன் வகையில், பொருள் முதல் வாதத் தத்துவத்தின் (மெய்ஞ்ஞானம்) முழுமையான பொழிப்புரையைத்தரும் ஒரே ஒரு நூலாகத் திகழ்கிறது''[10] என 1909-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ம் நாள் ஸ்டாலின் 'பாட்டாளி' என்ற பத்திரிகையின் ஆசிரியர்களுக்கு எழுதினார். ''லெனினது படைப்பு குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் மார்க்சியத்தின் தத்துவார்த்த அடிப்படைகளுடன் அது சிறந்ததோர் அறிமுகத்தைக் கொடுக்கிறது. அத்தோடு சேர்த்துக் கொள்ளும் நோக்கத்துடனான புதிய 'இஸம்'களை அது சுத்தப்படுத்தி விட்டது போல் தோன்றுகிறது'' எனக் குறிப் பிடுகிறார் எஸ். சாஹீமியான்.[11] ''லெனினது நிலை பாட்டின் சரியான தன்மை பற்றி நாங்கள் உறுதியான முறையில் தேர்ந்து தெளிந்துள்ளோம்''[12] என வலியுறுத்திக் கூறும் வி. வி. வோரோவ்ஸ்கி லெனினது நூலைப்பற்றி ''ஒடெஸ்ஸாரெவியூ'' என்ற செய்தித்தாளில் விரிவான தொரு திறனாய்வு செய்துள்ளார். ''ருஷ்ய மார்க்சியத்தின்

தலைசிறந்த தத்துவஞானி லெனின். மேக்கிஸத்தைப் பற்றிய லெனினது விமர்சனம், மிக அதீதமாக மண்டையைப் பிய்த்தெடுக்கும், குழப்பம் நிறைந்த பிற்போக்கு கருத்துக்களை விதைக்கும், போக்ட்னோவ்கள், பஸாரோவ்கள், யூஸ்கெவிச்சஸ்கள் மற்றும் பெர்மன்ஸ் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் குழுமியுள்ள ருஷ்ய நாட்டிற்கு சாலப்பொருத்தமானது'' என அவர் வரையறுத்துள்ளார்.[13]

லெனினது இந்தப் புத்தகம் வெளி வந்ததும் மென்ஷ்விக்குகளாலும்கூட அதைத் தட்டிக் கழித்துவிட்டு வாய்மூடி மௌனிகளாகவிருக்க முடியவில்லை. எல். ஆக்ஸ்ல்ராடு (சனாதனி) என்பார் இந்தப் புத்தகத்தைப் பற்றி ''சமகாலத்து உலகம்'' என்ற சஞ்சிகையில் திறனாய்வு செய்திருந்தார். பிளெக்கனோவின் தத்துவார்த்தச் சிறப்புக்களை வானளாவப் புகழும் மென்ஷ்விக் பாரம்பரியத்தைப் பின்பற்றி, இவ்வம்மையாரும், ருஷ்ய மேக்கிஸத்தைப் பற்றி பிளெக்கனோவ் முன்வைத்த விமர்சனத்தையே லெனின் திரும்பச் சொல்கிறார் என நிரூபிக்க விழைந்தார். ஆனால் இது ஒரு வீண்முயற்சியே. ஏனென்றால் பிளெக்கனோவ் மேக்கிஸத்தைக் கணிப்பதில் அதன் சங்கேதக்குறிகள், அனுபவத்தைப் பற்றிய கருத்தமைவு போன்ற பிரச்சினைகளில் மிகப்பெரிய தவறுகளை இழைத்துள்ளார். (அவ்வம்மையாரே இதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று). ஆக்ஸ்ல்ராடு அம்மையார் பிளெக்கனோவை அவரது தவறுகளை தாங்கிப் பிடித்ததும் மார்க்சியத்தின் விஞ்ஞான அடிப்படைகளிலிருந்து ஓடி ஒளிந்ததை ஸ்தூலமாக்கியது. இது அவரது கட்டுரையின் சித்தாந்த மதிப்பை ஒன்றுமில்லாததாக்கி விட்டது. எனினும் இந்த உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் திறனாய்விலும்கூட ''ஆசிரியர் மிகத்தீவிரமாகவும், உத்வேகத்துடனும் உண்மைக்கு வக்காலத்து வாங்குகிறார். இந்த நூலைப் படிக்கும் யாரும் ஜீவன் நிறைந்த ஒரு புத்துணர்ச்சியை, சுறுசுறுப்புடன் கூடிய புரட்சிகர உத்வேகத்தை உணரமுடியும்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.[14] ஆக்ஸ்ல்ராடுவின் இவ்வார்த்தைகள் மற்றுமொரு மென்ஷ்

விக்கினால் ஏ. அவ்ராமோவ் என்பவரால் 'மறுமலர்ச்சி' என்ற இதழில் பலமுறை திரும்பத் திரும்ப எழுதப்பட்டது. ''இயக்கவியல் பொருள் முதல்வாதத்தின் தீவிர ஆதரவாளர்'' என லெனினை அவர் அழைத்தார். ''அவரது இந்தப் புத்தகம் மார்க்சியத் தத்துவத்தைப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் மிகுந்த பயனளிக்கும் ஒரு வழிகாட்டி'' எனக்குறிப்பிட்டார்.[15]

பூர்ஷ்வா தத்துவஞானிகள் இரண்டு திறனாய்வு களின் மூலம் லெனினது புத்தகத்தைப் பற்றி எழுதினார்கள். ஒருவர் எம். புல்காகோவ். மற்றொருவர் ஐ. இலியின். இவர் களில் முன்னவர் 19வது நூற்றாண்டின் பிற்பகுதியில் ''சட்ட பூர்வமான மார்க்சியவாதி''களைப் பின்பற்றினார். 20ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டின் இறுதியில் அவர் முதலாளித்துவ எதிர்ப்புரட்சிக் கருத்துக்களை பகிரங்க மாகவே ஆதரிக்கத் தலைப்பட்டார். சாபத்தீடான 'வெகோவ்ஸ்ட்வோ'[16] பாசறையின் சித்தாந்த கர்த்தாவாக மாறினார். இருந்தபோதிலும் லெனினது சித்தாந்த விரோதி யான இவரும்கூட லெனினது படைப்புக்குரிய மரியாதையைத் தர வேண்டியிருந்தது. தனது விமர்சனத்தில் ''இந்நூலின் ஆசிரியர் மார்க்ஸ்—எங்கெல்ஸ் தத்துவத்தின் மிகவும் உறுதி படைத்த தீவிர ஆதரவாளர்—நூல் ஆகச்சிறந்த மொழி நடையில், தெளிவாகவும், இடையீடில்லாத தொடர்ந்த வெளிப்பாட்டையும் கொண்டு எழுதப்பட்டுள்ளது.'' என எழுதினார்.[17] ஹெகல் தத்துவத்தைப் பின்பற்றிய அதிகார பூர்வமான தத்துவத்தின் பிரதிநிதியான இலியின் எழுதிய தாவது. ''இந்த நூலின் ஆசிரியர் அனைவரும் அறிந்த ருஷ்ய மார்க்சியவாதி கட்சித்தலைவர். அவருக்குப் பொருள்முதல் வாதம் தத்துவத்தின் இறுதியான, மகோன்னதமான சாதனை என்பதாகும்.''

வெளிநாட்டுப் பத்திரிகைகளும் லெனினது புத்தகத்தைப் பற்றிக் குறிப்பிட்டன. ஜெர்மன் சமூக ஜனநாயகச்

சஞ்சிகை "டை நியூ ஸெயிட்" இந்நூலின் வெளியீட்டைக் குறிப்பிட்டது.[18]

மொத்தத்தில் லெனினது தத்துவார்த்தப் படைப்பு மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தை நிறுவுவதில் பிரதான பாத்திரத்தை வகித்தது. தொடர்ந்த வருடங்களில் சட்ட ரீதியாக அவரது 'கார்ல் மார்க்ஸ்' என்ற கட்டுரை மற்றும், **பிராவ்தா** செய்தித் தாளிலும் இதர போல்ஷ்விக் பிரசுரங்களிலும் வெளியான கட்டுரைகளுக்குப்பின் ஒரு தத்துவஞானி என்ற முறையில் அவரது மதிப்பு புகழ் கோபுரத்தின் உச்சிக்கே சென்றது. சட்டத்திற்குப் புறம்பாக ரகசியமாக வெளியிடப்பட்ட அவரது படைப்புக்களுக்கு ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி பரந்த அளவுக்கு விளம்பரம் தந்தது.

1917-ம் வருடத்திய அக்டோபர் புரட்சிக்கு முன்னரேயே, மார்க்சிய ஆய்வியலின் வளர்ச்சியிலும் புரட்சிகர நடைமுறையிலும் ஒரு ஒருங்கிணைந்த போக்காக லெனினியக் கருத்தமைவை சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் அமைத்துக் கொண்டது என நாம் கூறுவதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. இவ்வியக்கம் தன்னகத்தே மிகவும் உறுதிபடைத்த தேர்ந்து தெளிந்த மார்க்சியப் புரட்சிவாதிகளையும் சித்தாந்த கர்த்தாக்களையும் அணி சேர்த்துக் கொண்டு விளங்கியது.

அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனினியத்தின் சத்தும் சாரமும் மிகவும் ஆழமான அனைத்து வகைப் பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டது. சோவியத் அரசியல் அதிகாரம் அமைக்கப் பெற்ற முதல் வருடங்களில் லெனினது பல சீடர்கள், அவரது சக போராளிகள் மற்றும் அவரைப் பின் பற்றுகிறவர்களால், லெனினது சித்தாந்தக் கருத்துக்களின் முக்கியத்துவத்தைக் காட்டும் படைப்புக்கள் கொண்டு வரப் பட்டன.[19]. ஒன்பதாவது கட்சிக் காங்கிரஸ் லெனினது நூல் திரட்டுக்களைப் பிரசுரிக்க முடிவு செய்தது. 1917-ம்

ஆண்டுக்கும் 1923-ம் ஆண்டுக்கும் இடையிலான காலத்தில் பத்திரிகைகளிலும் முக்கிய கட்சித் தலைவர்களது உரைகள் மற்றும் அறிக்கைகளிலும் லெனினியக் கருத்தமைவு பரந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டது. எனினும் அடிப் படையான கட்சி ஆவணங்கள் இவற்றைப் பயன்படுத்த வில்லை. ஏனென்றால் தனது சொந்த நடவடிக்கைகளைப் பற்றிக் கணிப்பதில் லெனின் மிகவும் ஆரவாரமற்றவராகத் திகழ்ந்தார், மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டுமென விழைந்தார். 1920-ம் ஆண்டில் மாஸ்கோ கட்சி அமைப்பு தனது மாநாடு ஒன்றில் லெனின் பிறந்த 50வது ஆண்டு விழாவைக் கொண்டாட முடிவு செய்தது. உடனே லெனின் அம்மாநாட்டு மண்டபத்தை விட்டு வெளியேறியதுடன் இது போன்ற விழாக்கள் உடனே நிறுத்தப் பட வேண்டுமென்று கோரினார். பல ஆவணங்களின் மூல வாசகத்தில் லெனினியம் எனக் காணப்படும் வார்த்தையை 'தீவிரப் பொருள் முதல் வாதம்' என லெனின் மாற்றி எழுதினார்.[20]

லெனினது மறைவுக்குப் பின் கட்சியின் சித்தாந்தப் பணி களில் முக்கியமான ஒன்று தொடர்ந்து நடந்த ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்ஸ்) 13வது காங்கிரஸில் வரையறுக்கப்பட்டது. அதாவது அனைத்து சமூகக் கல்விப் பிரிவுகளிலும் லெனினியத்தைச் சேர்த்து அவற்றில் மார்க்சியப் புரட்சிச் சித்தாந்தம் மற்றும் நடைமுறையின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விளாதிமிர் இலியிச் லெனின் அளித்த பங்களிப்புக்களைப் பயன்படுத்துவது.[21] லெனின் கல்விக் கூடம் ஒன்றை அமைப்பதெனவும் 13வது காங்கிரஸ் முடிவு செய்தது. இந்தக் கல்வி கூடம் ''பரந்துபட்ட கட்சி மற்றும் கட்சியில் இல்லாத மக்கள் லெனினியத்தைக் கற்றறி வதற்கும், லெனினிய ஞானத்தைக் கிரஹித்துக் கொள் வதற்கும் ஒரு அடிப்படையாகத் திகழும்''.[22]

1924-ம் ஆண்டிலிருந்து ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்ஸ்) முக்கிய தலைவர்களும் மூன்றாவது

கம்யூனிஸ்ட் அகிலத்தினரும் தங்களது படைப்புக்களிலும் சொற்பொழிவுகளிலும் லெனினது சித்தாந்தப் பாரம் பரியத்தின் மகத்தான முக்கியத்துவத்தை காட்டத் துவங் கினர். [23] அந்தக் காலகட்டத்தில் லெனின் மற்றும் லெனி னியத்தைப் பற்றிய பல படைப்புக்கள் வெளியிடப்பட்டன.

சோவியத் அரசியல் அதிகார காலத்தில் பயிற்சி பெற்ற பல இளம் தொழில் சார்ந்த மார்க்சியத் தத்துவஞானிகளும் ஏராளமான நூல்களை எழுதினார்கள்.

லெனினது தத்துவார்த்தப் பாரம்பரியத்தின் ஆழமான கற்றறிதல் அதன் உள்ளடக்கத்திலும் போக்கிலும் காரசார மான விவாதத்தைக் கொண்டு வந்தது. இந்த விவாதங்கள் மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டத்தை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்ள அதிகப்படியான அம்சங்களை வழங்கி உதவின. 1930களின் துவக்கத்தில் பல கட்சி ஆவணங் களில் இது ஒருமுகப்படுத்தப்பட்டு மார்க்சியத் தத்துவம் பற்றிய புகழ்மிக்க படைப்புக்களிலும், பயிற்சிப் புத்தகங் களிலும் பரந்த அளவில் இடம் பெற்றது.

மிக முக்கியமாக இந்த விவாதங்கள் லெனினியக் கட்டத்திலான மார்க்சியத் தத்துவம், 20ம் நூற்றாண்டில் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாத வளர்ச்சியினால் ஒரு பொதுவான வழிகாட்டியாகக் கொள்ளப் பட்டது என்ற வரையறையில் முடிந்தன. மார்க்சியத்தின் ஒருங்கிணைந்த அனைத்துப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் லெனின் அளப்பரிய பங்களிப்பை நல்கினார் என அவை வலியுறுத்தின. தத்துவத்தின்பால் பயன்படுத்தும் போது இது மார்க்சிய போதனைகளை லெனின் வளர்த்துச் சென்றதில், விஷயங்கள், அவை நிலவுகிற வடிவங்கள் புறவயப்பட்ட உலகத்தின் வளர்ச்சிக்கு ஒரு ஆய்வியல் என்ற முறையில் இயக்கவியல், மனிதனின் அறிவாற்றல் சமூக வளர்ச்சி மற்றும் லௌகீக சமுதாய வாழ்க்கையின் இயக்கத்தில் அதன் புரட்சிகர மாற்றம் இறுதியாக தத்துவத்தின் வரலாறு,

இரண்டு எதிர் எதிர் உலகக் கண்ணோட்டத்தின் முகிழ்ப்பு மற்றும் வளர்ச்சியில் சமூக சிந்தனை, கருத்து முதல்வாதம், இயக்கவியல், வறட்டுக் கோட்பாடு, மனிதகுல சமூக விஞ்ஞான முன்னேற்றத்தின் போக்கில் அவற்றின் வரலாற்று வழி மோதல் போன்ற மார்க்சின் போதனைகளை வளர்த்துச் சென்றதில் வெளிப்பாடு பெறுகிறது.

லெனினியத்தைப் பற்றிய விவாதங்கள் 1930களிலிருந்து 1970கள் வரையிலான இடைக்காலத்தில், மார்க்சியத் தத்துவ ஞானிகளால் ஏராளமான பொதுப் படைப்புக்களை வழங்கு வதற்கு இட்டுச் சென்றன. இவை மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டம் பற்றிய விஷயங்களைக் கொண்டதாகவு மிருந்தன.[24] இப்பொழுதெல்லாம் சோவியத் மற்றும் வெளி நாட்டு மார்க்சியத் தத்துவங்களின் அனைத்து அடிப்படை ஆராய்ச்சிக்கும், லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினை களைப் பகுப்பாய்வது முக்கிய திசைவழியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

1925க்கும் 1932க்கும் இடையே லெனினது நூல்திரட்டின் இரண்டாவது, மூன்றாவது பதிப்புக்கள் வெளிவந்தன. 1940 களின் பிற்பகுதியிலும் 1950களின் துவக்கத்திலும் நான்காம் பதிப்பு வெளி வந்தது. இறுதியாக 1958க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தில் லெனினது படைப்புக்கள் முழுவதும் அடங்கிய ஐந்தாவது முழுமையான பதிப்பு வந்தது. அது அன்றைய தினத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்தது. ஒருங் கிணைவாக லெனினது **ஆய்விலக்கியங்கள்** 37 தொகுதி களாகப் பிரசுரிக்கப்பட்டன. இவை பல்வேறு காலகட்டங் களிலும் லெனினது சித்தாந்த நடவடிக்கைகளைச் சித்தரிக்கும் பலபொதுப் பத்திரங்களையும் ஆவணங் களையும் உள்ளடக்கியதாகும். லெனினியக் கட்டம் விஞ்ஞான ரீதியாக பல காலகட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, மார்க்சியத் தத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினைகளின்பால்பட்ட லெனினது படைப்புக்களின் ஒரு விரிவான நூலகம் அமைக்கப் பட்டது.

மிக முக்கியமாக இவ்வாராய்ச்சி லெனினது கருத்துக்கள், இன்றையப் புரட்சிகர நடைமுறையின் கடமைகள், ஒட்டு மொத்த நவீன விஞ்ஞானச் சிந்தனையின் முன்னேற்றம் ஆகியவற்றிற்கிடையே ஒரு நெருங்கிய தொடர்பைப் புலப் படுத்துகிறது. லெனின் வாழ்ந்த காலத்தில் ஒத்துவராதது போன்றிருந்த இன்றையப் பிரச்சினைகளில் பலவற்றை லெனின் முன்வைத்து பின் செழுமைப்படுத்திய தத்துவார்த்த மற்றும் வழி முறைக் கோட்பாடுகளை ஆக்க பூர்வமாகப் பயன் படுத்துவதின் மூலமே மிகவும் திண்ணிய முறையில் தீர்க்க முடியும் என்பதை லெனினது தத்துவார்த்தப் பாரம்பரியத்தின் நவீன ஆய்வுகள் காட்டுகின்றன.

என்றுமில்லாதபடி இன்று லெனினது தத்துவார்த்தப் பாரம்பரியம் சாலப் பொருத்தமாயுள்ளது. ஏனென்றால் மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் ஒவ்வொரு புதிய முயற்சியும்,அவரது தத்துவார்த்தக் கருத்துக்களின் மகத்தான முக்கியத்துவத்தைப் புலப்படுத்திக் காட்டும் அம்சத்துடன் நெருங்கிய பிணைப்புக் கொண்டிருக்கிறது. இவற்றின் முக்கியத்துவம் வளர்ந்தோங்கி வருகிறது. மேலும் மேலும் அதிகமான மக்களிடம் இவை உறுதியாக வேர் விட்டுத் துளிர்க்கின்றன. இந்நிலையில் லெனினது மகத்தானப் பாரம்பரியத்தை சிறுமைப் படுத்தித் திசை திருப்பி பொய்ம்மைப் படுத்துவதற்காக பகீரதப் பிரயத்தனங்களை மேற் கொள்ளும் லெனினியத்தின் விரோதிகளுக்கு எதிராக முனைப்புடன் கூடிய ஒரு சித்தாந்தப் போராட்டமில்லாமல் லெனினது கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்வதிலும் அல்லது திண்ணிய வெளிப்பாடு வழங்குவதிலும் இன்று ஓர் அடிகூட முன்னேற முடியாது என்பது உண்மைதான்.

இருந்த போதிலும் லெனினியத்தின் எதிரிகள் அதற்கு மாறாக, ஏ. போக்டனோவ், ஜி. லியூகாக்ஸ், ஈ. பிளாக் போன்ற மற்றும் பலரின் கவுட்ஸ்கீயிஸம், ட்ராஸ்கீயிஸம்,[25] ஆகிய மாற்றுக் கருத்துக்களை வைத்து முயற்சிகள் மேற் கொண்ட போதிலும், இன்று லெனினியம் மட்டுமே,

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் மொத்தத்தில் மார்க்சியத் தத்துவத்தின் விஞ்ஞான வடிவமாகத் திகழ்கிறது. அதன் உள்ளடக்கத்தை புதிய வரலாற்று அனுபவம் மறறும் 20ம் நூற்றாண்டின் விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்த்துச் செழுமைப்படுத்துகிறது. உலகத்தின் முதல் வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிக்கான தயாரிப்புக்கள் மேற்கொண்ட காலத்தில், அந்தப் புரட்சி மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென ஓர் உந்து சக்தியாகி புதிய வரலாற்றுச் சகாப்தத்தை ஏற்படுத்திய காலையில், மார்க்சியத்தின் புரட்சிகர உத்வேகத்தை முழுமையாக உறுதிப்படுத்தி விஞ்ஞான ரீதியான கம்யூனிஸக் கண்ணோட்டத்தை மேலும் செழுமைப்படுத்தி வளர்த்த ஒரே உண்மையான வழி, மார்க்சியத் தத்துவத்துக்கு லெனினால் அறிமுகப்படுத்தப் பட்டு அவரது சீடர்களும் அவரைப் பின்பற்றியவர்களும் எடுத்துக் காட்டிய லெனினது புதிய கருத்துக்களே ஆகும்.

## 2. மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டத்தின் மிக முக்கியமான அம்சங்கள்

மார்க்சிய ஆய்வியலின் வளர்ச்சி குறிப்பாக லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சி பல அம்சங்களின் மூலம் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. அது லெனினியத்தின் சத்தையும் சாரத்தையும் புலப்படுத்தி, 20ம் நூற்றாண்டில் மார்க்சியத்தை வியாக்கியானம் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்ட இதர பல முயற்சிகளிலிருந்து புரட்சிகரமான முறையில் வேறுபட்டு நிற்கிறது. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பலதலைவர்களும் பல்வேறுபட்ட குட்டி முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவச் சித்தாந்த, அரசியல் போக்குகளும் தங்களது வியாக்கியானம்தான் மார்க்சியத்துக்கு அசல் என பாத்தியதை கொண்டாடுவது பொது

அறிவின் பால்பட்டதே. இந்த நூற்றாண்டின் திருப்பத்தில், மற்றவர்களோடு ஸ்ட்ருவ், ட்யூகன்-பாரனோவ்ஸ்கி போன்ற 'சட்டபூர்வ மார்க்சியவாதிகளால்' இதன்பால் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தக் காலத்தில் தேர்ச்சியற்ற முறையில் ஜெர்மனியில், இ. பெர்ன்ஸ்டீனால் மார்க்சின் கருத்துக்கள் திருத்தப்பட்டன. பின்னர் ஏ. போக்டனோவ், எப். ஆட்லர், கே. ஸ்பிரிஞ்சர் (ரென்னர்), கே. கவுட்ஸ்கி மற்றும் பலர் இதைத் தொடர்ந்தனர். இன்று முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ மற்றும் திருத்தல் வாதிகள் மத்தியிலிருந்து கிளம்பியுள்ள அப்படிப்பட்ட 'மார்க்சிய இயலாளர்கள்' மார்க்சியத்துக்கு தலைசிறந்த வியாக்கியானம் தங்களதே என்று தம்பட்ட மடித்துக் கொள்கிறார்கள். இருந்தபோதிலும் ஒருவருக்குப் பின் ஒருவராக இவர்களது முயற்சிகள் எல்லாம் தோல்வியையே தழுவின. இத் தோல்விக்கு இவ்வியாக்கியானத்தின் ஆசிரியர்கள் ஆய்வில் பலவீனமானவர்கள் என்பதல்ல காரணம். அவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் உண்மையான கருத்துக்களை விதம் விதமான முதலாளித்துவ அல்லது குட்டி முதலாளித்துவ ஆய்வியல்கள் மூலம் அக்கருத்துக்களை மாற்றியமைக்கவோ அல்லது திசைதிருப்பிக் குழப்பவோ முயற்சித்ததுதான் காரணமாகும்.[26]

அது மலர்ந்த காலம் தொட்டே லெனினியம் அடிப்படையாகவே மாறுபட்ட ஒரு வளாகத்திலிருந்துதான் பயணத்தைத் துவங்கியது. இதன் சத்தும் சாரமும் மார்க்சியக் கருத்துக்களுக்கு தொய்வில்லாத விஸ்வாசத்தையும், வறட்டுத் தத்துவ வாதத்தை எதிர்த்து அதன் புரட்சிகரமான உள்ளடக்கத்தை உயர்த்திப் பிடிப்பதிலும்தான் உள்ளது. அதாவது மார்க்சின் மகத்தான பாரம்பரியத்திற்கும் தொழிலாளி வர்க்க நலன்களை, முக்கியமாக பாட்டாளி வர்க்க நலன்களைத் தீவிரமாகக் காப்பதற்கும் ஒரு ஆக்கபூர்வமான அணுகும் முறையைக் கொள்ள வேண்டுமென்பதே. லெனினியத்தின் மிக முக்கியமான அம்சங்கள். அதன் மனிதத்

துவமும் ஆழ்ந்த சர்வதேசீயமுமேயாகும். தனது அணியை லெனினியம் பகிரங்கமாகவே உறுதிப்படுத்துகிறது. அதாவது தொழிலாளி வர்க்க நலன்களை விடாப்பிடியாகப் பாது காப்பது. அதே நேரத்தில் அதன் அணிச்சேர்க்கை, அது எடுக்கும் உண்மையான விஞ்ஞான அணுகும் முறையின் வெளிப்பாடும் ஆகும். உலக வளர்ச்சியின் திட்டவட்டமான சட்டங்களைப் பற்றிய தீர்க்கமான ஆய்வு, அறிவாற்றல், அவற்றிற்கு மனிதனின் வியாக்கியானம் ஆகியவற்றின் பிரதிபலிப்பும் ஆகும்.

லெனினியத்தின் இந்த அம்சங்கள், அதன் சத்தையும் சாரத்தையும், சமூக முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கும் இந்த அம்சங்கள் லெனினியத்தை 20-ம் நூற்றாண்டின் சமூக ஞானத்தில், ஒரு சக்திவாய்ந்த, பரந்துபட்ட போக்காக ஆக்கியுள்ளன. இந்த அம்சங்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

விஞ்ஞான அடிப்படையில், புரட்சிகரமான வழிமுறை களுடன் உலகத்தை அறிவாற்றல் பெறச்செய்து மாற்று வதற்கு லெனினது அணுகும் முறைக் கோட்பாட்டைக் காட்டும் முக்கியமான அம்சங்களில் ஒன்று நாம் மேலே குறிப்பிட்டது போல் மார்க்சியத்தின் அடிப்படைக் கருத்துக் களுக்கு தொய்வில்லாத முழுமையான விஸ்வாசமேயாகும். லெனினது படைப்புக்களில் அடங்கியுள்ள அத்தனை கருத்துக் களும், மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆகியோரது கருத்துக்களின் தொடர்ச்சியே. அவர்களது கருத்துக்களின் தீர்க்கமான வெளிப்பாடே. நமது தொடர்ந்து வரும் பகுப்பாய்வுகளில் இதைக் காணலாம்.

மார்க்சிய மெய்ஞ்ஞானத்தின் தலைசிறந்த மூலவர்களை அடியொற்றி லெனின், உலகத்தை, அதன் அறிவாற்றலை மனிதன் அதை மாற்றியமைப்பதை ஆளுமை கொள்ளும் மிகப் பொதுவான சட்டங்களின் விஞ்ஞானம்தான் மார்க்சியத் தத்துவம் என்ற விரிவான வரையறையை வழங்கியுள்ளார்.

அதே சமயத்தில் மார்க்சியத் தத்துவத்தின் மாற்றம் ஏற்படுத்தும், புரட்சிகரப் பாத்திரத்தை வலியுறுத்தி மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் கருத்துக்களை அவர் செழுமைப் படுத்தினார்.

பொருள், அது நின்று நிலவுவதற்கான வடிவங்கள் பற்றிய மார்க்சிய போதனையை விரிவாக்கும்போது லெனின் 'பொருள்' பற்றி ஒரு அற்புதமான வரையறையை வகுத்துக் கொடுத்தார். இவ்வாறாக இந்தப் பிரச்சினையில் அவர் மார்க்சின் கருத்தை வளர்த்தார். இதற்கும் மேலாக, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட வரலாற்றிலும் மனிதகுலத்தின் முழுமையான பொருளாதார சமுதாய அனுபவத்திலும் இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் காணப் பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களிலிருந்து பொதுவான முடிவுகளை எடுத்து அவற்றை மார்க்சிய நிலைபாடுகளி லிருந்து ஆழமாகப் பகுப்பாய்வு செய்தார்.

மெய்ஞ்ஞானம் பற்றிய மார்க்சிய ஆய்வு தொடர்பான லெனினது பகுப்பாய்வும் மேற்கண்ட வகையிலானதே. 'பிரதிபலிப்பு' பற்றிய லெனினது ஆய்வு, பொருளின் நுகர்வு உயிரினமாக, உயிரியல் வடிவத்திலிருந்து குண மாற்றம் கொள்ளும் போது, மனித உணர்வுகள் எங்ஙனம் தோன்று கிறது என்பது பற்றிய மார்க்ஸ்—எங்கெல்ஸ் கருத்துக்களது நேரடித் தொடர்ச்சியேயாகும். சித்தாந்தச் சிந்தனையின் தர்க்கவியல் பற்றிய லெனினது போதனை இந்தப் பிரச்சினையில் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் தத்துவார்த்த அணுகும் முறைக்கு மேலும் பல விஷயங்களைக் கொடுத்து அதைக் கெட்டிப் படுத்துகிறது. அறிவாற்றல் பரிணாமத்தின் இயக்கவியல் அதன் மையமான கட்டங்கள் பற்றிய அவரது கோட்பாடுகள் மார்க்ஸ்—எங்கெல்ஸ் படைப்புக்களில் உள்ள கருத்துக்களின், குறிப்பிடத்தக்க முறையிலான அற்புத விரிவாக்கமேயாகும்.

ஒரு விசேட சிரத்தையுடன் இயக்கவியல் பற்றிய தனது கருத்துக்களை வெளியிட விரும்பியதாக மார்க்ஸ் எழுதினார்.

லெனின் இயக்கவியல் பற்றி ஒரு நூலை எழுதுவதாக இல்லை. ஆனால் அது பற்றி ஒரு பொதுவான நூலுக்குத் தயாரிப்புப் பணியாக 'தத்துவார்த்தக் குறிப்புக்கள்' என்ற நூலை எழுதினார். இதர பலவற்றோடு பெரும் பகுதியான இந்தப் படைப்பில் பல பகுதிகள் ''இயக்கவியல் பற்றிய பிரச்சினையில்,'' ஹெகலின் நூலான **தர்க்கவியல் பற்றிய விஞ்ஞானம்** பற்றிய விரிவான மதிப்பீடு'', ''ஹெகலின் இயக்கவியலது ஒரு திட்டம்'' (தர்க்கவியல்) போன்ற அனைத்தும் மார்க்ஸின் நனவாகாத கனவுகளை, நனவாக்கும் நேரடி முயற்சிகளே.

வரலாற்றின் பொருள் முதல் வாதக் கருத்தமைவில் பங்கு கொண்டுள்ள பிரதான பிரச்சினைகள் பற்றி மேலும் பகுப் பாய்வு செய்ய லெனின் மகத்தான பங்களிப்பை வழங்கி யுள்ளார். பொருளின் நகர்வில் சமூக வடிவம், சமூகப் பொருளாதார அமைப்பு, உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகளின் இயக்கவியல், அடிப்படையும் மேல் கட்டு மானமும், சித்தாந்தத்தின் சார்பான சுதந்திரம் மற்றும் இதர பிரச்சினைகள் பற்றிய மார்க்சின் போதனைகளுக்கு அவர் ஆகச் சிறந்த விளக்கத்தை அளித்தார். அதே சமயத்தில் லெனின் சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய தனது ஆய்வு, ஏகாதிபத்திய, பாட்டாளி வர்க்கப் புரட்சிகளது சகாப்தத்தில் வர்க்கப் போராட்டத்தின் புதிய வடிவங்கள் பற்றிய தனது போதனை; ஆகியவற்றின் மூலம் மார்க்சியத்தைச் செழுமைப் படுத்தினார். புதிய வரலாற்றுச் சகாப்தத்தில் முதலாளித் துவத்திலிருந்து சமுதாயம் சோஷலிசத்திற்கு மாறுவது பற்றி ஒருங்கிணைந்த போதனையை உருவாக்கி சமுதாய முன்னேற்றத்தின் ஒருமிப்புகளை வெளிப்படுத்தினார்.

பொருள் முதல் வாதம், கருத்து முதல் வாதம் போன்ற வற்றின் போராட்டத்தில் தத்துவார்த்த ஞானத்தின் வளர்ச்சியை ஆளுமை கொள்ளும் சட்டங்களைப் பற்றிய பகுப்பாய்வு, இயக்கவியல், வறட்டுத்தத்துவம், மார்க்சிய ஒழுக்கவியல், மற்றும் அழகியல், விஞ்ஞான ரீதியான

நாத்திகம் ஆகியவற்றின் தலையாய அம்சங்கள் பற்றிய பரிசீலனை போன்ற பல மார்க்சிய தத்துவத்தின் பிரதானப் போக்குகளை விரிவாக்கி வளர்த்ததின் மூலம் லெனின் பெரு மதிப்பைப் பெறுகிறார். சமூகவியல் ஆராய்ச்சியின், ஆராய்ச்சி முறைகளை வளர்த்தலில் அவர் மகத்தான பங்களிப்பை நல்கியுள்ளார். மார்க்சிய சமூகவியல் கல்வி, சமூகவியலில் புறவயப்பட்ட வழிமுறை, வரலாற்று வளர்ச்சியின் அகவய மற்றும் புறவய இயக்கவியல், மார்க்சியத்தில் விஞ்ஞான முன்னறிவின் இடமும் பாத்திரமும், சமூகப் பகுப்பாய்வில் அளவு ரீதியான வழிகளை பிரத்தியேகமாகக் கடைப்பிடித்தல் போன்றவற்றின் இடத்தையும் பாத்திரத்தையும் நிர்ணயிப்பதில் அவர் எடுத்த நிலைபாடு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இவையனைத்தும் புலப்படுத்துவதென்னவென்றால், லெனினியம் 20-ம் நூற்றாண்டின் தத்துவார்த்தக் கல்விக் கூடம்—அது முழுமையாக அனைத்து அம்சங்களையும் தொட்டுத் தழுவி இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தைக் கண்டு பிடித்த மூலவர்கள் மார்க்ஸ்—எங்கெல்ஸ் ஆகியோரின் கருத்துக்களை வளர்த்துச் செல்கிறது என்பதே.

லெனினியத்தின் மற்றொரு முக்கிய அம்சம் அதன் தொய்வில்லாத தொடர்ச்சியான புரட்சிகர உத்வேகமாகும். 19-வது நூற்றாண்டில் முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கியவர்களிடையே மார்க்ஸ்—எங்கெல்ஸ் கருத்துக்கள் கோபாக்கினியையும் கொலை நடுக்கத்தையும் ஏற்படுத்தின. இதன் முக்கிய காரணம் அவர்கள் சமுதாயத்தைப் புரட்சிகர வழிகளின் மூலம் வளர்ச்சியடையச் செய்வதின் தர்க்கவியல் அவசியத்தை எடுத்துக்காட்டியதே. இன்றைய முதலாளித்துவ மற்றும் திருத்தல்வாத மார்க்சியவியலாளர்கள் 19-ம் நூற்றாண்டின் மார்க்சியத்தை மறுதளிப்பதற்கு திசை மாறிச் செல்கிறார்கள். லெனினியத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு மனிதத்துவ ஆய்வியல் என்று கூறும் அவர்கள் தங்களது

நிலைபாட்டிலிருந்து அதைக்'கொச்சையானது' என்கிறார்கள். உழைக்கும் மக்கள் சுரண்டப்படுவதையும் ஒடுக்கப்படு வதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஒரு புரட்சிகரமான ஆய்வியலாக விருப்பதே இதற்குக் காரணம். இருந்தாலும் எந்தவித நோக்கத்திற்கும் ஆட்படாத, ஒரு ஆராய்ச்சியாளர் மார்க்ஸ் மற்றும் லெனினது தலையாய படைப்புக்களை உணர்வு பூர்வமாக ஆய்ந்தால் அவன் "19-ம் நூற்றாண்டின் ஏகபோக முதலாளித்துவத்திற்கு முன்புள்ள சமூக வளர்ச்சியை ஆய்வு செய்த மார்க்சும், 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஏகாதிபத்தியத்தை ஆய்வு செய்த லெனினும் இடைவிடாமல் புரட்சிகர ஆய்வையே கடைப்பிடித்தார்கள். இதுவே அவர்களிருவரையும் கோட்பாட்டு ரீதியில் ஒன்று படுத்துகிறது," என்ற உண்மையை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். மார்க்சின் 1840-ம்வருடத்தியப் படைப்புக்கள் ஒரு பகுதியான மனிதத்துவத்தையே கொண்டதாகும் என்ற முதலாளித்துவக் கற்பனை "ஹெகலின் தத்துவம் பற்றிய சட்டத்தின் விமர்சனத்திற்குப் பங்களிப்பு" "ஜெர்மானியச் சித்தாந்தமும் புனிதக் குடும்பமும்" போன்ற அவரது ஆரம்ப கால நூல்களை ஆழ்ந்து படிப்பதின் மூலம் தூக்கி எறியப்படு கிறது. இந்நூல்களனைத்தும் 1840 களின் முதல் பாதியில் எழுதப்பட்டவையாகும். பின்னர் அவர் சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய அவரது ஆய்வியலின் சத்தையும் சாரத்தையும் "பிரெஞ்சு நாட்டில் உள்நாட்டுப் போர்;" "லூயிஸ் போனபார்ட்டின் 18-வது புரூமையர், "கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை" ஆகியவை மூலம் வகுத்துக் கொடுத்தார். இவ்வாறாக லெனின் சமுதாயத்தின் புரட்சிகர வளர்ச்சியை ஆளுமை செய்யும் சட்டத்திற்கு மேலும் பல விஷயங்களைக் கொடுத்ததின் மூலம் அந்தரங்க சுத்தியுடன் மார்க்சின் கருத்துக்களை நேரடியாகத் தொடர்ந்து சென்றார். மார்க்சிசத்தின் புரட்சிகரக் கோட்பாடுகளை ஆக்கபூர்வமாக வளர்த்தெடுப்பது, பகுப்பாய்வது போன்ற லெனினது இரண்டு செயல்பாடுகளும் லெனினியத்தின் அவசியமான அம்சங்களாகும். அத்துடன் இவை எதிர் வந்த

காலத்தில் மார்க்ஸ் வளர்த்துச் சென்ற ஆய்வியலோடு லெனின் கொண்டிருந்த உடன்பாட்டு ஒற்றுமையின் ஒரு வெளிப்பாடும் ஆகும்.

லெனினியத்தின் உள்ளார்ந்த புரட்சிகர உத்வேகம் அதன் பிரத்தியேக அம்சங்களின் ஒன்றோடு நெருங்கிய உறவு கொண்டதாகும். அதாவது அதன் வறட்டுத் தத்துவ எதிர்ப்பு. ஆய்விலிருக்கும் நிகழ்வை பகுப்பாய்ந்து பரிமாணப் படுத்துவதற்கான உண்மையான ஆக்கபூர்வ அணுகும் முறை. இரண்டாவது அகிலத்தின் நடவடிக்கைகளின்போது, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு வறட்டுத் தத்துவம், சீர் செய்ய முடியாதபடி சேதத்தை ஏற்படுத்தியது உண்மை. அது பல பெரிய தொழிலாளர் கட்சிகளை, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் நாட்டுக் கட்சிகளை சட்ட விரோத, ரகசிய புரட்சிப் போராட்டங்களைக் கைவிடுமாறு தூண்டியது. சித்தாந்தத்தின்பால் இந்த வறட்டுத்தனமான போக்கினால், இரண்டாவது அகிலம் போதித்த சந்தர்ப்ப வாதம்தான் அதை மார்க்சிசத்தை நேரடியாகவே மறுக்கு மளவுக்கு சீரழிவில் கொண்டு போய்விட்டது. இதன் தலைவர்களான பெர்ன்ஸ்டீன், கவுட்ஸ்கி, வாண்டர்வெல்ட் மற்றும் இவர்களைப் பின்பற்றியவர்கள் மார்க்சிசத்தை நிராகரித்தார்கள். ருஷ்ய நாட்டில் நிகழ்ந்த 1905-ம் வருடத்திய புரட்சியின்போது அவர்கள் அந்தப் புரட்சி முதலாளித்துவப் புரட்சி என்பதால் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத் தலைமைக்கு அடிபணிந்து போக வேண்டு மென்றும் கூறினார்கள். 1918-ம் ஆண்டு ஜெர்மன் மண்ணில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடைந்தவுடன்ஷீட்மேன், நோஸ்க் ஆகியோருடன் கவுட்ஸ்கி பழைய முதலாளித்துவ அரசாங்க எந்திரத்தை மீண்டும் இயக்கிப் பாதுகாக்க உதவி செய்தார். இதனால் வெகு சீக்கிரமாகவே புரட்சிகர ஆதாயங்கள் எல்லாம் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பட்டன. ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற புதல்வர்கள் குருதி கொட்டி உயிரிழந்தனர்.

புரட்சிகர நடைமுறையிலிருந்து சித்தாந்தத்தைக் கிழித்தெறியும் வறட்டு வாதத்தை லெனின் தனது அரசியல், சித்தாந்த நடவடிக்கைகளின் துவக்க காலத்திலிருந்தே உறுதியாக எதிர்த்து வந்தார். மார்க்சிசத்தின் சத்தும் சாரமும் ஒரு பிரத்தியேகச் சூழலின் திண்ணியப் பகுப்பாய்வில்தான் அடங்கியிருக்கிறது என அவர் போதித்தார். கட்சியையும் தொழிலாளி வர்க்கத்தையும்எதிர்நோக்கும்பிரச்சினைகளைத் தீர்மானிப்பதற்கு சித்தாந்தத்தின் திட்டவட்டமான அடிப்படைகளை யாந்திரீகமாக திரும்பச் சொல்வதைவிட, சித்தாந்தத்தை மார்க்சின் புரட்சிகரமான வழியில் ஆக்கபூர்வமாக அமுலாக்குவதிலேயே சித்தாந்தத்தின்பால் காட்டும் விசுவாசம் அடங்கியிருக்கிறதென அவர் கற்றுக் கொடுத்தார். இந்தக் கோட்பாடுகளிலிருந்தே அவர் 20ம் நூற்றாண்டின் நிலைமைகளுக்கேற்ப சோஷலிசப் புரட்சியின் மார்க்சியச் சித்தாந்தத்தைச் செழுமைப்படுத்தினார். புரட்சிகரச் சூழல், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி ஒரு சோஷலிசப் புரட்சியாக வளருவதற்கான வழிகள் போன்றவற்றிற்கான மார்க்ஸ், எங்கெல்ஸ் தத்துவக் கூறுகளுக்கு ஸ்தூலமான விளக்கம் அளித்து சமூக வளர்ச்சியின் இயக்கவியலில் பல ஏராளமான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரிவான விளக்கமளித்தார். அவரது சித்தாந்த நடவடிக்கைகளில் பகுப்பாய்ந்த நிகழ்வுகளின் உள் ஒழுங்குகளை முழுமையாக முன் வைத்து, பழைய பத்தாம் பசலித்தனங்களை முழுமையாக வெற்றி கொள்வதற்கான புதியனவற்றின் சத்தையும் சாரத்தையும் மலரச்செய்ய அவர் பாடுபட்டார்.

இதற்கும் மேலாக லெனினியத்தின் மற்றொரு முக்கிய அம்சம் அது தீவிரமாக ஒரு கட்சிச் சார்பு நிலையை எடுத்தல் ஆகும். உழைக்கும் மக்களின் சமூக முன்னேற்றம் மற்றும் சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றுவதற்கான போராட்டத்தில் பகிரங்கமாக அவர்களை ஆதரித்து எந்தவிதச் சமரஸத்திற்கும் இடம் தாராமல் அவர்களது நல உரிமைகளைப் பாதுகாக்கும் நிலையை எடுத்தல் எந்த ஒரு வர்க்கம்

கால... ழவுக்காக ஒரு குறிப்பிட்ட தலைவர் ... அவர், குறிப்பிட்ட உண்மைகள் ...ளைப் பரிசீலிக்கும்போது அவற்றின் நிலை ...கொண்டு பார்த்துத்தான் பணியாற்ற ... அதில்தான் மார்க்சியக் கட்சிச் சார்பு ...ன் சத்தும் சாரமும் அடங்கியுள்ளது என்றும் லெனி... றுத்தினார். வர்க்க சமுதாயங்கள் இருக்கும் வரை சமூக விஷயஞானமும் இயல்பில் வர்க்கத் தன்மையுடனும் கட்சி சார்புத்தன்மையுடனும்தான் இருக்கும் என லெனின் காட்டினார். தங்களது கட்சியின் மக்கள் விரோத நிலையை மூடிமறைப்பதற்காக முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்களும் திருத்தல்வாதிகளும் தங்களது வர்க்க நிலைபாட்டை மறைத்துக் கொள்ள "கட்சி சார்பற்ற விஞ்ஞானம்" என்ற வாதத்தைக் கொண்டு வருகிறார்கள். இத்தகைய வாய்வீச்சுத் தந்திரங்களை ஏற்க மறுத்த லெனின் "அதன் வர்க்கத்தன்மை இந்த பூமியில் வாழும் மக்கள் தொகையில் மிகப்பெரும்பாலோரது—உழைக்கும் மக்களது, உடைமைகள் ஏதும் இல்லாத வர்க்கத்தினது அதாவது காலனி நாடுகளிலும் இதர பகுதிகளிலும் உள்ள பாட்டாளிகள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களது தேவைகளையும், நலன்களையும் பிரதிபலிக்கக் கூடியதாக இருப்பதால் மார்க்சியம் தனது கட்சி சார்பு நிலையை ஒளிவு மறைவின்றிப் பெருமையுடன் பறைசாற்றுகிறது, என்றார் லெனின்.

மார்க்சியச் சித்தாந்தத்தின் வர்க்க கட்சி சார்பு குணாதிசயத்தின் பகிரங்க அங்கீகரிப்பை லெனின் மற்றுமொரு மிக முக்கியமான சந்தர்ப்பத்துடன் தொடர்புபடுத்தினார். பல நூற்றாண்டுகளாக தத்துவத்தின் வர்க்க, கட்சி சார்பு குணாதிசயமும் அதே போல் பொதுவான சமூகஞானமும் அதன் சித்தாந்த, அறிவாதார முறையியல் (அதாவது: அறிவாற்றல்) செயல்பாட்டிலிருந்து வேறுபடுத்தியே காணப்பட்டது. 19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் "தங்களது

சொந்த தன்னகங்கார நலன்களுக்கேற்ப ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவினரால் சமூக ஞானமும் சித்தாந்தமும் 'பொய்மையின்பால்பட்ட, மன உணர்வாக' புகுத்தப் பட்டது'' என டெஸ்டட் டிட்ரேஸி வரையறை செய்தார் இவ்வாறாக உலகம் பற்றிய ஒரு மதிப்பு நிறைப்போக்காகக் கருதப்பட்ட தத்துவம், குறிப்பிட்ட சமூகத் தேவைகள், நல உரிமைகள் எவ்வாறிருந்தாலும்கூட உண்மையைத் தேடிக் கண்டுபிடிக்கும் உலகத்தின் அறிவாற்றலது விசேட விஞ்ஞான மாக மாற்றப்பட்டது. தத்துவம் மற்றும் சமூகஞானம் பற்றிய இந்தக்கணிப்பு முழுமையாக நவீன முதலாளித்துவச் சித்தாந்தத்தினால் அப்படியே பாதுகாக்கப்படுகிறது. மார்க்சியத்தத்துவம் மற்றும் சமூக ஞானத்தின் கட்சிச் சார்பு இயல்பை முழுமையாகச் சித்தரிக்கும் லெனின் கூறுவதாவது: ''கம்யூனிஸ்ட் கோட்பாடுகளின்படி சமுதாயத்தைப் புரட்சி கரமாக மாற்றியமைப்பதற்கு மிகவும் நம்பற்குரிய சுருக்க மான பாதைகளைக் காண விழைவதின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க மற்றும் அனைத்து உழைக்கும் மக்களது நலன்கள் என்னும் பதாகையை உயர்த்திப் பிடிக் கிறது.'' இத்தகைய பாதைகளே உலகத்தின் வளர்ச்சியினது ஆளுமையின் திட்டவட்டமான சட்டங்களைஆழ்ந்த அறிவாற் றலுடனும் எச்சரிக்கையுணர்வுடனும் காண்பதற்கு சரியான வையாயிருக்க முடியும். அதாவது: இயற்கை; சமுதாயம் மற்றும் சிந்தனை உழைக்கும் பெரும்பான்மையோரது நலன் களில் உலகத்தின் திட்டவட்டமான சட்டங்களை நாம் மிகத் திறமையாகவும் முழுமையாகவும் பயன்படுத்துவதற்கு இது அவசியமாகிறது. இது இவ்வாறிருப்பதால், கட்சிசார்புநிலை என்ற மார்க்சியக் கோட்பாடு அறிவாற்றல் வியாக்கியானம், மற்றும் ஆய்வில், இருக்கும் பொருளின் வளர்ச்சியின் பரிமாணம் ஆகியவற்றின் ஆழ்ந்த அனைத்துப்பகுதியிலு மான விஞ்ஞான அணுகும் முறையை அவசியம் இணைத்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. மார்க்சியமும்—லெனி னியமும் அதன் சித்தாந்தக் கடப்பாட்டையும் கட்சி சார்பு நிலையையும் ஒரு விஞ்ஞான அணுகும் முறையுடனும்

அல்லது சமுதாயக் குழுவுக்காக ஒரு குறிப்பிட்ட தலைவர் செயலாற்றுகிறாரோ அவர், குறிப்பிட்ட உண்மைகள் அல்லது கருத்துக்களைப் பரிசீலிக்கும்போது அவற்றின் நிலை பாடுகளைக் கண்கொண்டு பார்த்துத்தான் பணியாற்ற வேண்டுமென்றும் அதில்தான் மார்க்சியக் கட்சிச் சார்பு நிலையெடுத்தலின் சத்தும் சாரமும் அடங்கியுள்ளது என்றும் லெனின் வலியுறுத்தினார். வர்க்க சமுதாயங்கள் இருக்கும் வரை சமூக விஷயஞானமும் இயல்பில் வர்க்கத் தன்மை யுடனும் கட்சி சார்புத்தன்மையுடனும்தான் இருக்கும் என லெனின் காட்டினார். தங்களது கட்சியின் மக்கள் விரோத நிலையை மூடிமறைப்பதற்காக முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்களும் திருத்தல்வாதிகளும் தங்களது வர்க்க நிலை பாட்டை மறைத்துக் கொள்ள ''கட்சி சார்பற்ற விஞ்ஞானம்'' என்ற வாதத்தைக் கொண்டு வருகிறார்கள். இத்தகைய வாய்வீச்சுத் தந்திரங்களை ஏற்க மறுத்த லெனின் ''அதன் வர்க்கத்தன்மை இந்த பூமியில் வாழும் மக்கள் தொகையில் மிகப்பெரும்பாலோரது— உழைக்கும் மக்களது, உடைமைகள் ஏதும் இல்லாத வர்க்கத் தினது அதாவது காலனி நாடுகளிலும் இதர பகுதிகளிலும் உள்ள பாட்டாளிகள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களது தேவைகளையும், நலன்களையும் பிரதிபலிக்கக் கூடியதாக இருப்பதால் மார்க்சியம் தனது கட்சி சார்பு நிலையை ஒளிவு மறைவின்றிப் பெருமையுடன் பறைசாற்று கிறது, என்றார் லெனின்.

மார்க்சியச் சித்தாந்தத்தின் வர்க்க கட்சி சார்பு குணா திசயத்தின் பகிரங்க அங்கீகரிப்பை லெனின் மற்றுமொரு மிக முக்கியமான சந்தர்ப்பத்துடன் தொடர்புபடுத்தினார். பல நூற்றாண்டுகளாக தத்துவத்தின் வர்க்க, கட்சி சார்பு குணாதிசயமும் அதே போல் பொதுவான சமூகஞானமும் அதன் சித்தாந்த, அறிவாதார முறையியல் (அதாவது: அறிவாற்றல்) செயல்பாட்டிலிருந்து வேறுபடுத்தியே காணப் பட்டது. 19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் ''தங்களது

சொந்த தன்னகங்கார நலன்களுக்கேற்ப ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவினரால் சமூக ஞானமும் சித்தாந்தமும் 'பொய்மையின்பால்பட்ட, மன உணர்வாக' புகுத்தப் பட்டது'' என டெஸ்டட் டி ட்ரேஸி வரையறை செய்தார் இவ்வாறாக உலகம் பற்றிய ஒரு மதிப்பு நிறைப்போக்காகக் கருதப்பட்ட தத்துவம், குறிப்பிட்ட சமூகத் தேவைகள், நல உரிமைகள் எவ்வாறிருந்தாலும்கூட உண்மையைத் தேடிக் கண்டுபிடிக்கும் உலகத்தின் அறிவாற்றலது விசேட விஞ்ஞான மாக மாற்றப்பட்டது. தத்துவம் மற்றும் சமூகஞானம் பற்றிய இந்தக்கணிப்பு முழுமையாக நவீன முதலாளித்துவச் சித்தாந்தத்தினால் அ ப் ப டி யே பாதுகாக்கப்படுகிறது. மார்க்சியத்தத்துவம் மற்றும் சமூக ஞானத்தின் கட்சிச் சார்பு இயல்பை முழுமையாகச் சித்தரிக்கும் லெனின் கூறுவதாவது: ''கம்யூனிஸ்ட் கோட்பாடுகளின்படி சமுதாயத்தைப் புரட்சி கரமாக மாற்றியமைப்பதற்கு மிகவும் நம்பற்குரிய சுருக்க மான பாதைகளைக் காண விழைவதின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க மற்றும் அனைத்து உழைக்கும் மக்களது நலன்கள் என்னும் பதாகையை உயர்த்திப் பிடிக் கிறது.'' இத்தகைய பாதைகளே உலகத்தின் வளர்ச்சியினது ஆளுமையின் திட்டவட்டமான சட்டங்களைஆழ்ந்த அறிவாற் றலுடனும் எச்சரிக்கையுணர்வுடனும் காண்பதற்கு சரியான வையாயிருக்க முடியும். அதாவது: இயற்கை; சமுதாயம் மற்றும் சிந்தனை உழைக்கும் பெரும்பான்மையோரது நலன் களில் உலகத்தின் திட்டவட்டமான சட்டங்களை நாம் மிகத் திறமையாகவும் முழுமையாகவும் பயன்படுத்துவதற்கு இது அவசியமாகிறது. இது இவ்வாறிருப்பதால், கட்சிசார்புநிலை என்ற மார்க்சியக் கோட்பாடு அறிவாற்றல் வியாக்கியானம், மற்றும் ஆய்வில், இருக்கும் பொருளின் வளர்ச்சியின் பரிமாணம் ஆகியவற்றின் ஆழ்ந்த அனைத்துப்பகுதியிலு மான விஞ்ஞான அணுகும் முறையை அவசியம் இணைத்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. மார்க்சியமும்—லெனி னியமும் அதன் சித்தாந்தக் கடப்பாட்டையும் கட்சி சார்பு நிலையையும் ஒரு விஞ்ஞான அணுகும் முறையுடனும்

சூழ்ந்துள்ள உலகையும் மனிதனையும் ஆளுமை செய்யும் சட்டதிட்டங்களின் சத்தையும் சாரத்தையும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்யும் முறையுடனும் நெருங்கிய தொடர்பை யேற்படுத்துகிறது. கட்சி சார்பு நிலையின் ஒற்றுமை உலகம் பற்றிய விஞ்ஞான ரீதியான பாட்டாளிவர்க்கப்பார்வை ஆகியவற்றிற்கு மார்க்சிய—லெனினியம் ஒரு விரிவான வெளிப்பாட்டை வழங்குகிறது. அது உலகத்தையும் மனிதனையும் அறிவாற்றல் மிக்கதாகச் செய்வதை முக்கிய நலனாகக் கொண்டு, இவ்வாறு பெறப்பட்ட ஞானத்தை 'ஒரு புதிய, உண்மையாகவே மனிதத்துவம் நிறைந்த சமுதாய அமைப்பை—கம்யூனிஸ அமைப்பைக் கட்டுவதற்குப் பயன் படுத்தும் வர்க்கத்தின் தேவைகளையும் நிலைபாட்டையும் கொண்டு விளங்குகிறது.

இங்கு நாம் லெனினியத்தின் மற்றொரு மிக முக்கிய மான அம்சத்தை—அதன் மனிதத்துவம் மற்றும் மனிதனது நியாயமான உரிமைகளைப் பற்றிய கவலை என்ற அம்சத்தைத் தொட்டுள்ளோம். மனிதனை பொதுவாக ஒரு உருவமாகப் பார்க்காமல், உழைக்கும் பெரும்பான்மை யோரில் ஒரு உறுப்பினனாக, சமுதாயத்தின் அத்தனை வளங் களையும் தனது கரங்களினால் படைத்தளிக்கும் ஒருவனாக அது பார்க்கிறது. இவ்வாறாக அவனது வாழ்வை வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது. லெனினியம் "மனிதாபிமானமற்றது"; ஏனென்றால் ஒட்டுமொத்த மக்களின் நன்மைக்காக அதாவது முழுமையான சமூக வளர்ச்சிக்காக அது தனிமனிதனின் நலன்களைத் தியாகம் செய்கிறது என நமது எதிரிகள் அடிக்கடி கூறுகிறார்கள். இத்தகைய கூற்றுக்கள் எல்லாம் லெனினது கருத்துக்களின் சாரத்தைத் திசை திருப்பி பொய்ம்மைப் படுத்துவதற்காகச் செய்யப்படும் வறட்டு வாய் வீச்சுக்களே தவிர வேறொன்றுமில்லை. லெனினது முழுமையான சித்தாந்த நடவடிக்கைகளனைத்தும் சட்டங் களையும் வழிமுறைகளையும் அறிவாற்றல் மிக்கதாக்கி சமூக உறவுகளின் சாத்தியக் கூறுகளை நிறுவி அவை, உழைக்கும் மக்களின் அதாவது மனிதகுலத்தில் பெரும்பான்மையோரது

தேவைகளையும் அவசியங்களையும் அதிகபட்சமாக நிறைவேற்றுவதன்பால்பட்டதே. எனவே 20-ம் நூற்றாண்டில் உலகெங்கணுமுள்ள கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் இதயச் சிம்மாசனத்தில் கொலுவிருக்கும் மிக உயர்ந்த கௌரவத்துடன் கூடிய சமுதாயச் சித்தாந்தமாக லெனினியம் விளங்கியது; உள்ளபடியே ஏதோ தற்செயல் நிகழ்சாயல்ல. டஜன்கணக்கான நாடுகளில் லெனினது கருத்துக்கள் புரட்சிகரச் சக்திகளை ஒன்றுபடுத்தி ஓரணியில் திரட்டின. இந்நாடுகள் ஏகாதிபத்திய, காலனி ஆதிக்க அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்து விட்டன. பால் லேங்க்வின், பிரெடரிக் ஜோலியோக்யூரி, ஜான்பெர்னால், புருனோ போண்டிகோர்வோ, பால் ராப்ஸன், எர்னஸ்ட் புஸ், பெர்டோல்ட் பிரெக்ட் போன்ற முற்போக்கு விஞ்ஞானிகளும் கலை, கலாசாரத்துறை மேதைகளும் உணர்வு பூர்வமாக விஞ்ஞான ரீதியான கம்யூனிஸத்தின் நிலையை எடுத்தனர். தங்களது நடவடிக்கைகளில் லெனினது தத்துவார்த்தக் கருத்துக்களைப் பின்பற்றியதுடன் அவற்றிற்காக வக்காலத்தும் வாங்கினர்.

லெனினியத்தின் பொதுவான மனிதத்துவ சர்வதேசீய குணாம்சமும் அதன் மிக முக்கியமான அம்சமாகும். அன்று முதலாளித்துவ முரண்பாடுகள் குறிப்பிடத்தக்க முறையில் முற்றிப் போயிருந்த நேரத்தில், ருஷ்ய முதலாளித்துவத்தின், வெளிநாட்டு மூலதனம், சொந்த மூலதனம், நாட்டின் எல்லைப் பகுதிகளிலுள்ள தேசீய பூர்ஷ்வாக்கள் ஆகிய மூன்று விதச் சுரண்டலின் பிடியில் சிக்கி அல்லலுற உழைக்கும் மக்கள் வாழ்ந்த நாட்டில் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒருநாள் லெனினியம் முகிழ்த்தது. பின்னர் அது நாட்டின் எல்லைகளையெல்லாம் கடந்து மிகவேகமாக வளர்ந்து ஒரு சக்தி மிக்க சர்வதேசீயச் சித்தாந்தமாக மலர்ந்து மணம் வீசி உறுதி படைத்த மார்க்சியப் புரட்சிப் போராளிகளை தன்னைச் சுற்றி அணி வகுக்கச் செய்தது. 20-ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலும்கூட

லெனினது சீடர்களும் அவரைப் பின்பற்றியவர்களும் ஜெர்மனி, போலந்து, இத்தாலி, ஹாலந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் அதேபோல் ருஷ்ய நாட்டிலும் பணியாற்றினர்.

முதல் உலகப் போரின்போது லெனினது கருத்துக்கள் மேலும் அதிக அளவில் பரவின. லெனினது முன் முயற்சியால் கூட்டப்பட்டு அவரே தலைமை தாங்கிய முதல் மற்றும் இரண்டாவது ஸிம்மர் வால்ட் மாநாடுகள் ஏகாதிபத்தியப் போரை முதலாளித்துவத்தை எதிர்த்த தொழிலாளி வர்க்கப் போராக மாற்றுவதற்கான போராட்டத்தில் ஐரோப்பாவின் உண்மையான அனைத்துச் சோஷலிச சக்திகளினதும் புரட்சிகர அணியை நடைமுறையில் ஒன்று திரட்டின. ருஷ்ய நாட்டு அக்டோபர் புரட்சியின் வெற்றி லெனினியத்தைப் பின்பற்றும் சக்திகளின் விரைவான வளர்ச்சியை முடுக்கி விட்டது. முதல் உலகப்போரின் துவக்கத்தில் உடைபட்டுப் பிரிந்துபோன இரண்டாவது அகிலம் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் தோற்றத்திற்கு வழி வகுத்தது. அது லெனினிய வழிக் கம்யூனிஸ்ட் கட்சிகளை முதலாவதாக ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலுள்ள மிகவும் வளர்ச்சி பெற்ற நாடுகளிலுள்ள கட்சிகளையும் பின்னர் அதேபோல் இதர கண்டங்களிலுள்ள கட்சிகளையும் ஒன்று படுத்தியது. உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இயக்கவியலை இங்கு, ஆசியா, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களின் அநேக நாடுகளிலுள்ள புரட்சிப் போராளிகள் அவர்களாகவே, லெனின் எழுதிய ''முதலாளித்துவத்தின் உயர்ந்த கட்டமாக அரசாங்கம், புரட்சி மற்றும் ஏகாதிபத்தியம்'' என்ற படைப்பின் மூலம் மார்க்சிய போதனைகளோடு தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதின் மூலம் காணலாம். இந்தப் படைப்புக்கள் உலகெங்கணும் புகழ்பெற்று விளங்கின. வியாட்னாம், ஜப்பான், சீனா, பிரேஸில், மெக்ஸிகோ, அர்ஜெண்டைனா மற்றும் பல நாடுகளில் கம்யூனிஸ்ட்

கட்சிகளின் அமைப்புக்கு இப்படைப்புக்கள் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தன.

''லெனினது கருத்துக்கள் ஒரு குறுகிய தேசீய வட்டத்திற்குள் மட்டும் சுழல்வது. ''முழுக்க முழுக்க ருஷ்ய நாட்டின்'' முக்கியத்துவத்தை மட்டுமே பிரதிபலிப்பது' என நிரூபிப்பதற்கு லெனினியத்தின் சித்தாந்த விரோதிகள் இன்னும் கூட முயல்கிறார்கள். ஆனால் 20-ம் நூற்றாண்டின் சமூக வளர்ச்சியும் உலகின் புரட்சிகரப் பரிணாமமும் இத்தகைய பொய்மையின் பால்பட்ட கூற்றுக்களை முழுமையாக நிராகரித்து விட்டன. ருஷ்ய நாட்டில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சியின் வெற்றி, உலகத்தின் முதல் சோஷலிசப் புரட்சி, காலனி ஆதிக்கத்தின் உலக அமைப்பு தகர்ந்தது, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கும் மிகக் கூர்மையான முதலாளித்துவ நெருக்கடி ஆகிய அனைத்து உண்மைகளும், 20-ம் நூற்றாண்டில் லெனினியத்தின் வரலாற்று உண்மையையும், அதன் மகத்தான சர்வதேச முக்கியத்துவத்தையும் மிக நேர்த்தியான முறையில் ஊர்ஜிதப்படுத்துகின்றன. மார்க்சியம் மற்றும் புரட்சிப் போராட்டம் போன்ற கருத்துக்களின் பக்கமே தலைவைத்துப் படுத்திராத, அவற்றிற்கு விரோதமான கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களும் கூட, இன்று மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றதும்,சக்தி மிக்கதுமானதுமான லெனினியம் மட்டுமே உள்ளது என்பதைத் தெளிவாகக் காணத் தொடங்கி விட்டனர். லெனினியத்தின் கீழ்தான் 20-ம் நூற்றாண்டில் மிக முக்கியமானதும் குறிப்பிடத்தக்கதுமான சமூகப் பரிமாணங்கள் நிகழ்ந்துள்ளன. சமாதானம், முன்னேற்றத்தை விழையும் அனைவருக்கும் வாய்ச்சொல் வீரர்களாக இல்லாமல் உள்ளபடியே ஒடுக்கு முறை, மனிதனை மனிதன் சுரண்டுவது சமூக அநீதிகள் ஆகியவற்றிலிருந்து மனித குலம் விடுதலை பெற வேண்டுமெனக் கவலைப்படும் அனைவருக்கும், அதற்காகச் செயல்படும் அனைவருக்கும் லெனினது கருத்துக்கள் மிகுந்த முக்கியத்துவ

முடையதாயுள்ளன. சித்தாந்த ஈர்ப்பைப் பெற்றுள்ளன. இவையனைத்தும் லெனினியத்தின் உண்மையான சர்வதேசீய, மனிதத்துவ சாரத்தையும், நமது இன்றைய நாளில் இன்றைய சகாப்தத்தில் மார்க்சிய ஆய்வியலின் வளர்ச்சிக்கதியினால் எடுக்கப்பட்ட ஒரே உண்மையான பொதுவழி என்பதையும் காட்டுகின்றன.

மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் இன்று லெனினியக் கட்டத்தின் பொருத்தத்தைக்காட்ட, சமகாலத்தில் பொதுவான நிலைமைகளையும் சாத்தியக்கூறுகளையும் ஒருவன் பகுப்பாய்ந்து பரிணாமப் படுத்த வேண்டும். இது லெனினியத்தின் மற்றுமொரு முக்கியமான அம்சத்தை அதன் விரிவாக்கும் தன்மையைக் கொண்டு வருகிறது. மார்க்சியச் சித்தாந்தத்தின் முழுமையான உள்ளடக்கத்தை—அதன் பொருளாதாரத் தத்துவத்தை, கோட்பாட்டை விஞ்ஞானக் கம்யூனிஸத்தை வளர்த்து லெனின் ஒரு புதிய கட்டத்திற்கு உயர்த்தினார் என்பது நமக்குத் தெரிந்ததே. மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் லெனினியக்கட்டம் என்பதோடு மட்டும் நாம் சுருக்கிக் கொண்டால் (இந்தப் புத்தகத்தின் பொருள் அதுவே) இங்கும்கூட லெனினது பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. ஏனென்றால் புதிய அடிப் படை முக்கியமான கருத்துக்கள் மற்றும் நிலைப்பாடுகளி லிருந்து அவர் தத்துவஞானத்தின் அம்சங்களை அனைத்துத் துறைகளிலும் செழுமைப்படுத்தியுள்ளார். 'பொருள்' அது நின்று நிலவும் வடிவங்கள் ஆகியவை பற்றிய மார்க்சின் போதனையை இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் காணக்கிடைத்த மகத்தான சாதனைகளின் தத்துவார்த்தப் பொறுமைப்படுத்தலை வழங்கி லெனின் ஒரு புதியகட்டத்திற்கு உயர்த்தினார். பொருள் முதல் இயக்க வியல், வளர்ச்சியின் ஒரு பொதுவான கோட்பாடு, மார்க்சிசத்தின் விஷயஞான ஆய்வு, அதன் தர்க்கவியல், மக்களின் நடவடிக்கையை மாற்றும் நடைமுறை, ஆய்வு என அவரது படைப்பு ஒரு ஆழ்ந்த ஆராய்ச்சியில் முடிந்தது.

வரலாற்றின் பொருள் முதல் வாதக் கருத்தமைவில் லெனின் பல தலையாய கோட்பாடுகளை அறிமுகப்படுத்தினார். சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய தனது புதிய சித்தாந்தம், ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்துவ வளர்ச்சியை ஆளுமை கொள்ளும் சட்டங்களைப் பற்றிய அவரது பகுப்பாய்வு, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச மாற்றம் நிகழ்வது பற்றிய ஆய்வு, புதிய கம்யூனிஸ சமூகப் பொருளாதார அமைப்பு பற்றியும் அதன் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள், பண்பாடு மற்றும் அறிவுசான்ற வாழ்க்கை பற்றியுமான அவரது போதனை ஆகியவற்றின் மூலம் அந்தக் கோட்பாடுகளுக்கு வளம் சேர்த்தார். 20-ம் நூற்றாண்டில் உலகப் புரட்சிப் பரிணாமத்தில் லெனின் மதிப்பிடற்கரிய கருத்துக்களை முன்வைத்தார். கம்யூனிஸ்ட் நெறிமுறைகள், கம்யூனிஸ்ட் அழகியல், மற்றும் தத்துவக் கூறுகளின் இதர துறைகள் பற்றிய அவரது கருத்துக்கள் இன்று மார்க்சிய—லெனினிய தத்துவார்த்தச் சித்தாந்தத்தின் வடிவத்தை அமைத்துத் தருகின்றன.

இன்றைய நிலைக்குப் பொருத்தமாக விளங்குவதில் லெனினது கருத்துக்கள் கோபுர உச்சியில் நிற்கின்றன. மனிதகுல வரலாற்றின் அனைத்துக் காலகட்டங்களும் புதிய புதிய கருத்துக்கள் மலர்ந்து விரிவாக்கம் பெறுவதைக் கொண்டு திகழ்ந்தன. இந்தக் கருத்துக்கள் புதிதாக முகிழ்க்கும் நிகழ்வுகளையும் சமூக உயிரினங்களின் பரிணாமங்களையும் பிரதிபலித்தன. இருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை இன்று வரலாற்று முக்கியத்துவம் உள்ளவையாக மட்டுமே திகழ்கின்றன. ஆனால் லெனினது சித்தாந்தப் பாரம்பரியத்துக்கு இந்த சரித்திரச் சாபத்தீடு இல்லை. மார்க்ஸை மேற்கோள்காட்டி லெனின் கூறியதாவது. ''மார்க்சின் ஒன்றையும்விடாத முழுமையான அணுகும் முறை, எல்லாவற்றிற்கும் மேலாக அந்த ''மதிப்பிடற்கரிய வழிமுறைகளின்'' விரிவாக்கத்தில்தான் குறிப்பாகக் காணக் கிடைக்கிறது. இவை உலக வளர்ச்சிப்

பரிமாணங்களின் சத்தையும் சாரத்தையும் புலப்படுத்து கின்றன."[27] லெனினது கருத்துக்களுக்கும் முழுமையாக இது பொருத்தமாகும். அவர் புரட்சிகரச் சித்தாந்தத்திலும் நடைமுறையிலும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார். இதன் பரிணாமத்தில் இன்று அறிவாற்றல் மற்றும் நடைமுறையில் முகிழ்க்கும் புதிய கடமைகளை நிறைவேற்ற உண்மையான விஞ்ஞான ஆய்வுமுறையியலின் ஒருங் கிணைந்த வடிவமாக அவர் பொதுவான ஆய்வியல் கோட் பாடுகளை வகுத்தளித்ததின் மூலம் தீர்வு கண்டார். இவ்வாறாக லெனினது பல படைப்புக்களில் வகுத்தளிக்கப் பட்ட இயக்கவியலின்பால்பட்ட பொருள் முதல்வாதக் கருத்துக்கள் இன்றைய இயற்கை விஞ்ஞான வளர்ச்சியின் ஆய்வியலுக்கு அடிப்படையாக விளங்குகின்றன. "அமைப்புக் களின் அணுகல்" தகவல் ஆய்வு, மதிப்புப் பகுப்பாய்வு, சமூகப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆய்வு, விஞ்ஞான ரீதியான தீர்க்கதரிசனம் இன்னபிறவற்றின் பொருள், அவற்றின் சாரம் போன்றவற்றை நாம் புரிந்து கொள்வதில் தான் அவற்றின் தாத்பர்யம் உள்ளது. அண்மைக்காலப் பல பத்தாண்டுகளில் இந்தப் பிரச்சினைகளனைத்தும் குறிப்பிடத்தக்க முறையில் பொருத்தமாயுள்ளன. லெனினது சித்தாந்தப் பாரம்பரியத்தின் ஆய்வு, விஞ்ஞான அறிவாற்ற லுக்கு அவர் தரும் தத்துவார்த்த ஆய்வியல் கோட்பாடுகள் இந்தப் பிரச்சினைகளைப் பகுப்பாய்ந்து பரிணாமப்படுத்து வதற்கு பயன்படும்; கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் காட்டியுள்ளது இந்தப் பிரச்சினைகள் முற்றிலும் புதியனவாக கடந்த காலத்தில் உள்ளனவற்றோடு ஒப்பிட முடியாதவையாக இருக்கின்றன. இவ்வாறாக பொருள்முதல் உலகின் பொருட்கள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிய லெனினது கருத்து, எதிர்மறைகளில் ஒற்றுமை என்பதின்படி, சுற்றிச் சூழ்ந்துள்ள எதார்த்தங்களின் அமைப்புக் கட்டு மானம் பற்றிய மார்க்சியப் பகுப்பாய்வில் ஒரு தீர்மானமான பாத்திரத்தை வகித்தது. சமூகப் பின்னணி செயல்விளைவின் தகவல் பிரச்சினைகளைத் தீர்க்க 'பிரதிபலிப்பு' பற்றிய

லெனினது ஆய்வு ஒரு தத்துவார்த்த அடிப்படையாகி விட்டது. அறிவாற்றலில் ஒற்றுமை, மனிதசிந்தனை மூலம் உலகத்தைப் பற்றிய வியாக்கியானம்—மதிப்பீடு ஆகியவை பற்றிய அவரது கருத்து, மதிப்புப் பகுப்பாய்வு தொடர் பான பிரச்சினைகளைத் தீர்மானிப்பதற்கு ஒரு சித்தாந்த அடிப்படையாகப் பணியாற்றுகிறது. வருங்காலத்தை எதிர் நோக்குவது பற்றிய லெனினது கருத்துக்கள் மனித நடவடிக்கைகளின் சமூக தீர்க்கதரிசனம், நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் திட்டமிடுதல் போன்றவற்றின் நவீனக் கருத்தோட்டத்தைக் காட்டுகின்றன. இன்றையச் சித்தாந்தம் மற்றும் நடைமுறையில் லெனினது தத்துவார்த்தக் கருத் துக்களின் முக்கியத்துவம் தீர்க்கமாக வளர்ந்தோங்குகிறது என்ற முடிவுக்கே இவையனைத்தும் இட்டுச் செல்கின்றன.

இவ்வாறாக லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச் சினைகளின் விரிவாக்கம் இன்றைய மார்க்சிய சிந்தனையின் வளர்ச்சியால் எடுத்துக் கொள்ளப்பட்ட பிரதான திசை வழியிலேயே செல்கிறது. விஞ்ஞான, மார்க்சியக் கண்ணோட்டத்தின் அநேக சித்தாந்த விரோதிகளின் கூற்றுக்களுக்கு மாறாக லெனினியக் கட்டம் எந்தவிதத் திலும் லெனினது மறைவுக்குப்பின் நின்றுவிடவில்லை. ஏகாதிபத்திய, பாட்டாளி வர்க்கப் புரட்சிக் காலகட்டத்தில் மார்க்சியச் சிந்தனையின் வளர்ச்சி ஒரு தர்க்கவியல் கட்டத்திற்கு எழுந்தது. இந்த சகாப்தம் முதலில் ஒரு நாட்டிலும் பின்னர் பல நாடுகளிலும் சோஷலிசத்தின் வெற்றியைப் பறைசாற்றிய முத்திரைச் சகாப்தமாகியது. இப்பொழுது ஒரு உலக சோஷலிச அமைப்பாக மலர்ந்து சமுதாயம் முழுவதுமே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச மாற்றத்தைப்பெறும் சகாப்தமாகிவிட்டது. இந்த சகாப்தம் முழுவதிலும் இவ்வாறாக லெனினியம் வளர்ச்சி பெற்று மார்க்சியச் சித்தாந்தத்தின் வளர்ச்சியில் ஒரு பொது வழி காட்டியாகக் கொள்ளப்பட்டது. அதுவே உலகெங்கணும் கம்யூனிஸம் வெற்றி முரசு கொட்டும் வரை இந்த வளர்ச் சியைத் தீர்மானிக்கும்.

## குறிப்புகள்

1. வி. ஐ. லெனின் படைப்புக்கள். மூன்றாவது ருஷ்யப் பதிப்பு, தொகுப்பு 3, பக்கம் 547.

2. அதே நூல், பக்கம் 554.

3. அதே நூல் தொகுப்பு, 13, பக்கம் 335.

4. என். கே. க்ருப்ஸ்கயா, லெனினைப்பற்றி. கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் மாஸ்கோ. 1971, பக்கம் 75, (ருஷ்யமொழியில்).

5. ''லெனினது நினைவலைகள்''. தொகுப்பு 2. மாஸ்கோ, 1969. பக்கம் 69. (ருஷ்யமொழியில்).

6. அதே நூல். பக்கங்கள் 66, 67.

7. பி. என். லெபிஸின்ஸ்கியைப் பார்க்கவும். ''திருப்பு முனை''. மாஸ்கோ 1955. பக்கங்கள் 114—115. (ருஷ்ய மொழியில்).

8. ''லெனினது நினைவலைகள்'', தொகுப்பு 2, பக்கம் 15.

9. அதே நூல். பக்கம் 62.

10. ''விளாதிமிர் இலியிச் லெனினிலிருந்து மேற்கோள். ஒரு வாழ்க்கை வரலாறு.'' முன்னேற்றப் பதிப்பகம். மாஸ்கோ. 1965. பக்கம் 167.

11. எஸ். ஜி. ஷாவ்மியான், **தேர்வு நூல்கள்** தொகுப்பு. 1. பக்கம் 268. (ருஷ்யமொழியில்)

12. அதே நூல். பக்கம் 286.

13. ''ஒடெஸ்கோயி ஒபோஸ்ரெனி'' எண் 439 1908, பக்கம் 3.

14. வி. ஐ. லெனின். **நூல் திரட்டு** பார்க்கவும். மூன்றாவது ருஷ்யமொழிப் பதிப்பு, தொகுப்பு 13, பக்கம் 333.

15. அதே நூல், பக்கம் 325.

16. ''திரும்பு கட்டடங்களின் மாற்றம்''—1905-ம் வருடத்திய புரட்சியின் தோல்விக்குப்பின் ருஷ்ய முதலாளித்துவ அறிவாளி வர்க்கத்தினரால் எடுக்கப்பட்ட சித்தாந்தப் போக்குகளில் ஒன்று. அது 1909-ல் என். பெர்டியேவ், பி. ஸ்ட்ரூவ், ஐ. இஸ் கோய்வ் ஆகியோரால் பிரசுரிக்கப்பட்ட 'வெக்கி' (திரும்புகட்டடங்கள்) என்ற நூல் திரட்டிலிருந்து பெயர்கொண்டது. அறிவாளி வர்க்கத்துக்கும் அதிகார வர்க்கத்துக்கும் இடையே ஒற்றுமை வேண்டும் என அது அறைகூவல் விடுத்தது. ''வெக்கியைப்பற்றி'' (1909) என்ற கட்டுரையில் அது 'தாராள பச்சோந்தித் தனத்தின் ஒரு வெளிப் பாடு; தாராள முதலாளித்துவம் எதிர்ப்புரட்சி நிலையை எடுக்கும் மாற்றம்'' என லெனின் விமர்சித்தார்.

17. வி. ஐ. லெனின் **நூல் திரட்டு** மூன்றாவது ருஷ்ய மொழிப்பதிப்பு. தொகுப்பு 13, பக்கம், 326.

18. ''டை நியூ ஸெயிட்'' பார்க்கவும் கட்டு 1, எண், 2, 1909, பக்கம் 64.

19. இ. யாரோஸ்லாவ்ஸ்கி பார்க்கவும். ''விளாதிமிர் இலியிச் உலியனோவ்''—''லெனின். தொழிலாளர் புரட்சியின் மகத்தான தலைவர்.'' மாஸ்கோ, 1918. ஏ. லியூனாசார்ஸ்கி ''மகத்தான திருப்பு முனை,'' பீட்ரோ கிராட், 1919. பி. கோரெவ், ''தாமஸ்மூரிலிருந்து லெனின்வரை.'' மாஸ்கோ 1922 வி. நெவ்ஸ்கி. ''வி. ஐ. உலிய

னோவ்'' (என். லெனின்) மாஸ்கோ, 1920. இன்னபிற (அனைத்தும் ருஷ்யமொழியில்).

20. உதாரணமாக ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஒரு கடிதத்தில் 1920-ம் வருடம் டிசம்பர் மாதத்திய ''பாட்டாளி வர்க்க கலாசார அமைப்புக்கள் பற்றி''

21. ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானங்களிலும் முடிவுகளிலும்''.....தொகுப்பு 3. மாஸ்கோ. 1970. பக்கங்கள் 104—105 (ருஷ்ய மொழியில்).

22. அதே நூல்.

23. அவற்றுள் ஸ்டாலினின் ''லெனினியத்தின் அடிப்படைகளும், லெனினியத்தின் பிரச்சினைகள் பற்றியும்'' என்ற நூலை விசேடமாகக் குறிப்பிட வேண்டும். அது லெனினது தத்துவார்த்தக் கருத்துக் களை பரப்புவதிலும் ஜனரஞ்சகமாக்குவதிலும் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தது. இந்த நிலைபாடு களில் மற்றவர்களோடு பெலிக்ஸ் ட்ஸெர்ஸின்ஸ்கி, மைக்கேல்காலினின், செர்ஜி கிரோவ், வேலெரியன் கியூபிஷேவ், ஜார்ஜ் ஓர்ட்ஸ் ஹோனிகிட்ஸ், ஆகியோரும் எவ்வளவோ செய்துள்ளனர். அந்தச் சமயத்தில் முழுக்க முழுக்க தத்துவார்த்தப்படைப் புக்களாக லெனினியம் பற்றி பிரசுரிக்கப்பட்டவை: வி. அடோராட்ஸ்கியின் ''தத்துவம் பற்றிய லெனினது ஆய்வு பற்றி'' போல்ஷ்விக். எண் 2. 1630. வி. பிஸ்ட்ராய்ன்ஸ்கியின் ''ஒரு பொருள் முதல் இயக்கவியல் வாதியாக லெனின்'', லெனின் கிராட் 1925. ஏ. வார்யாஷ்,ன் ''லெனினது கண்களின் இயக்கம்'' மாஸ்கோ—லெனின்கிராட் 1928. ஏ. டெபோரின் எழுதிய ''சிந்தனையாளர் லெனின்'' மாஸ்கோ 1924. மற்றும் ஏ. லுப்போலின்

''லெனினும் தத்துவமும்'', லெனின் கிராட் 1924. லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகள் பற்றி வெளிநாடுகளில் பிரசுரிக்கப்பட்ட அநேக படைப்புக்களில், சென்—கடாயாமா (ஜப்பான்) மார்ஸல் காச்சின் (பிரான்ஸ்) ஆகியவற்றைக் குறிப் பிடலாம்.

24. ருஷ்ய சமூக ஜனநாயகத்தில் ஒரு குட்டி முதலாளித்துவப் போக்காக 1904-ம் ஆண்டு ''ட்ராட்ஸ்கீய வாதம்'' முகிழ்த்தது. தொடர்ந்து அதன் தலைவர் லியோன்ட்ராட்ஸ்கி 1929-ல் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்திலி ருந்து வெளியேற்றப் பட்டபிறகு அது வேறு சில நாடுகளில் செல்வாக்குப் பெற்றது. (பிரிட்டன், பிரான்ஸ், அர்ஜென்டைனா, இத்தாலி. சீனா, இன்ன பிறநாடுகள்). அராஜகவாதம், செக்டேரியன் வாதம், வறட்டுத்தத்துவ வாதம் போன்ற அரசியல் கோட்பாடுகளே இல்லாதவை எனப் பெயர் பெற்ற பலவற்றின் கலவையே ட்ராட்ஸ்கீயவாதம். இப் பொழுது எண்ணற்ற புதிய ட்ராட்ஸ்கீய வாதக் குழுக்கள் உள்ளன. இவை மிகமிகச் சிறிய குழுக்கள். இவை மாவோயிஸவாதிகள் மற்றும் வலதுசாரி பயங்கரவாத குழுக்களோடு அடிக்கடி அணிசேர்ந்து கொள்கின்றன. சர்வதேச விவகாரங்களில் ஒத்த கருத்துடைய புதிய ட்ராட்ஸ்கீய வாதத்தின் அரசியல் செல்வாக்கு என்பது துளிகூடக்கிடையாது.

25. எப். கோரோகோவ், ஏ. சிஸ்சிகுளோவ், டி. பாவ்லோவ், எல். ஸாண்டோ, எச். டங்கர், டோஸாகா ஜன் மற்றும் பலர் லெனினது தத்து வார்த்த நடவடிக்கைகள் பற்றி எழுதிய எண்ணற்ற புத்தகங்களின் வெளியீட்டை 1930-ம் வருடங்கள் கண்டன. சமீபத்திய பத்தாண்டுகளில், லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவம் பற்றிய நூல்களில்

வெளிவந்த பலவற்றுள் முக்கியமானவை: ''லெனினியமும் இன்றையத் தத்துவார்த்தப் பிரச்சினைகளும்'' (1970); ''மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டம்'' (1972) ''தத்துவஞானி லெனின்'' 1969. ''லெனினது தத்துவார்த்தப் பாரம்பரியமும் நவீன தத்துவமும்'' 1974 (அனைத்தும் ருஷ்யமொழியில்).

26. மேற்கொண்டு விவரங்களுக்கு அத்தியாயம் 4 ஐப் பார்க்கவும்.

27. வி. ஐ. லெனின். ''மக்களின் நண்பர்கள் யார். அவர்கள் சமூக ஜனநாயக வாதிகளை எதிர்த்து எங்ஙனம் போராடுவார்கள்.'' நூல்திரட்டு தொகுப்பு, 1, பக்கம் 194.

அத்தியாயம் 2

# அக்டோபர் புரட்சிக்குமுன் லெனினால் வளர்த்துச் செல்லப் பட்ட மார்க்சியத் தத்துவம்

## ஒரு புதிய வகைக் கட்சிக்கான போராட்டம்

1890களின் தொடக்கத்தில் லெனின் ருஷ்ய சமூக ஜனநாயக இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குட்டி முதலாளித்துவப் போக்குகள் அராஜகவாதம், லாஸலேனியஸம்' பிளாங்குயிஸம் போன்ற சித்தாந்தங்களை எதிர்த்து தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மார்க்சியம் இறுதி வெற்றி பெற்ற கால கட்டமே இது மார்க்ஸால் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது அகிலத்தின் இலட்சியங்களை நேரடியாகத் தொடர்ந்து கொண்டு செலுத்துவதற்காக 1899-ல் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் சீடர்களால் இரண்டாவது அகிலம் அமைக்கப் பட்டது. ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்டிரியா மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளின் சமூக ஜனநாயகக் கட்சிகள் தங்களது நடவடிக்கைகளுக்கு மார்க்சியக் கோட் பாட்டுக்கூறுகளையே அடிப்படையாகக் கொண்டன. சமூக வளர்ச்சியில் சர்வதேச சமூக ஜனநாயகம் மிகவும் வல்லமை வாய்ந்த ஒரு சக்தியாக மலர்ந்தது.

அந்தச் சமயத்தில் ருஷ்ய நாட்டில் முதலாளித்துவ உறவுகள் வெகு வேகமாக வளர்ச்சி பெற்று அதன் விளைவாக பாட்டாளி வர்க்கம் உருப்பெற்றது. அப்போது சிறிய, பிரிந்து கிடந்த தொழிலாளர்களது சங்கங்களையும் மார்க்சியக் குழுக்களையும் ஒன்றுபடுத்தி, ஒரே ஒரு உறுதிபடைத்த இயக்கமாக மாற்ற வேண்டிய, ஒரு ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை அமைக்க வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டது.

இதற்கிடையில் ருஷ்ய விடுதலை இயக்கத்தில் சித்தாந்த ரீதியான ஒற்றுமை தேவையாகவிருந்தது. நரோட்னிக் குழுக்கள் தொடர்ந்து ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தன. மார்க்சிய வட்டங்களும். குழுக்களும் ஒன்றிலிருந்து ஒன்றாகத் துண்டித்துக் கொண்டன. தொழிலாளி வர்க்கத்தையும், உழைக்கும் விவசாய வர்க்கத்தையும் தங்களது செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதற்காக சில முதலாளித்துவ தேசீயவாத, பிரதேச வெறிப் போக்குகள் மிகவும் சுறுசுறுப்பாக முயற்சிகள் மேற்கொண்டன. இந்தச் சூழ்நிலைமைகளில், அதிகார பூர்வமான, ஜார் வழிச் சித்தாந்த கர்த்தாக்கள் முதலாளித்துவ அரசாங்கக் கருவியையும், திருச்சபையையும் (மதத்தையும்) நம்பிக்கொண்டு புரட்சிகரப் போராட்டத்துக்கான மக்களது தன்னிச்சையான எழுச்சியை முனையிலேயே கெல்லி எறிந்து விட்டு ருஷ்ய நாட்டுத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சாத்வீகத்தன்மையுடன் அறியாமையில் உழலுமாறு வைத்துக் கொள்வதற்குக் காரிய மாற்றினார்கள்.

ருஷ்ய நாட்டின் இந்த நெருக்கடியான நேரத்தில் தான் புரட்சிகர நரோட்னிக்குகளில் கடைசி நபரான அலெக்ஸாண்டர் உலியனோவின் சகோதரர் விளாதிமிர் இலியிச் உலியனோவ் வருகிறார். அலெக்ஸாண்டர் உலியனோவ், மூன்றாவது ஜார் அலெக்ஸாண்டரின் உயிருக்கு உலை வைக்க முயன்றமைக்காக ஜார் மன்னனால் தூக்கிலிடப் பட்டார். விளாதிமிர் இலியிச் உலியனோவ் சமாரா நகரை

விட்டு வெளியேறி செயின்ட் பீட்டர்ஸ் பர்க்குக்கு வந்து அங்குள்ள மார்க்சிய வட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இதன் உறுப்பினர்களுள் எஸ். ராட்செங்கோ ஜி. கிரெஸிசனோவ்ஸ்கி, வி. ஸ்டார்கோவ், ஜி. க்ராசின், ஏ. வானியீவ், மற்றும் எம். சில்வின் ஆகியோருமிருந்தனர்,

மிகவும் நன்கு படித்த தொழிலாளர்களின் ஒரு மிகக் குறுகிய வட்டத்தில் மட்டும் மார்க்சியத்தைப் பரப்புகிற கடமையை இந்தக்குழு தானாகவே பணித்துக் கொண்டது. ஆனால் ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் அன்றைய அரசியல் கடமைகளோடு இந்தப் பிரசாரம் தன்னைத் தொடர்பு படுத்திக்கொள்ளவில்லை. இதன் உறுப்பினர்கள் மார்க்சிய சித்தாந்தத்தை நடைமுறைப் புரட்சிகரப் போராட்டத்துடன் இணைப்பதற்குக் கூட முயற்சிக்க வில்லை.

இதற்கிடையில் தொழிலாளி வர்க்கத்தில் தானாகவே எழும் நடவடிக்கைகள் தீர்க்கமாக வளர்ந்தன. தொழிற் சாலைகளில் ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் அடிக்கடி நிகழ்ந்தன. எனினும் இவை ஒன்று பட்ட நட வடிக்கைகளாக இல்லாததால் தர்க்கவியலின் படி தோல்வியையே தழுவின. ஜார்மன்னனது அதிகாரிகள் புரட்சிப் போராளிகளுக்கு எதிராக ராட்சச அடக்கு முறை களை ஏவிவிட்டனர்.

புதிய வரலாற்றுச் சூழல்களில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பிரச்சினைகளுக்கு ஒரு சித்தாந்த ரீதியான விரிவாக்கம், பாட்டாளி வர்க்கத்தின் இலக்கு மற்றும் உத்தி பற்றிய ஒரு வரையறை போன்றவைகளின் தேவை மிக முனைப்பாகக் காணப்பட்டது.

மார்க்சியத்தின் சித்தாந்தப் பிரச்சினைகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் குறிப்பிடத்தக்க முறையில் கூர்மை யான விவாதப் பொருட்கள் ஆயின. ஏனென்றால் அந்தச் சமயத்தில் தாராள நரோட்னிக்குகள் தாங்கள் எடுத்த நடை

முறை மூலம் ருஷ்ய ஜனநாயக சிந்தனையில் எங்களது சித்தாந்தம் தான் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த சித்தாந்தம் என்று தம்பட்டமடித்தனர். ருஷ்ய நாட்டிற்கு முதலாளித்துவ முறையே தனிச் சிறப்புடைய முறை எனக் கூறிய அவர்கள் மார்க்சியத்தை எதிர்த்து ஒரு பிரசாரப் போரையே நடத்தினர். மார்க்சியத்தின் நேர்மையும் நியாயமும் நிறைந்த உள்ளடக்கத்தை திசை திருப்பிக் குழப்பி தங்களது சொந்தக்கருத்து முதல்வாத அகவயப் பட்ட சித்தாந்தங்களுக்கு அதை எதிரிடையாக்கினார்கள். இந்தக் கருத்துக்களை எதிர்த்துப் போராட வேண்டியது எல்லாவற்றிற்கும் மேலாக அவசியமாகி விட்டது. ஏனென்றால் தங்களுக்கு முந்தைய 1860கள் மற்றும் 1870 களின் புரட்சிப் போராளிகளைப் போலல்லாமல் 1890களின் நரோட்னிக்குகள், மிதவாத தாராளவாதம் மற்றும் ஜார் ஆதிக்கத்திற்கு அடிபணிவது ஆகியவற்றின் பக்கம் அதிக மாகச் சாய்ந்தனர். நரோட்னிக் சித்தாந்தங்களின் விஞ்ஞானத்திற்கு ஒவ்வாத தன்மை, கருத்து முதல்வாத குணாம்சம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதோடல்லாமல் அவர்களது அரசியல் ஏலாத்தன்மையையும் கடந்தகாலப் புரட்சிப் பாரம்பரியங்களை அவர்கள் கைவிட்டு விட்டு ஓடியதையும் எடுத்துகாட்டி அம்பலப்படுத்த வேண்டியது அவசியமாயிற்று.

இந்தக் கடமை லெனினால் மிக அற்புதமான முறையில் நிறைவேற்றப்பட்டது. 1894-ல் அவரது முதல்பெரிய நூலான "மக்களின் நண்பர்கள் யார். அவர்கள் சமூக ஜனநாயக வாதிகளை எதிர்த்து எப்படிப் போராடுகிறார்கள்" (மார்க்சிய வாதிகளை எதிர்த்து "ருஷ்கோயிபோகட்ஸ்வோ" வில் வந்த கட்டுரைகளுக்குப் பதில்) என்ற நூலை எழுதினார். "வீரர்கள்" "மக்கள் கூட்டம்" பற்றிய அவர் களது ஆய்வை முழுக்க முழுக்க அறிவுக் கொவ்வாதது என லெனின் எடுத்துக் காட்டினார். "திறனாய்வு மனம் கொண்ட புள்ளிகளையும் உழைக்கும் மக்களையும் அந்த

ஆய்வு வேறுபடுத்திக் காட்டியது. அவர்களது கூற்றுப்படி ''வீரர்களே வரலாற்றைப் படைக்கிறார்கள் மக்கள் குருட்டுத் தனமாக அவர்களைப் பின்பற்றுகிறார்கள்'' என்பதே.

இந்தச் சித்தாந்தங்களுக்கு மாற்றாக ''சமுதாயம் திட்ட வட்டமான சட்டங்களுக்கேற்பவே வளர்கிறது. அது எந்தத் தனி நபரின் விருப்பத்தையும், விழைவையும் சார்ந்திருக்க வில்லை'' என லெனின் விஞ்ஞான, மார்க்சிய உலகக் கண் ணோட்டத்துடன் எடுத்துக்காட்டினார். மேலும் சமுதாய வளர்ச்சியின் மெய்யான உந்து சக்தி மக்களே-உழைக்கும் மக்களே என வலியுறுத்திக் கூறினார். மக்கள்தான் தங்களது சொந்தக்கரங்களினால் சமுதாயத்தின் அனைத்து லௌகீக மற்றும் ஆன்மீகச் சொத்துக்களை உருவாக்குகிறார்கள் என்றார்.

நரோட்னிக் சித்தாந்தத்தை விமர்சித்த லெனின் இயக்க வியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதச் சித்தாந் தத்தைச் செழுமைப்படுத்தி பல முக்கிய யோசனைகளையும் முன்வைத்தார். தாராள நரோடிசத்திற்கும் புரட்சிகர மார்க்சியத்திற்கும் இடையேயுள்ள ஆழமான வேறுபாடுகளை அவர் வலியுறுத்தினார். பிரதானமாக நிக்கோலாய் செர்னி செவ்ஸ்கியையும் அவரது சீடர்களையும் மனதில் வைத்துக் கொண்டு, ருஷ்ய மார்க்சியவாதிகள் பழைய புரட்சிப் போராளிகளின் சித்தாந்தப் பாரம்பரியத்தை நிராகரிக் கிறார்கள் என்று நரோட்னிக்குகள் குற்றம் சாட்டிய போது' லெனின் தனது ''நாம் நிராகரிக்கும் பாரம்பரியம்'' (1897) என்ற நூலில் ருஷ்ய சமூக ஜனநாயகம்தான், ருஷ்ய நாட்டு புரட்சிகர ஜனநாயகவாதிகளின் புரட்சிப் பாரம்பரியங்களைத் தொடரும் உறுதியான சக்தி எனக் காட்டினார். ஒரு புரட்சிகரக் குணாம்சம், மார்க்சியத்தின் நிரந்தரமான அம்சம் என அவர் குறிப்பிட்டார். நரோட்னிக்குகளோ சட்ட சம்மத மில்லாத போராட்டங்களை நிராகரித்தனர். இலக்கியம் தொடர்பான போராட்டங்களோடு தங்களது நடவடிக்கை

களைக் குறைத்துக் கொண்டனர். உண்மையில் புரட்சியின் விரோதிகளையே அவர்கள் ஆதரிக்கத் தலைப்பட்டனர்.

சமுதாயம் எந்த விதத் திட்டவட்டமான சட்டங் களாலும் ஆளப்பட முடியாது என நரோட்னிக்குகள் வாதிட்டார்கள். எனவே சமுதாயப் பகுப்பாய்வுக்கு திட்ட வட்டமான வழிமுறைகள் சாத்தியமல்ல; ஆகவே சமூக வளர்ச்சியின் விஞ்ஞானம் என ஒன்று கிடையாது என்ற முடி வுக்கு அவர்கள் வந்தனர். இந்தப் பிற்போக்குக் கருத்துக் களை அம்பலப்படுத்திய லெனின் தனது ''மக்களின் நண்பர்கள் யார். சமூக ஜனநாயக வாதிகளை எதிர்த்து அவர்கள் எங்ஙனம் போராகிடுறார்கள்'' மற்றும் ருஷ்யாவில் முதலாளித்துவம் (1896-1899) என்ற நூல்களில் சமூக வளர்ச்சியின் இயக்கவியல் பகுப்பாய்வுக்கு ஒரு உதாரணம் தந்தார். மார்க்ஸ் முன்வைத்த முன் யோசனைகளை 'புதிய மொந்தையில் பழையகள்' என வக்காலத்து வாங்கினாலே ஒரு சனாதன மார்க்சியவாதியாகி விடலாம் கொள்கைப் பற்றுள்ள உறுதியான மார்க்சியவாதிகள், வரலாற்றுப் பரிமாணங்களில் மாறியுள்ள சூழ்நிலைகள், குறிப்பிட்ட நாடு களில் சமூக வளர்ச்சியின் பிரத்தியேக அம்சங்கள் ஆகிய வற்றிற்கேற்ப அடிப்படை மார்க்சியத் தத்துவங்களை வளர்த்து இயக்கவியல் பொருள் முதல்வாதச் சித்தாந்தத்தை ஆக்கபூர்வமாக வளர்ப்பார்கள். இங்கு உண்மைகள் பற்றிய பிரத்தியேகப் பகுப்பாய்வு முக்கியமானதாகும். சமூக வளர்ச்சியின் விஞ்ஞான விளக்கம் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களை எதிர் கொள்வதால், பாட்டாளி வர்க்கத்தின் தேவைகளோடு இத்தகைய பகுப்பாய்வு மார்க்சியத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது.

சமுதாயத்தின் வளர்ச்சி, வரிசையான எதிர் எதிர் நிகழ்வுகளினால் குறிப்பிடப்படுகிறது எனத்திட்டவட்டமான பகுப்பாய்வு காட்டுகிறது. இந்த எதிர் எதிர் நிகழ்வு, சமுதாயம் இயற்கையைப் போன்று திட்டவட்டமான சட்டங் களுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்கிறது என்பதை

மறுக்க முடியாத முடிவாக்குகிறது. இதன் மூலம் சமூகவியல் மற்றும் தத்துவத்தில் முழுமையாக ஒரு மெய்யான வழி முறையைக் காணவேண்டியதின் அவசியத்தை ஆராய்ச்சி யாளனுக்கு அது கொண்டு வருகிறது. உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் அவற்றின் ஒருமிப்போடு கூடிய உற்பத்தி முறை போன்ற காரணிகளே சமூக வளர்ச்சியைத் தீர்மானிக் கிறது என மார்க்ஸ் காட்டினார். சமுதாயத்தின் பொருளாதார அடித்தளம், சார்ந்திருக்கும் மேல் கட்டு மானத்தை—அரசாங்கம், கட்சிகள் அவை சார்ந்திருக்கும் சமூக உணர்வின் வடிவங்களை (அரசியல், சட்டம், நன்னெறி, மதம், மத நம்பிக்கையின்மை, மற்றும் தத்துவக் கூறுகள்) பாதிக்கிறது. சமூக வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத் தையும் அல்லது காலத்தையும் வருணிப்பதற்கு (உற்பத்திச் சக்திகளின் அளவு மட்டம் அதைச் சார்ந்த உற்பத்தி உறவு களின் மொத்தத் தன்மை, சமுதாயத்தின் பொருளாதார அடித்தளம் அதைச் சார்ந்திருக்கும் மேல் கட்டுமானம்) மார்க்ஸ் சமூக-பொருளாதார அமைப்புக் கருத்தமைவைப் பயன்படுத்துகிறார்.

தனது படைப்புக்களில் லெனின் சமூக பொருளாதார அமைப்பு பற்றிய போதனையை மேலும் செழுமைப்படுத் தினார். சமூகப் பரிமாணத்தின் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, மனிதகுல வரலாற்றில் பொருள் முதல் மற்றும் சித்தாந்த நிகழ்வுகளுக்கிடையேயான உட்தொடர்பு, சமுதாய வளர்ச்சியில் திட்டவட்டமான சட்டங்கள் வகித்த தீர்மானமான தலையாய பாத்திரங்கள் ஆகியவற்றை லெனின் காட்டினார்.

வரலாற்றில் மக்களின் பாத்திரம், தனி நபரின் பாத்திரம்என்ற பிரச்சினைக்கும் லெனின் விஞ்ஞானரீதியான தீர்வைக் கண்டார். மார்க்சியத்தை ''பொருளாதார லோகாயுதவாதம்'' அதாவது விதிவசம், தனிநபரின் பாத் திரத்தையும் சுதந்திரத்தையும் மறுக்கும் வாதம் என நரோட்னிக்குகள் குற்றம் சாட்டினர். மெய்யான மார்க்சியம்,

பொருளாதார லோகாயுத வாதத்திற்கு துல்லியமான ஒரு எதிர்மறை என லெனின் எடுத்துக் காட்டினார். சமூக உறவுகள் பொருள் முதல் மற்றும் சித்தாந்த ரீதியில் பிரிக்கப் பட்டு பொருள் முதலின் மேல் கட்டுமானமே சித்தாந்தமாக விளங்குகிறது என்பதே அடிப்படை மார்க்சியக் கருத்தாகும். அதே நேரத்தில் இந்த இரண்டாம் பட்சமான மேல் கட்டுமான நிகழ்வு ஒரு முறை ஏற்பட்டால். அவற்றைப் பாதித்த பொருள் முதல் உறவுகளின் மீது மிகவும் சுறுசுறுப் பாகத் திரும்ப இரையூட்டும் விளைவை ஏற்படுத்தும். இங்கு தான் சமூக வளர்ச்சியின் அகவயப்பட்ட காரணி புலப்படுத்தப்படுகிறது. புறவயப்பட்ட உலகை ஆளுமை கொள்ளும் சட்டங்களை ஆய்ந்தறியும் அறிவாற்றல் மூலம் மனிதன் மெய்யான சுதந்திரத்தை அடைகிறான். சமூக வளர்ச்சியின் கறார் தன்மையுடன் கூடிய ஒழுங்கு முறைகளை அங்கீகரிப்பதென்பது மனிதனின் நடவடிக்கைச் சுதந்திரத்தை மறுப்பதற்கு ஒப்பமைவாகாது. அதற்கு மாறாக அது இந்த சுதந்திரத்தின் நிலைமைகளையும் சாரத்தையும் வகைப் படுத்தும் ஒரு பொருளாகும். நியதி வாதம் (Determinism) என்ற கருத்து, மனித நடவடிக்கைகளை இன்றியமையாத தாக்கி, சுதந்திரமான மன உறுதிப்பாடு பற்றிய அபத்தமான கட்டுக்கதையை நிராகரிக்கிறது; எந்த வழியிலும் மனிதனின் பகுத்தறியும் தன்மையையோ அல்லது மனச்சாட்சியையோ நிர்மூலமாக்காதிருப்பது அல்லது அவனது நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது போன்றவற்றை ஏற்றுக் கொள்கிறது. இதற்கு முற்றிலும் மாறாக நியதிவாதக் கருத்து மட்டுமே சுதந்திர மன உறுதிப்பாட்டுக்கு விருப்பம் போல் ஒவ்வொன் றையும் சேர்த்துக் கொள்வதற்குப் பதிலாக கறாரான துல்லிய சாத்தியமான மதிப்பீட்டைச் செய்கிறது''[1] என லெனின் எழுதினார்.

வரலாற்று அவசியம் என்ற கருத்து எந்த வழியிலும் வரலாற்றில் தனிநபரின் பாத்திரத்தை மூடி மறைத்து அழிக்கவில்லை என அக்கருத்து பற்றி லெனின் மேலும்

வலியுறுத்துகிறார். "ஒரு தனி நபரின் சமூக நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும் போது எழுகின்ற உண்மையான கேள்வி: அவனது நடவடிக்கைகளின் வெற்றியை உறுதிப் படுத்தும் நிபந்தனைகள் யாது; இந்த நடவடிக்கைகள் தனியான ஒரு நடவடிக்கையாக இருக்காது, மாறான நடவடிக்கைகளின் குழப்பத்தினால் மறைந்து போகாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?" [2]

வரலாற்றில் தனி நபரின் பாத்திரம் பற்றிய நரோட்னிக் கருத்து முதல் வாதச் சித்தாந்தங்களை விமர்சித்த லெனின் "இந்த கேள்விக்கான பதில் நேரடியாகவும் உடனடியாகவும் ருஷ்ய நாட்டில் சமூக சக்திகள் குழுக்களாகும் வழிகள், ருஷ்ய யதார்த்தத்தின் உள்ளடக்கத்தின் வடிவங்களை ஏற்படுத்தும் வர்க்கப் போராட்டம், ஆகியவற்றைப் புரிந்து கொள்வதைச் சார்ந்தே இருக்கிறது" என்ற அடிப்படையான முடிவுக்கு வந்தார். [3]

ருஷ்ய நாட்டு வர்க்க சக்திகளின் உண்மையான நிலையை எடுத்துக் காட்டி ஜாரியத்தையும் முதலாளித் துவத்தையும் எதிர்த்த அவர்களது போராட்டத்தில் உழைக்கும் மக்களது இயல்பான முன்னணிப்படையான தொழிலாளி வர்க்கத்தின் தீர்மானிக்கும் பாத்திரத்தைக் கொண்டு வருவதே மார்க்சிய ஆய்வியலின் கடமை என்றார் லெனின் புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமைப் பாத்திரம், சமுதாயத்தின் அனைத்து இதர ஜன நாயகப் பகுதிகளுடனும் அதற்குள்ள நெருங்கிய தொடர்பு— எல்லாவற்றிற்கும் மேலாக விவசாயி வர்க்கத்துடனான தொடர்பு ஆகியவற்றின் பால் மார்க்சியத் தத்துவத்தின் சத்தையும் சாரத்தையும் லெனின் புலப்படுத்தினார். விவசாயி வர்க்கத்துடனான கூட்டணியே ஜாரியத்தையும் சுரண்டும் வர்க்கங்களின் அதிகாரத்தையும் தூக்கியெறிவதற்கு தீர்மான மான ஒரு நிபந்தனை என லெனின் கருதினார்.

இவ்வாறாக லெனின் பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான வரலாற்று இலட்சியத்தை வகுத்தளித்தார் "......சமூக

ஜனநாயக வாதிகள் தங்களது கவனமனைத்தையும், நடவடிக்கைகளனைத்தையும் தொழிலாளி வர்க்கத்தின் மீதே ஒரு முனைப்பாக்கியுள்ளனர். தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய பிரதிநிதிகள் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக் களைத் தேர்ந்து தெளிந்த உடன் ருஷ்யத் தொழிலாளியின் வரலாற்றுப் பாத்திரம் என்னும் கருத்தை கிரகித்துக் கொண்டவுடன் இந்தக் கருத்துக்கள், விரிந்த அளவுக்குப் பரவியபின், இப்போதைக்கு இங்கொன்றும் அங்கொன்று மாக எப்போதாவது நடைபெறும் பொருளாதாரப் போராட்டத்தை ஒரு உணர்வு பூர்வமான வர்க்கப் போராட்டமாக மாற்றுவதற்கு தொழிலாளர்களது மத்தியில் நிலையான ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டபிறகு—ருஷ்ய நாட்டுத் தொழிலாளி அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் தலைவனாக எழுந்து கேள்வி கேட்பாரில்லாத எதேச்சாதி கார ஆட்சி முறையைத் தூக்கியெறிந்து விட்டு ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தை (அதே சமயத்தில் அனைத்து நாடு களிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்துடனும்) வெற்றி முரசு கொட்டும் கம்யூனிஸ்ட் புரட்சிக்கு பகிரங்க அரசியல் போராட்டம் என்னும் நேர்பாதையில் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்வான்."[4]

லெனினது முதல் பெரிய படைப்பான "மக்களின் நண்பர்கள் யார் அவர்கள் சமூக ஜனநாயக வாதிகளை எதிர்த்து எப்படிப் போராடுகிறார்கள்" என்பதிலும் இதர நரோடிசக் கருத்து முதல்வாதச் சித்தாந்தங்களை அம்பலப் படுத்திய எழுத்துக்களிலும் இவ்வாறாக மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தை அவர் உசுப்பி விட்டார். இந்தக் கட்டம் 19-ம் நூற்றாண்டில் புதிய வரலாற்று அனுபவத்திலிருந்து கண்ட தத்துவார்த்த முடிவு களோடு தொடர்புபடுத்தப்பட்டது. அத்துடன் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தில், சுரண்டும் சமுதாய அமைப்பில் வெகுவேகமாக வளர்ந்தோங்கும் முரண்பாடு களுடன், பாட்டாளி வர்க்கத் தலைமையில் உருவாகும்

வர்க்க சக்திகளோடு விடுதலைப் போராட்டமாக முகிழ்ப் பதற்கான கடமைகளையும் வகுத்துக் கொடுத்தது.

இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் லெனினது தத்துவார்த்த நடவடிக்கையில் மற்றொரு பெரிய திருப்பம், ருஷ்யாவிலும் மேலை நாடுகளிலும் ஓரளவு செல்வாக்குடன் திகழ்ந்த திருத்தல்வாதச் சித்தாந்தங்களின் பொய்ம்மையை அம்பலப்படுத்திய, அவரது மார்க்சிய சித்தாந்தத்தை வளர்த்த பணியாகும்.

எங்கெல்ஸ் மறைந்த உடனேயே ஜெர்மன் சமூக ஜனநாயக இதழான 'டை நியூ ஸெயிட்' இரண்டாவது அகிலத்தின் முக்கிய சித்தாந்த கர்த்தாவான எட்வர்ட் பெர்ன்ஸ்டீனின் கட்டுரைகள் பலவற்றை வரிசையாக வெளியிட்டது. 1880களில் பெர்ன்ஸ்டீன் தன்னைத்தானே மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் சீடர் என்றழைத்துக் கொண்டார். அந்த சமயத்தில் அவர் ஜெர்மன் நாட்டு சோஷலிஸ்டுகளுக்கு எதிரான அவசரச் சட்டங்கள் ரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் ஜெர்மன் சமூக ஜனநாயகத்தின் சட்ட விரோத இதழான 'டெர்-சோஷியல்-டெமாக்ரட்'டின் ஆசிரியராகவிருந்தார். அந்தச் சமயத்திலும் கூட பெர்ன்ஸ்டீன் சந்தர்ப்ப வாதத்தை நோக்கித் திசைத்தடுமாறிப் போய்விட்டார் என எங்கெல்ஸ் தனது சில கடிதங்களில் குறிப்பிட்டிருந்தார். எங்கெல்ஸின் மறைவுக்குப்பின் பெர்ன்ஸ்டீன் பகிரங்கமாகவே மார்க்சியத் தத்துவத்தைத் திருத்தினார். சோஷலிசத்தின் பிரச்சினைகள் என்ற ஒரே தலைப்பில் 'டை நியூ ஸெயிட்' சஞ்சிகையில் அவரது கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. 1899-ல் அவற்றை அவர் ''டை சோஷலிசம் மற்றும் சமூக ஜனநாயகக் கடமைகளின் முன் தேவைகள்'' என்ற ஒரு தனிப்புத்தகமாக வெளியிட்டார். உண்மையில் பெர்ன்ஸ்டீன் மார்க்சியத்தின்பால் ஒரு பகிரங்கத் தாக்குதலையே தொடுத்தார். ருஷ்யா உட்பட பல ஐரோப்பிய நாடுகளின் சோஷலிஸ்ட் கட்சிகளிலுள்ள

சந்தர்ப்பவாத நபர்களால் அவரது கருத்துக்கள் எதிரொலிக்கப்பட்டன.

லெனின் தனது முதல் சித்தாந்தப் படைப்புக்களில், பெர்ன்ஸ்டீனிஸத்தை எதிர்த்து ஒரு தெட்டத் தெளிவான, சமரஸமற்ற நிலையை எடுத்தார். பெர்ன்ஸ்டீனின் ஆய்வுகள் அனைத்திலும் முழுமையான அம்சம் ''சமூக ஜனநாயகம், ஒரு சமுதாயப் புரட்சிக் கட்சியிலிருந்து சமுதாய சீர்திருத் தங்களுக்காக நிற்கும் ஒரு ஜனநாயகக் கட்சிக்கு மாற வேண்டுமென்பதே.''[5] அதாவது பாட்டாளி வர்க்கக் கட்சியாகவிருப்பதை குட்டி முதலாளித்துவக் கட்சியாக்க வேண்டும் என்பதுதான் என லெனின் கூறினார். பெர்ன்ஸ்டீனின் கருத்துக்கள் மார்க்சியத்தைப் பற்றிய முதலாளித்துவ விமர்சனமாகி விட்டது என அவர் வகைப் படுத்தினார்.

மார்க்சியப் புரட்சிகர இயக்கவியலுக்குப் பதிலாக முதலாளித்துவப் பன்னலக் கோட்பாட்டை வைப்பது, வரலாற்றுப் பரிணாமத்தின் தெரிய முடியாமை, முன்னரே ஆருடம் கூற முடியாமை ஆகியவற்றின் காண்டியன் கருத்துக் களை வரலாற்றின் பொருள் முதல்வாதக் கருத்தமைவுக்குப் பதிலாக வைப்பது, விஞ்ஞான சோஷலிசக் கருத்தை ஒரு புலனாகாத கருப்பொருளாக்குவது அதை சுரண்டல் கூட்டத்தின் உறவுகளது கட்டமைப்புக்குள்ளேயே தங்களது வாழ்க்கை அபிவிருத்திக்கான தொழிலாளர்களது பொருளா தாரப் போராட்டத்தை வரம்பற்ற வடிவமாக்கி மாற்று வழியைக் காட்டுவது ஆகிய முயற்சிகளில் பெர்ன்ஸ்டீனின் கருத்துக்கள் நீர்த்துப் போயின.

ருஷ்ய நாட்டில் முதலில் பெர்ன்ஸ்டீனின் கருத்துக்கள் 'சட்டபூர்வ மார்க்சியவாதிகளால்' எதிரொலிக்கப்பட்டது. 19-ம் நூற்றாண்டில் படர்ந்து பரவியிருந்த மார்க்சியக் கருத்துக்களினால் கவரப்பட்ட இந்த முதலாளித்துவ அறிவாளி வர்க்கத்தினர் முழுமையாக அல்லாமல்,

சமுதாய வளர்ச்சியின் முதலாளித்துவக் கட்டத்தில் அவசிய மான சட்ட ஆளுமைக்குட்பட்ட குணாம்சத்தை முன்வைத்த யோசனைகளின் பால்பட்ட மார்க்சியத்தை மட்டும் ஆதரிப்பதாகப் பிரகடனம் செய்தனர். பி. ஸ்ட்ருவ், எஸ். புல்காகோவ், எம். ட்யூகான் பாரனோவ்ஸ்கி போன்ற வர்கள் ''சட்டபூர்வ மார்க்சிஸ்டுகள்'' என்று அழைக்கப் பட்டதற்குக் காரணம் அவர்களது மார்க்சிய நடவடிக்கை களனைத்தும் தங்களது எழுத்துக்களைச் சட்ட பூர்வமான பத்திரிகைகளில் பிரசுரிப்பதோடு நின்று விட்டதே. ருஷ்ய நாடு ஒரு விசேட முதலாளித்துவமல்லாத வழியில் வளர்ச்சி பெறும் என்று கூறிய நரோட்னிக்குகளை விமர்சனம் செய்வதில் அவர்கள் தங்கள் கடமையைப் பார்த்தனர். இந்த ஆய்வியலை ஆதரிப்பதின் மூலம் ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி இல்லாமல் தீராத ஒன்றாகி விடுகிறது. வர்க்க நோக்கில் பார்த்தால் ''சட்டபூர்வ மார்க் சியவாதிகள்'' ருஷ்ய தாராள முதலாளித்துவ சித்தாந்த வாதிகளாகவேயிருந்தனர். அவர்கள் முதலாளித்துவத்தின் முற்போக்கு இயல்பைப்பற்றி எவ்வளவோ எழுதி தொழி லாளர்களது நலன்களனைத்தும் முழுமையாக முதலாளித்து வத்திற்குத்தான் பணிந்ததாகவேயிருக்க வேண்டுமென தொழிலாளர்களை நம்பச் செய்வதற்கு முயன்றனர். தொடர்ந்து அவர்கள் பகிரங்கமாக மார்க்சியத்தை எதிர்க்கத் தொடங்கினார். மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப்பின் அவர்கள் சோவியத் அதிகாரத்தின் சங்கற்பம் செய்து கொண்ட விரோதிகளாக மாறினர்.

நரோடிசத்தை எதிர்த்த போராட்டத்தில் ''சட்ட பூர்வ மார்க்சியவாதிகளோடு'' ஒரு தாற்காலிக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியம் என லெனினும் அவரது சகாக்களும் யோசித்தனர். இருந்த போதிலும் 1894-ன் தொடக்கத்தில் அவர்களது நிலைபாடு பற்றி தன்னுடைய ''முதலாளித்துவஇலக்கியத்தில் மார்க்சியத்தின் பிரதிபலிப்பு'' என்ற ஆய்வில் **பி. ஸ்ட்ருவ், ருஷ்யாவின் பொருளாதார**

**வளர்ச்சி பற்றி திறனாய்வு சார்ந்த குறிப்புரை** என்பது பற்றி ஆழமாக அமர்சித்திருந்தார். அதில் சட்டபூர்வ மார்க்சியத்தில் உள்ள முதலாளித்துவ சாரத்தை அம்பலப் படுத்தி அது மார்க்சியத்தின் புரட்சிகர உள்ளடக்கத்திற்கு முழுக்க முழுக்க எதிரான ஒரு ஆய்வியல் என்ற உண்மையை லெனின் காட்டினார். 1895-ல் லெனின் **நமது பொருளாதார வளர்ச்சியின் குணாம்சப்படுத்தலில் பருப்பொருள்** என்ற திரட்டில் **நரோடிசத்தின் பொருளாதார உள்ளடக்கமும் திருவாளர். ஸ்ட்ரூவின் புத்தகத்தில் அது பற்றிய திறனாய்வும்** என்ற தலைப்பில் தனது ஆய்வை வெளி யிட்டார். இந்தப் பெரிய படைப்பில் ஸ்ட்ரூவின் ஆய்வு பெர்ன்ஸ்டீன் மார்க்சியத்தைத் திருத்தியது ஆகியவை பற்றி லெனின் ஒரு முழுமையான திறனாய்வு சார்ந்த பகுப் பாய்வை வழங்கியிருதார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் பெர்ன்ஸ்டீனின் ஆய்வுகளை எதிர்த்து ஒரு முழு அளவிலான போராட்டம் தொடங்கியது. ஆனால் பெர்ன்ஸ்டீன் மார்க் சியத்தை பகிரங்கமாகத்தாக்கத் துவங்குவதற்கு முன்னரேயே லெனின் திருத்தல்வாதத்தின் சத்தும் சாரமும் மார்க்சியத்தை எதிர்த்த ஒரு சர்வ தேசீயப் போர்ப் பரணி தான் என அம்பலப்படுத்தி ஸ்ட்ரூவையும் அவரைப் பின்பற்றியவர் களையும் விமர்சித்து விட்டார்.

முதன்முதலாக லெனின் ஸ்ட்ரூவின் புறவயப்பட்ட நிலைபாட்டின் முதலாளித்துவ சாரத்தை வெளிப்படுத் தினார்: ''புறநோக்கையே மெய்ம்மையானது என வாதிப் பவர் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் பரிமாணத்தின் அவசியம் பற்றிப் பேசுகிறார்; பொருள் முதல் வாதி தரப்பட்டுள்ள சமூகப் பொருளாதார அமைப்பு பற்றியும் அது கிளப்பு கின்ற பகைமை உறவுகள் பற்றியும் துல்லியமானதொரு சித்திரத்தைத் தருகிறார். நிலவுகின்ற சில வரிசையான உண்மைகளை எடுத்துக் காட்டி விளக்க வேண்டிய அவசியம் நேரும்போது புறநோக்குவாதி உண்மைக்குத் தலை வணங்க வேண்டி வருமோ என்ற நிலைக்குப் பயந்து ஒடுகிறார். பொருள் முதல் வாதியோ வர்க்க முரண்பாடு

களைப் புலப்படுத்தி தனது நிலைபாட்டை வரையறை செய்கிறார்......இவ்வாறாக ஒருபுறம் பொருள் முதல்வாதி புறநோக்கு வாதியைவிட கொள்கைப் பிடிப்புள்ளவராக விளங்கி புறநோக்கு வாதம் பற்றி ஆழமான முழுமையான விளைவை ஏற்படுத்துகிறார் .....இன்னொரு புறம் பொருள் முதல் வாதம் கட்சி சார்புத் தன்மையைத் தன்னோடு இணைத்துக் கொள்கிறது, என்று சொல்லும்போது எந்த நிகழ்வுகளையும் கணிக்கும்போது குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுவின் நிலைபாட்டோடு அது தன்னை இணைத்துக் கொண்டு நேரடியாகவும் பகிரங்கமாகவும் அந்நிலை பாட்டை மேற்கொள்கிறது.''[6] இங்கு லெனின் மார்க் சியத்தின் ஒரு பெரும்பகுதியான தத்துவார்த்தக் கோட் பாட்டை விளக்குவதை நாம் காணலாம். அதாவது அதன் விஞ்ஞான அணுகும் முறை மற்றும் சித்தாந்தக் கடப் பாட்டில் ஒற்றுமை; பகிரங்கக் கட்சி சார்பு நிலை. இவை பாட்டாளி வர்க்க நலன்களை உயர்த்திப் பிடித்தல் இதர அனைத்து உழைக்கும் மக்களும் அதைப் பின்பற்றுதல் ஆகியவை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மார்க்ஸும் எங்கெல்ஸும் அவர்களுக்குள்ளேயே புரட்சி கரக் கட்சி சார்பு நிலை மற்றும் எந்தச் சித்தாந்த ஊசலாட்டத்தோடும் சமரஸமின்மை ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தந்துள்ளனர் என லெனின் குறிப்பிட்டுக் காட்டுகிறார். அவை ''**அரசியல் ரீதியாக** அசாதாரண ஒத்துணர்வுமிக்கவை'' என எழுதுகிறார்.[7] பிரம்மையின் பால்பட்ட பொருளாதார சாதகங்களுக்காக வரும் எந்தப் 'போக்கும்' ருஷ்ய சோஷலிஸ்டுகளின் மிக அவசரமானதும் அவசியமானதுமான கடமைகளிலிருந்து வேறு பக்கம் திருப்பி விடுகிறது என்ற உண்மையில் இது குறிப்பாக புலப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது அரசியல் சுதந்திரத்தை வெல்லுவது இயல்பாகவே அவர்களுக்குச் சந்தேகமாகத் தோன்றுகிறது. அத்துடன் அது சமுதாயப் புரட்சி என்ற மகோன்னத லட்சியத்திற்கு நேரடியான துரோகம் என்றும் கூட அவர்களால் கருதப்பட்டது.''[8]

மார்க்சின் ஒட்டு மொத்த ஆய்வியலில் முதலாளித் துவத்தின் வரலாற்று அவசியம் என்ற போதனையைக் கவ்விப் பறித்துக் கொண்ட ''சட்டபூர்வமான மார்க்சிஸ்டு களின் ''நடவடிக்கை உள்ளபடியே லெனின் காட்டியது போல் மார்க்சியத்தின் மீதான தாக்குதலே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ''சட்டபூர்வ மார்க்சிய வாதிகள்'', வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம், சமுதாயப் புரட்சி ஆகியவை பற்றிய போதனைகளை நிராகரித்தனர். இவ்வாறாக இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் சாரத்தையே திசைதிருப்பிக் குழப்பினர்.

பெர்ன்ஸ்டீனின் எழுத்துக்களைத் தொடர்ந்து, மார்க்சிய ஆய்வை வளர்க்கிறோம் எனக் கூறிக்கொண்டு ருஷ்ய நாட்டில் மற்றொரு குட்டி முதலாளித்துவப் போக்கு தலை தூக்கியது. அதன் பிரதிநிதிகள் அரசியல் மற்றும் சித்தாந்தப் போராட்டங்களை நேரடியாகவே நிராகரித்து தொழிலாளர்களை, பொருளாதார அம்சங்களில் மட்டுமே முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுமாறு அறை கூவினார்கள். இதுவே அவர்களது அந்தப் பொருளாதார வாதம். தனது பெருமளவிலான படைப்பான ''**இனி என்ன செய்ய வேண்டும்**'' (1902) என்பதில் லெனின் இந்த ஆய்வை அம்பலப்படுத்தினார்.

இந்தப் புத்தகத்தின் தத்துவார்த்த உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வதற்கு முன் நாம் பொருளாதார வாதம் ஒரு ருஷ்யவகை பெர்ன்ஸ்டீனிஸமே என்றபடி பொருளாதார வாதத்தை எதிர்த்து லெனினும் அவரைப் பின்பற்றியவர் களும் நடத்திய போராட்ட வரலாற்றின் சுருக்கத்தைப் பார்க்க வேண்டும்.

1895-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ம் நாள் இரவில் லெனினும், தொழிலாளி வர்க்க விடுதலைக்கான போராட் டக் கழகத்தில் அவருடன் பணியாற்றிய தோழர்களும் கைது செய்யப்பட்டு, 1896-ம் ஆண்டு மார்ச் திங்களில்

வெவ்வேறு காலத்திற்கென கிழக்கு சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். நாடு கடந்து வாழ்ந்தபோதும் லெனின் தனது தீவிரமான சித்தாந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்தார். அவர் "**ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி**" என்ற புத்தகத்தை எழுதினார். "**பொருளாதார ஆய்வுகளும் கட்டுரைகளும்**" என்ற நூல் திரட்டை வெளியிட்டார். இதில் கீழ்க்கண்டவைகளும் சேர்க்கப் பட்டிருந்தன: "பொருளாதாரக் கற்பனைக் காட்சி பற்றிய ஒரு குணாம்சச் சித்திரம்" "பெர்ம் குபெர்னியாவில் 1894—95-ம் வருடத்திய கைவினைப் பொருள் பற்றிய கணக் கெடுப்பு" "நரோட்னிக் திட்ட வியாபாரத்தின் விதைகள்" "நமது தொழிற்சாலைப் புள்ளியியல் பிரச்சினை பற்றி", மற்றும் "நாம் மறுக்கும் பாரம்பரியம்." இவற்றுடனேயே, செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள ஒரு நூல் வெளியீட்டு நிலையத்திற்காக சிட்னி மற்றும் பீட்ரிஸ் வெப் எழுதிய **தொழிற்சங்க வாதத்தின் வரலாறு** (இரண்டு தொகுதிகள்) என்ற நூலையும் லெனினும் க்ருப்ஸ்கயாவும் மொழி பெயர்த்தனர். ருஷ்ய நாட்டின் மார்க்சிய ஆய்வாளர் களோடும், ஜெனிவாவிலிருந்த தொழிலாளர் விடுதலைக் குழுவினரோடும் (பிளெக்கனோவும் மற்றவர்களும்) அவர் ஆய்வியல் மற்றும் சித்தாந்தப் பிரச்சினைகள் பற்றி ஜீவனுள்ள கடிதப் போக்குவரத்துக்களை வைத்துக் கொண் டிருந்தார். பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ மற்றும் ருஷ்யநாட்டின் இதர மையங்களில் உள்ள ருஷ்ய சமூக ஜனநாயக வாதத்தின் சித்தாந்த வாழ்க்கையிலும் அவர் நெருங்கிய கண்காணிப் பைக் கொண்டிருந்தார்.

1899-ம்ஆண்டு தனது சகோதரி அன்னா எலிஸரோவா—உலியனோவிடம் இருந்து லெனின் ஒரு கடிதத்தையும் ஆவணத்தையும் கிடைக்கப் பெற்றார். இவை இரண்டுமே கண்களால் பார்க்க முடியாத மையினால் எழுதப்பட் டிருந்தன. அன்றைய புகழ்பெற்ற முதலாளித்துவ தத்துவ ஞானியும் பத்திரிகையாளருமான இ. குஸ்கோவாவினால் அந்த ஆவணம் எழுதப்பட்டிருந்தது. வெளி நாட்டில்

வாழ்ந்து கொண்டு 1890களின் மத்தியில் குஸ்கோவா மார்க்ஸின் போதனைகளைக் கற்றார். மேலை நாடுகளிலுள்ள சில பெர்ன்ஸ்டீனைப் பின்பற்றியவர்களை ஆதரித்தார். ருஷ்ய நாட்டுக்குத் திரும்பியதும் தனது கணவர் எஸ். புரோகோ போவிச்சுடன் சேர்ந்து அந்த தொழிலாளி வர்க்கத்தின் தானாகவே விடுதலை பெறும் குழுவை (1899 இலையுதிர்காலம்) தலைமை தாங்கி நடத்தினார். அது தனது நோக்கங்களைப் பறைசாற்றி ஒரு பிரகடனத்தையும், சாசனத்தையும் தொழிலாளர்களுக்கு பல வேண்டுகோள்களையும் விடுத்தது. எப்படியோ, சிறப்பாகத் தெரிந்த 'கிரெடோ' என்றழைக்கப்பட்ட ஆவணத்தில் ஒன்று லெனினுக்கு அனுப்பப்பட்டது. 'தங்களைத் தாங்களே "இளம் வயதினர்" (வயது முதிர்ந்த) வர்களை அதாவது லெனினிய வாதிகளைப் போல் இல்லை என்றழைத்துக் கொண்ட குஸ்கோவாவின் குழுவினர் இந்த ஆவணத்தில், மார்க்சியம் 1890கள் வரை **கம்யூனிஸ்ட் அறிக்கையின்** படி கொண்டிருந்த வடிவத்தை "சகித்துக் கொள்ள முடியாதது" "கற்காலத்தைச் சேர்ந்தது" ருஷ்ய நிலைமைகளுக்குப் பொருத்தமான, அவசியமான ஒரு வித்தியாசமான மார்க்சியத்தின் ஒரு ஜனநாயக ஆய்வியலின் மூலம் அதை மாற்றியமைக்க வேண்டும் என அறுதியிட்டுக் கூறியிருந்தனர்" [9]. "இந்த வித்தியாசமான மார்க்சியத்தின் நோக்கம், பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்திற்கு உதவி செய்வது 'முதலாளித்துவத்தின் தாராளமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் சமூக ஜனநாயக வாதிகளும் பங்கு கொள்வது' ஆகியவையே என்றார் குஸ்கோவா. இவ்வாறாக அந்தப் பொருளாதார வாதிகள் அவர்களது மார்க்சியக் கருத்தமைவிற்கும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்திற்குமிடையே ஒரு தெளிவான வேறுபாட்டைக் காட்டி சமூக ஜனநாயகத்தை தாராள முதலாளித்துவத்துடன் ஒரு இணைப்பாக மாற்ற முயற்சித்தனர். அவர்கள் "தானாகவே முகிழ்க்கும் சித்தாந்தத்தைப்" போதித்தனர். அதன்படி புரட்சிகரச் சித்தாந்தத்தின்

தலைமைப் பாத்திரத்திலிருந்து தொழிலாளி வர்க்க இயக்கம் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். சோஷலிச மனோபாவம் படைத்த அறிவு ஜீவிகள் தானாகவே முகிழ்த் தெழும் தொழிலாளி வர்க்க இயக்கத்தை மட்டுமே பின்பற்ற வேண்டும். அதை தொழிலாளர்களுக்கு மிகவும் முக்கியமான பொருளாதாரப் போராட்டத்தை மட்டுமே நடத்துமாறு வழி நடத்த வேண்டும். அவர்களது போதனைப்படி ருஷ்ய நாட்டின் அரசியல் சித்தாந்தப் போராட்டங்கள், முதலாளித் துவத்தினால், நிலப்பிரப்புக்களையும் யதேச்சாதிகாரத் தையும் மாற்றி விட்டு அவ்விடத்தில் அமரப் போகும் முதலாளித்துவத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**கிரெடோ**வுக்கு எதிராக ''ருஷ்ய சமூக ஜனநாயக வாதிகளின் ஒரு கண்டனம்'' என்ற கட்டுரையை லெனின் 1899-ல் எழுதினார். 'மினஸின்ஸ்க் ஊயெஸ்ட்'லிலுள்ள எர்மகோவ்ஸ்கோயி' என்ற கிராமத்தில் 17 நாடு கடத்தப் பட்ட மார்க்சிய வாதிகளின் (பெரும்பாலும் லெனினியப் போராட்டக் கழகத்தின் உறுப்பினர்கள்) ஒரு கூட்டத்தில் அவரது கட்டுரை விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் ரகசியமாக அது வெளி நாடுகளுக்கு அனுப்பப் பட்டுஉடனடியாக பிளெக்கனோவினால் பிரசுரிக்கப்பட்டது, முதலில் ''தொழிலாளர்களது இலட்சியம்'' என்ற பத்திரி கையின் பொருளாதாரவாத மனோபாவம் கொண்ட ஆசிரியர்களுக்கு பிளெக்கனோவ் லெனினினது ''கண்டனங் களை'' அனுப்பினார். அவர்கள் அதைத் தங்களது பத்திரி கையில் பிரசுரிக்காமல் ''கிரெடோ தனி நபர்களின் கருத்துக் களைப் பிரதிநிதித்துவப்படுகிறது. அவர்களது நிலை பாடுகள் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவை அல்ல'',என்ற குறிப்புடன் ஒரு தனித்துண்டுப் பிரசுரமாக வெளியிட்டனர்[10]. பின்னர் பிளெக்கனோவ், பொருளாதார வாதிகளை எதிர்த்தும், 'ராபோச்செயிடைலோ'வின் ஆசிரியர்களைக் கருத்தில் கொண்டும் 'வாடிமெக்கம்' என்ற திரட்டில் ''கண்டனங் களை'' மறுபிரசுரம் செய்தார்.

"கண்டனங்கள்" கட்டுரையில் பொருளாதார வாதிகளை விமர்சித்த லெனின் அவர்களது சித்தாந்த நிலைபாட்டுக்கும் பெர்ன்ஸ்டீனின் மார்க்சியத் திருத்தல் வாதத்திற்கும் இடையேயான ஒற்றுமையை எடுத்துக்காட்டினார்." பெர்ன்ஸ்டீனிஸம், என்பது மார்க்சியச் சித்தாந்தத்தை ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடைக்கும் முயற்சியே. புரட்சிகரத் தொழிலாளர் கட்சியை ஒரு சீர்திருத்தவாதக் கட்சியாக மாற்றும் முயற்சியே" என லெனின் எழுதினார்.[11] பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தை அதன் அரசியல், சித்தாந்தப் போராட்டங்களிலிருந்து தனிமைப்படுத்துவதற்கான பெர்ன்ஸ்டீனின் முயற்சிகளை அனைத்துக் கொள்கைப் பற்றுடைய மார்க்சிய வாதிகளும் உறுதியாக எதிர்த்தும் பதிலடி கொடுக்க வேண்டுமென்றார். லெனின் முதலாளித்துவச் சித்தாந்தம் அரசியல் பற்றிய மார்க்சியவாதிகளின் அணுகும் முறையில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாதென்றார். "பாட்டாளி வர்க்கம் சுயேச்சையான அரசியல் ஈடுபாடு கொண்ட தொழிலாளர்களது கட்சிகளை அமைக்கப் பாடுபடவேண்டும். அவற்றின் தலையாய நோக்கம், சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கு பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதே"[12] என லெனின் குறிப்பிட்டார்.

தொழிலாளி வர்க்கம் "அரசியல் நோக்கங்களை இன்னும் முன்வைக்கவில்லை" என்ற பொருளாதார வாதிகளின் குற்றச்சாட்டு, உள்ளபடியே நிலவுகிற விவகாரங்கள் பற்றிய அவர்களது அறியாமையையும் ருஷ்ய நாட்டின் உண்மையான புரட்சி இயக்கத்திலிருந்து அவர்கள் தனிமைப்பட்டு நிற்பதையும்தான் காட்டுகின்றன. "ருஷ்ய சமூக ஜனநாயக வாதிகள் 'கிரெடோ'வில் வெளிவந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் ஆதியோடந்தம் வரை எதிர்த்து ஒரு தீர்மானமான போராட்டத்தை பிரகடனப் படுத்த வேண்டும்" என்று எழுதினார் லெனின்[13]. பிறகு கொஞ்ச காலம் கழித்து அவர் எழுதிய "ருஷ்ய சமூக

ஜனநாயகத்தில் ஒரு பின்வாங்கும் போக்கு'' என்ற கட்டுரையில் ' லெனின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் இடம் பாத்திரம் என்பதில் மார்க்சியக் கருத்தமைவு இரண்டு முக்கிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென வலியுறுத்தினார்: அரசியல் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பெறுவதற்காக அரசியல் கட்சியின் ஸ்தாபனமும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டமும்; உற்பத்திச் சாதனங்களனைத்தையும் உழைக்கும் மக்களிடம் மாற்றி முதலாளித்துவப் பொருளாதாரத்தை சோஷலிசப் பொருளாதாரமாக மாற்றியமைப்பதற்கான போராட்டம்[14] என்றார்.

தனது **இனி என்ன செய்ய வேண்டும்** என்ற நூலில் பெர்ன்ஸ்டீனிஸம் மற்றும் ருஷ்யப் பொருளாதாரவாதம் பற்றிய சித்தாந்த அம்பலப்படுத்துதலை லெனின் முடித்துக் கொண்டார். இந்தநூல் 1901 லும் 1902-ன் முற்பகுதிக்கிடைப் பட்ட காலத்தில் எழுதப்பட்டு 1902-ல் சட்டத்திற்குப் புறம்பாக ரகசியமாகப் பதிப்பிக்கப்பட்டது. ருஷ்ய நாட்டின் சமூக ஜனநாயக அமைப்புக்களின் மத்தியில் விரிந்த அளவில் விநியோகிக்கப்பட்டது.

முதலாவதாக பொருளாதார வாதிகளும் பெர்ன்ஸ் டீனைப் பின்பற்றியவர்களும் ஒத்த அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் என்று லெனின் குறிப்பிட்டார்: ''தொழி லாளர்கள் பொருளாதாரப் போராட்டத்தை நடத்தட்டும்.........அரசியல் போராட்டத்திற்கு மார்க்சிய அறிவாளிகள் தாராளவாதிகளோடு இணைந்து கொள்ளட்டும்.''[15]. இந்த நிலைபாடு பெர்ன்ஸ்டீனிஸத்தின் முதலாளித்துவ சாரத்தை அம்பலப்படுத்தியது. மேலும், தொழிலாளி வர்க்கத்தின் சக்தி அதன் தன்னிச்சையான எழுச்சியில்தான் உள்ளது, தொழிலாளி வர்க்க இயக்கத்தில் விஞ்ஞான உணர்வைப் புகுத்துவதின் மூலம் இதற்குத் தடை யேற்படுத்தக் கூடாது என்ற பொருளாதார வாதிகளின்

கூற்றை விமர்சனம் செய்தலெனின், தானாக முகிழ்ப்பதின் கூறு சத்திலும் சாரத்திலும் முட்டையினுள்ளிருக்கும் கரு கொண்டிருக்கும் உணர்வைத்தான் பிரதிநிதித்துவப் படுத்துமே தவிர வேறு எதையும் அல்ல என்று லெனின் வலியுறுத்திக் கூறினார்.[16] பொருளாதாரவாதிகள் தன்னிச்சையான எழுச்சியைப் போற்றி வணங்குவதற்குக் காரணம், தொழிலாளி வர்க்க இயக்கத்தை பிளவுபடுத்தி பலவீனப் படுத்துவது; அதற்குச் சித்தாந்த வழிகாட்டுதலில், ஏமாற்றத்தை உண்டு பண்ணுவது, குறைந்த சலுகைகளுக்கு மட்டுமே போராடுவது என்ற நிலைமைக்கு அவ்வர்க்கத்தைத் தள்ளுவது, இறுதியில் பாட்டாளி வர்க்கத்தை தனது இறுதி லட்சியங்களையே நிராகரிக்கச் செய்வது போன்றவைதான். ''தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்னிச்சை எழுச்சியைப் போற்றி வணங்குகிற அனைத்துக் காரியங்களுக்கும், சமூக ஜனநாயகப் பாத்திரத்தின் உணர்வு பூர்வமான நிலையைச் சிறுமைப்படுத்தும் செயல்களனைத்திற்கும் உள்ள பொருள்; மிகவும் தன்னிச்சையாக ஒருவன் விரும்பியோ விரும்பாமலோ அந்தப் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்தினால் அவன் தொழிலாளர்கள் மீது முதலாளித்துவச் சித்தாந்தத்தின் செல்வாக்கை பலப்படுத்துகிறான் என்பதே[17]; ஏனென்றால் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்னிச்சை எழுச்சியின் வளர்ச்சி முதலாளித்துவச் சித்தாந்தத்திற்கு உட்படுமாறு கொண்டு செல்கிறது.''[18] என எழுதினார் லெனின். லெனினது இந்தத் தத்துவக்கூறு, தொடர்ந்து வந்த இரண்டாவது அகிலத்தின் பெரிய சமூக ஜனநாயகக் கட்சிகளது, பிரான்ஸ், இத்தாலி நாடுகளது சோஷலிஸ்ட் கட்சிகள், ஜெர்மன் நாட்டின் சமூக ஜனநாயகக் கட்சி, பிரிட்டிஷ் தொழிற்கட்சி போன்ற கட்சிகளின் வரலாற்றின் மூலம் முழுமையாகவும், உயிர்ச்சித்திரம் போன்றும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்சிகளனைத்தும் 1914-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாவது அகிலம் தகர்ந்து நொறுங்கியவுடன் புரட்சிகர மார்க்சியத்திடமிருந்து துண்டு முறித்துக் கொண்டு முதலாளித்துவக் கட்சிகளைத்

தேடிச் சென்றன. இவற்றில் பல தங்களது நாடுகளில் ஆளும் கட்சிகளாக இருக்கின்றன. அக்கட்சிகளின் அரசியலும் சித்தாந்தமும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஜீவாதாரமான நலன்களுக்கு எதிரானவை; முதலாளித்துவ நலன்களைக் கட்டிக் காப்பதை நோக்கமாகக் கொண்டவை என்பது குறிப்பிடத் தக்க முறையில் தெளிவாகி விட்டது.

மார்க்சிய வாதிகள் உணர்வு பூர்வமாகச் செய்த பணிகள் "வளர்ச்சியின் மெய்யான தன்மை அல்லது தானாக முகிழ்க்கும் கூறு ஆகியவற்றை சிறுமைப் படுத்தி விட்டது[19] என்ற பொருளாதார வாதிகளின் கருத்தை லெனின் மிகக் கூர்மையாக விமர்சித்தார். இது தன்னிச்சை எழுச்சிச் சித்தாந்தத்தின் மற்றொரு முக்கிய அம்சம். இது தன்னிச்சைச் செயல்களை புறவயப்பட்டவற்றோடும், உணர்வு பூர்வமான செயல்களை அகவயப்பட்டவற்றோடும் அடையாளம் காட்ட முயல்கிறது. மார்க்சியக் கருத்தமைவின் இந்தக் குழப்பங்களை அம்பலப்படுத்திய லெனின் அவற்றை அனுமதிக்க முடியாது என்றார். "திட்டவட்டமான வளர்ச்சியைச் சிறுமைப் படுத்துவதென்பது மெய்யான வளர்ச்சியை முறையாகப் புரிந்து கொள்வதற்கான உணர்வின்மைதான்; அதாவது உணர்வுக் கூற்றின் சத்தையும் சாரத்தையும் உள்ளடக்கியுள்ள மெய்யான உலகம் பற்றிய தேவையான ஞானம் இல்லாமையே "[20] என அவர் எடுத்துக்காட்டினார். அவர் எழுதுகிறார்." நமது தாத்தாக்கள் தங்களது பழைய பணி அறிவாற்றலுடன், 'இந்த உலகத்திற்கு எவனும் குழந்தை குட்டிகளைக் கொண்டு வரலாம்' என்று சொல்வது வழக்கம். இன்றைய 'நவீன சோஷலிஸ்டுகள்' தங்களது அறிவாற்றலுடன் தானாகப் பிறக்கும் ஒரு புதிய சமுதாய ஒழுங்கமைப்பில் எவனும் பங்கு கொள்ளலாம்" என்று சொல்வார்கள்,"[21] இத்தகைய ஒரு நிலையை மேற்கொள்வது. இயக்கத்தைப் பின்தொடர்ந்து அதன் வாலாகத் திகழ்வது. இவ்வாறாக இந்தப் போக்கை சந்தர்ப்பவாதம் என்பதற்குப் பதிலாக வால் பிடிக்கும் வாதம் (வால் என்ற வார்த்தையிலிருந்து) என்று வருணிக்கலாம்."[22]

மேலும் **இனி என்ன செய்ய வேண்டும்** என்ற நூலில் லெனின் பாட்டாளிவர்க்க, வர்க்க உணர்வின் வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்துள்ளார், முதலாதவாக'' தங்களை யுக யுகாந்திரமாக ஒடுக்கி வைத்துள்ள ஒரு அமைப்பு நிரந்தரமாக நீடிப்பதில் நம்பிக்கையிழந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்......இதைப் புரிந்து கொள்ளுங்கள் என்று சொல்ல மாட்டேன். ஆனால் கூட்டாகத் தற்காத்துக் கொள்வதின் அவசியத்தை உணர்ந்து அவர்கள் அதிகார வர்க்கத்திற்கு அடிமைகளாகத் தங்களை ஆட்படுத்திக் கொள்வதை நிச்சயமாகக் கைவிடுவார்கள் இருந்தபோதிலும் இது போராட்டத்தைவிட மனவிரக்தியினால் வெடித்துக் கிளம்பும் இயல்பையும் பழிவாங்கும் இயல்பையும் தான் கொண்டிருந்தது''[23] என எழுதுகிறார். முதலாளித்துவத்தை மாற்ற முடியாது என்ற நம்பிக்கை தகர்க்கப் பட்டதும், சுரண்டும் கூட்டத்தினரை எதிர்க்கவேண்டிய அவசியம் உணரப் பட்டதும் இரண்டுமே உலகத்தைப் பற்றிய புதிய ஞானம் தான்; அதுபற்றிய ஒரு புதிய மதிப்பீடுதான்; என்பதில் சந்தேகம் கிடையாது. இப்பொழுதுதான் இத்தகைய மதிப்பீடும். விஷயஞானமும் இத்தகைய தொழிலாளர்களின் லயான்ஸ் நெசவாளர்கள் அல்லது சிலீசியன் சுரங்கத் தொழிலாளர்களின் தன்னிச்சை நடவடிக்கையில் 19-ம் நூற்றாண்டின் முதற்பாதியில் பிரதிபலித்தது. இத்தகைய இயக்கங்களை ''துவக்ககாலக் கலகங்கள்'' ஒடுக்கப்பட்டவர் களின் தற்காப்புப் போர்''[24] என அழைத்தார். ''முட்டையி னுள்ளிருக்கும் கருவின் உணர்வு'' என தன்னிச்சைக் கூறு பற்றிய லெனினது வருணனை இவ்விடத்தில் இன்னும் பொருத்தமாயுள்ளது.

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வு வளர்ச்சியின் அடுத்த கட்டம் சுற்றியுள்ள சமூகப் பிரிவுகள் மற்றும் குழுக் களிலிருந்து தனிமைப்படுத்திக் கொண்டு, அது இன்றைய சமு தாய அமைப்பையும் ஆளும் வர்க்கங்களையும் எதிர்க்கக்கூடிய ஒரு சக்தி என்று உணர்வதாகும். இந்தச் சூழலில் லெனின்

எழுதியதாவது: ''முதலாளித்துவத்தின் மீது தெளிவற்ற தொரு வெறுப்புக்கொள்வதற்குப்பதிலாகத் தொழிலாளர்கள் ஏற்கனவே தொழிலாளி வர்க்க நலன்களுக்கும் முதலாளி வர்க்க நலன்களுக்குமிடையேயுள்ள பகைமையுணர்வை புரிந்து கொள்ளத் துவங்கிவிட்டனர். ஒடுக்குமுறைபற்றி ஒரு குழப்பமான உணர்வுக்குப் பதில் முதலாளித்துவம் தங்களை ஒடுக்குவதற்குக் கையாளும் முறைகளையும் சாதனங்களையும் வேறுபடுத்திப் பார்க்கத் துவங்கிவிட்டனர். பல்வேறு வடிவங் களிலான ஒடுக்குமுறைகளை எதிர்த்துக் கிளர்ந்தெழுவதுடன் முதலாளித்துவ ஒடுக்குமுறைகளுக்கு ஒரு வரையறையை நிறுவி முதலாளிகளின் பேராசையிலிருந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளத்துவங்கிவிட்டனர். முதலாளிகள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளுக்குத் திட்டமிடுவதற்குப்பதிலாக அவர்கள் இப்பொழுது சலுகை களுக்காகப் போராடும் திசையில் திரும்பியுள்ளனர்......... அபிவிருத்தி காணப்பட்ட வேலை நிலைமைகள், அதிகரித்த ஊதியம், குறைவான வேலை நேரங்கள் போன்றவைகளைக் கோரத் துவங்கியுள்ளனர்''[25]. தனது நலன்கள் முற்றிலும் முதலாளித்துவ நலன்களுக்கு மாறுபட்டவை என்ற பாட்டாளி வர்க்கத்தின் எச்சரிக்கை உணர்வு, ஒரு குறிப் பிட்ட முதலாளிக்கு எதிராக மட்டுமல்லாது, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் உடைமையாளருக்கு எதிராக மட்டுமல்லாது, மனிதனை மனிதன் சுரண்டும் முறை மற்றும் ஒடுக்குமுறை யையும் உருவகமாகக் கொண்ட முதலாளித்துவ அமைப்பு முழுவதையும் எதிர்த்து வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டும் என நம்புமாறு செய்கிறது. இந்தத் திடநம்பிக் கையின் அல்லது கருத்தின் முகிழ்ப்பு தொழிலாளர்களிடம் முதலாளித்துவத்தை எதிர்த்து முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்கிறது. இவை தன்னிச்சையான கிளர்ச்சிகளின் ரூபத்தில் அல்லாது தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலைமைகளில் அபிவிருத்திகாணும் நோக்கத் தைக் கொண்ட ஸ்தாபனப்படுத்தப்பட்ட வேலை நிறுத்தங் களாக வெடிக்கின்றன. லெனினது கருத்துப்படி இந்த

வேலை நிறுத்தங்கள் எல்லாம் வர்க்கப்போராட்டம் என்ற கருத்தமைவின் முழுமையான பொருளில் ஆன போராட்டங்கள் ஆகாது. லெனின் எழுதுகிறார்"......கருவில் உருவாகும் வர்க்கப் போராட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் முறையான வேலை நிறுத்தங்கள் கருவிலேயே உருவாக உள்ளன. அவைகளாகவே எடுத்துக்கொண்ட இந்த வேலை நிறுத்தங்கள் வெறும் தொழிற்சங்கப் போராட்டங்களே. இன்னும் சமூக ஜனநாயகப் போராட்டங்களாக வில்லை. தொழிலாளர்களுக்கும் அவர்களை வைத்து வேலை வாங்கும் முதலாளிகளுக்குமிடையே கிளர்ந்தெழும் பகைமை உணர்வை இவை குறிப்பிடுகின்றன. ஆனால் முழுமையான நவீன அரசியல் சமுதாய அமைப்பின் அவர்களது நலன் களுக்கு சமரஸமில்லாத பகைமை என்பதை தொழிலாளர்கள் உணரவில்லை, உணரவும் முடிந்திருக்காது. அதாவது அவர்களது உணர்வு இன்னும் சமூக ஜனநாயக உணர்வாக வில்லை"[26]. இந்தக் கட்டத்தில் அறிவாற்றலும், மதிப்பிடும் தன்மையும் ஒரு விஞ்ஞான ஆய்வியலின் தரத்தை எட்ட வில்லை. அவை இன்னும் எதார்த்தத்தின் உயிருள்ள சிந்தனைக்குள்ளாகவே இருந்து வந்தது. அதாவது இயக்க வியல் அறிவாற்றலின் முதல் கட்டம்.

பின்னர் தொழிலாளி வர்க்கத்தின் உணர்வு பிரமிக்கத் தக்க அளவு குணாம்ச ரீதியில் உயர்ந்தது. பெருமளவு தன்னிச்சையாக எழுந்த தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சாதகங்களை மார்க்சிய சித்தாந்தத்துடனும், விஞ்ஞான ரீதியான அதன் செழுமையுடனும் இணைத்துக் கொண்டு சோஷலிச உணர்வை வளர்த்துக் கொண்டது ."தொழிலாளி வர்க்கம் முற்றிலும் தனது சொந்த முயற்சிகளினால் தொழிற்சங்க உணர்வுகளை மட்டுமே வளர்த்துக் கொள்ள முடிந்தது என்பதை அனைத்து நாடுகளது வரலாறும் காட்டுகிறது. அதாவது தொழிற்சங்கங்களைனைத்தும் ஒன்றிணைந்து முதலாளிகளை எதிர்த்துப் போராட வேண்டும். தேவையான தொழிற்சட்டங்கள் இன்னபிற

வற்றை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கப் பாடுபட வேண்டும்'' [27] என்று லெனின் கூறுகிறார். மெய்யாகவே சோஷலிஸ்டுகள் ஆவதற்கு தொழிலாளர்கள் உணர்வு பெற அதாவது விஞ்ஞான புரட்சிகர உணர்வைப் பெற தொழிலாளி வர்க்க இயக்கம் மார்க்சியத்தோடு விஞ்ஞான சோஷலிசத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும்.

லெனின் எழுதுவது போல் ''சோஷலிசத்தின் சித்தாந்த போதனை தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்னிச்சை யான வளர்ச்சியின் ஒட்டு மொத்த சுதந்திரத்தைக் கிளப்பு கிறது. அது புரட்சிப் போராளிகளிடமும் சோஷலிச அறிவு ஜீவிகளிடமும் இயல்பான தவிர்க்க முடியாத சிந்தனை வளர்ச்சியின் வெளிப்பாட்டைக் கிளப்புகிறது என்பதை வரலாற்று வளர்ச்சியின் இயக்கவியல் காட்டுகிறது''. [28] எனினும் விஞ்ஞான சோஷலிசத்தின் மலர்ச்சி, பாட்டாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வரலாற்றுப் பாத்திரம் பற்றிய அறிவாற்றல் மற்றும் மதிப்பீடு, மார்க்ஸும் எங்கெல்ஸும் வழங்கிய மகத்தான சன்மானம் ஆகியவையேஇக்கடமைக்குத் தெளிவான தீர்வாக இருந்தது. சுரண்டலிலிருந்தும் ஒடுக்கு முறைகளிலிருந்தும் விடுவிப்பதற்கான பாதையை நோக்கித் மனிதகுலத்தை இட்டுச் செல்வதற்கும், வர்க்கங்களை ஒழித்து உற்பத்தியாளர்களின் மெய்யான ஒரு சுயேச்சைத் தன்மையுடன் கூடிய கழகத்தை உருவாக்குவதற்கும் அதாவது கம்யூனிஸ்ட் சமுதாயத்தை உருவாக்குவதற்கும், திறமை படைத்த சமூகப் பரிணாமத்தின் உந்து சக்தியை அடையாளம் கண்டு வரலாற்று வளர்ச்சியில் திட்டவட்ட மாக வகுக்கப்பட்ட கடமை இந்தக் கடமைக்குத் தீர்வு காண மார்க்ஸும் எங்கெல்ஸும் சமூகப் பரிணாமங்களின் அனைத்து ஆரம்ப கால விஷயஞானங்களையும் கற்றுத் தேர்ந்து தெளிந்தனர். அரசியல் பொருளாதாரம், தத்துவம் விஞ்ஞான சோஷலிச ஆய்வு ஆகியவை உள்ளிட்ட ஒரு ஆய்வியலை எழுதினர். இது கட்சியிலும் அரசியல் அம்சங்

களிலும் அதன் சித்தாந்த அரசியல் தலைவர்களைக் கொண்டு பாட்டாளி வர்க்க நிலை பாட்டுக்குச் சென்றது. இது அவர்களின் கம்யூனிஸ்ட் கழகம், பின்னர் முதலாவது அகிலம் ஆகியவற்றின் ஸ்தாபிப்பின்போது தெரிவிக்கப்பட்டது. இவை அனைத்திலும் விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப் படையில் பாட்டாளி வர்க்கத்தை ஒன்று படுத்தி ஸ்தாபனப் படுத்தும் மார்க்சியவாதிகளின் அரசியல் சித்தாந்தப் போராட்டங்களுடன் விஞ்ஞான அறிவாற்றல் ஒருங்கிணைந்த பகுதியாக இணைப்புப் பெற்றது.

''சோஷலிசச் சித்தாந்தம் உடைமை வர்க்கங்களின் படித்த பிரதிநிதிகளாலும், அறிவு ஜீவிகளாலும் விரிவாக்கம் செய்யப்பட்ட தத்துவார்த்த, வரலாற்று ரீதியான பொருளாதாரச் சித்தாந்தங்களிலிருந்து வெளி வந்ததே'' [29] என்றெழுதுகிறார் லெனின். இந்தச் சித்தாந்தம், தனது வாழ்வின் நிலைமைகளை ஒரு விஞ்ஞான வழியில் அறிவாற்றலுடன் மதிப்பீடு செய்யவும் இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு பயன்படுத்த வேண்டிய புரட்சிகர வழி முறைகளுடனும் தொழிலாளி வர்க்கத்தைஆயுதபாணியாக்குகிறது.

விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்கள் பல கட்டங்களில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வில் ஊடுருவியுள்ளதை லெனின் காட்டினார். இந்தப் பரிணாமத்தின் அடிப்படை நிபந்தனைகளில் முதலாவதான ஒன்றாக விரிந்த அளவிலான அரசியல் பிரச்சாரமும், முதலாளித்துவம் மற்றும் அதன் தொங்கு சதைகளின் அனைத்து அரசியல் கண்டனைக் கணைகளின் ஸ்தாபனமுமே விளங்கியது. ''இத்தகைய அம்பலமாக்கும் வழியைத் தவிர வேறு எந்த வழியிலும் மக்களை அரசியல் உணர்விலும் புரட்சிகர நடவடிக்கைகளிலும் பயிற்றுவிக்க முடியாது'' என்றார் லெனின். ''இதர ஒவ்வொரு சமூக வர்க்கத்தையும் அதன் அறிவு சார்ந்த, ஒழுக்கவியல், அரசியல் வாழ்வின் அனைத்து வெளிப்பாடுகளிலிருந்தும் கூர்ந்து கவனிக்க, தொழிலாளர்களைப்பயிற்றுவிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டதே ''அம்பலப்படுத்

தல்கள்.[30]'' தொழிலாளி வர்க்கத்தின் சுய அறிவு......உறுதி யாகப் பிணைக்கப்பட்டுள்ளது; தனிமையாக இல்லாமல் முழுமையான தெளிவான சித்தாந்தம் புரிந்து கொள்ளலில்— இதர நவீன சமுதாயத்தின் பல்வேறு விதமான அனைத்து வர்க்கங்களுக்கிடையிலுமான உறவுகளை நடைமுறையைவிட அதிகமில்லாமல் சித்தாந்த ரீதியாகப் புரிந்து கொள்தல்''[31] என இதை லெனின் கணித்தார். இவ்வாறாக தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் மார்க்சியம் ஒருங்கிணைவது முதலாளித்துவ சமுதாயம் தொடர்பாக பாட்டாளி வர்க்க உணர்வில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட கருத்துக்களின் மொத்த ஒருமிப்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை லெனின் வலியுறுத்தினார்.

பாட்டாளி வர்க்கத்தின் உணர்வு அல்லது விஞ்ஞானக் கருத்துக்களை வடிவமைப்பதின் அடுத்த கட்டம் மிகத்தீவிர மான உறுதிபடைத்த பாட்டாளி வர்க்கத்தினரிடம் அவர் களை புரட்சிப் போராளிகளாக்க, அவர்களது வர்க்கத்தின் அரசியல் சித்தாந்தத் தலைவர்களாக்க மார்க்சியச் சித்தாந் தத்தைப் பிரச்சாரம் செய்வதேயாகும். இத்தகைய தலைவர் களின் முக்கிய கடமைகளில் ஒன்று ''அனைத்து சித்தாந்தப் பிரச்சினைகளிலும் நெருங்கிய உள்ளார்ந்த ஈடுபாடு, பழைய உலகக் கண்ணோட்டத்திலிருந்து ஸ்வீகரித்துக் கொண்ட பாரம்பரியச் சொற்றொடர்களின் செல்வாக்கிலிருந்துமேலும் மேலும் தங்களை விடுவித்துக் கொள்வது, சோஷலிசம் ஒரு விஞ்ஞானமானதிலிருந்து அதை விஞ்ஞானமாகவே பின் பற்ற வேண்டுமென்று கோருவது அதாவது அதைக் கற்றறிவது[32] என லெனின் குறிப்பிட்டுக் காட்டினார். தொழிலாளி வர்க்கத்தின் மிகவும் உணர்வு பூர்வமான உறுப்பினர்களால் சமூக சுய அறிவை அடையும் இந்தப் பரிணாமத்தில் விஞ்ஞான சோஷலிசம் மிகவும் அந்தரங்க சுத்தியுடனும் ஆழமாகவும் தீர்க்கமாகவும் தொழிலாளர் களது சிரமங்களின்பால் பட்ட இலட்சியங்களை வரையறை செய்து அந்தச் சிரமங்களைக் களைவதின் சாத்தியங்களையும்

காட்டி அதை எங்ஙனம் செய்வது என்பதையும் காட்டிய உண்மைகளின் மூலம் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்தது. இதனால் தான் தொழிலாளர்கள் விஞ்ஞான சோஷலிசத்தின் தத்துவக் கூறுகளை மிகவும் சுலபமாகவும் உறுதியாகவும் கிரஹித்துக் கொண்டு இதர வர்க்கங்களை விடவும் இந்த ஞானத்தை தீவிரப் போராட்டத்திலும் பயன் படுத்தினர். இவ்வாறாக தொழிலாளி வர்க்கத்தின் விஞ்ஞான உணர்வு ஸ்தாபனப்படுத்தப்படும் இந்தக் கட்டத்திலும் விஷயஞானம் ஒருங்கிணைந்த ஒரு உறுப்பாக அதன் மதிப் பீட்டில் இரண்டறக் கலந்து அதை பிண்டப் பிரமாணமான எதர்த்தமாக மாற்றுகிறது.

இந்த முன் யோசனையை லெனின் தனது பலபடைப் புக்களில் விளக்குகிறார். தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் மார்க்சியத்தின் விஞ்ஞான ஆய்வியல் இணைவது சித்தாந்தம் மற்றும் நடைமுறையின் இயக்கவியல் ஒற்றுமையை மட்டும் அல்லாமல் மார்க்சிய சமூக விஞ்ஞானத்தின் விஞ்ஞான மற்றும் கட்சி சார்பு அணுகும் முறையின் தனிச்சிறப்பையும் முக்கியத்துவப்படுத்துகிறது என்பதையும் லெனின் காட்டு கிறர். தனது முதலாவது படைப்புக்களில் ஒன்றில் ஸ்ட்ரூவின் கருத்துக்களைத் திறானாய்வு செய்து அவர் எழுதுவதாவது; ''பொருள் முதல்வாதம் கட்சி சார்பு நிலையையும் தன்னுள் கொண்டதாகும். அவ்வாறு கூறும் போது அது நிகழ்வுகளின் எந்தக் கணிப்பிலும் ஒரு திண்ணிய சமூகக் குழுவின் நிலை பாட்டை நேரடியாகவும் பகிரங்கமாகவும் ஏற்றுக் கொள் வதை தன்னோடு சேர்த்துக் கொள்கிறது'' [33] இங்கு லெனின் கட்சி சார்புக் கருத்தமைவை நேரடியாகவும் உடனடியாவும் மதிப்பீட்டின் கணிப்புடன் முழுமையான சமூக அறிவாற்றல் பரிணாமத்தின் ஒரு அவசியமான உறுப்பு என்று தொடர்பு படுத்துவதை நாம் காணலாம்.

இந்தக் கால கட்டத்தில் லெனின் எழுதிய நூல்களில் மதிப்பு வாய்ந்த அறிவாற்றல் கூறு, மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தில் சித்தாந்தத்திலும்

நடைமுறையிலும் மதிப்பின் தோற்றுவாய்களின் இடம் அவற்றின் பாத்திரம் பற்றிய முக்கிய கருத்துக்களை வகுத்தார். மார்க்சிய—லெனினியத்தில் மதிப்பீட்டின் கருத்தமைவு பல்வேறு நோக்குகளைக் கொண்டது எனக் காட்டினார். மிகவும் முக்கியமான தீர்மானிக்கக் கூடிய ஒன்று, பயன்படும் மதிப்பு மார்க்ஸினால் அவரது பொருளாதாரப் படைப்புக்களில் மிக விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இது, தரப்பட்ட ஒன்றின் நிகழ்வு அல்லது கருத்து மக்களின் லோகாயுத மற்றும் லௌகீக நுகர்தலுக்குப் பணியாற்றும் ஒரு பொருளாகத் திகழும் திறமை படைத்ததாயிருக்க வேண்டும். இரண்டாவது நோக்கு கறாராகப் பொருளாதாரத் தன்மை கொண்டது. அது மக்களிடையே விநியோகம் மற்றும் பண்ட மாற்று உறவுகளோடு தொடர்பு கொண்டதாகும். அது இந்த உறவுகளின் ஒரு குறிப்பிட்ட பொருளின் மதிப்பு என தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. மூன்றாவது நோக்கு மக்களிடையே நிலவும் பொருள் முதல்வாத, சித்தாந்த உறவுகளின் மதிப்பு இயல்பைப் புலப்படுத்துவதாகும். இது அரசியல், மதம், சட்டம், நன்னெறி மற்றும் மதிப்பீடுகளைக் காணக் கிடைக்குமாறு செய்து ஒரு முக்கியமான இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. எனினும் ஒரு வர்க்க சமுதாயத்தில் தத்துவக் கூறுகளுக்கான போராட்டத்தில் இது இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மூன்றாவதாக மதிப்பு அணுகலில் ஒரு விசேட அழகியல் நோக்கு (அழகான அவலட்சணமான துன்பியல் மற்றும் இன்பியல் இன்னபிற) பார்த்த மாத்திரத்தில் இது வர்க்கப் போராட்டத்தோடு நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. முதலாளித்துவ சித்தாந்த கர்த்தாக்களின் கருத்துப்படி அது ''பொதுவான மனிதத்துவ'' நிர்ணயிப்பைக் கொண்டுள்ளது. (தற்செயல் நிகழ்ச்சியாக அவர்கள் நன்னடத்தை சட்டம், மதம் போன்றவைகளுக்கும் இதே நிர்ணயிப்பை வைத்துள்ளனர்) இருந்தபோதிலும் பிண்டப் பிரமாணமான உண்மையின் பால் பட்டு இந்த நோக்கும் சித்தாந்தப் போராட்டத்துடன்

பிணைக்கப்பட்ட ஒன்றேயாகும். ஒரு நூற்றாண்டுக்கு முன் நிக்கோலாய் செர்னிஸெவ்ஸ்கி இதை மிக அழகாகப் புலப் படுத்திக் காட்டியுள்ளார்.

மதிப்பின் கருத்தமைவு வெளி உலகம் பற்றிய மனிதனின் அணுகும் முறையின் சுறுசுறுப்பான இயல்போடும் குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் நிகழ்வின் அவனது மதிப்பீட்டோடும் நெருங்கிய தொடர்பு கொண்டது என லெனின் கூறுகிறார். ஒரு குறிப்பிட்ட மதிப்பைப் பற்றிய முடிந்த முடிவு சமூக உறவுகளில் மனிதனின் இடத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு வர்க்க சமுதாயத்தில் மதிப்பு பற்றிய கருத்தமைவு எப்பொழுதும் குணாம்சத்தில் வர்க்க, கட்சி சார்புடையதாகவே இருக்கிறது. உதாரணமாக ஒரு முதலாளிக்கு அவனது நிறுவனத்தில் ஒரு புதிய இயந்திரத்தை நிறுவுவது ஆக்கபூர்வமான மதிப்புடையதாகிறது. ஏனென்றால் அது அந்த முதலாளிக்கு அதிகப்படியான லாபத்தைப் பெற்றுக் கொடுக்கிறது. ஆனால் தொழி லாளிக்கோ அது அத்தொழிற்சாலையில் அதிகப்படியான ஒரு சுமையாக ஆகிவிடுகிறது. அவனுக்கு அது பயனில்லா மதிப்புத்தான். அந்த இயந்திரம் அவனது வாழ்க்கைச் சாதனத்தைப் பறித்துக் கொண்டு விடுகிறது.

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது பொருளின் மதிப்பைத் தீர்மானிப்பது மக்கள் தொகையின் பல்வேறு குழுக்களின் அறிவாற்றல் மற்றும் கலாசார மட்டத்தைச் சார்ந்தும் இருக்கிறது. உதாரணமாக ஒரு பிற்பட்ட நாட்டில் தொழில் நுட்பங்களின் காரண காரியத்தைத் தெரியாத, அதுபற்றி அறியாமையில் இருக்கும் ஒருவனுக்கு புத்தம் புதிய தொழில் நுட்பக் கண்டு பிடிப்புக்கள் எந்த மதிப்பையும் கொண்டிருக்க முடியாது. அதே சமயத்தில் அவனால் பயன் படுத்தக்கூடிய சாதாரணக் கருவிகளையும் அவன் மிக உயர்வாக மதிக் கிறான். அந்தக் கருவிகள் காணாமல் போய்விட்டால் அவன் பட்டினியால் பயமுறுத்தப்படுகிறான்.

சுற்றியுள்ள உலகை மதிப்பீடு செய்யும் மக்களின் போக்கு அவர்களது உலகக் கண்ணோட்டத்தையும் உலகம் பற்றிய அவர்களது விஷயஞானத்தையும் சார்ந்திருக்கிறது.

---

மதிப்புக்கள் பற்றிய கருத்தமைவின் அனைத்து நோக்கு களும் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய அறிவாற்றல் மனிதனின் பின்னிய விளைவுகளோடு இணைவது என்ற பொதுவான அம்சத்தின் மூலம் ஒன்று படுகின்றன. அதவாது ஒரு மனிதனின் அகவய நோக்கு, அவனதுகுழு, வர்க்கம் மற்றும் அறிவாற்றல் ஆய்வின் கீழ் உள்ள பொருளுக்கு முழுமையாக சமுதாயம். மக்களின் உலகம் பற்றிய மதிப் பீட்டுப் போக்கின் பொதுவான அம்சம் அவ்வுலகம் பற்றிய தீவிர அறிவாற்றல் ஆய்வு விரிவாக்கம், தீர்க்கமான கிரஹிப்பு ஆகியவையே. மனித சமுதாயம் ஒரு வர்க்கச் சமுதாயமாக இருப்பதால் அதாவது மக்களில் பல்வேறு பட்ட குழுவின், உற்பத்தி உறவில் சொத்து லோகாயுத மற்றும் லௌகீகப்பொருட்களின் வினியோகம் மற்றும் பண்ட மாற்று பொருட்கள், மாற்று நிகழ்வின் மதிப்பு வரை யறைகள் போன்றவற்றின் அரசியல் சித்தாந்தம் சட்டம், ஒழுக்கம், மதம் மற்றும் விஞ்ஞானம்ஆகியவற்றின் திண்ணிய வர்க்கப் போராட்டத்தின் அரங்கமாக இருப்பதில் வெவ்வேறு விதமான அந்தஸ்தைக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே கட்சி சார்பு என்பது குறிப்பிட்ட மனித சமுதாயங்களின் வர்க்க நலன்களை பகிரங்கமாக ஆதரிப்பது உள்ளிட்ட ஒரு சமூக நிகழ்வாகும். முதலாளித்துவ தத்துவ ஞானிகளும் திருத்தல் வாதிகளும் ஒரு நியதி என தத்து வத்தின் கட்சி சார்பையும் சமூக ஞானத்தையும் மறுக் கிறார்கள். எனினும் இது சுரண்டும் கூட்டத்தினரின் குறுகிய தன்னகங்கார, அடிப்படையாகவே மக்கள் விரோத சாரத்தைக் கொண்ட சித்தாந்தத்தை பட்டுத்திரைபோட்டு மூடி மறைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு வாய் வீச்சுத் தந்திரமேயாகும் அவர்களது இந்தச் சித்தாந்தம் உலகத்தைப்

பற்றிய அதன் வளர்ச்சியின் சட்டங்கள் பற்றிய உண்மையான ஞானத்தின் விரோதியாகும்.

இது போலல்லாமல் மார்க்சியத் தத்துவம் கட்சி சார்புடையது என்றார் லெனின். பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் நேச சக்திகளின் இலட்சியங்கள் மற்றும் நலன்களை பகிரங்கமாக உயர்த்திப் பிடிப்பதின் மூலமும் மற்றும் விஞ்ஞான குறியிலக்கின் மிக உயர்ந்த வடிவமாக அது திகழ்வது மூலமும் இது புலப்படுத்தப்படுகிறது.

வரலாற்றில் அனைத்து உழைக்கும் மக்களது சமுதாய அபிலாஷைகளையும் பெருமளவுக்கு இணைவாகக் கொண்டிருக்கிற ஒரே வர்க்கம் பாட்டாளி வர்க்கமே என்றார் லெனின். அதாவது புவிக்கோளத்தின் மக்கள் தொகையின் மிகப் பெரும்பாலானவர்களைக் கொண்டது. வேறு எந்த வர்க்கத்தையும் விட சமுதாயத்தின் அனைத்துப் பகுதியினருக்கும் துரிதமான முழுமையான சோஷலிசப் புனரமைப்பில் அக்கரையும் ஆர்வமும் கொண்டுள்ள வர்க்கம் பாட்டாளி வர்க்கமேயாகும். இதற்காக உலகம் பற்றியும் அதன் சடடங்கள் பற்றியும் ஆழ்ந்த விரிவான ஞானத்தைப் பெற விழைவதும் வேறெந்த வர்க்கத்தையும் விட பாட்டாளி வர்க்கமேயாகும். இதனால்தான் சமூக ஞானத்திற்கு பாட்டாளி வர்க்கத்தினாலும் அதன் கட்சியினாலும் எடுக்கப் பட்டுள்ள கட்சி சார்பு அணுகல் கறாராக விஞ்ஞான பூர்வமானதும் மெய்யான ஒன்றாகவும் விளங்குகிறது. சூழ்ந்திருக்கும் எதார்த்தம் தொடர்பாக பாட்டாளி வர்க்க அணுகும் முறையின் அகவயப்பட்ட நோக்கு, இந்த எதார்த்தத்தை ஆழமாகவும் முழுமையாகவும் முடிந்த அளவு அதன் உணர்வில் போதுமான அளவுக்குப் பிரதிபலிப்பதின் விழைவிலும் அதைத் துல்லியமாக மதிப்பீடு செய்வதிலும் இவ்வாறு பெறப்பட்ட ஞானத்தை உலத்தை மாற்றுவதற்கு அதிக பட்சமாகப் பயன் படுத்துவதிலும்தான் அடங்கியிருக்கிறது.

இவ்வாறாகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை விஞ்ஞான சோஷலிசத்துடன் இணைப்பது முந்திய முழுமையான ஞானம், மற்றும் ஒரே மாதிரியான அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பாட்டாளி வர்க்கத்தினது வர்க்க உணர்வின் இறுதி வடிவத்தைப் புலப்படுத்துகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வில் நான்கு உள் உறவு கொண்ட நோக்குகளை லெனின் அடையாளம் காட்டினார். ''முதலாவது அவர்களது நிலைமைகளை விருத்தி செய்து, அவர்கள் அடிமைத் தளைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு முதலாளி வர்க்கத்தை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்துவது ஒன்றே வழி என்பதைத் தொழிலாளர்கள் புரிந்து கொள்வது......'' இரண்டாவது ''அவர்கள் புரிந்து கொண்டதின் பொருள் அனைத்துத் தொழிலாளர்களது நலன்களும்...... ஒரே மாதிரியானவை. அவர்கள் அனைவரும் சேர்ந்து ஓரேஒரு வர்க்கத்தை அமைந்துள்ளனர். சமுதாயத்தின் இதர வர்க்கங்களனைத்திலிருந்தும் இது தனியானது.'' [34] மூன்றாவது நோக்கு சமுதாயத்தில், அதிகாரத்தை வெல்லுவதில் சாத்தியப்பாடு மற்று வரலாற்றின் தவிர்க்க முடியாத் தன்மை பற்றி தொழிலாளர்கள் உணர்ந்திருப்பது றுதியாக நான்காவது நோக்கு. இதர அனைத்து பாட்டாளி வர்க்க மல்லாத உழைக்கும் மக்கள் விவசாயிகள் வர்க்கம், காலனி ஆதிக்க மற்றும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் இன்னபிற மக்களைப் போன்றவர்கள் தொடர்பாகத் தனது முன்னணிப் பாத்திரத்தை பாட்டாளி வர்க்கம் உணர்ந்திருப்பது.

தொழிலாளர்களின் வர்க்க உணர்வு மேலும் வளர்ச்சியடையும்போது மரபுரிமைக் கட்டுப்பாட்டின்படி தங்களது அரசியல் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்கிறார்கள். கட்சியில், சோஷலிஸப் புரட்சியை வளர்த்துச் சக்திகளையும் அணி திரட்டுகிறார்கள். அது வெற்றியடைந்த பின்னர் சோஷலிசத்தின் அனைத்துச் சாதகங்களையும் விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் கலாசாரத்தில் இன்று வரையுள்ள நவீன சாதனைகளுடன்

இணைத்துக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் தொழிலாளி வர்க்கம் மரபுரிமைக் கட்டுப்பாட்டு வழியில் உலகப் புரட்சிப் பரிணாமத்தையும் 20-ம் நூற்றாண்டின் விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சியுடனும் அதை யொட்டிய மனிதகுலப் பண்பாட்டின் புரட்சிகர மாற்றங் களுடனும். இணைத்துக் கொள்கிறது.

**இனி என்ன செய்ய வேண்டும்?** ஒரு சமுதாய அரசியல் படைப்பு. ஆனால் அது மிக ஆழமான தத்துவார்த்த முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கிறது. ஏனெனில் அது இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் புதிய அனுபவத்தின் அடிப்படையில் மார்க் சியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகளை வளர்க்க லெனினது படைப்பின் முக்கிய உறுப்பை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தச் சூழலில், இயக்க வியல், வரலாற்றுப் பொருள் முதல் வாதப் பிரச்சினைகளின் லெனினது படைப்பாற்றலுடன் கூடிய வளர்ச்சியை குணாம்சப் படுத்தும் மூன்று தலையாய சித்தாந்த நோக்குகளை ஒருவன் வேறுபடுத்திக் பார்க்க வேண்டும் முதலாவது கட்சி மற்றும் உழைக்கும் மக்களது புரட்சிகர நடைமுறை நடவடிக்கைகளில் விஞ்ஞான ஆய்வின் பாத்திரம்; இரண்டாவது, வரலாற்றுப் பரிணாமத்திலும், தொழிலாளி வர்க்க இயக்கத்திலும், உணர்வு மற்றும் தன்னிச்சையான எழுச்சியின் இயக்கவியலை லெனின் விரிவாகப் புலப்படுத்தியது; மூன்றாவதாக உலகப் புரட்சிப் பரிமாணத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரம், இந்தப் பரிமாணம் புதிய வகையிலான ஒரு தொழிலாளர்களது கட்சியினால் விஞ்ஞான ரீதியாக வழிகாட்டப்படும் பொழுது அதற்குள்ள முக்கியத்துவம் ஆகியவை பற்றிய லெனினது தத்துவார்த்தப் பகுப்பாய்வு.

பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள சோஷலிச உணர்வுதான் ''நமது வெற்றியை

உறுதிப்படுத்தும் ஒரே அடிப்படை''[35] என்று கருதப்பட வேண்டும் என லெனின் விசேடமாக வலியுறுத்தினார். மக்களிடம் சித்தாந்தப் பணிகள் இல்லாமல் ''இயக்கத்தின் வெற்றிகரமான வளர்ச்சி காணக்கிடைக்காது'',[36] என லெனின் எழுதினார். பெர்ன்ஸ்டீனால் பிரகடனம் செய்யப் பட்டு பொருளாதார வாதிகளால் வக்காலத்து வாங்கப்பட்ட ''பெருமளவுக்கு தம்பட்டமடிக்கப்பட்ட விமர்சன சுதந்திரம்'' என்பது ''அனைத்து முழுமையான மற்றும் சிந்திக்கப்பட்ட ஆய்வியலிலிருந்து சுதந்திரம்'' என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அது கோட்பாடின்மையையும், பல்வேறு நற்கூறுகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து அதையே கோட்பாடு என்று கூறுவதையும் உள்ளடக்கியது''[37] என லெனின் கருதுகிறார்.

கட்சியின் சித்தாந்தப் பணிகளுக்கு முந்தைய தத்துவம், அதன் முற்போக்கான பாரம்பரியங்கள், மிக முக்கியமான திசை வழிகள் பற்றிய ஞானத்தின் முக்கியத்துவத்தை லெனின் விசேடமாக வலியுறுத்தினார். ''ஜெர்மானியத் தத்துவம் இன்றி அதற்கு முந்தையத் தத்துவங்களின்றி குறிப் பாக ஹெகலின் தத்துவம் இல்லாதிருந்தால் ஜெர்மானிய விஞ்ஞான சோஷலிசம்........என்றுமே நடைமுறைக்கு வந்திருக்காது.''[38] அதே சமயத்தில் விஞ்ஞான சோஷலிசம் செயிண்ட் ஸைமன், போரியர், ஒவன் ஆகியோரின் தோள் களில் தான் ஒய்வெடுத்தது. அந்த மூவரும் நம்ப முடியாத கருத்துக்களைக் கொண்டவர்களாயிருந்தாலும், மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் கற்பனாவாதக் கொள்கையுடையவர் களானாலும் காலத்தால் சாகாதவர்கள். தலைசிறந்த சிந்தனையாளர்களின் வரிசையிலே அவர்களுக்கும் இடம் உண்டு[39] ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்த மட்டில் ''இந்த நூலின் வாசகர் ருஷ்ய சமூக ஜனநாயகத்தின் இத்தகைய முன்னவர்களை ஹெர்ஸென், பெலின்ஸ்கி, ஸெர்னி ஸெவ்ஸ்கி மற்றும் எழுபதுகளின் புகழ்சார்ந்த அறிவும் ஆற்றலும் நிறைந்த புரட்சியாளர்களை திருப்பிப் பார்க்கட்டும்.''[40]

முன்னேற்றகரமான தொழிலாளர்களின் முதலாளிகளை எதிர்த்த ஜார் மன்னனையும் நிலப்பிரபுக்களையும் எதிர்த்த போராட்டத்தில் புரட்சிகர சமூக ஜனநாயகத்தின் கடமை அவர்களது கவனத்தை விஞ்ஞான ஆய்வுக்கும், முந்தைய பல பத்தாண்டுகளில் சமூக சிந்தனையினால் தேக்கி வைக் கப்பட்டுள்ள முழுமையான அறிவுப் பொக்கிஷத்தை இன்றைய முக்கிய கடமைகளின் நிறைவேற்றத்துக்கு பயன் படுத்துமாறு செய்வதற்கும் ஈர்க்க வேண்டும் என்றார் லெனின். சித்தாந்தத்தின்பால் இந்த அணுகும் முறை மட்டுமே பொதுவான வெற்றியை உறுதிப்படுத்தும். சித்தாந் தத்தைச் சிறுமைப்படுத்தும் அனைத்து முயற்சிகளையும் உறுதியான முறையில் அம்பலப்படுத்துவது ஒன்றே தொழி லாளி வர்க்கமும் அதன் கட்சியும் எதிர்நோக்கியுள்ள கடமை களைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்கான நிலைமை களைச் சிருஷ்டிக்கும். ''புரட்சிகரச் சித்தாந்தமின்றி புரட்சி கர இயக்கமும் கிடையாது.''[41] லெனினது இந்த ஆய்வியல் ஒரு புதிய வகையிலான கட்சிகளின் வளர்ச்சியில் ஒரு அடிப் படையான கோட்பாடாகி விட்டது. இந்தக் கட்சிகளின் நடவடிக்கைகள், விஞ்ஞான அறிவாற்றல், இந்த அறிவாற்றல் உழைக்கும் மக்களது பரந்துபட்ட இயக்கத்தோடு இரண் டறக் கலப்பது ஆகிய திண்ணிய அடிப்படைகளைக் கொண்டவை. புரட்சிகர இயக்கத்தில் சித்தாந்தத்தின் பாத்திரம் பற்றிய பிரச்சினையை கீழ்க்கண்ட கீர்த்திமிகு முன்மொழிதலோடு லெனின் முடிக்கிறார்: ''**முன்னணிப் போராளியின் பாத்திரம் மிகவும் முன்னேற்றகரமான சித்தாந் தத்தினால் வழி நடத்தப்படும் ஒரு கட்சியினால் மட்டுமே பூர்த்தி செய்யப்பட முடியும்**.''[42] இவ்வாறு முன்மொழிந்த தின் உண்மை நடைமுறையில் நிரூபணமாகியது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு, இதர கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்களது கட்சிகளின் வரலாறு, மற்றும் முழுமையான உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு ஆகியவை அனைத்துக் கட்டங்களிலும் யாராலும் மறுக்க முடியாதபடி காட்டுவதாவது: சித்தாந்தத்தை இழித்தும்

பழித்தும் கூறப்படும் எந்தக் கூற்றும் மார்க்சிய—லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து நழுவிச் செல்லும் எந்த முயற்சியும், தோல்வியைத் தழுவுவதையோ அல்லது தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்கு துரோகமிழைத்து பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க விரோதிகள் எடுத்த நிலைபாட்டின் பக்கம் திசைமாறிச் செல்வதையோ தடுக்க முடியாது என்பதே.

**இனி என்ன செய்ய வேண்டும்?** என்ற நூலில் லெனின் பரிசீலனை செய்த இரண்டாவது பொதுவான சித்தாந்தப் பிரச்சினை வரலாற்றுப் பரிமாணத்தில் உணர்வு மற்றும் தன்னிச்சை எழுச்சியின் இயக்கவியல் பற்றியதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு தன்னிச்சை எழுச்சி, உணர்வு ஆகிய கருத்தமைவுகள் பற்றிய லெனினது விளக்கத்தில் நம் கவனம் ஈர்க்கப்பட வேண்டும். இந்தப் புத்தகம் வெளி வருவதற்கு முன்னரும், பின்னரும் தன்னிச்சை எழுச்சிக்கு வெளியில் நிகழும் ஏதோ ஒன்று என்றும் மனித உணர்வில் சுதந்திரமாகச் செயல்படுகிறது என்றும் விளக்கம் தரப்பட்டது. "தன்னிச்சையாக எழும் பகுப்பொருள் அதன் சாரத்தில், ஒரு கருவின் உருவில் உணர்வைத் தவிர அதிகமாகவோ அல்லது குறைவாகவோ எதையும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை"[43] என எழுதி லெனின் ஒரு தெளிவான, ஐயத்திற்கிடமில்லாத விளக்கத்தை வழங்கினார். இந்த வரையறை தன்னிச்சை எழுச்சி பற்றிய தெளிவற்ற விளக்கங்களின் பயனற்ற தன்மையை மனித உணர்விலிருந்து இந்த வகையைத் தனிமைப்படுத்த முயலும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

"உணர்வு நிலை" என்றால் என்ன? சோஷலிசப் போராட்டத்திற்கு இதைச் செயல் முறைப்படுத்தும்போது இதன் பொருள் "அனைத்துச் சித்தாந்தப் பிரச்சினைகளிலும் தெளிவான நுண்ணறிவை ஆதாயமாகப் பெறுவது; அவர்களாகவே மேலும்மேலும் பழைய உலகக் கண்ணோட்டத்தின் பாரம்பரியச் சொற்றொடர்களின் செல்வாக்கிலிருந்து விடு

வித்துக் கொள்வது; தொடர்ந்து சோஷலிசத்தை மனதி லிறுத்திக் கொள்வது; ஏனெனில் சோஷலிசம் ஒரு விஞ்ஞான மாகப் பின்பற்றப்படவேண்டுமென்று கோருகிறது அதாவது அதைக் கற்றறிய வேண்டும்''[44] என மெய்ப்பித்தார். எனவே உணர்வு நிலையின் வகை, மனிதன் அல்லது சமூக குழுவின் ஞானத்தை பின்வினைச் செயல்களில் ஈடுபடும் பொருட்களின் வளர்ச்சியானது சட்டங்களின் சத்தை மற்றும் இந்தப் பிரச்சினையின்பால்பட்ட முழுமையான சித்தாந்தப் பொக்கிஷத்தை ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமுதாயம் தேக்கி வைத்ததை வெளிப்படுத்துகின்றன. ஒரு தன்னிச்சை எழுச்சியின் பரிமாணம் அதன் உள்ளேயே ஓர் உணர்வு வகை யாக முடியாது என லெனின் வலியுறுத்தினார். இதைக் கொண்டு வருவதற்கு தன்னிச்சையாக முகிழ்க்கும் இயக்கம் மனித குல சிந்தனையினால் அது பற்றிப் பெறப்பட்ட முழுமையான ஞானத்துடன் இணைக்கப்பட வேண்டும். இங்கு, விடுதலைக்கான தொழிலாளி வர்க்கப் போராட்டம் விஞ்ஞான சோஷலிசத்துடன் இரண்டறக் கலப்பதை லெனின் குறிப்பிடுகிறார். ''அனைத்து நாடுகளது வரலாறும் காட்டுவது தொழிலாளி வர்க்கம் முழுக்க முழுக்க அதன் சொந்த முயற்சியினால் தொழிற்சங்க உணர்வை மட்டுமே வளர்க்க முடிந்தது......இருந்த போதிலும் சோஷலிசச் சித்தாந்தம் உடைமை வர்க்கங்களின் படித்த பிரதிநிதி களாலும், அறிவு ஜீவிகளாலும் விரிவாக்கம் செய்யப்பட்ட தத்துவார்த்த, வரலாற்றுப் பொருளாதாரச் சித்தாந்தங்களி லிருந்து வளர்ந்து வந்தது''[45] என லெனின் எழுதுகிறார்.

தொழிலாளி வர்க்க இயக்கம், விஞ்ஞான சோஷலிசத் தோடு இரண்டறக் கலக்கும் பரிமாணம், ''சோஷலிஸ்ட் சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்தின் துன்ப துயரங்களை வேறு எந்தச் சித்தாந்தத்தையும் விட மிகவும் ஆழமாகவும் துல்லியமாகவும் புலப்படுத்துகிறது; அந்தக் காரணத்தினால் தொழிலாளர்கள் அதைச் சுலபமாக கிரஹித்துக் கொள் கிறார்கள் என்ற உண்மையின் மூலம் பெருமளவுக்கு உதவி

செய்யப்பட்டது.[46] இருந்தபோதிலும் கட்சி, சித்தாந்தத்தை அதன் புரட்சிகர உள்ளடக்கத்தோடு கொண்டுவர வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் உணர்வுப்பாங்கில், முதலாளித்துவ, திருத்தல்வாத திசை திருப்பங்களிலிருந்து விடுபட்ட உள்ளடக்கத்தைக் கொண்டுவர வேண்டும். 'சித்தாந்தப் போராட்டத்தில் ஒரே தேர்வு: முதலாளித்துவ சித்தாந்தம் அல்லது சோஷலிசச் சித்தாந்தம், இரண்டி லொன்று தான் என லெனின் வலியுறுத்தினார். இதற்கு இடைவழி கிடையாது...எந்த வழியிலாவது சோஷலிசச் சித்தாந்தத்தைச் சிறுமைப் படுத்துவது, அதிலிருந்து இம்மி யளவாவது பிசகித் திரும்புவது என்றால் அது முதலாளித்துவச் சித்தாந்தாந்தத்தைப் பலப்படுத்துவதே யாகும்.''[47] என லெனின் வலியுறுத்திக் கூறினார்.

இறுதியாக **இனி என்ன செய்ய வேண்டும்?** என்ற நூலில் லெனின் புரட்சிகரப் பரிணாமத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சியின் இடம் பாத்திரம், தொழிலாளர்களுக்கும் இதர அனைத்து உழைக்கும் மக்களுக்கும், சோஷலிச நிலை பாட்டில் சமுதாயத்தைப் புனருத்தாரணம் செய்வதில் அவர் களது போராட்டத்தில் விஞ்ஞான ரீதியான தலைமை ஆகிய வற்றின் தத்துவார்த்தப் பிரச்சினைகளை ஆய்ந்தார்.

ஒரு புதிய வகையிலான கட்சியை உருவாக்க அடிப்படை யானது புரட்சிகர நடவடிக்கையே என்ற முதலாவது தலையாய கோட்பாட்டை லெனின் முன்வைத்தார். புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே கட்சி அமைக்கப்பட்டுள்ளது என்றார் அவர். "இத்தகைய ஸ்தாபனத்தின் உறுப்பினர்களது பொதுவான தனிச்சிறப்புப் பண்பைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்களுக்கும் அறிவாளிகளுக்குமிடையேயுள்ள அனைத்து வித்தியாசங் களும்......துடைத்தெறியப்பட வேண்டும்."[48] இத்தகைய ஒரு கட்சியை அமைப்பதற்கு முதல் கடமை உழைக்கும் மக்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் திறமை

படைத்த புரட்சியாளர்களின் ஒரு ஸ்தாபனத்தை நிறுவுவதே. லெனினது கருத்துப்படி, இந்த ஸ்தாபனத்தின் முக்கிய செயல்பாடுகளாவன: நடவடிக்கைகளின் தொடர்ச்சியைக் கொண்டு செலுத்தும் திறமை படைத்த உறுதியான ஸ்திரமான தலைவர்களின் ஸ்தாபனத்தைப் பேணிப்பாது காப்பது; ஒரு மத்திமப்படுத்த தலைமையைக் காண தலைவர்கள் ஒரு தொழில் முறை அணுகும் முறையை உத்தர வாதப்படுத்த தலைவர்களுக்கும் மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பைக் கட்டிக்காப்பது; கட்சி உறுப்பினர் களின் அணியில் நடவடிக்கைகளை வளர்த்து, நிலையாக உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது.

கட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபடுவது பற்றி லெனின் ஒரு பகுதியாகக் கூறியதாவது: ''பொதுவான கட்டுப்பாடு. (அவ்வார்த்தையின் உண்மையான பொருளில்) அரசியல் துறையில் ஒரு கட்சி உறுப்பினரின் ஒவ்வொரு நட வடிக்கையிலும் பிரயோகிக்கப்படும் போது அது தானாகவே இயங்கும் ஒரு எந்திரகதியை நடைமுறைக்குக் கொண்டுவரு கிறது. அது ''பொருந்திக் கொள்ளும் திறமை படைத்தது, வாழும்'' என்று உயிரியலில் அழைக்கப்படுவதை உற்பத்தி செய்கிறது. முழுமையான விளம்பரம், தேர்தல் மற்றும் பொதுக்கட்டுப்பாடு ஆகியவற்றின் 'மூலமான இயற்கையான தேர்வு' கீழ்க்காணும் உறுதியை அளிக்கிறது. கடைசிப் பகுப் பாய்வில் ஒவவொரு அரசியல் புள்ளியும் அவருக்குரிய சரியான இடத்தில் இருப்பார். அவரது அதிகாரங்கள் மற்றும் திறமைக்கேற்ப எது சரியாகப் பொருந்துமோ அந்த வேலையைச் செய்வார். தான் செய்த தவறுகள் தன்னையே பாதிப்பதை உணர்வார். தவறுகளைப் புரிந்து அவற்றைத் தவிர்க்கும் தனது திறமையை உலகத்தில் அனைவரிடமும் நிருபிப்பார்.''[49].

கட்சியின் அணிவரிசையிலுள்ள உறுப்பினர்களின் புரட்சிகர நடவடிக்கையை எங்ஙனம் ஒன்றுபடுத்தி ஸ்தாபனப் படுத்துவது? ''நமது இயக்கத்திலுள்ள அடிப்படையான

அரசியல் மற்றும் ஸ்தாபனப் பின்னடைவு இந்தச் சக்திகளனைத்தையும் பயன்படுத்தி அவர்களுக்குத் தகுந்த வேலை தர முடியாத நமது இயலாத் தன்மை''[50] இந்த நிலையை எப்படிச் சரி செய்வது? லெனினது கருத்துப்படி ''இந்தச் சிறு சிறு பிரிவுகளையெல்லாம் ஒரே மொத்தமான ஒன்றாக ஒன்று படுத்த, இயக்கத்தின் செயல்பாடுகளை உடைத்துப் பிரிக்கும் போது இயக்கம் உடைபடாமலிருக்க, நிகழ்ச்சி நிரலின் படியான பணிகளை மேற்கொள்ளும் மக்களிடம் அவர்கள் செய்யும் பணி அவசியமானதும் முக்கியமானதுமாகும் என்ற நம்பிக்கையை ஊட்ட, (இந்த நம்பிக்கையின்றி அவர்கள் ஒரு போதும் செயல்படமாட்டார்கள்) புரட்சிப் போராளிகளின் ஸ்தாபனம் அவசியமாகும்.''[51] கட்சியின் பணிகளை ம த் தி ம ப் ப டு த் து வ தி ல் அதன் அவசியம் விசேடப் படுத்துதலைச் சுட்டிக் காட்டுகிறது என்றார் லெனின். கட்சியின் ஸ்தாபனப் பணிகளில் ''விசேடப்படுத்துதலின்மை'' ''ஒரு மிக ஆபத்தான தவறு'' என அவர் கருதினார். இதைச் சரிப்படுத்த எல்லாக் கடமைகளையும் அவை நிறைவேற்றப் பட வேண்டிய கட்டங்களையும் உடைத்து சிறு சிறு நடவடிக்கைகளாக மாற்ற வேண்டும் என அவர் யோசனை கூறினார். ''நமது பொதுவான இலட்சியத்தில் ஒவ்வொரு சிறிய தனித்தனியான நடவடிக்கையும் அதிகப்படியான மக்களால் செய்து முடிக்கப்படுவதை நம்மால் காண முடியும்''[52]. இந்த வழியில் நமது கட்சி ஸ்தாபனங்களில் மத்தியத்துவம் மற்றும் ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப் படையாகக் கொண்ட முழுமையான ரத்த ஓட்டத்தைக் கொண்ட அமைப்பை நாம் காட்டலாம்.

புரட்சி இயக்கத்தில் கட்சியின் பாத்திரம் பற்றி லெனின் மற்றொரு பிரச்சினையை தனது நூலில் எழுப்புகிறார். கடைசிப் பகுதிகளில் ஒன்றை கீழ்க்கண்ட வார்த்தைகளால் முடிக்கிறார். ''நாம் கனவு காண வேண்டியது அதுவே!'' தற்போதைய விவகாரங்களின் பெரு நீர்ச்சுழலில் கட்சியினது போராட்டத்தின் பொதுவான நோக்கத்தை மனதில்

கொண்டு அதைப்பற்றிய தெளிவான ஒரு தொலை நோக்கின்றி கட்சித் தலைவரானாலும் சரி அணிவரிசையிலுள்ள கட்சி உறுப்பினரானாலும் சரி அதிகமாக எதையும் செய்ய மாட்டார்கள். லெனின் எழுதுகிறார். ''புரட்சி......எந்த வழியிலும் ஒரே ஒரு நடவடிக்கை என்று கருதப்படக் கூடாது... ஆனால் அதிகமாகவோ குறைவாகவோ மயான அமைதியுடன் காணப்பட்ட கால கட்டங்களை வேகமாக மாற்றிக் கொண்டிருக்கும் சக்தி மிக்க எழுச்சிகளின் வரிசைகள்.'' வெடித்தெழும் கிளர்ச்சிகள் மற்றும் தெருச்சண்டைகளை மட்டுமே எதிர்பார்த்து அல்லது அன்றாடப் போராட்டங்களின் சலிப்பில் 'முன் எடுத்து வைப்பதை' மட்டுமே எதிர்பார்த்து கட்சி அமைப்பைக் கட்டுவதென்பது உள்ளபடியே பயங்கரமானதொரு தவறாகும்.''.[53]

இவையனைத்தும் லெனினால் **இனி என்ன செய்ய வேண்டும்?** என்ற நூலில் கவனத்தில் கொள்ளப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட மிகவும் முக்கியமான தத்துவார்த்தப் பிரச்சினைகளாகும். ருஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்கு சமூக ஜனநாயக ஸ்தாபனங்கள் சமர்ப்பித்த ஒரு அறிக்கை ''**இனி என்ன செய்ய வேண்டும்**'' என்ற நூல் ருஷ்யத் தலைவர்கள் மத்தியில் ஒரு சக்திமிக்க செல்வாக்கைப் பெற்றுள்ளது எனக் குறிப்பிட்டது. அந்த நூலின் காரணமாகப் பலர் 'இஸ்க்ரா'வின் ஆதரவாளர்களாகிவிட்டதாக அவர்களே ஒப்புக் கொண்டனர்''.[54] ஐ. ராட்செங்கோ என்ற ஒரு 'இஸ்க்ரா'வின் முகவர் லெனினது புத்தகம் வெளிவந்ததும் எழுதியதாவது: ''நான் எல்லாவிடங்களிலும், சிறந்தது என லெனினது கலப்பையையே பயன்படுத்துகிறேன். அது அதிக உற்பத்தியைத் தரும் அளவு நிலத்தை பண்படுத்தக்கூடியது. அது மிக நேர்த்தியான முறையில் கரடுமுரடான நிலத்தைச் சீராக்கி மண்ணை மிருதுவாக்கி செழுமையான விளைச்சலுக்கு உறுதி தருகிறது. 'ராபோச் செயி டைலோ'வால் விதைக்கப்பட்டதில் ஒரு முறை களையெடுக்கப்பட்டுவிட்டால் பின்னர்

அது தவறாமல் அதைக்கெல்லியெறிந்துவிடும். ஆச்சரியம் தான்!''[55]

ஒரு புதிய வகையிலான கட்சிக்கான போராட்டத்தின் வரலாற்றில் ''**இனி என்ன செய்ய வேண்டும்?**'' என்ற நூல் பெரியதோர் இடத்தைப் பெற்றுள்ளது. மார்க்சிய சித்தாந்தத்தை வளர்க்கும்போது லெனின் **இனி என்ன செய்ய வேண்டும்?** என்ற நூலில் தன்னிச்சை எழுச்சிச் சித்தாந்தத்தை வானளாவப் புகழ்ந்த திருத்தல்வாதத்தை நிர்மூலமாக்கும் வகையில் திறனாய்வு செய்தார். இந்தத் திறனாய்வு பாட்டாளி வர்க்கத்தின் மெய்யான ஒரு புரட்சிக் கட்சியை உருவாக்குவதிலும், லெனினது கருத்துக்களின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கம் மற்றும் புரட்சிகர அறிவாளி வர்க்கத்தின் முன்னேற்றகரமான உறுப்பினர்களை அணி திரட்டுவதிலும் ஒரு தலை சிறந்த பாத்திரத்தை வகித்தது. பொருளாதார வாதிகள், பண்ட[56] உறுப்பினர் களோடும், மென்ஷ்விக்குகளோடும் கூட்டணி வைத்துக் கொண்டு இரண்டாவது கட்சிக் காங்கிரஸில் தங்களது நிலைபாட்டைக் கொண்டுவர முயன்றனர். ஆனால் பெரும் பாலான பிரதிநிதிகள் லெனினை ஆதரித்தனர். இவ்வாறாக போல்ஷ்விசத்திற்கு அடித்தளங்கள் அமைக்கப்பட்டன.

**ஓரடி முன்னால், ஈரடி பின்னால்**, என்ற தனது நூலில் லெனின் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடியின், மென்ஷ்விக்கு களின் கட்சியைப் பிளக்கும் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட நெருக்கடியின் சாரத்தைக் காட்டினார். ஸ்தாபனப் பிரச்சினைகளில் மென்ஷ்விசத்திற்கு எதிரான போராட் டத்தின் சித்தாந்த முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். ''அதிகாரத்தை அடைவதற்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கு ஸ்தாபனத்தைத் தவிர வேறெந்த ஆயுதமும் கிடையாது......லட்சோபலட்சம் உழைப்பாளர்களை தொழிலாளி வர்க்கத்தின் ஒரு போர்ப்படையாக உரு மாற்றுகிற, ஸ்தாபனத்தின் லோகாயுத ஒற்றுமையின் மூலம் வலுப்படுத்தப்பட்ட மார்சியத்தின் கோட்பாடுகளின் பால்

பட்ட சித்தாந்த ஒற்றுமையின் மூலம் மட்டுமே பாட்டாளி வர்க்கத்தினால் ஒரு அசைக்க முடியாத சக்தியாக முடியும். அவ்வாறு ஆவதைத் தவிர்க்கவும் முடியாது.[57] இந்தப் பரிணாமத்தின் சாரத்தை முறையாகப் புரிந்து கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உண்மையான அனுபவத்தை படித்தறிவதே அந்த வழி. "ஒவ்வொரு போர்க்களத்தினதும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளைக் கற்றறியாமல் நமது போராட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் ஒரு முறை இந்தக் காரியத்தைச் செய்து விட்டால், உள்ளபடியே வளர்ச்சிப்போக்கு இயக்கவியல் மூலம் முரண்பாடுகளின் வழியே செல்வதைத் தெளிவாகக் காணலாம்".[58]

மென்ஷ்விசத்தைத் திறனாய்வு செய்யும் போக்கில் லெனின் கட்சியை எதிர் நோக்கியுள்ள கடமைகளைச் சுட்டிக் காட்டுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயக்கவியல் வழி முறையின் மகத்தான முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டினார். அதே நேரத்தில் மார்ட்டோவ் மற்றும் இதர மென்ஷ்விக் தலைவர்கள் செய்தது போல இயக்கவியலை ஒருதலைப் பட்சமாக வியாக்கியானம் செய்வது, தன்னுணர்வு வகையில் அதைப் பயன்படுத்துவது ஆகியவற்றிற்கெதிராக எச்சரிக்கையும் செய்தார். அவர் எழுதியதாவது: "மார்க்சியம் தனதாக்கிக் கொண்ட மகோன்னத ஹெகல் வழி இயக்கவியல் முதலில் சரியான திசை வழியில் திரும்பியுள்ளது. அதை கட்சியின் புரட்சிகர அணியிலிருந்து சந்தர்ப்பவாத அணிக்குத் தாவும் அரசியல் வாதிகளது தவறான வழிகளை நியாயப்படுத்தும் இழிதகைத் தந்திரங்களோடு, அனைத்தையும் ஒருசேரக் கொண்டு வரும் கேவலமான வழக்கத்தோடு ஒரு போதும் குழப்பக் கூடாது. ......குறிப்பிட்ட, வளர்க்கப்படக் கூடிய காரணிகள்...... இயக்கவியல்......தவிர்க்கமுடியாத திருப்பங்களின் ஆய்வு...... வளர்ச்சியின் பரிணாமத்தை அதன் அனைத்து திண்ணிய தன்மையிலும் விரிவாகக் கற்றறிவதின் மூலம், பிரித்தெடுக்கப்

படும் உண்மை என ஒன்றில்லை. உண்மை எப்பொழுதுமே பிண்டப் பிரமாணமானது...... இயக்கவியலின் அடிப்படையான கோட்பாடுகளில் இது ஒன்று மற்றொன்று,மகோன்னதமான ஹெகல்வழி இயக்கவியல் இத்தாலியப் பழமொழி மிக நல்ல முறையில் வெளிப்படுத்துவது போல் மிக மோசமான உலகத்து ஞானத்தோடு குழப்பப்படக் கூடாது.: ''தலை நுழைய முடியாத, வாலுடன் ஒட்டிக் கொண்டிருப்பது''.[59]

* * *

ஒரு புதிய வகையிலான கட்சிக்கான தனது போராட்டத்தில், தாராள நரோட்னிக் சித்தாந்தவாதிகள், சட்டபூர்வ மார்க்சிய வாதிகள், பெர்ன்ஸ்டீனியர்கள் ருஷ்ய நாட்டிலுள்ள அவரைப் பின்பற்றியவர்கள், பொருளாதார வாதிகள் மற்றும் மென்ஷ்விக்குகளின் முகத்திற்கு எதிரேயே லெனின், மார்க்சியத் தத்துவத்தின் தலையாய முன் மொழிதல்களை உயர்த்திப் பிடித்தார். இந்தப் போராட்டத்தில் அவர் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தை, புறவயத்தன்மை, அ க வ ய த் த ன் மை ஆகியவற்றின் இயக்கத்தின் இடரார்ந்த முக்கிய, தத்துவக் கூறுகளுடனும், சமூகப் பரிணாமத்தில் தன்னிச்சை எழுச்சி மற்றும் உணர்வு வகையுடனும், சமூக ஞானம் மற்றும் புரட்சிகர நடவடிக்கையின் இயக்கவியலுடனும் செழுமைப்படுத்தினார்.

## 2. 1905-1907-ம் வருடத்திய ருஷ்யப் புரட்சி

1905-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10-ம் நாள் (23) காலையில் அப்பொழுது ஜெனிவாவிலிருந்த லெனினும், க்ரூப்ஸ்கயாவும் நகர நூல் நிலையத்திற்குச் சென்றனர். வழியில் அவர்கள் அனடோலி லியுனாஸர்ஸ்கியையும் அவரது மனைவியையும் சந்தித்தனர். அவர்கள் பீட்டர்ஸ்பர்க்கில், ஜனவரி 9-ம் நாள் நடந்த சம்பவங்களைப் பற்றிக் கூறினார்கள். அன்றைய தினமே லெனின் ''முன்னேற்றம்''[60]

இதழில் "ருஷ்யாவில் புரட்சியின் துவக்கம்" என்ற கட்டுரையை எழுதினார். எழுந்துள்ள நிலைமைகளில் தொழிலாளி வர்க்கம் எதிர்நோக்கியுள்ள முக்கிய கடமைகள் பற்றி அக்கட்டுரையில் வரையறை செய்திருந்தார்." தொழிலாளர்களையும் மற்றும் பொதுவில் அனைத்துக் குடிமக்களையும் உடனடியாக ஆயுதபாணிகளாக்குவது, அரசாங்க அதிகாரிகளையும் அரசாங்க அமைப்புக்களையும் ஒழித்துக் கட்டுவதற்கு தயாரிப்பு மற்றும் ஸ்தாபன அமைப்பு,—அனைவரும் சேர்ந்து பொதுவான அடிகொடுக்க அனைத்து வகையான புரட்சிப் போராளிகளையும் ஒன்றுபடுத்துவதற்கு இதுவே நடைமுறை அடிப்படை." என அவர் எழுதினார். அதே நேரத்தில், இந்தப் பொதுவான போராட்டத்தில் "பாட்டாளி வர்க்கம் சமூக ஜனநாயகக் கட்சியுடனான தொடர்பை ஒரு பொழுதும் பலவீனப்படுத்திக் கொள்ளாமல் தனது சொந்த சுதந்திரமான பாதையைப் பின்பற்ற வேண்டும். எப்பொழுதுமே அதன் மகத்தான, இறுதி லட்சியத்தை அனைத்துச் சுரண்டல்களிலிருந்தும் மனித குலத்தை விடுவிப்பதை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்"[61] என்றும் எச்சரித்தார்.

ருஷ்யாவில் நடந்த புரட்சியில் கட்சி, ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டி, இந்தப் பரந்த நாட்டில் பொருளாதாரம் அரசியல், கலாசாரம் ஆகியவற்றில் முதலாளித்துவ ஜனநாயக சீர்திருத்தங்களைக் கொண்டு வர பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் சித்தாந்தம், இலக்கு மற்றும் உத்திகளின் பால்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கியது.

இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாத மனம் படைத்த மேலை நாட்டுத் தலைவர்களை எதிரொலித்த மென்ஷ்விக்குகள் ருஷ்யப்புரட்சி அதன் இயல்பில் முதலாளித்துவப் புரட்சியாக இருந்தால் அதில் தொழிலாளி வர்க்கம் சுயேச்சையான உத்திகளைக் கைக் கொள்ளக் கூடாதென்றும் முதலாளித்துவத்திற்கு மாறுபட்ட இலக்கின் பால்பட்ட கடமைகளையும் சித்தாந்தத்தையும் தான் பின்பற்றவேண்டும்

என்றும் கருதினர். இதற்கும் மேலாக 1905-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடந்த ருஷ்ய சமூக ஜனநாயகத்தொழிலாளர் கட்சியின் மூன்றாவது காங்கிரஸுக்கு ஒருங்கிணைவாக ஜெனிவாவில் நடந்த மென்ஷ்விக் மாநாடு முதலாளித்துவப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கம் என்ற மார்க்சின் கருத்தையும் தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயி வர்க்கத்திற்கும் இடையே நேச அணியை ஏற்படுத்தும் கோட்பாட்டையும் நிராகரித்தது. ‘‘முதலாளிகளை பயமுறுத் தாமலிருப்பதற்காக’’ சமூக ஜனநாயகவாதிகள் தாற்காலிக புரட்சி அரசாங்கத்தில் பங்கு கொள்வதற்கு எதிராகவும் வாக்களித்தனர். இது லெனின் தலைமை தாங்கி நடத்திய ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் காங் கிரஸுக்கு எதிராக அவர்கள் செய்த காரியமாகும். இந்தக் காங்கிரஸ் தொடக்க நிலையிலுள்ள புரட்சியில் கட்சிக்கு லெனினது இலக்கு ரீதியான திட்டத்தை அமுலாக்கியது மென்ஷ்விக் நிலைபாடோ திட்ட வட்டமாக தொழிலாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்கி பாட்டாளி வர்க்கம் தாராள முதலாளித்துவத்தின் நலன்களுக்கு முழுமையாகத் தன்னை உட்படுத்திக் கொள்ளும் போக்கைக் கொள்ளு. மாறு செய்தது. நிலவுகின்ற சூழ்நிலைகளில் மென்ஷ்விக்கு களின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப் படுத்துவதோடு மட்டு மல்லாமல், பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தம் மற்றும் இலக்குகளில் உள்ள அனைத்துத் தலையாய பிரச்சினை களிலும் புரட்சிகர மார்க்சியத்தின் தெளிவான தத்துவங் களுடன் அவர்களது கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டும்.

‘‘**ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயக வாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்**’’ என்ற தனது புத்தகத்தின் மூலம் லெனின் முக்கியமான சித்தாந்தக் கடமையை வகுத்துக் கொடுத்தார். 1905-ம் ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் எழுதிய இந்தப் புத்தகத்தில் அவர் ருஷ்யப் புரட்சியின் முதல் மாதங்களின் நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களிலிருந்து

பொதுமைப்படுத்தி இக்கடமையை வகுத்தார். முதன் முதலாக மார்க்சிய சித்தாந்தத்துக்கும் மார்க்சியக் கட்சியின் இலக்கு மற்றும் உத்திகளுக்கிடையேயுமான நெருங்கிய தொடர்பை வலியுறுத்தினார். உத்திகளுக்கு அவர் ஒரு விஞ்ஞான விளக்கத்தைக் கொடுத்தார். ''கட்சியின் உத்திகள் என்றால் நமது கட்சியின் அரசியல் நடத்தை அல்லது குணாம்சம், திசைவழி மற்றும் அதன் அரசியல் நடவடிக்கை களின் வழிமுறைகள் எனப்பொருள் கொள்கிறோம்.'' [62] உத்திகளின் பால்பட்ட நடவடிக்கைகள் எந்த வழியிலும் கட்சியின் திட்டம் அல்லது முக்கிய கடமைகளுக்கு எதிரானவை ஆகாது. புரட்சியின் போது தொழிலாளி வர்க்கம் எந்தப் பாத்திரத்தை வகிக்கும் என்பது'' முதலாளித் துவத்திற்கு தொழிலாளி வர்க்கம் ஒரு உதவி செய்பவனின் பங்கை வகிக்குமா? 'ஏகாதிபத்தியத்தை எதிர்த்த அதன் கடுமையான தாக்குதலில் ஒரு பலம் பொருந்திய சக்தி என உதவியாளனாக இருந்தும் ஆனால் அரசியல் ரீதியாக ஆண்மையற்றதாயிருக்குமா? அல்லது மக்களின் புரட்சியில் அது தலைவன் என்ற பாத்திரத்தை வகிக்குமா? என்பதைச் சார்ந்தே இருக்கிறது.''[63]

இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியாக போதிய விளக்கங் களைக் கொடுத்து லெனின் பதிலளித்தார். ருஷ்யாவில் முதலாளித்துவப் புரட்சியென்பது ஒரு ஜனநாயக எழுச்சியே: அதாவது முதலாளித்துவ ஆதிக்கத்தை வலுப்படுத்துவது. அதே நேரத்தில் புரட்சியின் இந்தக் கட்டத்தில் ஒரு சோஷலிஸ்ட் புரட்சியைக் கொண்டு வருவதற்கு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்கு பாட்டாளி வர்க்கம் தன்னைப் பணித்துக் கொண்டு பணி யாற்ற முடியாத நிலையிலிருந்தது. முதலாளித்துவம் ஜன நாயகப் புரட்சியின் நிலைமைகளில் முதலாளித்துவத்தை விட தொழிலாளிகளே அப்புரட்சி வெற்றியடைய வேண்டும் என விழைந்தனர் என மார்க்ஸ் கூறியிருந்தார். முதலாளித்துவம் மக்களைக் கண்டு அஞ்சி நடுங்கியது. மக்கள் புரட்சி வேகத்தில் தனது விழைவுகளை மீறி மிக அதிகமாகப்

போய் விடுவார்கள்' என்று பயந்தது. எனவே புரட்சியின் போது முதலாளித்துவத்தின் பாத்திரம் எப்பொழுதுமே இரட்டை முகத்துடனும் அரைமனதுடனும் கூடியதாகவே இருக்கிறது. அது மக்களைக் கண்டு பயந்தது. எனவே மக்களுக்குத் துரோகமிழைத்துவிட்டு ஜார்மன்னனோடும் நிலப்பிரபுக்களோடும் சமரஸம் காணத் தயாராயிருந்தது. இவையனைத்தும், ஒரு முதலாளித்துவப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் நடத்தையில் ஒரு விசேட முத்திரையைப் பதிக்கின்றன.

ஒரு முதலாளித்துவப் புரட்சியின் மூலம் முதலாளி வர்க்கம் எல்லாவற்றிற்கும் மேலாகத் தனது நலன்களையே பிரதிபலிக்கிறது.'' **இது மிக உயர்ந்த அளவுக்குப் பாட்டாளி வர்க்கத்துக்குச் சாதகமானதாகும்**'' என லெனின் எழுதினார். இது ஏனென்றால் அது நிலப்பிரபுத்துவ, பண்ணை அடிமை மற்றும் ஏகாதிபத்திய முறைகளின் மிச்ச சொச்சங்களை அகற்றுகிறது. ஒரு புதிய உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சிக்கும் விரிந்த அளவு வழிகளைத் திறந்து விடு கிறது அதாவது ஒட்டு மொத்தமாக சமுதாய முன்னேற்றத் திற்கு அடிப்படையாக உள்ளது. இறுதியாக ஒரு வெற்றி கரமான முதலாளித்துவப் புரட்சி பாட்டாளி வர்க்கத்துக்குச் சாதகமாக இருப்பது ஏனென்றால் அனைத்துச் சுரண்டல் களையும் புரட்சிகரமான முறையில் ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற இறுதி லட்சியத்திற்கு மிக நெருக்கமாக அது உழைக்கும் மக்களைக் கொண்டு வருகிறது. அதாவது ஒரு சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வருகிறது.

எனவே முதலாளித்துவப் புரட்சியின் வெற்றிக்கு உதவி செய்வதோடல்லாமல் இந்த வெற்றியை பாட்டாளி வர்க்க மற்றும் அனைத்து உழைக்கும் மக்களின் நலன்களுக்கும் பயன் படுத்த வேண்டியது பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு மிக முக்கிய மானதாகும். புரட்சிகர மார்க்சியம், ''பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவப் புரட்சியிலிருந்து ஒதுங்கி நிற்கக் கூடாது;

அதைப் புறக்கணிக்கக் கூடாது; புரட்சியின் தலைமைப் பாத்திரத்தை முதலாளித்துவம் எடுத்துக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது அதற்கு மாறாக அந்தப் புரட்சியில் தீவிரமாகப் பங்கெடுக்க வேண்டும்; மிகவும் உறுதியாகவும் விடாப் பிடியுடனும் பாட்டாளி வர்க்க ஜனநாயகப் படுத்துதலுக்குப் போராட வேண்டும் புரட்சி தனது முடிவைக் காணும் வரை நடத்திச் செல்லப்பட வேண்டும் எனப் போதிப்பதை''[64] லெனின் வலியுறுத்திக் கூறினார். அதன் இறுதிவரை புரட்சியை நடத்திச் செல்ல வேண்டும் என்பதற்கு முதலாளித்துவ அரசாங்கத்தின் அமைப்பு என்பதல்லாமல் பாட்டாளி, வர்க்க, விவசாயிகள் வர்க்க புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரம் என லெனின் பொருள் கொண்டார். பல ஐரோப்பிய நாடுகளிலும் 1848-1849-ம் வருடங்களில் நடந்த அனுபவத்தைப் பொதுமைப்படுத்தியதின் மூலம், இந்தப் புரட்சியில் பாட்டாளி வர்க்க மேலாதிக்கத்தை நிறுவுவதற்கு பாட்டாளி வர்க்கக் கட்சி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் இந்த உத்திகளைக் கையாள வேண்டும் என மார்க்ஸ் ஏற்கனவே முடிவு கட்டியிருந்தார். இந்த மேலாதிக்கத்தின் விளைவினால் நிறுவப்படும் அதிகாரத்தின் குணநலனை மார்க்ஸ் குறிப்பிட்டுக் காட்டவில்லை. ஆனால் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றி முதலாளித்துவப் புரட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியாக மாறுவதற்கான அடித்தளங்களை அமைக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார். இந்த மாற்றம் மக்களால் வென்றெடுக்கப்படும் ஒரு விசேட வடிவத்திலான அதிகாரத்தின் கீழ் நம்பற்குரியது. அதாவது பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயி வர்க்கத்தின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரம் எனக்காட்டி லெனின் இந்த முடிவிற்கு மேலும் விளக்கமளித்தார்.

அதே நேரத்தில் இந்த அதிகாரத்தின் வடிவம் தெளிவாகவே ஏன் ஒரு சர்வாதிகார வடிவமாயிருக்க வேண்டும் என்ற கேள்வியையும் லெனின் கவனத்தில் கொண்டார். முதல் காரணம்: மக்களுக்கு இன்றியமையாத புரட்சிகர

மாற்றங்கள் அமுலாக்கப் படும்பொழுது அவை மேட்டுக்குடி வர்க்கங்களினாலும் புரட்சியினால் தூக்கி எறியப்பட்ட நிலப்பிரபுக்களாலும் கடுமையாக எதிர்க்கப்படும். அவர்களது நலன்கள் மக்களின் தேவைகளின் பால்பட்ட நலன்களுக்கு எதிரானவை. இரண்டாவது: ஒரு சர்வாதிகாரத்தின் கீழ்தான் பாட்டாளி வர்க்கம் இடைவிடாமல் தொடர்ச்சியாக ஜன நாயக மாற்றங்களை முழுமையாக ஏற்படுத்த முடியும். இது இன்னும் சோஷலிச சர்வாதிகாரமாகவில்லை. ஜனநாயக சர்வாதிகாரமாகவே திகழ்கிறது. அதாவது இது முதலாளித் துவ தனியார் சொத்துரிமை உறவுகளின் அடித்தளங்களைப் பாதிக்கவில்லை. குறிப்பாக கிராமப் புறங்களில் பாதிக்க வில்லை.இருந்தபோதிலும்''ருஷ்யநாட்டின் எதிர்கால வளர்ச் சிக்கும் ஒட்டு மொத்தத்தில் உலகம் முழுமைக்கான வளர்ச் சிக்கும் இந்த வெற்றி அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்த தாகும்; புரட்சியின் தீர்மானமான வெற்றியைப் போல் வேறு எதுவும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வல்லமையை இந்த அளவுக்கு உயர்த்தாது; முழுமையான வெற்றிக்கு இட்டுச் செல்லும் இந்தப் பாதையை இந்த அளவுக்கு வேறு எந்தச் சக்தியினாலும் சுருக்க முடியாது[65]'' என்று எழுதினார் லெனின்.

பாட்டாளி வர்க்க மேலாதிக்கத்தின் கீழ் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றியின் விளைவாக எழும் அதிகாரத்தின் இயல்பு பற்றிய லெனினது முடிவு ஒரு சமு தாயப் புரட்சி பற்றிய மார்க்சிய ஆய்வியலுக்கு மிக முக்கியமான பங்களிப்பாகும். அது மக்களின் புரட்சி இயக்கத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களையும் கடமைகளையும் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் ருஷ்ய மக்களின் புரட்சிப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட புறவயமான அகவயமான நிலைமைகளின் இயக்கவியல் பற்றிய தனது பகுப்பாய்வில் லெனின் மார்க்சின் போதனைகளைச்

செழுமைப்படுத்தினார். புரட்சியின் வெற்றிக்கு "முக்கிய மான புறவயப்பட்ட நிலை, ருஷ்யப் பொருளாதார வளர்ச் சியின் அளவு; இந்தப் பரிமாணத்தின் தலையாய அகவயப் பட்ட நிலை. பாட்டாளி வர்க்க வெகுஜனங்களின் ஸ்தாபன உணர்வு மற்றும் வர்க்க உணர்வின் அளவு;"[66] என்றார் லெனின். இதற்கும் மேலாக, அகவய, புறவய நிலைமைகள் எப்பொழுதுமே ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி தொடர்புபடுத்தப்பட்டுள்ளவை; அவற்றின் மிக ஆழமான உள்ளார்ந்த ஒற்றுமையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் அதைப் புரிந்து கொள்ள முடியாது என லெனின் குறிப்பிட்டு வலியுறுத்தினார். தொழிலாளி வர்க்கங்களின் விடுதலை தொழிலாளி வர்க்கங்களினால் மட்டுமேவென்று சாதிக்கப் பட வேண்டும்; மக்கள் வர்க்க உணர்வு பெறாவிட்டால், ஸ்தாபனப்படுத்தப்பட்டு முழுமையாக முதலாளித்துவத்தை எதிர்த்த பகிரங்க வர்க்கப் போராட்டத்தில் பயிற்சிபெற்று பாடம் கற்றுக் கொள்ளா விட்டால் ஒரு சோஷலிசப் புரட்சி என்பது சாத்தியமே இல்லை."[67] எனவே அகவயப்பட்ட நிலைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வதின் அவசியத்திற்கு லெனின் விசேட கவனத்தை ஈர்த்தார். இது "**இரண்டுபோர்த் தந்திரங்கள்**" என்ற அவரது நூலில் வரையறுத்துக் காட்டிய படி லெனினது புரட்சி பற்றிய சித்தாந்தத்தின் மற்றொரு தீவிர நோக்கைக் கொண்டு வருகிறது......அதாவது, பாட்டாளி வர்க்க விவசாயி வர்க்கங்களின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரக் கடமை அதாவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றியினால் எழுகின்ற தாற் காலிகப் புரட்சி அரசு, பாட்டாளி, விவசாயி வர்க்கங்களை ஸ்தாபனப்படுத்தி மேலும் ஒன்றுபடுத்தி முதலாளித்துவத் திலிருந்து சோஷலிஸ்ட் புரட்சிக்கு மாற்றம் ஏற்படுத்த அவர்களை அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் பயிற்றுவிப்பதற்கு கடுமையாகப் பணியாற்ற வேண்டும்.

இந்த சமயத்தில், மார்க்சிய இலக்கியம் மக்களைப் பற்றிய கருத்தமைவில் போதுமான அளவுக்கு தெளிவான,

புரிந்து கொள்ளக்கூடிய விளக்கும் தன்மையைக் கொண்டிருக்க வில்லை. உழைக்கும் வர்க்கங்கள், பாட்டாளி வர்க்கமும், விவசாயி வர்க்கமும் இந்தக் கருத்தமைவின் மிகப்பெரும் பகுதியை நிரப்புகிறார்கள் என்று தனது நூலில் குறிப்பிட்டு லெனின் இந்த இடைவெளியைப் பூர்த்தி செய்தார். அதே சமயம் ஒரு தனியான புரட்சி வெடிப்பின் சூழல்களில் இந்தக் கருத்தமைவு புரட்சி மனோபாவம் கொண்ட அறிவாளி களையும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த அவர்களது போராட்டத்தில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் பக்கத்தில் சேரும் கிராமப்புற நகர்புற குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரையும் தன்னோடு இணைத்துக் கொள்கிறது என லெனின் மேலும் கூறினார். பெரும் பகுதியான மக்கள் பகுதியில் அதன் முக்கியமான தீர்மானிக்கும் பகுதியினர் எல்லோருக்கும் மேலாக உழைப்பவர்களே; சமுதாயத்தின் லோகாயுதச் சொத்துக்களை உருவாக்குகிறவர்களே அதாவது பாட்டாளி வார்க்கமும் உழைக்கும் விவசாயி வர்க்கமுமே.

இதிலிருந்து துவங்கி லெனின் துவக்க நிலையிலிருந்த புரட்சியில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் எதிர் நோக்கிய கடமைகளை வரையறை செய்தார்: **பாட்டாளி வர்க்கம் ஜனநாயகப் புரட்சியை இறுதிவரை நடத்தவேண்டும் பலவந்தத்தின் மூலம் ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பை நிர் மூலமாக்குவதற்கு விவசாயிகள் வர்க்கத்திலுள்ள மக்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு முதலாளித்துவத்தின் நிலை யற்ற தன்மையை ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டும்**.''[68] இந்த முடிவு சமுதாயப் புரட்சி பற்றிய மார்க்சியச் சித்தாந்தத்திற்கும், போல்ஷ்விக்குகள் மற்றும் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மெய்யான புரட்சிப் போராளிகளுக்கும் ஒரு தலையாய பங்களிப்பாகும்.

தனது **இரண்டு போர்த்தந்திரங்களில்** லெனின் இந்த முடிவை ......''துணிந்து செயல்பட்டால் வெற்றி நமதே'' என்றழைத்தார். ''புரட்சிகள்'' எடுக்கப்பட்ட, சுரண்டப் பட்ட மக்களின் ''திருவிழாக்கள்'' என அவர் எழுதினார்.

மக்களில் வெகுஜனப் பகுதியினர் இவ்வாறு முன்வந்து ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்குபவர்கள் என்ற முறையில் செயல் பட்ட நிலைமை புரட்சி நேரத்தில் இருந்தது போல் வேறெந்தக் காலத்திலுமிருந்ததில்லை."[69] பழைய அமைப்பைத் தகர்த்துத் தரை மட்டமாக்குவதைவிட புதிய படைப்பாற்றலும் பரந்துபட்ட மக்களிடம் புரட்சிகர முன் முயற்சியின் உருவாக்கமும்தான் புரட்சியின் முக்கியமான தீர்மானமான கூறு என லெனின் இந்த வழியில் காட்டினார். தனது முடிப்புரையில் லெனின் மீண்டும் சர்வதேச மற்றும் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மென்ஷ்விக்குகள் மற்றும் இதர சந்தர்ப்பவாதிகளின் நிலைபாட்டில் இருந்த புரட்சி எதிர்ப்புக் குணாம்சத்தை வலியுறுத்திக் காட்டினார். பாட்டாளி வர்க்கம் அமைதியாக இருக்க வேண்டும் முதலாளித்துவத்திற்கு அடிபணிந்து அடிமைகளாக நடக்க வேண்டும் என சந்தர்ப்பவாதிகள் விரும்பினர். லெனினும் அவரைப் பின்பற்றியவர்களும் இதற்கு நேர்மாறாக முன்னேற்றகரமான முழக்கங்களை முன்வைத்தனர். லெனின் கூறியது போல் "மக்களின் புரட்சிகர முன் முயற்சிக்கு முன்னதாகவே, ஒரு ஒளி விளக்காகச் செயலாற்றுங்கள், தமது ஜனநாயக சோஷலிச இலட்சி யங்களை அவற்றின் முழுமையான தலைசிறந்த தன்மை யோடும், ஜெகஜ்ஜோதியாகக் காட்டி தரும் இயல்போடும் புலப்படுத்துங்கள், முழுமையான ஜயத்திற்கு இடமில்லாத, தீர்மானமான வெற்றிக்கு மிகவும் சுருக்கமான நேர் பாதையை மக்களிடம் காட்டுங்கள்.

லெனினது, **ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயக வாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்** என்ற நூல் மார்க்சியத் தத்துவத்திற்கு சிறப்பானதோர் பங்களிப்பாகும். பல எண்ணற்ற வழிகளில் அது சமுதாயத்தின் புரட்சிகர வளர்ச்சி பற்றிய மார்க்சின் போதனையையும், சமுதாயப் புரட்சி பற்றிய அவரது சித்தாந்தத்தையும் செழுமைப்படுத்தியது. அந்தப்புத்தகம் வெளிவந்ததும் ஒரு முக்கிய போல்ஷ்விக்கான எஸ். குசேவ் லெனினுக்கு எழுதியதாவது: "உங்களது

படைப்பு நான் பார்க்கிற அளவில், ஒரு முழுமையான சகாப்தத்தை உருவாக்காவிட்டாலும் ஒரு மகத்தான பாத்திரத்தை வகிக்கும். விசேடமாக, அது பரப்புகின்ற புரட்சிகர உத்வேகம், ஆச்சரியகரமான முறையில் அதில் உள்ள தெளிவு, சரளமான நடை போன்றவற்றினால் நான் திகைத்துவிட்டேன்.''[71] லெனினது அந்தப் புத்தகத்தை அழித்து ஒழிக்குமாறு ஜார் உத்தரவிட்டான். ஆனால் அது பல பத்தாயிரங்களாக ருஷ்ய நாடெங்கணும் பரவி, 1905—1907-ம் வருடத்திய புரட்சிப் போர்களில் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு ஒரு சித்தாந்த அடிப்படையாகவும் தீவிர நடவடிக்கைத் திட்டமாகவும் பணியாற்றியது.

முதலாவது ருஷ்யப் புரட்சியின் போது லெனின் மிகத் தீவிரமாக அரசியல் மற்றும் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் தத்துவார்த்தத் துறைகளிலும் தனது முயற்சிகளைத் தொடர்ந்தார். இந்தக் காலக்கட்டத்தில், இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்திற்கு அவர் வழங்கிய பங்களிப்பு, இரண்டு உத்திகளிலும் மற்றும் நூல்களிலும் அவர் பரிசீலனை செய்த புரட்சி பற்றிய ஆய்வியலின் ஒரு சாதாரண விஷயம் மட்டுமல்ல. இந்த சமயத்தில் லெனின் பரிசீலனை செய்த வேறு இரண்டு தத்துவார்த்தப் பிரச்சினைகளையாவது இங்கு குறிப்பிட வேண்டும். அவை வரலாற்றுப்பொருள் முதல்வாதம் பற்றிய மார்க்சின் சித்தாந்தத்துக்கு மகத்தான பங்களிப்பை நல்கின.

முதல் பிரச்சினை பொதுவாக சமூக ஞானத்தின் குறிப்பாக சமூக ஜனநாயக இலக்கியத்தின் கட்சி சார்புநிலை. 1905-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ம் நாள் (21) நாடு கடத்தப்பட்டிருந்த லெனின் ருஷ்யாவுக்குத் திரும்பினார். பீட்டர்ஸ்பர்க்கில் ''புதிய வாழ்க்கை'' என்ற செய்தி ஏட்டின் ஆசிரியர் குழுவுக்குத் தலைமை தாங்கினார். இந்த ஏடுதான் நடைமுறையில் ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மைய ஏடாகத் திகழ்ந்தது. லெனின் ஒரு

முறைக்குப் பலமுறையாக இக்கட்சியின் பீட்டர்ஸ்பர்க் கமிட்டிக் கூட்டங்களிலும் ஆசிரியர் குழுவின் அலுவலகத்தில் நடந்த கட்சியின் இதர மாநாடுகளிலும் உரையாற்றினார். நவம்பர் மாதம் 13-ம் நாள் இந்த ஏடு "கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்" என்ற அவரது கட்டுரையைப் பிரசுரித்தது.

இந்த நேரத்தில் இலக்கியத்தில் கட்சி சார்பு நிலை, குறிப்பிட்ட முறையில் முனைப்பான அவசரப் பிரச்சினை யாக இருந்தது. 1905-ம் வருடம் அக்டோபர் மாதம் நிகழ்ந்த அரசியல் பொதுவேலை நிறுத்தம், ஆரம்பத்தில் சட்டபூர்வப் பத்திரிகைகளில் பிரசுரிக்க முடியாத பல படைப்புக்களைப் பிரசுரிக்கும் சாத்தியப்பாட்டை ஏற்படுத்தியது. சட்டபூர்வ மான மற்றும் சட்டவிரோதமான இலக்கியங்களுக்கிடையே யான வித்தியாசம் மறையத் துவங்கியது. எனவே பொதுவாக இலக்கியத்தில் கட்சி சார்பு நிலை என்ற பிரச்சினையும் குறிப்பாக சமூக ஜனநாயக இலக்கியத்தில் கம்யூனிஸ்ட் சார்பு நிலை என்ற பிரச்சினையும் அடிப்படை முக்கியத் துவத்தைப் பெற்றன.

ஆரம்பத்தில் ஜார் மன்னரது தணிக்கை முறையில் இலக்கியத்தில் கட்சியின் சிறப்பியல்பு என்ற பிரச்சினை "மிக மிகச் சுலபமாக, மிக மிகப் பொய்யான முறையில் அசாதாரண வழிகளில் தீர்க்கப்பட்டது. சட்ட விரோதமான பத்திரிகைகள் முழுவதும் (கருதப்பட்டது—எல். சுவாரோவ்) ஒரு கட்சிப் பத்திரிகையாக......சட்டபூர்வமான பத்திரிகை களனைத்தையும் கட்சி சார்பற்றவையாயிருந்தன— ஏனென்றால் கட்சிகள் தடை செய்யப்பட்டிருந்தன" என்றார் லெனின். எனவே சட்ட பூர்வமாக தங்களது படைப்புக்களை வெளியிட்ட பல எழுத்தாளர்கள் "நிர்ப்பந்தமான வரையறைகளை"க் காட்டினார்......வழ வழா மொழிகளை சில சமயங்களில் கோழைத்தனமான வாசகங்களை எழுதினர்.[72] புரட்சி இந்த நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்தது. பத்திரிகை சுதந்திரத்தின்

நிலைமைகளில் இலக்கியம் ''கட்சி இலக்கியங்களாக வேண்டும் என்பதை லெனின் வலியுறுத்தினார். இலக்கியத்தில் கட்சியின் சிறப்பியல்புக்கான மார்க்சியக் கருத்தமைவை லெனின் வரையறுத்தார். ''இலக்கியம் பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான இலட்சியத்தின் ஒரு பகுதியாக விளங்க வேண்டும். முழுமையான தொழிலாளி வர்க்கத்தின், முழுமையான அரசியல் உணர்வு பெற்ற முன்னணிப் படையின் முடுக்கி விட்டுள்ள ஒரே ஒரு மகத்தான சமூக ஜனநாயக எந்திரத்தின் பற்களும் சக்கரமுமாகத் திகழ வேண்டும். சமூக ஜனநாயகக் கட்சியின் பணிகளில் இலக்கியம், ஸ்தாபனப்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த ஒரு உறுப்பாகத் திகழ வேண்டும்.''[73] இருந்த போதிலும் இலக்கியத்தில் கட்சி உத்வேகம் எந்த வழியிலும், கட்சியின் நிர்ப்பந்தத்தினால் எழுத்தாளர்கள், இதர பொதுஜனப் பிரமுகர்கள், கலைஞர்கள், நடிகர்கள், விஞ்ஞானிகள் போன்றோர்களிடம் திணிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடாது என்ற ஷரத்தையும் சேர்த்திருந்தார். எந்த மனிதனும் அவனது கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடும் உரிமை படைத்திருக்க வேண்டும் என்பதே கட்சி சார்பு நிலையின் மார்க்சியக் கோட்பாடாகும். ''ஆனால் ஒவ்வொரு தன்னிச்சையான கழகமும் (கட்சி உட்பட) கட்சி விரோதக் கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்குவதற்காக கட்சியின் பெயரைப் பயன்படுத்தும் உறுப்பினர்களை வெளியேற்றுவதற்கு சுதந்திரம் உண்டு. பேச்சுச் சுதந்திரம், நேச அணி வைத்துக் கொள்ளும் சுதந்திரத்துடன் கையோடு கை கோர்த்துச் செல்ல வேண்டும் என்ற குறிப்பையும் இங்கு லெனின் உண்டாக்குகிறார். ''கட்சி ஒரு தன்னிச்சையான கழகம், கட்சி விரோதக் கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்கும் நபர்களை அது, களையெடுக்கா விட்டால் முதலில் சித்தாந்த ரீதியிலும் பின்னர் உறுப்பினர்கள் ரீதியிலும் தவிர்க்க முடியாதபடி அது உடையும்'' என அவர் எழுதினார். கட்சி நடவடிக்கைக்கும், கட்சி விரோத நடவடிக்கைக்கும் இடையேயான எல்லையைத்

தீர்மானிப்பது எது? இதற்கு லெனின் வெட்டொன்று துண்டிரண்டெனப் பதில் தருகிறார்: ''கட்சியின் திட்டம், உத்திகளின்பால் கட்சியின் தீர்மானங்களும் சட்ட திட்டங்களும் கடைசியாக சர்வதேச சமூக ஜனநாயகத்தின் முழுமையான அனுபவம்.''[74] இவ்வாறாக இந்தப் பிரச்சினையில் லெனின் தனது பகுப்பாய்வில் வகுத்த ஆய்வியல் முடிவு அவரது கருத்தில் பேச்சுத் சுதந்திரமும் கருத்துக்களின் சுதந்திரமும் நேச அணி சேர்க்கும் சுதந்திரத்துடனும், ஒருமித்த கருத்துடையவர்கள் ஒரு பொதுவான நிலைபாடு மற்றும் பொதுவான கருத்துக்களுடன் குழுக்களை அமைப்பதற்குமான சுதந்திரத்துடனும் பிரிக்க முடியாத தொடர்பு கொண்டவை ஆகும்.

''பொதுவான முறையில் சுதந்திரத்திற்கான புலனாகாத அறைகூவல்களை முதலாளித்துவப் பிரச்சாரத்தின் அப்பட்டமான மாதிரியை லெனின் முனைப்பாக விமர்சித்தார். முதலாளித்துவ எழுத்தாளர், நடிகர் அல்லது நடிகையின் சுதந்திரம் திரை போட்டு மூடப்பட்டுள்ளது (அல்லது பொய்ம்மைத் திரைபோட்டு) பணமூட்டைகளைச் சார்ந்து லஞ்ச லாவண்யம், விபசாரம் போன்றவற்றிலிருந்து மூடப்பட்டுள்ளது.''[75]

முதலாளித்துவ இலக்கியத்தின் பொய்ம்மையை சித்தாந்த உள்ளடக்கத்தை நோக்கிய மெய்யான மனிதத்துவ அணுகுதல் மூலம், உழைக்கும் மக்களின் மிகப் பெரும்பான்மையோரது நலன்களைப் பிரதிபலிக்கும் அணுகுதல் மூலம் லெனின் வேறுபடுத்திக் காட்டினார். உண்மையான கட்சி இலக்கியம் மட்டுமே மெய்யான சுதந்திரத்துடன் திகழ முடியும் என்று அவர் கூறினார். உழைக்கும் மக்களது இலட்சியங்களையும் அபிலாஷைகளையும் விருத்தி செய்யக் கூடிய, கம்யூனிஸத்தின் மகோன்னதக் கோட்பாட்டின் கீழ் அனைத்து மக்களையும் ஒன்று படுத்தக் கூடிய ஒரு சமுதாயத்தில் இந்தக் கருத்துக்களின்பால் கட்சியின் அணுகல் மெய்யான விஞ்ஞான ரீதியான அதே நேரத்தில்

மிக உயர்ந்த மனிதத்துவ உணர்வுடன் அவசியம் இரண்டறக் கலப்பதாக இருக்கும். இந்த இலக்கியம் விஞ்ஞான சோஷலிசத்தின் மகத்தான கருத்துக்களால் ஈர்க்கப்படும். அது விரல் விட்டு எண்ணக்கூடிய பணமுட்டைகளுக்காக அல்லாமல் லட்சோபலட்சம் உழைக்கும் மக்களுக்காகப் பணியாற்றும். சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின் அனுபவம் மற்றும் ஜீவனுள்ள பணி, கடந்த கால அனுபவத்திற்கும் (விஞ்ஞான சோஷலிசம், அதன் ஆரம்ப கால, கற்பனாவாத வடிவங்களிலிருந்து சோஷலிச வளர்ச்சி முற்றுப் பெறுவது) இன்றைய அனுபவத்திற்கும் (தொழிலாளத் தோழர்களின் இன்றையப் போராட்டம்) இடையே நிரந்தரமான பின்னிய செயல் விளைவைக் கொண்டு வந்து மனிதகுலப் புரட்சி சிந்தனையின் கடைசி வார்த்தை வரை செழுமைப்படுத்தும் ஒரு சுதந்திரமான இலக்கியமாகத் திகழும்.''[76] இலக்கியத்தில் கட்சியின் சிறப்பியல்பு என்பது உழைக்கும் மக்களின் விடுதலைக்கான போராட்டத்துடன் ஒற்றுமை என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

மார்க்சியச் சித்தாந்தம் மற்றும் நடை முறையின் தொடர்ந்த வளர்ச்சி முழுவதிலும் ''கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்'' என்ற கட்டுரை சித்தாந்தப் பணிகளில் கட்சி சார்பு நிலைப் பிரச்சினையை அணுகுவதற்கு ஆய்வியல் அடிப்படையாகப் பணியாற்றியது. அதன் கருத்துக்கள் புரட்சியில் சேர்ந்து கொள்வதற்காக குதித்தோடி வந்த விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் படைப்புக்களில் பிரதிபலித்தன. 1917-ம் வருடத்திய அக்டோபர் புரட்சிக்குப் பின், ஒரு புதிய சோவியத் இலக்கியத்தையும், சோவியத் சமுதாயத்திற்கு முழுமையான புதயதோர் கலாசாரத்தையும் படைக்க, கட்சியின் முயற்சிகளுக்கு லெனினது நிலைபாடு ஆதார சுருதியாயிருந்தது. சித்தாந்தப் பிரச்சினை பற்றிய கட்சியின் ஆவணங்களும் முடிவுகளும் இந்தக் கட்டுரையில் அடங்கிய கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளையே அடிப்படையாகக்

கொண்டிருந்தன. மார்க்சியச் சித்தாந்தத்திற்கு அதன் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல.

முதல் ருஷ்யப் புரட்சியின் போது லெனினால் கவனத்தில் கொள்ளப்பட்ட மற்றுமொரு தத்துவார்த்தப் பிரச்சினை, மதம் தொடர்பாக மார்க்சியக் கட்சி எடுக்க வேண்டிய அணுகும் முறையாகும். 1905-ம் வருடம் டிசம்பர் மாதம் 3-ம்தேதி, **நோவயாஷினின்**, சஞ்சிகை ''சோஷலிசமும் மதமும்'' என்ற லெனினது கட்டுரையைப் பிரசுரித்தது. 1905-ம் வருத்திய புரட்சியின் போது ருஷ்ய மதஸ்தாபனங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக மிக விஸ்வாசத்துடன் ஏகாதிபத்தியத்தை ஆதரித்த சனாதனத் திருச்சபை-உழைக்கும் மக்களை புரட்சிப் போராட்டத்தில் தனிமைப் படுத்திப் பணியவைப்பதற்கான ஒரு முயற்சியில் தீவிர எதிர்ப்புரட்சி நடவடிக்கைளை மேற்கொண்டது. புரட்சிக்குப் பின் எழுகின்ற நிலைகளில் மதசித்தாந்தங்கள் மற்றும் திருச்சபை பற்றி எத்தகைய அணுகும் முறையைக் கொள்ள வேண்டும் என்பது பற்றி புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி முடிவு செய்ய வேண்டியிருந்தது.

மதத்தைப் பற்றிய தனது நோக்கில் புரட்சிகர சமூக ஜனநாயகம், மதம் என்பது சமூக உணர்வின் ஒரு விசேட வடிவம் என்ற மார்க்ஸ்-எங்கெல்ஸ் கருத்திலிருந்து முன் சென்றது. ''மதம் மக்களுக்கு அபினி விஞ்ஞான சோஷலிச உலகம் மதசம்பந்தமான சித்தாந்தங் களுக்கு முரண்பட்டது'' என்ற மார்க்சின் வார்த்தைகள் அனைவரும் நன்கறிந்ததாகும்.[77] சமூக வளர்ச்சியின் புதிய வரலாற்று நிலைமைகள் தொடர்பாக மார்க்சின் முன் மொழிதல்களை லெனின் மேலும் வளர்த்துச் சென்றார்.

மதம், நிபந்தனைகள் ஏதுமின்றி உறுதியான முறையில் சமுதாய முன்னேற்றத்துக்கு எதிரானது என்ற புகழ்பெற்ற மார்க்சிய முன்மொழிதலை லெனின் நினைவு கூர்ந்தார். ''எங்கெங்கணும் மக்களின்மீது தாங்கமுடியாத பளுவைச் சுமத்தும் ஆன்மீக ஒடுக்குமுறைகளின் ஒரு வடிவமே மதம்''[78]

என அவர் குறிப்பிட்டார். இருந்த போதிலும் முதலாளித்துவத்தை எதிர்த்த பாட்டாளி வர்க்கத்தின் துவக்க நிலையிலிருந்த பெருமளவிலான புரட்சிப் போராட்டம், இந்த "மதத்தின் பால்பட்ட தெய்வீக போதையின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து மரணத்திற்குப் பின் வாழ்க்கை என்ற நம்பிக்கையிலிருந்து தொழிலாளர்களை விடுத்து இப்பொழுது பூமியில் சிறந்ததோர் வாழ்க்கைக்காகப் போராடுமாறு அவர்களை ஒன்று படுத்தியது."[79] ஒரு பொதுவான சமுதாயத் தளத்தில் மதம் ஒவ்வொரு தனி மனிதன் அல்லது பெண்ணின் சொந்த விவகாரம் என மார்க்சியவாதிகள் கருதினாலும் அரசாங்கத்திலிருந்தது மதத்தைப் பிரித்து விட வேண்டும் என வற்புறுத்தினார்கள். தங்களது சொந்தக் கட்சியைப் பொறுத்தமட்டில், இது தனிப் பட்ட முறையில் உறுப்பினர்களின் விருப்பத்தைப் பொறுத்த விஷயம் என அவர்கள் விடத்தயாரில்லை. பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஒவ்வொரு தனி மனிதனும் அவன் நம்புகிற கருத்துக்களையும், நோக்கங்களையும் சுதந்திரமாகக் கொண்டிருக்கலாம் என்ற உரிமையை கட்சி அங்கீகரிக்கிறது. எனினும், மத உணர்வுகள் நீங்கலாக மெய்யான விஞ்ஞான நிலைபாடுகளை அமுலாக்கும் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வுடன் கூடிய முன்னணிப்படையின் பிரதிநிதி என்ற முறையில் ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், தொழிலாளர்களிடமும் அனைத்து உழைக்கும் மக்களிடமும் விஞ்ஞான, அழகியல் ரீதியான உலகக் கண்ணோட்டத்தின் சத்தும் சாரமும்தான், உலகத்தைப்பற்றிய உண்மையான ஐபத்திற்கிடமில்லாத கருத்து; உள்ளடக்கம் வளர்ச்சியின் தோற்றுவாய் என்பதை விளக்கும் கடமையைக் கொண்டிருக்கிறார். 'மதம்' பற்றிய முதலாளித்துவ சமுதாயத்தின் இதர அரசியல் ஸ்தாபனங்களின் நோக்கிலிருந்து பாட்டாளி வர்க்கக் கட்சியின் நோக்கை வேறுபடுத்திக் காட்டுவது எது? பாட்டாளி வர்க்கம் விஞ்ஞான ஞானத்தைப் பிரச்சாரம் செய்கிறது. வன்முறைகளின் மூலம் மத மயக்கங்களை துடைத்தெடுக்க முயற்சிப்பதற்குப்

பதிலாக விஞ்ஞானத்தின் பிண்டப் பிரமாணமான உண்மைகள் மற்றும் முடிவுகள் பற்றி தேர்ந்து தெளியுமாறு உழைக்கும் மக்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

பின்னர் 1909-ம் ஆண்டில் பிற்போக்குச் சித்தாந்தமான ''கடவுளைத் தேடல்'' [80] திருத்தல்வாத ''கடவுளை உருவாக்குதல்'' [81] (அதிகமான விவரங்களுக்கு அடுத்து வரும் பகுதியைப் பார்க்கவும்) போன்றவற்றிற்கு எதிராக கட்சி போராடிக் கொண்டிருந்த போது ''மதத்தின்பால் தொழிலாளர்களது கட்சியின் பார்வை'' என்ற கட்டுரையை லெனின் எழுதினார். இந்தக் கட்டுரையில் அவர் மீண்டும் மதம் பற்றிய மார்க்ஸ்—எங்கெல்ஸ் கருத்துக்கே வந்தார். இதில் மதத்தின் பிற்போக்கு சமுதாயப் பாத்திரத்தை அம்பலப் படுத்திய மார்க்சியத்திற்கு முந்திய பொருள் முதல் வாதத்தின் முக்கியத்துவத்தை மிக நுட்பமாகக் குறிப்பிட்டார். கோட்பாடாக இதர மதசம்பந்தமான சித்தாந்தங்களுக்கு விரோதமான ஒரே விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டம் இயக்கவியல் பொருளாதார வாதத்தின் சத்தும் சாரமும்தான் என்பதையும் அவர் புலப்படுத்திக் காட்டினார். அதே நேரத்தில் ''கடவுள் நம்பிக்கையைக் கொண்டுள்ள தொழிலாளர்களை சமூக ஜனநாயகக் கட்சியில் அனுமதிப்பது மட்டுமல்லாமல், திட்டமிட்டு அவர்களைக் கொண்டு வரும் கடமையிலும் நம்மைப் பணித்துக் கொள்ள வேண்டும்; அவர்களது மதநம்பிக்கைகளைப் புண்படுத்தும் சிறிய தவறைக்கூட நாம் செய்யக்கூடாது. அந்தத் தவறுகளை நாம் திட்டவட்டமாக எதிர்க்க வேண்டும். ஆனால் அவர்களை நமது திட்டத்தின் உத்வேகத்தில் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கே அவர்களைக் கட்சிக்குள் சேர்க்கிறோம்.'' [82] என்று லெனின் எழுதினார். தனது கட்டுரைகளில் லெனின் பாட்டாளி வர்க்க அழகியல், மதம் மற்றும் திருச்சபை பற்றிய கட்சியின் கொள்கை ஆகியவற்றின் முக்கிய கோட்பாடுகளை விளக்கி, வளர்த்தார். இந்தப் படைப்புக்களனைத்தும் மார்க்சியத்தின் சமூக ஆய்வுக்கும்,

வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கருத்தமைவுக்கும் முக்கியமான பங்களிப்பாகும்.

## 3. பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்

லெனினது நூலான ''**பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்**'' என்பதே அவரது தலையாய தத்துவார்த்தப் படைப்பாகும். 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் விஞ்ஞானம் மற்றும் நடை முறையின் நிலை பாட்டிலிருந்து அது மார்க்சியத்தின் முக்கிய தத்துவார்த்தப் பிரச்சினைகளை முறையாக முன்வைத்து,தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு புதிய புரட்சிகர எழுச்சியைத் தூண்டி விடும் முயற்சிகளில் கட்சி எதிர்நோக்கும் அடிப்படையான சித்தாந்தம் பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கிறது என்ற உண்மையில்தான் அதன் அழிக்க முடியாத சித்தாந்த முக்கியத்துவம் உள்ளது. அதே சமயத்தில் அது மார்க்சியத் தத்துவார்த்த நிலைபாட்டிலிருந்து இயற்கை விஞ்ஞானத்தின் இன்றைய பரிசோதனைகளைப் பொறுமைப் படுத்தி, முதலாளித்துவத் தத்துவம் மற்றும் திருத்தல் வாதம் பற்றிய மார்க்சியத் திறனாய்வில் ஒருங்கிணையும் அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்து இயக்கவியல் பொருள் முதல் வாதம் மற்றும் விசேட விஞ்ஞானங்களுக்கிடையேயாள ஒன்றிப்பின் முக்கியத்துவத்தைக் காட்டியது.

முதலாளித்துவ நாடுகளில் சமூக வளர்ச்சியின் காரண மாக பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்துக் கிளம்பிய நேரத்தில், ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைக்கான தங்கள் போராட்டத்தைத் தீவிரப் படுத்திய நேரத்தில் அதாவது ஒரு புதிய வரலாற்றுச் சகாப்தத்தில் சமுதாயத்தின் நுழைவுக் கான, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச மாற்றத்திற் கான முன் நிலைமைகள் உருவாக்கப்பட்ட பிறகு லெனினது புத்தகம் எழுதப்பட்டது.

புரட்சியின் தோல்வியைத் தொடர்ந்து ஜாரின் பிற்போக்குப் பேயாட்சி கொடிகட்டிப் பறந்த நேரத்தில் லெனினது புத்தகம் எழுதப்பட்டது. ருஷ்ய நாட்டில் பயங்கரப் போலீஸ் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஜார் மன்னனின் கொடுங்கோல் அதிகாரிகளால் புரட்சிப் போராளிகள் ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்யப்பட்டனர். சித்தாந்தத்துறையில், பிற்போக்குக் கருத்து முதல் வாதச் சித்தாந்தங்களுக்கும், முற்போக்குப் பொருள் முதல் வாதக் கருத்துக்களுக்கும், முனைப்பான போர் நடந்தது சட்ட பூர்வமான பத்திரிகைகள் மாயாஜாலக் கருத்துக்களின் ஆதிக்கத்தில் செயல்பட்டனர். ''மதத்தின்பால் திரும்புங்கள்'' என்று போதனை செய்த ''கடவுளைத் தேடல்'' என்னும் பிற்போக்குச் சிந்தனைப் பள்ளிக்கு பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட்டது. கலையும் இலக்கியமும் தனிநபர் வாதத்தை புகழ் கோபுரத்தின் உச்சிக்கே கொண்டு சென்று போற்றிப் புகழ்ந்தன. அரசியலிலிருந்து பின்வாங்குவது, ருஷ்யக் கலாசாரத்தின் புரட்சிகர லோகாயுதப் பாரம்பரியங்களை நிராகரிப்பது போன்றவற்றிற்கு அவை 'சபாஷ்' போட்டன. பல நம்புதற்கியலாத சமூக ஜனநாயக வாதிகள், திருத்தல்வாதம் மற்றும் முதலாளித்துவ சித்தாந்தத்தின் நிலைபாடுகளுக்கு ஓடினர். இந்த நிலைமைகளில், சித்தாந்தப் போராட்டமும், அனைத்து வகையான தாக்குதல்கள் மற்றும், திசை திருப்புதல்களிலிருந்து மார்க்சியத் தத்துவத்தைத் தற்காத்துக்கொள்வதும், சாலப்பொருத்தமாகி விட்டன.

கட்சிக்குள், மார்க்சியத்தை எதிர்த்து போக்டனோவினாலும் அவரைப் பின்பற்றியவர்களினாலும் துவக்கிய தத்துவப்போர் குறிப்பிடத்தக்க முறையில் போல்ஷ்விக்குகளுக்கு ஆபத்து நிறைந்தவையாயிருந்தன. லெனின் மார்க்ஸிம் கார்க்கிக்கு எழுதியாவது: அவரது சக்திவாய்ந்த ''இயற்கை பற்றிய வரலாற்றுப் பார்வை'' என்ற நூலிலிருந்து நான் தத்துவம்பற்றிய போக்டனோவின் எழுத்துக்

களைப் படித்து வருகிறேன்......1906-ம் ஆண்டு கோடை காலத்தில்......அவர் செல்லும் பாதை முற்றிலும் தவறான பாதை; மார்க்சியப் பாதையல்ல என்பது ஒன்றுமில்லாத அளவுக்கு எனக்குத் தெளிவாகி விட்டது அதன்பின் அன்பைப் பிரகடனப்படுத்தி அவருக்கு எழுதினேன். மூன்று குறிப்புப் புத்தகங்களைக் கொண்டு அவருக்குத் தத்துவம் பற்றி ஒரு கடிதம் எழுதினேன்...... அந்தச் சமயத்தில் அவற்றை நான் பிரசுரிக்கவில்லை. அதற்காக இப்பொழுது வருந்துகிறேன்'' [83]

இதிலிருந்து லெனின் திரும்பத்திரும்ப போக்டனோவின் தத்துவார்த்தக் கருத்துகளை விவாதங்களில் விமர்சித்தார். மார்க்சியச் சித்தாந்தத்தின் புனிதத்தைப் பாதுகாக்க, போராடவேண்டியதின் அவசியம் பற்றியும் கட்சியின் அரசியல் மற்றும் நடைமுறைக் கடமைகளில் இப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டிய அவசியம் பற்றியும் சுட்டிக் காட்டினார். இருந்த போதிலும் போக்டனோவ் தொடர்ந்து தனது கருத்துக்களைப் பரப்பி வந்தார். 1908-ம் ஆண்டு அவர் ''**மார்க்சியத் தத்துவத்தில் ஆய்வு**'' என்ற பிரசுரத்தைத் துவக்கி பல கட்டுரைகளை எழுதினார். [84] இந்த வெளியீடு லெனினை **பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்** என்ற நூலை எழுதத் தூண்டியது.''இப்பொழுது 'மார்க்சியத் தத்துவத்தில் ஆய்வு' பிரசுரிக்கப்பட்டு விட்டது. சுவோரோவின் கட்டுரையைத் தவிர மீதிக் கட்டுரைகளனைத்தையும் நான் படித்து விட்டேன் (இப்பொழுது அதைப் படித்துக் கொண்டிருக்கிறேன்) ஒவ்வொரு கட்டுரையும் என்னில் கோபத்தின் கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டன. இல்லை. இல்லை. இது மார்க்சியம் இல்லை! நமது அனுபவ விமர்சகர்கள், அனுபவ உற்று நோக்குவாதிகள் மற்றும் அனுபவக் குறியீட்டமர்வ்ாளர்கள் சேற்றில் சிக்கித் திணறுகிறார்கள்''.[85]

ஆரம்பத்தில் வரிசையான பல கட்டுரைகள் அல்லது ஒரு பிரசுரத்தின் மூலம் போக்டனோவின் சித்தாந்தத்தை

எதிர்க்க வேண்டுமென லெனின் எண்ணியிருந்தார்.[86] இயற்கை விஞ்ஞானம் பற்றிய கடைசியாக வந்த மேக்கிஸ்ட் படைப்புக்கள் அனைத்தையும் ஜெனிவா மற்றும் லண்டன் நூலகங்களில் அவர் முழுமையாகக் கற்றறிந்தார். 1908-ம் ஆண்டு மே மாதம் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் படிப்பதற்காக அவர் ஸ்விட்சர்லாந்தை விட்டு இங்கிலாந்துக்குப் பயணமானார். அவர் இருநூறுக்கும் மேற்பட்ட பல்வேறு ஆசிரியர்களின் நூல்களையும் கட்டுரைகளையும் படித்திருந்தார் என அவரது புத்தகத்திலிருந்த நூலக அனுமதிச் சீட்டுகளும் குறிப்புரைகளும் காட்டுகின்றன.

1909ம் ஆண்டு 'மே' மாதத்தில் லெனினது புத்தகம் வெளிவந்தது. கட்சியின் வாழ்க்கையிலும், மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியிலும் இது ஒரு வரலாற்று நிகழ்வாகும். எங்கெல்ஸ்க்குப்பின் முதன் முதலாக, இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் வளர்ச்சி பற்றி லெனின் ஒருமுறைப்படுத்தப்பட்ட பகுப்பாய்வை வழங்கினார். இதில் புதிய வரலாற்றுச் சூழல்களில் மார்க்சிய விஞ்ஞானத் தத்துவத்தின் முழு நிறைவான மகோன்னதத்தைக் காட்டினார். மார்க்சியப் பொருள் முதல் வாதத்தையும் அதன் புரட்சிகர இயக்கவியலையும் சிறுமைப் படுத்திச் சீரழிக்க விழைந்த முதலாளித்துவத் தத்துவஞானிகள் மற்றும் அவர்களது திருத்தல்வாதக் கூட்டாளிகளிலிருந்து கிளம்பிய எண்ணற்ற மார்க்ஸை விமர்சித்தவர்களால் பாட்டாளி வர்க்க இலட்சியத்திற்கு இழைக்கப்பட்ட தீங்கையும் காட்டினார்.

உள்ளபடியே தனது படைப்பில் லெனின் இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் அனைத்துத் தத்துவக் கூறுகளையும் வளர்த்துச் சென்றிருந்தார். பொருள், நின்று நிலவுதலில் அதன் வடிவங்கள் ஆகியவை பற்றிய மார்க்சின் போதனைகளது சாரம் மற்றும் முக்கியத்துவத்தை அவர் காட்டினார். மார்க்சியத் தத்துவத்தில் உள்ள பொருள் முதல் வாதம் மற்றும் இயக்கவியலின் ஒற்றுமை பற்றிப் பரிசீலித்

தார். பிரதிபலிப்பின் இயக்க—பொருள் முதல் சித்தாந்தத்தையும், மார்க்சிய அறிவாதார முறை இயலையும் விரிவாக ஆய்ந்து முறைப் படுத்தினார். நடை முறையை அடிப்படையாகக் கொண்டு மனித அறிவாற்றலின் தோற்றுவாய் மற்றும் கட்டளை விதியை ஆராய்ந்தார். உலகத்தின் தத்துவார்த்தச் சிந்தனை வளர்ச்சியின் பிரதானப் போக்குகளையும் குறிப்பிட்ட அவர் முதலாளித்துவத் தத்துவார்த்த ஆய்வுகள் மற்றும் திருத்தல்வாதம் பற்றிய மார்க்சியக் கணிப்பின் அடிப்படைக் கோட்பாடுகளையும் வகுத்துக் கொடுத்தார். இயற்கை விஞ்ஞானத்தில் அண்மைக் காலக் கண்டுபிடிப்புக்களிலிருந்து அவர் விஞ்ஞான ரீதியான தத்துவார்த்த முடிவுகளை எடுத்தார். பௌதீகத்தில் உள்ள நெருக்கடியின் சாரத்தைப் புலப்படுத்தி, இயற்கை விஞ்ஞானத்தில் ஒருவன் எங்ஙனம் வளரும் பொருளின் சட்டங்களையும், சத்தையும் புரிந்து கொள்வது எனக்காட்டி துவக்க நிலையிலிருந்த புரட்சியைக் கணித்தார்.

தத்துவத்தில் கட்சி சார்பு நிலையின் மார்க்சியக் கோட்பாட்டை லெனினது நூல் மேலும் வளர்த்து, மார்க்சியத்தைப் பற்றிய மேக்கிஸத் திறனாய்வுடன் தொடர்பு படுத்தி வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் அடிப்படையான பிரச்சினைகளைப் பொதுமைப் படுத்தியது. நெருங்கி வந்த புதிய புரட்சி முன்வைத்த சித்தாந்த மற்றும் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் அனைத்து மார்க்சிய சித்தாந்தத்துக்கு எதிரானவற்றையும் தோற்கடிக்கவுமான அதன் போராட்டத்தில் கட்சியை லெனினது புத்தகம் சித்தாந்த ரீதியில் ஆயுத பாணியாக்கியது. அதன் கருத்துக்கள் சித்தாந்த அடிப்படையை வழங்கின. அதைக் கொண்டு தொழிலாளி வர்க்கத்தின் அனைத்து முன்னேறிய உறுப்பினர்களும் புரட்சிகர அறிவாளிகளும் லெனினைச் சுற்றி அணி திரண்டனர்.

பல தலை முறைகளையும் சார்ந்த கம்யூனிஸ்டுகள் லெனினது படைப்பிலிருந்து மார்க்சியத் தத்துவத்தைக்

கற்றறிந்துள்ளனர். 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் மார்க்சியத் தத்துவத்தின் மெய்யான கலைக் களஞ்சியமாக இதுவே திகழ்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. காலத்தின் போக்கில் அதன் முக்கியத்துவம் வரைந்தோங்கி வருகிறது. அது என்றுமே குறையாது. மார்க்சிய-லெனினிய ஆய்வுமற்றும் நடைமுறையின் நவீனகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்புத்தகம் தொடர்ந்து புதிய நோக்குகளைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த நோக்குகள் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே லெனினால் அற்புதமான முறையில் தீர்க்கதரிசனமாக் காட்டப்பட்டவையாகும்.

லெனின் தனது நூலுக்கு அவரது புகழ்பெற்ற "ஒரு விரிவுரையாளருக்குப் பத்து கேள்விகள்" என்பதை முன்னுரையாக எழுதினார். 1908-ம் ஆண்டு வசந்த காலத்தில் லண்டனுக்குச் சென்றதும் அவர் இவற்றை இன்னோகென்ட்டி ட்யூப்ரோவின்ஸ்க்கு எழுதினார். அவர் போல்ஷ்விக் மையத்தின் ஒரு உறுப்பினர் என்ற முறையில், மே மாத இறுதியில் ஜெனிவாவில் போக்டனோவின் ஒரு உரையை ஒட்டிய விவாதத்தில் பேச வேண்டியிருந்தது. போக்டனோவ், பிளெக்கனோவ் (அதவாது-மார்க்சிய) பாசறையின் பொருள் முதல் வாதத்தை "அனுபவ உற்று நோக்கு வாதத்தைக்" கொண்டு மாற்றியமைக்க முயன்றார். இந்த மார்க்சிய எதிர்ப்புத் தந்திரத்தை எதிர்த்து லெனினால் நேரடியாகப பேச முடியவில்லை. எனவே அவருக்குப் பதிலாக ட்யூப்ரோவின்ஸைப் பேசச் சொன்னார்.

லெனினது "ஒரு விரிவுரையாளருக்குப் பத்துக் கேள்விகள்" அவரது எதிர் காலப்பணிக்கு ஒரு பூர்வாங்க வகையைச் சேர்ந்ததாகும். முதல் கேள்வி: "மார்க்சியத் தத்துவம் என்பது **இயக்கவியல் பொருளாதாரம்** தான் என்பதை விரிவுரையாளர் ஒப்புக் கொள்கிறார்"? [87] பின்னர் லெனின், தத்துவார்த்த அமைப்புக்கள் பொருள் முதல் வாதம், கருத்து முதல் வாதம் என இரண்டு கூறுகளாகப் பிரிந்திருப்பதை போக்டனோவ் அங்கீகரிக்கிறாரா? பொருள் முதல் வாதிக்கு

உலகத்தின் ஒற்றுமை அதன் பொருள் முதல் தன்மையில் உள்ளது; மனித உணர்வில் அறிவாற்றல் என்பது லோகாயுத உலகத்தின் பிரதிபலிப்பை அடிப்படையாகக் கொண்டது என்பதை ஒப்புக் கொள்கிறாரா? எனக்கேட்கிறார். அடுத்து வரும் கேள்விகள் இயக்கம், காரண காரியத்தொடர்பு, சட்டம் மற்றும் மார்க்சிய தத்துவத்தின் இதர வகைகளைப் பற்றியது. கடைசி மூன்று வினாக்களும் போக்டனோவின் கருத்துக்களுக்கும், மேக்கிஸத்துக்கு மிடையேயுள்ள தொடர்பு, மேக்கிஸம், இம்மேனன்டிஸ்ட் பிற்போக்குப் பாசறை மற்றும் தத்துவார்த்த மதவாதம் ஆகிய வற்றிற்கிடையேயுள்ள தொடர்பு ஆகியவற்றை போல்ஷ்விக் தத்துவத்தை முன்னிறுத்திக்காட்டும் போக்டனோவின் கூற்றுக்களது முழுமையான பொய்ம்மையைக் காட்டி, விளக்கம் தந்தன.

இவ்வாறாக லெனினது பூர்வாங்கக் குறிப்பு இயக்க வியல் பொருள் முதல்வாதத் தத்துவத்தின் பிரதான நிலைபாடுகளை, போக்டனோவ் மற்றும் அவரைப் பின் பற்றியவர்கள் முன்வைத்த அனுபவ ஒரு பொருள் வாதத் தோடு ஒப்பிட்டு வெளிப்படுத்தியது. அது இதர கருத்து முதல் வாதத் தத்துவச் சிந்தனைகளில் மேக்கிஸத்தின் இடத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டிய தோடு, மார்க்சியத்துக்கும், முதலாளித்துவத்திற்குமிடையே யான சித்தாந்தப் போராட்டத்தில் அதன் சமூக, கட்சிச் சாரத்தையும் எடுத்துக் காட்டியது. இறுதியாக அது போல்ஷ்விக் நடைமுறைகள் மார்க்சின் இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் கருங்கல் அடித்தளங்களை அடிப் படையாகக் கொண்டுள்ளதை எடுத்துக் காட்டியது.

"தங்களது இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்ற தத்துவார்த்தக்கருத்துக்கள் மூலம் மார்க்ஸும்—எங்கெல்ஸும் காலத்தை வென்று நின்றார்கள்"[88] என்று லெனின் எழுதினார். அவர்கள் கண்டு பிடித்த விஞ்ஞான சோஷலிசம் தெளிவாக இயக்கவியல் பொருள் முதல்வாதத் தத்துவத்தின் அஸ்திவாரங்களில் எழுந்து வளர்ச்சி பெற்றது; அது

எந்தவித ''போல்ஷ்விக் தத்துவத்தை'' யும் தேவையாகக் கொண்டிருக்கவில்லை என்பதே இதற்குப் பொருள். போக்டனோவ், கொண்டாடும் உரிமைகள் மெய்யான மார்க்சியத் தத்துவத்தின் இடத்தில், ஒரு கருத்து முதல்வாத முதலாளித்துவச் சித்தாந்தத்தை மாற்றி வைக்கும் முயற்சியே தவிர வேறொன்றுமில்லை என லெனின் காட்டினார். இந்தச் சித்தாந்தம் 19-ம் நூற்றாண்டின் கடைசியில் ஒரு பேராசிரியத்தத்துவம் என்ற ஆயுதக் கிடங்கிலிருந்து கடன் வாங்கப்பட்டதாகும்: இது மார்க்சியம் மற்றும் இயக்கவியல் பொருளாதாரத்தை எதிர்ப்பதில் விசேடப் பயிற்சி பெற்ற தாகும்.

''பிளெக்கனோவ் பாசறையின் பொருள் முதல் வாதம்'' என போக்டனோவால் அழைக்கப்பட்ட மார்க்சின் இயக்கவியல் பொருள் முதல் வாதம் உள்ளப்படியே ஒரு தனி முழுமையான போதனைதான்; அதை பிரத்தியேகமான அடையாளம் கண்டு கொள்ளும் பாகங்களாகப் பிரிக்க முடியாது'' என்று நிரூபித்துக் காட்டினார். ''இந்த மார்க்சியத் தத்துவத்திலிருந்து, ஒரே ஒரு தனியான எஃகிலிருந்து உருக்கப்பட்ட வார்ப்பிலிருந்து ஒரு அடிப்படையான முன் பகுதியை மட்டும் அகற்ற முடியாது; ஒரு முக்கிய உறுப்பை மட்டும் எடுக்க முடியாது; பிண்டப் பிரமாணமான உண்மையிலிருந்து ஓடிப்போகாமல், முதலாளித்துவ பிற்போக்குப் பொய்ம்மைத்தனத்திற்கு இரையாகாமல் இதை ஒன்றும் செய்ய முடியாது'' [89] என்றார் லெனின்.

இந்தத் தனியான ஒருங்கிணைந்த சித்தாந்தமான மார்க்சியம் மட்டுமே, பொருள் முதல் வாதக் கருத்தமைவுடன் கூடிய வரலாற்றையும், விஞ்ஞான சோஷலிசத்தையும் ஒரு உறுப்பு எனத் தன்னுடன் இணைத்துக் கொண்ட இயக்கவியல் பொருள் முதல் வாதத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள சித்தாந்தம் மட்டுமே புறவயப் பட்ட உலகம், மனித உணர்வில் அதன் பிரதிபலிப்பு ஆகிய

இரண்டின் வளர்ச்சியையும் தீர்மானிக்கக்கூடிய உண்மை யான சட்டங்கள் பற்றிய மெய்யான ஞானத்தைப் பாட்டாளி வர்க்கத்திற்கு வழங்க முடியும். எனவே புதிய கருத்தமைவுகளைக் கண்டு பிடிக்க வேண்டியது மார்க்சியத் தத்துவ ஞானிகளின் கடமையல்ல. ஆனால் அவர்கள் மார்க்ஸும் எங்கெல்ஸும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளுக்கு விட்டுச் சென்ற கருத்துக்களின் கருவூலத்தை முழுமையாகக் கற்றறிந்து அவற்றை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்தி ஒரு புதிய சமூக நடைமுறை மற்றும் விஞ்ஞானக் கண்ணுடன் இந்தக் கருத்துக்களை வளர்த்துச் செல்வதே போதுமானது. இவ்வாறாக லெனின், மார்க்சியத்தின் தலை சிறந்த இலக்கியச் சிறப்புமிக்க மரபைப் பயிலுமாறு கடமை வகுத்துக் கொடுத்தார். அவ்வாறு பயிலும்போது வறட்டுப் பிடிவாதத்தை கொள்ளாமல், மார்க்சியத்தின் சித்தாந்தப் பொக்கிஷத்தின் முழுமையான செழுமையையும் கிரஹித்துக் கொண்டு, அதை புரட்சிப் போராட்டத்தின் சித்தாந்தமும் நடைமுறையும் முன் வைக்கும் கடமைகளை நிறைவேற்ற ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். மார்க்ஸைப் பயில்வதின் பொருள், எதார்த்தத்தை விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்வதற்கு அவர் கண்டு பிடித்த தத்துவார்த்தப் பொருள் முதல்வாதம் மற்றும் இயக்கவியல் சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளினால் வழி நடத்தப்பட்டுச் செல்வதற்கு அவர் உருவாக்கிய மதிப்பிடற்கரிய வழிகளைக் கற்றறிவது என்பதே. ‘‘மார்க்சியச் சித்தாந்தத்தின் பாதையைப் பின்பற்றுவதின் மூலம் நாம் பிண்டப் பிரமாணமான உண்மையை மிகநெருங்கி வருகிறோம் (அதை வீணாக்காமல்) ஆனால் வேறு பாதையைப் பின்பற்றினாலோ நாம் எங்கும் போகப் போவதில்லை. குழப்பத்தையும் பொய் புனைசுருட்டுகளையும் மட்டுமே நெருங்கமுடியும்’’[90] என லெனின் வலியுறுத்திக் கூறினார்.

‘‘முன்னுரைக்குப் பதிலாக’’ என்று தலைப்பிட்டு அவர் எழுதிய அறிமுகப் பகுதியில் லெனின் அனுபவ வாதத்தின், அறிவாதார இயலின் மூலங்களைப் பிரித்துக் காட்டினார்.

'ஆங்கிலக் கருத்து முதல்வாதி ஜார்ஜ் பெர்க்லி 1710-ம் ஆண்டிலேயே அகவயப்பட்ட கருத்து முதல்வாதத்தின் அடிப் படை உண்மைகளை வகுத்துக் காட்டினார். மனித உணர்வு களும் அவற்றின் பொருட்களும் வெவ்வேறானதல்ல ஒரே ஒன்றுதான் என்பதை அது உறுதிப்படுத்தியது'' என்பதை அவர் காட்டினார். இது நேரடியாக ஆன்மீக நித்தியவாதத் திற்கு இட்டுச் சென்றது. அதாவது வெளியில் இயங்கும் புற வயப்பட்ட உலகத்தையும், மனித உணர்வின் சுதந்திரத் தையும் மறுப்பது ''வெளி உலகம் முழுவதுமே மனித உணர் வுகள் புலப்படுத்தியுள்ள ''உணர்வுகளின் கலவையே'' இது உலகத்தைச் சிருஷ்டித்த கடவுளினால் தரப்பட்டது'' என பெர்க்லி பிரகடனப்படுத்தினார்.

இவ்வாறாக 19-ம் நூற்றாண்டின் இறுதியில் முன்னேறிய தொழிலாளர்களிடமும்,முற்போக்கான அறிவு ஜீவிகளிடமும் மார்க்சியத் தத்துவம் மிகுந்த செல்வாக்குப் பெற்ற நேரத்தில் புதிய சிந்தனை என்று கருதப்பட்ட, அதன் 'ஸ்தாபகர் மேக்'கின் பெயரால் மேக்கிஸம் என்றழைக்கப்பட்டது கிளம்பியது. அது மனிதன் தனது உணர்வுக் கூறுகளின்பால் பட்டே இயங்குகிறான் என்றும் அதன் உள்ளடக்கம் அவனைச் சுற்றியுள்ள பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் நிகழ்வுகளினால் உருவாக்கப்பட்டது என்றும் உறுதிப் படுத்திக் கூறியது. உண்மையான உலகம் என்பது உணர்வு களின் சிக்கலாக மனித இனத்தினருக்கு மட்டுமே அவர்களது உணர்ச்சிகளில் வாழ்கிறது என மேக்கிஸம் பிரகடனப்படுத்து கிறது.

பெர்க்லி, மேக் ஆகியோரது பாசறைக் கருத்துக்களின் ஒருமிப்பை எடுத்துக் காட்டிய லெனின், தத்துவத்தில் புத்தம் புதிய கண்டு பிடிப்புக்களை நாடுகள்தான் கண்டுள்ளோம் என்று தம்பட்டமடித்த போக்டனோவ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் உண்மையில் பழைய கருத்து முதல்வாதி களின் அனைவரும் அறிந்த பொருள் முதல்வாத எதிர்ப்புத் திட்டங்களைத்தான் திரும்பச் சொல்கிறார்கள் என்பதை வலியுறுத்திக் காட்டினார்.

அனைத்துத் தத்துவங்களும், பொருள் முதல்வாதம்—கருத்து முதல் வாதம் என்ற இரண்டு பிரதான போக்குகளாக பிரிந்துள்ளதையும், அவை மிக அண்மைக் காலத் தத்துவத்துக்கும், பொருத்தமானதே என்பதையும் லெனின் நிரூபித்தார். மேக்கிஸ்டுகளும் அவர்களைத் தொடர்ந்து போக்டனோவ் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களும், கருத்துமுதல் மற்றும் பொருள்முதல் வாதத்திற்கு மேலானது என்று கூறிய மூன்றாவது வழி கருத்து முதல் வாதத்திற்கு பட்டுத் துணி போர்த்திய பரிவைத் தவிர மார்க்சியத்திற்குக் கிடைத்துள்ள அதிகரித்த அளவிலான சர்வதேச அந்தஸ்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு வழி என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

முதல் ருஷ்யப்புரட்சி தோல்வியடைந்ததும் பிற்போக்குச் சக்திகள் கொடிகட்டிப் பறந்த சூழலில் பல்வேறு கட்சி உறுப்பினர்களிடம் நம்பிக்கையிழப்பும் குழப்பமும் ஏற்பட்ட நேரத்தில் குறிப்பாக குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகளிடம் இந்நிலை ஏற்பட்ட நேரத்தில் போக்டனோவின் சித்தாந்தம் குறிப்பிடத்தக்க முறையில் தீங்கிழைக்கக்கூடியதாகவும் ஆபத்து நிறைந்ததாகவும் இருந்தது. எனவே லெனின் தத்துவார்த்தப்பொருள் முதல் வாதக் கோட்பாடுகளுக்கு ஒரு தர்க்கவியல் குறிப்புக் கொடுத்து அதற்குப் பதிலடி கொடுத்தார்.

தத்துவார்த்தப் பொருள் முதல் வாதத்தின் சத்தையும் சாரத்தையும் அவர் கீழ்க்கண்டவாறு வரையறை செய்தார்: இயற்கை விஞ்ஞானத்தின் முழு ஒப்புதலுடன் பொருள் முதல் வாதம் 'பொருளை' முதன்மையானதாக எடுத்துக் கொண்டு உணர்வு, சிந்தனை, உணர்ச்சிகள் ஆகியவற்றை இரண்டாவதாகவே எடுத்துக் கொள்கிறது."[91] லெனினது கருத்துப்படி உண்மையான உலகக் கண்ணோட்டத்திற்கு ஒரே வழி இயக்கவியல் பொருளாதாரம்தான் என்று ஒப்புக் கொள்வது சித்தாந்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினை மட்டுமல்லாது மனித நடவடிக்கைக்கு ஒரு அடிப்படையுமாகும். அதாவது அது

உலகத்தைப் புரட்சிகர நிலைபாடுகளில் புனரமைப்பதற்கு கட்சி மற்றும் தொழிலாளி வர்க்கம், அவர்களது போராட்டம் அவற்றின் தலைவிதியோடு நேரடியாகக் கவலை கொண்டுள்ள நடைமுறை அரசியல் பிரச்சினையாகும்.

இங்குதான் லெனின், 'பொருள்' ஒரு தத்துவார்த்த வகையைச் சேர்ந்தது என்ற புகழ் பெற்ற வரையறையைத் தருகிறார்: மனிதனுக்கு அவனது உணர்ச்சிக் கூறுகளால் தரப்பட்ட திண்ணிய எதார்த்தத்தை குறிப்பிடும் தத்துவார்த்த வகையைச் சேர்ந்ததே பொருள். அது நமது உணர்ச்சிகளில் சுதந்திரமாக இயங்குவதுடன நகல் எடுக்கப் பட்டு படம் எடுக்கப்பட்டுப் பிரதிபலிக்கப்படுகின்றன."[92] இந்த வரையறையின் ஆய்வியல் முக்கியத்துவம் மகத்தானது. உலகம் திட்பமான சட்டங்களுக்கேற்ப வாழ்ந்தால், மனிதன் இந்தச் சட்டங்களை அறிவாற்றலுடன் ஆய்ந்து தனது இலட்சிய ஈடேற்றத்துக்கான போராட்டத்தில் உணர்வு பூர்வ மாகப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டால் பின்னர் அவனால் நிறைவேற்றப்பட முடியாத கடமைகளே கிடையாது. எனவே தனி நபர்களது நடவடிக்கைகள், எல்லாவற்றிற்கும் மேலாக கட்சிகள், வர்க்கங்கள் போன்ற கழகங்களின் நடவடிக்கைகள், அறிவாற்றலையும், லோகாயுத உலகின் திண்ணிய சட்டங் களைப் பயன்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டால் அவை வெற்றிக்கனியைப் பறித்தேயாக வேண்டும். இந்தத் தத்துவக்கூறின் வரலாற்று ரீதியான நம்பிக்கை வாதம், இதர அனைத்து மார்க்சிய சித்தாந்தங்களைப் போலவே உழைக்கும் மக்களிடம் அவர்களது இலட்சியத்தின் இறுதி வெற்றியில் நம்பிக்கையை ஏற்படுத்தி சித்தாந்த விரோதிகளை எதிர்த்த போராட்டத்தில் அவர்களை அணி திரட்டுகிறது. இதற்கு நேர்மாறாக மேக்கிஸ்டுகளாலும், போக்டனோவைட்டு களாலும் போதிக்கப்பட்ட சித்தாந்தம் சுற்றியுள்ள உலகத் திற்கு எதிராக மனிதனைச் செயல்படுமாறு செய்வது, மக்களது ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பையும், செயல் பாட்டில் அவர்களுக்கிருக்கும் உறுதியையும் முன்னேற்றத் திற்கு விரோதிகளாயிருப்பவர்களை எதிர்த்துப் போராட

வேண்டும் என்ற அவர்களது தீர்மானத்தையும் பலவீனப் படுத்துமே தவிர வேறு எதையும் செய்யாது.

தத்துவார்த்தப் பொருள் முதல் வாதத்தின் சத்தையும் சாரத்தையும் புலப்படுத்தும் போது லெனின், இயக்கம், நேரம் மற்றும் பரப்பு ஆகியவற்றை பொருளுடன் ஒன்று படுத்தி இந்த வகைகளின் உள்ளடக்கத்தையும் நின்று நிலவு வதில் அவற்றின் வேறுபட்ட வடிவங்களையும் காட்டினார்.

''பிரதிபலிப்பு' பற்றிய லெனினது ஆய்வு இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் வளர்ச்சிக்கு ஒரு மகத்தான பங் களிப்பாகும். அதன் சுருக்கத்தை சுருக்கமாக அவர் கீழ்க் கண்டபடி வரையறுத்துள்ளார்: பொருள்கள் நமக்கு வெளியே உள்ளன. நமது புலன் உணர்வுகளும், கருத்துக்களும் அவற்றின் படிமங்களாகும். உண்மையான மற்றும் பொய்யான படிமங்களுக்கிடையேயுள்ள வித்தியாசத்தைக் காண்பதே இந்தப் படிமங்களைப் பற்றிய சரி பார்த்தல் ஆகும். இது நடைமுறையினால் தரப்பட்டது.''[93] வரலாற்று ரீதியான ஒரு வழி விலகல் போக்கு இங்கு பொருத்தமாகக் காணக் கிடைக்கிறது. 'பிரதிபலிப்பு'ச் சித்தாந்தத்தின் சத்தும் சாரமும் எங்கெல்ஸினால் அவரது '**இயற்கையின் இயக்கவியல்**' என்ற நூலில் வகுத்துத் தரப்பட்டது. இந்த நூற்றாண்டின்திருப்பத்தில்''எங்கெல்ஸின்கண்ணோட்டங்கள் காலாவதியாகிப் போனவை. பிரதிபலிப்பைப் பற்றிய அவரது கருத்தமைவு, மனித உணர்வுகளின் தன் செயலின்றி பிறர் செயலுக்காட்பட்ட வரம்பின்மைவாதமேயாகும். இந்த சித்தாந்தம் எதார்த்தத்தை அப்படியே சாத்வீகமாகப் பின் பற்றுவதாகும்'' என மேக்கிஸம் பிரகடனப்படுத்தியது. அந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் எங்கெல்ஸ் மற்றும் ஒட்டு மொத்தமாக மார்க்சியம், சாத்வீகமாகப் பிரதிபலிப்பதை விட உலகத்தைச் சுறுசுறுப்பாக மாற்றுவதையே மேற்கோள் காட்டுகிறது என எடுத்துக்காட்டி லெனின் இக் குற்றச் சாட்டுக்களுக்குப் பதிலடி கொடுத்தார். அவர் எழுதுகிறார்:''
''இயற்கையின் சட்டத்தை நாம் அறியாத வரை, அது நம்

மனத்தின் உள்ளும் புறமும் நின்று நிலவி சுதந்திரமாகச் செயல்பட்டு "குருட்டுத் தனமான" அவசியங்களுக்கு நம்மை அடிமைகளாக்குகிறது. ஆனால் இந்தச் சட்டத்தை நாம் தேர்ந்து தெளிந்து விட்டால்......நாம் இயற்கையின் எஜமானர்களாகி விடுகிறோம். இயற்கையைப் பற்றிய ஆழ்ந்த ஞானம் மனித நடைமுறையில் வெளிப்பாடு பெறுகிறது. இயற்கையின் பரிமாணங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிய மனித மூளைக்குள் பளிச்சிடும் புறவயப்பட்ட துல்லிய பிரதிபலிப்பின் விளைவே இது."[94]

இதன் அடிப்படையில் லெனின் மூன்று முக்கிய அறிவாதார முறையியல் முடிவுகளை வகுத்தளித்தார். முதலாவது: "பொருட்கள் நமது உணர்வுகளில் சுதந்திரமாக நிலவுகின்றன. நமது உணர்ச்சிகளில் நமக்கு வெளியே அவை சுதந்திரமாக நிலவுகின்றன." இரண்டாவது: 'பொருள் அதனில்' மற்றும் நிகழ்வுக்கிடையே கோட்பாட்டு ரீதியில் நிச்சயமாக எந்த வித்தியாசமும் கிடையாது. இருக்கவும் முடியாது. தெரிந்தது எது, இன்னும் தெரிய வேண்டியது எது என்பதற்கிடையேதான் ஒரே ஒரு வித்தியாசம் உள்ளது." மூன்றாவது:" விஷய ஞானம் பற்றிய சித்தாந்தத்தில்....நாம் இயக்கவியல் ரீதியில் சிந்திக்க வேண்டும். அதாவது நமது விஷய ஞானம் தயார் நிலையிலுள்ளது. அதை மாற்ற முடியாது என்று கருதக் கூடாது. ஆனால் அறியாமையிலிருந்து விஷய ஞானம் எங்ஙனம் முகிழ்க்கிறது. அரைகுறையான துல்லியமற்ற விஷய ஞானம் எங்ஙனம் மிக முழுமையான, மிகத் துல்லியமானதாக ஆகிறது என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்."[95]

பிரதிபலிப்பின் உண்மையான பரிமாணத்தைப் பகுப்பாய்வு செய்தே லெனின் இந்த நிலைபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டினார். மனித உணர்ச்சிகளுடன் பிரதிபலிப்பின் ஆரம்ப நடவடிக்கைகளை அவர் மிக மிகச் சாதாரணமாகத் துவக்கினார். "உணர்ச்சிகள் உள்ளபடியே உணர்வுகளுக்கும் வெளியுலகுக்கும் உள்ள நேரடித் தொடர்புதான். வெளிப்

புறத்தில் வெளிப்படும் சக்தி உணர்வுகளின் உண்மையாக மாறுவதே"[96] என்று அவர் எழுதினார்.

பிரதிபலிப்புச் சித்தாந்தத்தின் முக்கிய கோட்பாடுகளை வகுத்து லெனின் எழுதியதாவது; "விஷயம் நமது புலன் உணர்வு உறுப்புக்களில் செயல்பட்டு உணர்ச்சியை உருவாக்குகிறது. உணர்ச்சி மூளை, நரம்புகள், கண்விழி ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. அதாவது விஷயம் ஒரு குறிப்பிட்ட வழியில் ஒழுங்குபடுத்தப்படுகிறது. விஷயத்தின் நின்று நிலவும் தன்மை உணர்ச்சியைச் சார்ந்து இல்லை, விஷயம் மூலக்கூறாக இருக்கிறது. உணர்ச்சி, சிந்தனை. உணர்வு போன்றவை ஒரு குறிப்பிட்ட வழியில் ஒழுங்கு படுத்தப்பட்ட விஷயத்தின் உன்னதப் பொருட்களாகும்." [97]

இவ்வாறாக, பிரதிபலிப்பு புறவயப்பட்ட உலகம் பற்றிய மனிதனின் அறிவாற்றல் பரிணாமம் முழுவதையும் அடிப் படையாகக் கொண்டிருக்கிறது என்று லெனின் காட்டினார். புறவய உலகம் பற்றிய மனிதனது பிரதிபலிப்பின் இயல்பு, அதன் வளர்ச்சியின் அடிப்படை வடிவங்கள், இந்த வடிவங் களின் பரஸ்பர மாறுதல் ஆகியவற்றை மனித சமுதாயம் மற்றும் சுற்றியுள்ள இயற்கை ஆகியவற்றிற்கிடையே பின்னிய செயல் விளைவின் பரிணாமத்தில் மார்க்சியத் தத்துவார்த்த ஆய்வியல் வெளிபடுத்த வேண்டும்.

பிரதிபலிப்பின் பரிமாணம் விஷயத்தின் தன்னிச்சை இயக்கம்—இயற்பியல்—வேதியியல், உயிரியல் ஆகிய வற்றினால் எடுத்துக் கொள்ளப்பட்ட மூன்று முக்கிய வடிவங்களுக்கேற்ப மூன்று பிரதான வகைகளாக உபபிரிவு எனப் பிரிக்கப்படலாம். முதல் வகை, மிகப் பரவலானது; கனிப்பொருள் தோற்ற இயல்புக் குணமுடையது. இரண் டாவது வாழுகின்ற விஷயம் என்றக் கட்டத்தில் எழுகிறது. மூன்றாவது சமூக மட்டத்தில் தனிநபர் மற்றும் சமூக உணர்வில் புறவயப்பட்ட உலகின் பிரத்தியேகப் பிரதிபலிப் பாகத் தோன்றுகிறது.

இந்த மூன்று வகைகளுக்கும் பொதுவாக பிரதிபலிப்பின் ஒரு பொருளாகவும் பிரதிபலித்த மற்றும் பிரதிபலிக்கின்ற வற்றிற்கிடையே இயக்கவியல் பின்னிய செயல் விளைவுக் கோட்பாடகவும் லோகாயுத உலகம் இருக்கிறது என்று லெனின் கூறினார். அதே நேரத்தில் ஒவ்வொரு வகைப் பிரதிபலிப்பும் தனது பிரத்தியேக அம்சங்களைக் கொண் டிருக்கின்றன. சமயம் வரும் போது முழுமையான வரிசையின், பிரதிபலிப்பின் வெவ்வேறு வகைகளாக உப பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

உயிரற்ற, சடப்பொருளான இயல்பியல், பிரதிபலிப்பு பருப்பொருள் சார்ந்த உடம்புகளில் வளமாக அடங்கியுள்ள சக்தியின் மாற்றத்தோடு பிரிக்க முடியாதபடி பிணைக்கப் பட்டுள்ளது. உதாரணமாக ஒரு உடம்பு ஒளியையோ அல்லது ஒலி அலைகளையோ மேற்பரப்புக்கு வெளிப் படுத்தும் போது, ஒளியின் (வெளியாகின்ற) மூலத்தின் செறிவு மற்றும் இந்த மூலத்திற்கும் பிரதிபலிக்கும் மேற் பரப்புக்கும் (திரை) இடையேயுள்ள பின்னிய செயல் விளைவின் இயல்பு ஆகியவற்றைச் சார்ந்தது அந்த மேற் பரப்பிலிருந்து படங்கள் அல்லது அலைகள் பிரதிபலிக் கின்றன.

உயிரற்ற, சடப் பொருள் இயல்பில் ஒருவன் பிரதிபலிப் பின் மூன்று வகைகளுக்கிடையிலும் வேறு படுத்திப் பார்க்க வேண்டும்.

முதலில் எளிதிற் சினங் கொள்ளும் இயல்பு. இல்லை என்பதிலிருந்து கிடைக்கும் தகவலின் அடிப்படையில் உயிர் வாழ்வனவற்றின் நடத்தையைத் தீர்மானிப்பது. உதாரண மாக சாதாரணமான மிருகங்கள், தற்காப்பு மற்றும் உண வூட்டும் பிரதிபலிப்பு ஆகிய இரண்டு எதிர்ச் செயல்களைக் கொண்டுள்ளன. உயர்ந்த மட்டங்களில் எளிதிற்சினங் கொள்ளும் இயல்பு பல எதிர்ச் செயல்களின் மூலம் புலப் படுத்தப்படுகிறது. (தற்காப்பு; அபாயத்திலிருந்து காத்துக்

கொள்ள ஓடுதல்; தாக்குதல்; உணவூட்டும் பிரதிபலிப்பு; பால் ஈடுபாட்டுணர்வு; இன்னபிற)

உயிர் வாழ்தலில் இரண்டாவது வகைப் பிரதிபலிப்பு, பிறப்பு மூலம் பற்றிய தகவல். அதாவது தனி உயிரின் தோற்ற வரலாறு அம்சங்களில் கிடைத்த பல தலைமுறைகளின் ஒருங்கிணைப்பு இந்த நிகழ்வு சார்லஸ்டார்வின் கண்டு பிடித்த உயிரியல் வளர்ச்சிப் பரிணாமத்தில் (வளர்ச்சிப் பரிணாமத்தின் சட்டம்)இயற்கையான தேர்வின் சட்டத்தை அடிப்படையாக்கிக் காட்டுகிறது.

பிரதிபலிப்பின் மூன்றாவது வகை உயர்ந்தரக மிருகங்களில் காணப்படும் நிபந்தனைக்குட்பட்ட பிரதிபலிப்பு நடவடிக்கை. உயர்ந்தபட்ச நுட்பக்கூர் உணர்வுமிக்க நடவடிக்கையின் அளவில் பிரதிபலிப்பின் மூலக்கருக்கூறு. இது அவைகளது வாழ்க்கையின் தலையாய ஒழுங்கையும் உயர்ரக மிருகங்களின் சுய ஒழுங்கு முறையையும் தீர்மானிக்கிறது. இது பல நிபந்தனையற்றவைகளின் முகிழ்ச்சியைக் கொடுக்கிறது. (இனவிருத்திக்கான இடங்களைக் கட்டுவது, கூட்டாகத் தற்காப்பு மற்றும் தாக்குதல்களை ஒழுங்கு படுத்துவது குழந்தைப் பருவத்திலுள்ளனவற்றை வளர்ப்பது, உணவு; சூழ்நிலைகள், வாழ்க்கை போன்றவற்றில் தேர்ந்தெடுக்கும் தன்மை, இன்னபிற.)

பிரதிபலிப்பின் மிக உயர்ந்த வகை, மனித உணர்வின் அளவில், சமூகப் பரிமாணத்தில் காணக் கிடைக்கும் பிரதிபலிப்பே. கீழ்க்கண்ட வடிவங்களைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். (1) தனது நடத்தையையும், தனது நடவடிக்கைகளின் நோக்கங்களையும் தீர்மானிக்கிற தனி நபரின் பிரதிபலிப்பு. (2) கருத்தமைவுகளின் வடிவத்தில் உலகத்தின் பிரதிபலிப்பு. அதாவது ஒரு தனிமனிதப் பரிமாணத்தை விட சமூகப் பரிணாமமாகவிருக்கும் உலகத்தைப் பற்றிய விஞ்ஞான அறிவாற்றல். (3) படிமங்களில் உலகத்தைப் பற்றிய பிரதிபலிப்பு. அதவாது இலக்கியத்தில் கலையுணர்

வுடன் கூடிய மறுபதிப்பு மற்றும் வெளி உலகத்துடன் மனிதனது பின்னிய செயல் விளைவுத் திறனின் கலை. இதுவும் இயல்பில் சமூகமயமானதே. (4) சமூகப் பரிமாணங் களின் மேல் நிர்வகிப்பில் காணக்கிடைத்தபடி சமூக வாழ்க் கையில் பிரத்தியேக வளர்ச்சி மற்றும் முறைப்படுத்தல் தொடர்பாக மக்களுக்குத் தகவல் வழங்கும் ஸ்தாபன அம்சத்தில் பிரதிபலிப்பு (5) இறுதியாக சமூக வாழ்க்கைக்கு மட்டுமே பிரத்தியேகமான தொழில் நுட்ப மற்றும் எந்திரங் களின் வகைகளது தோற்றத்தின் பிரதிபலிப்பு. இது மக்கள் தாங்களாகவே பணித்துக் கொண்ட இலட்சியங்களின் ஈடேற்றத்தில் வரை முறையற்ற அளவுக்கு அதிகாரங்களை வழங்குகிறது.

பிரதிபலிப்பின் இந்த அனைத்து வகைகளும் சமூகப் பிரதிபலிப்பின் பொதுவான அம்சங்களால் ஒன்று படுகின்றன. உலகம் பற்றிய உணர்வு பூர்வமான நோக்கு, இரண்டாவது ''அறிவிப்பு அடையாளம்'' காட்டும் அமைப்பைப் பயன் படுத்துவது போன்றவை. அதாவது சொல்லும் சிந்தனையும்; இலட்சியத்தின் திசைவழி; பயனுள்ள பிரதிபலிக்கும் நட வடிக்கை; விஷயம் பற்றிச் சட்டங்களை அறிவாற்றலுடன் காணும் விழைவு மற்றும் அவற்றை உணர்வு பூர்வமாக நடைமுறைச் செயல் பாட்டில் பயன்படுத்துவது; இறுதியாக நடைமுறை மற்றும் அறிவாற்றலின் மெய்யான மனிதத்துவ நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும், அனைத்து வகை யான சமூக அநீதி, பலாத்காரம், இயற்கை மற்றும் சமூக உற்பாதங்கள் ஆகியவற்றை எதிர்த்தும் புரட்சிப் போராட்டம்.

உணர்வுக்குச் சொந்தமான அனைத்தும் உண்மையே என உறுதிப்படுத்தி, பிரதிபலிப்பின் இயக்கவியல் பொருள் முதல்வாதச் சித்தாந்தத்திற்கு மாறுபட்டு தனது அகவயப் பட்ட கருத்து முதல்வாதத் தத்துவங்களை முன்வைக்க மேக்கிஸம் முயன்றது. இவ்வாறாக உண்மைக்கும் புறவயப்

பட்ட உலகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு மௌன மாக கடத்தப்பட்டது அல்லது முற்றிலுமாக மறுக்கப் பட்டது. இந்த கருத்து முதல்வாத வியாக்கியானத்தை லெனின் தெட்டத் தெளிவான சூத்திரத்தின் மூலம் மறுத் தார். ''உணர்ச்சி என்பது புறவயப்பட்ட உலகத்தின் அகவயப்பட்ட படிமமே'' இவ்வாறாக அவர் எந்த உண்மை யையும் அதன் எதார்த்தமான புறவயப்பட்ட வாழ்வுடன் பிரிக்க முடியாதபடி தொடர்பு படுத்தினார். இந்த உண்மையை ஒத்திசைவுடன் கூடிய உணர்வு பிரதிபலிக்கிறது. அதாவது சரியான வழி. இந்தச் சரியான தன்மையின் கட்டளைவிதி மக்களின் சமூக நடைமுறையே இது, வெளி நிகழ்வு, அதன் பரிமாணங்களின் குறிப்பிட்ட வியாக் கியானம் சரியானதா, தவறானதா என்பதைக் காட்டுகிறது.

உண்மை பற்றிய இயக்கவியல் பொருள் முதல்வாத சித்தாந்தத்திற்கு லெனின் ஒரு முக்கிய பங்களிப்பை வழங்கி யுள்ளார். வெளிப்புறத்தில் நின்று நிலவி அறிவாற்றல் பொருளின் சுதந்திரமானதாகத் திகழும் புறவயப்பட்ட எதார்த்தத்தின் மனித உணர்வில் உண்மையே போதுமான பிரதிபலிப்பாகும் என்பதை அவர் காட்டினார்.

விஷயத்தின் மிக உயர்ந்த ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம் மனித மூளையே என லெனின் எழுதினார். புறவயப் பட்ட உலகை மூளை பிரதிபலிக்கின்ற வழிகள் அகவயப் பட்டவையாகும். ஏனென்றால் அவற்றின் விசேடமான இயல்பு கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளுடன் அவை மூளைக்கு விசித்திரமானவையாயிருக்கின்றன. எனினும் பிரதிபலிப்பின் உள்ளடக்கம் மக்களின் உறுதியையும் அல்லது விளைவையும் சார்ந்திருக்கவில்லையாதலால் அது புறவயப் பட்டதாகும். அதன் உள்ளடக்கத்தின் புறவயப்பட்ட இயல்பே லோகாயுத உலகத்தை அப்படியே அறிவாற்றலுடன் பார்ப் பதைச் சாத்தியப்படுத்துகிறது.

உண்மையைத் தேடும் அறிவாற்றல் இயல் மனித ஞானத்தை விரிவுபடுத்தும் ஒரு முடிவில்லாப் பரிணாமம்

ஆகும். அது அறிவாற்றல் ஆய்வில் இருக்கும் பொருள் பற்றிய துவக்க காலத் தகவலை அடிப்படையாகக் கொண்டு, வெளி உலகத்தோடு மனிதனின் பின்னிய செயல் விளைவுப் போக்கில் தொடர்ந்து வளர்ச்சி பெறுகிறது.

உண்மை பற்றிய மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தின் மையப் பிரச்சினைகளில் ஒன்று மெய்யான குணாம்சமாகும். இது போக உண்மை என்ற பிரச்சினை பூரணத்துவத்தின் இயக்கம் மற்றும் அறிவாற்றல் இயல் பரிமாணத்தின் உறவு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இறுதியாக உண்மை பற்றிய சித்தாந்தத்தின் முக்கியமான கூறு அதன் திண்ணிய இயல்பாகும்.

அகவயப்பட்ட மற்றும் புறவயப்பட்டவைகளின் இயக்க வியலை அதற்கப்பால் வெளியே பகுப்பாய்வதின் மூலம் உண்மையின் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியாது. மக்களின் சமுதாய உணர்வு முடிவற்ற பலதரப்பட்ட தனித்தனி உணர்வுகளால் உண்டாக்கப்பட்டதாகும். உண்மையின் புறவயப்பட்ட தன்மை தனித்தனியானவர் களின் உணர்வுகளிலிருந்து எழும் முடிவற்ற ஒட்டு மொத்த மான அகவயப்பட்ட உண்மைகளிலிருந்து அடியொற்றி வந்தது போல் தோன்றலாம். இந்தப் பிரச்சினையை கருத்து முதல்வாதத் தத்துவம் இந்த வழியில் தான் தீர்க்கிறது. ஆனால் கோட்பாட்டு ரீதியாக இந்த அணுகும் முறை தவறானதாகும்.

''புறவயப்பட்ட உண்மை மனிதக் கருத்தமைவுகள் மற்றும் எண்ணங்களின் உட்பொருள்; அது ஒரு பொருளைச் சார்ந்திருக்கவில்லை; ஒரு தனி மனிதனையோ அல்லது மனித குலத்தையோ சார்ந்திருக்கவில்லை''[98] என லெனின் வரையறுக்கிறார். இந்த வரையறை பொருள் முதல் வாதத்தின் அடிப்படையான முன் மொழிதலை, பிரதி பலிக்கப்பட்ட புறப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. அதாவது லோகாயுத உலகம் வெளிப்புற மற்றும் பிரதி

பலிக்கும் பொருளின் சுயேச்சைத் தன்மைக்கு முன்பாகவே வாழ்கிறது. இவ்வாறானால் உலகத்தைத் தெரிந்து கொள் வதற்கான தோற்றுவாய் உலகமாகத்தான் இருக்க முடியும். கருத்து முதல் வாதிகளோ "இயற்பியலின் மகா மகாப் பெரியதை" உள்ளுணர்வினால் அறியப்பட்டதை—வெளி உலகத்தைப் பிரதிபலிக்காத ஏதோ ஒன்று என வியாக்கியானம் செய்யப்பட்டதை—அறிவாற்றல் இயல் இது வரை எந்தப் பொருளையும் தவிர்க்கவில்லை என்பதை, தங் களுடையதாகக் கோருகிறார்கள். உண்மை பிண்டப் பிரமாணமான ஒன்றாகத்தான் இருக்க முடியும்; அவ்வாறில்லையென்றால் அது உண்மையே அல்ல.

உண்மையைப் பற்றிய அறிவாற்றல் இயல் ஒரு பரிமாண மாகும்.இதில் மனித அறிவு இயக்கவியல் ரீதியாக விரிவாக்கம் பெறுகிறது. அதாவது தொடர்ச்சி விருப்பத்திற்கே அறிவாற்றல் இயலையும், முடிவுள்ளது முடிவில்லாததின் மூலம், பொதுவானது குறிப்பிட்டதின் மூலமும் அறிவாற்றல் இயலைப் பெறுகின்றன. அப்படியானால் விருப்பமும், முடி வில்லாததும், குறிப்பிட்டதும் உண்மை. தொடர்ச்சி, முடி வுள்ளது போன்றவையும் உண்மையைப் பற்றிய அறிவாற்றல் இயலில் எதைப் பிரதிபலிக்கின்றன?

புறவயப்பட்ட உண்மையை அங்கீகரிப்பது என்பதின் பொருள் கோட்பாடு ரீதியாக முழுமையான உண்மையை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்துவது என்பதேயாகும். அதாவது உலகத்தைப் பற்றி ஆழ்ந்த ஞானத்தையும் முழுமை யான அறிவையும் பெறுவது என்பதாகும். ஆனால் உலகம் அப்படியே நிலைத்து நிற்பதில்லை. அது எப்பொழுதுமே வளர்ந்து கொண்டிருக்கிறது. மாற்றம் பெற்றுக் கொண் டிருக்கிறது. எனவே புறவயப்பட்ட உண்மைகள் வளரும் போது அதன் அத்தனை வகைகளையும் அறிந்து கொள் வதற்கான அடிப்படை சாத்தியத்தை அங்கீகரிக்கும் அதே நேரத்தில் தத்துவார்த்தப் பொருள் முதல்வாதம், பிண்டப் பிரமாணமான உண்மையை அறிவாற்றல் இயலுக்கு

உட்படுத்துவது ஒரு முடிவில்லாத ப ரி ண ா ம ம், அவ் வுண்மையின்பால் அடிக்கடி காட்டப்படும் ஒத்த தன்மை என்றும் கருதுகிறது. அதே சமயத்தில் இது தொடர்ச்சியின் ஒரு மூலத்தையும் தன்னுட் கொண்டதாகும்.

இந்தப் பரிமாணம் அறிவாற்றல் இயல் தொடர்பான உண்மைகளின் முடிவில்லாத மொத்தத் தன்மையையும் கொண்டதாகும். லெனின் எழுதுகிறார்: மனித சிந்தனை பிண்டப் பிரமாணமான உண்மையை வழங்கும் திறமை படைத்தது. இது தொடர்பான பல உண்மைகளின் கூட்டு மொத்தமாகும். விஞ்ஞான வளர்ச்சியின் ஒவ்வொரு அடியும் பிண்டப் பிரமாணமான உண்மையின் கூட்டுக்கு புதிய மணத்தைத் தருகிறது. ஆனால் ஒவ்வொரு விஞ்ஞான முன் மொழிதலிலும் உண்மையின் வரைமுறைகள் தொடர் புள்ளவை. இப்பொழுது விரிவடைகின்றன. அறிவு வளர்ச்சி யோடு இப்பொழுது சுருங்கிக் கொள்கின்றன.''[99] எனவே புறவயப்பட்ட உண்மையில் பிண்டப் பிரமாணமானதும், தொடர்பானதும் ஒன்றாக இணைந்து கொள்கின்றன. இயக்கவியல் பொருள் முதல்வாத நிலைபாட்டிலிருந்து, பிண்டப் பிரமாணமான உ ண் மை யி ன் பா ல் நமது அறிவாற்றலது ஒத்த தன்மையின் வரையறைகள், வரலாற்று ரீதியாக நிபந்தனைக்குட்பட்டதும் தொடர்புடையதானது மாகும். ஆனால் பிண்டப் பிரமாணமான உண்மையின் அறிவாற்றல் இயலில் அடிக்கடி காணக் கிடைக்கும் சாத்தியப் பாடு புறவயப்பட்டதாகும். ஒவ்வொரு தொடர்பும், பகுதி யானதும் அல்லது ஒரு பக்கமான உண்மையும் பிண்டப் பிரமாணமான உண்மையின் ஒரு பாகத்தை ஒரு மணத்தை அல்லது ஒரு வேட்டத்தை உள்ளடக்கியதாகும்.

‘‘பொருள் முதல்வாத இயக்கவியல் நிச்சயமாக தொடர்புநிலையை உள்ளடக்கியதுதான். ஆனால்‘தொடர்பு நிலை’யானது என அதைச் சுருக்கிவிட முடியாது. நமது அறிவாற்றல் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர் புடையவை என்பதை அது அங்கீகரிக்கிறது. பிண்டப்

பிரமாணமான உண்மையை மறுக்கிறது என்ற பொருளில் அல்ல; ஆனால் இந்த உண்மைக்கு நமது அறிவாற்றலின் ஒத்த தன்மையின் வரையறைகள் வரலாற்று ரீதியாக நிபந்தனைக்குட்பட்டவை"[100] என மார்க்ஸும், எங்கெல்ஸும், லெனினுக்கு எழுதினார்கள்.

அறியொணாமை வாதத்தைப் போலல்லாமல், நமது உணர்ச்சிகள், புலன் உணர்வுகள் மற்றும் பிரதிபலிப்பின் இதர வடிவங்கள் நமக்கு உலகம் பற்றி போதிய அளவிலான, உண்மையான சித்திரத்தை வழங்கியுள்ளன என்று மார்க்சியம் போதிப்பதாக லெனின் கூறினார். இதன் பொருள், புறவயப்பட்ட பொருள் மற்றும் நிகழ்வுகளின் மனித உணர்வின் பிரதிபலிப்பில் வைக்கப்படும் ஒவ்வொரு அடியும் லோகாயுத உலகத்தை ஆய்ந்து அறிதலில் ஒரு அடி முன் வைக்கப்படுவது என்பதேயாகும். இத்தகைய ஒவ்வொரு அடியும், அரைகுறையான, வரையறைக்குட்பட்ட ஞானத்தையே வழங்குகிறது—தொடர்புடைய உண்மை. ஆனால் அவற்றின் கூட்டு மொத்தத்தில் இந்தத் தொடர்புடைய உண்மைகள் பிண்டப் பிரமாண உண்மையின் அறிவாற்றல் இயலுக்கு மனிதகுலத்தை அதிகரித்த அளவில் நெருக்கமாக்கிக் கொண்டு வருகின்றன.

பிண்டப் பிரமாணமான மற்றும் தொடர்புடைய உண்மைகளின் இயக்கவியல் இரண்டு முக்கிய நோக்குகளைக் கொண்டிருக்கிறது என லெனின் காட்டினார். முதலாவதாக பிரதிபலிப்பின் இயக்கவியலை அங்கீகரிப்பது மனிதனுக்கு அவனது நடவடிக்கைகளில் எழும் எந்த அறிவாற்றல் இயல் தொடர்பான கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு அவன் தகுதி படைத்தவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. இரண்டாவது அறிவாற்றல் இயலில் ஒவ்வொரு தனித்தனி அடியெடுத்து வைத்தலும் மற்றொன்றுடன் தொடர்பு கொண்டது, அது பிண்டப் பிரமாணமான உண்மையை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்தும் போது நம்மை மிக

நெருக்கமாகக் கொண்டு வருகிறது என பிரதிபலிப்புச் சித்தாந்தம் காட்டுகிறது.

நமது ஞானத்தில் தொடர்பியலின் இந்தமூலக்கூறு பற்றி லெனின் விசேடமாக வலியுறுத்தினார்.'' இயக்கவியல்— அவரது காலத்தில் ஹெகல் விளக்கியது போல்—மறுப்பு வாதம்; ஐயுறவு வாதம், தொடர்பு வாதம் ஆகியவற்றின் ஒரு மூலக்கூறைக் **கொண்டது**, ஆனால் தொடர்பு வாதத்திற்கு தன்னைச் **சுருக்கிக் கொள்ளாதது**'' என அவர் எழுதினார்.[101]

'புறவயப்பட்ட உண்மை' என்ற மற்றொரு கருத்தமைவையும் லெனின் அறிமுகப்படுத்துகிறார். இதன் சத்தும் சாரமும் நமது கருத்தமைவுகள் மற்றும் எண்ணங்களின் ஒரு பொருளே; அது மனிதனையோ அல்லது மனித குலத்தையோ சார்ந்திருக்கவில்லை என அவர் வரையறுக்கிறார். எனவே அவர் மற்றொரு முக்கியமான முடிவுக்கு வருகிறார்: நமது உணர்வில் துல்லியமாகப் பிரதிபலிக்கும் புறவயப்பட்ட உலகத்தைப் பற்றிய அங்கீகாரம், புறவயப்பட்ட உண்மையை நமக்கு வழங்குகிறது. மக்களது உணர்வில் இந்த உலகத்தைப் பற்றிய பிரதிபலிப்பின் சட்டங்கள், புறவயப்பட்ட உலகில் அதற்குள்ளேயே ஆதிக்கம் வகுக்கும் சட்டங்களிலிருந்து எந்த வகையிலும் வேறுபட்டதாகாது.

இந்த ஷரத்தை மெய்ப்பிப்பதற்கு லெனின் சமுதாய நடைமுறையே நமது ஞானத்தின் உண்மைக்கு, உண்மையான கட்டளை விதியாகும் என்ற ஒரு தொலை நோக்கு வர்ணனையைத் தந்துள்ளார். ''பொருள் முதல் வாதிக்கு மனித நடைமுறையின் 'வெற்றி' நமது கருத்துக்களுக்கும், நாம் காண்கின்ற பொருட்களின் புறவயப்பட்ட இயல்புக்கும் இடையிலுள்ள தொடர்பை நிரூபிக்கிறது நாம் அறிவாற்றல் சித்தாந்தத்தின் அடிப்படையில் நடைமுறையின் கட்டளை விதியைச் சேர்த்துக் கொண்டால் தவிர்க்க முடியாதபடி நாம் பொருள் முதல் வாதத்திற்கு வந்து சேர்வோம்''.[102]

மார்க்சியத்தின் பொதுவான தத்துவார்த்தப் பிரச்சினைகள் மற்றும் பிரதிபலிப்பைப் பற்றிய மார்க்சியச் சித்தாந்தம் ஆகியவை பற்றிய லெனினது பகுப்பாய்வு கணிசமான அளவு இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் சித்தாந்தப் படைக்கலத்தைச் செழுமைப்படுத்தியது.

இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் தத்துவத்தில் மேக்கிஸத்தின் இடத்தையும் பாத்திரத்தையும் விமர்சித்த லெனின் மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சிக்கான வழிகள் பற்றிப் பரிசீலித்தார். அவ்வாறு செய்யும் போது அதன் சாத்தியங்கள் பற்றியும் கவனம் செலுத்தினார்." இயற்கை, சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று நாம் கோருகிறோம். முதலாளித்துவமோ பிற்போக்குச் சக்தியை அதன் பேராசிரியர்களாகக் கோருகிறது" [103] என அவர் எழுதினார். தலை சிறந்த ஜெர்மானியத் தத்துவத்தில் அனைத்துப் பொருள் முதல்வாதிகளும் பியூவர் பேக்கிலிருந்து, மார்க்ஸ்—எங்கெல்ஸ் வரை, அனைத்துக் கருத்து முதல் வாதம் மற்றும் அறியொணாமை வாதங்களை முற்றாக நிராகரிப்பதில் தொடங்கும் இந்தத் தத்துவத்தின் ஸ்தாபகரான 'கேண்டி' ன் பாதையிலிருந்து இடது புறமாகச் சென்றனர் என்பதை லெனின் எடுத்துக் காட்டினார். இருந்த போதிலும் மேக்கிஸமும் இரண்டாவது அகிலத்தில் அதனுடன் நட்புக் கொண்டிருந்த அனைத்தும் கருத்து முதல் வாதத்தையே பின்பற்றின. "அனுபவ விமர்சனம் எந்தத்திசை வழியில் வளர்ச்சி பெறுகிறது?" என்ற பகுதியில் பிடெயிஸத்தோடு நேரடியாகப் பின்னிப் பிணைந்துள்ள ஏராளமான பிற்போக்குப் பாசறைகளின் கருத்துமுதல் வாதத்துடன் 'மேக்' கின் கருத்துக்கள் ஒத்துப்போவதை லெனின் மறுக்க முடியாதபடி நிருபணம் செய்தார்.

மார்க்சின் இயக்கவியல் சித்தாந்தத்தை உறுதியாக ஆதரித்து வளர்த்ததில்தான் லெனினது புத்தகத்தின் தலையாய மதிப்பு உள்ளது. ருஷ்ய மேக்கிஸ்டுகளை "சமகாலத்

தத்துவஞானிகளில் இழிதகையாளர்கள். ஹெகலைச் சிதைத்துச் சீரழிந்து விட்டோம் என அவர்கள் கனவு கண்டனர். ஆனால் உண்மையில் ஹெகலியத் தத்துவங்களுக்கு முன்னால் 'கேண்ட்' டும், ஹ்யூமும் செய்த தவறுகளையே இவர்களும் திரும்பச் செய்வதில் பின்னுக்குச் சென்றனர்'' [104] லெனின் அழைத்தார். இந்தச் சூழலில் அவர் பிளெக்கனோவ் செய்த ஏராளமான தவறுகளையும் எடுத்துக் காட்டினார். மேக்கிஸத்துக்கு எதிராக போதுமான உறுதியுடனும் துல்லியமாகவும் பிளெக்கனோவ் இயக்கவியல் பொருள் முதல் வாதப்பதாகையைத் தூக்கிப் பிடிக்கவில்லை. குறிப்பிட்டுக்காட்டும் படியாக விஷயஞானத்தின் லோகாயுத ஆய்வை விளங்கும்போது பிளெக்கனோவ், அனுபவம், உண்மையில் அதை நடைமுறையுடன் அடையாளம் காண்பது போன்றவற்றின் மேக்கின் கருத்தமைவைச் சரியாக வியாக்கியானம் செய்யவில்லை. இதற்கிடையில் மேக்கிஸ்டுகள் இந்தக் கருத்தமைவை மனிதனின் தன் வயப்பட்ட உணர்ச்சிகளின் அளவைக் குறிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தினர். அதாவது அவர்கள், சுற்றியுள்ள உலகத்தின் மக்களின் உண்மையான, பின்னிய செயல் விளைவுகளிலிருந்து, முழுமையாக அனுபவத்தை விளக்கினர். அதே போல் உணர்ச்சிகளின் உள்ளடக்கத்தைக் குறிப்பிடும் போது பிளெக்கனோவ் உணர்ச்சிகளின் உள்ளடக்கமும் புலன் உணர்வுகளும் அவற்றில் பிரதிபலிப்பதுடன் ஒத்துப் போவதில்லை என்ற கருத்தமைவைக் கொண்டிருந்த மறைபொருட் குறியீட்டுச் சித்தாந்தத்துக்கு தவறான வியாக்கியானமளித்தார். பிளெக்கனோவ் மற்றும் சில மார்க்சியவாதிகளின் சிந்தனையில் காணக்கிடைத்த துல்லியமற்ற தன்மையைப் புலப்படுத்திய லெனின் மார்க்சியத்திற்கு விரோதமான சித்தாந்தங்களை சீர்தூக்கி மதிக்கும் போது, தேர்ந்த தெளிவு மற்றும் துல்லியத் தன்மையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

மேக்கிஸ்டுகளின் தலையாய நோக்கங்களில் ஒன்று இயற்கை விஞ்ஞானத்தின் இன்றைய அற்புதங்களை

தங்களது சொந்த சித்தாந்த நிலைபாட்டை மெய்ப்பிப் பதற்குப் பயன்படுத்துவதாகும். ''இயற்கை விஞ்ஞானத்தில் சமீபத்தியப் புரட்சியும் தத்துவார்த்தக் கருத்து முதல் வாதமும்'' என்ற அத்தியாயத்தில் லெனின் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்தார். அதில் அவர் மிகவும் சிக்கலான கருத்தமைவுகளை, இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் இயற் பியலில் ஏற்பட்ட நெருக்கடி, இந்த நெருக்கடியின் விளை வினால் எழுந்த இயற்பொருள் சார்ந்த கருத்து முதல் வாதம், மற்றும் இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்ட புரட்சி போன்றவைகளை வரையறுத்தார்.

19-ம் நூற்றாண்டின் இறுதியில் உலகத்தைப் பற்றிய இயற்பியல் சித்திரத்தை அறிவாற்றல் இயலுக்கு உட் படுத்தும் போது ஒரு நிலையான சக்திச் சமநிலை தோன்றியது. அனைத்து இயற்பியல் பரிமாணங்களும் சிறப் பியல்புடன் கூடிய இயற்பியல் சித்தாந்தத்துடன் தெளிவாகப் பொருந்துவதுபோல் தோன்றியது. பேராசிரியர்கள், அனைவருமே அதில் தெளிவாக இருப்பது போல் தோன்று கிறது; எப்பொழுதும் அவ்வாறே இருக்கும் என்ற அந்த இயற்பியலில் விசேட ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அடிக்கடி அறிவுறுத்தவில்லை.

எனினும் மேக மூட்டமே இல்லாதது போல் தோன்றிய வானத்தில் இரண்டு சிறிய மேகங்கள் தோன்றின. இவற்றில் ஒன்று சிறப்பியல் கருத்தமைவுகளின் படி ஒளி, வான வெளியின் வழியாக மேக மண்டலத்திற்கு அப்பாற்பட்ட விண்வெளிக்கு அனுப்பப்படுகிறது. தொடர்ந்து வேகங்களின் கூட்டமைவில் ஒலியின் வேகம் காற்றில் வெளிப்படுத்தப் படுவதால் அதே சட்டங்களுக்குக் கட்டுப்படுகிறது. இதை நிருபிப்பதற்காக 1881-ல் மிக்கெல்ஸன் ஒரு நேரடிப் பரி சோதனை நடத்தினார். 1887-ல் மோர்லியுடன் சேர்ந்து இதே பரிசோதனையை மேற்கொண்டார். இந்தப் பரி சோதனையில் பூமியின் அப்போதைய இயக்கத்திற்கு ஒரு திரையில் ஒளிக்கிரணம் இணையாகவோ அல்லது செங்குத்

தாகவோ விழுந்து, மேக மண்டலத்திற்கு அப்பாற்பட்ட விண்வெளி ஆய்வு மற்றும் வேகங்களின் கூட்டமைவுச் சட்டத்திற்கேற்ப அதிகமாகிறது அல்லது மங்குகிறது. இருந்தாலும் இப்படி நிகழ்வதில்லை. பயனற்ற விளைவு ஒரே ஒரு பொருளினால் மட்டுமே விளக்கப்பட முடியும். அதாவது மேக மண்டலத்திற்கு அப்பால் விண்வெளி உண்டு என்பது மெய்ம்மைக் கோளின்படி சரியில்லை என்பதே. எனினும் விண்வெளியை நிராகரித்துவிட்டு ஒளியின் வேகம் அடிக்கடி விரைந்தோடுகிறது என்பதை அங்கீகரிப்பது, சிறப்பான இயற்பியல் கருத்துக்களுக்கு மாறுபட்டதாகும். அதன் அடித்தளங்களை அழித்தொழிப்பதாகும்.

மற்றொரு மேகம் என்பது 19-ம் நூற்றாண்டின் இறுதியில் கண்டு பிடிக்கப்பட்டதாகும். கதிரியக்கம், எக்ஸ் ரேக்கள், குறிப்பாக அணுவின் ஒரு பகுதியான மின்னணு போன்றவை. மேலும் அது ஆவியாகி விடுகிறது. அதாவது மின்னணுவின் அணுத்திரள் அதன் வேகத்தைச் சார்ந்து மாறுதலுக்குட்பட்டதாகும். கதிரியக்கத்தின் நின்று நிலவும் தன்மை அணுவின் உள்ளே அளப்பரிய சக்தி மண்டி மறைந்து கிடக்கிறது என்ற ஊகத்திற்கு ஆதாரங்களைத் தருகிறது.

இந்தக் கண்டு பிடிப்புக்களை, விஷயத்தின் ''மறைவு'' என கருத்து முதல் வாதிகள் வியாக்கியானம் செய்தனர். ஆரம்பத்தில் இதன் அடிப்படை பிரிக்க முடியாத அணுக்கள் என்றும் மேகமண்டலத்திற்கு அப்பாற்பட்ட விண்வெளி என்றும் வருணிக்கப்பட்டது. லெனின் இந்தக் கண்டு பிடிப்புக்களை வித்தியாசமான ஒளியில் வளர்த்துச் சென்றார். ''நவீன இயற்பியலில் உள்ள நெருக்கடியின் சத்தும் சாரமும் பழைய சட்டங்கள் மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள் சிதைந்து சின்னா பின்னாப் படுவதில் அடங்கியிருக்கிறது'' என அவர் எழுதினார்.[105]

விஷயம் பற்றிய நமது ஞானத்தின் இந்த விரிவாக்கம் 20-ம் நூற்றாண்டின் விஞ்ஞானத்தில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்திற்கு இட்டுச் சென்றது.

இயற்பியலில், அண்மைக் காலத்திய கண்டு பிடிப்புக்கள் பற்றி லெனின் ஒரு சரளமான தத்துவார்த்தப் பொருள் முதல்வாத வியாக்கியானத்தை வழங்கியிருந்தார். ''விஷயம் மறைந்து விடுகிறது என்பதன் பொருள் நாம் இதுகாறும், விஷயத்தின் மறைவு பற்றித் தெரிந்துள்ளதின் வரை யறையும் நமது ஞானமும் மிக ஆழமாக ஊடுருவுகிறது... விஷயத்தின் ஏக 'பண்பு' அதன் தத்துவார்த்தப் பொருள் முதல்வாத அங்கீகரிப்புடன் பிணைக்கப்பட்டு மனத்திற்கு வெளியே நிலவும் புறவயப்பட்ட எதார்த்தத்தின் பண்பா கிறது''[106] என எழுதினார்.

இயற்பியலின் அண்மைக்கால கண்டுபிடிப்புக்களின் சாரம் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றிய லெனினது நிலைபாடுகள், முன்னேறிய இயற்கை விஞ்ஞானங்களுடன் நெருங்கிய தொடர்போடு மார்க்சியத் தத்துவத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு மகத்தான ஆய்வியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இங்கு இயற்பியலினால் பெறப்பட்ட (அல்லது வேறு எந்த விசேட விஞ்ஞானங் களினாலும்) புதிய புள்ளி விவரங்கள் விஞ்ஞானிகள் இயக்க வியல் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ளல், பின் அதை அவர்களது கண்டுபிடிப்புக்களின் நோக்கங்களுக்குப் பயன் படுத்துதல் என்ற அவசரக் கடமையை எதிர் நோக்கச் செய்ததின் மூலம் லெனினது ஆய்வியல் விசேட முக்கியத் துவத்தைப் பெறுகிறது.

''நவீன விஞ்ஞானம் பிரசவ வேதனையிலுள்ளது. அது இயக்கவியல் பொருள் முதல்வாதத்தைப் பெற்றெடுத் துள்ளது''[107] என லெனின் எழுதினார். ''இயற்பியல் கருத்து முதல்வாதம்.... துல்லியமாக நேற்றைய உடற்கூறு கருத்து முதல்வாதத்தைப் போன்றே இயற்கை விஞ்ஞானிகளின் இயற்கை விஞ்ஞானத்தின் ஒரு கிளை பற்றிய சிந்தனை பிற் போக்குத் தத்துவத்தின் பக்கம் சாய்ந்து உடனடியாக வறட்டுக் கோட்பாட்டுப் பொருள் முதல் வாதத்திலிருந்து,

இயக்கவியல் பொருள் முதல்வாதத்திற்கு நேரடியாக எழ முடியாமையை மட்டுமே புலப்படுத்துகிறது.''[108]

உலகத்தை மேலும் அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்த ஒரு மெய்யான விஞ்ஞான வழியை, இயக்கவியல் பொருள் முதல்வாதத் தத்துவத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப் பட்டுள்ள வழியை லெனின் ஸ்தூலமாகக் காட்டினார். ''மின்னணு, அணுவைப் போன்றே அள்ள அள்ளக் குறை யாதது''[109] என்றார் அவர். தொடர்ந்து முகிழ்த்த அணு விஞ்ஞானமும் பின்னர் அணு தொடர்பான இயற்பியலும் இந்தப் புலமை சான்ற ஆருடத்தை அற்புதமான முறையில் உறுதிப்படுத்தின. 20-ம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானிகளான பால்லாங்கிவின், பிரெடரிக் ஜோலியோ க்யூரி, ஸெர்ஜி வாவிலோவ், ஜாண் பெர்னால், ப்ரூனோ போண்டிகோர்வோ ஆகியோரும் மற்றவர்களும் மார்க்சிய லெனினிய ஆய்வு மற்றும் தத்துவத்தின் பயனுள்ள தாக்கம் பற்றி பலமுறை குறிப்பிட்டனர். இவை அவர்களது அறிவாற்றல் துறையில் மகத்தான பல கண்டுபிடிப்புக்களை சாத்தியமாக்கின.

இறுதியாக, அவரது **பொருள் முதல்வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்** என்ற நூலில் லெனின் ருஷ்ய மேக்கிஸ்டுகள் பற்றிய அவரது விமர்சனத்தைத் தொடர்பு படுத்தி வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் பல அடிப் படையான பிரச்சினைகளை முன் வைத்தார். இந்தப் பிரச்சினைகளில் மையமாகத் திகழ்ந்தது. தத்துவத்தில் கட்சி சார்பு நிலையின் மார்க்சியக் கோட்பாட்டை வளர்த்து மெய்ம்மைப் படுத்தியதாகும். மேக்கிஸ்டுகள் தத்துவத்தில் ஒரு மூன்றாவது வழி பற்றிப் பிரலாபித்தனர். அது பொருள் முதல்வாதத்திற்கும் கருத்து முதல்வாதத்திற்குமிடையேயான போராட்டத்தில் மேலாக நிற்கும் ஒன்றென அவர்களால் கருதப்பட்டது. இந்த அவர்களது கோரிக்கைகள் எல்லாம் உள்ளபடியே மிகப் பிற்போக்குக் கருத்துக்களையும் இந்தத் தத்துவத்தின் கருத்து முதல்வாத வறட்டுக் கோட்பாட்டு

நிலைகளையும் திரை மறைவில் கொண்டு வருவதற்கே பயன் பட்டன என லெனின் எடுத்துக் காட்டினார். "மார்க்ஸும், எங்கெல்ஸும் துவக்கம்முதல் இறுதிவரை தத்துவத்தில் ஒரு கட்சி சார்பானவர்களே; பொருள் முதல் வாதத்திலிருந்து சமீபத்திய ஒவ்வொரு போக்குகளிலும் கருத்து முதல் வாதம் மற்றும் மதவாதங்களுக்குச் சலுகைகள் வழங்கும் திசை தடு மாற்றங்களை அவர்களால் கண்டு பிடிக்க முடிந்தது"[110] என்பதை லெனின் வலியுறுத்திக் காட்டினார். சம காலத்தில் வாழ்ந்த கருத்து முதல் வாதிகளைப் பற்றிக் குறிப்பிட்டு லெனின் கூறியதாவது: அனுபவ விமர்சனத்தின் அறிவாற்றல் இயலின் புலமைக்குப் பின்னால் தத்துவத்தின் பால் பட்டு கட்சிகள் நடத்தும் போராட்டத்தைப் பார்க்கத் தவறக் கூடாது. கடைசிப் பகுப்பாய்வில் இந்தப் போராட்டம் நவீன சமுதாயத்தில் பகைமையுடன் கூடிய வர்க்கங்களது மனப் போக்குகளையும் சித்தாந்தத்தையும் பிரதிபலிக்கிறது. இன்றையத் தத்துவமும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தத்துவத்தைப் போன்று கட்சி சார்பாக உள்ளது."[111]

லெனினது "**பொருள் முதல்வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்,**" மார்க்சியத் தத்துவத்தில் ஒரு மகோன்னதப் படைப்பாகும். அரை நூற்றாண்டுக்கும் மேலாக, உலகெங்கணுமுள்ள லட்சோப லட்சம் கம்யூனிஸ்டுகளையும் முற்போக்காளர்களையும் மார்க்சிய-லெனினிய உத் வேகத்தில் பயிற்றுவிப்பதற்கு ஒரு கருவியாக விளங்கிய படைப்பாகும். அது மார்க்சியத் தத்துவத்தின் ஆக்க பூர்வமான வளர்ச்சிக்கு இன்றும், என்றும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஒரு உதாரணமாகும். அள்ள அள்ளக் குறையாத, பயனுள்ள உட்பொருளைப் பிரிக்க முடியாதபடி தன்னகத்தே கொண்டு, இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் முதலாளித்துவத் திருத்தல்வாத எதிரிகளை ஈவிரக்கமின்றிச் சித்தாந்த ரீதியில் அம்பலப்படுத்தும் உன்னதப் படைப்பாகும். **பொருள் முதல்வாதமும் அனுபவ**

**ரீதியான விமர்சனமும்** என்ற நூலில் விளக்கிக் காட்டப்பட்டுள்ள முதலாளித்துவத் தத்துவம் மற்றும் திருத்தல்வாதத் திறனாய்வுக் கோட்பாடுகள் கம்யூனிஸ்டுகளுக்கு மார்க்சியச் சித்தாந்தத்தைத் தூய்மைப்படுத்தி மேலும் வளர்ப்பதற்கான அவர்களது போராட்டத்தில் ஒரு முனைப்பான ஆயுதத்தை வழங்கியுள்ளது.

## 4. திருத்தல் வாதம் முற்றும் முதலாளித்துவத் தத்துவத்தை எதிர்த்துப் பேராட்டம்

பூர்ஷ்வா, திருத்தல் வாதத்தின் பல போக்குகளை, குறிப்பாக திருத்தல் வாதத்தையும், பல்வேறு குட்டி பூர்ஷ்வா ஆய்வுகளையும், எதிர்ப்புரட்சி தாராளவாதச் சித்தாந்தங்களையும் திறனாய்வு செய்து அம்பலப்படுத்த லெனின் எவ்வளவோ செய்துள்ளார்.

1908-ம் வருடம் வசந்த காலத்தில் எழுதிய "மார்க்சியமும் திருத்தல் வாதமும்" என்ற கட்டுரையில் லெனின் திருத்தல் வாதத்தைப் பரிசீலித்தார். அந்தக் கட்டுரை சர்வதேசத் திருத்தல் வாதத்தின் வேர்களையும் அதன் தத்துவார்த்தச் சாரத்தையும் விமர்சித்து தலையாய ஆய்வியல் பிரச்சினைகளை ஆய்ந்தது. 1890களில் மார்க்சியம் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு தீர்மானமான வெற்றியைப் பெற்று விட்டது என்று லெனின் கூறினார். "ஆனால் அதற்கு எதிரான அத்தனை ஒருங்கிணைந்த கோட்பாடுகளையும் மார்க்சியம் களைந்தெறிந்து விட்ட பிறகு அந்தக் கோட்பாடுகளில் பிரதிபலிக்கப்பட்ட போக்குகள் வேறு வடிகால்களைத் தேட ஆரம்பித்தன."[112] மார்க்சின் சித்தாந்தத்தில் திருத்தங்கள் என்ற திரை மறைவில் திருத்தல்வாதம் அதன் முக்கிய தத்துவக்கூறுகளைத் திருத்த முயன்றதில், சமூகப் பதப் பிரயோகங்களில் முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்கள், தொழிலாளி வர்க்க இயக்கத்தை அதன் உள்ளேயே மார்க்சிய வாதிகள் என்ற முகபடாம் போட்டுக் கொண்டிருந்த தலைவர்களின் உதவி

யால் மீண்டும் தங்களது செல்வாக்கின் கீழ் கொண்டு வரும் விளைவை வெளிப்படுத்தினர். திருத்தல் வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தில் புதிதாக ஒன்றுமிருக்கவில்லை. ''தத்துவத் துறையில், திருத்தல்வாதம் முதலாளித்துவப் பண்டிதத்தன விஞ்ஞானத்தின் வெளிச்சத்தைத் தொடர்ந்தது.''[113] அரசியல் துறையில், திருத்தல்வாதம், பாட்டாளி வர்க்க சர்வாதி காரம், வர்க்கப் போராட்டம் போன்ற மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் புரட்சிகர அடிப்படைகளை எதிர்த்தது. ''நிகழ்வுக்குப்பின் நிகழ்விலிருந்து அதன் நடத்தையைத் தீர்மானிப்பது; அன்றாட நிகழ்ச்சிகளுக்கேற்ப தன்னைச் சரிசெய்து கொண்டு அற்பத்தனமான அரசியலை வழா வழாவாக்கி மாற்றுவது; பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை மறப்பது''[114] திருத்தல் வாதிகள் கடைப்பிடித்த அரசியல் நிலைபாட்டை லெனின் இவ்வாறுதான் வருணித்தார்.

திருத்தல்வாதத்தின் சமூக அடிப்படை பற்றிய லெனினது வருணனை அடிப்படையான முக்கியத்துவம் சார்ந்ததாகும். 1890-ம் ஆண்டுகளிலிருந்தே மார்க்சின் கருத்துக்களிலிருந்த புரட்சிகரச் சத்தையும் சாரத்தையும் திசைதிருப்புவதற்கான வலது புறத்திலிருந்து வந்த முயற்சிகளையும் (அதாவது முதலாளித்துவத்தோடு சமரஸம் செய்து கொள்ளும் சந்தர்ப்பவாத நிலைபாடு) இடது புறத்திலிருந்து வந்த முயற்சிகளையும் (அதாவது 'அதிதீவிரவாதம்' 'மற்றும் பெத்தாம்' பெரிய புரட்சிவாதம் என்ற நிலைபாடு) எதிர்த்து லெனின் போராடவேண்டியிருந்தது. வலது திருத்தல்வாதத் தைப் பொறுத்த மட்டில் (பெர்ன்ஸ்டீனிஸம்) தொழிலாளி வர்க்க இயக்கத்தில் அதன் சமூக அடித்தளம், குட்டி முதலாளித்துவத் தொழிலதிபர்களின் ஒரு பகுதியே. முதலாளித்துவத்தின் கீழ் இவர்கள் திவாலாகி பாட்டாளி வர்க்க அணியில் குறை நிரப்பும் போக்கைக் கொண்டிருப் பார்கள் என்று லெனின் கூறுகிறார். இந்த வழியில் ''குட்டி முதலாளித்துவ உலகக் கண்ணோட்டம் திரும்பத் திரும்ப, பரந்த தொழிலாளர்களது கட்சிகளின் அணிகளில்

முளைத்துக் கிளம்பும்."[115] தொழிலாளர்களது ஆதிபத்தியத்திலிருந்து வரும் தொழிலாளர்களின் இந்தப் பகுதி, அதாவது மிக உயர்ந்த தேர்ச்சி பெற்று நல்ல சம்பளம் பெறும் நிபுணர்கள் மீண்டும் குட்டித் தொழிலதிபர்களாகி இவ்வாறாக வலது சாரி சந்தர்ப்பவாதத்திற்கும் திருத்தல் வாதத்திற்கும் விளை நிலமாகியது.

இடதுசாரித் திருத்தல்வாதம் அந்தச் சமயத்தில் போதுமான அளவு வளர்க்கப்பட்டு வரையறுக்கப் படவில்லை. அதன் அராஜக சிண்டிகாலிஸத்தைக்குறிப்பிட்டுக்காட்டுவதில் லெனின் ஒரு அளவோடு நின்றுவிட்டார். தொழிலாளி வர்க்க இயக்கத்தில் அராஜகவாதப் போக்குகளின் சமூக அடிப்படை "பொறுக்கி வகைப் பாட்டாளி வர்க்கம்" தான் என ஏற்கனவே மார்க்ஸ் குறிப்பிட்டிருந்தார். அதாவது, தற்காலிக ஆதாயங்களுக்காக, தங்களது சொந்த வர்க்கத்துக்கே துரோகமிழைப்பது உட்பட எந்தக் காரியத்தையும் செய்யத் தயாராயிருக்கும் தரமிழந்த நபர்கள்.

லெனினது "மார்க்சியமும் திருத்தல்வாதமும்" மற்றும் உள்ளடக்கத்தில் அதற்கு நெருக்கமான கட்டுரைகளும் குறிப்பாக "ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள்" போன்றவை சர்வதேசத்திருத்தல் வாதத்தின், சித்தாந்தச் சாரத்தையும், குட்டி முதலாளித்துவச் சித்தாந்தத்தை எதிர்த்துப் போராடுவதில் தொழிலாளி வர்க்க இயக்கம் எதிர்நோக்கியுள்ள கடமைகளையும் புலப்படுத்திக்காட்டின.

1905-ம் வருடத்திய புரட்சியின் தோல்விக்குப்பின் லெனினது படைப்புகளுக்குள் முக்கியமானது. குட்டி முதலாளித்துவச் சித்தாதத்தை விமர்சித்த அவரது கட்டுரைகளாகும். புரட்சியின் தோல்விக்குப் பின் ருஷ்ய முதலாளித்துவம் தெளிவான ஒரு எதிர்ப்புரட்சி நிலையை எடுத்தது. புரட்சிக்கு முன் முதலாளித்துவத் தாராளவாதிகள் புரட்சியின்பால் ஒரு நேச பாவத்தை கூடிக் குலாவும்

போக்கைக் கொண்டிருந்தார்கள். 1908-ம் ஆண்டுக்கும் 1910-ம் ஆண்டுக்கும் இடையில் அவர்களது நடவடிக்கை, அடிப்படையில் அதிகார பூர்வமான ஜார் வழிச் சித்தாந்த கர்த்தாக்களோடு ஒத்திசைவாக இருந்தது. 1909-ல் பல முன்னாள் சட்டபூர்வ மார்க்சிய வாதிகள், தங்கள் நிலையிலிருந்து இறங்கி முதலாளித்துவத்திற்கு ஆதரவு தேடும் பிரமுகர்களோடு ஒன்று சேர்ந்து 'வெக்கி' (திருப்பு முனைகள்) என்ற நூல் திரட்டைப் பிரசுரித்தனர். இதில் அவர்கள் புரட்சிப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்பதைப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்தனர். ஜாரிஸம்மட்டுமே அதன் துப்பாக்கிச் சனியன்களினாலும், சிறைச்சாலைகளின் மூலமும் (தாராள முதலாளித்துவம்—எல். சுவோரோவ்) மக்களின் கோபாக்கினியிலிருந்து எங்களைப் பாது காக்கும்''[116] என அதற்கு நன்றியும் நவின்றார்கள். தனது பல கட்டுரைகளில் குறிப்பாக ''திருப்பு முனைகள் பற்றி'' என்ற கட்டுரையில் லெனின் 'வெக்கி' சித்தாந்தம் பற்றி ஒரு விரிவான கணிப்பை வழங்கியிருந்தார். முதலாளித்துவத்தின் கட்சி மாறும் தன்மையின் கலைக்களஞ்சியம் என அவர் 'வெக்கி'யை அழைத்தார். அந்தத் திரட்டின் உள்ளடக்கத்தை வருணிக்கும் போது முதலில் ருஷ்ய மற்றும் சர்வதேச ஜனநாயகம் கொண்டிருக்கும் முழுமையான உலகம் பற்றிய கருத்தின் சித்தாந்த அடிப்படைகளுக்கு எதிரான ஒரு போராட்டம்; இரண்டாவதாக முதலாளித்துவமும் அதன் சித்தாந்த கர்த்தாக்களும் புரட்சியை மறுப்பது; மூன்றாவதாக பிற்போக்கு, ஜாரிஸம், மற்றும் நிலப்பிரபுக்களுக்கு பகிரங்க ஆதரவு என்றார் லெனின். பொருள் முதல் வாத தத்துவத்திற்கு எதிரான அவர்களது போராட்டம் 'வெக்கி' கும்பலது கருத்துக்களின் ஆதாரக்கல் என்பதை லெனின் குறிப்பிட்டு வலியுறுத்தினார். பொருள் முதல் வாதத்தின் இடத்தில் அந்த அவர்களது ''கடவுள்களைத் தேடல்'' சித்தாந்தத்தைக் கடத்திக் கொண்டு வந்து வைக்க முயன்றனர். அதாவது பரந்துபட்ட வெகு ஜனங்களின் மத்தியில் மதத்தின் செல்வாக்கை அப்படியே கட்டிக் காத்து இவ்வாறாக அவர்

களை வாய் மூடி மௌனிகளாகவும், ஜாரிஸத்திற்கு கை கட்டிச் சேவகம் செய்பவர்களாகவும் வைக்க முயன்றனர்.

இந்தச் சமயத்தில் தொழிலாளர்கள் மத்தியில் முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்கள் போதித்த "கடவுளைத் தேடல்" போக்டனோவைப் பின்பற்றிய சிலர் பிரகடனப் படுத்திய கருத்தமைவான "கடவுளை உருவாக்கு தலோடு" நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். "கடவுளை உருவாக்குகிற வர்கள்" தொழிலாளர்கள் மத்தியில் ஒரு புதிய வழிபாட்டு மரபை, புரட்சி தோல்வியைத் தழுவியதால் தொழிலாளர் களிடம் புரட்சியின்பால் ஏற்பட்ட நம்பிக்கையின்மையின் இடத்தில் வைக்கின்ற ஒரு மரபை ஏற்படுத்தினார்கள். இது குட்டி முதலாளித்துவ குழப்பம் மற்றும் ஊசலாட்டத்தை குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகளில் நிலையில்லாத் தன்மை கொண்டவர்களுக்கே உரித்தான அந்தத் தன்மை யைக் காட்டுகிற ஒருவகை சந்தர்ப்பவாதமாகும்.

இறுதியாக லெனினது சித்தாந்தப் படைப்பில் பரி சீலனைக்குரிய இந்தக் கால கட்டத்தில் ஒரு முக்கியமான திசை வழியாக இருந்தது ருஷ்ய நாட்டு விடுதலைச் சிந்தனையின் வளர்ச்சி பற்றிய அவரது ஆழமான பகுப்பாய் வாகும். அதாவது புரட்சிப் போராளிகளது சித்தாந்தமும், கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் சித்தாந்தமும். "ருஷ்யாவில் தொழிலாளர்களது பத்திரிகையின் வரலாற்றிலிருந்து" என்ற கட்டுரையிலும் குறிப்பாக லியோ டால்ஸ்டாய் பற்றிய வரிசையான அவரது கட்டுகரைகளிலும் ஜாரிஸத்தை புரட்சி கரமான முறையில் தூக்கி எறிவதற்கு மக்களைத் தயாரிக்க, ருஷ்ய நாட்டின் மார்க்சியமல்லாத சோஷலிசச் சிந்தனையின் பொதுவான முற்போக்கு இயல்பையும், அவற்றின் வரை யறைகளையும் லெனின் காட்டினார்.

மார்க்சியத்திற்கு முந்தைய சோஷலிசத்தின் பிரதான வரையறை, மக்களிடமிருந்து அது தனிமைப்பட்டு நின்றது;

மக்கள் மத்தியில் ஒரு பிடிப்பை ஏற்படுத்த அதனால் முடியாதது; ஒரு மெய்யான விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் இல்லாமை போன்றவைகளே அதாவது இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்பதை லெனின் காட்டினார். அதே நேரத்தில் தத்துவார்த்தப் பொருள் முதல்வாதத்திற்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தக் கூடிய ஒரு புரட்சிகரச் சித்தாந்தத்தின் வளர்ச்சிக்கும் ஹெர்ஷனும், செர்னி செவ்ஸ்கியும் தந்த படைப்பின் மகத்தான வரலாற்று முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். ருஷ்ய சமூக ஜனநாயக இயக்கம்தான் கடந்த காலத்தின் அனைத்து முன்னேற்றங்களுக்கும், புரட்சிகர சமூக சிந்தனையின் முற்போக்குத் தன்மைகளுக்கும் சட்டபூர்வமான வாரிசு என்பதை லெனின் சுட்டிக் காட்டினார்.

லியோ டால்ஸ்டாய் பற்றிய தனது கட்டுரையில் லெனின் மிக விரிவான முறையில் அந்தத் தலைசிறந்த எழுத்தாளரின் படைப்புக்களை ஆய்வு செய்தார். அதே நேரத்தில் டால்ஸ்டாய் தனது வாழ்நாளின் கடைசிப் பகுதியில் ஆதரித்த சமூக-தத்துவார்த்தக் கருத்தை அதாவது தீமைகளை வன்முறையின் மூலம் எதிர்க்கலாகாது என்ற சித்தாந்தத்தை லெனின் விமர்சிக்கவும் தவறவில்லை. டால்ஸ்டாயின் படைப்புக்களில் உள்ள ஆழமான முரண்பாடுகளையும் ருஷ்யாவில் வரவிருந்த புரட்சி பற்றி அவர் மிக அழகாக பிரதிபலித்ததையும் காட்டிய லெனின், ஒருபுறம் ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவத்தின் சுரண்டும் தன்மையின் சாரத்தை தனது படைப்பில் வடித்துள்ள டால்ஸ்டாய் இன்னொருபுறம் உடைமை வர்க்கங்களின் வன்முறைகளை பணிவாக, கைகட்டி வாய்பொத்தி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறியதையும் கூர்மையாக விமர்சித்தார்.

தத்துவஞானி வி. ஷீலியாட்டிகோவ் முன்வைத்த கொச்சையான வரலாற்றுத் தத்துவார்த்தக் கருத்துக்களை

லெனின் விமர்சித்ததையும் இங்கு குறிப்பிடவேண்டும். இந்தக் காலகட்டத்தில் அவர் தன்னை போல்ஷ்விக்குகளுடன் இணைத்துக் கொண்டார். ஆனால் சமூக சிந்தனை மற்றும் தத்துவம் பற்றிய சரித்திரத்தை ஒரு கொச்சையான வரலாற்றுக் கருத்துடன் அவர் மெய்ப்பிக்க முயன்றார். டெஸ் கார்ட்டெஸின் தத்துவார்த்த அமைப்பில் ''உலகம் ஒரு பொருளுற்பத்தி நிறுவனமாகவே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது'' என்பதை தனது புத்தகத்தில் ஒரு உதாரணத்திற்காக உறுதிப்படுத்தியுள்ளதின் மூலம் இது குறிப்பிட்ட முறையில் தெளிவாகிறது. அவரது கருத்துப்படி ஸ்பினோஸா ''உலக முதலாளித்துவத்தின் கவிஞர்''; லெய்ப்னிஸ்ஸின் கடவுள் ''ஒரு முன்மாதிரி தொழில் நிறுவனத்தின் சொந்தக்காரர்''[117] என்பதாகும். ஹ்யூமின் ஐயுறவு வாதம், ''முதலாளித்துவ உறுப்பமைதி'' பற்றிய கருத்துடன் ஒத்திசைவானது போன்ற இன்னபிற. சுருங்கக்கூறின் ஷீல்யாட்டிகோவின் கருத்துப்படி தத்துவார்த்தச் சிந்தனையின் முழுவளர்ச்சியும்முதலாளித்துவ உற்பத்தியின் ஒரு சாத்வீகமான பிரதிபலிப்பே. அவரது புத்தகத்தைப் படித்துவிட்டு லெனின் எழுதியதாவது; புத்தகம் முழுவதுமே பொருள் முதல் வாதத்தை அதீதமாகக் கொச்சைப்படுத்துவதின் ஒரு உதாரணமே. காலங்களைப் பற்றிய திண்ணிய பகுப்பாய்வுக்குப் பதில் உரு அமைவுகள்; சித்தாந்தங்கள்—அமைப்பாளர்களைப்பற்றி **வெற்றுச் சொற்றொடர்கள்**; எள்ளி நகையாடக்கூடிய செயற்கையான அபத்தம் நிறை பொய்ம்மை ஒப்பீடுகள்.

''**வரலாற்றில்** பொருள் முதல் வாதத்தைக் கேலிச்சித்திரமாகத் தீட்டுவது பரிதாபம். பொருள்முதல் வாதத் திசைவழியிலேயே ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.''[118]

பரிசீலனைக்குட்பட்ட காலகட்டத்தில் முதலாளித்துவத் தத்துவம் மற்றும் திருத்தல்வாதத்தை விமர்சிப்பதற்காக லெனின் வகுத்த கோட்பாடுகள் **பொருள்முதல் வாதமும் அனுபவரீதியான விமர்சனமும்** என்ற நூலின் முடிவுரையில் வகுத்த நான்கு அம்சங்களாலும் மொத்தமாகச் சுருக்கித்தரப்

படலாம். அனுபவ விமர்சனத்தைப்பற்றி தீர்ப்பு வழங்க மார்க்சியவாதிகள் நான்கு முக்கிய நிலைபாட்டு அம்சங் களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமென்றார் லெனின். (1) தரப்பட்டுள்ள ஒரு சிந்தனையின் விஷயஞான ஆய்வை பொருள்முதல் வாதத்துடன் அதன் அனைத்துப் பிரதான கூறுகளையும் கொண்டு ஒப்பிடுதல். (2) முதலாளித் துவத் தத்துவத்தின் இதர போக்குகளுடனான உறவுடன் தரப்பட்டுள்ள கருத்தமைவின் வரலாற்று இடத்தைத் தீர்மானிப்பது. (3) விசேட விஞ்ஞானங்களின் துறையில் தரப்பட்டுள்ள சிந்தனை மற்றும் கருத்து முதல் வாதத்திற் கிடையே உள்ள தொடர்பை கற்றறிவது. இறுதியாக (4) தரப்பட்டுள்ள கருத்தமைவில் கட்சியின் சத்தையும் சாரத்தையும் பகுப்பாய்வது.[119] இந்த கோட்பாடுகள் மார்க்சிய விரோதிகளுக்கு எதிராக, மேலும் நடத்தப்படும் சித்தாந்தப் போராட்டம் என்ற முறையில் எந்த மார்க்சிய எதிர்ப்புப் பாசறையின் விமர்சனமும் பகுப்பாய்வும் அது கருத்து முதல்வாதத்திற்காகவும், வறட்டுக் கோட்பாட்டுக் காகவும் கெஞ்சிக் கூத்தாடுதல் அல்லது "புதியது" என வேட மிட்டுவரும் திருத்தல்வாத ஆய்வு; எதற்காக வக்காலத்து வாங்கினாலும் அவை பொதுவானவையே எனக்காட்டு கின்றன. பிற்போக்கு கொடிகட்டிப் பறந்த ஆண்டுகளில் லெனினது படைப்பின் மிக முக்கியமான ஒரு விளைவு, சித்தாந்தப் போராட்டத்தில் மார்க்சியம் எடுக்கவேண்டிய பொதுவான அணுகும் முறை பற்றிய அவரது ஆய்வும், முதலாளித்துவத் தத்துவம் மற்றும் திருத்தல்வாதத்தை விமர் சிக்கப் பயன்படுத்த வேண்டிய வழிமுறைகள் மற்றும் பாதைகள் பற்றிய புலப்படுத்தலும் ஆகும்.

1905—1907-ம் வருடத்திய புரட்சியின் தோல்விக்குப்பின் பிற்போக்குச் சக்திகள் அரசுகட்டில் ஏறியதும் லெனினது தத்துவார்த்த நடவடிக்கையின் பொதுவான முக்கியத்துவம் தனிச்சிறப்பு வாய்ந்தது; மகத்தானது; வித்தியாசமானது. லெனின் மார்க்சியத்தின் தத்துவார்த்த அடிப்படைகளின்

ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார். அவற்றை இயக்க வியல் பொருள் முதல்வாதம் மற்றும் அதன் பிரதிபலிப்புச் சித்தாந்தத்தை பரந்த அளவில் முறையாகப் புலப்படுத்தி யதின்மூலம் செழுமைப் படுத்தினார்; ருஷ்யத் தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சியும் புதிய புரட்சிப் போராட்டங்களுக் காகத் தயார் செய்து கொண்டிருந்த நேரத்தில், புதிய வரலாற்றுச் சூழல்களில் சமூகச் சிந்தனை மற்றும் தத்து வத்தின் வளர்ச்சியைப் பகுப்பாய்வதில் லெனின் அளப்பரிய பங்களிப்பை வழங்கினார்.

லெனினது சித்தாந்தப் பணிகள் புரட்சிகர போல்ஷ்விக் ஸ்தாபனங்களில் அவரது நடைமுறை அரசியல் தலைமைப் பாத்திரத்துடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண் டிருந்தன. மிகவும் கடுமையான அரசியல் பின்விளைவுகளின் காலகட்டத்தில் அவர் தயாரிப்புக்கள் செய்து 1912-ம் ஆண்டு ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஆறாவது பிராக் மாநாட்டை நடத்தினார். அம்மாநாடு இறுதியாக மென்ஷ்விக்குகளையும் இதர சந்தர்ப்ப வாதிகளையும் கட்சி அணிகளிலிருந்து வெளியேற்றியது. இந்தக் கால கட்டத் திலேயே மென்ஷ்விக் கரைப்பு வாதிகளையும், போக்டனோவின் ஆதரவாளர்களுக்கு மத்தியில் இருந்த வோட்ஸோவிஸ்டுகளையும்,[120] பின்னர் லெனினது போல்ஷ்விக் மையத்திற்கு எதிராக ட்ராட்ஸ்கி நிறுவ முயன்ற சந்தர்ப்பவாத ஆகஸ்ட் அணி[121] யினரையும் அம்பலப் படுத்த, லெனின் அசுர முயற்சிகளை மேற் கொண்டார்.

இவ்வாறாக லெனினது சித்தாந்த நடவடிக்கை மார்க்சிய சித்தாந்தத்தை வளர்ப்பது என்ற நோக்கத்தை மட்டு மல்லாமல் போல்ஷ்விக் கட்சியை மேலும் வளர்ப்பதற்கு அவசியமான தொடர்பு ஏற்படுத்தல்,திருத்தல்வாதம் மற்றும் சந்தர்ப்பவாத குப்பைகளை அதிலிருந்து துடைத்தெறிதல், ஜாரிஸத்தை எதிர்த்து புதிய புரட்சிப் போராட்டங்களுக்கு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் உழைக்கும் மக்களில்

பரந்துபட்ட மக்களை அணி திரட்டுவது ஆகிய நோக்கத்தையும் கொண்டதாகவிருந்தது.

## 5. தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்

1910-1912-ம் ஆண்டுகள் ருஷ்ய நாட்டில் ஒரு புதிய புரட்சிகர எழுச்சியைக் கண்ட ஆண்டுகளாகும். 1912-ம் ஆண்டு லேனா தங்க வயல்களின் தொழிலாளர்கள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளானதும், அதைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கம் புயலெனக் கிளம்பிப் பொங்கியதும் ருஷ்ய நாடு புதியதோர் புரட்சியை நோக்கி நெருங்குவதைக் காட்டின. 1910-ம் ஆண்டிலிருந்து, ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியை எங்ஙனம் கொண்டு வருவது புதிய வரலாற்றுச் சூழல்களில் அதற்கான சாத்தியக்கூறுகள் யாவை என்பதிலேயே லெனின் முழு முனைப்புடன் கவனம் செலுத்தினார்.

1910-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் **ராபோச்சாயா கெஸட்டா** (தொழிலாளர்களின் செய்தி ஏடு)—பாரிஸில் வெளியிடப்பட்ட போல்ஷ்விக்குகளின் ரகசிய ஏடு "ஆர்ப்பாட்டங்களின் ஆரம்பம்" என்ற லெனினது கட்டுரையைப் பிரசுரித்தது. 1910-ம் ஆண்டு கோடைப் பருவத்தில் ருஷ்ய நாட்டில் ஒரு புரட்சிகர எழுச்சி துவங்கிவிட்டது என அக் கட்டுரை குறிப்பிட்டது. "ருஷ்ய மக்கள் ஒரு புதிய போராட்டத்துக்காக விழித்தெழுந்து விட்டனர். ஒரு புதிய புரட்சியை நோக்கி முன்னேறுகின்றனர்,"[122] என்று லெனின் எழுதினார். இந்தக் கட்டுரையுடனேயே லெனின் தனது புகழ்மிக்க "மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியில் சில சிறப்பம்சங்கள்" என்ற கட்டுரையையும் "நட்சத்திரம்" என்ற செய்தித்தாளில் வெளியிட்டார். இந்தச்செய்தித்தாள் 1910-ம் ஆண்டு டிசம்பரிலிருந்து பீட்டர்ஸ்பர்க்கில், மார்க்சிய வாதிகளால் சட்ட பூர்வமாகவே விநியோகிக்கப்பட்டது. லெனினது சித்தாந்த நடவடிக்கையில் இந்தக் கட்டுரை திட்ட

அமைப்புப்படியானதாகும். ருஷ்ய நாட்டில் ஒரு புதிய புரட்சியின் தயாரிப்பில் மார்க்சியச் சித்தாந்தத்தின் இடத்தையும் பாத்திரத்தையும் அது கணித்தது.

மார்க்சியச் சித்தாந்தம் வரட்டுத்தனமான ஒன்றல்ல. செயலாற்றலுக்கான வழிகாட்டி என்ற எங்கெல்ஸின் கூற்றை ஆரம்பத்தில் லெனின் மேற்கோள் காட்டினார். பின்னர் புரட்சி இயக்கத்தின் மாற்றமுடியா முடிவைப் பகுப்பாய்ந்து, மார்க்சிய சித்தாந்தத்தின் தலையாய தீர்மானிக்கும் அம்சம் நடைமுறையோடுள்ள அதன் தொடர்புதான் என்பதைக் காட்டினார். ஒரு வளர்ச்சியின் ஆய்வியலாக இயக்கவியல் விஞ்ஞானக் கருத்தமைவுக்கும் பாட்டாளி வர்க்கத்தின் நடைமுறைக் கடமைகளுக்கு மிடையே உள்ள பிரிக்க முடியாத ஒற்றுமையை லெனின் வலியுறுத்துகிறார்.[123] அனைத்து சந்தர்ப்பவாதச் சித்தாந்தங்களினது முக்கிய குறைபாடுகளையும், நடைமுறைக் கடமைகளிலிருந்து அவை எங்ஙனம் வேறுபட்டு நிற்கின்றன என்பதையும் இவ்வாறாக அவை வெறும் சொற்றொடர்களாக மாறி தொழிலாளி வர்க்கத்தின் இறுதி லட்சியங்களை மறுப்பதற்கு ஒரு திரையாகப் பணியாற்றுவதையும் அவர் அம்பலப்படுத்துகிறார். இத்தகைய மார்க்சியத்தை சந்தர்ப்பவாத முறையில் திரித்துக் குழப்பும் செய்கையைக் கண்டித்த லெனின் மெய்யான புரட்சிச் சக்திகளனைத்தும் மார்க்சியச் சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒன்றுபட வேண்டும் என விழைகிறார். ''மார்க்சியம் என்ற பதத்திற்கு இதுவே மிகத் தெளிவான நேரடியான பொருள். மார்க்சிய வாதிகளின் இன்றையக் கடமை இதுவே''[124] என அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இந்தக் காலகட்டத்தில், லெனினது சித்தாந்த நடவடிக்கையினால் எடுக்கப்பட்ட கேந்திரமான திசைவழி, ருஷ்ய நாட்டின் வரலாற்றுச் சூழல்கள் பணித்துள்ள புதிய கடமைகளுக்கேற்ப, மார்க்சியத்தின் புரட்சிகர ஆய்வியலை அவர் மேலும் வளர்த்துச் செல்வதென்பதே. 1910-முதல் 1912-ம்

ஆண்டு வரையிலான இடைக் காலத்தில் அவரது அனைத்து உரைகளிலும், கட்டுரைகளிலும், அறிக்கைகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்திற்கும் மார்க்சியத்தின் புரட்சிகர ஆய்வியலுக்கும் இடையேயுள்ள பிரிக்க முடியாத ஒற்றுமை, கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தொழிலாளர்களது புரட்சிர நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் ஒரு சித்தாந்தம் மார்க்சியம், ஆகியவற்றை பொருளாக எடுத்துக் கொண்டார்.

1912-ம் ஆண்டு, தலை சிறந்த ருஷ்யச் சிந்தனையாளரும் புரட்சியாளருமான ஹெர்ஷனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மைய இதழான 'ஸோட்ஸியால்-டெமாக்ரட்டில்' லெனின் ஒரு கட்டுரையை எழுதினார். இந்தக் கட்டுரை 1860களின் புரட்சிகர ஜனநாயகம் பற்றிய பொதுவான மார்க்சியக் கருத்தை விளக்கியது. ஹெர்ஷனின் தத்துவத்தில் பிரதான சிறப்பம்சம் அதன் புரட்சிகர உத்வேகமே என்றெழு தினார் லெனின். இளைய தலைமையினரை விழித்தெழச் செய்த, டிசம்பர் புரட்சிப் போராளிகளின் [125] மரணத்தைத் திரணமென மதித்த வீரத்தை லெனின் போற்றிப் புகழ்ந்தார். ஹெர்ஷன், ஒகரேவ் மற்றும் அவரது நண்பர்கள் ருஷ்ய நாட்டின் மகோன்னதப் புரட்சி இலட்சியத்தின் ஈடேற்றத்துக் காக தங்கள் வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணித்தனர். இயக்கவியல் என்பது "புரட்சியின் இயற்கணிதம்"[126] என்பதைப் புரிந்து"ஹெர்ஷன் நேராக இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை நோக்கி வந்தார் "என்ற உண்மையிலிருந்து அவரது அரசியல் கருத்துக்களின் முற்போக்கு இயல்பு தெளிவாகத் தெரிகிறது."

"ஹெர்ஷனை நினைவு கூர்ந்து" லெனின் எழுதிய தாவது: புரட்சிகரச் சித்தாந்தத்தின் தலையாய முக்கியத் துவத்தைப் பாராட்டுவதற்கு அவரது உதாரணத்திலிருந்து பாட்டாளி வர்க்கம் பாடம் கற்றுக் கொள்கிறது—"[127] பரந்து பட்ட மக்களை போராட்டத்திற்குக் கிளப்பும் அதன்

விளைவில்தான் சிந்தாந்தத்தின் முக்கியத்துவம் காணக் கிடைக்கிறது. கண்ணியம் மிக்க புரட்சிப் போராளிகள் மக்களிடமிருந்து வெகுதூரத்தில் நின்றனர். அவர்களுக்குப் பின்வந்த 1860களின் புரட்சியாளர்கள் மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டியதின் அவசியத்தை உணர்ந்திருந்தனர். ஆனால் அவர்களால் இதை நடைமுறைப்படுத்த முடிய வில்லை. ஒரே விஞ்ஞான சித்தாந்தமான மார்க்சியத்தை ஆயுதமாகக் கொண்டுள்ள பாட்டாளி வர்க்கக் கட்சியினால் மட்டுமே மெய்யான மக்கள் புரட்சியை நடத்த முடியும். கட்டுரையின் கடைசிப்பகுதியில் லெனின் குறிப்பிட்டுள்ளார்; "அறுவறுக்கத்தக்க அரக்கன் அந்த ஜார் மன்னனின் மணி மகுடத்தை, முடியரசை அழித்தொழித்த பிறகு பாட்டாளி வர்க்கம் அனைத்து பூமிப்பரப்பிலுமுள்ள சோஷலிசத் தொழிலாளர்களுடன் சுதந்திரமாகக் கூட்டணி வைத்துக் கொள்வதற்கான வழிகாணப் போராடும். ஜார் முடியரசை எதிர்த்து மக்களுக்கு "சுதந்திரமான ருஷ்யவார்த்தை"[128] என்ற தனது உரையின் மூலம் முதலில் மகத்தான போராட்டப் பதாகையை உயர்த்தியவர் ஹெர்ஷனே." லெனினது தத்துவார்த்த மரபுரிமை வழியில் இந்தக் கட்டுரை ஒரு விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாவதாக ருஷ்ய நாட்டில் புரட்சிப் பாரம்பரியம் நேரடி வழி வந்ததை அது காட்டுகிறது. 19-ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த கண்ணியவான்களின் புரட்சி ஆர்வத்திலிருந்து 1860களிலும் 1870களிலுமிருந்த புரட்சிகர ஜனநாயகவாதிகளிடமும், நரோட்னயா வோல்யா வீரர்களிடமும் வந்தது; பின்னர் அந்தப் பாரம்பரியம் 19-ம் நூற்றாண்டின் கடைசியில் தொழிலாளர்களின் சமூக ஜனநாயக இயக்கத்தினிடமும், 20-ம்நூற்றாண்டின் துவக்கத்தில் லெனினது தலைமையின்கீழ் எழுந்த போல்ஷ்விஸத்திடமும் வந்து சேர்ந்தது. இரண்டாவதாக, கடந்த நூற்றாண்டின் மத்தியிலும் கடைசிப் பிற்பகுதியிலும் ஜாரிஸத்தை எதிர்த்த புரட்சி இயக்கத்துடன் தொடர்பு கொண்டு, ருஷ்யப் பொருள் முதல்வாதத் தத்துவத்துக்கு ஆழ்ந்த பகுப்பாய்வையும், கணிப்பையும் வழங்கிய

முதல் விஞ்ஞானப் படைப்பு அதுவே. மூன்றாவதாகவும் இறுதியாகவும் மார்க்சிய விஞ்ஞானக் கண்ணோட்டத்தின் அடிப்படை அம்சத்தை அது வலிந்து வற்புறுத்தியது. அதாவது வெகுஜன இயக்கத்துடன் நடைமுறையுடன் கூடிய அதன் நெருங்கிய ஒற்றுமை. எனவேதான் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அது தத்துவத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் கடந்த காலத்தின் சமூக சிந்தனைக்கும் ஒரு ஆய்வியல் அடிப்படையாகப் பணியாற்றியது.

1913-ம் ஆண்டு வசந்த காலத்தில் சர்வதேச சமூக ஜனநாயகம் கார்ல் மார்க்ஸ் மறைந்த 30வது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது. தனது இரண்டு படைப்புக்கள் மூலம் லெனின் இந்நிகழ்வுக்குச் சிறப்புச்செய்தார்: ''கார்ல் மார்க்ஸ் கோட்பாட்டின் வரலாற்று விதி''. மற்றும் ''மார்க்சியத்தின் மூன்று மூலக்கூறுகளும், மூன்று ஒருங்கிணைந்த உறுப்புகளும்.'' முதல்படைப்பு 1912-ல் லெனினால் தோற்றுவிக்கப்பட்ட செய்தி ஏடான **பிராவ்தா**வில் பிரசுரிக்கப்பட்டது. இரண்டாவது சட்ட பூர்வமான போல்ஷ்விக் சஞ்சிகையான **ப்ரோஸ்வெஸ்ச் சென்யீ** (கல்வி)யில் வெளிவந்தது

''கார்ல் மார்க்ஸ் கோட்பாட்டின் வரலாற்று விதி'' என்பதில் லெனின் மார்க்சிய சித்தாந்தம் பற்றி ஒரு முழுமையான கணிப்பை வழங்கியிருந்தார். ''மார்க்சியக் கோட்பாட்டின் தலையாய விஷயம், அது சோஷலிச சமுதாயத்தைச் சமைக்கக்கூடிய வர்க்கம் என்ற முறையில் அதன் வரலாற்றுப் பாத்திரத்தைக் கொண்டு வந்தது''[129] என எழுதினார்.

மார்க்சிய சித்தாந்தத்தின் வளர்ச்சியில் அடிப்படையான காலகட்டங்களையும் இந்தக் கட்டுரை வருணித்தது. முதல்காலகட்டம் (1848—1871) சமூக எழுச்சிகளையும் புரட்சிப் போராட்டங்களையும் கண்டு விஞ்ஞான சோஷலிசத்தின் பிறப்பையும் சுயேச்சையான பாட்டாளி வர்க்கக் கட்சிகள் முகிழ்த்ததையும், வரலாற்றில் முதல் சர்வதேச உழைக்கும் மக்களின் கழகமான முதலாவது

அகிலத்தையும் கண்ட காலகட்டமாகும். இரண்டாவது காலகட்டம் (1872—1904) புரட்சிகள் ஏதும் நடைபெறாமல், அதிகமாகவோ குறைத்தோ சமாதான பூர்வமான வளர்ச்சியைக் குறிப்பிட்ட காலகட்டமாகும். இந்தக்கால கட்டத்தில் மார்க்சின் கோட்பாடு தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பூரண வெற்றியை ஈட்டியது. முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்கள் மற்றும் திருத்தல்வாதிகள் மார்க்சியத்தை எதிர்த்து தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்திய காலகட்டமாகும். 1904—1905-ம் ஆண்டுகளில் ருஷ்யாவில் துவங்கிய புரட்சி மார்க்சியத்தின் அந்த சமாதான பூர்வமான வளர்ச்சிக்கு ஒரு முடிவுகட்டியது. எதிர்வரும் உலக சோஷலிசப் புரட்சியின் ஒரு சித்தாந்தமாக மாற்றியது. மார்க்சின் போதனைகளில் தலையாய அம்சம் சித்தாந்தம் மற்றும் நடைமுறையின் ஒற்றுமையே என்பதை லெனின் திரும்பத்திரும்ப வலியுறுத்தியதை நாம் பார்க்கலாம். ஒரு பக்கம் வெற்றிக்குமேல் வெற்றிகளை ஈட்டினாலும் தொழிலாளி வர்க்க இயக்கம், தொழிலாளிகளிடம் மார்க்சியத்தின் செல்வாக்கு வீச்சை பலஹீனப்படுத்துவதற்கும் இழிவு படுத்துவதற்கும் அதன் எதிரிகள் ஒன்றுமில்லாத அளவுக்கு மேற்கொண்டுள்ள தந்திர முயற்சிகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. "இயக்கவியலின் வரலாறு இவ்வாறிருந்தது. அதாவது மார்க்சியத்தின் சித்தாந்த ரீதியான வெற்றி அதன் எதிரிகளைஅவர்களாகவே மார்க்சிய வாதிகள் என்று வேஷம் போடவைத்தது"[136] என்று லெனின் எழுதினார். எனவே 20-ம் நூற்றாண்டின் பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் முற்போக்கான வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் மார்க்சிய சித்தாந்தத்தை புனிதப் படுத்துவதற்கான தொடர்ச்சியான இடைவிடாத முயற்சிகள் இன்றியமையாததாகும்.

"மார்க்சியத்தின் மூன்று மூலக் கூறுகளும் மூன்று ஒருங்கிணைந்த உறுப்புக்களும்" என்ற நூல் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தின் மூலவர்களது சித்தாந்த மரபுரிமை வழியை விரிவான முறையில் மதிப்பீடு செய்வதை உள்ளடக்

கியதாகும். மார்க்சிய போதனை, "தத்துவம், அரசியல் பொருளாதாரம் மற்றும் சோஷலிசத்தின்[131] தலைசிறந்த பிரதிநிதிகளின் போதனைகளது "இம்மூன்று ஒருங்கிணைந்த பாகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாக முகிழ்த்தது" என லெனின் குறிப்பிட்டிருந்தார். மார்க்சியத்தின் தோற்றுவாய்கள், ஜெர்மன் நாட்டின் சிறப்புமிகு தத்துவம்; ஆங்கில அரசியல் பொருளாதாரம் மற்றும் பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிசம் ஆகியவைகளே என்று லெனின் கூறினார். அதே சமயத்தில் மார்க்சியச் சித்தாந்தம் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத் தத்துவம், பொருளாதாரச் சித்தாந்தம்; விஞ்ஞான சோஷலிசம் ஆகிய மூன்று ஒருங்கிணைந்த பாகங்களையும் தன்னகத்தே சேர்த்துக் கொண்டுள்ளது.

இந்தப் படைப்பில் லெனின் தனியான மற்றும் முழுமையான தத்துவார்த்தப் பொருள்முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்ட மார்க்சியத் தத்துவத்தை சுருக்கமாகவும் ஆழமாகவும் பகுப்பாய்வு செய்திருந்தார். மிகவும் குறிப்பிடத் தக்க வகையில் மார்க்ஸ், வெறுமனே தத்துவார்த்தப்பொருள் முதல் வாதத்திற்கு வக்காலத்து வாங்காமல் அதை இயக்கவியலோடுசெழுமைப்படுத்தினார். "இயக்கவியல் சித்தாந்தம், முழுமையான, ஆழமான மிகவும் விரிவாக்கம் பெற்ற வடிவத்தில் வளர்ச்சியின் கோட்பாடு; மனித அறிவாற்றலின் சார்பியல் கோட்பாடு நிரந்தரமாக வளரும் பொருளின் பிரதிபலிப்பை நமக்கு வழங்குகிறது,"[132] என லெனின் வரையறுத்தார். இந்த வரையறை இயக்கவியல் சித்தாந்தம் தொடர்பான தொடர்ந்து வந்த அனைத்து மார்க்சியப் படைப்புக்களுக்கும் ஒரு அடித்தளமாக விளங்கி, இயக்கவியல் பொருள்முதல் வாதத்தத்துவத்தின் சத்தையும் சாரத்தையும் புரிந்துகொள்ள ஒரு தத்துவார்த்த மற்றும் ஆய்வியல் அடிப் படையாகப் பணியாற்றுகிறது. மேலும் மார்க்சியத் தத்துவத்தின் சத்தையும் சாரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு மார்க்ஸ் உலகம் பற்றிய தனது இயக்கவியல் பொருள்முதல் வாதக் கருத்தமைவை விரிவாக்கி சமுதாயத்தினிடம்,

வரலாற்றுப்பொருள் முதல்வாதம், இயக்கவியல் பொருள் முதல்வாதத்தின் பொதுவான தத்துவார்த்தக் கருத்தமைவில் ஒரு பெரிய மூலக்கூறு, இல்லாமல் தீராத ஒரு உறுப்பு என உருவாக்கியுள்ளதாக லெனின் காட்டினார். ''மார்க்சின் தத்துவம், ஒரு முழுநிறைவான தத்துவார்த்தப் பொருள் முதல்வாதம். அது மனிதகுலத்திற்கு, விசேடமாகத் தொழிலாளி வர்க்கத்திற்கு அறிவாற்றல் என்ற சக்தி மிக்க உபகரணங்களை வழங்கியுள்ளது'' என லெனின் எழுதினார்.[133]

அதே சமயத்தில், மார்க்சியத் தத்துவம் ஒரு சுருக்கமான கல்வியின் பால்பட்ட ஆய்வல்ல; மாறாக தீவிர நடவடிக்கைக் கான ஒரு வழிகாட்டி என லெனின் வலியுறுத்திக் கூறினார்.

இயக்கவியல் பொருள் முதல்வாதத் தத்துவம் மார்க்சியத்திற்கு உதவி செய்யமுடியும் நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்திற்குள்ளேயே எந்த சக்திகளால் முடியும் என்பதைக் கண்டறிந்து—அவர்களது சமுதாய நிலைபாடு களின் காரணமாக நிச்சயம்—பழையனவற்றை அப்படியே தூக்கி எறிந்துவிட்டு புதியதோர் சமுதாயத்தைச் சமைக்கத் திறன்படைத்த சக்தியை ஒருங்கிணைக்க முடியும்''[134] என்றார் லெனின். இவ்வாறாக அது பாட்டாளி வர்க்கத் திற்கும் மற்றும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், ஆன்மீக அடிமைத்தனம் காரணமாக மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையின்கீழ் சபிக்கப்பட்டதிலிருந்து அவர்கள் விடுதலைபெற ஒரு வடிகால் என்ற உண்மையி லிருந்து மார்க்சியத் தத்துவத்தின் சத்தும் சாரமும் புலப் படுத்தப்படுகிறது.

1913-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜெர்மனியில் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் கடிதங்கள் வெளியிடப் பட்டன.[135] இக்கடிதங்கள் அரை குறையாகவும், பெருமள வுக்குச் சுருக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் போதுமான அளவு குறிப்புரை அமைப்பு இல்லாமலும் இருந்தன என்று லெனின் குறிப்பிட்டிருந்தார். கடிதங்களில் சிலபகுதிகள்

பெர்ன்ஸ்டீனால் தொகுக்கப்பட்டும் முன்னுரை தரப்பட்டுமிருந்தன." எதிர்பார்த்தபடியே இந்தப் படைப்பு தொழில் நுட்பம் மற்றும் சித்தாந்த நிலைபாட்டின்படி திருப்திகரமாக இல்லை" என்று லெனின் எழுதினார். அதிதீவிர சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் பற்றிய அவரது இழிதகை மதிப்பீட்டிற்குப் பிறகு முழுக்க முழுக்க புரட்சிகர உத்வேகத்துடன் கருவிலேயே உருப்பெற்ற கடிதங்களை தொகுக்கும் காரியத்தை அவர் என்றுமே மேற்கொள்ளக் கூடாது. பெர்ன்ஸ்டீனின் முன்னுரைகள், ஒரு பகுதி அர்த்தமற்றவையாயும் இன்னொரு பகுதி பொய்மையின்பால்பட்டதும் ஆகும்."[136]

இருந்தபோதிலும் இந்த வெளியீட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்த லெனின் அந்தக் கடிதங்களை முழுமையாகப் படித்தார். 1913-ம் வருடத் துவக்கத்தில் அதாவது இக்கடிதங்கள் வெளிவந்து இரண்டு மாதங்களுக்குள்ளாகவே லெனின் மரியா உலியனோவாவுக்கு எழுதியதாவது: மார்க்ஸ்—எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்தின் நான்கு தொகுதிகளையும் இப்பொழுது தான் படித்து முடித்தேன். அது பற்றி **ப்ரோஸ் வெஸ்ச் செனியீ** யில் எழுத விரும்புகிறேன். அதில் மிகவும் சுவையான விஷயங்கள் உள்ளன."[137]

1959-ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, மத்தியக் கமிட்டியின் மார்க்சிய—லெனினியக் கல்விக்கூடம், மார்க்ஸ்—எங்கெல்ஸ் கடிதங்கள் பற்றிய லெனினது விரிவான மதிப்பீட்டை வெளியிட்டது.[138] இந்தச் சிறப்புமிக்கஆவணம் மார்க்ஸ்—எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்தின் சில பகுதிகளையும் லெனினது குறிப்புக்கள் மற்றும் கருத்துரைகளையும் உள்ளடக்கியதாகும். இந்தப் பகுதிகளின் முக்கியமான அம்சங்கள் **கடிதப் போக்குவரத்து** பற்றிய அவரது மதிப்புரையில் அடிக்கோடிட்டுக் காட்டப் பட்டிருந்தது. இதை அவர் தனது புத்தகத்தை முடித்ததுமே எழுதினார். அக்டோபர் புரட்சிக்குப் பின் **பிராவ்தா**வில் அது வெளிவந்தது. "ஒரே வார்த்தையில் அதை பிரத்தியேகப்படுத்தி வரையறுக்க

முயன்றால், அதாவது முழுமையான கடிதப் போக்குவரத்தையும் ஒரே வார்த்தையில் கூறுவதென்றால், அதில் முழுவதிலும் விவாதிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் புலப்படுத்துவது—அந்த வார்த்தை "**இயக்கவியல்**" என்பதாகத்தான் இருக்கும் என்பதே. அதன் அடிப்படையிலிருந்து அனைத்துப் பொருளாதாரத்தையும் மாற்றியமைக்க பொருள் முதல்வாத இயக்கவியலைப் பயன்படுத்துவது, வரலாறு, இயற்கை விஞ்ஞானம், தத்துவம், தொழிலாளி வர்க்கத்தின் கொள்கை மற்றும் உத்திகள் போன்றவற்றிற்கும் அதைப் பயன்படுத்துவது — இதில்தான் மார்க்ஸும் எங்கெல்ஸும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆர்வம் கொண்டிருந்தனர்; அங்குதான் அவர்கள் மிகவும் அவசியமானதையும், புதியனவற்றையும் பங்களிப்பாக வழங்கியுள்ளனர்; அதுதான் புரட்சிகரச் சிந்தனையின் வரலாற்றில் தலையாய முன்னேற்றத்தை உருவாக்கி உட்கொண்டுள்ளது."[139]

ஆய்வைப் பற்றி மட்டும் அல்லாமல், கோட்பாடு, இலக்கு பாட்டாளி வர்க்கக் கட்சி மற்றும் ஒட்டுமொத்தமாக மக்களின் புரட்சிகர இயக்கத்துக்கான உத்திகள் ஆகியவற்றுடன் அதன் நேரடித்தொடர்பு போன்றவற்றையும் குறிப்பிட்டு அவர் மார்க்ஸ்—எங்கெல்ஸ் கடிதங்களில் இயக்கவியல் தொடர்பான அனைத்தையும் தனிமைப் படுத்தினார். லெனினது **விரிவான மதிப்பீடு** 20-ம் நூற்றாண்டில் மார்க்சிய மூலவர்களின் அனுபவங்களையும் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்ட புரட்சி இப்போராட்டத்தின் முக்கிய பிரச்சினைகளது புலமை சான்ற விரிவாக்கமாகும்.

அதற்கு முன்னரேயே லெனின் பொருள் முதல்வாத இயக்கவியல் பிரச்சினைகளில் தீவிர அக்கரை கொண்டவராக இருந்தார். புதிய புரட்சி எழுச்சிக் கால கட்டத்தில், ருஷ்ய நாட்டில் ஒரு புதிய பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தயாரிப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, அவர் ஒட்டுமொத்தமாக புரட்சிப் பணிக்கு அவசியமான மூலக்கூறு இயக்கவியல் பிரச்சினைகள் தான் என்று கருதி அதில்,

கவனம், செலுத்தினார். இதன் நேரடி விளைவு 1913-1914ம் ஆண்டுகளில் வெளிவந்த வரிசையான சித்தாந்தப் படைப்புக் களாகும். இவை வரவிருந்த புரட்சியின் சித்தாந்த அடிப் படைகளை வேறுபட்ட பல கோணங்களிலிருந்து விளக்கி புரட்சிக்குத் தயார் செய்து கொண்டு வருவதற்கான தத்து வார்த்த மற்றும் திண்ணிய, அரசியல், இலக்கு மற்றும் உத்தி களுக்கு தீர்வுகளையும் காட்டின. இந்தப் படைப்புக்களுள் கீழ்க்கண்டவை பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். "தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி" என்ற நீண்ட கட்டுரை (பிப்ரவரி—மே 1914): எழுதப்படாத ஒரு கட்டுரைக்கான திட்டம் "புரட்சியும் போரும்" (ஜூலை. 1914) ஏகாதிபத்தியத்தின் கீழ் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் பிரச்சினைகளை முன்வைத்ததில் முதலாவதும், இறுதியானதும், முக்கியமானதுமான கட்டுரை "கார்ல் மார்க்ஸ்" (1914 ஜூலையில் துவக்கப்பட்டது.) இந்தக் கட்டுரை மார்க்சியத்தின் முகிழ்ச்சியையும் வளர்ச் சியையும் மேற் கோடிட்டுக் காட்டியது. தத்துவார்த்தப் பொருள் முதல்வாதம், வரலாற்றின் இயக்கவியல் பொருள் முதல் வாதக் கருத்தமைவு, வர்க்கப் போராட்டத்தின் சித்தாந்தம், மற்றும் விஞ்ஞான சோஷலிசம் பற்றிய மார்க்சின் பொருளாதாரக் கோட்பாடும் சித்தாந்தமும் போன்றவைகளைப் பற்றி விரிவான வருணனையை வழங் கியது.

மார்க்சியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகள் பற்றிய இந்த ஆய்வியல் பணிக்கு, 1914-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏகாதிபத்தியவாதிகள் கட்டவிழ்த்து விட்ட முதல் உலகப் போரினால் தடையேற்பட்டது. போர் துவங்கிய முதல் சில நாட்களில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள்—ஜெர்மனியிலிருந்த கவுட்ஸ்கி மற்றும் ஷீட்மேன், நட்புறவு நாடுகளைச் சேர்ந்த வெயிலண்ட், வாண்டர்வெல்ட், பிளெக்கனோவ் மற்றும் பலர்—தொழிலாளி வர்க்க இலட்சியத்திற்கு துரோகமிழைத்து

விட்டு பகிரங்கமாக போருக்குத் தங்கள் ஆதரவைத் தெரி வித்தனர். அது நியாயமான போர் எனப் பிரகடனம் செய்து தொழிலாளர்கள் அதில் நேரடியாகப் பங்கு கொள்வதுடன் அவர்களது முதலாளித்துவ அரசாங்கங்களையும் ஆதரிக்க வேண்டுமெனக் கோரி அறைகூவல் விடுத்தனர்.

லெனின், அவர் தலைமை தாங்கி நடத்திய ருஷ்ய போல்ஷ்விக் கட்சி, அதே போல் ஜெர்மனியிலும் இத்தாலி யிலுமிருந்த ஒரு சில சர்வதேசிய வாதிகள் மட்டுமே போரை எதிர்த்தனர். தனது படைப்பான ''இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சி'' (மே-ஜூன் 1915)-யில்லெனின் இந்த துரோகத்தைக் கடுமையாகக் கண்டித்தார். புரட்சிகர மார்க்சியத்தை நிராகரிப்பது; குறுகிய சமூக வெறி நிலையை எடுத்து புரட்சிகர பொருள் முதல்வாத இயக்கவியலை முற்றாக நிராகரிப்பது என்பதே, சித்தாந்த ரீதியாக இதன் பொருள் என்றும் எடுத்துக் காட்டினார்.

ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து விட்ட போரைப் பற்றி இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் எடுத்த நிலையைக் கணித்து லெனின் எழுதியதாவது: ''புரட்சிகர உத்திகளுக்குப் பதிலாக பல சமூக ஜனநாயகக் கட்சிகள் பிற்போக்கு உத்தி களையே கையாண்டு தங்கள் தங்கள் அரசாங்கங்கள் மற்றும் முதலாளிகளின் பக்கம் சாய்ந்தன. சோஷலிசத்திற்கு இழைக்கப்பட்ட இந்த துரோகம் இரண்டாவது (1899-1914) அகிலத்தின் வீழ்ச்சியைப் புலப்படுத்தியது.''[140] சித்தாந்த ரீதியில் இந்த துரோகத்தின் பொருள், சமூக-வெறியர்கள்,[141] அகவயப்பட்ட வாதம் மற்றும் இயக்கவியல் எதிர்ப்பு என்ற நிலைபாட்டுக்கு ஓடி விட்டனர் என்பதாகும். இந்த நிலை பாட்டை போலித்தனமானது; திருட்டுத்தனமானது என லெனின் வருணித்தார். அதாவது ஒன்றையொன்று மேலோட்டமாக ஒருமித்த தோற்றத்தைத் தரும் நிகழ்வு களை ஒரு தலைப்பட்சமாகக் குத்திக் காட்டிப் பொறுக்கி யெடுப்பது; அவற்றைத் தீர்க்கமாகப் பகுப்பாய்வு செய் யாமல் தொடர்பற்ற மூலக்கூறுகளின் முரண்பாடுகளை

யாந்திரீகமாக இணைப்பது. இது ''ஆரம்பித்தது எவனோ அவனே'' என்ற சமூக-வெறிச் சித்தாந்தத்துக்கு, முதலில் ஆயுதங்களுடன் பகைமை நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடுகளே தவறு செய்த நாடுகள் என்று கூறிய சித்தாந்தத் துக்கு ஒரு அடிப்படையாகப் பணியாற்றியது. இவ்வாறாக இந்த சமூக வெறித் தலைவர்கள் போரை முதலில் துவங்கிய ஜெர்மன் ஏகாதிபத்திய வாதிகளே தவறு செய்தவர்கள் என அறுதியிட்டுக் கூறினார்கள். பிரான்ஸ், ருஷ்யா மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்தனர். இத்தகைய வியாக்கியானம், போருக் கான காரணங்கள் அதன் சாரம் ஆகியவற்றிலிருந்து துண் டித்துக் கொள்வதை தெளிவாக்குகிறது. நிலவுகின்ற சூழ் நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தின் இலக்கு மற்றும் உத்தி களைத் தீர்மானிப்பதிலிருந்தும் துண்டித்துக் கொள்வதாகும்.

இந்த நிகழ்ச்சிக்குரிய சமூக வெறியிலிருந்து அனைத்துத் துறைகளிலும் பொருள் முதல்வாத இயக்கவியல் சித்தாந் தத்தைப் பாதுகாக்க வேண்டியதும் புதிய வரலாற்றுச் சூழல் களில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளுக்கு ஒரு புரட்சிகரத் திட்டத்தின் அடிப்படைகளை வளர்ப்பதற்கு அதை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த வேண்டியதும் அவசியமாயிருந்தது. லெனின் இந்தக் கடமைகளை அவரது **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களிலும்**, ஏகாதிபத்திய யுத்தகாலத்தில் எழுதிய இதர படைப்புக்களிலும் நிறைவேற்றியிருந்தார்.

**தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்** என்ற நூலில் லெனின் இயக்கவியலை ஒரு தத்துவார்த்த விஞ்ஞானமெனப் பொதுவாக வருணித்திருந்தார். அதை லோகாயுத உலகத்தின் வளர்ச்சி, அதன் அறிவாற்றல் இயல், எதார்த்தம் பற்றிய கணிப்பு, எதார்த்தத்தை மனிதன் புரட்சிகர மாற்றத்துக்கு உட்படுத்தல் என்ற ஆய்வியலின் ஒற்றுமை என வரை யறுத்தார். இது ஒரு தனித்த, தத்துவார்த்த ஆய்வியல் அடிப் படையை சிருஷ்டித்தது. இந்த அடிப்படையில் லெனின் தொடர்ந்து, ஏகாதிபத்திய சித்தாந்தத்தை, சோஷலிஸ்ட்

புரட்சியின் புதிய சித்தாந்தத்தை வளர்த்தார். ஏகாதிபத்திய சகாப்தத்திலும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்திலும் மற்றும் அரசாங்கம், மனிதகுலப் பண்பாடு ஆகியவற்றிலும் சமூக வளர்ச்சியின் சட்டங்கள் பற்றிய அவரது தலையாய தத்துவார்த்தக் கருத்துக்களையும் அதன் வளர்ச்சியை ஆளுமை கொள்ளும் சட்டங்களையும் வகுத்தளித்தார்.

**தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களில்** பொருள் முதல்வாத இயக்கவியல் பிரச்சினைகளைப் பகுப்பாய்வதற்கு மூன்று மிக முக்கியமான பார்வைகளை அடையாளம் காணலாம்: (1) இயக்கவியலின் சத்தையும் சாரத்தையும், லோகாயுத உலகத்தின் வளர்ச்சிச் சித்தாந்தமாக அதன் பொதுவான வடிவத்தில் காட்டுவது (2) இயக்கவியல், விஷய ஞானத்தின் ஆய்வு, மற்றும் மார்க்சியத்தின் தர்க்கவியல் ஆகியவற்றின் ஒற்றுமையைப் பகுப்பாய்வது. (3) பொருள் முதல்வாத இயக்கவியலின் முக்கியத்துவத்தை மக்களது நடைமுறை, மாற்றம் ஏற்படுத்தும் நடவடிக்கை ஆகியவற்றின் தத்துவார்த்த அடிப்படையாக மெய்ப்பிப்பது. இந்தப் பிரச்சினைகள் **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களில்** கருதப்பட்டதுபோல், உள்ளபடியே, 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் காணக் கிடைத்த விஞ்ஞான சாதனைகள் மற்றும் நடைமுறையின் பொதுவான கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட, மார்க்சிய இயக்கவியலின் பொதுவான ஆய்வின் அடிப்படைகளது மிகவும் ஒருங்கிணைந்த விரிவான வெளிப்பாடே ஆகும். இந்த அம்சத்தில் லெனினது, **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்**, ஒரு மிக முக்கியமான மார்க்சிய-லெனினியப் படைப்பாகும். அதன் முக்கியத்துவத்தில்இந்நூல்மார்க்சின் **மூலதனம்**;எங்கெல்ஸின் **டூரிங்குக்கு எதிர்ப்பு** மற்றும் **இயற்கையின் இயக்கவியல்** ஆகியவற்றிற்குச் சமமானது. அதே சமயத்தில், மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியை அடுத்து உடனடியாகத் தொடர்ந்த வருடங்களில் லெனினது சமூக-சித்தாந்த மற்றும் புரட்சிகர நடைமுறைச் செயலாற்றல்களுக்கு **தத்துவார்த்தக்**

**குறிப்புப் புத்தகங்களே** சித்தாந்த அடிப்படையாக விளங்கியது.

பொருள் முதல் இயக்கவியலின் சாரத்தை வருணிக்கும் போது, எதிர் எதிர் சக்திகளின் ஒற்றுமையும் போராட்டமும் என்ற கோட்பாடு அதன் உச்சத்திலிருக்கிறது என லெனின் காட்டினார். "சுருங்கக் கூறின் இயக்கவியலை எதிர் எதிர் சக்திகளது ஒற்றுமையின் கோட்பாடு என வரையறுக்கலாம். இது இயக்கவியலின் சத்தையும் சாரத்தையும் உருக் கொண்டது. ஆனால் அது விளக்கங்களையும் வளர்ச்சியையும் தேவையாகக் கொண்டுள்ளது"[142] என லெனின் எழுதினார். இந்த நிலைபாடு **குறிப்புப் புத்தகங்களில்** கணிசமான விவரங் களுடன் விரிவாக்கம் பெற்றுள்ளது.

முதன் முதலாக, இயக்கவியலின் அடிப்படை மூலக்கூறு களை குறிப்பிட வேண்டும். தனது மையக் கருவின் தத்துவக் கூறுகளில் இயக்கவியலின் உச்சத்தை வளர்க்கும் போது லெனின் இதை வகுத்தளித்தார். அவரது பதினாறு மூலக் கூறுகளும் மரபு வழியில் மூன்று குழுக்களாகக் குறைந்தன. முதலாவது, விஷயத்தின் சொந்த உள்நகர்வில் புறவயப்பட்ட இயக்கத்தைப் புலப்படுத்தும் மூலக் கூறுகளிலானது: பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் வளர்ச்சி; அவற்றுள் இருக்கும். உள் முரண்பாட்டுப் போக்குகள் மற்றும் பார்வைகள்; தரப்பட்ட ஒவ்வொரு பொருளிலும் சுய வளர்ச்சியின் தோற்றுவாய் போலத் தோன்றும் அவற்றின் போராட்டம்; ஒவ்வொரு பரிணாமமும் நிகழ்வும்; இறுதியாக அனைத்து நிகழ்வுகளினதும் கூட்டு மொத்த வர்ணனை மற்றும் எதிர் எதிர் சக்திகளின் ஒற்றுமை, இரண்டாவது குழு பொருட்களுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையே பின்னிய செயல் விளைவின் இயக்கத்தைக் காட்டுகிறது. ஒவ்வொரு பிரத்தியேகப் பொருள் அல்லது நிகழ்வு மற்றும் ஒன்றுக்கொன்று இடையே உறவுகளின் ஒருமித்த தன்மை, பொதுத்தன்மை போன்ற அடிப்படை அடையாளம் காட்டுபவைகளையும், இத்தகைய முரண்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டும் வரை

முறையற்ற பரிமாணம் அவற்றின் தொடர்புகளது ஒருமிப்பு பரஸ்பர மாற்றங்கள், மற்றும் அளவு ரீதியான, குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஆகியவற்றையும் இது உள்ளடக்கிய தாகும். இறுதியாக மூன்றாவது குழு, அகவயப்பட்ட இயக்க வியல் சம்பந்தமானது, அதாவது மனித உணர்வுகளில் பிரதி பலிக்கும் லோகாயுத உலகின் பரிமாணங்கள். இங்கு புறவயப் பட்ட உலகத்தின் சட்டங்கள், அதை மனிதன் அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்துவது ஆகியவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை, அறிவாற்றல் இயலின் நிரந்தர இயல்பு, அதன் அளவு மட்டங்களின் வீச்சு, சாதாரண வடிவங்களிலான இணைப்புக்களை (சமாதான சகவாழ்வு இன்ன பிற) காரண காரியங்களுக்கும் இதர அவசியமான பின்னிய செயல்விளைவு களுக்கும் அடையாளம் கண்டு கொள்ளல் போன்றவற்றை லெனின் காட்டினார்.[143]

மேலும், லெனின், இயக்கவியல் சட்டங்களின் சாரம், இயக்கவியல் சித்தாந்தத்தின் முழுமையான அமைப்பிலும் அதன் மூப்பு நிலை ஆகியவற்றையும் சுட்டிக் காட்டினார். உள்ளுக்குள் சுய நகர்வு, மற்றும் பொருட்களின் சுய வளர்ச்சி மற்றும் லோகாயுத உலகத்தின் நிகழ்வு ஆகியவற்றின் தோற்றுவாய்களைப் புலப்படுத்தும் ஒற்றுமை மற்றும் எதிர் எதிர் சக்திகளின் போராட்டத்தின் சட்டம் ஆகியவற்றின் தலைமைப் பாத்திரத்தை அவர் காட்டினார். "இயக்கவியல் பிரச்சினை பற்றி" என்ற நூல் பொருத்தமான பிரச்சினை களில் லெனினது ஆராய்ச்சி முழுவதையும் தொகுத்துத் தரு கிறது. இதில் லெனின் எழுதுகிறார்: "எதிர் எதிர் சக்திகளின் ஒற்றுமை (தற்செயல் நிகழ்வு, அடையாளம், சமமான செயல் பாடு) நிபந்தனைக்குட்பட்டது, தாற்காலிகமானது, மாறக் கூடியது, தொடர்புடையது. வளர்ச்சியும் வேகமும் எங்ஙனம் பிண்டப் பிரமாணமாக உள்ளதோ அதே போல் பரஸ்பரம் தனித் தன்மைதான் எதிர் எதிர் சக்திகளும் பிண்டப்பிரமாண மானவையே."[144]

அளவு மாறுதல் சட்டங்களை குணாம்சமாகக் கருதிச் செயல்படும் போதும் மறுப்பை, மறுக்கும் போதும் இந்தப்

படைப்பில் லெனின் பல அடிப்படை முன்மொழிதல்களை வகுத்தளித்தார். அவை இயக்கவியல் பற்றிய மார்க்ஸ்—எங்கெல்ஸ் போதனைகளைச் செழுமைப்படுத்தின. இயக்க வியல் தாண்டல் பற்றிய அவரது விளக்கம் (அளவு மாறுதல் சட்டம் குணாம்சமாகும் போதுள்ள செயல்பாடு) விசேட முக்கியத்துவம் வாய்ந்தது: ''இயக்கவியல் மாற்றத்தை இயக்கவியலற்ற மாற்றத்திலிருந்து எது பிரித்துக் காட்டு கிறது?'' தாண்டுதல் முரண்பாடு படிப்படியாகச் செல்வதின் குறுக்கீடு. இருப்பதற்கும் இல்லாததிற்கும் உள்ள ஒற்றுமை (அடையாளம்)[145] இந்த அடிக்கோள் பல முக்கிய அம்சங் களைக் கொண்டிருக்கிறது. ஒரு இயக்கவியல் தாண்டல், படிப்படியான தன்மையின் குறுக்கீடு மற்றும் உள்முரண் பாட்டுக்கிடையேயுள்ள ஒற்றுமையில் குணாம்சப்படுத்தப் படுகிறது என்பதை லெனின் கோடிட்டுக் காட்டினார். இதன் பொருள் இந்தச் சட்டத்தின் அமுலாக்கம், எதிர் எதிர் சக்திகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தினது சட்டத்தின் அமுலாக்கத்தோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ளது என்பதே. இரண்டாவதாக ஒரு குணமாறுதல் தாண்டலில் இருப்பதற்கும் இல்லாததற்கும் உள்ள ஒற்றுமையின் மெய்ம்மையை இவ்விளக்கம் கொண்டுள்ளது. இயக்கவியல் தாண்டலின்போது, பழையன மற்றும் புதியனவற்றின் சகவாழ்வு பற்றிய மார்க்சிய வியாக்கியானத்திற்கு அதுவே இன்றியமையாத பொதுவான சித்தாந்த அடிப்படை ஆகும். எனவே தாண்டுதல் என்பது கணநேரத்தில் பழையனவற்றை துடைத்தெறிவதாகாது: (அல்லது பலவந்தமாக அகற்றுவது) ஆனால் சிறிது இடைவெளியில் இந்த இடைக்காலத்தில் பழையன, புதியனவற்றோடு ஒரு தீர்க்கமான பரஸ்பர உறவுகளுடன் சகவாழ்வை மேற்கொள்கின்றன. கொஞ்ச காலத்திற்குப் பின் ''ஒரு ஒன்றுபட்ட ஐரோப்பிய அரசு களுக்காக என்ற முழக்கம்பற்றி'' என்ற கட்டுரையில் (1915) முதலில் ஒரு நாட்டில் மட்டும் சோஷலிசம் வெற்றி முரசு கொட்டும் சாத்தியம் பற்றிய புகழ்மிக்க முடிவை வகுத்தார். அத்துடன் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸ மாற்றம்

நிகழும்போது உலக சோஷலிசம் எடுக்க வேண்டிய பொதுவான இலக்கு ரீதியான நிலைபாட்டையும் வரை யறுத்துக் கொடுத்தார். இரண்டு அமைப்புக்களுக்குமிடையே சமாதான ரீதியான பொருளாதாரப் போட்டி மற்றும் மாறுபட்ட சமூக அரசியல் அமைப்புகக்ளைக் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வு ஒரு கோட்பாடாக இருக்க வேண்டும் என்பதே அந்த நிலைபாடு.

மறுப்பை, மறுக்கும் சட்டம்—இடையீடின்றித் தொடர் கிறவை, அனைத்து வளர்ச்சிகளினதும் முன்னுக்குச் செல்லும் இயல்பு, அதன் சுருள் வட்டம் போன்ற குணநலன் போன்றவைகளைப் பரிசீலிக்கும்போது லெனின் தனது **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களில்** மூன்று முக்கிய ஒருங்கிணைந்த பாகங்களைக் குறிப்பிட்டார் இந்தச் சட்டத்தின் சாரம், இயக்கவியல் செயல்படும்போது பழையன வற்றிற்கும் புதியனவற்றிற்கும் இடையேயுள்ள பிணைப் புக்கள் புலப்படுத்தப்படும் முறை வளர்ச்சியின் புதிய அளவு மட்டங்களில் பழையனவற்றின் முற்போக்கு அம்சங்கள் பயன்படுத்தப்படும் விதம், இயக்கவியல் பரிணாமத்தின் அனைத்து நிலைபாடு மற்றும் திசைவழிகளிலும் உரிய நேரத்திலான ஒற்றுமை ஆகிய அனைத்தையும் லெனின் புலப்படுத்தினார்.

இயக்கவியல் வகைகளைப் பரிசீலனை செய்யும்போது லெனின் பலமுக்கியமான கருத்துக்களை வகுத்தளித்தார். இதில் 'வகை'யைப் பற்றிய அவரது குறிப்பு விளக்கம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். "வேறு படுத்திக் காட்டும் கட்டங்களே" வகைகள் என்கிறார் அவர். அதாவது உலகத்தை அறிவாற்றல் மூலம் ஆய்வது, அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்தி அதைத் தேர்ந்து தெளிய உதவும் ஒளிமிக்க அம்சங்கள்",[146] போன்றவை. "இயக்க வியல் ஆய்வில் வகைகள் முக்கியமானது. ஏனென்றால் உலகத்தை ஆளுமை கொள்ளும் தீர்க்கமான சட்டங்களின்

செயல்பாட்டைக் கணிக்கவும் அறிவாற்றல் ஆய்வுக்குட் படுத்தவும் அது மனிதனுக்கு உதவுகிறது. இயற்கை மற்றும் மனிதனைப் பற்றிய சட்டங்களின் ஒரு வெளிப்பாடே அவை",[147] என மேலும் சொல்கிறார்.

புறவயப்பட்ட உலகம் பற்றிய மனிதனின் விஷய ஞானத்தில் வகைகள் என்பது சில கணங்களே. அறிவாற்றல் இயல் பரிமாணத்தில், அவை இயற்கை, சமுதாயம், மனித குலத்தின் விஷய ஞானம் ஆகியவை பற்றி மனிதன் மதிப்பீடு செய்வதற்கு உதவுவதின் தன்மையை உள்ளடக்கியுள்ளதில் அதன் முக்கியத்துவம் உள்ளது.

வகைகளின் நான்கு பிரதான நோக்குகளை லெனின் பரிசோதித்தார்: முதலாவது மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி நோக்கு—லோகாயுத உலகத்தின் புறவயப்பட்ட மற்றும் மிகப்பொதுவான அம்சங்கள், மனித உணர்வின் பிரதி பலிப்பில் வகைகள் எனக் காணப்படுகின்றன. இரண்டாவது நோக்கு 'அறிவாற்றல் இயல்' என்று அழைக்கப்படலாம்—புறவயப்பட்ட உலகத்தின் மிகப்பொதுவான அம்சங்களை பொதுமைப்படுத்தி மனித மனத்தில் பிரதிபலிப்பதற்கு 'வகைகள்' உதவுகின்றன. இவ்வாறாக வெளிவட்ட எதார்த்தங்கள் பற்றி ஒரு மெய்யான விஞ்ஞான அமைப்பின் கருத்தமைவுகளை உருவாக்கி அதை அறிவாற்றல் இயலுக்கும், வியாக்கியானம் செய்வதற்கும் உலகத்தை மாற்றுவதற்கும் பயன்படுத்துதலுக்கும் உதவுகின்றன. வகைகள் பற்றிய மார்க்சிய போதனையின் மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி, மற்றும் அறிவாதார முறையியல் போக்கு லோகாயுத உலகின் சட்டங்களுக்கும், மனிதன் அதை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்துவதற்கும் நெருங்கிய உட்தொடர்பு கொண்டதாகும். இது இயக்கவியலைப் போன்றே அதனுள் பிரிக்க முடியாததாகும்.

'வகைகள்' பற்றிய மார்க்சிய போதனையின் மூன்றாவது நோக்கு ஆய்வியல் வழியிலானது என வருணிக்கப்படலாம்.

சிந்தித்தல் எப்பொழுதுமே, வகைகளைச் சுட்டிக் காட்டு கிறது. அதன் இயல்பும் அத்தகையதே. தனது உறுதி அல்லது எண்ணம் எவ்வாறிருந்தாலும் மனிதன் எப்பொழுதுமே சில 'வகைகளை'ப் பற்றித்தான் நினைக் கிறான். எனவே இயக்கவியல் ஞானத்தின் மிகவும் பொது வான வகைகள் சிந்தனையை மேலும் பயனுள்ளவைகளாக்கு கின்றன. கருத்தமைவுகள் என்ற வடிவத்தில் அது பிரதி பலிக்கும் பிண்டப் பிரமாணமான உண்மைகளைப் பெரு மளவுக்கு சார்ந்திருக்குமாறு செய்கின்றன.

வகைகளின் நான்காவதும், கடைசி பார்வையானதும் உலக கண்ணோட்டத்தோடு சம்பந்தப்பட்டதாகும். வகை களாகச் சிந்திப்பது ஒரு பிரதிபலிப்பு மட்டுமல்ல. யதார்த்-தத்தின் ஒரு கணிப்பும் ஆகும். இந்த யதார்த்தத்தில் மனிதனுக்கு எது மிகுந்த மதிப்பு வாய்ந்ததோ, அதைத் தனியாகப் பிரித்தெடுப்பதாகும். எனவே இயக்கவியல் வகைகளைத் தெரிந்து கொள்வது மனிதனின் உள்ளுணர்வில் உலகத்தைப் பற்றிய ஒரு இணக்கமான, உண்மையான சித்திரத்தை உருவாக்க உதவுகிறது. அது விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டம் ஆகும்.

வளர்ச்சியின் ஒரு பொதுவான சித்தாந்தம் என்ற முறையில் இயக்கவியல், வகைகளின் அமைப்பில் மூன்று உபஅமைப்புக்களைப் பிரித்துக் காட்டுகிறது. இதர இரண்டு அமைப்புக்களையும் தீர்மானிக்கக் கூடிய முதல் அமைப்பு உண்மையான, எதார்த்தத்தின் வளர்ச்சியில் புறவயப்பட்ட நோக்குகளைப் பிரதிபலிக்கும் வகைகளின் ஒரு குழுவே. இவை மனித உணர்வுகளில் சுயேச்சையாக நின்று நிலவு கின்றன. இந்த வகைகள் உலக இயற்கையின் அமைப்புக் களைப் புலப்படுத்துகின்றன. அதன் உள் வளர்ச்சியின் தோற்றுவாய்களை, அதன் பிரத்தியேக அம்சங்களை, வளருகின்ற அமைப்புகளுக்கிடையே உள்ள உறவுகளைப் புலப்படுத்துகின்றன. முதல் அமைப்பிலிருந்து முளைவிடும் இயக்கவியல் வகைகளின் இரண்டாவது உபஅமைப்பு

அகவயப்பட்ட இயக்கவியலை விஷய ஞானத்தின் ஒரு ஆய் வியலாக குணாம்சப்படுத்தி, புறவயப்பட்ட உலகம் பற்றிய மனித உணர்வின் இயக்கவியல் பிரதிபலிப்பு வகைகள், பிரதிபலிப்பின் அனைத்து விஷயங்களையும் கொண்ட சாரம், விஷய ஞானத்தினது இயக்கத்தின் மாதிரிகள், வடிவங்கள் மற்றும் கட்டங்கள் போன்றவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. வகைகளின் மூன்றாவது உபஅமைப்பும் அகவயப்பட்ட இயக்கமே. ஆனால் அது இயக்கவியல் அறிவாற்றலின் சத்தையும் சாரத்தையும் தீர்மானிக்கிற பொதுவான கருத்தமைவுகளைத் தழுவிக் கொண்டு, அதன் மதிப்பீட்டை வருணித்து தர்க்கவியல் செயல் பாடுகளின் அம்சங்கள் இயக்கவியல் சிந்தனையின் வழிகள் போன்ற வற்றின் சிறப்பான அம்சங்களைக் கொண்ட சித்தாந்த ரீதியான சிந்தனையின் தர்க்க வியலுக்குத் தொடர்பு கொண்டதாகும். இந்த உப அமைப்பு முதல் மற்றும் இரண் டாவது உப அமைப்புக்களிலிருந்து வந்ததாகும்.

மேலே கண்ட மூன்று உபஅமைப்புக்களும் பொருள் முதல் இயக்கவியலின் வகைகளினது பொதுவான அமைப்பை உட்கொண்டிருக்கின்றன. லோகாயுத உலகம் பற்றிய மதிப் பீட்டுச் சித்தாந்தத்தின் புறவயப்பட்ட தன்மை மற்றும் அகவயப்பட்ட தன்மை (அவற்றின் பிரிக்க முடியாத ஒற்று மையில் விஷய ஞானம் மற்றும் தர்க்கவியல் சித்தாந்தம்) இரண்டையுமே கொண்டது. இந்த ஒற்றுமை, லோகாயுத உலகின் புறவயப்பட்ட இயக்கம் உணர்வில் பிரதிபலிக்கும் போது மதிப்பீட்டுச் சித்தாந்தமாகத் தோன்றுகிறது என்ற உண்மையினால் தீர்மானிக்கப்படுகிறது. உணர்வில் உலகத்தின் பிரதிபலிப்பு பற்றிய அகவயப்பட்ட இயக்கம் சித்தாந்த ரீதியான சிந்தனையின் ஆய்வியலாகவும் தர்க்க வியலாகவும் தோன்றுகிறது.

மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் ஆகியோர் என்றுமே தர்க்கவியலின் வகைகளது ஒரு முழுமையான அமைப்பை உருவாக்கத் தங்களைப் பணித்துக் கொள்ள

வில்லை. இதற்கு மாறாக மார்க்சியமும் லெனினியமும்,வகைகளின் அமைப்பு பற்றிய பிரச்சினை, வெளி உலகம் மற்றும் மனிதகுல சிந்தனை பற்றிய மனிதனின் விஷயஞானத்தை நிரந்தரமாக விரிவுபடுத்தும் ஒரு பரிணாமம் எனக் கருதுகின்றன. முன்னர் வகைகளின் குணாம்சத்தைக் கொண்ட பல கருத்துக்கள் ஒரு புதிய, அதிக ஆழமான உள்ளடக்கத்தைத் தந்தன. மற்றொரு புறம் விஷயஞானத்தை மதிப்பீடு செய்தது பல புதிய கருத்தமைவுகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தன. அவை இன்று வகைகளின் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்றன.

**தத்துவார்த்தக் குறிப்புக்களில்**, பொருள் முதல்வாத இயக்கவியல் சித்தாந்தத்தின் பிரதான திசை வழிகளில் ஒன்று மனித அறிவாற்றலின் இயக்கவியல் மற்றும் சிந்தனையின் சித்தாந்தத் தர்க்கவியல் பற்றி அதுதரும் விளக்கமாகும். மார்க்ஸ் புலப்படுத்திய இயக்கவியல் வழிமுறையை லெனின் கீழ்க்கண்டபடி குணாம்சப்படுத்திக் காட்டுகிறார்: ''மூலதனத்தில் மார்க்ஸ் தர்க்கவியல், இயக்கவியல், மற்றும் பொருள் முதல்வாதத்தின் அறிவாற்றல் சித்தாந்தம் (மூன்று வார்த்தைகள் தேவையில்லை. ஒன்றே ஒன்றுதான்) ஆகியவற்றை ஒரே ஒரு விஞ்ஞானமாகப் பயன்படுத்தினார். இவை ஹெகல்ன் ஒவ்வொரு மதிப்பு வாய்ந்தவற்றிலிருந்தும் எடுக்கப்பட்டு பின்னர் மேலும் விரிவுபடுத்தப்பட்டவை.''[148]

இந்த வழிமுறைக்கு, அதை தர்க்கவியலின் கருத்தமைவு மற்றும் முக்கிய எண்கள், அறிவாற்றல் இயலின் கட்டங்கள், விஷயஞானத்தில் நடைமுறையின் பாத்திரம் மற்றும் இறுதியாக லோகாயுத உலகின் மனிதகுல விஷயஞானத்தின் இயக்கவியலது முழுமையான உள்ளடக்கம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தி லெனின் ஒரு திண்ணிய வடிவத்தைக் கொடுத்தார். ''இயக்கவியல் (ஹெகல் மற்றும்) மார்க்சியத்தின் அறிவாற்றல் சித்தாந்தம்.[149] மனித அறிவாற்றல் ஒரு நேர்கோடு (அல்லது தொடர்வதல்ல) அல்ல. ஒரு வளைந்த

முடிவில்லாத பல வரிசையான வளைவுகளைக் கொண்ட சுழற்சி வட்டமாகும்''[150] என அவர் எழுதினார்.

மனித உணர்வு நிலையில் உலகத்தின் பிரதிபலிப்பினால் எடுக்கப்பட்ட தலையான வடிவங்களை ஆய்ந்து லெனின் இந்தப் பரிணாமத்தின் சாரத்தை அம்பலப்படுத்துகிறார். உணர்ச்சிகள், புலன் உணர்வுகள், கருத்துக்கள் ஆகியவற்றின் இயக்கமும் அறியாமையிலிருந்து அறிவாற்றலுக்குச் செல்லும் பரிமாணத்தைப் போல் தோன்றும் கருத்தமைவுகளும், அறிவாற்றல் நிகழ்விலிருந்து அவற்றின் சாரத்தை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்தும் இயக்கவியல் மாற்றம் என முதல் ஒழுங்கு முறைச் சாரத்திலிருந்து இரண்டாவது ஒழுங்கு முறைச் சாரத்திற்கு **எல்லையில்லாமல் போவது** போன்று தோன்றுகின்றன.

அறிவாற்றல் இயல்பரிமாணம் ஒரு சுமுகமான மதிப்பீட்டுக்குட்பட்டதல்ல என்று எழுதுகிறார் லெனின்: ''ஒரு பொருளைப் பற்றிய அறிவாற்றல் இயலின் நுகர்வு எப்பொழுதுமே இயக்கவியல் ரீதியில்தான் புறப்பட வேண்டும்.''[151] ''விஞ்ஞான ரீதியான கவனிப்பு,வித்தியாசம், தொடர்பு, மாற்றம் ஆகியவைகளின் புலப்படுத்தலைக் கோருகிறது, என்பதே இதன்பொருள். அது இல்லாமல் சுலபமான பயனுள்ள உறுதிப்படுத்தல் முற்றுப்பெறாதது, உயிரில்லாதது, செத்துப்போனது...... 'இயக்கவியல் கணம்' **ஒற்றுமையின்** தெளிவான புலப்படுத்தலைக் கோருகிறது. அதாவது எதிர்மறைக்கும் நேர்காட்சிக்குமுள்ள தொடர்பு. எதிர்மறையில் இந்த நேர்காட்சியின் பிரசன்னம்.''[152] பின்னர் இது இவ்வாறு தொடர்கிறது. பிணைப்புகளின் அளவு மற்றும் வகைகள் மற்றும் மாற்றங்கள் போன்று அதே வழியில் அறிவாற்றல் இயலின் பரிமாணம் எல்லையில்லாதது. புலன் உணர்வு மட்டுமே சார்ந்த பொருட் கூறுகள் வார்த்தைகளின் வடிவத்தில் தோன்றுகின்றன. அதாவது இறுதி எண்ணிக்கையில், கருத்தமைவுகள்.

புலன் உணர்வு மட்டுமே சார்ந்த விஷயஞானத்தின் கருத்தமைவு உயிருடன் கூடியுள்ள புலன் உணர்வுக் கருத்தமைவுக்கு சரிசமமானதா? நிச்சயமாக இல்லை. புலன் உணர்வு மட்டுமே சார்ந்ததும், பகுத்தறிவு சார்ந்ததும், நேரடி உணர்வு வகைகள் (உணர்ச்சிகள் போன்றவை) மற்றும் மறைமுக (கருத்தமைவு) பிரதிபலிப்பில் புறவயப் பட்ட உலகத்தின் பிரதிபலிப்பில் உள்ள நோக்குகள் ஆகும். உயிருடன் கூடியுள்ள புலன் உணர்வு லெனினால் மிகத் தெளிவாகக் குணாம்சப்படுத்தப்பட்டுள்ளது. ''முதலில் **திடீர் ஒளியினால்** மனப்பதிவுகள். பின்னர் **ஏதோ ஒன்று** முகிழ்க்கிறது—அதற்குப்பின் **குணநலத்தின்** கருத்தமைவு. (பொருள் அல்லது நிகழ்வின் தீர்மானமான முடிவு) மற்றும் **அளவு** வளர்க்கப்படுகிறது.''[153] இதன் விளைவாக உயிருடன் கூடியுள்ள புலன் உணர்வின் பரிமாணம் நேரடியான புலன் உணர்வு மட்டுமே சார்ந்த விஷயஞானம் (மனப்பதிவுகள்) மட்டுமல்லாமல், சில மனத்தோற்றங்களையும் (ஏதோ ஒன்று, குணநலன், ஒரு பொருள் மற்றும் அளவின் தீர்மான முடிவு) தன்னுள் கொண்டதாகும். உயிருடன் கூடியுள்ள புலன் உணர்வு மற்றும் மக்களின் நடைமுறைச் செயல் பாட்டின் ஒற்றுமையை லெனின் வலியுறுத்திக் கூறினார். அறிவாற்றல் இயல் பரிணாமம் தர்க்கவியல் கருத்தமைவு களை அமைப்பதாகும். ஆனால் அது நடைமுறைச் செயல் பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அறிவாற்றல் இயலின் முதல் கட்டத்தில் இந்தக் கருத்தமைவுகள் தோன்றுகின்றன.

''மிகவும் இலகுவான சாதாரணமான பொருட்திரட்சி, உடனடிப் பொருண்மை''[154] போன்றவை அதன் முதல் கட்டத்தில் விஷயஞானத்தின் நேரடி விளைவு என லெனின் சுட்டிக்காட்டினார். இத்தகைய ஒரு கண் தோற்றம் அறிவாற்றல் இயல் பரிமாணத்தில் ஒரு அவசியமான தொடர்பு, திண்ணிய பொருளை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்தும்போது இன்றியமையாத ஒன்று.

மார்க்ஸ் இந்தப் பரிமாணத்தை தனது **அரசியல் பொருளாதாரத் திறனாய்வுக்கு ஒரு பங்களிப்பு** என்ற நூலின் முன்னுரையில் வருணிக்கிறார். உயிருடன் கூடியுள்ள புலன் உணர்வின் போக்கில் அனைத்துமே சிக்கலானவை என்ற தெளிவேயில்லாத கருத்திலிருந்து......பகுப்பாய்வுடனான அதிகரித்த சாதாரணக் கருத்தமைவுகளுக்கு வரலாம். கற்பனையான திண்ணிய வடிவில் ஒருவன் மேலும் மேலும் நுண்ணிய கண்தோற்றங்களை நோக்கி மிகச் சாதாரணமான வரையறைகளை அடையும் வகை நகர்வான்." இந்தப் பாதை பகுப்பாய்வின் மூலம் சில அருவமான உறவுகளை தனித்துப் பிரித்தெடுப்பது என மார்க்ஸ் குணாம்சப்படுத்துகிறார். இது பின்னர் உடனடிக் கருத்திலிருந்து அருவமான வரையறைக்குப் புறப்பட ஒரு அடிப்படையாகப் பணி புரிகிறது. இத்தகைய "அருவமான பொது உறவுகள்" அறிவாற்றல் இயலின் ஒரு உயர்ந்த இரண்டாவது கட்டத்திற்கு துவக்கப் பொருளாக விளங்குகின்றன.[155]

இயக்கவியல் சிந்தனை, புறவயப்பட்ட உலகை, அது வளரும்போது தொடர்ச்சியின் ஒரு மெய்யான விஞ்ஞானக் கருத்தமைவை வழங்குகிறது. இதை இரண்டாவது ஒழுங்கு முறையின் ஒரு கண் தோற்றம் என வரையறுக்கலாம். அவசியமாகவே இது முதல் ஒழுங்குமுறையின் கண் தோற்றங்களிலிருந்து அறிவாற்றல் இயலில் திண்ணிய மறு உருவாக்கத்திற்கு ஒரு ஏற்றமே. அதாவது லோகாயுத உலகின் புறவயப்பட்ட இயக்கத்தை மனித சிந்தனையின் அகவயப்பட்ட இயக்கமாகப் புலப்படுத்துவது. உயிருடன் கூடிய புலன் உணர்வுக் கட்டத்தில், புலன் உணர்வு சார்ந்த ஞானம் உற்பத்தி செய்கிற தனித்தனியான தகவல், ஒரு பொருளாக, அல்லது அறிவாற்றல் இயலின் சிறு சிறு அறைகளாகப் பணியாற்றுகிறது. இதிலிருந்து இயக்கவியல் சிந்தனை, உலகு தழுவிய தொடர்ச்சியான முழுமையான புறவயப்பட்ட உலகின் வளர்ச்சியை அதன் கட்டுமான மூலக்கூறுகளில் தொடர்புகள் மற்றும் சட்டங்களின் எல்லையில்லா வகையில் விஷய ஞானத்தைக் கட்டுகிறது.

புறவயப்பட்ட உலகின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை, சீர்மிகு சிறப்பிலிருந்து முரண்பாடுகள் வரை, ஒரு முரண்பாட்டிலிருந்து மற்றொரு முரண்பாடு வரை இன்ன பிறவற்றைப் புலன் விசாரணை செய்வதின் மூலம் அறிவாற்றல் இயலின் இரண்டாவது கட்டத்தை லெனின் கவனத்தில் கொண்டார். இது அறிவாற்றல் இயலின் இரண்டாவது கட்டத்தின்—விஞ்ஞானக் கருத்துப் பொருளின் சாரம் என்பது கண்கூடு. இந்தப் பரிணாமத்தை அவர் மிக விரிவான முறையில் வருணிக்கிறார்: "அதற்குப்பின் கற்றறிதல் மற்றும் பிரதிபலிப்பின் நேரடிச் சிந்தனை. அடையாளத்தின் அறிவாற்றல் இயலுக்கு—வித்தியாசத்தின் ஆதாரத்தின்—சத்தும் சாரமும் நிகழ்வுக்கு எதிராக இருப்பதற்கு — காரண காரியங்களுக்கு — இன்ன பிற வற்றிற்கு."[156]

இந்தப் பொதுவான சித்தாந்த முன்மொழிதல்கள் லெனினின் மற்றப் படைப்புக்களில் திண்ணிய வெளிப்பாட்டைக் கொண்டதாயுள்ளன. மிகவும் தெளிவாக அவரது **ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் மிக உச்ச கட்டம்** என்பதில் வெளிப்பாடு பெறுகின்றன.

விஞ்ஞானத் தோற்ற உணர்வின் பரிணாமத்தை தோற்றப் பொருளிலிருந்து திண்ணிய பொருளுக்குச் செல்வது என லெனின் வருணிக்கிறார். இந்தப் பரிணாமத்தின் புலன் விசாரணையாவது: அனைத்துச் சாத்தியப்பாட்டிலும் ஆரம்ப அல்லது சம்பிரதாயமான தர்க்கவியலில் தெளிவாகத் தெரிகிற இயக்கவியல் தர்க்கவியலின் கூடமை, சிந்தனையின் மிகச் சாதாரண பரிமாணங்களைத் துருவி ஆராய்கிறது. குறிப்பாக உயிருடன் கூடிய புலன் உணர்வுக் கட்டத்தில் நிகழ்வதை ஆராய்கிறது. "மெய்ம்மையின் திறந்து விடப்பட்ட கூட்டுமொத்தக் கணங்களை குறித்துக் கொள்ளும்போது (ஜாக்கிரதையாகக் குறித்துக் கொள்ள வேண்டும்) அது இயக்கவியல் அறிவாற்றல் பரிணாமத்தின் சாரத்திற்குச் சமமாகிறது."[157] அது அறிவாற்றல் இயலின்

இரண்டாவது கட்டம் அதுவே இயக்கவியல் தர்க்க நடவடிக் கையின் ஈட்டி முனை என லெனின் வலியுறுத்திக் கூறினார்.

சித்தாந்தவியல் சிந்தனையின் தர்க்கம் பற்றிப் பேசும் போது லெனின், ''இயக்கவியலே மார்க்சியத்தின் தர்க்க வியலாகும். ஏனென்றால் சம்பிரதாயமான தர்க்கத்துக்கு மாறாக இயக்கவியல் தர்க்கம், சிந்தனையின் வெளிவடிவங் களது விஞ்ஞானம் அல்லாமல் வளர்ச்சியின் சட்டங்களது விஞ்ஞானமாகும் அனைத்து லோகாயுத இயற்கை மற்றும் ஆன்மீகம் தொடர்பான பொருட்களின் விஞ்ஞானமாகும் என தனது தத்துவக் கூறுகளை லெனின் வரையறுத்தார். அதாவது கூட்டு மொத்தம். உலகத்தின் **வரலாற்றின்** விஷய ஞானம் பற்றிய முடிவு.''[158] அதே நேரத்தில் அவற்றின் உள்ளடக்கத்திலிருந்து வேறுபடுத்தப்பட்ட சிந்தனையின் வடிவங்களை மட்டும் பயில்வது விரிவாக்கம் பெற்ற உண்மைக்கு உதவாது; எனவே சம்பிரதாயமான தர்க்க வியலின் தத்துவக் கூறுகளை பிண்டப் பிரமாணமாக்குவது சந்தேகமில்லாமல் அவற்றின் சொந்த பிரத்தியேகத் துறையில் அமுலாக்கப்பெறும். அது தவறுகளுக்கும் போலித் தனத்திற்கும் இட்டுச் செல்லும்.

''மூலதனத்தில்'' மார்க்ஸ், தர்க்கவியல், இயக்கவியல், பொருள்முதல் வாதம் பற்றிய ஞானத்தின் ஆய்வியல் (மூன்று வார்த்தைகள் அவசியமில்லை எல்லாமேஒன்றுதான்) ஆகிய மூன்றையும் ஒரே விஞ்ஞானமாகப் பயன்படுத் தியது,[159] மனித உணர்வுகள் லோகாயுத உலகின் புறவயப் பட்ட இயக்கவியலை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன என்பதைத்தான் புலப்படுத்துகிறது'' என்றார் லெனின். எனவே இயக்கவியலின் சட்டங்கள், ஒரே சமயத்தில் புறவயப்பட்ட உலகின் மற்றும் மனித உணர்வுகளில் அதன் பிரதிபலிப்புச் (விஷய ஞானத்தின் ஆய்வியல்) சட்டநிலன் மற்றும் சிந்தனையின் சித்தாந்தவியல் (தர்க்கவியல்) சட்டங்களுமாகும்.

இந்த ஒற்றுமை, கருத்தமைவுகளின் இயக்கவியலில் வெளிப்படுத்தப்படுகிறது, ''வரையறைக்குட்பட்டது? இதன்

பொருள், ஒரு முடிவை நோக்கி **நகர்வது**! ஏதோ ஒன்று?—இதன்பொருள் **மற்றொன்று அல்ல** என்பது. பொதுவாக இருப்பது?—இதன்பொருள் இத்தகைய உறுதி நிலையற்ற தன்மையிலிருப்பது = இல்லாதிருப்பது. கருத்தமைவுகளின் அனைத்துப் புறங்களிலும் ஒருமித்த நெளிவு சுளிவுத் தன்மை; எதிர்மறைகளை அடையாளம் காட்டுவதற்குக் கொண்டு செல்லும் நெளிவு சுளிவுத் தன்மை—அதுவே விஷயத்தின் சத்தும் சாரமும். இந்த நெளிவு சுளிவுத்தன்மை அகவயப்பட்ட முறையில் பயன்படுத்தப்படுகிறது = பல வகையானவற்றிலுமிருந்து எடுத்து திரட்டித்தருவது மற்றும் போலித்தனம். **புறவயப்பட்ட** முறையில் பயன்படுத்தப்படும் நெளிவு சுளிவுத் தன்மை. அதாவது பொருள் முதல் பரிமாணம் மற்றும் அதன் ஒற்றுமையின் அனைத்துப் பக்கங்களையும் பிரதிபலிப்பது இயக்கவியலாகும். அதுவே உலகத்தின் நிரந்த வளர்ச்சியின் துல்லிய பிரதிபலிப்பு.''[160]

இறுதியாக மனிதனது விஷய ஞானத்தைப் பற்றிய லெனினது பொதுவான வர்ணனை, விஷய ஞானம் மற்றும் நடைமுறையின் ஒற்றுமையே, இயக்கவியல் அறிவாற்றலின் சாரம் என்ற முக்கியமான முடிவு விசேடமாக வலியுறுத்தப் படவேண்டும்: ''திண்ணிய பொருளிலிருந்து புறப்படும் சிந்தனை, கண்தோற்றப்பொருளை நோக்கிப் போவது—அது **துல்லியமாக** இருக்குமானால்......**உண்மையிலிருந்து** ஓடிப்போகாமல் அதை நெருங்கி வருகிறது......உயிருடன் கூடிய புலன் உணர்விலிருந்து அருவமான சிந்தனைக்கு, **அதிலிருந்து நடைமுறைக்கு**—இதுவே **உண்மையை** அறிவாற்றல் இயல் மூலம் காண்பதற்கு, புறவயப்பட்ட எதார்த்தத்தை அறிவாற்றல் இயல் மூலம் காண்பதற்கு இயக்கவியல் பாதையாகும்.''[161] அறிவாற்றல் இயலின் இயக்கவியல், மார்க்சிய அறிவாதாரமுறை, மற்றும் இயக்கவியல் தர்க்கம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கு இதுவே அவசியமான அடிப்படை ஆகும். மனிதனது உணர்வில் காணப்படும் புறவயப்பட்ட உலகின் பிரதிபலிப்பு வடிவங்கள்

உணர்வுகளுக்கு மட்டுமே உரித்தான உரைகளின் வகைகளல்ல; ஆனால் மனித உணர்வில் புற வயப்பட்ட உலகின் உள்ளபடியேயான பிரதிபலிப்பாகும். அறிவாற்றல் இயல்பு மற்றும் நடைமுறையின் மூலம் லோகாயுத உலகத்தைக் காண்பது ஆகியவற்றின் ஒற்றுமையை லெனின் பகிரங்கப் படுத்தினார் என்ற உண்மை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதை அவர் லோகாயுத உலகத்துடன் மனிதனது பிண்ணிய செயல்விளைவின் பரிணாமம் என வருணிக்கிறார்: **மனிதனது நடைமுறைச் செயல்பாடுகள், அவனது உணர்வுகளை திரும்பத் திரும்ப பல்வேறு விதமான தர்க்கவியல் புள்ளிகளுக்கு "பல்லாயிரம் மடங்கு, பலலட்சம் மடங்கு புள்ளிகளுக்கு இட்டுச்செல்கின்றன. அவ்வாறானால் இந்தப் புள்ளிகள் வெளிப்படையான உண்மைகளின் முக்கியத் துவத்தைப் பெறமுடியும் இதைப் பின்குறிப்பில் பார்க்கவும்**.[162] லெனினது இறுதியான முடிவு கீழ்க்கண்டதாகும்: "மனிதன் தனது **நடைமுறையின்** மூலம் அவனது கருத்துக்களின் கருத்தமைவுகளின், விஷய ஞானத்தின், விஞ்ஞானத்தின் திட்டவட்டமான துல்லியத்தன்மையை நிரூபிக்கிறான்".[163] தெளிவாக, மனிதனது நடைமுறைக்கு, அவனது இதயத்தின் அடி ஆழத்திலிருந்து வரும் அவசியங்கள் மற்றும் தேவைப் பொருட்களுக்கேற்ப புறவயப்பட்ட உலகையும் அவனையும் ஆக்க பூர்வமாக, பயனுள்ளதாக மாற்றுவதற்கு, மனிதன் இந்தக் கருத்தமைவுகளையும், விஷய ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் தேவையாகக் கொண்டிருக்கிறான்.

இப்பொழுது நாம், அவரது **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களில்** லெனின் ஆக்க பூர்வமாக வளர்த்துள்ள மற்றொரு தொகுதிக் கருத்துக்களை அணுகுகிறோம். அது இயக்கவியல், மக்களின் புரட்சிகர மாற்றங்களின் நடவடிக்கைச் சித்தாந்தம் என்பது சம்பந்தப்பட்டதாகும். "மனிதனின் உணர்வுகள் புறவயப்பட்ட உலகைப் பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல் அதை உருவாக்கவும் செய்கின்றன....அதாவது உலகம் மனிதனுக்கு மனநிறைவைத்

தரவில்லை. மனிதன் தனது நடவடிக்கைகளின் மூலம் அதை மாற்ற முடிவு செய்கிறான்." [164] என லெனின் கூறினார். இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் இயக்க வியல் சித்தாந்தத்தில் உள்ள நடைமுறை, அறிவாதார முறை இயலின் ஒரு வகை, உண்மையின் ஒரு கட்டளை விதி இன்னபிற என்பது மட்டுமல்லாமல் மனிதனது நடை முறைச் செயல் பாடுகளின் ஒரு சித்தாந்தமாக இயக்க வியலின் ஒரு முக்கிய வகையாகவுமாகும். லெனின் இந்தப் பிரச்சினையின் எண்ணற்ற சிக்கல் நிறைந்த நோக்குகளையும் குறிப்பிடுகிறார். பொருளின் இயக்கம், செயல்பாட்டின் விஷயம், செயல்பாடு மற்றும் அதன் லட்சியம், செயல்பாடு மற்றும் அதன் விளைவு, செயல்பாடு மற்றும் அதன் கணிப்பு, இறுதியாக மனிதனின் சித்தாந்த மற்றும் நடை முறைச் செயல்பாடுகளின் புதிய கடமைகளை உணர்வதின் அடிப் படை போன்றவை.

லெனினது நடை முறை பற்றிய விளக்கக் குறிப்பில் ஒரு தனித்தன்மையுடன் கூடிய முக்கியமான அம்சம் விசேடமாக வலியுறுத்தப்படுகிறது; "நடைமுறை விஷய ஞானத்தை (சித்தாந்த) விட உயர்ந்தது. ஏனென்றால் மெய்ம்மையானது என்ற அந்தஸ்துடன் உடனடிப் பலனை வழங்கும் மெய்ம்மையாகவும் அது உள்ளது." [165] லெனினது கருத்துப்படி நடைமுறை கீழ்க்கண்டவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளதாகும்: (1) ஒரு அகவயப்பட்ட முடிவு (2) வெளிப்புறச் சாதனங்கள் (மனிதனின் உபகரணங்கள்) (3) அகவயப்பட்ட மற்றும் புறவயப்பட்டவைகளின் தற்செயல் நிகழ்வுகள். [166] எனவே தனக்கென உலகத்தைப் பற்றி ஒரு புறவயப்பட்ட சித்திரத்தை அமைத்துக் கொண்ட மனிதனது நடவடிக்கை வெளிப்புற மெய்ம்மையை **மாற்றுகிறது**." [167] அகவயப்பட்ட தன்மையின் கருத்தமைவு கீழ்க்கண்டபடி வரையறுக்கப்பட்டுள்ளது: "அகவயப்பட்ட தன்மை நிர்மூல மாக்குவதற்கான ஒரு **தூண்டுதல்**......பிரித்தெடுத்தல் (பொருளிலிருந்து கருத்தை)" [168] அகவயப்பட்ட தன்மை, உலகத்தைப் பற்றிய மனிதனின் அறிவாற்றல் இயலின்

உள்ளடக்கமாக இந்த உலகத்திலிருந்து சுதந்திரமான ஒன்றாகத் **தோன்றுகிறது** என்ற பொருளில் "பிண்டப் பிரமாணமான உண்மையில் மனிதர்களின் முடிவுகள் புறவயப்பட்ட உலகினால் தோற்றுவிக்கப்படுகிறது. முன் அறிந்து சொல்லப்படுகிறது — கொடுக்கப்பட்ட ஏதோ ஒன்றில் அது இருப்பதாக அவர்கள் பார்க்கிறார்கள். ஆனால் மனிதனுக்கு, அவனது முடிவுகள் உலகத்திற்கு வெளியேயிருந்து எடுக்கப்படுகின்றன. உலகத்திலிருந்து சுதந்திரமானவை எனத் தோன்றுகிறது. [169] எனினும் மனித நடவடிக்கைகளும் அதே போல் அறிவொற்றல் இயலும் லோகாயுத உலகத்தை ஆளுமை கொள்ளும் புறவயப்பட்ட சட்டங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. [170] எனவே இந்த நடவடிக்கையின் விளைவு "அகவயப்பட்ட அறிவாற்றல் இயல் மற்றும் **உண்மையிலேயே இருக்கின்ற புறவயப்பட்ட** நியதி ஆகியவற்றின் ஒரு சோதனை ஆகும்." [171] மனிதனது நடவடிக்கைகளின் இலட்சிய ஈடேற்றத்தின் நடை முறையில் ஏற்படும் தோல்விகள் புறவயப்பட்ட யதார்த்தங்கள் பற்றிய ஞானம் இல்லாமையில் முளை விடுகின்றன. அதன் சட்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில் இல்லை [172] என்று லெனின் கூறுகிறார். எதிர் மாறாக உலகத்தின் மெய்யான சட்டங்களைப் பற்றிய ஞானம் நடை முறைச் செயல் பாடுகளில் அதை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்துவது போன்றவை மனிதர்கள் தாங்களாகவே வகுத்துக் கொண்ட இலட்சியங்களின் சாதனைக்கு இட்டுச் செல்கின்றன.

மக்களது நடை முறைச் செயல் பாடுகளில் மதிப்பீட்டு அணுகும் முறைகளின் இடம், பாத்திரம் அறிவாற்றல் இயலில் மதிப்பைப் பற்றிய லெனினது கருத்துக்கள் மிக முக்கியமானது. முதன்முதலாக முன் வைத்துள்ள மதிப்பீட்டு அணுகும் முறை மனிதனது அறிவாற்றலின் முழுமையான பகுதியிலும் இல்லாமல் தீராத ஒரு உறுப்பு என்ற அவரது கருத்தை நாம் வலியுறுத்திக் காட்ட வேண்டும். அதாவது

உயிருடன் கூடிய புலன் உணர்வுக்கட்டத்திலும், தோற்றச் சிந்தனை உணர்வின் கட்டத்திலும் ஆக இரண்டு கட்டங்களிலும். நடை முறைச்செயல்பாடுகளில் இந்த அணுகும் முறை விசேட முக்கியத்துவத்தை அடைகிறது. லெனின் கூறியது போல் 'நல்லவை' வெளிப்புற மெய்ம்மையின் கோரிக்கையாகும். அதாவது நல்லவை மனிதனின் நடை முறையினால் புரிந்து கொள்ளப்படுகிறது= கோரிக்கை (1) வெளிப்புற மெய்ம்மையினாலும் (2) [173] அது தொடர்கிறது. ''நல்லவை'' ''நன்மை'' மற்றும் இதரமதிப்பீட்டுக் கருத்தமைவுகள் போன்றவை அவனது அறிவாற்றல் இயலுக்கும் மாறுதலுக்கும் உட்படுத்தப்பட்ட உலகின்பால் மனிதனது உறவுகளின் வெளிப்பாடுகளே. அறிவாற்றல் இயல் மற்றும் மாற்றத்தின் இலட்சியங்கள் மக்களின் தேவைகளை உருக்கொண்டிருப்பதால் அவற்றின் வளர்ச்சியின் பால்பட்ட தீர்க்கமான சட்டங்களைத் தொடர்ந்து மதிப்பீட்டு அணுகும் முறை, உலகத்தை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்தும் பொதுவான பரிணாமத்தின் இன்றியமையாத ஒரு உறுப்பாகிறது. இதற்கு நேர் எதிராக: இலட்சியங்களும் நடவடிக்கைகளும் தீர்க்கமான சட்டங்களுக்கு முரண்படுமானால் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவாற்றல் இயல் இத்தகைய இலட்சியங்களையும் நடவடிக்கைகளையும் எதிர்க்கும். உதாரணமாக மரணப்படுக்கையிலிருக்கும் சுரண்டும் உறவுகளின் கெஞ்சிக் கூத்தாடிக் காரியம் சாதிக்க விழைபவர்கள் தங்களது வர்க்கச் செயல்பாடுகளை மெய்ம்மைப் படுத்தவும், நியாயப்படுத்தவும் முனைவதில் இது நிகழ்கிறது. இத்தகைய ஒரு அணுகும் முறை விஞ்ஞானத்திற்கு விரோதமானது; மனிதத்துவத்திற்கு எதிரானது. ஏனென்றால் அதன் கூர்முனை பெரும்பான்மையாளவர்களது அதாவது உழைக்கும் மக்களது நல உரிமைகளுக்கும் தேவைகளுக்கும் எதிராக திருப்பப்பட்டுள்ளது.

விஞ்ஞான அறிவாற்றலின், முன்னதாகவே விஷயங்களை அறிந்து கூறும் பாத்திரத்தைக் கணித்து லெனின்

எழுதுவதாவது: "இந்தக் கருத்தமைவு (அறிவாற்றல் இயல்) 'இருக்கக் கூடியதில்' (உடனடி நிகழ்லில்) உள்ள சத்தையும் சாரத்தையும் (காரணகாரியம், அடையாளம், வேறுபாடு, இன்னபிறவற்றின் சட்டங்கள்) புலப்படுத்துகிறது—இதுவே (அனைத்து விஞ்ஞானங்களதும்) அனைத்து மனித அறிவாற்றல் இயலின் பொதுவாக உள்ள துல்லியமான **பொதுப் போக்காகும்.** [174] ஆனால் அறிவாற்றல் இயலின் இந்தப் போக்கு நடைமுறையின் மூலம் தொடர்பு படுத்தப்பட்டு மெய்ப்பிக்கப்படுகிறது. லெனின் வலியுறுத்துகிறார். "உண்மைகளின் மூலமோ அல்லது நடை முறையின் மூலமோ முறையாகச் சோதிக்கப்படுவது காணப்பட வேண்டும்...... பகுப்பாய்வின் **ஒவ்வொரு** அடியிலும்." [175] அதாவது நடை முறையென்பது மக்களது இலட்சியங்களின் ஈடேற்றமாகாது. பரிசோதனையும் அவற்றின் கருத்துக்களது மெய்ம்மையும், அத்துடன், அறிவாற்றல் இயல் விஷயத்தை எதிர்நோக்கும் புதிய கடமைகளை விளக்கிப் புரிந்து கொள்ளச் செய்தலும் தேவை.

**தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்** இதர பல தத்துவார்த்தப் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்களையும் ஏராளமாகத் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக அவை கருத்து முதல் வாதத்தையும், வறட்டுக்கோட்பாடுகளையும் விமர்சித்தன. தத்துவார்த்தச் சிந்தனையின் உலகு தழுவிய வளர்ச்சியின் மார்க்சிய நிலைபாடுகளைக் கணித்து தத்துவத்தின் பல்வேறு சிந்தனைகளையும் போக்குகளையும் மதிப்பீடு செய்தன. இதுவே அந்தப் புத்தகத்தை மார்க்சியத் தத்துவத்தின் ஒரு தலை சிறந்த இலக்கியப் படைப்பாக்கியது மார்க்சிய-லெனினிய சிந்தனையை எதிர் நோக்கியுள்ள கடமைகள் மேலும் சிக்கல் நிறைந்ததாகும் போது இந்தப் புத்தகத்தின் முக்கியத்துவம் திட்பமான முறையில் அதிகரிக்கிறது.

**தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களில்** வகுத்தளிக்கப்பட்ட கருத்துக்கள், முதலாளித்துவத்தை எதிர்த்த பாட்டாளி

வர்க்கப் புரட்சிப் போராட்டத்தில் பல திண்ணிய பிரச்சினை களை சித்தாந்த ரீதியாக மெய்ம்மைப்படுத்துவதற்கு உதவின. இதில் முதலாளித்துவ சமுதாய வரலாற்றில் ஏகாதி பத்தியத்தின் இடம் பாத்திரம் பற்றிய அவரது சமுதாய-தத்துவார்த்தக் கருத்துக்களும் அதேபோல் சோஷலிசப் புரட்சியின் இலக்கு, உத்திகள் மற்றும் 20-ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளின் சமூக, விஞ்ஞானத் தொழில் நுட்பம் பற்றிய அவரது கருத்துக்களும் விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## 6. ஏகாதிபத்தியம் மற்றும் சோஷலிஸ்ட் புரட்சிகளின் சகாப்தம்

முதலாவது உலகப்போர் சமயம் அவர் எழுதியவற்றுள் லெனின் மிக விரிவான முறையில் 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் சமூக வளர்ச்சியின் இயக்கவியலைப் பகுப்பாய்வு செய்திருந்தார். இந்தக் காலகட்டம் பல குணாம்ச ரீதியில் புதிய நிகழ்வுகளையும் பரிணாமங்களையும் கண்ட காலகட்ட மாகும்; மனிதகுலம் அதன் வளர்ச்சியில், ஒரு புதிய கட்டத்தில் நுழைந்துள்ளதை மற்றும் எண்ணற்ற புதிய அம்சங்களைச் சித்தரிக்கின்ற காலகட்டமாகும். இந்த ஆண்டு களில் வெளிவந்த சமூக-தத்துவார்த்த இலக்கியங்கள் இந்தப் புதிய காலகட்டத்தின் சத்தையும் சாரத்தையும் விரிவான முறையில் விவாதித்தன. எனவே மார்க்சியத் தத்துவார்த்த மற்றும் சமூக சிந்தனை, புதிய சரித்திரச் சூழல்களில் சமுதாயப் புரட்சியின் சட்டங்களின் அமுலாக்கத்தின் விசித்திரத்தன்மைகளைப் புலன் ஆய்வு செய்ய வேண்டிய கடமையை எதிர் நோக்கி நின்றது. இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் இலக்கு மற்றும் உத்திகள், மனித சமுதாயத்தின் பல்வேறு பரப்புக்கள் மற்றும் பிரதேசங்களின் ஒட்டு மொத்தப் பிரத்தியேக வளர்ச்சி மற்றும் அதனுள் இரண்டறக் கலந் துள்ள சமூக மாற்றங்களின் சாரம் ஆகியவற்றின் கடமை

களையும் எதிர்நோக்கி நின்றது. இந்தப் பிரச்சினை களனைத்தும் அந்தக் காலகட்டத்தில், சமூக அரசியல் மற்றும் தத்துவார்த்தக் கூறுகள் பற்றிய லெனினது படைப்புக் களிலும், உரைகளிலும் பிரதிபலிக்கப்பட்டன.

20-ம் நூற்றாண்டின் திருப்பத்தில் ஏற்பட்ட புதிய வரலாற்றுச் சகாப்தம் பற்றிய அவரது பரிசோதனை மிக முக்கியமானது. அதன் சத்தையும் சாரத்தையும் அவர் **ஏகாதிபத்தியம்** என குணாம்சப்படுத்தினார். 19-ம் நூற் றாண்டின் கடைசியில் அவர் தனது சித்தாந்தப் பணியைத் துவக்கியபோது, அந்தக் காலகட்டம் ''உற்பத்தி முறைகளில் மிகத்துரிதமாக மாற்றங்கள் ஏற்பட்டன; உற்பத்தியில் அளப் பரிய முனைப்பு காணக் கிடைத்தது, உறவு முறைகளில் தனியாரைச் சார்ந்திருத்தல், முடியாட்சி முறை போன்ற வற்றின் அனைத்து வடிவங்களும் மறைந்து போனநிலை; பெரிய எந்திரத்தொழில் மையங்களின் செல்வாக்கு,[176] இன்ன பிறவற்றால் குறிப்பிடப்பட வேண்டிய காலகட்டம்'' என்பதை லெனின் குறிப்பிட்டுக் காட்டினார். சமுதாய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகிவிட்டது, அதன் உள்ளடக்கம் முதலாளித்துவ வளர்ச்சியில் ஒரு விசேட கட்டம்[177] அதாவது ஏகாதிபத்தியம் என 1912-ம் ஆண்டுக்கும் 1914-ம் ஆண்டுக்கும் இடையில் லெனின் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்.

ஏகாதிபத்தியக் கருத்தமைவு பற்றி லெனின் ஒரு தொலைநோக்கான, விரிவான பகுப்பாய்வை வழங்கினார். அதன் முதலாளித்துவ சந்தர்ப்பவாத வியாக்கியானங்களை மிகக்கடுமையாக விமர்சித்தார். உதாரணமாக, கவுட்ஸ்கி ஏகாதிபத்தியம் என்பது சில வர்க்கங்களின் கொள்கை நிலை அல்லது சில ஆட்சியாளர்களின் சொந்த நடவடிக்கை யாகவும் கூட இருக்கலாம் எனக் கருதினார். சில நாடுகளின் பிரதேச விஸ்தரிப்பு, மற்றும் பிற பிரதேசங்களை தன் நாட்டுடன் இணைத்துக் கொள்ளல் போன்றவற்றின் விளைவைக் குறித்துக் காட்ட ஏகாதிபத்தியக் கருத்தமைவு

வரலாற்று ரீதியாக முதலாளித்துவ சகாப்தத்துக்கு வெகு காலத்திற்கு முன்னரே முகிழ்த்து விட்டது என அவர் காட்டினார். இருந்த போதிலும் 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்த பதப்பிரயோகம் ஒரு புதிய சமுதாய பொருளாதார அர்த்தத்தைப் பெற்றது. ''காலனி ஆதிக்கக் கொள்கையும் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவத்தின் சமீபத்திய கட்டத்திலும் ஏன் முதலாளித்துவத்திற்கும் முன்னரேயே நின்று நிலவின. அடிமைத்தனத்தைத் தோற்றுவித்த ரோமசாம்ராஜ்யம் ஒரு காலனி ஆதிக்கக் கோட்பாட்டைப் பின்பற்றியது. ஏகாதிபத்தியத்தைக் கடைப்பிடித்தது''[178] என லெனின் எழுதினார். எனினும் பிரத்தியேக சமூகப் பொருளாதார அமைப்பைக் கணிக்காமல் இரண்டாவது அகிலத்திலிருந்து வந்த முதலாளித்துவ வரலாற்று ஆசிரியர்களும், சந்தர்ப்பவாதச் சித்தாந்த கர்த்தாக்களும் ஏகாதிபத்தியத்தின் பன்முகத் தோற்றங்களைப் பொதுவான பதப்பிரயோகத்தில் நியாயப்படுத்தும் முயற்சிகளுக்கு இந்த உண்மைகள் எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை. இந்த முயற்சிகள், ''தவிர்க்க முடியாதபடி உப்புச்சப்பில்லாத அற்பத்தனமான செய்திகளாக அல்லது தற்புகழ்ச்சியாகத் திரும்பிவிடுகின்றன.''[179] இத்தகைய முயற்சிகளின் சூனியத்தன்மையையும் விஞ்ஞானமல்லாத இயல்பையும் விளக்கிக் காட்டுவதற்காக லெனின், ஸி. பி. லூகாஸின் **ரோமசாம்ராஜ்யம் மற்றும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்** (ஆக்ஸ்போர்டு 1912); இ. பி. குரோமர்ஸின் **புராதன மற்றும் நவீன ஏகாதிபத்தியம்** (லண்டன் 1910) என்ற நூல்களை மேற்கோள் காட்டினார் இந்தப் புத்தகங்கள் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கக் கோட்பாட்டைப் போற்றிப் புகழ்வது, அதை நியாயப்படுத்துவது போன்ற நோக்கங்களைக் கொண்டு தன்னகங்காரத்துடன் தேசீய வாதச் சிறுபிள்ளைத்தனமாகப் படைக்கப்பட்டவை என அவர் வருணித்தார். கவுட்ஸ்கியின் ஏகாதிபத்தியச் சித்தாந்தத்தை கூர்மையாக விமர்சித்த லெனின் அது சில முதலாளித்துவச் சக்திகளினால் பின்பற்றப்பட்ட விசேட வகையான கொள்கை நிலை என்றார். ஏகாதிபத்தியத்தைப் பற்றிய இத்தகைய

வியாக்கியானம் கவுட்ஸ்கியை அதாவது அதிதீவிர—ஏகாதி பத்தியச் சித்தாந்தத்திற்கு இட்டுச் சென்றது—அது ஒரு விசேட "சமாதான ரீதியான வளர்ச்சிப் படி; 20-ம் நூற்றாண்டின் முதலாளித்துவ வளர்ச்சியின் வெளிப்பாடு என்றும் கூறலாம். கவுட்ஸ்கியின் கருத்துப்படி, வர்க்கப் போராட்டமில்லாமல், புரட்சிகர எழுச்சி ஏதுமில்லாமல் முதலாளித்துவத்தின் அமைதியான கால கட்டம் சோஷலிசமாக வளர்ச்சி பெறும். இதை மெய்ப்பிக்க 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஏகாதிபத்திய சக்திகளின் நாடு பிடிக்கும் இயல்பான கோட்பாடுகளைக் கொள்ளலாம். உலகு தழுவிய ஒரு ஏக போகத்தின் கைகளில் அதிகாரமும் பொருளாதார வல்லமையும் ஒரு முனைப்பாகக் குவிவதின் வழி இது நடைபெறும். இந்தச் சித்தாந்தம் "ஒரு வழிப்பாதையைக் கொண்டது. விஷயத்தை அணுகுவதில் பேய்த்தனமாக திசை திருப்பிக் குழப்பும் போக்கைக் கொண்டது."[180] மார்க்சின் புரட்சிகர இயக்கவியலைச் சிறுமைப்படுத்த, திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டவைகளையும் பொய்ம்மை வாதங்களையும் கொண்டு மெய்ப்பிப்பது,[181] என லெனின் கணித்தார். கவுட்ஸ்கிய வாதத்தின் சித்தாந்த அடிப்படைகள், ஏகாதி பத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகளை மூடி மறைக்க, தட்டிக் கழிக்க, மார்க்சியத்தோடு ஒத்துப்போக முடியாத ஒரு உத்வேகத்தை முழுக்க முழுக்கக் கொண்டது என அவர் எழுதுகிறார்.[182] இவ்வாறு கூறும்போது முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் முதலாளித்துவத்திற்கும், புதிய கட்டத்தில் சந்தர்ப்பவாத வியாக்கியானங்களும் பொதுவான ஆய்வியல் கோட்பாடுகள் மார்க்சின் பொருள் முதல்வாத இயக்கவியலை முற்றிலும் மறுத்து பகிரங்கமாக நிராகரிக்குமளவுக்குப் போய்விட்டன, என்பதை லெனின் வலியுறுத்தினார்.

நவீன கட்டத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் உண்மையான சட்டங்களின், திண்ணிய பகுப்பாய்வைக் கொண்டு லெனின் இந்த விஞ்ஞானத்திற்குப் புறம்பான கருத்துக்களுக்குப் பதிலடி கொடுத்தார். சம காலத்திய முதலாளித்

துவம் ''பூதாகாரமான எந்திரத் தொழில் வளர்ச்சி, மிகப் பெரிய அளவிலான தொழில் நிறுவனங்களில், குறிப்பிடத் தக்க முறையிலான உற்பத்தியின் துரித முனைப்பு''[183] ஆகிய வற்றின் மூலம் குணாம்சப்படுத்தப் படுகிறது என்று லெனின் எழுதினார். ஏகபோகத்தின் விருப்பத்திற்கு மாறாக உற்பத்தியை சமுதாய மயமாக்கும் இந்தப் பரிமாணம், சமுதாயத்தை ஒரு புதிய சமூக ஒழுங்கின்பால் கொண்டு வருகிறது. ஏனென்றால் அது தேவையான பொருள் முதல் மற்றும் தொழில் நுட்ப நிலைமைகளைத் தயாரிக்கிறது. முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடுகள்—உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையேயான அந்த முரண் பாடுகள், உற்பத்தியின் சமூக இயல் மற்றும் பொருள் முதல் உடைமைகளை தனியார் சேர்த்துக்கொள்வதற்கும் இடையே யான முரண்பாடுகள் மிகக் கூர்மையடைகின்றன. ''விரல் விட்டு எண்ணக் கூடிய ஏகபோகவாதிகள் எஞ்சியுள்ள மக்கள் தொகையின் மீது வைத்துள்ள அடிமைத்தளை நூறு மடங்கு கனமாகி, சுமையின் பளுவை அதிகமாக்கி தாங்க முடியாத படி ஆகிவிட்டது''[184] என்று லெனின் எழுதினார். முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு விசேட கட்டமே ஏகாதி பத்தியம்—மிக உயர்ந்த இறுதிக் கட்டம்—இந்தக் கட்டத்தில், எதிர் வரும் சோஷலிஸ்ட் புரட்சிக்கு பொருள் முதல் மற்றும் தொழில் நுட்ப நிலைமைகள் முழுமையாகத் தயார் செய்யப் பட்டு அதன் வெற்றிக்கான அனைத்து தேவைகளும் உரு வாக்கப்படுகின்றன.

ஏகாதிபத்தியத்தின் முக்கிய அம்சங்களைப் பரிசீலித்த பிறகு அவற்றில் மிக முக்கியமானது. ஒரு புதிய மாதிரியாக நிதி முதலீட்டு மூலதனமாக உருப்பெறும் எந்திரத் தொழில் மற்றும் வங்கி மூலதனத்தின் இரண்டறக் கலப்பே என்ற முடி வுக்கு லெனின் வந்தார். ஏகபோகத்திற்கு முந்திய கட்டத்தில் உழைப்புக்கும் மூலதனத்துக்குமிடையேயான பிற்போக்கு மிதவாத நோக்கு உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரரர் களால் உருவகம் பெற்றது—முதலாளிகளின் உண்மையான வாழ்க்கை.

இப்பொழுது ஏகாதிபத்தியத்தின் கீழ் மூலதனம் என்று மில்லாதபடி பொது முறையாக, முகவரி இல்லாத குணாம் சத்தைப் பெற்று மிகவும் யதேச்சாதிகாரமாக மனிதத் தன்மையற்ற முறையில் மேலாதிக்கம் செலுத்துகிறது. பொருளாதாரம், அரசியல், நன்னெறிகள் போன்ற துறை களில் மட்டுமல்லாது உற்பத்தி நிர்வகிப்பிலும் மனிதன் அன்னியமாவது தொடர்ந்து தீவிரமடைகிறது. உற்பத்தி நிர்வகிப்பில்தான் மூலதனத்தின் உண்மையான உடைமை யாளர்கள். மூலதனத்தை விற்பனை செய்யும் வங்கிகளிட மிருந்து சம்பிரதாயமாக தனிமைப் படுத்தப் படுகிறார்கள். இந்த வங்கிகள் தான் சமுதாய வாழ்க்கையின் உண்மையான எஜமானர்களாகிறார்கள்.

இதன் விளைவாக ஒரு புறம் ஆளும் வர்க்கங்களின் அரசியல் பின் செயல் விளைவு மிகக் கூர்மையாக அதி கரித்தது. இன்னொரு புறம் ஒடுக்கப்பட்ட மக்களிடம் குறிப் பாக பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஏகாதி பத்திய அரசுகளைச் சார்ந்திருக்கும் நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களிடம் புரட்சிகரப் போக்குகள் அதிகரித்தன. ஏகாதி பத்திய நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் சமூக வளர்ச்சி யில் இரண்டு போக்குகள் தெளிவாக உய்த்துணரப்பட்டன. ஒரு புறம் அரசியல் ஒடுக்கு முறை. சமுதாயத்தில் மிகவும் வஞ்சிக்கப்பட்ட பகுதியினரின் எதிர்ப்பு ஐயத்திற்கிடமில்லாத முறையில் அதிகரித்தது. மற்றொரு புறம் ஏகாதிபத்திய முதலாளித்துவம் ஒடுக்கப்பட்ட நாடுகள் மற்றும் மக்களைச் சுரண்டிக் கொள்ளையடித்ததின் மூலம் கிடைத்த அபரிமித லாபத்தை தொழிலாளி வர்க்கத்தின் மேல் தட்டுப் பகுதியின ரிடம் லஞ்சமாகக் கொடுக்கப் பயன்படுத்தியது; இவ்வாறாக அடிமட்டத்திலிருக்கும் பாட்டாளிகளை எதிர்த்து அதை ஒரு தொழிலாளி வர்க்க ஆதிபத்தியமாக மாற்றுவது. இந்தத் தொழிலாளிவர்க்க ஆதிபத்தியம் தங்களுக்குள்ளிருந்தே தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு தலைவர்களை நியமிக் கிறது—தொழிலாளி வர்க்க எதேச்சாதிகாரிகள். உண்மையில் இவர்கள் ஏகாதிபத்தியத்தினால் கூலிக்கமர்த்தப்பட்ட

ஏஜண்டுகளே இங்கு லெனின் முன்னாளைய தொழிலாளி வர்க்கத் தலைவரும் பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியின் உறுப்பினருமான மில்லராண்டை மேற்கோள் காட்டுகிறார். இந்தப் பிரகஸ்பதி தனது நாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கை கட்டிச் சேவகம் செய்யும் கைக்கூலியாக மாறி விட்டார். இதே போன்ற சீரழிவு பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா, ருஷ்யா மற்றும் ஏகாதிபத்திய நாடுகளின் பல தொழிலாளர் தலைவர்களையும் ஆட்கொண்டது.

ஏகாதிபத்தியத்தின் அடுத்த முக்கிய அம்சம் சரக்குகளை ஏற்றுமதி செய்வதற்காக அதிகரித்த அளவில் தீவிரமாக ஏற்றுமதி மூலதனத்தை காண விழைவது. இந்தப் புவிக் கோளம் முழுவதிலும் ஏகபோகம் தனது ஆதிக்கத்தைப் பரப்ப முயல்கிறது இதர நாடுகளின் பொருளாதாரத்தில் தங்களது மூலதனத்தை விதைக்க என்னென்ன வாய்ப்புக் கிடைக்கும் எனத் தேடுகிறது. குறிப்பாக குறைந்த வளர்ச்சியே பெற்றுள்ள அல்லது இதர ஏகாதிபத்தியத் தாய் நாடுகளைச் சார்ந்திருக்கிற நாடுகளில் மூலதனம் போடமுயல்கிறது. ஏகாதிபத்தியக் கட்டத்தில், முதலாளித்துவம் ரத்தத்தை உறிஞ்சும் ஒரு அட்டையாக, அழிந்துபடும் சமுதாய அமைப்பாக மாறுவதை இது தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. பிரிட்டன், அமெரிக்கா மற்றும் இதர வளர்ச்சி பெற்ற நாடுகளிலிருந்து மூலதன முதலீட்டின் பல உதாரணங்களைப் பரிசோதனை செய்தபின், அவைகள் மேலும் மேலும், உற்பத்தி நாடுகள் என்ற நிலையிலிருந்து முதலீட்டு நாடுகளாக அல்லது குத்தகை நாடுகளாக மாறுவதை லெனின் நிருபித்தார். இந்த நாடுகள் தங்களது சொந்த உற்பத்தியின் மூலம் அல்லாது பணம் கடன் கொடுப்பதிலிருந்தே அதிக லாபத்தை ஈட்டின.

பொருளாதார ஒடுக்கு முறை, வளர்ச்சியடையாத நாடுகளிலும் காலனி நாடுகளிலும் மக்களிடமிருந்து கொள்ளை போன்றவை தாய் நாடுகளுக்கும் காலனி நாடுகளுக்குமிடையே, யதேச்சையாகவே முரண்பாடுகளில் ஒரு கூர்மை

யான ஆத்திரமூட்டலுக்கு இட்டுச் செல்கின்றன. இதனால் மூன்று முக்கிய விளைவுகள் காணக் கிடைக்கின்றன. முதலாவது வளர்ச்சியடையாத நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி "அந்த நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியில் செல்வாக்கு வீச்சைப் பெற்று பெருமளவுக்கு அதை முடுக்கி விடுகிறது."[185] இரண்டாவதாக அந்த நாடுகளில், முதலாளித்துவ வளர்ச்சி ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களிடையே அரசியல் மற்றும் சமுதாய, சுய எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துகிறது. பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படையும்—தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சிகளும் தங்களது சொந்த நாடுகளிலும் உலகம் முழுவதிலும் மூலதன ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்காகத் தங்களைப் பணித்துக் கொள்கின்றன—இவை வளர்ச்சி பெற்று வல்லமை பெறுகின்றன. மூன்றாவதாக ஒடுக்கப்பட்ட மக்களின் தனிமைப்பட்டு நின்ற தேச விடுதலை இயக்கங்கள் ஒரு உலக ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்துடன் இணைந்து கொண்டு முதலாளித்துவத்தை எதிர்க்கும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரு நேச சக்தியாக சேமிப்புப் படையாக மிளிர்கின்றன.

ஏகாதிபத்திய குணாம்சங்களைச் சித்தரிக்கக்கூடிய அம்சங்களைத் தனிமைப்படுத்தி, லெனின் அவற்றை ஒரு குழுவாக ஒழுங்குபடுத்தினார். ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துக்குள்ளேயே உள்ள நேர் செய்ய முடியாத முரண்பாடுகளைப் புலப்படுத்தினார்—ஏகபோக குழுக்களுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்குமிடையே உள்ள முரண்பாடுகளை அம்பலப்படுத்தினார். இவ்வாறாக ஏகாதிபத்தியத்தின் கீழ் கேள்வி கேட்பாரின்றி கட்டுக்கடங்காமல் பெருக்கெடுத்த ஏகபோகங்களும் அரசாங்கங்களும் விரோதங்களினால் கிழித்தெறியப்பட்டு முதலாளித்துவப் போட்டியை மெய்ப்பித்தன. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் அனைத்துக் காலனிகளும் பொருளாதார மேலாதிக்கத் துறைகளும் இந்த ஏகபோகங்களுக்கும் அரசாங்கங்களுக்குமிடையே பங்கு போட்டுக்

கொள்ளப்பட்டன. அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் இவற்றை மீட்பதற்கான போராட்டம் துவங்கி விட்டது. பொருளாதார வளர்ச்சிக்காகவும் காலனி நாடு களைப் பிடிப்பதில் வெற்றி காணவும் தங்களது பக்கத்து நாடு களின் பின்னால் ஓடிய பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாண்ட் போன்ற நாடுகள் உலகத்தில் தங்களது ஆதிக்க நிலைகளைக் கட்டிக் காப்பதற்குப் பாடுபட்டன. ஜெர்மன், ஜப்பான் உள்ளிட்ட இழந்துபட்ட நாடுகள், தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்யவும், தங்களது வலுவான பங்காளி நாடுகளிடமிருந்து கச்சாப் பொருட்களின் மூலாதாரங் களையும், சந்தைகளையும், முதலீட்டு வாய்ப்புக்களையும் பெறுவதற்கும் பாடுபட்டன. 20-ம் நூற்றாண்டின் துவக்கத் தில் இரண்டு ஏகாதிபத்தியக் கூட்டணிகள் முகிழ்த்து ஒவ்வொன்றும் மற்றொன்றை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலஹீனப்படுத்துவதற்காக ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டது. ஒரு புறம் அந்த நட்புறவு நாடுகள்.[186] (பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, பின்னால் சேர்ந்து கொண்ட இத்தாலி; அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியாக் கண்டங்களின் பல நாடுகள்) மற்றொரு புறம் அந்த மத்திய அரசாங்கங்கள்— ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, பின்னர் துருக்கி மற்றும் பல்கேரிய நாடுகள்.

லெனின் இந்த முரண்பாடுகளை ஆய்ந்தறிந்தார். இவை தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்தியத்தைப் பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து அரசியல் போராட்டங்களின் மிகக் கூர்மையான வடிவங்களுக்கு இட்டுச் செல்கின்றன என்பதைக் காட்டினார். அதாவது அநீதியான போர்கள். இரண்டு பகுதிகளும் தங்கள் பங்குக்கு ஆதாயம் தேடுவதற் கான போர்கள். இவற்றை ஏகாதிபத்தியப் போர்கள் என லெனின் வரையறுத்தார். இந்த வகையிலான முதல்போர், கியூபா நாட்டைத் தங்கள் வசமாக்கிக் கொள்வதற்காக 1898-ம் ஆண்டு அமெரிக்காவுக்கும், ஸ்பெயினுக்கும் இடையே நடந்த போர் எனக்காட்டி ஏகாதிபத்தியப் போர்

என்று நிரூபித்தார். இதன் விளைவாக ஸ்பெயினின் காலனியாகத் திகழ்ந்த நாடு வஞ்சகமான முறையில் ஒரு சுதந்திர நாடாக்கப் பட்டு உண்மையில் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அமெரிக்காவுக்கு அடிபணிந்த நாடாக்கப்பட்டது. மற்றொரு உதாரணம் 1904—1905-ம் ஆண்டுகளில் ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்குமிடையே நிகழ்ந்த போர். இந்தப் போரின் விளைவாக ருஷ்ய ஜப்பானிய ஏகாதிபத்திய அரசாங்கங்கள் ஒரு தலைப்பட்சமாக ஜப்பானுக்குச் சாதகமாக, சீனாவிலும், கொரியாவிலும் தங்களது செல்வாக்கு வீச்சைப் பகிர்ந்து கொண்டன. 1914-ல் ஒரு போர் மூண்டது. இப்போரில் ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி ஆகிய நாடுகள் ஒருபுறமும், பிரான்ஸ், பிரிட்டன், ருஷ்யா ஆகியநாடுகள் மற்றொரு புறமும் இருந்தன. இந்தப் போர் வெகு சீக்கிரமாக, பலநாடுகளும் மக்களும் பங்குகொண்ட உலகப்போராக வெடித்தது.

20-ம் நூற்றாண்டின் முதலாளித்துவ வளர்ச்சியை பிரத்தியேகமாகப் பகுப்பாய்ந்த லெனின், முதலாளித்துவம், அழிந்துபடும் ஒரு சமூக அமைப்பின் விஷப்பூச்சிகளின் குணாம்சங்களை அதிகரித்த அளவில் பெற்று வருகிறது என யாரும் மறுக்க முடியாத ஒரு முடிவுக்கு வந்தார். இத்தகைய முதலாளித்துவத்திற்கு, ஒவ்வொரு காலகட்டத்திலும் இடர்ப்படுத்தப்படும் சமநிலையைச் சரிப்படுத்த 'தொழிலில் நெருக்கடி, அரசியலில் யுத்தங்கள் என்பதைத் தவிர வேறு சாதனங்கள் கிடையாது''[187] என லெனின் கூறுகிறார். எனவே ''சமநிலையற்ற பொருளாதார அரசியல் வளர்ச்சி முதலாளித்துவத்தின் தீர்க்கமான சட்டம்''[188] என்ற முடிவுக்கு வருகிறார்.

அழிந்து படும் முதலாளித்துவமே ஏகாதிபத்தியம் என மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் குணாசம்சப்படுத்தும் லெனின் உற்பத்திச் சக்திகளில் எந்தவிதம் குறைந்து கீழே செல்லும் போக்கையும் குறிப்பிடவில்லை. இதற்கு மாறாக ''அழிந்து படுவதை நோக்கிய போக்கு முதலாளித்

துவத்தின் துரித வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது என நம்புவது தவறாகும்......என அவர் வலியுறுத்துகிறார். மொத்தத்தில், முன்பைவிட முதலாளித்துவம் மிகத் துரிதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது; ஆனால் இந்த வளர்ச்சி பொதுவாக மேலும் மேலும் சமமற்ற நிலையிலேயே போகிறது என்பது மட்டுமல்லாமல் அதன் ஏற்றத் தாழ்வு நிலை அதிலேயே வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக மூலதனத்தில் பணக்கார நாடுகளாக இருக்கின்றவற்றின் க்ஷீண திசையில்''.[189] மேற்கண்டவை ஏகாதிபத்தியக் கட்டத்தில் சமுதாய வளர்ச்சி பற்றிய ஒரு பொதுக் கணிப்புக்கு லெனினைக் கொண்டு வருகிறது. ''மாற்றம் நிகழும் போது அதை முதலாளித்துவம் என நாம் வரையறுக்க வேண்டும் அல்லது மிகத் தெளிவாக, செத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவம் என வரையறுக்க வேண்டும்.''[190] முதலாளித்துவத்தின் வீழ்ச்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியை, மனித சமுதாயம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு செல்லும் உலக வரலாற்று மாற்றத்தின் துவக்கத்தை புலப்படுத்துகிறதே தவிர வேறொன்றையுமல்ல.

19-ம் நூற்றாண்டில், ஏகபோகத்திற்கு முந்திய முதலாளித்துவத்தின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஏககாலத்தில் எல்லா நாடுகளிலும் நடத்தப் பெறும் சோஷலிசப் புரட்சிகளே வெற்றி வாகை சூடும் அல்லது குறைந்த பட்சம் பெருமளவுக்கு பொருளாதார முன்னேற்றம் கண்டுள்ள பல நாடுகளில் சேர்ந்தாற்போல் நடையுறும் புரட்சிகளே வெற்றி பெறும் என்று மார்க்ஸ் முடிவுக்கு வந்தார். ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்த நிலைமை புரட்சிகரமாக மாறுகிறது. மார்க்ஸ் உருவாக்கிய சோஷலிசச் சித்தாந்தத்தை லெனின் வளர்த்துச் சென்று திண்ணிய வெளிப்பாட்டை வழங்கினார். ஏகாதிபத்தியக் கட்டத்தில் சமநிலையற்ற முதலாளித்துவ வளர்ச்சி, முதலில் ஏகாதிபத்தியச் சங்கிலியை ஒரு தனித்துண்டாக உடைத்துத் தனிமைப் படுத்த முடியும் என்ற அளவுக்கு ஏகாதிபத்தியத்தின் உலகு தழுவிய மேலாதிக்கம் பலஹீனமடை

கிறது எனப் புலப்படுத்தினார். பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி வாகை சூடும்; ஒரே ஒரு தனி நாட்டிலும் கூட சோஷலிசத்தைச் சமைக்க முடியும் என்பதைத்தான் இது வலியுறுத்திக் காட்டுகிறது.

"ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் என்ற முழக்கம் பற்றி" (1915) என்ற தனது கட்டுரையில் லெனின் குறிப்பிட்டுக் காட்டியதாவது: முதலில் பல நாடுகளிலும் அல்லது ஒரே ஒரு முதலாளித்துவ நாட்டிலும் கூட சோஷலிசம் வெற்றிக் கொடியை நாட்டுவது சாத்தியமே. முதலாளிகளை ஒழித்துக் கட்டிய பிறகு, தங்களது சொந்த சோஷலிச உற்பத்தியை ஸ்தாபனப் படுத்திய பிறகு அந்த நாட்டின் வெற்றி முரசு கொட்டும் பாட்டாளி வர்க்கம் உலகின் எஞ்சியுள்ள பகுதியை **எதிர்த்து** முதலாளித்துவ உலகை எதிர்த்து, இதர நாடுகளிலுள்ள ஒடுக்கப்பட்டுள்ள மக்களை தனது இலட்சியத்தின் பால் ஈர்த்துக் கொண்டு கிளர்ந்தெழும்."[191] ஒரு வருடத்திற்குப் பிறகு "பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ராணுவத் திட்டம்" என்ற தனது கட்டுரையில் லெனின் கோடிட்டுக் காட்டி தன் யோசனைகளை முன் மொழிந்ததாவது: "ஏகாதிபத்தியச் சூழ்நிலைமைகளின் கீழ் ஒரே சமயத்தில் அனைத்து நாடுகளிலும் சோஷலிசம் வெற்றிக் கொடியை நாட்ட முடியாது. முதலில் ஒரு நாடு அல்லது பல நாடுகளில் அது வெற்றி முரசு கொட்டும். எஞ்சியுள்ள நாடுகள் சில காலத்திற்கு முதலாளித்துவத்தின் கீழ் அல்லது முதலாளித்துவத்திற்கு முந்தையக் கட்டத்தின் கீழ் இருக்க வேண்டும்." [192] இங்கு லெனின் வேறுபட்ட சமுதாய அரசியலமைப்பைக் கொண்ட நாடுகளது சகவாழ்வின் அவசியத்தையும் அதன் சாத்தியத்தையும் கூறுகிறார். தொடர்ந்து சோவியத் யூனியன், முதலாளித்துவ நாடுகளின் பால் கொள்ளும் உறவுகளின், முழுமையான உலக இலக்குக்கு இவை அடித்தளமாக விளங்கும் என்ற தனது கருத்தை முன்வைக்கிறார்.

இது சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய ஒரு புதிய சித்தாந்த மாகும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கான

புரட்சிகர மாற்றத்தின் சத்தும் சாரமும் பற்றிய மார்க்ஸ்—எங்கெல்ஸ் கருத்தின் ஒரு ஆக்கபூர்வமான வளர்ச்சி 1914-ம் ஆண்டு, புரட்சிகரச் சூழல் பற்றிய லெனினது போதனை என்று அறியப்பட்ட **'இரண்டாவது அகிலத்தின் தகர்வு'** என்ற நூலில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சமயத்தில் வரலாற்றுச் சூழல்கள் பற்றி லெனின் ஒரு விவரமான பகுப்பாய்வை வழங்கியுள்ளார்: (1) மேல் தட்டு வர்க்கங்களுக்குள்ளேயே ஒரு நெருக்கடி அதாவது ஆளும் வர்க்கங்களுக்கு எந்தவித மாற்றமும் ஏற்படுத்தாமல் தங்களது ஆட்சியைக் கொண்டு செலுத்த முடியாது என்ற நிலை ஏற்படும் போது (2) ஒடுக்கப்பட்ட மக்களிடம் வறுமையும், தரம் கெட்ட வாழ்க்கை நிலைமைகளும் கூர்மையாக வளர்ந்தோங்குல் (3) இதன் விளைவாக வெகு ஜனங்களின் சமுதாய நடவடிக்கைகள் கணிசமான அளவு அதிகரித்தல். இந்த நிலைமைகள் செயல்படத் துவங்கும்போது ஒரு அகவயப்பட்ட சூழல் இன்றியமையாததாகி விட்டது: புரட்சிகர வர்க்கம், வெகுஜனங்களின் புரட்சிகர நடவடிக்கைகளை எடுக்கும் திறமையைக் கொண்டிருத்தல்" [198] என்றார் லெனின்.

தொகுப்புரை: ஏகாதிபத்தியக் கட்டத்தில் சமநிலையற்ற பொருளாதார அரசியல் வளர்ச்சி பற்றிய லெனினது கண்டு பிடிப்பு; புரட்சி முதலில் ஒரே ஒரு நாட்டில் மட்டும் வெற்றி முரசு கொட்டுவது சாத்தியம் (1915) அது அவசியமும்கூட (1916) என்ற அவரது முடிவு, இறுதியாக ஒரு புரட்சிகரச் சூழலை உருவாக்கும் புறவயப்பட்ட மற்றும் அகவயப்பட்ட சூழல்கள் பற்றிய அவரது பகுப்பாய்வு ஆகிய அனைத்தும் அவர் உருவாக்கிய சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய புதிய சித்தாந்தத்தின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். 1915-ம் ஆண்டு, ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்குப் பின் முகிழ்க்கும் அரசாங்க அதிகாரத்தின் வடிவம் பற்றிப் பேசும் போது மிகவும் சுவையான முறையில் லெனின் குறிப்பிட்டதாவது: "முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கியெறிந்து

விட்டு பாட்டாளி வர்க்கம் வெற்றி முரசு கொட்டும் போதுள்ள சமுதாயத்தின் அரசியல் வடிவம் அது ஒரு ஜன நாயகக் குடியரசாகத் திகழும் என்பதே." [194] இவ்வாறாக ருஷ்ய நாட்டில் நிகழ்ந்த பிப்ரவரி புரட்சிக்கும் முன்னரே அவரது புகழ்பெற்ற "இப்போதையப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்" என்ற படைப்புக்கும் முன்னரே லெனின் ஒரு ஜனநாயக (அதாவது பாராளுமன்ற)க் குடியரசு வடிவத்தில் ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை ஏற்படுத்தும் சாத்தியத்தை அங்கீகரித்திருந்தார். 'இப்போதையப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் என்ற படைப்பில் லெனின் புரட்சிகர ருஷ்யாவில் அரசாங்க அதிகாரத்தை நிறுவுவது சோவியத்துக்களின் வடிவத்தில் சட்ட ஆளுமைக்குட்பட்டு அனைவரும் விரும்பத் தகும் வகையிலும் இருக்கும் எனக்குறிப்பிட்டிருந்தார்' இதற்குப் பின்னர் தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பல்வேறுபட்ட வடிவங்களின் சாத்தியம் பற்றிய தனது முடிவு களுக்கு லெனின் அடித்தளங்களை அமைத்தார். (நாம் திரும்பப் பார்க்கலாம்; 1905-ம் வருடப் புரட்சியின் போது, தான் முதலாவதாக சோவியத்துக்கள் தோன்றின. அதற்கு வெகு காலம் முன்னரே, 1871-ம் ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனில் உருவாக்கம் பெற்றபடி அரசாங்க அதிகாரம் என்ற வடிவத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முகிழ்த்து விட்டது)

மார்க்சியத் தத்துவத்தின் சமுதாயப் பிரச்சினைகள் பற்றிய லெனினது பகுப்பாய்வில், சோஷலிசப் புரட்சியின் இலக்கு உத்திகளும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இரண்டாவது அகிலத்தில் சந்தர்ப்பவாதிகளின் புலனாகாத ஹேஷ்யங்களில் தெளிவாகக் காணக்கிடைத்தபடி, லெனின் புரட்சி பற்றிய தனது சித்தாந்தத்தை திண்ணிய பதப்பிர யோகங்களில் விரிவு படுத்தினார். அதன் முழுமையான உள்ளடக்கமும் சித்தாந்த அடியும் சோஷலிஸ்ட் புரட்சியின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கேற்ப கூர்முனை

யாக்கப்பட்டது. இது அந்தச் சமயத்தின் பாட்டாளி வர்க்க இயக்கத்தினது இலக்கு மற்றும் உத்திகளின் பால் அவரது சொந்த நலன்களைப் புலப்படுத்துகிறது.

பாட்டாளி வர்க்க இலக்கின் சாரத்தை புரட்சியின் பிரதான நிலைபாட்டுடன் பின்னிப் பிணைக்கப் பட்டதாக லெனின் பார்த்தார். அக்டோபர் புரட்சியின் போது போல்ஷ்விக் கட்சி எதிர் நோக்கிய கடமைகளை "முடியாட்சியை எதிர்த்த தலையாய வீரம் செறிந்த புரட்சிப் போராட்டம்......தனது எழுச்சியில் அனைத்து ஜனநாயக மக்களையும் ஆகர்ஷித்துக் கொள்ளும் போராட்டம் அதவாது முக்கியமாக விவசாயிகள் வர்க்கம்" [195] என குணாம்சப்படுத்தினார். இவ்வாறாக, இலக்கு தான் பாட்டாளி வர்க்கத்தின் தலையாய சக்திகளும் அதன் கட்சியும், கொடுக்கின்ற முக்கியமான அடியைத் தீர்மானிக்கும் திசை வழியாகும் என்பது லெனினது கருத்து. பொதுவான இலக்கின் கடமைகளை நிறைவேற்றும் திண்ணிய உத்திகள் இந்தக் கடமைகளை வரையறுப்பதின் அடிப்படையில் திட்டமிடப் பட்டுள்ளது என்றார் லெனின். அவர் எழுதுவதாவது: "கட்சியின் உத்திகளினால், என்பது கட்சியின் அரசியல் நடத்தை அல்லது குணநலன், திசைவழி அதன் அரசியல் நடவடிக்கைகளின் வழிமுறைகள் என்று நாம் பொருள் கொள்ள வேண்டும்" [196] எனவே வகுத்துள்ள இலட்சியங்களின் ஈடேற்றத்துக்கு இலக்குகளுக்கும் உத்திகளுக்குமிடையேயான நெருங்கிய ஒற்றுமை, சாரமும் திண்ணிய சாதனமும் ஆகும்.

இந்தக் காலகட்டத்தில் போல்ஷ்விக் கட்சியின் இலக்கின் பால்பட்ட கடமை, முக்கியமான ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்துவது—உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளை—முற்றாக அதைச் சமாளிக்கும் வரை—அதாவது புரட்சி வெற்றிக் கொடியை நாட்டும் வரை உள்ள கடமைகளை உள்ளடக்கியதாகும். இந்தத் திட்டத்தின் உத்திகளின் கடமைகள், அனைத்து உழைக்கும் மக்களையும் பாட்டாளி வர்க்கத்தின்

கீழ் திரட்டுவது, ஜாரிஸத்தை எதிர்த்து அவர்களை புரட்சிகர நடவடிக்கைகளுக்கு அணி திரளச் செய்வது ஆகியவை ஆகும். இந்த இலக்குகள் மற்றும் உத்திகளின்பால்பட்ட கடமைகள் 1917-ம் வருடத்திய அக்டோபர் புரட்சியினால் நிறைவேற்றப் பட்டன. அவை முதல் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக் கான சூழல்களை உருவாக்கின. அந்தப் புரட்சி முதலாளித்து வத்தை ஒழித்துக் கட்டியதோடல்லாமல் புரட்சிகர ஆதாயங் களை வலுப்படுத்துவதிலும் வெற்றி கண்டது.

முதல் உலகப் போரின் போது லெனின் பகுப்பாய்ந்த வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் பிரச்சினைகள் கீழ்க் கண்டவற்றையும் மிக முக்கியமான ஒருங்கிணைந்த உறுப் பாகக் கொண்டதாகும். பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் மற்றும் காலனி ஆதிக்க நாடுகள் மற்றும் சார்ந் திருக்கும் நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களது தேச விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கும் இடையேயுள்ள உறவு பற்றிய அவரது கருத்துக்கள். அனைத்து வண்ணங்களையும் கொண்ட சந்தர்ப்ப வாதிகள், வலது சாரிகளும் இடது சாரிகளும் திரும்பத் திரும்ப பாட்டாளிகள் அல்லாதவர்களின் இயக்கங் களது புரட்சிகரப் பாத்திரத்தை நிராகரிக்க முயன்றார்கள். இங்கு லாஸ்ஸலி முதல் கவுட்ஸ்கி வரையிலான சந்தர்ப்ப வாதிகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும். இவர்கள் விவசாயி களை ''ஒழுங்கற்ற பிற்போக்குக் கூட்டத்தினர்'' எனச் சித் தரித்துக் காட்டினார்கள். காலனி மற்றும் சார்ந்திருக்கும் நாடுகளது மக்களின் புரட்சிகர நடவடிக்கைகள் பற்றிய அவர் களது கருத்தும் இவ்வாறே மட்டமானதாகும்.

ருஷ்யா போன்ற நாடுகளின் விவசாயிகளின் வர்க்கம் தான், பாட்டாளி வர்க்கத்தின் முக்கியமான நண்பன். சோஷலிஸ்ட் புரட்சிக்கான அதன் தயாரிப்பில் ஒரு சேமிப்புப் படை எனக் குறிப்பிட்டு லெனின் இந்த மார்க்சிய விரோதச் சித்தாந்தங்களை எதிர்த்தார். ''ருஷ்ய நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றி வெகு சமீபமான எதிர்காலத்தில், மட்டுமே காணக்கிடைக்க வேண்டுமென்றால் எடுத்த எடுப்பி

லிருந்தே தொழிலாளர்கள் மிகப் பெரும்பான்மையான விவசாயப் பெரு மக்களால் ஆதரிக்கப்பட வேண்டும்''[197] என்பதை அவர் வலியுறுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்களின் தேச விடுதலை இயக்கங்களுக்கும் இதுவே உண்மையாகும்: ''ஏகாதிபத்தியத்தின் கீழ் அதிகரித்த தேசீய ஒடுக்கு முறை என்பது, தேசீய இனங்கள் பிரிந்து போகும் சுதந்திரத்திற்காக நடத்தும் போராட்டத்தை முதலாளித்துவம் 'கற்பனா வாதம்' என்றழைப்பதை சமூக ஜனநாயகம் நிராகரிக்க வேண்டும் என்ற பொருளில் அல்ல. இதற்கு மாறாக அது இந்தத் துறையிலும் கூட எழுகின்ற முரண்பாடுகளையும் மோதல்களையும் வெகு ஜனங்களின் நடவடிக்கைகளுக்கும் முதலாளித்துவத்தின் மீது புரட்சிகரத் தாக்குதல்களைத் தொடுப்பதற்கும் ஆதாரங்கள் என பெருமளவுக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.''[198] ஒடுக்கப்பட்ட நாட்டின் பாட்டாளி வர்க்கம் வலது சாரி சந்தர்ப்ப வாதிகளைப் போன்று அருவமான முழக்கங்களுக்கு இரையாகக் கூடாது என லெனின் கோடிட்டுக் காட்டினார் ஒரு சர்வதேசீய வர்க்கம் என்ற முறையில் அது தனக்கு சுதந்திரத்தையும் சம உரிமைகளையும் கோரும் போதே தனது சொந்த நாட்டினாலேயே ஒடுக்கப் பட்டிருக்கும் அனைத்து மக்க ளுக்கும் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் சுதந்திரத்தையும் கோர வேண்டும்.

அதே சமயத்தில் ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் புரட்சிப் போராளிகள், ஸ்தாபன ஒற்றுமை உள்ளிட்டு ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் உழைக்கும் மக்கள் மற்றும் ஒடுக்குகிற தேசீய இனத்தின் பாட்டாளி மக்களின் ஒற்றுமையை உறுதியாகக் கட்டிக்காத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார் லெனின். தேசீயவாதமும், குறுகிய வகுப்பு இனவெறி வாதமும், அவர்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் உழைக்கும் மக்களுக்கு விரோத மான சித்தாந்தமாகும் என்ற விஞ்ஞான ரீதியான பாட்டாளி வர்க்கக் கட்சியின் கருத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது

குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். லெனினது கருத்துப்படி சமகாலத்தைச் சேர்ந்த ஏகாதிபத்திய சகாப்தமும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தமும் "தேசீய ஒடுக்கு முறைகளை எதிர்த்த போராட்டத்தையும் முதலாளித்துவத்தை எதிர்த்த பாட்டாளி வர்க்கப் போராட்டத்தையும் உருவாக்கி அவற்றின் பால்பட்ட கொள்கைகளை முன்வைக்க வேண்டும். இதன் விளைவாக முதலில் புரட்சிகர தேசீயக் கிளர்ச்சிகளும் போர்களும் சாத்தியம் என்பதோடு தவிர்க்க முடியாதவையுமாகி விடுகின்றன. இரண்டாவதாக முதலாளித்துவத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கப் போர்களும் கிளர்ச்சிகளும்; மூன்றாவது இரண்டுவகையான புரட்சிப் போர்களின் கலவை."[199]

மேலும், ஏகபோகக் கூட்டணிகளுக்கும், ஏகாதிபத்திய அரசாங்கங்களின் குழுக்களுக்குமிடையே உள்ள இயக்கவியல் முரண்பாடுகளைப் பயன்படுத்துவது, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கக்கட்சி எதிர்நோக்கும் ஒரு தலையாய உத்திகளின்பால்பட்ட கடமை என்பதை லெனின் நிரூபித்தார். இந்த முரண்பாட்டை எங்ஙனம் பயன்படுத்தலாம் என்பதைப் பரிசோதனை செய்த லெனின், இந்தப் பிரச்சினையின் மூன்று முக்கிய நோக்குகளைத் தனிமைப்படுத்தினார். முதலாவது, ஏகாதிபத்திய சகாப்தத்தில் சமூக வளர்ச்சியின் தீர்க்கமான வளர்ச்சியைப் பயன்படுத்துவதில் கம்யூனிஸ்டுகளின் விஞ்ஞானக் கோட்பாட்டின் இடத்தையும் பாத்திரத்தையும் தீர்மானிப்பது. கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாடு, சமூகப் பரிமாணத்தின் தீர்க்கமான சட்டங்களை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்துவதே என அவர் குணாம்சப் படுத்தினார். வலதுசாரி சந்தர்ப்ப வாதிகள் மார்க்சியத்தை வறட்டுத்தனமாகத் திசை திருப்பிக் குழப்புவதற்கு இந்தத் தத்துவக் கூறுகள் சரியான அடி கொடுத்தன. அவர் சமூக இன வெறியாளர்கள் மற்றும் நடுநிலையாளர்களின் பொய்ம்மையை அம்பலப்படுத்தினார். ஏகாதிபத்தியப் போரின் போது இவர்கள், ஒரு நியாயமான

யுத்தத்தை நடத்திய சர்வதேச மோதலில் கட்சியை இழுக்க விழைந்தனர். புதிய சூழ்நிலைமைகளில் எழுந்த இந்த முரண் பாடுகள் இரண்டு கட்சிகளையும் மிதவாதப் பிற்போக்குக் கட்சிகளாக்கி விட்டன என்பதை லெனின் எடுத்துக் காட் டினார். இரண்டு கட்சிகளும் தங்களுக்கு எதிர்புறமாக மாறு வதின் மூலமே இந்த முரண்பாடுகளைச் சமாளிக்க முடியும். அதாவது அவர்களது நாடுகளில் செல்வாக்கு மிக்க ஆதிக்கச் சக்திகள் என அவற்றை தகர்த்துத் தரைமட்டமாக்குவது மூலமே. இதற்கும் மேலாக லெனின், ஒரு ஏகாதிபத்திய அரசாங்கம் உலகத்தைப் பொதுவாக மதிப்பீடு செய்யும் போது சந்தேகத்திற்கிடமின்றி ஒரு மிதவாதச் சக்தியா யிருக்கும் அரசாங்கம் தனது சொந்த நலன்களுக்காக உரு வாக்கிய பாட்டாளி வர்க்க 'ஜன நாயகம்' என பகட்டார வாரத்துடன் வலியுறுத்திய போது என்ன நிகழ்ந்தது என் பதையும் பரிசோதனை செய்தார். பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, பெல்ஜியம் மற்றும் இதர ஏகாதிபத்திய அரசாங்கங்களைப் பொறுத்த மட்டில் இது உண்மையே. இந் நாடுகளில் ஸ்தல முதலாளிகள், ருஷ்யா, ஜெர்மனி, ஹங்கேரி மற்றும் இதர நாடுகளில் நடந்து கொண்டிருந்த புரட்சிப் போராட்டங்களை மனதிலிறுத்திக் கொண்டு, இருக்கின்ற தேசீய இனங்களின் மிகத் திறமை படைத்த தொழிலாளர் களுக்கு அவற்றிற்கேற்ப பயன்படு பொருட்களில் உயர்ந்த தரத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு சில ஜனநாயக உரிமை களையும் வழங்கினர். லெனின் எழுதியதாவது: "சார்ந் திருக்கக் கூடிய நாடுகளின் கோடிக்கணக்கான மக்களை, விரல் விட்டு எண்ணக் கூடிய சில மிகப் பெரிய பணக்கார நாடுகள் சுரண்டுவது தான் ஏகாதிபத்தியம். எனவே சார்ந் திருக்கக் கூடிய நாடுகளின் **மேல் தொடர்ச்சியான** மேலாதிக் கத்துடன், பணக்கார நாடுகளுக்குள் முழுமையான ஜன நாயகம் **சாத்தியமே**."[200]

அமெரிக்காவின் முதலாளித்துவ அனுபவத்தை ஐரோப்பிய மண்ணுக்கு மாற்றி ஒரு சர்வதேசீய "ஐக்கிய

ஐரோப்பிய நாடுகளை'' நிறுவுவதற்கான ட்ராட்ஸ்கியின் அறைகூவலையும் லெனின் கடுமையாக விமர்சித்தார். கீழ்க் கண்ட விதமாக அவர் ட்ராட்ஸ்கிக்கு பதிலளித்தார்: ''இன்றையப் பொருளாதார அடிப்படையில், அதாவது **முதலாளித்துவத்தின்** கீழ் ஒரு ஐக்கிய ஐரோப்பிய நாடுகள், ஒரு பிற்போக்கு அமைப்பைத்தான் புலப்படுத்தும்''.[201]

ஏகாதிபத்தியத்தின் உள் முரண்பாடுகளைப் பற்றிய லெனினது ஆய்வியலின் மற்றொரு முக்கியநோக்கு முதலாளித்துவத்தின் இந்தக் கட்டத்தில், கொள்ளையும் கொலையும் நிறைந்த யுத்தங்களைக் குணாம்சப்படுத்திய அவரது பகுப்பாய்வுடன் தொடர்பு கொண்டதாகும். யுத்தங்கள் ஒரு சமூக நிகழ்வு என்ற பொதுவான மார்க்சியக் கருத்து பற்றிய லெனினது விரிவாக்கம் முதலாவதாகக் குறித்துக் கொள்ளப்பட வேண்டும். தனது ''**சோஷலிசமும் யுத்தமும்**'' (1915) என்ற புத்தகத்தில் லெனின், கார்ல் கிளாஸ்விட்ஸின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி யுள்ளார். ''யுத்தம் என்பது மற்றொரு வழியிலான (அதாவது: வன்முறை) அரசியல் தொடர்ச்சியே.'' அத்துடன், ''மார்க்சிய வாதிகள் எப்பொழுதுமே மிகவும் சரியான படி, இந்த ஆய்வியலை, எந்தப் போரின் முக்கியத்துவம் பற்றிய கருத்துக்களுக்கும் ஒரு சித்தாந்த அடிப்படையாகக் கருதினர்''[202] என்பதையும் சுட்டிக் காட்டினார்.

''போர்கள், சுரண்டும் வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் கோட்பாடுகளில் விசேட வகையானது. வர்க்கப்பகைமையைக் கொண்ட அமைப்புக்களில் உள் முரண்பாடுகளின் புறவயப் பட்ட வளர்ச்சியின் வெளிப்பாடு,'' என லெனின் காட்டினார். ஏகாதிபத்தியத்தின் கீழ் முதலாளித்துவ உள் முரண்பாடுகளின் வளர்ச்சி தவிர்க்க முடியாத ஏகாதிபத்தியப் போர்களுக்கு இட்டுச் செல்கிறது. முன்பெல்லாம் போர்கள், ஆக்கிரமிப்பாளரைப் பொறுத்த மட்டில் அநியாயமானதா கவும் தங்களது நாட்டையும் உடைமைகளையும் காத்துக் கொள்வதற்காக ஈடுபடும் மக்களைப் பொறுத்த மட்டில்

நியாயமாகவுமிருந்தன. ஏகாதிபத்தியத்தின் கீழ் இது வேறு விதமாக உள்ளது. எனவேதான் கொள்ளையடிப்பதை இயல்பாகக் கொண்ட யுத்தங்களை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் போரிட வேண்டியுள்ளது. இத்தகைய யுத்தங்கள் வெடித்துவிட்டால், அவர்கள் ஏகாதிபத்திய யுத்தத்தை மக்கள் யுத்தமாக மாற்றுவதற்கு, பாட்டாளி வர்க்கம் தனது சொந்த ஏகாதிபத்திய முதலாளிகளை எதிர்த்த யுத்தமாக, மொத்தத்தில் முதலாளித்துவ அமைப்பையே தகர்த்துத் தரை மட்டமாக்கும் ஒரு புரட்சிகர யுத்தமாக மாற்ற வேண்டும். போர் ஒழிப்புக் கோட்பாடு, எந்த வகையைச் சேர்ந்ததானாலும், மார்க்சியம் அதற்கு விரோதமானது என்பதை லெனின் விசேடமாக வலியுறுத்தினார்: ''ராணுவம் மற்றும் போர்ப்படைகளில் பணியாற்ற மறுப்பது, யுத்தத்தை எதிர்த்த வேலை நிறுத்தப் போராட்டங்கள் போன்றவை முட்டாள்தனமானவை; ஆயுத பாணிகளாக்கும் முதலாளித்துவத்தை எதிர்த்து நிராயுத பாணிகளாகப் போராடுவது எனப்படுவது பரிதாபத்திற்குரியது; கோழைத்தனமான கனவு......வர்க்கப் போராட்டம் பற்றி பிரச்சாரம் செய்ய வேண்டியது ஒவ்வொரு சோஷலிஸ்டின் கடமையாகும். ராணுவத்திலும் கூட வர்க்கப் போராட்டம் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டும்''[203] எனவே பாட்டாளி வர்க்கத்தின் கட்சி சோஷலிசப் புரட்சியை சீக்கிரமாகக் கொண்டுவர, மக்களை ஒன்றுபடுத்தி அணி திரட்ட, முதலாவதாகத் தொழிலாளர்களை போர் வீரர்களென ஆடை தரிக்கச் செய்து ஆயுதம் ஏந்தி தனது சொந்த முதலாளித்துவத்தை அதன் அரசாங்கத்தை அதன் சமூக அமைப்பை எதிர்த்துப் போராடத் தயாரிப்பதற்கு, ஏகாதிபத்திய யுத்தங்கள் உருவாக்கும் நிலைமைகளைப் பயன்படுத்த வேண்டுமென லெனின் கருத்துத் தெரிவித்தார்.

20-ம் நூற்றாண்டின் உலகப் புரட்சிப் பரிணாமத்திற்கும், விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றத்துக்குமிடையே இயக்கவியல் தொடர்பு பற்றிய லெனினது கருத்துக்கள்

சாலப் பொருத்தமானவை. விசேட ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியவை. முதலாளித்துவம் இன்னும் ஒரு திண்ணிய அமைப் பாக இருந்த காலத்தில் லெனின் இந்தக் கருத்துக்களை முன் வைத்தார். எனினும் அவை இன்று வரை முழுக்க முழுக்கச் சரியாகவும், பொருத்தமாகவும் உள்ளன. அதாவது மகத் தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றியோடு துவங்கிய சகாப்தம் வரை.

எதிர் வரக்கூடிய, மனித சமுதாயம் முதலாளித்துவத்தி லிருந்து சோஷலிசத்திற்கு மாற்றம் பெறுவது ஏகாதிபத்தியக் கட்டத்தில் தயாரிக்கப்பட்டது என்பதை லெனின் வற் புறுத்திக் கூறினார். இது, இத்தகைய மாற்றத்திற்கான சூழ் நிலைகள் உருவாக்கப்பட்ட பின்பு விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் இடம், அவற்றின் சமூகப் பாத்திரம் பற்றிய லெனினது கணிப்புடன் நேரடி உறவு கொண்ட தாகும். லெனின் கூறியபடி, ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்துவத் தொழில் நுட்பம் என்பது: சோஷலிசத் திற்கு வழி சமைக்கும் தொழில் நுட்பம் சார்ந்த முன் னேற்றமே தவிர வேறொன்றுமல்ல.[204]

விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பால் முதலாளித்துவத்தின் உறவு பற்றிய லெனினது கருத்துக் குறிப்புகள் பரந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1914-ம் ஆண்டுக்கும் 1916-ம் ஆண்டுக்கும் இடையே அவர் பரந்த அளவிலான பொருளாதார விஞ்ஞானத் தொழில் நுட்பப் பிரச்சினைகளை புலன் விசாரித்து ஆய்ந்தார். இதன் விளைவாக அவர் "ஏகாதிபத்தியம் பற்றிய குறிப்புப் புத்த கங்கள்" என்ற நூலை எழுதினார். இதில் எண்ணற்ற குறிப் பிடத்தக்க பொதுமைப்படுத்தல்கள் இருந்தன. தொடர்ந்து அவர் அவற்றை, **ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்** (1916) என்ற நூலில் பயன் படுத்தினார். முதல் புத்தகத்தில் அவர் எழுதியதாவது: ஏகாதிபத்தியம் பற்றிய கருத்தமைவு + முன்னேற்றத்தை செயற்கையாக நிறுத்தி வைப்பது (ட்ரஸ்டுகளினால் தனி உரிமைச் சான்றுகள்

வாங்கப்படுவது. உதாரணம். இந்தக் குறிப்புப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள ஜெர்மன் பாட்டில் உற்பத்தியாளர்கள் பற்றிய உதாரணம்)." [205] ஜெர்மானிய, முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர் ஆல்பிரெட் லான்ஸ் பர்க் எழுதிய "நெருக்கடியின் காரணங்கள்" என்ற கட்டுரையிலிருந்து லெனின் ஒரு மேற்கோளை. உதாரணமாகக் காட்டினார். ஏகாதிபத்திய ட்ரஸ்டுகள் அடிக்கடி வேண்டுமென்றே புதிய கண்டு பிடிப்புக்களையும் தொழில் நுட்ப அபிவிருத்திகளையும் தடுத்துத்தாமதமாக்குகின்றன அல்லது அவற்றை விலைக்கு வாங்கி அப்படியே பெட்டியில் பூட்டி வைத்து விடுகின்றன, என்று அவர் அக்கட்டுரையில் எழுதியிருந்தார்.

இந்த உண்மையை, முதலாளித்துவத்தின் சீரழிவுக்குத் தகுந்த சாட்சியமாக லெனின் கணித்திருந்தார். வேறு பலரும் அவ்வாறே கணித்திருந்தனர்: "ஏகபோக விலைகள் நிர்ணயிக்கப்பட்டு விட்டதால், தாற்காலிகமாக இருந்தாலும் கூட தொழில் நுட்ப, தொடர்ந்து இதர அனைத்து முன்னேற்றங்களினதும் நோக்கத்திற்குரிய காரணம் ஓரளவு மறைந்து விடுகிறது. மேலும் தொழில் நுட்ப முன்னேற்றத்தை வேண்டு மென்றே தடுத்துப் பின்தள்ளி விட்டு பொருளாதார சாத்தியப்பாடுகள் எழுகின்றன." [206] உள்ள படியே அந்த மனித சமுதாயத்தின் பொதுவான விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றம், இந்த உண்மைகளையும் மீறிச் செல்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. 19-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ம் நூற்றாண்டின் துவக்கத்திலும் காணக்கிடைத்த தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சியின் அளப்பரிய முன்னேற்றமே இதை நிருபிக்கிறது-சில்சமயங்களில், உற்பத்தியில் புதிய கண்டு பிடிப்புக்களை அறிமுகப் படுத்துவதில் ஏகபோகங்களுக்கு லாபம் கிடைக்கிறது. எனவே தான் "தொழில் நுட்ப அபிவிருத்திகளை அறிமுகப்படுத்துவது மாறுகின்ற திசைவழியில் செயல் படுவதால் உற்பத்திச் செலவைக் குறைத்து லாபங்களை அதிகரிப்பது சாத்தியமாகிறது" [207] என்று லெனின் விளக்கம் கொடுத்தார்.

ஆனால் " முதலாளித்துவ சமுதாயத்தில் விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றமென்பது வியர்வை சிந்தவைக்கும் கலையில் முன்னேற்றம் எனப்பொருள்படும்.[208] அதாவது, அது உழைக்கும் மக்களைச் சுரண்டுவதை மேலும் தீவிரப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்பதாகும். சமீபத்திய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைப் பயன்படுத்தி முதலாளிகள்" தொழிலாளியிடமிருந்து மூன்று மடங்கு உழைப்பைக் கசக்கிப் பிழிகிறார்கள். ஈவிரக்கமின்றி அவனது பலத்தை எல்லாம் வடித்தெடுக்கிறார்கள், கூலி அடிமையின் நரம்பு மற்றும் உடம்பின் சக்தியிலிருந்து ஒவ்வொரு சொட்டு ரத்தத்தையும் மூன்று மடங்கு வேகமாக உறிஞ்சுகிறார்கள். இதனால் அவன் இளம் வயதிலேயே இறந்து விட்டாலோ? நல்லது, வாயிற்படியில் எத்தனையோ பேர் காத்திருக் கிறார்கள்" [209].

நவீன முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றம், ஒரு அவசியமான மூலக்கூறு என லெனின் கருதினார். நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சியை மதிப்பீடு செய்வதில் இது மிக முக்கியமான கருத் தாகும். இந்தப் புரட்சியை சில முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்களும் அவர்களது திருத்தல்வாத தெஞ்சிக் கூத்தாடு பவர்களும், சமுதாய-புரட்சிகர மாற்றங்களிலிருந்து சுயேச் சையான ஒரு பரிமாணம், சில சமயங்களில் அவற்றிற்கு ஒரு மாற்றாகக்கூட இருக்கலாம் என்று கருதினார்கள்.

இந்தக் கால கட்டத்தில், மார்க்சின் அரசாங்கம் பற்றிய ஆய்வை மேலும் வளர்த்து அதை உயர்த்திப் பிடித்ததோடு சமூக தத்துவார்த்தப் பிரச்சினைகளின் முழு அளவையும் லெனின் பரிசோதித்தார். இது தொடர்பான அவரது மிக முக்கியமான கருத்துக்கள் **அரசும் புரட்சியும்** (1917) என்ற நூலில் தரப்பட்டுள்ளது.

1917-ன் துவக்கத்தில் தனது கடிதங்களின் ஒன்றில் லெனின் எழுதியதாவது: நான் சமீப காலமாக **அரசு** பற்றிய

மார்க்சியபோக்கு சம்பந்தமான பிரச்சினைபற்றிஏராளமாகப் படித்து ஆய்வு செய்கிறேன்; ஏராளமான விஷயங்களைச் சேகரித்துள்ளேன். அவை எனக்கு மிகவும் சுவையாகத் தோன்றுகின்றன......முடிவுகள்''[210]. இந்தத் தயாரிப்புப் பணியே ஒரு கனமான கையெழுத்துப் பிரதியாகி விட்டது. ''அரசாங்கம் பற்றி மார்க்சியம்'' என்ற இதில் பொருட் சுருக்கம் குறிப்புகள் மற்றும் மேற்கோள்கள், அவரது **நிலக்குறிப்பேடு** புத்தகத்திலிருந்து சேகரிக்கப்பட்டவை அடங்கியிருந்தன. இந்தப் படைப்பு மிக முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் சமுதாய வாழ்க்கையில் அரசாங்கம், அது வகிக்கும் பாத்திரம் பற்றிய மார்க்சியக் கருத்துக்களின் அனைத்துப் பொக்கிஷங்களும் ஒரு முனைப்பாக்கி இப்படைப்பில் வெளிப்பாடு பெற்றிருக்கின்றன. 1917-ம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இந்த நூலின் ஒரு பகுதியை அடிப்படையாகக் கொண்டு லெனின் அவரது படைப்புக்களில் மிக முக்கியமானவற்றில் ஒன்றான **அரசும் புரட்சியும்**[211] என்ற நூலை எழுதினார். அடுத்து அவர் ''அரசாங்கத்தைப் பற்றி மார்க்சியம்'' என்பதில் அடங்கி யுள்ள விஷயங்களைக் கொண்டு **அரசும் புரட்சியும்** என்ற நூலின் இரண்டாம் பகுதியை எழுதுவதில் கவனம் செலுத் தினார். ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறவேயில்லை. தற்காலிக அரசாங்கம் அவரைக் கைது செய்வதற்காக வாரண்டைப் பிறப்பித்த உடன், 1917-ம் ஆண்டு ஜூலை மாதத் துவக்கத்தில் அவர் தலைமறைவாகப் போகும் போது ஒரு குறிப்பை எழுதி வைத்திருந்தார். இந்தக் கையெழுத்துப் பிரதியில் அவர் எவ்வளவோ எழுதி வைத்திருந்ததை இது காட்டுகிறது: ''உனக்கும் எனக்கு மிடையே: என்னை அவர்கள் உள்ளே தள்ளி விட்டால், எனது குறிப்புப் புத்த கத்தை நீ வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்: 'அரசாங்கத்தைப் பற்றி மார்க்சியம்'......அது ஒரு நீல அட்டையினால் பைண்டு செய்யப்பட்டது. அது மார்க்ஸ்— எங்கெல்ஸ் ஆகியோரின் அனைத்து மேற்கோள்களையும் சேகரித்தவற்றைக் கொண்டுள்ளது. அதே போல் கவுட்ஸ்கி,

பான்னி கோயக்குக்கு எதிராக எழுதப்பட்டதிலிருந்தும் மேற்கோள்கள் உள்ளன. அதில் எண்ணற்ற குறிப்புரைகளும், குறிப்புக்களும், வரையறைகளும் உள்ளன. ஒரு வாரம் அதில் வேலை செய்தபின் அதை வெளியிடலாம் என்று நினைக்கிறேன். அதை நான் முக்கியமான ஒன்றென நம்புகிறேன். ஏனென்றால் பிளெக்கனோவ் மட்டுமல்லாமல் கவுட்ஸ்கியும் விஷயங்களைக் குழப்பியுள்ளார்." [212] 1917-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலைமறைவு வாழ்க்கை நடத்திய போது லெனின், ஹெல்சிங்போர்ஸ் (இப்பொழுது ஹெல்சிங்கி)லிருந்து தனது சகோதரி மரியா உலியனோவாவுக்கு எழுதியதாவது; "நான்....அரசாங்கம் பற்றிய பிரச்சினையை எழுதிக் கொண்டிருக்கிறேன். நீண்ட காலமாகவே அது என்னுள் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. [213]

**அரசும் புரட்சியும்** என்ற நூலை ஏழு அத்தியாயங்களாக எழுதுவதற்கு லெனின் முதலில் திட்டமிட்டிருந்தார். ஆனால் கடைசி அத்தியாயத்தை எழுத அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. அதில் அவர் 1905 - 07 புரட்சியினால் கிடைத்த அனுபவங்களைப் பரிசோதித்துப் பார்க்க எண்ணியிருந்தார். பிரசுர கர்த்தாவுக்கு அவர் எழுதிய குறிப்பில், கடைசி ஏழாவது அத்தியாயத்தை எழுதி முடிக்கத் தாமதமாகி விட்டால் அல்லது அது மிக நீளமானது என்றால் முதல் ஆறு அத்தியாயங்களும், முதல் பாகமென அச்சிடப்படலாம் எனக் கண்டிருந்தது. [214]

1917-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில், ஸிஸின் ஐஸ்னானியி பதிப்பகத்தாரிடம் அவரது படைப்புகளில் ஏழு படைப்புக்களை வெளியிடுவதற்காக லெனின் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். **அரசும் புரட்சியும்** அவற்றுள் ஒன்று இருந்த போதிலும் அது சோவியத் அதிகாரம் நிறுவப்பட்ட பின்னரே, 1918-ம் ஆண்டின் துவக்கத்தில் தான் அச்சு வாகனமேறியது. அது ஆறு அத்தியாயங்களைக் கொண்டிருந்தது. லெனின் கேட்டுக் கொண்டபடி தலைப்புப் பக்கத்தில் 'முதல் பாகம்' என்ற வார்த்தைகள்

பொறிக்கப்பட்டிருந்தன. அவர் ஏழாவது அத்தியாயத்தை எழுதி முடித்து அதை 'இரண்டாம் பாகம்' என வெளியிடத் திட்டமிட்டிருந்தார். ''இருந்த போதிலும் தலைப்பைத் தவிர அந்த அத்தியாயத்தில் ஒரு வரியைக் கூட எழுது வதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை'' என அவர் எழுதியிருந்தார். 1917-ம் வருடத்திய அக்டோபர் புரட்சியின் போது ஒரு அரசியல் நெருக்கடி காரணமாக நான் இடை மறிக்கப்பட்டேன். ஆனால் இந்தப் பிரசுரத்தின் இரண்டாம் பாகத்தை (1905 மற்றும் 1917ம் வருடத்திய ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம்) எழுதுவது ஒருவேளை நீண்ட காலத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இந்த இடைமறிப்பை வரவேற்றிருக்கலாம். அதைப் பற்றி எழுது வதைவிட 'புரட்சியின் அனுபவத்தில்' மிதப்பது மிகவும் மகிழ்ச்சி கரமானது பயனுள்ளது''.[215]

அரசாங்கம் மற்றும் புரட்சி பற்றிய லெனினது புத்தகம் மார்க்சிய சித்தாந்தத்தின் பொக்கிஷத்தில் அரசாங்கம் பற்றிய மார்க்சிய போதனையின், வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின், மிக முக்கியத் துறைகளில் ஒன்றின் தொலை நோக்கு மற்றும் விரிந்த பகுப்பாய்வாக வந்திறங் கியது. அது ஒரு வர்க்க சமுதாயத்துக்கும் அரசாங்கத்துக்கு மிடையேயுள்ள உறவுகளை, அரசாங்கத்துக்கும் புரட்சிக்கு மிடையேயுள்ள உறவுகளைப் பரிசீலிக்கிறது. 1848-51ம் வருடங்களது புரட்சிகளிலிருந்தும், 1871-ம் வருடத்திய பாரிஸ் கம்யூனிலிருந்தும் கிடைத்த அனுபவத்தைப் பொதுமைப் படுத்துகிறது. கம்யூனிஸத்தின் கீழ் அரசாங்கம் மறைந்து போவதற்கான பொருளாதார நிலைமைகளை வெளிப்படுத்துகிறது. அத்துடன் இந்தப் பிரச்சினைகளில் மார்க்சிய நிலைபாட்டைத் திரித்துக் குழப்பும் சமூக சீர் திருத்தவாதம், மற்றும் இடதுசாரி அராஜக சந்தர்ப்ப வாதங்களை முழுமையாக விமர்சிக்கிறது.

ஒரு வர்க்க சமுதாயத்தில் அரசாங்கத்தின் இடம் மற்றும் பாத்திரத்தைப் பரீட்சிப்பதிலிருந்து லெனின் தனது

பகுப்பாய்வைத் துவங்குகிறார். நேர் செய்ய முடியாத வர்க்க முரண்பாடுகளின் வெளிப்பாடாக அரசாங்கம் சொத்துரிமை படைத்த சிறுபான்மையோரால், உழைக்கும் பெரும்பான்மையோரின் மீது வன்முறை அதிகாரங்களைப் பிரயோகிக்கப்படும் ஒரு கருவியே என லெனின் விளக்கிக் காட்டினார். ஒரு வர்க்க சமுதாயத்தில் அரசாங்கம் என்பது வர்க்க முரண்பாடுகளின் ஒரு உடனடி உற்பத்திப் பொருள்; நேர் செய்ய முடியாத வர்க்க முரண்பாடுகளின் விளைவு. இருக்கின்ற சமுதாயத்தில் அது பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் ஆகியவற்றில் உள்ள வர்க்கத்தின் அரசியல் ஸ்தாபனமாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்பை வன்முறை அதிகாரத்தைக் கொண்டு நசுக்குவதற்காக அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளது. மேல் கட்டுமானத்தின் ஒரு அவசியமான மூலக்கூறுதான் அரசாங்கம்.

அரசாங்கத்தின் முக்கிய சிறப்பு அம்சங்களாவன: அதன் அதிகாரப் பிரயோகத்திற்குள்ளிட்ட ஒரு பிரதேசம்; நிர்வாகத்திற்கான ஒரு கருவி; விசேட ஆயுதப்படைப் பகுதிகள் அதற்கு அடங்கியதாயிருக்க வேண்டும்;—ராணுவம், காவல்துறை போன்றவைகளும் அதற்கு அடங்கியவையே. நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக ஆளும் வர்க்கத்தினால் நிறுவப்படும் அமைப்புக்களும் இவ்வாறே. அரசாங்கத்தின் வகை, சமூக—பொருளாதார அமைப்பின் வகையை ஒத்ததாகும். அடிமை முறை, நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவ அரசாங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வரலாற்று வகையிலான அரசாங்கமும் பல்வேறு வடிவங்களைக் கொள்ளலாம்; கொடுங்கோன்மை (முடியரசு) ஆட்சி; குடியரசு இன்னபிற. அவற்றின் அதிகாரத்தின் இயல்பியல் அரசாங்கத்தின் வடிவங்கள் வேறுபடலாம்—தனிநபர் ஆட்சி; ஒரு ஆதிக்கக் கும்பலின் ஆட்சி; அல்லது ஜனநாயக பிரதிநிதிகளின் ஆட்சி. எனினும் ஒரு வர்க்க சமுதாயத்தில் அரசாங்கத்தின் சத்தும் சாரமும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது—அதாவது ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் மீது ஆளும் வர்க்கம்

பிரயோகிக்கும் அடக்குமுறை. ஒரு வர்க்க சமுதாயத்தில் இந்த அடக்கு முறைக்கான எதிர்ப்பு, நிலவுகின்ற அதிகார வர்க்கத்தை ஒழிக்கும் நோக்கத்தைக் கொண்ட அதாவது அந்த அரசாங்கத்தை அகற்றும் நோக்கத்தைக் கொண்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரு இயக்கமாக முகிழ்க்கிறது. ஆளு கின்ற வர்க்கம், தனது அதிகாரத்தை நிரந்தரப்படுத்திக் கொள்வதற்காக அரசாங்கக் கருவியை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கிறது.

எனவே முக்கியமான முடிவு யாதெனில்: எப்பொழு துமே என அரசாங்கம் இருந்ததில்லை; நிரந்தரமாக என் றென்றும் இருக்கப் போவதுமில்லை; அது வர்க்க முரண்பாடு களின் ஒரு வரலாற்று உற்பத்தியாகவிருக்கிறது. இந்த முரண் பாடுகள் தீர்க்கப்பட்டதும் அது மறைந்து விடுகிறது. இது தொடர்பாக லெனின் கூறியதாவது: "ஒரு வன்முறைப் புரட்சியின்றி பாட்டாளி வர்க்க அரசாங்கத்தினால் முதலாளித்துவ அரசாங்கத்தை ஒடுக்க முடியாது. பாட்டாளி வர்க்க அரசாங்கத்தை நீக்குவது அதாவது பொதுவாக ஒரு அரசாங்கத்தை நீக்குவது "மறைந்து அழிதல்" என்ற பரிமாணம் மூலமே அல்லாது வேறு முறையில் சாத்திய மல்ல."[216]

பழைய அரசாங்க எந்திரத்தைத் தகர்ப்பது, அரசாங்கம் மறைந்து அழிதல் ஆகியவை பற்றி விசேடமாகக் கவனிக் கிறார். ஏனென்றால் பல இடது மற்றும் வலது சந்தர்ப்ப வாதிகள் மார்க்சின் கருத்துக்களைத் திசை திருப்பிக் குழப்பி ஒரு தலைப்பட்சமாக ஒன்றோடொன்றாக முடிச்சுப் போட்டனர். மார்க்சிய பொருள் முதல் இயக்கவியலுக்குப் பதிலாக பொய்ம்மை வாதங்களையும் திருடிச் சேர்த்த கருத் துக்களையும் வைப்பதற்கான முயற்சிகள் என லெனின் இவற்றைக் கருதினார். உண்மையில் முதலாளித்துவ அரசாங்க எந்திரத்தை பலவந்தமாக உடைத்து நொறுக்கு வதின் அவசியம் பற்றிய மார்க்சின் கருத்து, பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய அவரது வருணனையுடன் தொடர்பு

கொண்டதாகும். அரசாங்கம் மறைந்து அழிவது, சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு முகிழ்க்கும் பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் எதிர்கால வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டதாகும். அதன் ஆதாயங்களை வளர்த்து வலுப்படுத்துவதற்கு இவ்விரண்டுமே அவசியமான சூழல் மற்றும் உண்மையான வடிவங்களாகும்.

19-ம் நூற்றாண்டின் புரட்சிகளின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் பற்றிய மார்க்சின் கருத்துக்களது பொருளையும் சாரத்தையும் வெளிப்படுத்திக் காட்டினார். ''பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கு முதலாளித்துவ அரசாங்க எந்திரத்தை உடைக்க வேண்டும் என்பது இன்றியமையாத நிபந்தனை; பாரிஸ் கம்யூனின் அனுபவம்; பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு என்றமுறையில் ஒரு பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் சாரம்'' ஆகியவை பற்றிய மார்க்சின் கருத்துக்களை அவர் தனிமைப் படுத்திக் காட்டினார். வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் கீழ் அரசாங்கம் மறைந்தழிந்து போவதற்கான பொருளாதாரத் தேவைகள்,—உற்பத்திச் சாதனங்களை சமூகமயமாக்குதல்—புதிய, மெய்யான சமத்துவ சமூக உறவுகள், அரசாங்கத்தை நிர்வகிப்பதில் அனைத்து உழைக்கும் மக்களும் உணர்வு பூர்வமாகக் கம்யூனிஸத்தைக் கட்டுகிறவர்கள் எனப் பங்கு கொள்வது ஆகியவை பற்றியும் அவர் வர்ணித்தார்.

லெனின் இந்தக் கருத்துக்களை வளர்த்து மெய்ம்மைப் படுத்தினார். அதே சமயத்தில் அரசாங்கம் மற்றும் புரட்சி பற்றிய மார்க்சிய வியாக்கியானத்தை, திரித்துக் குழப்பிய சந்தர்ப்பவாதத்தையும் கடுமையாக விமர்சித்தார். அரசாங்க எந்திரத்தை உடைத்து நொறுக்குவது, புரட்சியின் போக்கில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது போன்றவற்றை எதிர்த்துக் கிளம்பிய கவுட்ஸ்கியின் கருத்துக்களை அவர் பகுப்பாய்ந்தார். அரசாங்கத்தை 'நீக்குவது' அல்லது 'தகர்த்துத் தரைமட்டமாக்குவது' போன்றவை புரட்சிக்கு

அவசியமானவை அல்ல, என்ற இடதுசாரி, அராஜக சிண்டிகாலிஸ்ட் சித்தாந்தங்களையும் அவர் கண்டித்தார். "புரட்சியின் வெற்றிக்குப் பின் நீண்ட காலம் வரை பாட்டாளி வர்க்கத்துக்கு அரசாங்கம் இன்றியமையாதது; அது படிப்படியாக மறைந்து அழிவது ஒரு நீண்ட வரலாற்றுக் காலகட்டத்தைக் கொண்டதாகும்; இந்தக் கால கட்டத்தில் சமுதாயம் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்தின் முதல் கட்டத்திற்கு—சோஷலிசக் கட்டத்திற்கு மாறும். பின் அதன் மிக உயர்ந்த கட்டத்திற்குச் செல்லும்" என்பதை அவர் வலியுறுத்திக் கூறினார்.

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு நிறுவப்படும் புதிய சோஷலிச அரசாங்கத்தின் சிறப்பம்சங்களையும், சாரத்தையும் லெனின் மெய்ம்மைப் படுத்தியதே **அரசும் புரட்சியும்** என்ற நூலின் கருவாகும். வரலாறு அறிந்த வரை சோஷலிச ஜனநாயகமே மக்கள் ஆட்சியின் மிக உயர்ந்த வகை என்பது பற்றி அவர் எதையும் விடாமல் அனைத்தையும் தழுவி ஒரு வருணிப்பைத் தருகிறார். "அனைவரும் நிர்வாகம் செய்யப் பயின்று விடும் போது, உள்ளபடியே சமூக உற்பத்தியை சுயேச்சையாக நிர்வகிக்கும் போது, சுதந்திரமாகக் கணக்கு வழக்குகளை வைத்துக் கொண்டு கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் போது...... கம்யூனிஸ சமுதாயத்தின் முதல் கட்டத்திலிருந்து அதன் மிக உயர்ந்த கட்டத்திற்குச் செல்ல கதவுகள் திறந்து விடப்படும், இத்தோடு அரசாங்கம் முழுமையாக மறைந்து அழிந்து விடும்."[217]

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச மாற்றம் நிகழும் போது புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம் அனைத்து உழைக்கும் மக்களையும் அணி சேர்த்துக் கொண்டு பலவந்தமாக முதலாளித்துவ அரசு எந்திரத்தை உடைத்தெறிகிறது என்பதை லெனின் காட்டினார். வெற்றிக் கொடியை நாட்டிய சோஷலிஸ்ட் புரட்சி அந்த இடத்தை மற்றொரு அரசைக் கொண்டு புதியதோர் கோட்பாட்டைக் கொண்ட

அரசைக் கொண்டு நிரப்புகிறது—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்; தொழிலாளி வர்க்கத்தை தலைமையாகக் கொண்டு, தொழிலாளர்கள், அனைத்து உழைக்கும் மக்கள் மற்றும் உடைமைகள் ஏதும் இல்லாத வர்க்கங்கள் ஆகியோரின் வர்க்க ஒற்றுமையின் ஒரு வடிவம். சோஷலிச சமுதாயம் வளர்ச்சி பெறும் போது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு படிப்படியாக அனைத்து மக்களதும் ஒரு அரசாக மாறுகிறது. அதன் திருப்பத்தில் அது அரசாங்க நிர்வாகத்திலிருந்து கம்யூனிஸ சமூக சுயேச்சை அரசாங்கத்திற்கு மாறுவதின் துவக்கமாகிறது.

சோஷலிஸ்ட் அரசாங்கத்தின் முக்கிய செயல்பாடுகளாவன: புரட்சியின் மூலம் கிட்டிய ஆதாயங்களைக் கட்டிக் காப்பது; ஒரு சோஷலிசப் பொருளாதாரத்தைச் சமைப்பது; சோஷலிச, கம்யூனிஸ சமுதாய உறவுகளை நிறுவி வளர்ப்புதை நோக்கமாகக் கொண்ட சமுதாய அரசியல் நடவடிக்கைகள்; சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் உணர்வுகளை உருவாக்கி விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட கலாசார மற்றும் சித்தாந்தப் பணிகள்.

சமகால கட்டத்தில் புரட்சியின் மூலம் கிட்டிய ஆதாயங்களைக்கட்டிக்காப்பது முதல் செயல்பாடு என்ற முறையில், அனைத்து விதமான ஆக்கிரமிப்புக்களையும் இல்லாதவையாக்கி சோஷலிச நாட்டைப் பாதுகாப்பதைப் புலப்படுத்துகிறது. இந்த நிகழ்வில், சர்வதேச ஏகாதிபத்தியத்தைப் பொறுத்த மட்டிலும்தான், சோஷலிச அரசாங்கம், பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசாங்கம் என்ற முறையில் தனது செயல்பாடுகளைக் கொண்டு செலுத்தும். சோவியத் சமுதாயம் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளைப் பொறுத்த மட்டில் அது அனைத்து மக்களினதும் ஒரு அரசாங்கமாகத்தான் திகழும். இரண்டாவதாக. பொருளாதார மற்றும் ஸ்தாபனச் செயல்பாடு. சோஷலிசம் மற்றும் கம்யூனிஸத்திற்கான ஆக்கபூர்வமான மற்றும் தொழில் நுட்ப அடிப்படைகளை நிறுவுவதற்கான சோவியத் சமுதாயத்தின் நிர்

வகிப்பைக் குறிப்பிடுவதே இந்தச்செயல் பாடு. ஏகாதிபத்தியத்தின் உலக அமைப்பைப் பொறுத்த மட்டில் இந்தச்செயல் பாடு ஒரு வர்க்கப் போராட்ட வடிவத்தைக் கொண்டிருக்கும். சோஷலிசம் மற்றும் முதலாளித்துவத்திற்கிடையே சமாதான ரீதியான பொருளாதாரப் போட்டி என்ற வடிவத்தை எடுத்துக் கொள்ளும்.

புதிய அரசாங்கத்தின் மூன்றாவது செயல் பாட்டை, புதிய சமூக உறவுகளை நிறுவி வளர்ப்பதை அதாவது சோஷலிச அரசாங்க அமைப்பையும் அரசியலையும் வலுப்படுத்தி வளர்ப்பதை அதன் முக்கியத்துவத்தை லெனின் வற்புறுத்தினார். நீண்டகாலப் போக்கில் இவை கம்யூனிஸ நிர்மாணப் பரிமாணங்களாக, கம்யூனிஸ்ட் சுயேச்சை அரசாங்கமாக வளர்ச்சி பெறும். அரசியல், (அதே போல் சட்டமும்) சமூக வளர்ச்சிச் சட்டங்களின் விஞ்ஞான அறிவாற்றலை அடிப்படையாகக் கொண்டு ஒருமித்த கம்யூனிஸ்ட் ஒழுக்கத்தினால் மாற்றி அமைக்கப்படும். முதலாளித்துவ உலகைப் பொறுத்த மட்டில் இந்தச் செயல்பாடு வர்க்கப் போராட்டம் என்ற பிரத்தியேக வடிவத்தைக் கொண்டதாகும். வேறுபட்ட சமூக அரசியல் அமைப்புக் கொண்ட நாடுகளுக்கிடையே சமாதான ரீதியான போட்டி என்ற வடிவத்தை எடுத்துக் கொள்ளும்.

புதிய அரசாங்கத்தின் கடைசிச் செயல்பாடு—கலாச்சார, சித்தாந்தச் செயல்பாடு—சோவியத் மக்களுக்கு கம்யூனிஸக் கல்வியை அளிக்கும் நோக்கத்தைக் கொண்டது. அதாவது அவர்களை மெய்யான கம்யூனிஸ்ட் சித்தாந்தம் மற்றும் உணர்வுடன் கூடிய உத்வேகத்தில் சோஷலிசம் மற்றும் கம்யூனிஸ இலட்சியங்களின் பால் அர்ப்பணிப்பு உணர்வுடனிருக்குமாறு பயிற்றுவிப்பது. முதலாளித்துவ அமைப்பைப் பொறுத்த மட்டில் இந்தச் செயல்பாடு, முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தின் பல்வேறு போக்குகளை அதன் சீர்திருத்த வாத மற்றும் திருத்தல் வாத அசிங்கங்களை எதிர்த்து தயவு தாட்சண்யமில்லாத வர்க்க மற்றும் சித்தாந்தப் போராட்ட வடிவத்தை எடுக்கும்.

இவ்வாறாக சோஷலிச அரசாங்கத்தின் செயல் பாடுகள் சோவியத் சமுதாயத்துக்குள் எந்தக் குறிப்பிட்ட வர்க்கத் துக்கும் சலுகை காட்டாத, அனைத்து மக்களினதும் அதிகார உறுப்பாகத்திகழும் செயல்பாடுகள்—முதலாளித்துவத்தைப் பொறுத்த மட்டில் அவற்றின் வர்க்க உள்ளடக்கத்தையும், அதன் பிரதான நோக்குகளில் சோஷலிசத்துக்கும் முதலாளித் துவத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் வடிவங்களையும் முழுமையாகத் தக்கவைத்துக் கொள் கின்றன.

தொழிலாளி வர்க்கக்கட்சி சித்தாந்த ரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் தன்னை ஆயுத பாணியாக்கிக் கொள்வதற்கு, லெனினது **அரசும் புரட்சியும்** ஒரு முக்கிய மான பங்களிப்பாகும். அதன் கருத்துக்கள் இன்று வரை பொருத்தமாயுள்ளன. மார்க்சிய - லெனினியத்தை வளர்ப் பதற்கான முயற்சிகளில், சமூக வளர்ச்சியில் மார்க்சியக் கருத்துக்களை எதிர்ப்பவர்களை விமர்சித்து அம்பலப் படுத் துவதில் கம்யூனிஸ்டுகளின் கைகளில் அந்நூல் ஒரு சக்தி மிக்க ஆயுதமாகும்.

மொத்தத்தில் முதல் உலக யுத்த காலத்திலும், மகோன்னத அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் போது மார்க்சியத் தத்துவத்தை லெனின் வளர்த்தது, லெனினியத் தைப் பற்றிய மதிப்பீட்டில் ஒரு மகத்தான வரலாற்றுத் திருப்பு முனையாகும். இந்தக் காலகட்டம் லெனினியக் கட்டத்தின் முழுவதிலும் மிக முக்கியமானது எனக்கருதப் படுவது நியாயமே. **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்; ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்; அரசும் புரட்சியும்; இரண்டாவது அகிலத்தின் தகர்வு; சோஷலிசமும் போரும்** ஆகிய நூல்களும், இந்தக்கால கட்டத்தில் லெனின் எழுதிய இதர நூல்களும் உலகக் கம்யூனிஸ்டுகள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் புதிய சித்தாந்த மற்றும் நடை முறைக் கடமைகளை நிறைவேற்ற தொடர்ந்து ஒரு அளப்பரிய பாத்திரத்தை வகிக்கின்றன.

## குறிப்புகள்

1. வி. ஐ. லெனின், "மக்களின் நண்பர்கள் யார் சமூக ஜனநாயகவாதிகளை எதிர்த்து அவர்கள் எங்ஙனம் போராடுகிறார்கள்" **நூல் திரட்டு** தொகுப்பு 1, பக்கம் 159.

2. அதே புத்தகம்.

3. அதே புத்தகம், பக்கம் 160.

4. அதே புத்தகம், பக்கம் 300.

5. வி.ஐ. லெனின், "இனி என்ன செய்ய வேண்டும்? **நூல் திரட்டு** தொகுப்பு 5, பக்கம் 353.

6. வி. ஐ. லெனின்,"நரோடிஸத்தின் பொருளாதார உள்ளடக்கமும் திருவாளர் ஸ்ட்ருவின் புத்தகத்தில் அதைப்பற்றிய திறனாய்வும்," **நூல் திரட்டு** தொகுப்பு 1, பக்கங்கள் 400-401.

7. வி.ஐ. லெனின், "பிரடெரிக் எங்கெல்ஸ்" **நூல் திரட்டு** தொகுப்பு 2, பக்கம் 27.

8. அதே புத்தகம்.

9. மேற்கோள்: வி. ஐ. லெனின், "ருஷ்ய ஜன நாயக வாதிகளின் ஒரு எதிர்ப்பு" **நூல் திரட்டு**; தொகுப்பு 4, பக்கங்கள் 173, 174.

10. வி. ஐ லெனின்: குறிப்புக்கள், **நூல்திரட்டு** தொகுப்பு 4, பக்கம் 438.

11. வி. ஐ. லெனின், "ருஷ்ய ஜன நாயக வாதிகளின் ஒரு எதிர்ப்பு" **நூல்திரட்டு** தொகுப்பு 4, பக்கம் 176.

12. அதே புத்தகம், பக்கம் 177.

13. அதே புத்தகம், பக்கம் 179.

14. பார்க்கவும். வி. ஐ. லெனின், "ருஷ்ய சமூக ஜன நாயகத்தில் ஒரு பின்னடைவுப் போக்கு" **நூல்திரட்டு**, தொகுப்பு 4, பக்கம் 285.

15. வி.ஐ. லெனின், "இனி என்ன செய்ய வேண்டும்?" **நூல்திரட்டு**, தொகுப்பு 5, பக்கங்கள் 363-364.

16. அதே புத்தகம், பக்கம் 374.

17. அதே புத்தகம், பக்கங்கள் 382-383.

18. அதே புத்தகம், பக்கம் 384.

19. அதே புத்தகம், பக்கம் 393.

20. அதே புத்தகம், பக்கங்கள் 393-394.

21. அதே புத்தகம், பக்கங்கள் 394-395.

22. அதே புத்தகம், பக்கம் 396.

23. அதே புத்தகம், பக்கங்கள் 374-375.

24. அதே புத்தகம்.

25. வி. ஐ. லெனின், "சமூக ஜனநாயகக் கட்சியின் ஒரு திட்டத்திற்கான பூர்வாங்கமும் விளக்கமும்" **நூல்திரட்டு**, தொகுப்பு 2,பக்கங்கள் 113-114.

26. வி. ஐ. "என்ன செய்ய வேண்டும்"? **நூல்திரட்டு**, தொகுப்பு 5, பக்கம் 375.

27. அதே புத்தகம்.

28. அதே புத்தகம், பக்கங்கள் 375-376.

29. வி. ஐ. லெனின் "என்ன செய்ய வேண்டும்" **நூல் திரட்டு**, தொகுப்பு 5, பக்கம் 375.

30. அதே புத்தகம், பக்கம் 412.

31. அதே புத்தகம், பக்கங்கள் 412-413.

32. அதே புத்தகம், பக்கம் 372.

33. வி.ஐ. லெனின், "நரோடிஸத்தின் பொருளாதார உள்ளடக்கமும், திருவாளர் ஸ்ட்ருவின் புத்தகத்தில் அதைப் பற்றிய திறனாய்வும்", **நூல் திரட்டு** தொகுப்பு 1, பக்கம் 401.

34. வி. ஐ. லெனின், "சமூக ஜனநாயகக் கட்சியின் ஒரு திட்டத்திற்கான பூர்வாங்கமும் விளக்கமும்" **நூல்திரட்டு**, தொகுப்பு 2, பக்கங்கள் 112-113.

35. வி. ஐ. லெனின், "என்ன செய்ய வேண்டும்?" **நூல்திரட்டு**, தொகுப்பு 5, பக்கம் 354.

36. அதே புத்தகம், பக்கம் 355.

37. அதே புத்தகம், பக்கம் 369.

38. அதே புத்தகம், பக்கம் 371.

39. அதே புத்தகம், பக்கம் 371.

40. அதே புத்தகம், பக்கம் 370.

41. அதே புத்தகம், பக்கம் 369.

42. வி. ஐ. லெனின், "என்ன செய்ய வேண்டும்?" **நூல்திரட்டு**, தொகுப்பு 5, பக்கம் 370.

43. அதே புத்தகம், பக்கம் 374.

44. அதே புத்தகம், பக்கம் 372.

45. அதே புத்தகம், பக்கம் 375.

46. அதே புத்தகம், பக்கம் 386.

47. வி. ஐ. லெனின், "என்ன செய்ய வேண்டும்"? **நூல்திரட்டு**, தொகுப்பு 5, பக்கம் 384.

48. அதே புத்தகம், பக்கம் 452.

49. அதே புத்தகம், பக்கம் 478.

50. அதே புத்தகம், பக்கம் 429.

51. அதே புத்தகம், பக்கம் 469.

52. அதே புத்தகம், பக்கங்கள் 468—469.

53. அதே புத்தகம், பக்கம். 514.

54. ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்கு, சமூக ஜன நாயகக் கமிட்டிகள் தந்த அறிக்கை, மாஸ்கோ—லெனின்கிராட், 1930. பக்கம் 44 (ருஷ்யமொழியில்)

55. வி. ஐ. லெனின், 'முழுமையான படைப்புக்கள்' என்பதிலிருந்து ஐந்தாவது ருஷ்யப் பதிப்பு, தொகுப்பு 6, பக்கம் 466.

56. 'பேண்ட்' (முழுப்பெயர்—யூத சமூக ஜனநாயக பொது ஒன்றியம்) ருஷ்ய நாட்டின் மேற்கு குபெர்னியாக்களில் (மாநிலங்கள்) உள்ள யூத தொழிலாளர்களையும் உள்ளடக்கிய, ஒரு சமூக ஜனநாயகக் கட்சி 1897-ம் ஆண்டு மற்றும் 1921-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தது. அது ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியுடன் பலமுறை சேர்ந்து பின்

விலகியது, மென்ஷ்விக்குகளுடன் சேர்ந்து வேலை செய்தது, 1919-ம் ஆண்டு 'பேண்ட்'ன் புரட்சிகர அணி உக்ரேனியக் கம்யூனிஸ்ட் கட்சியில் (போல்ஷ்விக்) இணைந்தது, எஞ்சியுள்ள கட்சி 1921-ல் தானாகவே கலைந்தது.

57. வி. இ. லெனின், "ஒரு அடி முன்னே, இரண்டு அடிகள் பின்னே" (நமது கட்சியில் நெருக்கடி) **நூல்திரட்டு**, தொகுப்பு 7, பக்கம் 415.

58. அதே புத்தகம், பக்கம் 411.

59. அதே புத்தகம், பக்கம் 412.

60. வி. இ. லெனின், "ருஷ்ய நாட்டில் புரட்சியின் துவக்கம்," **நூல்திரட்டு** தொகுப்பு 8, பக்கங்கள் 97-100.

61. வி. இ. லெனின், "ருஷ்ய நாட்டில் புரட்சியின் துவக்கம்," **நூல்திரட்டு**, தொகுப்பு 8, பக்கம் 99.

62. "ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயக வாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 9, பக்கம் 22.

63. அதே புத்தகம், பக்கம் 19.

64. "ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயக வாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 9, பக்கம் 52.

65. அதே புத்தகம், பக்கம் 57.

66. அதே புத்தகம், பக்கம் 28.

67. அதே புத்தகம், பக்கம் 29.

68. அதே புத்தகம், பக்கம் 100.

69. அதே புத்தகம், பக்கம் 113.

70. அதே புத்தகம்,

71. வி. ஐ. லெனின், முழுமையான படைப்புக்கள், ஐந்தாவது ருஷ்யப் பதிப்பு, தொகுப்பு 11, பக்கங்கள் 438-439.

72. வி. ஐ. லெனின், "கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்" **நூல்திரட்டு**, தொகுப்பு 10, பக்கம் 44.

73. அதே புத்தகம், பக்கம் 45.

74. அதே புத்தகம், பக்கம் 47.

75. அதே புத்தகம், பக்கம் 48.

76. அதே புத்தகம், பக்கம் 49.

77. பார்க்கவும். கார்ல்மார்க்ஸ், கார்ல்மார்க்ஸ் மற்றும் பிரடெரிக் எங்கெல்ஸில், "ஹெகலின் சட்டம் பற்றிய தத்துவத்திற்கான திறனாய்வுக்குப் பங்களிப்பு," **நூல்திரட்டு**, தொகுப்பு 3, பக்கம் 175.

78. வி.ஐ.லெனின், "சோஷலிசமும் மதமும்" **நூல்திரட்டு**, தொகுப்பு 10, பக்கம் 83.

79. அதே புத்தகம், பக்கம் 83-84.

80. கடவுளைத்தேடல்—20-ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் தாராள முதலாளித்துவ அறிவாளிகளிடம் முகிழ்த்த ஒரு முதலாளித்துவச் சித்தாந்தப் போக்கு. அப்போதைய கிறித்தவத்

திருச்சபைகளின் குறைபாடுகளிலிருந்து விடுபட்டு, மக்களைக் கவரும் திறமை படைத்த ஒரு "புதிய" கிறித்தவ மதத்தை தேடும் நோக்கத்தை அது கொண்டிருந்தது, அது ருஷ்ய நாட்டின் புரட்சிகர உழைக்கும் மக்களை அவர்களது ஜாரிஸத்தையும், முதலாளித்துவத்தையும் எதிர்த்த போராட்டத்திலிருந்து திசை திருப்ப முயன்றது.

81. கடவுளை உருவாக்குதல்—1905-ம் வருடப் புரட்சியின் தோல்விக்குப்பின் ஒரு சில ருஷ்ய சமூக ஜனநாயகவாதிகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு சித்தாந்த, மத, தத்துவார்த்தப் போக்கு. புரட்சியின் தோல்வியைத் தொடர்ந்த ஜாரிஸப் பிற்போக்கு ஆட்சியின் காலத்தில், மக்களின் ஊக்கத்திற்கு ஊட்டமளிக்கும் வகையில் அது சோஷலிசக் கருத்துக்களை அதன் புதிய மதத்தோடு இணைக்க முயன்றது, இது, மார்க்சியத்தின் புரட்சிகரச் சித்தாந்தத்தினது அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து 'ஓடிப்போதல்' என லெனினாலும் அவரது சீடர்களாலும் விமர்சிக்கப்பட்டது.

82. வி.இ. லெனின், "மதத்தைப்பற்றி தொழிலாளர் கட்சியின் பார்வை," **நூல்திரட்டு**, தொகுப்பு 15, பக்கம் 409.

83. வி.இ. லெனின், "ஏ.எம் கார்க்கிக்கு ஒரு கடிதம்" **நூல்திரட்டு**, தொகுப்பு 13, பக்கங்கள் 448-449.

84. ஸெர்னோ பதிப்பகத்தார், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், 1908.

85. வி.இ. லெனின் "ஏ.எம். கார்க்கிக்கு ஒரு கடிதம்," **நூல்திரட்டு**, தொகுப்பு 13, பக்கம் 450.

86. பார்க்கவும், வி. ஐ. லெனின், ''மார்க்யமும் திருத்தல்வாதமும்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 15, பக்கம் 34.

87. வி.ஐ. லெனின், ''ஒரு விரிவுரையாளருக்கு பத்து கேள்விகள்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 14, பக்கம் 15.

88. வி. ஐ. லெனின், ''பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்,'' **நூல் திரட்டு**, தொகுப்பு 14, பக்கம் 19.

89. வி. ஐ. லெனின், ''பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்'' **நூல் திரட்டு**, தொகுப்பு 14, பக்கம் 326.

90. வி.ஐ.லெனின், ''பொருள்முதல்வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்'', **நூல்திரட்டு**, தொகுப்பு 14, பக்கம் 326.

91. அதே புத்தகம், பக்கம் 46.

92. வி.ஐ.லெனின், ''பொருள்முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 14, பக்கம் 130.

93. அதே புத்தகம், பக்கம் 110.

94. அதே புத்தகம், பக்கம் 190.

95. அதே புத்தகம், பக்கம் 103.

96. அதே புத்தகம், பக்கம் 51.

97. அதே புத்தகம், பக்கம் 55.

98. வி.ஐ.லெனின், ''பொருள்முதல்வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 14, பக்கம் 122.

99. அதே புத்தகம், பக்கம் 135.

100. அதே புத்தகம், பக்கம் 137.

101. அதே புத்தகம், பக்கம் 137.

102. அதே புத்தகம், பக்கம் 140.

103. அதே புத்தகம், பக்கம் 162.

104. வி.ஐ.லெனின், ''பொருள்முதல்வாதமும் அனுபவ ''ரீதியான விமர்சனமும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 14, பக்கம், 337.

105. அதே புத்தகம், பக்கம் 258.

106. அதே புத்தகம், பக்கங்கள் 260—61.

107. அதே புத்தகம், பக்கம் 313.

108. அதே புத்தகம், பக்கம் 312.

109. அதே புத்தகம், பக்கம் 262.

110. அதே புத்தகம், பக்கம் 339.

111. அதே புத்தகம், பக்கம் 358.

112. வி. ஐ. லெனின், ''மார்க்சியமும் திருத்தல் வாதமும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 15, பக்கம் 32.

113. அதே புத்தகம், பக்கம் 33.

114. அதே புத்தகம், பக்கம் 37.

115. அதே புத்தகம், பக்கம் 39.

116. வெக்கி; ருஷ்ய அறிவு ஜீவிகளைப் பற்றிய ஒரு கட்டுரைகளின் திரட்டு, மாஸ்கோ 1909, பக்கம் 88, (ருஷ்ய மொழியில்).

117. வி. ஷீல்யாட்டிகோவ் மேற்கு ஐரோப்பியத் தத்துவத்தில் டெஸ்கார்ட்டஸிலிருந்து

இ. மேக் வரை நியாயப்படுத்தல், மாஸ்கோ, 1908, பக்கங்கள் 26, 42, 45, (ருஷ்ய மொழியில்).

118. வி. ஐ. லெனின், ''புத்தகங்களில் குறிப்புரைகள்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 502.

119. பார்க்கவும். வி. ஐ. லெனின், ''பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 14, பக்கங்கள் 357-358.

120. ஒட்ஸோவிஸ்ட்ஸ் (ருஷ்ய வார்த்தையான' 'ஒட்ஸிவ்' விலிருந்து வந்தது—''திரும்ப அழைக்க.'') 1906-1907-ம் ஆண்டுகளில் போல்ஷ்விக்குகளிடையேயிருந்து முகிழ்த்த ஒரு பகுதியினர். லெனின் இவர்களை விமர்சித்தார். இவர்கள் போல்ஷ்விக்குகளை அரசாங்கடுமா (சட்ட மன்றம்) விலிருந்து திரும்ப அழைக்க வேண்டும் என்றதோடு போராட்டத்தில் சட்டவிரோதமான முறைகளையே கையாள வேண்டுமென்றனர்.

121. ஆகஸ்ட் அணி—ருஷ்ய சமூக ஜனநாயகத்திலிருந்த போல்ஷ்விக் மற்றும் லெனினிய எதிர்ப்பாளர்களின் ஒன்றுபட்ட குழுக்கள். 1912-ம் ஆண்டு ட்ராட்ஸ்கியினால் அமைக்கப்பட்டது—கரைத்து அழிப்பவர்கள், ஒட்ஸோவிஸ்ட்கள், ட்ராட்ஸ்கீயவாதிகள் இதில் இருந்தனர். இது அரசியலிலும் பொருளாதாரத்திலும் தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளை இது நிராகரித்தது. முதலாளித்துவத்துடன் சமரஸம் செய்து கொள்வது, பாட்டாளி வர்க்கம் தன் சித்தாந்தத்தை முதலாளித்துவத்திற்கு கீழ்படியுமாறு செய்வது போன்றவற்றைச் சிபார்சு செய்தது. இதை லெனின் கடுமையாகக் கண்டித்ததைத் தொடர்ந்து இந்த அணி 1913-1914-ம் ஆண்டுகளில் கலைந்தது.

122. வி. ஐ. லெனின், "ஆர்ப்பாட்டங்களின் துவக்கம்," **நூல்திரட்டு**, தொகுப்பு 16, பக்கம் 358.

123. பார்க்கவும். வி. ஐ. லெனின், "மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியில் சிலதோற்றங்கள்" **நூல்திரட்டு** தொகுப்பு 17, பக்கம் 39.

124. அதே புத்தகம், பக்கம். 44.

125. டிசம்பரிஸ்டுகள்— 19-ம் நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகளில் ருஷ்யாவிலிருந்த புரட்சிகர கண்ணியவான்கள். 1825 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ம் நாள் இவர்கள் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கில் ஒரு புரட்சிகர ஆட்சி மாற்றத்திற்கு முயற்சி செய்தனர். (எனவே தான் இப்பெயர்) அவர்கள் எதேச்சாதிகாரத்தையும் பண்ணை அடிமை முறையையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஜாரிஸம், டிசம்பரிஸ்டுகளை ஈவிரக்கமற்ற அடக்கு முறைக்குட்படுத்தியது. ஆனால் அவர்கள் ருஷ்ய நாட்டின் தலை சிறந்த புதல்வர்களை புரட்சிப் போராட்டத்தில் ஈர்த்தனர். அவர்களுள் ஹெர்ஷன், ஒகாரேவ், பெலின்ஸ்கி, செர்னி செவ்ஸ்கி மற்றும் டோப்ரோ லியூபோவ் போன்றோருமிருந்தனர்.

126. வி. ஐ. லெனின், "ஹெர்ஷனின் நினைவாக **நூல்திரட்டு** தொகுப்பு 18. பக்கம் 26.

127. அதே புத்தகம், பக்கம் 31.

128. அதே புத்தகம்.

129. வி. ஐ. லெனின், "கார்ல் மார்க்ஸ் சித்தாந்தத்தின் வரலாற்று விதி" **நூல்திரட்டு**, தொகுப்பு 18, பக்கம் 582.

130. அதே புத்தகம், பக்கம் 584.

131. வி. ஐ. லெனின். "மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று ஒருங்கிணைந்த பாகங்களும்." **நூல்திரட்டு**, தொகுப்பு 19, பக்கம் 23.

132. அதே புத்தகம், பக்கம் 34.

133. வி. ஐ. லெனின், "மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று ஒருங்கிணைந்த பாகங்களும்" **நூல்திரட்டு**, தொகுப்பு 19, பக்கம் 25.

134. அதே புத்தகம், பக்கம் 28.

135. டெர் பிரீப் வெச்செல் ஸ்விச்சன் பிரடெரிக் எங்கெல்ஸ் அன்ட் கார்ல் மார்க்ஸ் 1844. பிஸ் 1883 ஹிர்ஸ்க். வன். ஏ. பெபல் அன்ட் எட். பெர்ன்ஸ்டீன். தொகுப்பு 1—4. டியட்ஸ், ஸ்டட்கார்ட். 1913.

136. வி. ஐ. லெனின், "மார்க்ஸ்-எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து," **நூல்திரட்டு**, தொகுப்பு 19, பக்கம் 552.

137. வி. ஐ. லெனின் "அவரது சகோதரி மரியாவுக்கு" **நூல்திரட்டு**, தொகுப்பு 37, பக்கம்504.

138. வி. ஐ. லெனின், "மார்க்ஸ்-எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து" பற்றிய விரிவான மதிப்பீடு. 1844-1883 மாஸ்கோ. 1959. (ருஷ்ய மொழியில்).

139. வி. ஐ. லெனின், "மார்க்ஸ்-எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து" தொகுப்பு 19, பக்கம் 554.

140. வி. ஐ. லெனின், "சோஷலிசமும் போரும்" **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 309.

141. சோஷியல்—சாவுனிஸம். (சமூக குறுகிய வெறி வாதம்) 1914-1918 ம் வருடத்திய ஏகாதிபத்திய யுத்தம் துவங்கிய பின் ஐரோப்பிய சமூகஜன நாயகக் கட்சிகளின் பல தலைவர்களால் எடுக்கப்பட்ட சித்தாந்த நிலைபாடு. போர் தொடுக்கும் ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களும் தங்களது சொந்த அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என அந்த சித்தாந்தம் கூறியது. ஏகாதிபத்திய யுத்தம் உள் நாட்டு யுத்தமாக, தங்களது முதலாளித்துவத்தையும் அவர்களது ஆட்சியையும் எதிர்த்த உழைக்கும் மக்களின் யுத்தமாக மாற்ற வேண்டும் என அறைகூவி லெனின் இந்த சமூக குறுகிய வெறிக் கருத்துக்களை மோதினார்.

142. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 223.

143. அதே புத்தகம், பக்கங்கள் 221-222.

144. வி. ஐ. லெனின் "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 360.

145. வி. ஐ. லெனின், "தத்துவத்தின் வரலாறு பற்றிய விரிவுரைகள்" என்ற ஹெகலின் புத்தகம் பற்றி விரிவான மதிப்பீடு, **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 284.

146. வி. ஐ. லெனின் "தர்க்கவியலின் விஞ்ஞானம்" பற்றிய ஹெகலின் புத்தகம் பற்றி விரிவான மதிப்பீடு தொகுப்பு 38, பக்கம் 93.

147. அதே புத்தகம், பக்கம் 91.

148. வி. ஐ. லெனின் "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" நூல்திரட்டு, தொகுப்பு 38, பக்கம் 319.

149. அதே புத்தகம், பக்கம் 362.

150. அதே புத்தகம், பக்கம் 363.

151. அதே புத்தகம், பக்கம் 279.

152. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" தொகுப்பு 38, பக்கம் 227.

153. அதே புத்தகம், பக்கம் 319.

154. அதே புத்தகம், பக்கம் 320.

155. பார்க்கவும். கார்ல் மார்க்ஸ், அரசியல் பொருளாதாரம் பற்றிய திறனாய்வுக்கு ஒரு பங்களிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ 1978, பக்கங்கள் 205-206.

156. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" நூல்திரட்டு, தொகுப்பு 38, பக்கம் 319.

157. அதே புத்தகம், பக்கம். 158.

158. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" தொகுப்பு 38—பக்கங்கள் 92 - 93.

159. அதே புத்தகம், பக்கம் 319.

160. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப்புத்தகங்கள்" நூல்திரட்டு, தொகுப்பு 38, பக்கம் 110.

161. அதே புத்தகம், பக்கம் 171.

162. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 190.

163. அதே புத்தகம், பக்கம் 173.

164. அதே புத்தகம், பக்கங்கள் 212-213.

165. வி.ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 213.

166. அதே புத்தகம், பக்கம் 217.

167. அதே புத்தகம், பக்கம் 218.

168. அதே புத்தகம், பக்கம் 194.

169. வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" தொகுப்பு 38, பக்கம் 189.

170. அதே புத்தகம், பக்கம் 178.

171. அதே புத்தகம், பக்கம் 219.

172. பார்க்கவும் வி. ஐ. லெனின், "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" தொகுப்பு 38, பக்கம் 218.

173. அதே புத்தகம், பக்கம் 213.

174. வி. ஐ. லெனின் "தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்" தொகுப்பு 38, பக்கம் 318.

175. அதே புத்தகம், பக்கம் 320.

176. வி. ஐ. லெனின், "ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி" **நூல்திரட்டு**, தொகுப்பு 3, பக்கம் 599.

177. பார்க்கவும் வி. ஐ. லெனின், "உலக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயம்" நூல்திரட்டு தொகுப்பு 18. பக்கம் 368. "இறந்தொழிந்த குறுகிய வெறியும் வாழும் சோஷலிசமும்" என்பதையும் பார்க்கவும், **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 98.

178. வி. ஐ. லெனின், "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" தொகுப்பு 22, பக்கம் 260.

179. அதே புத்தகம்.

180. வி.ஐ.லெனின், "இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சி" **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 235.

181. அதே புத்தகம், பக்கங்கள், 233—236.

182. வி.ஐ.லெனின், "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" தொகுப்பு 22, பக்கம் 298.

183. வி.ஐ.லெனின், "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" தொகுப்பு 22, பக்கம் 196.

184. அதே புத்தகம், பக்கம், 205.

185. வி.ஐ.லெனின், "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" தொகுப்பு 22, பக்கம் 243.

186. 1904-ல் பிரிட்டனும் பிரான்ஸும் நாடுகளுக்கிடையேயான நட்புறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ருஷ்யா 1907-ல் இதில் சேர்ந்து கொண்டது.

187. வி.ஐ.லெனின், "ஒரு ஐக்கிய ஐரோப்பிய நாடுகள்" என்ற முழக்கம் பற்றி" **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 341.

188. அதே புத்தகம், பக்கம் 342.

189. வி.ஐ.லெனின். "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" **நூல்திரட்டு**, தொகுப்பு 22, பக்கம் 300.

190. அதே புத்தகம். பக்கம். 302.

191. வி.ஐ.லெனின், "ஒரு ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் என்ற முழக்கம் பற்றி", **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 342.

192. வி.ஐ.லெனின், "பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போர்ப் படைத் திட்டம்" **நூல்திரட்டு**, தொகுப்பு 23, 1974 பக்கம் 79.

193. பார்க்கவும். வி. ஐ. லெனின், "இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சி" **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கங்கள் 213-214.

194. வி. ஐ. லெனின், "ஒரு ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் என்ற முழக்கம் பற்றி" தொகுப்பு 21, பக்கம் 342.

195. வி. ஐ. லெனின், "புரட்சியில் இரண்டு நிலைபாடுகள் பற்றி" **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 418.

196. வி. ஐ. லெனின், "ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயக வாதத்தின் இரண்டு போர்த்

தந்திரங்கள்.” **நூல்திரட்டு** தொகுப்பு 9, பக்கம் 22.

197. வி. ஐ. லெனின், “தூரதேசத்திலிருந்து எழுதிய கடிதங்கள்”, **நூல்திரட்டு**, தொகுப்பு 23, பக்கங்கள் 340–341.

198. வி.ஐ. லெனின், “சோஷலிசப் புரட்சியின் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்” **நூல் திரட்டு**, தொகுப்பு 22, பக்கம் 146.

199. வி. ஐ. லெனின், “பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போர்ப்படைத் திட்டங்கள்” **நூல் திரட்டு**, தொகுப்பு 23, பக்கம் 80.

200. வி.ஐ. லெனின், “மேக்ஸிமலிஸம் பற்றிய ஒரு கட்டுரை மீதான குறிப்புரைகள்” **நூல்திரட்டு**, தொகுப்பு 41, பக்கம் 385.

201. வி. ஐ. லெனின், “ஒரு ஐக்கிய ஐரோப்பிய நாடுகள்” என்ற முழக்கம் பற்றி **நூல்திரட்டு** தொகுப்பு 21, பக்கம் 342.

202. வி. ஐ. லெனின், “சோஷலிசமும் போரும்” **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 304.

203. வி. ஐ. லெனின், “சோஷலிச அகிலத்தின் நிலையும் கடமைகளும்” **நூல்திரட்டு**, தொகுப்பு 21, பக்கம் 40.

204. பார்க்கவும். வி. ஐ. லெனின், “ஏகாதிபத்தியம் பற்றிய குறிப்புப் புத்தகங்கள்” **நூல் திரட்டு**, தொகுப்பு 39, பக்கம் 1 6

205. வி. ஐ. லெனின், “ஏகாதிபத்தியம் பற்றிய குறிப்புப் புத்தகங்கள்” **நூல்திரட்டு**, தொகுப்பு 39, பக்கம் 116.

206. வி. ஐ. லெனின், "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" தொகுப்பு 22, பக்கம் 276.

207. அதே புத்தகம்.

208. வி. ஐ. லெனின், "வியர்வை சிந்தலில் ஒரு விஞ்ஞான அமைப்பு" **நூல்திரட்டு**, தொகுப்பு 18, பக்கம் 595.

209. அதே புத்தகம், பக்கம் 594.

210. வி. ஐ. லெனின், "இனெஸ்ஸா ஆர்மண்டுக்கு கடிதம்." **நூல்திரட்டு**, தொகுப்பு 35, பக்கம் 289.

211. சோவியத் அதிகாரம் நிறுவப்பட்டு ஐம்பதாண்டுகளில் இந்தப் படைப்பு சோவியத் யூனியனில் 45 மொழிகளில் 200 தடவைகள் அச்சிடப்பட்டன. மொத்தம் அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை 65 லட்சத்துக்கும் அதிகமாகும். வெளி நாடுகளிலும் 35 மொழிகளில் 100 தடவைகளுக்கு மேல் இந்நூல் பிரசுரமாகியுள்ளது. இப்பொழுது லெனினது படைப்புக்களில் அதிகம் பேர் படிக்கின்ற நூலாகத் திகழ்கிறது.

212. வி. ஐ. லெனின், "எல். பி. காமினேவுக்கு எழுதிய குறிப்பு" **நூல்திரட்டு**, தொகுப்பு 36, மாஸ்கோ, 1970 பக்கம் 454.

213. வி. ஐ. லெனின், "அவரது சகோதரி மரியாவுக்கு" **நூல்திரட்டு**, தொகுப்பு 37, பக்கம் 540.

214. பார்க்கவும். வி. ஐ. லெனின், முழுமை யான படைப்புக்கள், தொகுப்பு 33, பக்கம் 345. (ருஷ்யமொழியில்).

215. வி. ஐ. லெனின், ''அரசும் புரட்சியும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 25, பக்கம் 497.

216. வி. ஐ. லெனின், ''அரசும் புரட்சியும்'' **நூல் திரட்டு**, தொகுப்பு 25, பக்கம் 405.

217. வி. ஐ. லெனின், ''அரசும் புரட்சியும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 25, பக்கம் 479.

அத்தியாயம் 3

# அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகள்

## 1. லெனினும் சோவியத் தத்துவமும்

மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப்பின் ஒரு மெய்யான விஞ்ஞான உலகப் பார்வையான மார்க்சிய—லெனினியம் சோவியத் யூனியனில் நின்று நிலவும் சித்தாந்தமாயிற்று.

மார்க்சிய—லெனினிய தத்துவம் இந்தப் புதிய வரலாற்றுச் சூழலில் பெருமளவிலான புதிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியதை எதிர்நோக்கி நின்றது. முதலாவதாக அது அக்டோபர் புரட்சியின் வெற்றியின் விளைவாக ஏற்பட்ட புதிய வரலாற்றுச் சகாப்தத்தை, மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுகின்ற சகாப்தத்தை விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்ந்து கணிக்க வேண்டும். பின்னர் அது தத்துவார்த்த ரீதியாக வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். அதைக் கொண்டு தாமதமேதுமின்றி ருஷ்ய சோஷலிஸ்ட் புரட்சியின் வளர்ச்சியை அதன் எல்லா நோக்குகளிலும், பொருளாதாரம், சமூக,

அரசியல் விவகாரங்கள், சித்தாந்த மற்றும் கலாாசர அம்சங் களிலும் விளக்க வேண்டும். அண்மைக்கால விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் சமனப்படுத்தப்பட வேண்டும். சமூக விஞ்ஞானம் இலக்கியம் மற்றும் சமூக உணர்வின் இதர துறைகளிலும் சமுதாயத்தின் லௌகீக வளர்ச்சியின் பிரமிக்கத்தக்க சாதனைகள் கொண்டு வரப்பட வேண்டும்.

சோவியத் தத்துவத்தின் ஸ்தாபகர் லெனின், அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளில் கட்சி மற்றும் சோவியத் அரசாங்கத் தலைமை தொடர்பான நடவடிக்கைகளில் மிக ஆழமாக முழுக்க முழுக்கத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும், சோவியத் தத்துவார்த்த விஞ்ஞானத்தை உருவாக்கு வதிலும் கண்ணும் கருத்துமாயிருந்தார். இந்த ஆண்டுகளில் அவர் எழுதிய தத்துவார்த்தப் படையல்களின் முக்கியத்துவம் உள்ளபடியே மகத்தானது. மாறியுள்ள வரலாற்றுத் சூழல் களில் மார்க்சியத் தத்துவத்தின் பல அடிப்படைப் பிரச் சினைகள் அவரது அறிக்கைகள், சொற்பொழிவுகள், பேருரைகள் மூலம் பரிசோதனை செய்யப்பட்டன. அதேபோல் கீழ்க்கண்ட அவரது படையல்கள் மூலமும் பரீட்சிக்கப்பட்டன. "சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்" "பாட்டாளி வர்க்கப்புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும்" (1918) "மகத்தான துவக்கம்" "அரசு" "பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளாதாரமும் அரசியலும்" (1919) "இடது சாரி கம்யூனிஸம்—ஒரு இளம்பிள்ளை வாதம்" "பாட்டாளி வர்க்கக் கலாசாரம் பற்றி" (1920) "மீண்டும் ஒரு முறை தொழிற்சங்கங்களில் இப்போதைய நிலைமையும் ட்ராட்ஸ்கி மற்றும் புகாரினது தவறுகளும்" (1921) "முனைப்பான பொருள் முதல்வாதத்தின் முக்கியத் துவம் பற்றி" "கூட்டுறவு பற்றி" "நமது புரட்சி" "நல்லவை கொஞ்சமேயானாலும் நல்லவையாகவே இருக்கட்டும்" (1922)

அவர் புலன் ஆய்வு செய்த எவ்வளவோ வகையான தத்துவார்த்தப் பிரச்சினைகளுள் கீழ்க்கண்டவற்றை விசேட

மாகக் குறிப்பிட வேண்டும். ஒரு விஞ்ஞானமென மார்க்சியத் தத்துவத்தின் பொருள் அடக்கமும் அதன் சாரமும்; பொருள் முதல் இயக்கச் சித்தாந்தம்; புதிய வரலாற்றுக் கட்டத்தில் சமூக வளர்ச்சியின் பொதுவான சட்டங்கள்; இறுதியாக புதிய சமுதாய அமைப்பின்கீழ் மார்க்சியத்தத்துவ ஞானத்தை வளர்ப்பதற்கான வழிகள்.

மார்க்சியத் தத்துவத்தின் விவாதப் பொருள், சாரம், உள்ளடக்கம் மற்றும் கட்டுமானத்தைக் கையாளும் போது லெனின் அதன் வளர்ச்சி, மார்க்சியத் தத்துவார்த்தச் சிந்தனைக்கு முந்தைய தலைசிறந்த சிந்தனையாளர்களிடமிருந்து ஸ்வீகரிக்கப்பட்ட பொருள் முதல் வாதப் பாரம்பரியத்தினால் தான் ஏற்படுகிறது என்பதை வலியுறுத்திக் கூறினார். மார்க்சியம் என்பது வெறும் பொருள் முதல் வாதம் மட்டுமல்ல; **இயக்கவியல்** பொருள் முதல் வாதமாகும் என்றார் லெனின். அதாவது மார்க்சியத் தத்துவத்தின் சத்தும் சாரமும், பொருள் முதல் வாதம் மற்றும் இயக்கவியலின் உறுப்பு ரீதியான ஒற்றுமையை உள்ளடக்கியது. இந்த ஒற்றுமையின்றி மார்க்சியத் தத்துவார்த்தப் பொருள் முதல்வாதம் ஒரு தீவிரத்தன்மை கொண்ட பொருள் முதல் வாதமாயிருக்க முடியாது என்றெழுதினார் லெனின். ஷெட்ரினின் ஒரு வெளிப்பாட்டைப் பயன்படுத்தினால் போராட்டத்தைவிட போராளி ஒன்றும் பெரிதல்ல''[1] எனவே உலகத்தின் வளர்ச்சியை ஆளுமை கொள்ளும் மிகவும் பொதுவான சட்டங்களின் பொருள் முதல் இயல்பு மற்றும் இயக்கவியல் சாரம் ஆகியவற்றை விரிவாகக் கற்றறிவதின் அவசியம், மார்க்சியத் தத்துவத்தின் விவாதப் பொருள் ஆகிறது. லெனினது கருத்துப்படி இயற்கையின் தத்துவார்த்தப் பிரச்சினைகள் (இங்கு தத்துவார்த்தப் பகுப்பாய்வு முன்னேறிய இயற்கை விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்) சமுதாயம் (இங்கு மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்டு தத்துவம் அனைத்து சமூக விஞ்ஞானங்களின் ஒற்றுமையையும் பெற வேண்டும்) மனித சிந்தனை

சமூக விஞ்ஞானத்தின் சமீபத்திய சாதனைகளைக் கணக்கி லெடுத்துக் கொண்டு தத்துவத்தின் சூழலில் கற்றறியப்பட வேண்டும்) ஆகியவை மார்க்சியம் என்ற ஒரே தத்துவார்த்தச் சித்தாந்தத்தை உருவாக்கும் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் கட்டுமான மூலக் கூறுகள் ஆகும்.

புதிய சமுதாயத்தில் மார்க்சியத் தத்துவத்தை எதிர் நோக்கும், சித்தாந்த, ஆய்வியல் சமூக, அரசியல் (பொது மனிதத்துவத்தையும் உள்ளிட்ட) ஒற்றுமைக் கடமைகள், லெனினது அக்டோபர் புரட்சிக்கு பிந்திய படைப்புக்களில் விசேடமாக வலியுறுத்தப்பட்டிருந்தன. தத்துவத்தின் விஞ்ஞானம் கம்யூனிஸ்டுகளையும் அவர்களால் வழிநடத்தப் படும் அனைத்து உழைக்கும் மக்களையும் ஒரு இடைவிடாத, உறுதியான விஞ்ஞான உலகப் பார்வையுடன் ஆயுத பாணி களாக்குகிறது. இந்தப் பார்வை ஒரு வரலாற்று நம்பிக்கை என்னும் ஆர்வத்தை அவர்களுக்கு ஊட்டுகிறது. அவர்களது வரலாற்று இலட்சியத்தை உணரச் செய்து அவர்கள் நிறை வேற்றுகிற கடமைகள் மற்றும் பொருள்முதல் உலகின் தீர்க்க மான சட்டங்களுக்குமிடையிலான ஒருமிப்பை உறுதிப் படுத்துகிறது. சுற்றியுள்ள உலகை விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு, கணிப்பு மற்றும் மாற்றங்களுடன் மனிதனது நடவடிக்கைகளையும் விஷயஞானத்தின் ஆய்வியலையும் வழங்குகிறது. மார்க்சியத் தத்துவம் பிரிக்க முடியாதபடி விஞ்ஞான சோஷலிசச் சித்தாந்தத்துடன் பிணைக்கப் பட்டிருக்கிறது. அதாவது மனிதனின் விஷயஞானத்தின் காரணகாரியங்கள் மற்றும் வழிமுறைகளைத் தீர்மானிப் பதுடன், ஒரு புதிய சோஷலிஸ்ட் உணர்வுடன் ஒரு புதிய சோஷலிச மனிதனை உருவாக்க கம்யூனிஸ்ட் நிலைபாடுகளில் உழைக்கும் மக்களைப் பயிற்றுவிக்கும் ஜீவாதாரமான முக்கியத்துவத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்த மார்க்சியச் சித்தாந்தத்தின் வளர்ச்சிக்கு, கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தப் பணிக்கு, சோஷலிச

சமுதாயத்தில் சித்தாந்தப் பயிற்சிக்கான ஸ்தாபன அமைப்பை ஏற்படுத்துவதற்கு லெனினது கருத்துக்கள் அஸ்திவாரம் அமைத்தன.

**பாட்டாளி வர்க்கப் புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும்** என்ற அவரது நூலில் லெனின் இயக்கவியலுக்கும், பலவற்றிலிருந்தும் தேர்ந்து எடுத்து வைக்கும் கலவைக்கும் உள்ள முக்கிய வித்தியாசங்களை அம்பலப்படுத்தினார். அவர் எழுதியதாவது: ''பன்லைத்திரட்டாளர், பிண்டப் பிரமாண மானவைகளைப் பற்றிய முன் மொழிதல்களை விரும்ப மாட்டார். ஏனென்றால் அவர் தனது இழிதகை பிலிஸ்டைன் விருப்பங்களை புரட்சியின் **மாறுதல் கட்டங்களை** மெய்ம்மைப் படுத்துவதற்காகத் தள்ளி விடுகிறார்.''[2] அக்டோபர் புரட்சியின் சட்ட விரோதத் தன்மையை நிரூபிப் பதற்காக கவுட்ஸ்கியும் இதர சமூக சீர்திருத்தவாதிகளும் வழியில்லா வழியில் சென்றனர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற மார்க்சியக் கருத்தை எதிர்ப்பதற்காக, மதிப்பீடு, மாறுதல் கட்டங்கள் இன்ன பிறவற்றின் அனைத்து வகையான குட்டி முதாளித்துவச் சித்தாந்தங்களையும் முன் வைத்தனர். அங்குதான் இயக்கவியலுக்குப் பதிலாக, பலவற்றிலிருந்தும் தேர்ந்து எடுத்து வைக்கும் கலவை, பொய்ம்மை வாதம் போன்றவற்றை சித்தாந்த ரீதியாகவும், தத்துவார்த்த ரீதியாகவும் அவர்கள் மெய்ம்மைப் படுத்துவது காணக் கிடைக்கிறது. இயக்கவியல் உறுதியானது; புரட்சிகரமானது. ஒரு வர்க்க சர்வாதிகாரத்துக்கும், மற்றொரு சர்வாதிகாரத் துக்கும் இடையேயான மாற்றத்தை வேறுபடுத்திக் காட்டுவது, ஜனநாயகப் பாட்டாளி வர்க்க அரசாங்கத் திற்கும், அரசாங்கமல்லாத நிலைக்குமான (அரசாங்கம் மறைந்து அழிந்து போதல்) மாற்றத்தை வேறுபடுத்திக் காட்டுவது. முதலாளித்துவத்தை திருப்திப் படுத்துவதற்காக பலவற்றிலிருந்து தேர்ந்து எடுத்து வைக்கும் கலவையும், மற்றும் கவுட்ஸ்கீயவாதிகள், வாண்டர் வெல்டஸ்களின் பொய்ம்மை வாதமும், திண்ணியமானவற்றை, வர்க்கப்

போராட்டத்தில்தெளிவாக இருப்பனவற்றை மறைக்கின்றன. அதற்குப் பதிலாக மாற்றத்தின் பொதுவான கருத்தமவை முன்வைத்து அதில் புரட்சியை நிராகரிப்பதிலிருந்து ஒழிந்து கொள்கின்றனர்[3]" (நமது காலத்தின் அதிகார பூர்வமான **சமூக ஜனநாயக வாதிகளில் பத்தில் ஒன்பது பேர்** இவ்வாறாக **மறைந்து கொண்டனர்). "பாட்டாளி வர்க்கப் புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும்** என்ற லெனினது நூல் 1905; 1917-ம் ஆண்டுகளில் நடந்த ருஷ்யப் புரட்சிகளின் அனுபவங்களைத் தொகுத்துத் தருகிறது. உண்மையில் அது லெனின் எழுதத் திட்டமிருந்த **'அரசும் புரட்சியும்'** என்ற நூலின் இரண்டாம் பாகத்திற்கான மேலெழுந்தவாரியான விவரங்களே. ஆனால் லெனின் இந்த இரண்டாம் பாகத்தை எழுதவேயில்லை. இதில் லெனின் பொருள் முதல்வாத இயக்கவியல் பற்றிய ஒரு முழுமையான சித்திரத்தை வழங்கியுள்ளார். அதை ருஷ்ய நாட்டின் புரட்சிகர நிகழ்வுகளையும், சோவியத் அதிகாரம் எடுத்த முதல் படி நடவடிக்கைகளையும் பகுப்பாய்வதற்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதை விளக்குகிறார்.

அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனின் இயக்கவியல் பிரச்சினையில் முடித்த பணியில் அடுத்த முக்கியமானது இயக்கவியல் முரண்பாடுகள் பற்றிய பிரச்சினையாகும். வர்க்கப் பகைமைகளைக் கொண்டுள்ள அமைப்புக்களில் இயக்கவியல் முரண்பாடுகளையும், சோஷலிசத்தில் இயல்பாக உள்ள பிரத்தியேக முரண்பாடுகளையும் பகுப்பாயும் போது லெனின் அவரது புகழ் பெற்ற முன் மொழிதல்களில் ஒன்றை வகுத்தளித்தார்: பகைமையும், முரண்பாடும் ஒன்றல்ல; வெவ்வேறானவை பகைமை மறைந்து விடும். முரண்பாடோ சோஷலிசத்தின் கீழும் நீடிக்கும்."[4] பகைமைக்கும், பகைமை யற்ற முரண்பாடுகளுக்குமிடையே தாண்ட முடியாத சுவர் ஏதுமில்லையென்பதையும் அவர் நிருபித்தார். அவற்றின் உறவுகளும் முரண்பாடுகளைப் போன்றே இயக்கவியல் ரீதி யானதுதான்.

சோஷலிசத்தைச் சமைக்கும் போது முதலாளித்துவ வல்லுனர்களை அமர்த்துவதா? வேண்டாமா? என்ற பிரச்சினையோடு தொடர்புபடுத்தி லெனின் இப்பிரச்சினையைப் பரிசோதித்தார். ''நாம்.........நமது எதிரிகளின் உதவியோடு கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டவேண்டும். இது ஒரு முரண்பாடாக ஒரு வேளை நேர் செய்ய முடியாத முரண்பாடாகத் தோன்றுகிறது. உண்மையில் கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டுதல் என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது தான் ஒரே வழி...... நமது ஸ்தாபனப்படுத்தப்பட்ட ஆக்கபூர்வமான, ஒன்றுபட்ட நடவடிக்கைகளின் மூலம் முதலாளித்துவ வல்லுனர்களை வளைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறானால்தான் அவர்கள் பாட்டாளி வர்க்க நிலைபாட்டின் கீழ் வருவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.[5]

இயக்கம் என்பது எதிர்மறைகளின் ஒற்றுமை, போராட்டம், பரஸ்பர மாற்றம் ஆகியவற்றின் பால்பட்ட ஒரு விஞ்ஞானம் என லெனின் **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்** என்ற தனது புத்தகத்தில் எழுதினார். பின்னர் சோவியத் காலகட்டத்தில் அவர் திரும்பத்திரும்ப எதிர்மறைகளுக்கிடையேயுள்ள உறவுகள், பகைமையுடன் கூடிய முரண்பாடுகள் பகைமையற்ற முரண்பாடுகளாக மாறுவதை பலவகைகளிலும் உள்ளடக்கியதாகும். எதிர் எதிரானவை என மார்க்சியவாதிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தார். ''ஆனால் எப்படியிருந்தாலும் நமக்கு கொஞ்சம் மார்க்சிய ஞானம் உண்டு. எதிர் எதிரானவைகள் எப்படி, எப்பொழுது இணையும்—இணைக்கப்பட வேண்டும் என்பதை நாம் கற்றிருக்கிறோம். இதில் முக்கியமானது என்னவென்றால் புரட்சியின் மூன்றரை ஆண்டுகளில் நாம் உள்ளபடியே திரும்பத்திரும்ப எதிர் எதிரானவைகளை இணைத்துள்ளோம்......இந்த எதிர் எதிரான பதங்கள் காதுகளில் நாராசம் பாய்ச்சுகிற மாதிரி ஒலிகளாகவோ அல்லது ஒத்தூதுகிறவனின் ஒலியைப்போன்றோ இணைக்கப்படலாம்''[6].

''மகத்தான பாய்ச்சல்களின் சகாப்தத்''தில் பயன் படுத்தியது போல்—அக்டோபர் புரட்சிக்குப் பின்னால் முதல் சில ஆண்டுகளை லெனின் வருணித்ததுபோல்— இயக்கவியல் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழி முறைகள் சாதனங்கள் பற்றியும் அவர் விவரித்தார்: பழைய சமுதாயத்தின் மிச்சசொச்சங்கள் ஏராளமாக உள்ளது; சில சமயங்களில் புதிய சமுதாயத்தின் அழிவுகளைவிட அவை வெகுவேகமாகத் தேங்கி விடுகின்றன. உடனடியாக அவை தெளிவாகத் தெரிய வேண்டுமென்பதில்லை) அவை வளர்ச்சியின் நிலைபாட்டில் அல்லது வளர்ச்சிச் சங்கிலியில் எது முக்கியமானது என்பதைக் கண்டுபிடிக்கும் திறமையை அறை கூவுகிறது என்ற உண்மையில்தான் என்பதில்தான் மகத்தான ;தாண்டுதல் சகாப்தத்தின் உண்மையான நலன் அடங்கியுள்ளது. ஒவ்வொரு குறிப்பிட்ட கணத்திலும், சங்கிலியின் குறிப்பிட்ட தொடரைக் காணும் திறமை வேண்டும். முழுமையான சங்கிலியையும் உயர்த்திப் பிடிப் பதற்கேற்ப சக்திகளனைத்தையும் பயன்படுத்தி அதைக் கிரகித்தறிய வேண்டும்.''[7]

லெனினது இந்த அனைத்து முன்மொழிதல்களும் ஒரு மையக்கருத்தில் சங்கமமாகின்றன. எதிர் எதிரானவை களின் போராட்டம். அனைத்து மதிப்பீடுகளினதும் தோற்றுவாய்; கம்யூனிஸ சமுதாயத்திற்கான வழியில் சமுதாயத்தை விஞ்ஞான ரீதியாகத் திருப்புவதற்கு ஒரு சித்தாந்த அடிப்படையாக, முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அக்டோபர் புரட்சிக்குப்பின் இயக்கவியல் பற்றி லெனின் முன்வைத்த கருத்துக்கள் இயக்கவியல், உலகத்தை அறிவாற்றல் இயலுக்கு உட்படுத்தும் ஆய்வின் அதன் புரட்சிகரமான மாறுதல் பாத்திரத்தின் ஒரு ஒருங்கிணைந்த பாகம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டவை. இது இயக்கவியலின் மற்றொரு தோற்றத்தை, உலகத்தை ஒரு புரட்சிகர மாற்றத்திற்கு உட்படுத்த அது பயன்படு வதைப் புலப்படுத்துகிறது.

லெனின் வகுத்தளித்த இயக்கவியல் தர்க்கத்தின் அடிப்படையான மெய்ம்மைகள் பொருள் முதல்வாத இயக்கவியலுக்கு ஒரு திண்ணிய பங்களிப்பாகத் திகழ்கின்றன. தொழிற்சங்கங்களின் பாத்திரத்தைப் பற்றிய ட்ராட்ஸ்கி மற்றும் புகாரினினது பலபட்டரை அணுகும் முறையை (''ஒருபுறம்.........'' ''மற்றொருபுறம்'') விமர்சித்த லெனின்' இயக்கவியல் அணுகும் முறை குறிப்பிட்ட பொருளின் விரிவான ஒருங்கிணைந்த கணிப்பைக் கோருகிறது எனக் குறிப்பிட்டார். இரண்டாவதாக, இயக்கவியல் தர்க்கம் ஒரு பொருளை அதன் வளர்ச்சியில், சொந்த நகர்வில் பரிசீலிக்கிறது. மூன்றாவதாக அது மனிதகுலம் சேமித்து வைத்துள்ள முழுமையான அனுபவத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்கிறது. நான்காவதாக உண்மை என்றென்றைக்கும் உறுதியானது.[8] ஒருபொழுதும் வெறும் தோற்றத்தைக் கொண்டதல்ல என்ற பதாகையை அது தூக்கிப் பிடிக்கிறது.

சமூக வளர்ச்சியின் மார்க்சியச் சித்தாந்தமான வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தை லெனின் செழுமைப் படுத்தி முன்னேற்றினார். வர்க்கங்கள், வர்க்கப் போராட்டங்கள் பற்றிய அவரது கருத்துக்கள் தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். **ஒரு மகத்தான துவக்கம்** என்ற அவரது நூலில் லெனின் வர்க்கங்களைப் பற்றி ஒரு விரிவான விஞ்ஞான விளக்கத்தை அளித்தார்: வர்க்கங்கள் என்பது, சமூக உற்பத்தியில் வரலாறு தீர்மானித்த ஒரு அமைப்பில் தாங்கள் வசிக்கும் இடத்தினால், உற்பத்திச் சாதனங்களுக்கு அவர்களது உறவினால் (பெரும்பாலான நிகழ்வுகளில் சட்டத்தினால் வகுத்தளிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட) உழைப்பின் சமூக அமைப்பில் அவர்களது பாத்திரங்களினால் இறுதியாக அவர்கள் விற்பனை செய்யும் சமூகச் சொத்தின் பங்கின் பரிணாமங்களினால், அதை அடைவதற்கான வழியினால் ஒன்றுக்கொன்று வேறுபட்ட பெரும் பெரும் மக்களினது குழுக்களே வர்க்கங்கள் ஆகும். ஒரு திண்ணிய சமூகப் பொருளாதார அமைப்பில், மக்களின்

பல குழுக்களில், ஒரு குழுவின் உழைப்பை இன்னொரு குழு அபகரிக்க முடியும் என்ற நிலைமையிலான குழுக்களைக் கொண்டதே வர்க்கங்கள் ஆகும்."[9] வர்க்கங்களின் மிக முக்கியமான விசேட அம்சங்கள் கீழே வலியுறுத்திக் காட்டப் படுகிறது.

அ) சமூக உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட அமைப்பில் ஒரு வர்க்கம் இருக்கின்ற இடம். அதாவது சமூக உழைப்பில் அதன் பங்கு (உதாரணமாக; உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியில் அல்லது நுகர் பொருட்களின் உற்பத்தியில், அறிவு சார்ந்த உழைப்பில், பாதுகாப்புத் திறனை உறுதிப் படுத்தலில், ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் ஆளும் வர்க்கங் களினால் நசுக்கப்படுவதில்: அரசியலில், மதத்தில் மற்றும் விஞ்ஞான கலாசார நடவடிக்கைகளில் இன்னபிறவற்றில்)

ஆ) உற்பத்திச் சாதனங்களில் ஒவ்வொரு வர்க்கத் தினதும் உறவு அதாவது நடப்பிலுள்ள உடைமை உரிமையின் வடிவம் (ஒரு வர்க்க அமைப்பில் தனி உடைமைகள் ஆளும் வர்க்கங்களின் கைகளிலிருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் முற்றிலுமாக அல்லது முழுக்க முழுக்க உடைமைகள் ஏதுமில்லாதிருப்பது.)

இ) உழைப்பின் சமூக அமைப்பில் ஒவ்வொரு வர்க்கமும் வகித்த பாத்திரம் (அதாவது சமூகப் பரிமாணங்களைக் கட்டுப்பாடு செய்வதில் அதன் உறவு. சமூக உற்பத்தி சமுதாய வாழ்க்கையின் இதர துறைகள் மற்றும் ஆளும் வர்க்கங்களினால் ஒடுக்கப்பட்ட மக்கள் அடிமைப்படுத்தப் படுதல்)

ஈ) சமுதாய உடைமைகளைக் கைப்பற்றுவதற்கானவழி முறைகள் மற்றும் ஒவ்வொரு வர்க்கமும் சேர்த்துக் கொள் வதில் அதன் பங்கு (சுரண்டும் வர்க்கங்கள் உபரி மதிப்பை வருமானமாகவோ அல்லது வாடகையாகவோ பறிமுதல் செய்து கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் குறைந்த பட்ச

தேவைகளை பொருள் அல்லது ரொக்கமாகக் கொடுத்து அவர் களை திருப்திப் படுத்துவது)

வர்க்கங்களைப் பற்றிய லெனினது உருவகப் படுத்துதல் முக்கியமாக, பகைமையுடன் கூடிய சமுதாயப் பொருளாதார அமைப்புக்களுக்கேயாகும். ஒரு சோஷலிச சமுதாயத்தில் வர்க்கங்கள், அதற்கு முந்தைய சமுதாயங்களில் உள்ளவற்றை விட புரட்சிகரமான முறையில் மாறுபட்டிருக்கின்றன. அவை பிரத்தியேக தோற்ற அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவ்வம்சங்கள் இரண்டு வகையாக இருக்கும் சோஷலிச உடைமையிலிருந்து முகிழ்க்கின்றன—அரசாங்கம் முழுமைக்கு மான உடைமை, மற்றும் கூட்டுப்பண்ணைகள் கூட்டுறவு களின் உடைமை. அதன் திருப்பத்தில் இது ஒரு சோஷலிச சமுதாய அமைப்பில் இரண்டு பெரிய வர்க்கங்களினதும் இயந்திரத் தொழில் மற்றும் விவசாயத் தொழில் உழைப்பின் வேறுபாட்டைக் கொண்டு வருகிறது. இந்த சமுதாயம் வளரும் போது படிப்படியாக இந்த வேறுபாடு அகற்றப்படு கிறது இறுதியாக அந்த சமுதாயம் கம்யூனிஸத்தைக் காணும் போது இது முற்றிலுமாக மறைந்து விடுகிறது. சமுதாய உழைப்பு ஸ்தாபனத்திலும், சோஷலிசத்தின் கீழ் சமுதாய உடைமையை ஈட்டுவதிலும் அதன் பங்கிலும் அவர்கள் பெறு வதில் தொழிலாளி விவசாயி வர்க்கங்கள் வகித்த பாத்திரத்தில் உழைப்பு ஸ்தாபனத்திலும் விநியோகத்திலும் அவர்களது பங்கு, முழுமையான பொருளாதார அரசியல், சித்தாந்த சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த சமயத்தில் தொழிலாளி வர்க்கம் தனது அரசியல் சித்தாந்தத் தலைமையை அப்படியே வைத்துக் கொள்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் பற்றியும் லெனின் பகுப்பாய்வு செய்து இந்தக் கட்டத்தில் வர்க்கப் போராட்டம் எடுக்கும் ஐந்து வடிவங் களைத் தனிமைப் படுத்திக் காட்டினார். முதலாவது புரட்சி யினால் அகற்றப்பட்ட தங்களது சலுகைகளை மீண்டும் பெறுவதற்காகப் பாடுபடும் சுரண்டல் கூட்டத்தினரை

ஒடுக்குவது. இரண்டாவது, முதலாவதுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது—சோவியத் ருஷ்யாவில் சுரண்டும் வர்க்கங்கள் தங்களிடமிருந்த மிச்ச மீதங்களைக் கொண்டு, புரட்சிகர வர்க்கங்களுக்கு எதிராக தங்களது அதிதீவிர எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காகக் கட்டவிழ்த்து விட்ட உள்நாட்டுப்போர். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச மாற்றம் நிகழும் கட்டத்தில் குட்டி முதலாளித்துவ வர்க்கம் வகித்த பாத்திரம் முரண்பாடுகள், செய்ததையே திரும்பச் செய்வது ஆகியவற்றிற்கு பேர்போனதாகும். இது மாறுதல் கட்டத்தில் வர்க்கப் போராட்டம் எடுக்கும் மூன்றாவது வடிவத்தை விளக்குகிறது—அதாவது, சமுதாயத்தில் மிகவும் ஊசலாட்டத் தன்மையும் நிலையற்ற போக்கும் கொண்ட பகுதியான குட்டிமுதலாளித்துவத்தை நடுநிலைப்படுத்துவது. வர்க்கப் போராட்டத்தின் இந்த நோக்கை அமுல்படுத்த, கிராமப்புறங்களில் உள்ள மத்தியதர விவசாயிகளும், நகரங்களிலுள்ள குட்டி முதலாளித்துவத்தினரும் எதிர்ப்புரட்சியினால் ஈர்க்கப்படாமல் தடுக்க, கிராமப்புற ஏழைகளையும் நகர்புறத்துப் பாட்டாளிகளையும் நம்பவேண்டும் என லெனின் குறிப்பிட்டுக் காட்டினார். முதலாளித்துவ வல்லுனர்களைப் பயன்படுத்துவது (மேலே பார்க்கவும்) வர்க்கப் போராட்டத்தில் ஒரு புதிய இன்றியமையாத நோக்காகவிருந்தது. இறுதியாக இந்தக் காலகட்டத்தின் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் மிக முக்கியமான அம்சம், ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டின் அமுலாக்கம்; ஒன்றுபட்ட உழைக்கும் மக்களின் ஒரு கட்டுப்பாடு; பரஸ்பர பொறுப் புணர்வைச் சித்தரிக்கும் உணர்வு பூர்வமான கட்டுப்பாடு. தடிகொண்டு தாக்குவதின் மூலம் ஏற்படுத்தப்படும் நிலப் பிரபுத்துவக் கட்டுப்பாட்டையும், முதலாளித்துவத்தின் பட்டினியினால் சிருஷ்டிக்கப்படும் கட்டுப்பாட்டையும் மாற்றியமைக்கும் ஒரு கட்டுப்பாடு.

சோஷலிசத்தைச் சமைக்கும் கட்டத்தில் வர்க்கப் போராட்டத்தின் பொதுவான குறிக்கோள், அரசியல்

அரங்கில் மட்டுமல்லாது, பொருளாதாரம், எல்லாவற்றையும் விட மிகவும் கஷ்டமானதும் முக்கியமானதுமான மனித உணர்ச்சிகள் போன்றவற்றில் பழைய சமுதாயத்தின் அனைத்து வடிவங்களிலுமான எதிர்ப்பைச் சமாளித்து வெற்றி கொள்வதேயாகும்.

சோவியத் அதிகாரம் அமைக்கப்பெற்ற முதல் சில ஆண்டுகளில் சோஷலிஸ்ட் அரசாங்கத்தின் பிரத்தியேக வளர்ச்சியையும் லெனின் கற்றறிந்தார். வெகு ஜனங்களின் மனச்சாட்சியில்தான், தொழிலாளர்களுக்கும், உழைக்கும் விவசாயிகளுக்குமிடையே சித்தாந்த ஒருமைப்பாட்டில்தான் இந்த அரசாங்கத்தின் பலம் அடங்கியிருக்கிறது என அவர் எடுத்துரைத்தார். அவரது புத்தகங்களில், உரைகளில், மாநாட்டுப் பேருரைகளில் அரசாங்கம் பற்றிய பிரச்சினையில் அவர் ஒரு புதிய வகையிலான அரசாங்கம் எதிர் நோக்கும் தலையாய கடமைகளை வகுத்தளித்தார். முதலாவது புரட்சியின் ஆதாயங்களைப் பேணிப் பாதுகாத்து, நசுக்கப் பட்ட சுரண்டும் வர்க்கம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கான சாத்தியக் கூறுகளை அகற்றுவது. இரண்டாவதாக உழைக்கும் மக்களின் அரசாங்கம், உழைக்கும் வெகுஜனங் களை, புதிய சமுதாயத்தின் வழிகாட்டும் சக்தியான கம்யூனிஸ்ட் கட்சியின் பின்னால் அணிதிரளச் செய்து அவர் களது ஒற்றுமையை நிறுவுவது. மூன்றாவதாக பாட்டாளி வர்க்க அரசாங்கம் நகரங்களிலும் கிராமப்புறங்களிலுமுள்ள சிறு உடைமையாளர்களின் மத்தியிலிருக்கும் குட்டி முதலாளித்துவப் பேர்வழிகளை நடுநிலைமைப்படுத்துவது. சோவியத் அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கைகளுக்கும் சோவியத் யூனியனில் ஒரு சோஷலிச சமுதாயத்திற்கு அடித் தளங்களை அமைக்கும் பொதுவான குறிக்கோள்களின் நிறை வேற்றத்தைச் சாத்தியமாக்கவும் இந்தக் கடமைகளை நிறை வேற்றுவது அடிப்படையாகிவிட்டது.

1920 களின் துவக்கத்தில், ஆரம்பத்தில் ஒரே ஒரு நாட் டில் மட்டும் சோஷலிசம் வெற்றிக் கொடியை நாட்டமுடியும்

என்ற கருத்துக்கு மற்றொரு பங்களிப்பை வழங்கினார். ஒரு சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதென்பது மும்மடங்கான கடமையாகும் என அவர் காட்டினார். இம்மூன்றில் முதலாவதும் முக்கியமானதுமான கடமை, சோஷலிசத்திற்கான பொருள் முதல் மற்றும் தொழில் நுட்ப அடிப்படையை உருவாக்குவதே. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாதனங்களைப் பற்றி மேலோட்டமாகக் குறிப்பிடும் போது லெனின், இதர அனைத்து வளர்ச்சிக் கட்டங்களும், நாட்டை மின்சாரமயமாக்குவதைத் தொடர்ந்தே போகவேண்டுமென்றார். ஏனென்றால் இது தான் சோஷலிசத்திற்கான ஒரு வலிமை வாய்ந்த அடித்தளத்தை அமைப்பதைச் சாத்தியமாக்கும். இந்த சமயத்தில் தான் லெனின் அவரது புகழ் வாய்ந்த சொற்றொடரை அமைத்தார்: ''கம்யூனிஸம் என்பது, சோவியத் அதிகாரமும், நாட்டை முழுவதுமாக சேர்ந்ததே.'' [10] சோஷலிசத்தைச் சமைப்பதில் இரண்டாவது கட்டம் விவசாயத்தைக் கூட்டமைப்பதாக்குவதாகும். இந்தத் திட்டம், பன்முகக் கட்டமைப்பைக் கொண்ட, தனிமைப்படுத்தப்பட்ட பின் தங்கிய விவசாயப் பொருளாதாரங்களை நவீன எந்திரங்கள், முன்னேறிய விவசாயத் தொழில் நுட்பம், சமீபத்திய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெருமளவிலான கூட்டுறவு அமைப்புக்களாக மாற்றும், ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய லெனினது கூட்டுறவுத்திட்டம் எனப் பரந்த அளவில் தெரிந்த திட்டமாகும். மூன்றவாது கடைசிக்கட்டம் ஒரு கலாசாரப் புரட்சிக் கட்டமாகும். இது ஆகச்சிறந்த தொழிலாளர்கள், விவசாயிகளின் மத்தியிலிருந்து ஒரு புதிய தொழில் நுட்ப அறிவாளிகளை உருவாக்கும். அதே போல் சோவியத் குடியரசிலுள்ள பெரும்பான்மையான உழைக்கும் வர்க்கங்களிடம் ஒரு உயர்ந்த மட்டத் திறமைகளையும் சித்தாந்த எச்சரிக்கையுணர்வையும் சிருஷ்டிக்கும்.

மும்மடங்கு பொதுக் குறிக்கோள்களின் இரண்டாவது நோக்கு சமுதாயத்தில் புதிய சோஷலிச உறவுகளை உரு

வாக்குவது; முதலாவதாக பொருள் உற்பத்தி உறவுகளை உருவாக்குவது என லெனின் வலியுறுத்தினார். பொருளாதாரப் பிரச்சினை ஒரு புதிய பொருள் மற்றும் தொழில் நுட்ப அடிப்படையை நிறுவுவதோடு நெருங்கிய தொடர்பு கொண்டது என லெனின் கூறினார். "ருஷ்யப் பாட்டாளி வர்க்க அரசாங்கம் மிகப் பயனுள்ள முறையில் இன்றைய நவீன தொழில் நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ள பூதாகாரமான ஒரு தொழில் எந்திரத்தைக் கட்டுப்படுத்துவதின் மூலம் தான் அதை உறுதிப்படுத்த முடியும்."[11] இந்தக் கடமையை நிறைவேற்ற இரண்டு நிபந்தனைகள் இன்றியமையாதவை ஆகும்: நாடு முழுமைக்குமாக ஒரு கணக்கு வைக்கும் முறையை ஒழுங்குபடுத்துவது; உற்பத்தியிலும் விநியோகத்திலும் தலைமை உரிமை; உழைப்பு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு இடைவிடாத பணி. முதலில் கூறப்பட்ட நிபந்தனையை நிறைவேற்ற உழைக்கும் மக்களிடையே உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டும். பிந்திய நிபந்தனை சோஷலிசப் போட்டியின் ஸ்தாபன அமைப்பில் பிணைக்கப்பட்டுள்ளது. சோஷலிசப் பொருளாதார நிர்வகிப்பைத் திறம்படச் செய்வதற்கும், உழைக்கும் மக்களிடம் படைப்பாற்றல் முன் முயற்சியை ஊக்குவிப்பதற்கும் இது மிகவும் அவசியமான ஒரு வழிமுறையாகும். **ஒரு மகத்தான துவக்கம்** என்ற நூலில் வேலையின் பால் ஒரு புதிய கம்யூனிஸ்ட் பார்வை முகிழ்த்ததை அதுவே கம்யூனிஸ்ட் சபோட்னிக்குகளில்[12] காட்டிய பார்வையை சோஷலிசப் போட்டியின் பொருள் அதிரடிப் படைத் தொழிலாளர்களின் பரஸ்பர உதவி மற்றும் ஒத்துழைப்பு, சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தியின் புதிய நிலைமைகளில் சிறந்த உதாரணங்களைப் பின்பற்றுவதற்கான அவர்களது தயார் நிலை போன்றவற்றை ஒரு வெளிப்பாடாகக் கொண்டது என்பதைப் புலப்படுத்திய பார்வையை லெனின் வருணித்துள்ளார்.

எனினும் புதிய சமூக உறவுகளை நிறுவுவது உற்பத்தித் துறையை மட்டுமே பங்காகக் கொண்டதல்ல. அரசியல்,

சட்டம், ஒழுக்கவியல் உறவுகள் உள்ளிட்ட சமூக உறவுகளின் முழுமையான எந்திர நுட்பத்தையும் வளர்த்து உருவகப் படுத்துவது அவசியமாயிருந்தது. இது ஒரு புதிய, வரலாற்றில் இதற்கு முன் கண்டிராத பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதை முக்கியமாகப் புலப்படுத்துவதாகும். "சர்வாதிகாரம் என்ற கேள்வியின் வரலாற்றுக்கு ஒரு பங்களிப்பு" என்ற கட்டுரையிலும் இதர படைப்புக்களிலும் லெனின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாரத்தை ஒழித்துக் கட்டப்பட்ட வர்க்கங்களின் மிச்ச சொச்சங்களைப் பொறுத்த மட்டில் ஒரு அடக்கு முறைக்கருவி; அதேநேரத்தில் சமுதாயத்தின் பெரும் பகுதியான மக்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகத்தின் மிக உயர்ந்த வடிவம் எனத் தெளிவு படுத்திக் காட்டினார்.

சோஷலிச நிர்மாணத்தின் மும்மடங்கான பொதுக் குறிக்கோள்களுள் மூன்றாவது பார்வை லெனினது கருத்துப்படி, விஞ்ஞானம் மற்றும் கலாசாரத்தின் முழுமையான அமைப்பு, ஒவ்வொரு சோவியத் மனிதனின் உள்ளத்திலும் சோஷலிச உணர்வை ஊட்டுவதற்கான நிலைமைகளைக் கொண்ட விதி முறை ஆகியவற்றைக் கொண்ட சமுதாய உணர்வின் புரட்சிகர மாற்றமாகும். ஜாரிஸத்திலிருந்து சோவியத் அரசாங்கம் ஸ்வீகரித்துள்ள யுக யுகாந்திரமான பிற்பட்ட தன்மையின் சூழல்களில் இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு, முதன்முதலாக கல்வியறிவின்மையை அகற்றி பொதுக்கல்வி மையங்களை நிறுவுவது அவசியமாகும். லெனினைத் தலைவராகக் கொண்ட கட்சி, மிகச் சீக்கிரமாக 1918-ம் ஆண்டிலேயே விஞ்ஞான, கலாசாரக் கல்விக் கூடங்கள், தலைமையகங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யத் துவங்கியது. அவ்வாறானால்தான் 1920-ம் ஆண்டுகளின் மத்தியில் எண்ணற்ற பல கிளைகளைக் கொண்ட ஆராய்ச்சி, கலாசார, மற்றும் கல்விக் கூடங்கள் நாடெங்கணும் மலர்ந்து மணம் வீசும். சோவியத் அதிகாரம் அமைக்கப்பட்ட முதல் பத்தாண்டுகளின் இறுதியில்சோவியத்

விஞ்ஞானம் மற்றும் கலாசாரத் துறையிலும், அதே போல் தேசீயப் பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் திறமை படைத்த மிக உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட வல்லுனர்களைப் பயிற்றுவிப்பதிலும் மகத்தான மாற்றங்கள் காணக் கிடைத்தன. இப்பொழுது கட்சியும் அரசாங்கமும் கீழ்க்கண்ட சூத்திரத்தை தங்களது கொள்கை நிலைக்கு அடிப் படையாகக் கொண்டன. ''ஊழியர்களே எல்லாம்.''

சோஷலிச நிர்மாணத்தின் இந்த மும்மடங்கு கடமையை வகுத்தளிக்கும் போது லெனின் உள்ளபடியே முதலாளித் துவத்திலிருந்து கம்யூனிஸ மாற்றத்தில், ஆளுமை கொள்ளும் அடிப்படையான திண்ணிய சட்டங்களைப் புலப்படுத்தினார்.

பல்வேறு நாடுகளிலும் சோஷலிசத்தைச் சமைப்பதில் உள்ள ஒரே மாதிரியான பிரத்தியேக அம்சங்களைப்பற்றியும் அவர் ஆராய்ந்தார். சோவியத் அதிகாரம்தான் முதன்மை யானது. வரலாற்று ரீதியில் ஒரு புதிய வகையிலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். இந்த சர்வாதிகாரம் முதலாளித் துவத்தை நிர்மூலமாக்கியதில் மட்டுமல்லாது சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிசத்தைச் சமைப் பதிலும் வெற்றி கண்டது. இருந்த போதிலும் லெனின் திரும்பத் திரும்ப சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளிலும் கூட பாட்டாளி வர்க்கத்தின் சோவியத் சர்வாதிகாரம் முழுமையானதாகவில்லை. அது மட்டுமே, ஒருவகை பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசாங்கமுமல்ல என்பதைக் குறிப்பிட்டார். அக்டோபர் புரட்சிக்குமுன் அவர் எழுதிய ''**அரசும் புரட்சியும்** என்ற நூலில் லெனின் தீர்க்கதரிசனத் துடன் பாரிஸ் கம்யூன் மாதிரி அரசாங்கம் பற்றிய, ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவும் முதல் முயற்சி பற்றிய மார்க்ஸ்-எங்கெல்ஸ் கருத்தைப் பகுப்பாய்ந்தார். அக்டோபர் புரட்சிக்குப்பின், ருஷ்ய நாட்டிற்கு தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் அரசுக்கு சோவியத்துக்கள் தான் மிகவும் பொருத்தமான மாதிரி எனக்காட்டினார்.

அதே சமயத்தில் இதர நாடுகளில் வேறுபட்ட வடிவங்களிலான தொழிலாளி வர்க்க ஆட்சி சாத்தியம் என்பதை வலியுறுத்திக்காட்டினார். பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர நடவடிக்கையைப் பகுப்பாய்வு செய்த லெனின், 1920களின் துவக்கத்தில் அங்கு முகிழ்த்துச் செயல்பட்ட தொழிற் கூட முன்னணி வீரர்களின் கமிட்டிகள் ஒரு புதிய வகையிலான பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் அரும்புகள் என எழுதினார்.

பாராளுமன்றம் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தினால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒரு பாரம்பரிய பாராளுமன்ற வடிவத்திலும் அமைக்கப்படலாம் என்பதை லெனின் ஊர்ஜிதப்படுத்தினார்; அதாவது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்துக் குரல் எழுப்பினால். பாராளுமன்றம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் வரலாற்று வளர்ச்சியின் உற்பத்தியாகும். சில சந்தர்ப்பங்களில் அதை நிராகரித்து விடக்கூடாது என்றார் லெனின். ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்விலும் ஒரு முழுமையான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். ''வலது சாரி கோட்பாடு பழைய வடிவங்களை அங்கீகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து முழுக்க முழுக்க திவாலாகி விட்டது. ஏனென்றால் அது புதிய உள்ளடக்கத்தைக் காணத் தவறி விட்டது. இடது சாரிக் கோட்பாடு சில பழைய வடிவங்களை நிபந்தனையேதுமின்றி நிராகரிப்பதை வற்புறுத்தியது. அது புதிய உள்ளடக்கம் அனைத்து வேறுபட்ட வடிவங்களையும் பலவந்தமாக ஊடுருவிச் செல்வதை அது பார்க்கத் தவறிவிட்டது.''[13] இதற்கிடையே ஒரு விஞ்ஞான ரீதியான அணுகும் முறை முற்றிலும் வேறுபட்ட கோட்பாடுகளைப் பரிந்துரைக்கிறது. ''முதலாவதாக இதர நாடுகளின் அனுபவத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என விஞ்ஞானம் கோருகிறது....... இரண்டாவதாக அது ஒரு குறிப்பிட்ட நாட்டில் அனைத்துச் சக்திகள், குழுக்கள்

கட்சிகள், வர்க்கங்கள் மற்றும் வெகு ஜனங்களின் அனுபவத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும்."[14] இத்தகைய அணுகும் முறை மட்டுமே ஒரு புதிய சமுதாயத்திற்கான போராட்டத்தில் மிகவும் சாதகமான வடிவங்களைக்காண உதவி செய்து போராட்டத்தையும் வெற்றி வாகை சூடச் செய்யும்.

சர்வதேச சமுதாய மதிப்பீட்டுப்பிரச்சினைகளில் கவனம் செலுத்திய போது லெனின் அக்டோபருக்கு பிந்திய ஆண்டுகளில் முதலாளித்துவத்தின் கடைசிக் கட்டமாக ஏகாதிபத்தியத்தைப் பற்றிய அவரது போதனைகளை முன் வைத்தார். குறிப்பாக அவர் உலகப் போருக்குப்பின் காலனி நாடுகளிலும், சார்ந்திருக்கும் நாடுகளிலும் புரட்சிகர விடுதலை இயக்கங்களின் சாத்தியக் கூறுகளைப் பரிசோதித்துப்பார்த்து உலகக் காலனி ஆதிக்க அமைப்பின் வீழ்ச்சி வரலாற்று ரீதியாகத்தடுக்க முடியாதது என்பதை நிருபித்தார். அவர் சில நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்லாமலேயே சோஷலிசத்தைச் சாதிக்கும் சாத்தியப்பாட்டைப் புலன் ஆய்ந்து கொள்கையளவில் மெய்ப்பித்தார். சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகள், மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசு நாடுகளின் அனுபவத்தின் மூலம் இந்த அற்புதமான தீர்க்கதரிசனம் முழுமையாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

அக்டோபருக்குப் பிந்திய படைப்புக்களில், சோஷலிசப் புரட்சி வெற்றிக்கனியைப்பறித்த நாடுகளில், மக்களிடையே ஒரு புதிய கம்யூனிஸ உணர்வை உருவாக்க லெனின் அதிகமான இடத்தை அர்ப்பணித்தார். பெரும்பாலும் சோவியத் அரசாங்கத்தின் அனுபவத்திலிருந்துதான் அவர் விஷயங்களைப் பொதுமைப்படுத்தினார் என்பது உண்மையே. ஆனால், அவரது கருத்துக்களும், முடிவுகளும் பல சோஷலிஸ்ட் நாடுகளால் ஆதரிக்கப்பட்டு அரங்கேற்றம் பெற்றன என்பதை 20 ம் நூற்றாண்டின் சரித்திரம் நிருபித்துவிட்டது.

கம்யூனிஸ்ட் உணர்வின் அமைப்பும் உள்ளடக்கமும் வெற்றிகரமான சோஷலிஸ்ட் புரட்சிக்குப்பின் மகத்தான அளவு விரிவாக்கம் பெற்றதை லெனின் காட்டினார். சோவியத் அதிகாரம் அமைப்பைப் பெற்ற முதல் சில ஆண்டுகளில் லெனின் கம்யூனிஸ்ட் உணர்வின் உள்ளடக்கத்தினது அடிப்படையான முன் மொழிதல்களை வகுத்தளித்தார். அதை பரந்துபட்ட தொழிலாளர்களிடமும், உழைக்கும் விவசாயிகளிடமும் உருவாக்கிக்காட்டும் வழிகளையும் வகுத்துக் கொடுத்தார். கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தின் மூன்றாவது காங்கிரஸில் உரையாற்றும் போது லெனின் கூறியதாவது: "மனித குலத்தினால் படைக்கப்பட்ட அனைத்து அறிவுக்கருவூலத்திலிருந்தும் கற்றறிந்து உனது உள்ளத்தைச் செழுமைப்படுத்தினால் தான் நீ ஒரு கம்யூனிஸ்ட் ஆகமுடியும்." [15] தான் பொருள் கொண்டதை அவர் சோஷலிசத்தைச் சமைப்பதில் உள்ள சில நடைமுறைப் பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டி விளக்க ஆரம்பித்தார். "கம்யூனிஸ சமுதாயம் நாம் அறிந்த அளவில், எந்திரத் தொழிலையும் விவசாயத்தையும் நிறுவாத வரை அதுவும் பழைய முறையிலல்லாமல் நிறுவாத வரை நம்மால் கட்ட முடியாது. விஞ்ஞானத்தின் கடைசி வார்த்தைகளுக்ேற்ப அவை நவீன அடிப்படையில் புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். மின்சாரமயம் தான் அந்த அடிப்படை என்பது உங்களுக்குத்தெரியும்......கல்வியறிவில்லாத மக்களால் மின்சாரமயமாக்கும் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்பதையும், ஆரம்பக் கல்வி அதற்குப் போதுமானதல்ல என்பதையும் நீங்கள் நன்கறிவீர்க்ள். [16] வெற்றிக் கொடியை நாட்டிய சோஷலிஸ்ட் புரட்சிக்குப்பின் கம்யூனிஸத்தைப் பயில்வது என்பதன் பொருள் கம்யூனிஸம் என்ற விஞ்ஞானத்தின், அனைத்து விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகளையும் சேர்த்துப் பயில்வதே என லெனின் சுட்டிக்காட்டினார்.

இந்த வழியில் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸ மாற்றத்தின் சமுதாய, அரசியல் சித்தாந்தம் மட்டுமல்லாது,

இயற்கை விஞ்ஞானங்களும் தொழில் நுட்பமும் உற்பத்தி செய்துள்ள கூட்டு மொத்த விஷயஞானத்தையும் கற்றறிய வேண்டும். இந்தக் கட்டத்தின் கம்யூனிஸ உணர்வின் கட்டு மானத்தில் இந்த சமூக அரசியல் கருத்துக்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு இது அவசியமாகும்.

லெனினது முன்முயற்சியால் 1920களின் துவக்கத்தில் உருவாக்கப்பட்ட ருஷ்ய நாட்டை மின்சார மயமாக்கும் அரசாங்கத்திட்டம் (**கோயல்ரோ**) ஒரு தீர்க்கமான உதாரண மாகும்: லெனினது வார்த்தைகளில் கோயல்ரோ திட்டம்'' ஒரு தொழில் நுட்பத் திட்டமல்ல......ஆனால் ஒரு அரசியல் அல்லது அரசாங்கத் திட்டம். அதாவது பாட்டாளி வர்க்கத் திற்கு ஒரு கடமை.''[17] இந்தத் திட்டத்தின் மகத்தான முக்கியத்துவம், அது விஞ்ஞானத் தொழில் நுட்ப சாதனை களை சமூக, பொருளாதார, அரசியல் வாய்ப்புக்களுடனும் சோஷலிச நிர்மாணத்தின் கோட்பாடுகளுடனும் இணைத்துக் கொள்வதில்தான் அடங்கியிருக்கிறது என்ற உண்மைக்கு லெனின் விசேட வலியுறுத்தலை வழங்கினார். ஜெர்மன் நாட்டின் பொருளாதாரத்தை சோஷலிச நிலை பாடுகளில் புனரமைப்பதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித் தளித்த ஜெர்மன் விஞ்ஞானி கார்ல் பால்லூடை மேற் கோள் காட்டிய லெனின் 'ஒரு முதலாளித்துவ நாடானதால்' இந்தத் திட்டத்திற்கு ஆதாரமே கிட்டவில்லை என்றார். அது ஒரு தனி ஓநாயின் முயற்சியாகக் கிடக்கிறது. இலக்கிய வியாசத்தில் ஒரு பயிற்சியாகக் கிடக்கிறது.''[18] இதற்கு மாறாக சோவியத் ருஷ்யாவில் வெவ்வேறு துறை களில் பாண்டித்தியம் பெற்ற நூற்றுக்கணக்கான வல்லுனர்கள் **கோயல்ரோ** திட்டத்தில் பங்கு கொண்டனர். இதன் விளைவாக அவர்கள் இயற்கை விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் சமீபத்திய முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தனர். மேலும் அவர்கள் தொழிலாளர்கள் விவசாயிகள் மத்தியில் பிரம்மாண்டமான

அளவில் கல்வி மற்றும் சித்தாந்தப் பயிற்சிகளை மேற்கொண்டனர். சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிச நிர்மாணம் வழங்கியுள்ள விஞ்ஞான அறிவாற்றலின் சாத்தியக் கூறுகளினால் அவர்களைத் தயார் செய்தனர். ''சோவியத் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு **கோயல்ரோ** திட்டத்தை மேற்கொள்வதென்றால் அது நமது நாட்டில் கம்யூனிஸ அடித்தளங்களின் சுரண்டும் கூட்டத்தினர் இல்லாத ஒரு பண்பாடு நிறை வாழ்க்கையின் அடித்தளங்களின் வெற்றி எனப்பொருள்படும் என்பதையும் அவர்கள் நிரூபித்தனர்.''[19] திட்டத்தின் சமுதாய முக்கியத்துவத்தை லெனின் வெளிப்படுத்தினார். ''ஒவ்வொரு தொழிற்சாலையும், ஒவ்வொரு மின்சக்தி நிலையமும் (மிளிர வேண்டும்) ஒரு அறிவை வளர்க்கும் மையமாகத் திகழவேண்டும்'' என அதற்கு கடமை வகுத்துக் கொடுத்தார். ருஷ்ய நாடு பரவிப் படர்ந்த மின்சக்தி நிலையங்களினாலும், சக்திமிக்க தொழில் நுட்ப சாதனங்கள் நிறுவப்படுவதாலும் சூழப்பட்டால் நமது கம்யூனிஸப் பொருளாதார வளர்ச்சி, எதிர்காலத்தில் ஒரு சோஷலிச ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் முன் மாதிரியாகத் திகழும்.''[20]

''இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற ஒரு பொதுவான ஒருங்கிணைந்த திட்டம் தேவை; அது மக்களது கவனத்தையும், சக்திகளையும் ஸ்தூலமாகக் காட்டுவதையும் கொண்டிருக்க வேண்டும்'' என்றார் லெனின். ''பண்பாட்டுத் தரத்தை உயர்த்துவதற்கு (உழைக்கும் மக்களின்) சாதாரண கல்வியறிவினால் முடியாது''[21] எங்காவது ஒருவன் உணர்வு பூர்வமான ஒரு சோஷலிசப் போராளியாகிறான் என்றால் ''அவன் ஒரு திறமை பெற்றவனாகிறான்...... **இருந்தாலும் இத்துடன் இந்தக் கைவினைஞன் ஒரு பரந்த பொதுக்கல்வியறிவையும் பெற்றிருக்க வேண்டும்...... ஒரு கம்யூனிஸ்டாகவிருக்க வேண்டும்......; ஒரு தொழில்நுட்பக் கண்ணோட்டத்தையும் தொழில் நுட்பக் கல்விக்கான அடித்தளங்களையும்**

(ஆரம்பங்களையும்) **கொண்டிருக்க வேண்டும்**"[22] என்று எழுதினார் லெனின்.

சோவியத் பொருளாதார வளர்ச்சிக்காக மேற்கொண்டு தீட்டப்பட்ட திட்டங்களும் அதேபோல் சகோதர சோஷலிஸ்ட் நாடுகளினால் இதே போன்ற திட்டங்கள் தீட்டப்பட்டு அமுலாக்கம் பெற்றதும், ஒரு குறுகிய உற்பத்தி உள்ளடக்கத்தைக் கொண்டிருக்காமல், ஒரு சமூக, பொருளாதார அரசியல் உள்ளடக்கத்தின் முக்கியத் துவத்தைக் கொண்டிருக்கின்றன. அவற்றின் உள்ளடக்கச் சாரத்திலுள்ள, விஞ்ஞான, வர்க்க, கட்சி, சமூக அரசியல் மற்றும் சித்தாந்த நோக்குகளின் ஒற்றுமை, அவற்றை விஷயஞானம், நம்பிக்கைகள், பரந்துபட்ட உழைக்கும் மக்களிடையே நடவடிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, சோஷலிச சமுதாயத்தின் சமூக உணர்வின் மெய்யான வெளிப்பாட்டைப் பிரதிபலிக்குமாறு செய்கின்றன.

லெனினது கருத்துக்கள் ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தில் உழைக்கும் மக்களின் கம்யூனிஸ உணர்வின் உள்ளடக்கத்தையும், அமைப்பையும் தீர்மானிப்பதில் விசேடப் பொருத்தமுடையவையாயிருக்கின்றன. அதேபோல் இந்த உணர்வில் விஞ்ஞான, கம்யூனிஸ்ட், பொதுவான தத்துவார்த்த, பொருளாதார, அரசியல், இயற்கை விஞ்ஞான, தொழில் நுட்ப, மனிதத்துவ விஷயஞானம் போன்றவை, ஒழுக்கநெறி, நாத்திகக் கருத்துக்கள், இலட்சியங்கள் மற்றும் விதிமுறைகளுக்காக பங்கீடு செய்யப்பட்டிருக்கும் இடமும் பாத்திரமும் சாலப் பொருத்தமானவை.

இது தொடர்பாக, 1871-ம் வருடத்திய பாரிஸ் கம்யூன் சித்தாந்த வாழ்க்கை பற்றிய மார்க்சின் கணிப்பின்பால் லெனின் கவனத்தை ஈர்க்கிறார். மார்க்ஸ் **எழுதியதாவது:** "உள்ளபடியே பொதுப் போதனையை (கல்வி) புனரமைத்து

ஒழுங்குபடுத்த நேரமிருக்கவில்லை; ஆனால் அதிலிருந்து மதவாதிகளையும், திருச்சபைப் பேர்வழிகளையும் அகற்றிய பின் கம்யூன் மக்களின் சிந்தனைப் போக்கில் விடுதலை காண முன்முயற்சிகளை எடுத்தது"[23] மேலும்: "தொழிலாளி வர்க்கத்தினால் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும் (சமுதாயம்—லெனின் சொன்னது)...... பாதிரியார்களின் ஆட்சியிலிருந்து விஞ்ஞானத்தை ஒரு வர்க்க ஆட்சியின் ஆயுதம் என்பதிலிருந்து, ஒரு மக்களின் சக்தியாக மாற்றுவதற்கு, விஞ்ஞானத்தில் ஆற்றல் நிரம்பப் பெற்றவர்களை இழிதகைக் கருத்துக்களைப் பரப்புகிறவர்களிடமிருந்து அவர்களாகவே ஒரு வர்க்க முற்சாய்வுக்கு தங்களை மாற்றிக் கொள்வதற்கு, அரசாங்கத்திற்குத் தொல்லை தரும் குருதி குடிக்கும் அட்டை போன்றவர்களை வேட்டையாடுவதற்கு, மற்றும் முதலாளித்துவத்தின் நேச சக்திகளை சிந்தனையின் சுதந்திர முகவர்களாக! மாற்ற தொழிலாளி வர்க்கத்தினால் மட்டுமே முடியும். உழைப்பின் குடியரசில் மட்டுமே விஞ்ஞானம் அதன் மெய்யான பாத்திரத்தை வகிக்கமுடியும்."[24]

இருந்த போதிலும், அதன் தலைவர்களிடையே எழுந்த சித்தாந்த வேறுபாடுகளினாலும், ஒரு முனைப்பான சித்தாந்த ஒற்றுமை இல்லாததின் விளைவாக பிற்போக்காளர் களை எதிர்த்த போராட்டத்தில் சரியான அரசியல் நிலை எடுக்க முடியாமல் பாரிஸ் கம்யூன் பலவீனப்படுத்தப்பட்டது.

1905-07 ம் வருடத்திய ருஷ்யப் புரட்சியைப்பகுப்பாய்ந்த போது லெனின் இதே முடிவுகளுக்கு வந்தார். எனவேதான் புரட்சி தோற்கடிக்கப்பட்ட பிறகு தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சித்தாந்த ஒற்றுமைக்காகவும், புதிய வகையிலான கட்சிக்கு ஒரு தெளிவாக வரையறுக்கப்பட்ட தத்துவார்த்த அடிப்படையை உருவாக்கவும் லெனின் தீவிர இயக்கத்தை நடத்தினார்.

மகத்தான அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்பின் போதும், புரட்சியின் போதும் அதே போல் உள் நாட்டுப் போர் நடந்த போதும், பாட்டாளி வர்க்கத்தினரையும், விவசாயப் பெருங்குடி மக்களையும் சித்தாந்த மற்றும் அரசியல் துறைகளில் பயிற்றுவிக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்தினார். கட்சிப் பணியின் தலையாய நோக்கு களில் இதுவும் ஒன்று என அவர் கருதினார்.

அக்டோபர் புரட்சியின் போது சர்வதேச சந்தர்ப்ப வாதம் முன் வைத்த, மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடிய ஒரு கோட்பாடு பாட்டாளி வர்க்கம் ஒரு சோஷலிசப் புரட்சிக்கு இன்னும் தயார் நிலையில் இல்லை என்று பகன்றதாகும். இதற்கு பாட்டாளி வர்க்கத்தின் கலாசாரப் பின்னடைவு, புரட்சியையோ அல்லது அதைத் தொடரும் சோஷலிச நிர்மாணத்தையோ வழி நடத்திச் செல்லும் திறன் படைத்த பயிற்சி பெற்ற தலைவர்கள் அதன் அணிகளில் இல்லாதது ஆகியவற்றை அது காரணம் காட்டியது. உதாரணமாக இந்தக் கோட்பாடுதான் ருஷ்யப் புரட்சி முதலாளித்துவத் தினால்தான் நடத்தப் பெற வேண்டும்; உழைக்கும் மக்கள் இரண்டாம் பட்ச பாத்திரத்தையே வகிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருமாறு ருஷ்ய மென்ஷ்விக்குகளை இட்டுச் சென்றது.

1922-ம் ஆண்டு ஒரு முன்னணி ருஷ்ய மென்ஷ்விக் என்.சுகானோவ் (ஏ.என்.கிம்மர்) அவரது "புரட்சியைப்பற்றிய குறிப்புக்கள்" என்ற நூலை பெர்லினில் வெளியிட்டார். அதில் அவர் "ருஷ்ய நாட்டில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி சோஷலிசத்தைச் சாத்தியமாக்கும் அளவை எட்டவில்லை." சோஷலிசத்தைச் சமைக்க, சமுதாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் வர்க்கம் ஒரு துல்லியமான அளவு பண் பாட்டையும் அறிவாற்றலையும் பெற்றிருக்க வேண்டும் என அறுதியிட்டுக் கூறினார். சுகானோவின் இந்தக் கூற்றுக்கு லெனின், 1917-ம் வருடத்திய புரட்சியைத் தலைமை தாங்கி

நடத்திய தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்ட் உணர்வு மற்றும் பண்பாட்டுத் தரம் தொடர்பாக தனது புகழ்வாய்ந்த ''நமது புரட்சி'' என்ற கட்டுரையில் பதிலிறுத்து எழுதியதாவது: ''சோஷலிசத்தைச் சமைப்பதற்கு ஒரு துல்லிய அளவிலான பண்பாட்டுத்தரம் தேவையென்றால்..... அந்தத் துல்லிய அளவிலான பண்பாட்டுத் தரத்தின் முன் தேவைகளை ஒரு புரட்சிகரமான வழியில் அடைவதற்கு முதலில் நாம் ஏன் ஆரம்பம் மேற்கொள்ளலாகாது; பின்னர் தொழிலாளர்களின் விவசாயிகளின் அரசாங்கத்தினது, சோவியத் அமைப்பினது உதவியோடு இதர நாடுகளை முந்திச் செல்வதற்குரிய பயணத்தை மேற்கொள்ளலாகாது?''.[25]

1922-ல் ''தீவிரப்பொருள் முதல்வாதத்தின் முக்கியத்துவம்'' என்ற லெனினின் படைப்பு முதலில் மார்க்சிய தத்துவார்த்த ஏடான **மார்க்சியப் பதாகையின் கீழ்** பிரசுரமானது. உண்மையில் இந்தப் படைப்பு லெனினது தத்துவார்த்த மரபுரிமையாகும். ஏனென்றால் வெற்றிகரமான சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் மார்க்சியத் தத்துவம் எதிர்நோக்கும் கடமைகள் பற்றிய ஒரு தொலை நோக்குடன்கூடிய பகுப்பாய்வை அது கொண்டிருந்தது. அதன் பிரதான திசைவழிகளையும் குறிக்கோள்களையும் அது மேற்கோடிட்டுக் காட்டியிருந்தது.

1920-ம் ஆண்டின் பிற்பகுதியில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸில், செக்டேரியன் போக்கை எதிர்த்தும், தாண்ட முடியாத ஒரு சுவரின் மூலம் கம்யூனிஸ்ட்கள் அல்லாதவர்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பிரத்தியேக வட்டத்தை அமைப்பதற்கான முயற்சிகளை எதிர்த்தும் லெனின் கம்யூனிஸ்டுகளை எச்சரித்தார். இப்பொழுது தத்துவம் சம்பந்தமாக தனது தத்துவார்த்த மரபுரிமையில் அவர் இந்த ஆய்வியலை வளர்த்துச் சென்றுள்ளார்: ''கம்யூனிஸ்டுகளால் இழைக்கப்படும் மிக ஆபத்தான பெரிய தவறுகளில் ஒன்று (பொதுவாக ஒரு மகத்தான புரட்சியின் துவக்கக் கட்டத்தை வெற்றிகரமாகச் சாதிதத்

புரட்சிப் போராளிகளிடம் காணக்கிடைக்கும் தவறு) புரட்சிப் போராளிகளால் மட்டுமே ஒரு புரட்சியைக்கொண்டு செலுத்த முடியும் என்ற கருத்தாகும்......மிகவும் வேறுபட்ட துறைகளின் நடவடிக்கைகளில் கம்யூனிஸ்டுகள் அல்லாதவர் களோடு ஒரு கூட்டணி இல்லாமல் வெற்றிகரமான கம்யூனிஸ நிர்மாணம் என்ற கேள்விக்கே இடமில்லை.''[26] தத்து வார்த்தத் துறையில் கடந்தகாலத்தில் காணக்கிடைத்த அனைத்து முற்போக்கான சாதனைகளையும் பயன்படுத்த வேண்டியது அவசியமாயிருந்தது. குறிப்பாக உலகின் தத்துவார்த்தச் சிந்தனை வளர்ச்சியில் இயல்பாகவிருக்கும் திண்ணிய லோகாயுதப் பாரம்பரியத்தைப் பயன்படுத்த வேண்டி வந்தது, என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். பிரெஞ்சு நாட்டின் 18-ம் நூற்றாண்டுப் பொருள் முதல் வாதத்தையும், ருஷ்ய நாட்டில் 19-ம் நூற்றாண்டில் காணக் கிடைத்த புரட்சிகர ஜனநாயக லோகாயுதச் சிந்தனையையும் அவர் பாராட்டினார். அனைத்து முற்போக்கான விஞ்ஞானி களும் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேராவிட்டாலும், தத்துவார்த்தப் பிரச்சினைகளில் பணியாற்றுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

மார்க்சியத் தத்துவஞானிகளுக்கும், முன்னேறிய இயற்கை விஞ்ஞானிகளுக்குமிடையே ஒரு உறுதியான நேச அணி அமைக்கப்பட வேண்டும். ''ஏனென்றால் முதலாளித் துவக் கருத்துக்களின் ஈட்டிமுனைத் தாக்குதலுக்கு எதிராக, முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு எதிராக எந்தப் பொருள் முதல்வாதமும் இயற்கை விஞ்ஞானமும் அதன் திண்ணிய தத்துவார்த்த அடித்தளத்தில் நிற்காதவரை சொந்தக்காலில் நிற்க முடியாது ''[27]

பொருள் முதல் இயக்கவியலின் மார்க்சிய சித்தாந்த் தினது விரிவான வளர்ச்சி இன்றியமையாதது என்பதையும் லெனின் வலியுறுத்தினார். இயக்கவியல் பிரச்சினைகளின் அடிப்படையான ஆராய்ச்சியை மேற்கொள்ள இரண்டு திசை

வழிகளை ஒன்றாக இணைக்க வேண்டும் என அவர் நினைத்தார்: முதலாவது ஹெகலின் இயக்கவியலை, மார்க்சியப் பொருள் முதல் வாத நிலைபாட்டிலிருந்து புனர்பரிசீலனை செய்து கிரஹித்துக் கொண்ட பின் தீர்க்கமான முறையில் பயன் படுத்த வேண்டும். இரண்டாவதாக, சோவியத் யூனியன் மற்றும் உலகு தழுவிய சமூக வளர்ச்சியின் இயக்கவியலின் பிரத்தியேக நடைமுறை அனுபவம் பகுப்பாய்வு செய்யப்படவேண்டுப். 20-ம் நூற்றாண்டில் ஒரு பொருள் முதல் இயக்கவியல்வாதி என்பதின் பொருள், அவன் முதலில் பிரத்தியேக நிகழ்வுகளை இயக்கவியல் நிலைபாடுகளிலிருந்து புலனாய்வு செய்யத் திறன் படைத்திருக்க வேண்டும். அண்டைக்கால வரலாறு, குறிப்பாக நவீன ஏகாதிபத்தியப் போரும், புரட்சியும் அசாதாரண முறையில் அள்ள அள்ளக் குறையாமல் வழங்கியிருக்கும் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளின் துறையிலுள்ள இயக்கவியல் உதாரணங்களைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.''[28] என்று லெனின் எழுதினார்.

தத்துவத்தில் அனைத்துப் பிற்போக்கான போக்குகளையும் எதிர்த்து, அவை கருத்து முதல்வாதப் போக்காயிருந்தாலும், வறட்டுத்தத்துவமாயிருந்தாலும் அல்லது மத சம்பந்தமான ஆய்வியல்களாயிருந்தாலும் அவற்றை எதிர்த்து ஒரு ஈவிரக்கமற்ற, சமரஸமில்லாத போராட்டத்தை நடத்த வேண்டியது, மார்க்சியத் தத்துவத்தில் உள்ள மிக முக்கியமான கோட்பாட்டுக் கடமையாகும். ''இந்தக் கடமை, மதவாதப் பாசறையிலிருந்து பட்டம் பெற்று வந்திருக்கும் நவீன காலத்து இழிபிறவிகளை அவர்கள் அதிகாரபூர்வ விஞ்ஞானத்தின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டாலும் சரி, அல்லது ஜனநாயக இடதுசாரிகள் அல்லது சித்தாந்த ரீதியாக சோஷலிஸ்ட் பிரசாரகர்கள் என்று அழைத்துக் கொள்ளும் சுதந்தரப் பறவைகாளயிருந்தாலும் சரி தயவு தாட்சணியமின்றி அம்பலப்படுத்தி அடையாளம் காட்டும் ஒரு கடமையாகும்''[29] என்று லெனின் வற்புறுத்திக் கூறினார். லெனினது

இந்தப் பரிந்துரைகள் அக்டோபர் புரட்சிக்குப்பின் சித்தாந் தப் போராட்டத்தின் அனைத்துத் துறைகளிலும் முதலாளித் துவத்தத்துவம் மற்றும் திருத்தல் வாதம் சம்பந்தமாகத் தொடர்ந்து வந்த திறானாய்வுகளுக்கு அடித்தளங்களை அமைத்தன.

''தீவிரப் பொருள் முதல் வாதத்தின் முக்கியத்துவம் பற்றி'' என்ற அவரது படைப்பில் மேற் கோடிட்டுக் காட்டப் பட்ட மார்க்சியத் தத்துவத்தை வளர்ப்பதற்கான லெனினது திட்டம், மார்க்சிய லெனினியத் தத்துவத்தின் எதிர்கால வரலாற்றுக்கு ஜீவாதாரமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் அடிப்படையில், சோவியத் யூனியனில் பரந்த அளவி லான தத்துவார்த்த ஆராய்ச்சி, கல்விப்பணி, தத்துவார்த்தப் பிரசாரம் ஆகியவற்றின் ஒரு அமைப்பை நிறுவுவதற்காக கட்சி பிரமாண்டமானதொரு இயக்கத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

1918-ம் ஆண்டு சமூக அறிவாற்றலின் பிரதான கிளை களில் சித்தாந்த ஆராய்ச்சிகளை ஸ்தாபனப்படுத்துவதற் காக லெனினது முன் முயற்சியில் சமூக விஞ்ஞானங்களின் சோஷலிசக் கலைக் கழகம் நிறுவப்பட்டது. 1919-ல் புதிதாகத் துவங்கிய ஸ்வெர்ட் லோவ் கம்யூனிஸ்ட் பல்கலைக் கழகம் திறமை மிக்க தொழிலாளர்களை, சித்தாந்தத்தில் முழுமை யான ஞானம் பெறுவதற்கும், கட்சி மற்றும் அரசாங்கப் பணி களுக்கும், அதே போல் சமூக விஞ்ஞானங்களில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் பயிற்றுவிக்கத் தன்னைப் பணித்துக் கொண்டது. 1920களின் துவக்கத்தில் தத்துவார்த்த விஞ் ஞானக் கல்விக் கூடத்தையும் தன்னகத்தே கொண்டு ருஷ்ய சமூக விஞ்ஞானக் கழகத்தின் கல்விக் கூடங்கள் அமைக்கப் பெற்றது. முன்னனித் தொழிலாளர்களை தத்துவத்திலும், சமூக விஞ்ஞானத்திலும் பயிற்று வித்த சிவப்புப் பேராசிரி யர்களின் கல்விக் கூடமும் இந்த சமயத்தில் முகிழ்த்தது. 1922-ம் ஆண்டிலிருந்து வெளி வந்த மார்க்சியத் தத்து

வார்த்தச் சஞ்சிகையான ''**மார்க்சியப் பதாகையின் கீழ்**'' தத்துவம், வரலாறு மற்றும் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி கட்டுரைகளைத் தாங்கி வந்தது. சோஷலிஸ்ட் கலைக் கழகமும் வெஸ்ட்னிக் சோட்ஸியா லிஸ்டிச்ஸ்கோய் (1924லிருந்து-கொம்யூனிஸ்ட்ஸ்டிச்கோய்) அகாடமி (சோஷலிஸ்ட் (1924 லிருந்து கம்யூனிஸ்ட்) கலைக் கழகச் செய்திகள்) என்ற பத்திரிகையைக் கொண்டு வந்தது. இது 1920களின் தத்துவார்த்த விவாதங்களில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தது.

தத்துவார்த்தப் பிரச்சினைகளைத் தேர்ந்து தெளிய, இந்தக் கட்டத்தில் சமூக விஞ்ஞானக் கலை இயற்கழகம் (ஒரு விசேட தத்துவார்த்தப் பகுதியுடன்) தலையாய பாத்திரத்தை வகித்தது. இது மாஸ்கோ பல்கலைக் கழக மானுடவியல் துறையின், தத்துவார்த்தத் துறையினால் க்ரூப்ஸ்கயா கம்யூனிஸ்ட் கல்விக் கழகத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. பீட்ரோகிராட், சாரடோவ், காஸான், மற்றும் ஏராளமான நகரங்களின் பல்கலைக் கழகங்களின் இது போன்ற துறைகளிலும் இந்தப் பணி நடந்தேறியது.

1917 முதல் 1924-ம் ஆண்டு வரை இவையனைத்தும், தத்துவத்தில் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கான பாடத் திட்டத்தையும் பயிற்சித் திட்டத்தையும் தயாரிப் பதில் ஈடுபட்டிருந்தன. இதற்கு, ''வாலிபர் கழகங்களின் கடமை'' பற்றி இளைஞர் கம்யூனிஸ்ட் கழகத்தின் மூன்றாவது காங்கிரஸில் லெனின் ஆற்றிய உரை, பொதுக் கல்வி பற்றி பல மாநாடுகளிலும் கூட்டங்களிலும் அவர் சமர்ப்பித்த அறிக் கைகள், ''பாட்டாளி வர்க்கக் கலாசாரம் பற்றிய அவரது குறிப்பு அதே போல்'' தொழிற்சங்கங்களில் மீண்டும் ஒரு முறை தற்போதைய நிலைமை மற்றும் ட்ராட்ஸ்கி, புகாரினின் தவறுகள் பற்றி''; ''தீவிரப் பொருள் முதல் வாதத்தின் முக்கியத்துவம் பற்றி''; ''ஒரு நாட் குறிப்பின் பக்கங்களிலிருந்து''; ''நமது புரட்சி'' போன்ற கட்டுரை

களிலும், உரைகளிலும் வகுத்தளித்த கருத்துக்களை அவை அடிப்படையாகக் கொண்டன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தினதும் பொதுவான நோக்கம், புதிய சமுதாய அமைப்பின் சித்தாந்தமான மார்க்சிய சித்தாந்தத்துக்கான போராட்டமாகவேயிருந்தது. வெற்றிகரமான அக்டோபர் புரட்சியின் போது ருஷ்ய நாட்டின் தத்துவார்த்தச் சிந்தனை பல வண்ணங்களைக் கொண்ட ஒரு சித்திரத்தையே வழங்கியது. பல்கலைக் கழகங்களின் தத்துவார்த்தத் துறைகள், உள்ளுணர்வு வாதம், மேக்கிஸம், நியோ-கான்டியனிஸம் போன்ற அனைத்து வகையான கருத்து முதல் வாதப் போக்குகளைப் பின்பற்றுகிறவர்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன. அன்றிருந்த அனைத்துத் தத்துவார்த்தக் கழகங்களும், பத்திரிகைகளும் கருத்து முதல் இயல்பானவைகளையே பிரகடனப்படுத்தின. கட்சியோ அதன் பங்குக்கு இன்னும் விஞ்ஞானத்திலும் கல்வியிலும் போதுமான அளவு சக்தியாக நன்கு பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர்களை ஒன்று திரட்டி ஸ்தாபனப்படுத்தவில்லை. ஏனென்றால் நன்கு படித்த கட்சி உறுப்பினர்கள் உள்நாட்டுப் போரில் களத்திலிருந்து போராடிக் கொண்டிருந்தனர். சீரழிந்து சின்னாபின்னப்பட்டுப் போன பொருளாதாரத்தைப் புனர் சீரமைப்பதிலும், கட்சி மற்றும் அரசுப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

எனவேதான் சோவியத் அதிகாரம் அமைக்கப் பெற்ற முதல் சில ஆண்டுகளில் கருத்து முதல்வாதச் சித்தாந்த கர்த்தாக்கள் நாட்டின் சித்தாந்த வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் நிலைபாடுகளை எடுத்துக் கொள்வதற்காக எண்ணற்ற முயற்சிகளை மேற் கொண்டனர். உதாரணமாக பீட்ரோகிராடில் என். லாஸ்கி, எல். கார்ஸாவின் தலைமையில் இயங்கிய பீட்ரோகிராட் தத்துவார்த்தக் கழகமும்; மற்றொரு கருத்து முதல் வாதக் கழகமான, சுதந்திரத் தத்துவார்த்தக் கழகமும் சுறுசுறுப்புடன் இயங்கின. சுதந்திரத் தத்துவார்த்தக் கழகம் 1918-ம் ஆண்டு ஏ. பெலியைத் தலை

வராகக் கொண்டு அமைக்கப்பட்டது. மாஸ்கோவில் என்.பெர்டியீவ் சுதந்திரமத-தத்துவக்கலை இயற்கழகத்தைத் தோற்றுவித்தார். எல்.லோபாடினைத் தலைவராகக் கொண் டியங்கிய ஒரு கருத்து முதல் வாத உளவியல் கழகம் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. சோவியத் ருஷ்யாவின் இதர பல்கலை நகரங்களான ரோஸ்டோவ்-ஆன்-டான், யாரோஸ்லாவ்ல், காஸான் போன்றவற்றிலும் இது போன்ற அமைப்புக்கள் சுறு சுறுப்பாகச் செயல்பட்டன. கருத்து முதல் வாதச் சித்தாந்த கர்த்தாக்கள் பத்திரிகைகளிலும் கூடத் தங்கள் செல்வாக்கைக் கொண்டு செலுத்த முயன்றனர். பீட்ரோகிராடில் 1920களின் துவக்கத்தில் ஒரு கருத்து முதல்வாதத் தத்துவார்த்தச் சஞ்சிகையான 'சிந்தனை' மீண்டும் வெளிவரத் துவங்கியது. மாஸ்கோவில் ஒரு தத்துவார்த்த வருடாந்திரப் புத்தகமான 'சிந்தனையும் சொல்லும்' தோன்றியது. எண்ணற்ற தனியார் பிரசுராலயங்கள் முகிழ்த்தன. அவை பொருள் முதல்வாத சித்தாந்த கர்த்தாக்களான ஸ்மெனா வெக்.[30] கூட்டத்தாரின் ஏராளமான புத்தகங்களைக் கொண்டு வந்தன.

இதற்கிடையே புரட்சியினால் தோற்கடிக்கப்பட்ட மென்ஷ்விக்குகள் மற்றும் சோஷலிஸ்ட் புரட்சியாளர்களின் கருத்துக்களைப் பரப்பும் ஏராளமான குட்டி முதலாளித்துவத் தத்துவ ஞானிகளும் தங்களது சித்தாந்த நடவடிக்கைகளை முடுக்கினர். உதாரணமாக 1908-ல் தனது **பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்''** என்ற நூலில் அவரது எண்ண முதல் வாதக் கருத்தமைவுக்காக லெனினால் அம்பலப்படுத்தப்பட்ட ஏ. போக்டனோவ் இப்பொழுது தனது 'கட்டமைவு இயல்' அல்லது 'பொதுவாக ஸ்தாபனம் தொடர்பான விஞ்ஞானம்' என்ற ஆய்வியலுடன் வெளியே வந்தார். அதில் அவர் பாட்டாளி வர்க்கக் கலாசாரம் பற்றிய தனது சொந்தக் கருத்தமைவை, கடந்த காலத்தின் கலாசார மதிப்புக்களின் முக்கியத்துவத்தை தொழிலாளர்வர்க்கத்துக்கு மறுத்து வெளியிட்டிருந்தார். போக்டனோவ் பிராலிட்கல்ட்

என்ற அமைப்பைத் தலைமை தாங்கி நடத்தினார். அது பரந்த அளவில் கிளைகளையும், கலை அரங்குகளையும், ஸ்டூடியோக்களையும் கல்வி நிறுவனங்களையும் கொண்ட பெரிய ஸ்தாபனமாகும். அது இளம் தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பதில் சித்தாந்தத் தலைமை உரிமை கொண்டாடியது. மென்ஷ்விக், சோஷலிஸ்ட் புரட்சி, மற்றும் அராஜகவாத சித்தாந்தக் கர்த்தாக்களும் சோவியத் சமுதாயச் சிந்தனையின் தலைவர்கள் நாங்கள்தான் என மார்தட்டிக் கொண்டனர்.

இந்தப் பின்னணியை எதிர்த்துத்தான் லெனினால் வழி நடத்திச் செல்லப்பட்ட கட்சி நாட்டின் கலை இயல் கல்விக் கூடங்களிலும், சமூக விஞ்ஞான ஆராய்ச்சியிலும் மார்க்சியக் கல்வியின் ஒரு ஒருமித்த அமைப்பை உருவாக்க சுறுசுறுப்புடன் பணியாற்றியது. கருத்து முதல்வாத மற்றும் குட்டி முதலாளித்துவச் சித்தாந்த கர்த்தாக்கள் மயிர்பிளக்கும் விவாதங்களில் கடுமையான விமர்சனத்துக்குட்பட்டனர். பல்கலைக் கழகத் துறைகளை அலங்கரித்தவர்களும், கல்வித் துறையில் பணியாற்றியவர்களும் அகற்றப்பட்டு அவர்களது இடத்தில் மார்க்சியவாதிகளும் போல்ஷ்விக்குகளும் பொறுப்பேற்றனர்.

1917 முதல் 1924-ம் ஆண்டு வரையுள்ள காலத்தைத் தொகுத்துப் பார்த்தால் (அதாவது உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதாரப் புனரமைப்புக் காலம்) லெனினால் வழி நடத்திச் செல்லப்பட்ட போல்ஷ்விக்குகள், சமூக விஞ்ஞானங்களில் உறுதியான அஸ்திவாரத்துடன் கட்சி ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு ஒருமித்த மார்க்சியக் கல்வி அமைப்பை நிறுவியதுடன் மார்க்சியத்தத்துவத்தில் அடிப்படையான ஆராய்ச்சியை மேற் கொண்டதும் புலனாகும். இந்தக் கால கட்டத்தில் முதலாவது தத்துவப் பாடப் புத்தகங்கள் தொகுக்கப்பட்டன. இயக்கவியல் பொருள் முதல்வாதத் தத்துவத்தின் பொதுவான உள்ளடக்கம் ஒரு விஞ்ஞானம் எனப் புலப்படுத்தப்பட்டது. புதிய சமு

தாயத்தின் செல்வாக்கு மிக்க தலையாயச் சித்தாந்தம் மார்க்சியமே என்ற போராட்டத்தில் லெனினைத் தலைவராகக் கொண்ட கட்சி, மார்க்சியமல்லாத சித்தாந்தப் போக்குகளை ஆதரித்தவர்களை எதிர்த்து தீர்மானமான தொரு வெற்றியை ஈட்டியது.

## 2. சமுதாயத்தின் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்புப் பற்றி லெனின்

சமூக நிர்வகிப்பின் தத்துவார்த்த, ஆய்வியல் பிரச்சினைகளின் பகுப்பாய்வுக்கு லெனின் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளார். அக்டோபர் புரட்சிக்கு முன்னர் ஒரு புதிய வகையிலான கட்சியின் கோட்பாட்டை வகுப்பதில் அவர் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது "தொடர்ச்சியைக் கொண்டு செலுத்தும் தலைவர்களின் ஒரு நிலையான ஸ்தாபனம் இல்லாமல் எந்தப் புரட்சி இயக்கமும் நடைபோட முடியாது"[31] என லெனின் சுட்டிக்காட்டினார். இத்தகைய ஒரு ஸ்தாபனத்தை நிறுவ ஒரு ஆழ்ந்த கற்றறிதலுடன் கூடிய விஞ்ஞான அணுகும் முறையும், மனிதகுலம் சேமித்து வைத்துள்ள அனைத்து அறிவாற்றல்களையும் பயன்படுத்துவதும் இன்றியமையாததாகும். கம்யூனிஸம் 'தன்னகத்தே கொண்டிருப்பது யாது? அனைத்துக் கம்யூனிஸப் பிரசாரமும் அரசாங்கத்தின் வளர்ச்சிக்கு நடைமுறை வழிகாட்டியாயிருக்கும் மாதிரி நடத்தப்படவேண்டும்".[32] மேலாண்மை நிர்வகிப்பும், நடைமுறை ஆட்சியும் ஒரு விஞ்ஞானமாகும்; "அது ஒரு திறமை பற்றிய பிரச்சினை; அனுபவம் பற்றிய ஒரு பிரச்சினை"[33] போதிய தகுதியும், ஆழ்ந்த ஞானமும், மேலாண்மை நிர்வகிப்பை தேர்ந்து தெளிவதும் இன்றி நடைமுறை ஆட்சி செலுத்த முடியாதென்றார் லெனின். கம்யூனிஸ்டுகள், படிக்கவேண்டும் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும் என உயர்ந்த உழைப்பு ஸ்தாபனங்களின் கல்விக் கூடங்களில் லெனின் முடிவுரையாகக் கூறினார்."[34]

லெனினது முன் முயற்சியால் சமூக மேலாண்மை நிர்வகிப்பின் பிரச்சினைகளைக் கற்றறிய விசேட விஞ்ஞானக் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டன. இவை எண்ணற்ற ஆராய்ச்சிப் பணிபுரிவோரின் முக்கிய ஆய்வுமையங்களாகின. இவை சோவியத் அரசு மற்றும் கட்சி ஆவணங்களிலும், அதே போல் லெனினது தலைசிறந்த சகாக்கள் மற்றும் சீடர்களின் படைப்புக்களிலும், சொற்பொழிவுகளிலும் பிரதிபலிக்கப் பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

சமூக மேலாண்மை நிர்வகிப்பு பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள், சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் கம்யூனிஸ நிர்மாணத்தின் போதும் சோஷலிச சமுதாயம் முழுவதிலும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தை வழிநடத்த ஒரு அமைப்பை உருவாக்கி அதை மேலும் வளர்க்கும் போதும் நடைமுறைக்கு வந்தன.

எனினும் இத்தகைய ஒரு அமைப்பு மலர சோஷலிசத்தின் வெற்றியே போதுமானது என எண்ணுவதில் நியாயம் கிடையாது. இதர எந்த சமூகப் பரிமாணத்தையும் போன்று இதுவும் ஒரு வரலாற்று நிகழ்வே. ஒரு வெற்றிகரமான சோஷலிஸ்ட் புரட்சி, சமூக மேலாண்மை நிர்வகிப்பை நிறுவுவதற்கான விஞ்ஞான அமைப்பின் நிலைமைகளை மட்டுமே உருவாக்குகிறது. முதலாளித்துவத்திற்கும், சோஷலிசத்திற்குமிடையே மாற்றம் நிகழும் காலகட்டத்தில் சோஷலிஸ்ட் நடைமுறை ஆட்சி பல பிரத்தியேக தோற்றங் களை அடைகிறது. அவை இவ்வாட்சியை விஞ்ஞானத்திற்கு மிக நெருக்கமாகக் கொண்டுவந்து அதன் அண்மைக்கால முன்னேற்றங்களை சாதகப்படுத்தும் சாத்தியத்தை ஏற் படுத்துகின்றன. இவைதான் மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்தின் முதலாவது அடிப்படைக் கருத்துக்களாகும். இந்தக் கருத்துக்கள் சோஷலிஸ்ட் அரசாங்கத்தின் தன்மை யையும் சமூக மேலாண்மை நிர்வகிப்பின் முழுமையான பரிமாணத்தையும் கோடிட்டுக் காட்டுகின்றன. இரண்டாவ

தாக நடைமுறை மேலாண்மை நிர்வகிப்புக்கும் அடிப்படை மற்றும் பயன்படு விஞ்ஞானங்களுக்குமிடையேயான பிணைப் புக்கள், சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு அஸ்திவாரத்தை வழங்கி வலுவாக வளர்கின்றன. மூன்றாவ தாக ஒரு புதிய சமுதாயத்தை நிறுவுவதற்கான நடைமுறை அனுபவத்தை வகுத்தளிக்க பல சமூகவியல் கணக்கெடுப் புக்கள் நடத்தப்பட்டன. சித்தாந்தத்தை, அரசாங்கம் நடை முறை ஆட்சியைக் கொண்டு செலுத்துவதற்குப் பயன்படுத்த இது இல்லாமல் தீராத ஒன்றாகும். இருந்தபோதிலும் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பு, இந்தக் கட்டத்தில் ஒரு ஸ்தாபிக்கப்பட்ட உண்மையெனக் கருதப்பட முடியாது. ஏனென்றால் மகத்தான வெற்றிகளோடு, அகவயப்பட்ட தன்மூப்பு இயல்பின் எண்ணற்ற தோல்வி களும் தவறுகளும் இன்னும் கூட சாட்சிகளாக நிற்கின்றன.

சோஷலிசத்தைச் சமைத்து, வளர்ச்சி பெறச் செய்யும் பரிணாமத்தில் மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்தைப் பயன் படுத்துவதும் இந்த நடைமுறை நடவடிக்கைகளின் அனுபவத் திலிருந்து காணக்கிடைத்த முடிவுகளும் விஞ்ஞானரீதியான மேலாண்மை நிர்வகிப்பு அமைப்பு என வருணிக்கப்படும் அவ்வமைப்புக்குக் கொண்டு சென்றன. எனினும் இந்தப் பரிணாமத்தை முழு நிறைவானதாகக் கருதமுடியாது. ஏன் எனில் சமுதாயம் தொடர்ந்து கம்யூனிஸப் பாதையில் முன்னேறிச் செல்கிறது. அதேபோல் நடைமுறை ஆட்சி அனுபவத்தின் சேமிப்பும், அதன் பொதுமைப் படுத்தப் படலும், புதிய நிகழ்வுகளின் கொண்டுவரப்படலும் இந்தப் பரிமாணங்களின் நோக்குகளும் குணாம்சங்களுமாகும். இவ் வாறாக விஞ்ஞானரீதியான மேலாண்மை நிர்வகிப்பின் வளர்ச்சி ஒரு தொடர்ச்சியான பரிணாமம் ஆகும்.

1917-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அதாவது அக்டோபர் புரட்சியின் போது லெனின் அவரது புகழ்மிக்க ''மார்க்சியமும் மக்களின் எழுச்சியும்'' என்ற நூலை எழுதி னார். அதில் அவர் எதிர்வரும் ஆயுதம் தாங்கிய எழுச்சிக்

கிளர்ச்சியில் போல்ஷ்விக் கட்சி எதிர்நோக்கும் முக்கிய கடமைகளை வகுத்தளித்தார். அவர் எழுதியதாவது: மக்களின் எழுச்சியை ஒரு மார்க்சிய வழியில் நோக்குவதற்காக அதாவது அதை ஒரு கலையாகப் பார்க்க.........நாம் கணநேரத்தைக்கூட இழந்து விடாமல் கிளர்ச்சியாளர்களின் படை வரிசைக்கு ஒரு **தலைமை நிலையத்தை** அமைத்து நமது சக்திகளைப் பங்கிட்டு பிரித்து, நம்பற்குரிய வீரர்களின் படை வரிசைகளை மிக முக்கியமான மையங்களுக்கு அனுப்ப வேண்டும்......அரசாங்க மற்றும் பொதுத்துறை அதிகாரி களைக் கைது செய்யவேண்டும்......(அந்தப்படை வரிசை நகரத்தின் இலக்கு மையங்களுக்கு விரோதிகள் அணுகுவதை அனுமதிப்பதைவிட மரணத்தைத் துச்சமெனமதிக்கும்). நாம் ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களை அணிதிரட்ட வேண்டும்......உடனடியாக தந்தி மற்றும் தொலைபேசி நிலையங்களை ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும்......".[35] உள்ளபடியே லெனின் இங்கு மக்களின் எழுச்சி என்பது, ஒரு எழுச்சிக்கான தலைமையை நிறுவுவதற்கான ஒரு கலை; சரியாகக் கணித்து, படைவரிசையினரைப் பிரித்து அனுப்புவது, மிக முக்கியமான ஸ்தாபனங்களின் மீது கட்டுப்பாட்டுரிமையை நிறுவுதல், எதிரிகளின் படையைக் கண் காணித்தல், தகவல் தொடர்புகளையும், மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்துதல் போன்றவையே என்கிறார். அவரது முடிவுகள்,புரட்சியின் முந்தையக் கட்டங்களில் இது போன்ற கடமைகளை நிறைவேற்றியதின் அனுபவத்தின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டவையாகும். "இது அப்படித்தான்"லெனினது இந்த வார்த்தைகள் வழிகாட்டும் கருத்தை மக்களின் எழுச்சி என்பது ஒரு கலை என்பதை வெளிப்படுத்துகின்றன. ஆக இது, சமூக மேலாண்மை நிர்வகிப்பு ஒரு கலை என்பதால் இது போன்ற நடவடிக்கைகளில் தலைவர்கள் கடந்த காலத்தின் அனுபவங்களைத் தொகுத்துப் பயன்படுத்தும் திறமையையும், வல்லமையையும் கொண்டிருக்க வேண்டும் என்ற பரந்த முடிவுக்கு நம்மைக் கொண்டு செல்கிறது.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கலையின் பொருளும் விஞ்ஞான அணுகும் முறையின் பொருளும் ஒன்றாகாது. ஏனென்றால் விஞ்ஞானம் கடந்த கால அனுபவத்தைத் தொகுத்துத் தருவதில்லை. அப்படி அழைக்கப்படும் முன் மாதிரிகள் சோஷலிஸ்ட் அமைப்புகளுக்கு முந்தின அமைப்புக்களில் சமூக நடைமுறை ஆட்சிகளினால் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக பிரிட்டிஷ் சட்டம் முழுக்க முழுக்க முன் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது தீர்ப்புக்களனைத்தும் முன்னர் இது போன்ற வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களைப் போன்றே வழங்கப்பட்டன. மேலும் அதிகார அமைப்பு குறிப்பிட்ட பிரத்தியேகச் சூழல்களிலிருந்து இத்தகைய தீர்ப்புக்களின் கீழ் வேறு எதுவும் முன்னர் வழங்கப்படாதிருந்தால் வழக்கமான முறையில் தீர்ப்பை மெய்ம்மைப்படுத்துகின்றன. இங்கு பழைய நிகழ்விலிருந்து எடுக்கப்படும் அப்பட்டமான உண்மை இடரார்ந்தாயுள்ளது. எனவே விஞ்ஞான ரீதியான அணுகும் முறைக்கும் இதற்கும் ஒட்டுமில்லை உறவுமில்லை. வேறொன்றுமில்லாமல் பழைய அனுபவத்தின் சுலபமானதொரு அறிக்கை காட்டுவது யாதெனில் சமூக வளர்ச்சியை ஆளுமை கொள்ளும் திட்டவட்டமான சட்டங்கள் என்ற கருத்து நிலையிலிருந்து கடந்த கால அனுபவத்தைக் கணிப்பது முக்கியமான ஒன்றாகும் என்பதே சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு விஞ்ஞான அணுகும் முறையை வலியுறுத்தும் ஒரே கட்டளைவிதி, தரப்பட்டுள்ள பரிணாமம் இந்தச் சட்டங்களை ஒத்துப் போகிறதா அல்லது அவற்றிலிருந்து முரண்படுகிறதா என்பதே.

சமூக மேலாண்மை நிர்வகிப்புப் பரிணாமத்தின் முதல் அடிப்படை மூலக்கூறு அதன் காரண காரியத்தைத் தீர்மானிப்பதே. காரண காரியம் என்பதற்கு மார்க்ஸ் ஒரு குறிக்கோள் நிலையான மனிதனது நடவடிக்கைகளின்[36] உள் உந்துதல் எனப் பொருள் கொள்கிறார். காரண

காரியம் என்பது உலகத்தை ஆளுமை கொள்ளும் திட்ட வட்டமான சட்டங்களின் ஒளியில் மனிதனது தேவைகளை விளக்கும் ஒரு சூத்திரம் என்று லெனின் கருதினார். "வெளி உலகின் சட்டங்கள், இயற்கையின் சட்டங்கள்...... எல்லாம் மனிதனது காரண காரிய நடவடிக்கைகன்ளி தளங்களாகும்."[37] அவர் எழுதுகிறார். "மனிதனது முடிவுகள் திட்டவட்டமான உலகினால் உருவாக்கப்படுகிறது. அதை முன் கூட்டியே எண்ணப்படுகிறது....ஆனால் மனிதனுக்கு தனது முடிவுகள் உலகத்துக்கு வெளியேயிருந்து, உலகத்திலிருந்து சுயேச்சையாக (விடுதலை) எடுத்துக் கொள்ளப்படுவதாகத் தோன்றுகிறது." [38] எனவே காரண காரியம் பற்றிய மார்க்சிய—லெனினியக் கருத்தமைவின் பொருள் ஒரு நபரினால், அல்லது மக்களின் ஒரு சமுதாயத் தினரால் ஒரு துல்லியமான வழியில் தங்களது சொந்த தேவைகள், நலன்கள் குறிப்பிட்ட நேரத்தில் காணக் கிடைக்கும் அறிவாற்றல் ஆகியவற்றிற்கேற்ப, உலகத்தை மாற்ற வேண்டிய அவசியத்தை புரிந்து கொள்ள வேண்டு மென்பதே.

மாக்சியத்தத்துவம். பொருளாதாரச் சித்தாந்தம் மற்றும் விஞ்ஞானக் கம்யூனிஸம் ஒட்டு மொத்தமாக மானுட நடவடிக்கைகளைப் பொதுவாகவும், சமூக மேலாண்மை நிர்வகிப்பைக் குறிப்பாகவும் தீர்மானிக்கின்றன. இதன் விளைவாக மார்க்சிய ஆய்வியல், நடைமுறை ஆட்சியின் காரண காரியங்களைத் தீர்மானிப்பதற்கு ஒரு சித்தாந்த ஆய்வியல் அடிப்படையாகத் திகழ்கிறது. இது சோஷலிசத்தின் கீழ் மட்டுமே, மார்க்சிய ஆய்வியல் இருக்கும் போது சாத்தியமாகிறது.

ஒரு காரியத்தின் நிறைவேற்றம் அதைக் கொண்டு வருவதற்கான சாதனத்தின் இயங்கும் தன்மையை முன்னரே கண்டு விடுகிறது. மார்க்சியத்திற்கு முந்திய கோட்பாடு" முடிவே வழி வகைகளை நியாயப்படுத்துகிறது"[39] என்பதைக் கொண்டிருந்தது. சர்வ நாசத்தை விளைவிக்கும் போர்கள்,

சுரண்டும் கூட்டத்தினர் தங்களது சொந்த சுயநல நோக்கங் களைப் பூர்த்தி செய்வதற்காகக் கட்டவிழ்த்து விட்ட வன்முறை, போன்றவை சோஷலிசத்திற்கு முந்திய நடை முறை ஆட்சி வகைகளில் இந்தக் கோட்பாட்டைப் பற்றிய ஸ்தூலமான வெளிப்பாடுகளாகும். இந்தச் சமயத்தில் மிகவும் பிற்போக்கான தன்மையில் மனிதாபிமானம் என்பது துளிகூட இல்லாமல் பாசிஸம் தலைவிரித்தாடியது.

இலட்சிய ஈடேற்றத்தின் சுதந்திரத்திலும், வழி வகை களிலும் மார்க்சியம் பிணைக்கப்பட்டிருந்தது. சுதந்திரத்தை வரையறுத்த எங்கெல்ஸ் அது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு அவசியம் என்றார் அதாவது ''குறிப்பிட்ட பொருளைப் பற்றிய விஷயஞானத்துடன் முடிவுகள் எடுக்கும் திறமை''[40] பொருளைப் பற்றிய விஷய ஞானம், வகுத்துக் கொண்ட இலட்சியத்தின் ஈடேற்றத்துக்கான வழி வகைகளைத் தேடுவதை முன்னதாகவே ஊகித்துக் கொள்கிறது. திட்ட வட்டமான வரலாற்றுச் சட்டங்களுடன் அது ஒத்திசைந்து செல்கிறது. ஹெகல் இதைக் கீழ்க்கண்டவாறு குறிப் பிட்டார். ''வழிவகைகள் என்பது மக்கள் தங்கள் நடவடிக் கைகளுக்குப் பயன் படுத்தும் உபகரணங்களே. அதைக் கொண்டு அவர்கள் வெளிப்புற இயற்கையின் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்துகிறார்கள். எனவே தங்கள் இலட்சியங்களைப் பின் பற்றும் போது மக்கள் வெளி உலகத்தை (அதன் சட்டங்களை) சார்ந்திருக்கிறார்கள். ஆனால் இந்த இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கான சாதனங்களையும் வழிகளையும் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் தங்களுக்கு மிகவும் சௌகரியமானவற்றை வெளிப்புறச் சட்டங்களுக்கு மட்டுமல்லாது தங்களது சொந்தத் தேவைகளுக்கும் ஒத்திசைவாகச் செல்கின்ற வற்றையே தேடுகிறார்கள்.

ஒரு சோஷலிச சமுதாயத்தில் வகுத்துக் கொண்ட இலட்சியங்களின் ஈடேற்றத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படும்

வழிவகைகள் இரண்டாம் பட்சமானதுமல்ல, ஒருதலைப்பட்ச மானதுமல்ல—அவை சோஷலிச வளர்ச்சியை ஆளுமை கொள்ளும் திட்டவட்டமான சட்டங்களால் தீர்மானிக்கப் படுகின்றன.

அல்லது வேறுவிதமாகக் கூறுவதென்றால்: இலட்சிய ஈடேற்றத்துக்கான வழிவகைகள், சோஷலிச வளர்ச்சியின் சட்டங்களுக்கும், மக்கள் தொகையின் பெரும்பாலோரானது தேவைகளுக்கும் முரண்பட்டிருக்குமானால், அவை எவ்வளவு உரத்த குரலில் பிரகடனம் செய்யப்பட்டாலும்கூட வடிவ மற்ற கருத்துக்களாகத்தான் திகழும்.

இலட்சிய ஈடேற்றத்துக்கான வழி வகைகளைத் தீர்மா னிக்கும் போது மார்க்சிய—லெனினியச் சித்தாந்தம் சமூக வளர்ச்சியின் அடிப்படையான சட்டங்களிலிருந்து முன் செல் கிறது. அவற்றுள் ஒன்று சமூக வளர்ச்சியில் வெகுஜனங்களின் தீர்மானமான பாத்திரத்தை அங்கீகரிப்பதாகும் என்பதை லெனின் காட்டினார். ஆக, மார்க்சியமும், லெனினியமும் இலட்சிய ஈடேற்றத்துக்கான வழிவகைகளைத் தேர்ந்தெடுப் பதை, அவர்களது சமூக உற்சாகம், முன்முயற்சி, படைப் பாற்றல் உத்வேகம் போன்றவற்றை உயர்த்தி மக்களது நடவடிக்கைகளோடு உறுதியாகத் தொடர்புபடுத்துகின்றன என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதன் பொருள் அவர்களது முக்கிய நோக்கத்தை நிறைவேற்ற—கம்யூனிஸத் தைக் கட்ட—அதேபோல் முக்கிய நோக்கத்திற்குட்பட்ட மிகவும் வரையறை செய்யப் பட்ட இதர கடமைகளனைத் தையும் நிறைவேற்ற கம்யூனிஸ்டுகள் மிகவும் மனிதத்தன்மை யுள்ள, சோஷலிசத்தின் அடிப்படைப்பொருளாதாரச் சட்டம் தீர்மானிக்கிற வழிமுறைகளைக் காணவேண்டும்—உழைக்கும் மக்களது லோகாயுத, கலாசாரத் தேவைகளை பரிபூரண மனநிறைவளிக்கும் வகையில் பூர்த்தி செய்ய வேண்டும்.

20-ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து முதலாளித்துவ சமூக விஞ்ஞானம், உழைப்பு விஞ்ஞான ஸ்தாபனத்தில்

ஏராளமான கருத்தமைவுகளை உருவாக்கியுள்ளது. உதாரண மாக டேலர் அமைப்பு. மற்றும் மேலாண்மை நிர்வகிப்பு விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள், உற்பத்தியை ஸ்தாபனப் படுத்துவதில் நம்பிக்கையான வடிவங்களைத் தீர்மானிக்கும் வேறுபட்ட சித்தாந்தங்கள் பற்றிய பல்வேறு கருத்தமைவுகள் ஆனால் இவற்றில் ஒன்றுகூட சமூக வளர்ச்சியின் பொதுக் கருத்தமைவோடு தொடர்பு கொண்டிருக்கவில்லை. அவை பெரும்பாலும் ஒரு தனித் தொழிற்சாலை, நிறுவனம் அல்லது கழகத்தின் கட்டமைப்புக்குள்ளாகவே உற்பத்தி ஸ்தாபனப் பிரச்சினைகளை மட்டுமே ஆராய்ந்தன. மார்க்சிஸ்டுகளும், லெனினிஸ்டுகளும் முதல் தடவையாக மனித சிந்தனையின் வரலாற்றில் உழைப்பு ஸ்தாபனத் துக்கும் சமூக வளர்ச்சியின் திட்டவட்டமான சட்டங்களுக்கு மிடையே ஒரு உறுதியான தொடர்பை ஸ்தாபித்தார்கள். எனவே மனித நடவடிக்கையின் சட்டங்கள் மற்றும் கோட் பாடு சம்பந்தமாக மார்க்ஸும், லெனினும் வகுத்தளித்த கருத்துக்கள் சமூக வளர்ச்சியின் பொதுச் சட்டங்களினது திண்ணிய வெளிப்பாடாகும்.

சோஷலிச சமுதாயத்தை விஞ்ஞான ரீதியில் மேலாண்மை நிர்வகிப்புச் செய்ய, மனித நடவடிக்கைகளை ஸ்தாபனப்படுத்தும் போது உழைக்கும் மக்களை நெருங்கிக் கொண்டுவந்து ஓரணியில் திரட்டி அவர்களது படைப் பாற்றல் திறனை விரிவுபுடுத்தி சித்தாந்த விஷயஞானத் தைக் கணக்கில் கொண்டு பயன்படுத்துவது மிகவும் முக்கிய மானதாகும் என லெனின் வலியுறுத்தினார்.

சமூக மேலாண்மை நிர்வகிப்பு பற்றிய அவரது கருத் துக்கள் சமுதாயத்தில் நிலவும் பொருளாதார சமூக அரசியல் சித்தாந்தப் பரிமாணங்களின் ஒற்றுமையைக் கணக்கிலெடுத் துக்கொண்டு பயன்படுத்துவது, பொருளாதாரச் சட்டங் களின் பிரதான தீர்மானிக்கும் பாத்திரத்தை சமூகப் பரிமாணத்தின் முதுகெலும்பு என அங்கீகரிப்பது ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒருவளர்ச்சி

பெற்ற சோஷலிச சமுதாய அமைப்பில், இந்தக் கருத்துக் களின் கோணங்களில் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பைப் பார்த்தால் அது ஒரு வகையான சமூக உறவு களாகவிருக்கிறது. அது பொருளாதார சமூக அரசியல் மற்றும் சித்தாந்த நோக்குகளையும், விஷயஞானத்தின் ஒற்றுமை, கணிப்புக்கள், மற்றும் புதிய சமுதாயத்தின் சமூக மேலாண்மை நிர்வகிப்பில் அமர்த்தப்படும் ஒவ்வொரு திண்ணிய நடவடிக்கையிலும் புலப்படுத்தப்படும் நடவடிக் கைகளையும் தன்னகத்தே இணைத்துக் கொள்கிறது.

''பொருளாதார எந்திர நுட்பத்தை மேலும் அபிவிருத்தி செய்வது மற்றும் கட்சியும் அரசாங்க அமைப்புக்களும் எதிர் நோக்குகிற கடமைகள் பற்றியுமான'' சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் தீர்மானமும் அதேபோல் ''திட்ட வழிமுறைகளை அபிவிருத்தி செய்வது மற்றும் உற்பத்தித்திறமை, தொழில்தரம் பற்றிய பொருளாதார எந்திர நுட்பத்தின் விரிவாக்கத்தினது தாக்கம்'' பற்றிசோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியும் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றிய அமைச்சர்கள் குழுவும் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் நிறைவேற்றிய தீர்மானமும் ஒரு வளர்ச்சி பெற்ற சோஷலிச சமுதாய அமைப்பில் பொருளாதார, சமூக மற்றும் சித்தாந்த மேலாண்மை நிர்வகிப்பின் ஒற்றுமைக்கு விசேட வலி யுறுத்தலை வழங்கின. அத்துடன் சமூக மேலாண்மை நிர்வகிப்பில் சித்தாந்தத்துக்கும் நடைமுறைக்கு மிடையே உள்ள பிரிக்கமுடியாத இணைப்பு வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் மிக முக்கியமான அம்சம் என்பதையும் நிருபித்தன.

சமூகக் கட்டம் அல்லது வளர்ச்சியின் அளவு எவ்வா றிருந்தாலும் சமூக மேலாண்மை நிர்வகிப்பு இரண்டு தெளிவான நோக்குகளைக் கொண்டிருக்கிறது. புறவயப் பட்டது—மனித உள்ளுணர்வுகளுக்கு வெளியே சுதந்திரமாக இயங்குவது. அகவயப்பட்டது—மனித உள்ளுணர்வுகளோடு

தொடர்பு கொண்டியங்குவது. அறிவாற்றல், மதிப்பீடு, உணர்ச்சிக் கொந்தளிப்பு மற்றும் உள்ள உறுதிப்பாடு ஆகிய துறைகளில் அதன் நடவடிக்கைகளிருக்கும்.

சமுதாயம், அதன் அனைத்து ஒன்றிப்பிலும் வேறுபாட்டிலும், தொடர்ச்சியான வளர்ச்சி நிலவரத்தில் ''ஜீவனுள்ள உறுப்பாக விளங்குவது,[41] மேலாண்மை நிர்வகிப்பின் ஒரு நோக்கமாகும்'' என்றார் லெனின் சோஷலிசத்திற்கு முந்திய அமைப்புகளைப் பரிசோதனை செய்து உழைக்கும் மனிதகுலம் ''இதுகாறும் வரலாற்றின் வேலிக்கு வெளியே நின்று கொண்டிருந்தது வரலாற்றின் ஒரு பொருளாக மட்டுமே கருதப்பட்டது'' என்று லெனின் குறிப்பிட்டார். ஆனால், ''குட்டி முதலாளித்துவ நபர்கள், உழைப்பு யதேச்சாதிகார, சிறிய மேல்தட்டுப் பேர்வழிகளின் செல்வாக்கு ஆகியோரின் எதிர்ப்பைச் சமாளித்து, மரண அடிகொடுக்கும் லட்சோப லட்சம் மக்களுடன் சங்கமமாகி ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சுரண்டப்படுகின்ற ஒடுக்கப் படுகின்ற தொழிலாளர்கள் புரட்சிகரமான முறையில் மரண அடிகொடுத்தால் உலக ஏகாதிபத்தியம் வீழ்ச்சி யடையும்''[42] என்பதை லெனின் வலியுறுத்தினார். இவ்வாறாக மனித நடவடிக்கையின் நோக்கத்தினது வளர்ச்சியின் (மற்றும் அதன் மேலாண்மை நிர்வகிப்பு) வரலாற்றுப் போக்கு, நோக்கத்தையும், விஷயத்தையும் ஒன்றிணைத்து அனைத்து உழைக்கும் மக்களுக்கும் வரலாற்றின் படைப்பாற்றல் பொருளாகி அவர்களது சொந்த உயிர்களுக்கும் அவர்களது தலைவிதியின் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்புக்கும் படைப்பாற்றல் பொருளாவதற்கு இட்டுச் செல்கிறது. ஆக சோஷலிசம் மட்டுமே இத்தகைய சங்கமத்துக்கான சூழல்களை வழங்குகிறது.

வரலாற்றின் பொருளை அமைப்பதில் லெனின் மூன்று கட்டங்களைத் தெளிவாகப் பார்த்தார். முதலாவதாக மனிதன் இன்னும் ஒரு காட்டுமிராண்டியாக இருக்கும்

போது சுற்றுச் சூழலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாதவனாயிருக்கிறான்; இயற்கையில் தனது இருப்பிடத்தை உணராமலிருக்கிறான்; சுற்றுச் சூழலுக்கேற்ப தன்னை உட்படுத்திக் கொள்கிறான்; ஏற்கனவே இருக்கக் கூடிய சாதனங்களையும் நிலைமைகளையுமே பயன்படுத்துகிறான். இரண்டாவது கட்டம் சோஷலிசத்திற்கு முந்திய வர்க்க சமுதாயம்; மக்களும், உழைக்கும் வர்க்கங்களும் தங்களைச் சுற்றியுள்ள உலகில் ஏற்கனவே தாங்கள் இருக்குமிடத்தை உணர்ந்துள்ளனர்; தங்களது சொந்த உடனடித் தேவைகளை அறிந்துள்ளனர்; ஆனால் சமூக வளர்ச்சியின் மெய்யான நோக்கங்களை சித்தாந்த ரீதியில் இன்னும் வரையறுத்து மெய்ம்மைப்படுத்த முடியாமலிருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில் வரலாற்றின் பொருளும், மேலாண்மை நிர்வகிப்பின் பொருளும் வெவ்வேறு பாதைகளில் பிரிந்து செல்கின்றன: வெகு ஜனங்களது நடவடிக்கைகள் வரலாற்றின் முக்கிய பொருளாயிருக்கின்றன. மேலாதிக்கம் வகிக்கும் சுரண்டும் வர்க்கங்களும் அவற்றால் அமைக்கப்படும் ஸ்தாபனங்களும், அரசாங்கம், திருச்சபை, அரசியல் கட்சிகள் போன்றவைகளும் மேலாண்மை நிர்வகிப்பின் பொருளாயிருக்கின்றன. இவ்விரு பொருட்களுக்குமிடையேயுள்ள உறவுகள் பகைமை இயல்புடையனவாயிருக்கின்றன,

சோஷலிசத்தின் கீழ் இந்த உறவுகள் ஒரு புரட்சிகரமான மாற்றத்திற்கு உட்படுகின்றன. நடைமுறையில் இவ்விரு பொருட்களும் சோஷலிச நிர்மாணத்தின் போக்கில், குறிப்பாக வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்தில் புதிய சமூக அமைப்பின் வளர்ந்தோங்கும் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சித்தாந்த ஒருங்கிணைப்புக்குச் சாட்சியமாய் இரண்டறக் கலக்கின்றன. இன்று வளர்ச்சியடைந்த ஒரு சோஷலிச சமுதாய அமைப்பில், சமூக மேலாண்மை நிர்வகிப்புப் பொருள் மக்களின் விசேட குழுக்களுக்குரியதாய் இருக்கிறது (மக்களின் டெபுடிகளின் சோவியத்துக்களுக்கும் அவை அமைக்கின்ற உறுப்புக்களுக்கும்) காரண

காரியங்களைத் தீர்மானிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் படுதல், சாதனங்கள், வழிமுறைகள் மக்களது நடவடிக்கை களின் கடமைகள் போன்றவற்றிற்காக ஒருபுறம் மேலாண்மை நிர்வகிப்புப் பொருளுக்கும் மற்றொரு புறம் கம்யூனிஸ நிர்மாணத்தில் அவர்களது உள்ளுணர்வு மற்றும் படைப் பாற்றல் நடவடிக்கையுடன் மக்களுக்கும் இடையே உறுதியாக வளர்ந்தோங்கும் ஒருங்கிணைவு சோஷலிசத்தின் ஒரு வரலாற்றுப் போக்காகும்.

சமூக வளர்ச்சியின் புறவயப்பட்ட மற்றும் அகவயப் பட்ட நிலைமைகளின் சுறுசுறுப்பான பாத்திரத்திற்கிடையே யான உறவுகளும் அதன் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பும் சோஷலிச நடைமுறை ஆட்சியின் அகவயப் பட்ட மற்றும் புறவயப்பட்ட இயக்கத்தில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. சமூக வாழ்க்கை மற்றும் மேலாண்மை நிர்வகிப்பின் புறவயப்பட்ட நிலைமைகளைப் பற்றிப் பேசும் போது மார்க்ஸிஸ்டுகளும், லெனினிஸ்டு களுக்கும் முதலில் சமூக வாழ்க்கையின் லோகாயுத நிலை மைகளையே பார்க்கின்றனர். அதாவது இயற்கையான சுற்றுச் சூழல் (பூகோள ரீதியான, வானிலை ஆராய்ச்சி ரீதி யான, மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகள், தாதுப்பொருட்கள் மற்றும் நீர் வளங்கள் உள்ளிட்ட) மக்கள் தொகை (அதன் உருவம், இயக்க ஆற்றல், கட்டமைப்பு, பிறப்பு இறப்பு விகிதங்கள் இன்னபிற) உபயோகப் பொருட்களின் உற்பத்தி முறை போன்றவை. சோஷலிசம் வளரும் போது, சுற்றுச் சூழல் மற்றும் மக்கள் தொகை பிரச்சினை போன்றவை மிகத் தெளிவான இடத்திற்கு வந்து விடுகின்றன. எனினும் உற்பத்தி முறை அப்படியே இருக்கிறது. என்றென்றைக்கும் அப்படியே இருக்கும். அது மனித சமுதாயத்தின் தீர்மான மானதொரு அம்சமாக ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் அதன் வளர்ச்சியின் பொதுவான போக்கைத் தீர்மானிக்கும் அம்சமாக விளங்குகிறது.

புறவயப்பட்ட நிலைமைகள் (சோஷலிசத்தின் கீழ் இது விசேட முக்கியத்துவம் பெறுகிறது) லோகாயுத

பொருளாதார உறவுகளின் கட்டமைப்புக்கு வெளியேயுள்ள மக்களுக்கிடையேயான ஒட்டுமொத்த உறவுகளையும் உள்ளடக்கியதாகும். இவை மேல் கட்டுமானத்தில் பங்கு கொண்ட முக்கியமான சமூக உறவுகளாகும் அதாவது அரசியல், சட்டம் இன்னபிற. உழைக்கும் மக்களின் கல்வி, தகவல், சமூகத் தொடர்புகள், மற்றும் அன்றாடவாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இயங்கும் அனைத்து சமூகக் கல்விக்கூடங்களும் நிறுவனங்களும் கூட புறவயப்பட்ட சூழல்களின் அமைப்புக்குச் சொந்தமானவை தான்.

அகவயப்பட்ட சமூக நிலைமைகளும் அவற்றின் மேலாண்மை நிர்வகிப்பும் அவை ஒன்றுபட்டு ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் அளவுக்கு அதேபோல் நடைமுறையில் அவற்றின் விஷயஞானத்தையும் அனுபவத்தையும் பயன் படுத்தும் திறமையின் அளவுக்கு மக்களது உள்ளுணர்வின் அளவுகோலாகும். அகவயப்பட்ட நிலைமைகளை அவசிய மாகப் பிரதிபலிக்கும் நான்கு அடிப்படையான மூலக்கூறு களை லெனின் சுட்டிக் காட்டுகிறார். முதலாவது சமூக மேலாண்மை நிர்வகிப்புப் பொருளுக்கும் அது காட்டுகிற நோக்கத்திக்கும் இடையேயுள்ள போதுமான ஒருங்கிணைப்பு. இரண்டாவது மேலாண்மை நிர்வகிப்புப் பொருளில் வெகு ஜனங்களுக்கிருக்கும் தார்மீக, அரசியல் நம்பிக்கை மூன்றா வதாக சொல்லுக்கும், செயலுக்குமிடையே ஒத்த இயல்பு தலைவர்களுக்கும் அவர்களால் வழி நடத்தப்படுகிறவர் களுக்குமுள்ள நம்பிக்கைகளுக்கும் செயல்பாடுகளுக்கு மிடையே ஒருமைப்பாடு. கடைசியாக, நான்காவது, தெளி வாக வருணிக்கப்பட்ட, நன்கு மெய்ப்பிக்கப்பட்ட, பரந்து பட்ட மக்கள் தொகையின் உள்ளுணர்வுக்குக் கொண்டு வரப் பட்ட நடவடிக்கைத் திட்டம்.

முதலாளித்துவம் மற்றும் இதர சோஷலிசத்திற்கு முந்திய அமைப்புக்களின் கீழ் சமூக வளர்ச்சியின் அகவயப் பட்ட நிலைமைகள் மிக அழகான பகைமையுணர்வுடன் கூடியவைகளாகவே இருந்தன. ஏனென்றால் அவை

உள்ளுணர்வுகளிலும், விரோதமான வர்க்கங்களின் ஸ்தாபனத்திலும் பிரதானமான எதிர் நிகழ்வுகளையே உள்ளடக்கிக் கொண்டிருந்தன. அகவயப்பட்ட நிலைமைகளை அதன் விஞ்ஞான மேலாண்மை நிர்வகிப்புடன் கூடிய வளர்ச்சியோடு இணைத்து உழைக்கும் மக்களுக்கும் அவர்கள் அவர்களாகவே தேர்ந்தெடுத்த மேலாண்மை நிர்வகிப்புப் பொருளுக்குமிடையே ஒரு ஆழமான உள் ஒற்றுமைப் பின்னணிக்கு எதிராக, சோஷலிசம் இந்த முரண்பாடுகளை அகற்றுகிறது.

சோஷலிசத்தின் வரலாற்றுப் போக்கு புறவயப்பட்ட, அகவயப்பட்ட நிலைமைகளுக்கிடையே ஒருங்கிணைவைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயம் கம்யூனிஸத்தை நோக்கிச் செல்வதின் பொதுவான மதிப்பீட்டின் அகவயப்பட்ட நிலைமைகளின் வளர்ந்தோங்கும் தாக்கத்திலுமுள்ளது. மக்களது உள்ளுணர்வின் உயர்ந்ததரம், அவர்களது ஸ்தாபன அமைப்பும் நடவடிக்கைத் திறனும் கம்யூனிஸத்தின் மிக உயர்ந்த கட்டத்தைக் காண்பதற்கு சமுதாயத்தை நெருக்கிக் கொண்டு வருவனவாகும்.

புறவயப்பட்ட மற்றும் அகவயப்பட்ட சமூக நிலைமைகளும் அவற்றின் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பும் சோஷலிசக் கட்டத்தில் சமூகப் பரிமாணங்களுக்குப் பின்னால் உள் உந்துதல் சக்திகளின் வெளிப்பாடாக இருக்கின்றன: இவற்றைத் தேர்ந்து தெளிந்து கொண்டு மக்கள் புதிய புதிய வெற்றிகளை ஈட்டுவதோடு தங்களது முன்னேறிச் செல்லும் வளர்ச்சியை முடுக்கி விட்டுத் திருப்புவதற்கான திறமையையும் பெறுகிறார்கள்.

மேலாண்மை நிர்வகிப்பின் புறவயப்பட்ட மற்றும் அகவயப்பட்ட இயக்கம் மற்றொரு முக்கிய காரணியையும் கொண்டிருக்கிறது—தலைவரின் மன உறுதியும், வகுத்துள்ள கடமைகளை நிறைவேற்றுவதை நோக்கி மக்களை அணிதிரட்டி திருப்பி விடுவதற்கான அருந்திறனும். ஒருபுறம் பிரதான விஷயத்தில் ஒரு முனைப்பாகச் செயலாற்றும்

அவரது திறமை, அவரது பணியில் ஒரு தீர்மானித்த முடிவு. மறுபுறம் எப்போது மில்லாவிட்டாலும் அடிக்கடி எடுத்த எடுப்பில் சாதாரணமாகத் தோன்றினாலும் மகத்தான முக்கியம் வாய்ந்தது என நிரூபணமாகும். சின்னச்சின்ன விஷயங்களை புறக்கணித்துத் தள்ளி விடாமலிருப்பது போன்றவை விசேட முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

லெனின் இதை இவ்வாறு கூறினார்: ஒரு புரட்சிப் போராளியாக, சோஷலிசத்தைப் பின்பற்றுகிறவனாக அல்லது பொதுவாக ஒரு கம்யூனிஸ்டாக இருப்பது மட்டும் போதாது. ஒவ்வொரு குறிப்பிட்ட வினாடியிலும் சங்கிலியின் குறிப்பிட்ட கண்ணியைக் காணும் திறமையை நீ பெற்றிருக்க வேண்டும். உனது சக்தியனைத்தையும் செலவழித்து முழுமை யான சங்கிலியையும் தூக்கிப் பிடிப்பதற்கேற்ப உன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அடுத்த கண்ணிக்கான மாற்றத்திற்கு உன்னை உறுதியாகத் தயார் செய்து கொள்ள வேண்டும். கண்ணிகளின் ஒழுங்கமைப்பு, அவற்றின் வடிவங்கள், அவை ஒன்றாகத் தொடுக்கப்பட்டிருக்கும் பாங்கு, வரலாற்றுச் சங்கிலியின் நிகழ்வுகளில் அவை ஒன்றி லிருந்து மற்றொன்று வேறுபடும் முறை ஆகியவை அவ்வளவு சுலபமானதல்ல, கொல்லன் செய்யும் சாதாரணச் சங்கிலி யிருப்பது போல் அவை அர்த்தமற்றவை அல்ல.''[43] உள்ள படியே இது புதிய சமுதாயத்தின் மேலாண்மை நிர்வகிப்புக்கு ஒரு விஞ்ஞான ரீதியான அணுகும் முறையை எடுக்க ஒரு செயல் திட்டமாகும்.

லெனினது முன் மொழிதல்களை இப்போது பயன் படுத்தப்படும் பரந்த அளவிலான திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை நிர்வகிப்பு, மேலாண்மை நிர்வகிப்பில் இன்று பெருமளவுக்குப் பயன்படுத்தப்படும் இலக்குத் திட்ட அணுகும் முறை, அமைப்புக்களின் பகுப்பாய்வு ஆகியவற்றின் கருத்துக்களோடு ஒப்பிட்டால் சமூக மேலாண்மை நிர் வகிப்பின் சத்தையும் சாரத்தையும், அதன் உட் காரணிகள்,

கட்டமைப்பு, தொடர்புகள் மற்றும் காரணத்துடனான உறவுகள் போன்றவற்றையும் லெனின் 1918-ம் ஆண்டிலேயே புலப்படுத்தியுள்ளது. நம் கண்களுக்குப் பளிச்செனத் தென் படும் அதாவது ஒரு விசேட ஆய்வியல் வகுக்கப்படுவதற்கு வெகுகாலம் முன்னரே.

பெரும் பெரும் பிரச்சினைகள் மற்றும் சிறு சிறு பிரச்சினைகள் போன்றவற்றை நிர்வகிப்பதிலும் கூட ஒரு நிதானம் தேவை என எடுத்துக் காட்டியுள்ளதின் உண்மையி லிருந்தும் லெனினது கருத்துக்களின் முக்கியத்துவம் வெளிப் படுகிறது. சோஷலிச மேலாண்மை நிர்வகிப்பின் நடைமுறை. ஒரு சோஷலிச சமுதாயத்தில் மேலாண்மை நிர்வகிப்பு விவ காரங்களுக்கு ஒரு விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட அணுகும் முறை இரண்டு அதீதப் போக்குகளையும் நீக்கியுள்ளதைக் காட்டுகிறது—பெருமளவிலான பிரச் சினைகள் நடைமுறை விவகாரங்களுக்குத் தீங்கு விளை விக்குமோ என்ற மருட்சி மற்றும் உடனடியான அன்றாட அலுவல்களில் முனைப்புடன் செயல்படும் போதுபொதுவான இலக்குகளைத் தட்டிக் கழிப்பது. ஒரு தலைவர் நடப்பு விவ காரங்களை தனக்குக் கீழே உள்ளவர்களிடம் ஒதுக்கிவிட்டால் அது அவர் பணியாற்றும் சிப்பந்திகளிடையேகொண்டிருக்கும் தொடர்பை இழக்குமாறு செய்கிறது. கால தாமதத்தை ஏற் படுத்துகிறது. இன்னொரு புறம் அவர் ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் தானே கட்டுப்பாடு செய்ய முயற்சித்தால் மற்றவர்கள் பற்றிய தொலை நோக்குத் தோற்றத்தை அவர் இழப்பதற்கு அது காரணமாகி விடுகிறது. அவருக்குக் கீழிருப் பவர்களினால் அவருக்கிருக்கும் வியாபாரத் தொடர்புகள் பாழாக்கப்படுகின்றன. இறுதியாக மிகப் பெரும் தோல்வி களுக்கும் தவறுகளுக்கும் அவரை இட்டுச் சென்று விடும். எனவே காரண காரியத்தைப் பற்றிய தெளிவும் மேலாண்மை நிர் வகிப்பில் உறுதியான நிலையும் முக்கிய கோட்பாடாவதை இவை வலியுறுத்துகின்றன: ஒரு நிமிடத்தில் முடிக்கப்படக் கூடிய பிரச்சினையானாலும் கூட ஒருவன் பொதுவான

இலக்கைப் பார்க்காமலிருந்து விடக் கூடாது. அதேசமயத்தில் மிகவும் சாமர்த்தியமான முறையில் இன்றைய நலன்களையும் சிப்பந்திகளின் தேவைகளையும் பொதுவான இலக்குடன் இணைக்க வேண்டும்.

தலைவர்களுக்கும் அவர்களுக்கு கீழே பணியாற்றுகிறவர் களுக்குமிடையே சரியான உறவுகள் நிலவ வேண்டியதின் முக்கியத்துவத்தை லெனின் குறிப்பிட்ட முறையில் வலியுறுத் தினார். "சந்தர்ப்பம் புறக்கணிக்கப்பட்ட விவரங்களுடன் கூடியதாகத் தோன்றலாம். ஆனால்......அது ஒரு விவரமல்ல அல்லது தீர்மானமான முக்கியத்துவத்தைப் பெறக் கூடிய ஒரு விவரமாகலாம்."[44] சோஷலிசத்தையும் கம்யூனிஸத் தையும் கட்டும் போது தலைவர்களுக்கிடையேயுள்ள உறவுகள், தலைவர்களுக்கும் அவர்களுக்கு கீழே பணியாற்று கிறவர்களுக்குமிடையேயான உறவுகள் நிதானமாக இருக்க வேண்டும். தோழமையுணர்வுடனும் பரிவுணர்வுடனும் கூடிய தாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் கண்டிப்பாகவும் காரியார்த்தமாகவுமிருக்க வேண்டும்.

புதிய நிலைமைகள் பற்றி தலைவரின் உஷார் உணர்வு, சமூக வளர்ச்சியின் மிகமுற்போக்கான பயன்தரும் நிலைபாடு களை அடையாளம் கண்டு அதை ஊக்குவிக்கும் திறமை போன்றவற்றிற்கு சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் விசேட கவனம் செலுத்துகின்றன. வெளி நிகழ்வுகளின் எல்லையில்லா வேறுபாட்டில் புதியன வற்றை அடையாளம் காணும் வழிமுறைக்கு ஒரு விஞ்ஞான ரீதியான அணுகும்முறை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அவனது அல்லது அவளது வாழ்க்கை மற்றும் கல்வியின் போக்கில் ஒவ்வொருவரும் அவனது அல்லது அவளது சொந்த புலனுணர்வின் வடிகட்டுதலைக் கொண்டிருக்கிறார்கள். இது அவனையோ அல்லது அவளையோ அவர்களது மனத்தில் அரித்துக் கொண்டிருக்கும் முடிவேயில்லாத எண்ணற்ற வெளி

எரிச்சல்களுள் வழக்கமான மற்றும் மிக முக்கிய அடையாளங்களைத் தனிமைப்படுத்திப் புரிந்து கொள்வதற்கு அனுமதிக்கிறது. குறிப்பிட்ட கணத்தில் வெளி அடையாளங்களின் இன்றியமையாதவைகளுள் தேர்ந்தெடுப்பதற்கு இந்த வடிகட்டல் முழுக்க முழுக்க அவசியமானதாகும். ஆனால் இதுவும் கூட அதன் மோசமான பக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், வழக்கத்திற்கு மாறான எதையும், அன்றாட வாழ்க்கையின் கட்டமைப்புக்கு வெளியே உள்ள எதையும் "கேட்கக்கூடாது" என்பதை அவளோ அவனோ படிப்படியாகத்தான் கற்றறிகிறார்கள். இந்தப்புலன் உணர்வு வடிகட்டல் இளம் வயதினரிடையே மிகவும் தொய்வாகவும் மாறக்கூடியதாகவுமிருக்கிறது. முதிர்ச்சியடைந்தவர்களிடம், குறிப்பாக வயது முதிர்ந்தவர்களிடம் இந்த வடிகட்டல்கள் அடிக்கடி அவர்களது புலன் உணர்வில் தலையிடுவதில்லை. புதியனவற்றைப் பாராட்டுவதுமில்லை.

மேலாண்மை நிர்வகிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரும் இத்தகைய வடிகட்டல்களைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது பணி சமுதாயத்துக்கு விசேட முக்கியத்துவத்துடன் கூடியதாக இருப்பதால் அவர்கள் அடிக்கடி தங்களது வடிகட்டல்களை நெளிவு சுளிவாக இருப்பதற்கும், நிர்வகிப்பு விஷயங்களை அவர்கள் ஒரு விஞ்ஞான ரீதியான வழியில் அணுக விழைந்தால் அதை அனுசரித்துச் செல்வதற்கேற்பவும் பயிற்றுவிக்க வேண்டும். லெனின் புதியனவற்றை கூர் மதியோடு பார்த்தார். அதை வளர்க்குமாறு தன்னைப் பின்பற்றுகிறவர்களையும், சகாக்களையும் பயிற்றுவித்தார். இன்று கம்யூனிஸ்ட் கட்சி இடைவிடாமல் இது தொடர்பான தீவிரப் பயிற்சியின் அவசியத்தை உணருமாறு தனது அணியினரின் கவனத்தை ஈர்க்கிறது. ஏனென்றால் புதியனவற்றை தெளிவாக உய்த்துணர்ந்து, நன்கு புரிந்து ஆதரிக்காமல் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பே இருக்க முடியாது.

இலக்கைப் பார்க்காமலிருந்து விடக் கூடாது. அதேசமயத்தில் மிகவும் சாமர்த்தியமான முறையில் இன்றைய நலன்களையும் சிப்பந்திகளின் தேவைகளையும் பொதுவான இலக்குடன் இணைக்க வேண்டும்.

தலைவர்களுக்கும் அவர்களுக்கு கீழே பணியாற்றுகிறவர் களுக்குமிடையே சரியான உறவுகள் நிலவ வேண்டியதின் முக்கியத்துவத்தை லெனின் குறிப்பிட்ட முறையில் வலியுறுத் தினார். "சந்தர்ப்பம் புறக்கணிக்கப்பட்ட விவரங்களுடன் கூடியதாகத் தோன்றலாம். ஆனால்......அது ஒரு விவரமல்ல அல்லது தீர்மானமான முக்கியத்துவத்தைப் பெறக் கூடிய ஒரு விவரமாகலாம்."[44] சோஷலிசத்தையும் கம்யூனிஸத் தையும் கட்டும் போது தலைவர்களுக்கிடைடேயேயுள்ள உறவுகள், தலைவர்களுக்கும் அவர்களுக்கு கீழே பணியாற்று கிறவர்களுக்குமிடையேயான உறவுகள் நிதானமாக இருக்க வேண்டும். தோழமையுணர்வுடனும் பரிவுணர்வுடனும் கூடிய தாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் கண்டிப்பாகவும் காரியார்த்தமாகவுமிருக்க வேண்டும்.

புதிய நிலைமைகள் பற்றி தலைவரின் உஷார் உணர்வு, சமூக வளர்ச்சியின் மிகமுற்போக்கான பயன்தரும் நிலைபாடு களை அடையாளம் கண்டு அதை ஊக்குவிக்கும் திறமை போன்றவற்றிற்கு சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் விசேட கவனம் செலுத்துகின்றன. வெளி நிகழ்வுகளின் எல்லையில்லா வேறுபாட்டில் புதியன வற்றை அடையாளம் காணும் வழிமுறைக்கு ஒரு விஞ்ஞான ரீதியான அணுகும்முறை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அவனது அல்லது அவளது வாழ்க்கை மற்றும் கல்வியின் போக்கில் ஒல்வொருவரும் அவனது அல்லது அவளது சொந்த புலனுணர்வின் வடிகட்டுதலைக் கொண்டிருக்கிறார்கள். இது அவனையோ அல்லது அவளையோ அவர்களது மனத்தில் அரித்துக் கொண்டிருக்கும் முடிவேயில்லாத எண்ணற்ற வெளி

எரிச்சல்களுள் வழக்கமான மற்றும் மிக முக்கிய அடையாளங் களைத் தனிமைப்படுத்திப் புரிந்து கொள்வதற்கு அனுமதிக் கிறது. குறிப்பிட்ட கணத்தில் வெளி அடையாளங்களின் இன்றியமையாதவைகளுள் தேர்ந்தெடுப்பதற்கு இந்த வடி கட்டல் முழுக்க முழுக்க அவசியமானதாகும். ஆனால் இதுவும் கூட அதன் மோசமான பக்கத்தைக் கொண்டிருக் கிறது. ஏனென்றால், வழக்கத்திற்கு மாறான எதையும், அன்றாட வாழ்க்கையின் கட்டமைப்புக்கு வெளியே உள்ள எதையும் "கேட்கக்கூடாது" என்பதை அவளோ அவனோ படிப்படியாகத்தான் கற்றறிகிறார்கள். இந்தப்புலன் உணர்வு வடிகட்டல் இளம் வயதினரிடையே மிகவும் தொய்வாகவும் மாறக்கூடியதாகவுமிருக்கிறது. முதிர்ச்சியடைந்தவர்களிடம், குறிப்பாக வயது முதிர்ந்தவர்களிடம் இந்த வடிகட்டல்கள் அடிக்கடி அவர்களது புலன் உணர்வில் தலையிடுவதில்லை. புதியனவற்றைப் பாராட்டுவதுமில்லை.

மேலாண்மை நிர்வகிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப் போரும் இத்தகைய வடிகட்டல்களைக் கொண்டிருக் கிறார்கள். அவர்களது பணி சமுதாயத்துக்கு விசேட முக்கியத்துவத்துடன் கூடியதாக இருப்பதால் அவர்கள் அடிக்கடி தங்களது வடிகட்டல்களை நெளிவு சுளிவாக இருப் பதற்கும், நிர்வகிப்பு விஷயங்களை அவர்கள் ஒரு விஞ்ஞான ரீதியான வழியில் அணுக விழைந்தால் அதை அனுசரித்துச் செல்வதற்கேற்பவும் பயிற்றுவிக்க வேண்டும். லெனின் புதியனவற்றை கூர் மதியோடு பார்த்தார். அதை வளர்க்கு மாறு தன்னைப் பின்பற்றுகிறவர்களையும், சகாக்களையும் பயிற்றுவித்தார். இன்று கம்யூனிஸ்ட் கட்சி இடைவிடாமல் இது தொடர்பான தீவிரப் பயிற்சியின் அவசியத்தை உணரு மாறு தனது அணியினரின் கவனத்தை ஈர்க்கிறது. ஏனென் றால் புதியனவற்றை தெளிவாக உய்த்துணர்ந்து, நன்கு புரிந்து ஆதரிக்காமல் விஞ்ஞான ரீதியான மேலாண்மை நிர்வகிப்பே இருக்க முடியாது.

இன்று ''அரசாங்கத்தை நடத்திச் செல்லும் கடமை...... இந்த விசேட அம்சத்தைக் கொண்டிருக்கிறது. ஒருவேளை நாகரீகமடைந்த நாடுகளின் நவீனகால வரலாற்றில் முதல் தடவையாக அது ஒப்புயர்வற்ற முறையில் அரசியலைவிடப் பொருளாதாரத்தில் செயல் தொடர்பு' கொண்டிருக்கலாம்''[45] என்பதை லெனின் சுட்டிக் காட்டினார். சோஷலிசத்திற்கு முந்திய சமுதாயங்களில் நடைமுறை ஆட்சி பற்றிய கருத் தமைவு :பெரும்பாலும் ஒரு அரசியல் நடவடிக்கையாகவே புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. ஏனென்றால் உற்பத்தி மேலாண்மை நிர்வாகம் தனி உடைமையாளர்களின் கை களில் இருந்தது. சித்தாந்த வாழ்க்கை, பலவேறுபட்ட அரசாங்கம் அல்லாத அமைப்புக்களின், திருச்சபை, தனியான கழகங்கள் மற்றும் சித்தாந்த மையங்களின் (பத்திரிக்கை, கல்வி மற்றும் கலாசார ஸ்தாபனங்கள் இன்னபிற) ஆளுகைக் குட்பட்டிருந்தது. கொஞ்சம் பின்னர் ஆதிக்க வர்க்கங்களின் அரசியல் கட்சிகளால் ஆளப்பட்டது.

வர்க்கப் பகைமை நிலவும் சமுதாயங்களில், பொருளா தார, சித்தாந்த வளர்ச்சியில் அரசாங்கம் எதையும் கூற முடியாது. அரசியல் அடக்கு முறைக்காக அதன் அதிகாரத்தில் ஒருகருவியை மட்டும் கொண்டிருக்கிறது. (ராணுவம், போலீஸ்படை, நீதி மன்றங்கள், இன்னபிற) சமூக மேலாண்மை நிர்வகிப்பு புரிந்து கொள்ளக் கூடிய முறையில், பொருளாதாரம் அரசியல் மற்றும் சித்தாந்தத்தில் ஒரே ஒரு தனித்த அதிகார அமைப்பின் ஆட்சிக்குட்பட்ட ஒருங் கிணைந்த பரிணாமமாக இருக்கவில்லை. அதாவது சமூக வாழ்க்கையின் அனைத்து மூன்று அடிப்படையான துறை களிலும்.

சோஷலிச மேலாண்மை நிர்வகிப்பு முற்றிலும் வேறுப் பட்ட கோட்பாடுகளைச் சார்ந்து நிற்கிறது. பொருளாதார அரசியல் மற்றும் சித்தாந்தம் போராட்டங்கள் ஒருங் கிணைந்த ஒரு சோஷலிசப் புரட்சியைச் சாதிப்பதற்கான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களின் ஒற்றுமையை

எங்கெல்ஸ் குணாம்சப்படுத்தி பிரத்தியேகப் படுத்து கிறார்.[46]

20-ம் நூற்றாண்டில் தொழிலாளி வர்க்க இயக்கம் எதிர் நோக்கிய கடமைகளுக்கேற்ப லெனின் மார்க்சியச் சித்தாந் தத்தை ஆக்க பூர்வமாக வளர்த்ததோடு எங்கெல்ஸின் ஆய்வியலுக்கும் விசேட கவனத்தை வழங்கினார். அதே சமயத்தில் பொருளாதாரம் அரசியல் மற்றும் சித்தாந்தத்தில் பாட்டாளிகளது வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையான வடிவங்களுக்கிடையே உள்ள பிரிக்க முடியாத தொடர்பையும் வலியுறுத்திக் காட்டினார்.

சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி வாகை சூடிய பின்னர் சமூக வளர்ச்சியின் அத்தனை நோக்குகளது ஒற்றுமையும், புதிய சமுதாயத்தின் பொருளாதார மேலாண்மை நிர்வகிப்பு அரசியல் விஷயங்கள், மற்றும் சித்தாந்த கலாசார மதிப் பீடுகளை ஒருங்கிணைப்பதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிகாரத்தைக் கோரின. இந்தப் பிரச்சினை களனைத்தும் லெனினது படைப்புகளில் பெருமளவுக்கு ஆராயப் பட்டுள்ளன.

சமூக மேலாண்மை நிர்வகிப்பின் மூன்றுஅடிப்படையான இயக்கங்களையும் (பொருளாதாரம், அரசியல் மற்றும் சித்தாந்தம்) புதிய அரசாங்கம் உறுப்பு ரீதியாக இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றிப் பேசும்போது பொருளாதார முடிவுகள் அவற்றின் அரசியல் சித்தாந்தக் கடப்பாடுகளுக்கு வெளியே மதிப்புள்ளவைகளாக இருக்க முடியாதென்பதை லெனின் நிரூபித்தார். சமுதாயத்தின் பொருளாதார, சித்தாந்த, கலாசார வாழ்க்கையில் அவற்றின் தாக்கத்திற்கு வெளியே அரசியல் தீர்மானங்கள் செல்லு படியாகா. ஆனால் சித்தாந்த கலாசாரத் துறைகளிலான ஒவ்வொரு முடிவும் சமூக வளர்ச்சியின் பொருளாதார அரசியல் துறைகளில், ஒரு நேரடி விளைவைக் கொண்டிருக் கின்றன.

பொருளாதாரமும் அதன் வளர்ச்சியின் ஆட்சிசெலுத்தலும் சமூகப் பரிணாமத்தில் தீர்மானவை: பொருளாதாரத்தின் அடிப்படையில் வேறு எதுவானாலும் அமைக்கப்படலாம். அரசியல் என்பது பொருளாதாரத்தின் ஒருமுனைப்படுத்தப்பட்ட பிரதிபலிப்பு" என்றார் லெனின். மேலும் புதிய சமுதாயத்தில் "அரசியல், பொருளாதாரத்தின்மீது ஒரு முன் நிகழ்வை எடுத்துக்கொள்ளும்"[47] இதன் பொருள் சில பொருளாதார நிலைமைகளிலிருந்து அது விளைவுகளைக் கொண்டிருந்தால் அரசியல், பொருளாதாரத்தின் மீது ஒரு தீவிர ஆதிக்கம் செலுத்தலாம் என்பதே.

வரலாற்றில் முதன் முறையாக சோஷலிச சமுதாயத்திலிருக்கும் அரசாங்கம், பொருளாதார, நடைமுறை அரசியல் ஆட்சியை மக்கள் தொகையின் கல்வி மேலாண்மை நிர்வகிப்புடனும் சமூக வாழ்க்கையின் முழுமையான சித்தாந்தத்துறையின் வழிகாட்டுதலோடும் ஒன்று படுத்துகிறது. அமைச்சரவைகள், பொது, இடைநிலை, மேல்நிலை விசேடக் கல்வி, கலாசார விவகாரங்கள், மக்கள் தகவல் தொடர்பு இன்னபிறவற்றிற்குப் பொறுப்பான இலாகாக்களினால் செயல்படுத்தப்படும் இந்தச் செயல்பாடு நேரடியாக கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிநடத்தப்படுகிறது. இந்த நடவடிக்கையின் நோக்கம், "மகோன்னத சித்தாந்த வழிக் கோட்பாடுகளின் உத்வேகத்திலும், சோஷலிசத் தாய் நாட்டுக்கும் கம்யூனிஸ லட்சியத்திற்கும் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கும், உழைப்பு மற்றும் பொதுச் சொத்துக்களின்பால் ஒரு கம்யூனிஸ்ட் போக்கின் உத்வேகத்தைக் கொள்வதற்கும், முரண்பாடுகள் ஏதுமின்றி தனிநபரை வளர்த்து லௌகீக கலாசாரத்தின் உண்மையான வளத்தை உருவாக்கும் பொழுதே முதலாளித்துவக் கருத்துக்கள் மற்றும் ஒழுக்க முறைகளின் மிச்ச சொச்சங்களை முழுமையாகத் துடைத்தெறிவதற்கும் உழைக்கும் மக்களைப் பயிற்றுவிப்பதே."[48] ஆகும்.

இந்த நோக்குகளின் ஒற்றுமை வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தின் விஞ்ஞான மேலாண்மை

நிர்வகிப்பின் உள்ளடக்கத்தை வடிவமைக்கிறது. சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு விரிவான அணுகும் முறை என்ற பிரச்சினை மார்க்ஸ்-எங்கெல்ஸினால் முன் வைக்கப்பட்டு அவர்களது விஞ்ஞானக் கம்யூனிஸச் சித்தாந் தத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. லெனினும் இதற்கு மகத்தான பங்களிப்பை வழங்கினார். ஒரு பொருளைப் பற்றிய உண்மையான விஷயஞானத்தைப் பெற, அதன் அனைத்து முகத் தோற்றங்களையும், அதன் தொடர்பு களையும் பார்த்துப் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம். வளர்ச்சியும், சொந்த இயக்கத்திலும் அத்துடன் முழுமையான மானுட அனுபவத்தின் திண்ணிய நடைமுறை யிலும் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் எனச் சுட்டிக் காட்டினார் லெனின்.[49] "அரசியல் நிகழ்வின் சங்கிலித் தொடரில் அதன் முழுமையான பகுதி, அவற்றின் காரண காரியத் தொடர்பு அவற்றின் விளைவு ஆகியவற்றைக் கற் றறிந்து நம்மை நாமே அடிக்கடி சோதித்துக் கொள்ள வேண்டும். நேற்றையத் தவறுகளைப் பகுப்பாயும் போது நாம் இன்றும் நாளையும் தவறுகளைத் தவிர்க்கப் பயில் கிறோம்."[50] சமூக மேலாண்மை நிர்வகிப்புச் சித்தாந்தம் பற்றிய லெனினது கருத்துக்கள், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் அரசுக்கும் புதிய சமுதாயத்தில் விஞ்ஞான மேலாண்மை நிர்வகிப்பு எங்ஙனம் வளரும் என்பதைத் தீர் மானிப்பதற்கு முழுமையான சித்தாந்த நடைமுறைப் பணி களின் ஒரு அடிப்படையாகப் பணியாற்றுகின்றன.

## 3. 1920களின் தத்துவார்த்த விவாதங்கள்

1917-1924-ம் ஆண்டுகளில் புதிய சமுதாயத்தின் செல் வாக்கு மிக்க சக்தியாக மார்க்சியத்தை ஆக்குவதற்காக போராடிய பொழுதே, கட்சி திரும்பத் திரும்ப, மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் போதனைகளிலுள்ள தத்துவார்த்த சாரத்தைப் பொய்ம்மைப்படுத்திக் குழப்புவதற்காக முத லாளித்துவத் திருத்தல் வாதத் தத்துவ ஞானிகள் மேற்

கொண்ட முயற்சிகளுக்கு எதிராகவும் செயல்பட்டது. லெனினது மறைவுக்குப் பின் (ஜனவரி 1924) இந்தமுயற்சிகள் மேலும் அதிகரித்தன. இந்தக் கால கட்டத்தில் 1918-1920-ம் ஆண்டுகளைப் போல் சித்தாந்தப் போராட்டம் மார்க்சியத்தை எதிர்த்து மட்டுமல்லாமல் பெருமளவுக்கு லெனினியத்தின் அடிப்படைத் தத்துவக் கூறுகளை எதிர்த்தும் அதன் சித்தாந்த உள்ளடக்கம் மற்றும் நடைமுறை அமுலாக்கத்தை எதிர்த்தும் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1920களின் இரண்டாவது பாதியில், தத்துவம் பற்றிய மதிப்பீடு லெனினியப் பிரச்சினைகளின்பால் கூர்மையான விவாதங்களாகப் பெருக்கெடுத்துப் பரவியது. இதன் விளைவாக மார்க்சியத் தத்துவத்தின் வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தின் விஞ்ஞான வியாக்கியானத்திற்காக ஒரு போராட்டம் துவங்கியது.

20-ம் நூற்றாண்டின் மார்க்சிய இலக்கியத்தில் ''லெனினியம்''என்ற பதப்பிரயோகம் பற்றி சிலவார்த்தைகள் கிளம்பின. ''லெனினியம்'' ''லெனினியவாதிகள்'' போன்ற கருத்தமைவுகள் முதன் முதலாக தன்னெழுச்சியாக அடிமட்டத்திலிருந்து அனைத்துக் கம்யூனிஸ்டுகளாலும், கட்சியில் சேராத உறுப்பினர்களாலும் பொருளாதாரப்புனரமைப்புக் காலகட்டத்தின் (1922-1924) இறுதிக்குள் பயன்படுத்தப் பட்டன. சீக்கிரத்திலேயே அவை சோவியத் யூனியன் முழுவதிலும் பரவிப்படர்ந்தன. தனது தோற்றப்பொலிவை மிகைப்படுத்தும் அனைத்து முயற்சிகளையும் உறுதியாக எதிர்த்த லெனின், கட்சி ஆவணங்களில் இந்தக் கருத்தமைவுகளைப் பயன்படுத்துவதையும் கடுமையாக ஆட்சேபித்தார். உதாரணமாக 1920 நவம்பரில், பாட்டாளி வர்க்கக்கலாசாரம் பற்றிய ஏ. போக்டனோவின் கருத்துக்களிலுள்ள மார்க்சிய எதிர்ப்பு இயல்பு பற்றி மத்தியக்கமிட்டி ஒரு ஆவணத்தைத் தயாரிக்கும் போது (ப்ரோலட்கல்ட்ஸ் பற்றிய மத்தியக் கமிட்டியின் ஒரு சுற்றறிக்கை)[51] தயாரிப்புக் குழுவிலுள்ள ஒருவர் லெனினியத்தைப் பற்றிய ஒரு பொதுவான

மேலோட்டம் அதில் தரப்பட வேண்டுமென்றார். உடனே லெனின் ''லெனினியம்'' என்ற வார்த்தையை அடித்துவிட்டு அவ்விடத்தில் ''தீவிரப் பொருள்முதல்வாதம்'' என்ற வார்த்தையைப் போட்டார்.[52] இருந்த போதிலும் லெனின் மறைந்த உடனேயே 13வது கட்சி மாநாடு ''லெனினியக்'' கருத்தமைவின்பால் மிக உயர்ந்த மதிப்பை வழங்கியது. மாநாட்டுத் தீர்மானங்களிலொன்றின் வாசகமாவது: ''பெரு மளவிலான பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களின் உதாரணத் தைப் பின்பற்றி, லெனினியக் கருத்தமைவுகளைக் கற்றறி வதற்கு, நமது ஸ்தாபனங்களனைத்திலும், குழுக்களை அமைக்க வேண்டும். அவை தோழர் லெனினது படைப்புக் களை தங்களது அடிப்படை நூல்களாகக் கொள்ள வேண்டும்''[53] லெனினியம், மார்க்சியத்திற்கு ஒரு மகத்தான சித்தாந்தப் பங்களிப்பு என மாநாடு மதிப்பிட்டது. 1924-ம் ஆண்டு ஸ்வெர்ட்லோவ் பல்கலைக்கழகத்தில் லெனினியத்தின் அடிப்படைகள் பற்றி ஆற்றிய உரைகளில் ஒன்றில் ஸ்டாலின் தனது புகழ் வாய்ந்த சூத்திரத்தை பிரகடனப்படுத்தினார்: ''ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப்புரட்சி சகாப் தத்தில் லெனினியம்தான் மார்க்சியமாகும்.''[54] அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் குழுவின் தலைவரும் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினருமான மைக்கேல் காலினின் எழுதியதாவது: லெனினைப் பற்றிப் பேசும்போது, அவருக்கும் மார்க்சின் புரட்சிகர நடவடிக்கைகளுக்கும் குறி இலக்கில் அனைத்து வேறுபாடுகளுக்கும் (லெனினைப் பொறுத்த மட்டில் மிக அதிகமானவை) ஒரு முனைப்பான ஒன்றிணைந்த சாயலைக் காணலாம்: லெனின் மகத்தான அளவு சுயமான ஆராய்ச்சியை மேற்கொண்டார். ஒரு சித்தாந்த கர்த்தா என்ற முறையில் வியத்தகு பாத்திரத்தை வகுத்துள்ளார்.''[55] கல்வி நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படும் அனைத்து சமூக விஞ்ஞானங்களிலும் லெனினியத்தை அறிமுகப்படுத்துவ தென 13வது கட்சிக் காங்கிரஸ் முடிவு செய்தது.[56] ஒரு ஆராய்ச்சி மையத்தை அமைப்பதென்றும் தீர்மானித்தது— லெனின் கல்விக்கூடம்—லெனினது சித்தாந்தப் படைப்புக்

களைக் கற்றறியவும், பரப்பவும், லெனினது **முழுமையான படைப்புக்களையும்** பிரசுரிப்பதென்றும் காங்கிரஸ் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது (இந்தத் தீர்மானம் 1950களிலும் 1960களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது).

இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே, பல கட்சி ஆய்வியலறிஞர்கள் லெனினது படைப் பாற்றல் நடவடிக்கைகளின்பாலும் மார்க்சிய மதிப்பீட்டுக்கு அவர் வழங்கிய சித்தாந்தப் பங்களிப்பின்பாலும் மிக உயர்ந்த மதிப்பை வைத்திருந்தனர்.[57] லெனினியத்தைப் பற்றிய வர்ணனை முதலில் விசேட பாடப்புத்தகங்களில் தரப் பட்டது. அவற்றில் சில தத்துவார்த்தப் பிரச்சினைகள் பற்றி லெனினது மிக முக்கியமான கருத்துக்கள் அடங்கியிருந்தன.[58] முதன்முதலாகப் பிரசுரிக்கப்பட்ட "**இயக்கவியல் பற்றிய பிரச்சினை**" (1925) என்ற லெனினது குறிப்புரையும் குறிப் பிடத்தக்க முறையில் அவரது முழுமையான "**தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களும்**" (1929) மிக முக்கியமானவை.

1924-ல், லெனினியத்தின் தத்துவார்த்தக் கருத்துக்களின் உள்ளடக்கம் மற்றும் சத்து, சாரத்தைப்பற்றி சோவியத் விஞ்ஞான சமுதாயம் விரிந்த அளவு விவாதங்களைத் துவக் கியது. அவர்கள் "லெனினியம்-தீவிரப் பொருள் முதல் வாதம்" என்ற "மார்க்சியப் பாதையின் கீழ்" பத்திரிகையில் பிரசுரமான ஏ. டெபோரினது கட்டுரைக்கும் இயக்கவியல் பொருள் முதல் வாதம் பற்றிய டெபோரினது கருத்தமைவை விமர்சித்துக் கிளம்பிய ஐ. ஸ்க் வோர்ட்ஸோவ்-ஸ்டீபனோ வுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையினால் இந்த விவாதங் களைத் தொடங்கினார்கள். எதிரணியைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் லெனினியத்தைப் பற்றிய தங்களது கருத் துக்களை (ட்ராட்ஸ்கி, ஸினோவீவ், புகாரின்) இதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் சில சந்தர்ப்ப வாத மனோபாவம் படைத்தவர்களுடன் (கார்ல் கோர்ஸ்க், ஜார்ஜ் லியூகாக்ஸ், ஆன்டன் பானிகோய்க் மற்றும் பலருள்) சேர்ந்து முழங் கினார்கள்.

இந்த விவாதங்கள், லெனினியத்தின் சாரத்தைப் பற்றிய ஒரு பொது விவாதமாக கீழிறங்கியது. லெனினியத்தை 20-ம் நூற்றாண்டின் மார்க்சியத்தை சிறுமைப் படுத்தித்திசை திருப்புவதே பொதுவான போக்காக இருந்தது. லெனினியத்தின் பகிரங்கப் பரமவைரிகள் (ட்ராட்ஸ்கியும், புகாரினும் அவர்களில் பிரபலமானவர்கள்) லெனினியம் ருஷ்ய தொழிலாளர்களது இயக்கத்தின் ஒரு நடை முறை மட்டுமே; புரட்சியின் நடைமுறைக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மார்க்சியத்தைப் பயன்படுத்துவதே எனப் பிரகடனம் செய்தனர். மற்றொரு போக்கின் பிரதிநிதிகள் (ஒரு புறம் அப்போது ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராயிருந்த கார்ல் கோர்ஸ்ச்; மற்றொருபுறம் 'புதிய எதிர்ப்பணி' உறுப்பினர்களான ஸினோவிவ், காமனெவ் ஆகியோர்) லெனனியத்தை ஒரு புரட்சிகர நடை முறை மட்டுமல்லாது ஒரு தத்துவமுமாகும் (இருந்தாலும் கூட மிகவும் வரையறுக்கப்பட்ட ஒரு அளவுக்குத்தான்) மார்க்சியம் சில குறுகிய சிந்தாந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுவது போல் என்று அங்கீகரித்தனர், முன்னால் குறிப்பிடப்பட்டவர்கள் லெனினியம் ஒரு சித்தாந்தம் என்பதை விட நடைமுறைதான் எனக் கணித்தனர். பின்னவர்கள் ''ஒரு நடைமுறைத்தத்துவம்'' எனக் கணித்தனர்.

லெனினியத்தை வியாக்கியானப் படுத்துவதில் மற்றொரு போக்கையும் நாம் குறிப்பிட வேண்டும்-சோவியத் யூனியனில் டெபோரின் அவரைப் பின்பற்றியவர்கள்; வெளிநாடுகளில் ஜார்ஜ் லியூகாக்ஸ் அதே போல் 1920 களில் முளைத்து பின்னர் அவக்கியாதி பெற்ற, முதலாளித்துவ புதிய மார்க்சிய பிராங்பர்ட் பள்ளி என வளர்ச்சி பெற்ற பிராங்பர்ட் வட்டம் ஆகியோரது போக்கு. இந்தத் தத்துவஞானிகள், தத்துவார்த்த ரீதியில் லெனினியம், இயற்கையோடு மக்களது உறவுகள், மக்களுக்குள்ளாகவேயான உறவுகள் ஆகியவற்றின் ஒரு ஆய்வு தான் என்றனர் லெனினியத்தை ''நடை முறையின் ஒரு தத்துவம்'' என்றும் முத்திரை குத்தினர்.

மார்க்சியத்திற்கு லெனினது பங்களிப்பைப் பற்றிய மிகவும் கொச்சையான பொய்மைப்படுத்தல்களில் ஒன்று, புரட்சிகர நடைமுறையுடன் லெனினியத்தை அடையாளம் காட்டி ஒரு சித்தாந்தம் என்ற முறையில் மார்க்சியத்திலிருந்து மாறுபட்டது என்று கூறுவதாகும். இந்தப் போக்கு கார்ல் கவுட்ஸ்கியால் கட்டவிழ்த்து விடப்பட்டதாகும். முன்னாள் மார்க்சியவாதியான இவர் 1914-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இரண்டாவது அகிலத்தையும், 1918-ம் ஆண்டு ஜெர்மனியின் பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் நிர்மூலமாக்க இயன்ற தனைத்தையும் செய்தவர். சோவியத் நாட்டில் அக்டோபர் புரட்சிக்குப்பகிரங்க விரோதியானார். அக்டோபர் புரட்சிக்குப் பின் தான் எழுதிய சில பிரசுரங்களின் மூலம் அவர் தனது மார்க்சிய எதிர்ப்புக் கருத்துக்களையும் லெனினியத்தின்பால் உள்ள அப்பட்டமான வெறுப்பையும் பிரதிபலித்தார்—**பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்** (1918) **பயங்கர வாதமும் கம்யூனிஸமும்** (1919).

லெனினியம் முழுக்க முழுக்க ருஷ்யப் புரட்சியின் நடைமுறைதான் என வலியுறுத்திய கவுட்ஸ்கி அவசியமாகவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரச் சித்தாந்தத்தையும் மறுத்தார். இந்தச் சித்தாந்தம் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸினால் வகுத்தளிக்கப்பட்டது என்ற உண்மையைப் புறக்கணித்த அவர் மார்க்சியத்தை ஒரு ஆய்வியலாகவும், லெனினியத்தை "இரண்டு எதிர்மறை ஆய்வு"களுக்கும் மாறுபட்ட நடைமுறை என்றும் பிரகடனம் செய்தார்: "ஜனநாயகம்—சர்வாதிகாரம்"[59] மார்க்ஸ் ஒரு பொழுதுமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும்; அரசாங்க அதிகாரம் மற்றும் நடைமுறை ஆட்சியின் வழி முறைகளுக்குமிடையே யுள்ள தொடர்புகளைப் பார்த்ததில்லை என்று அறுதியிட்ட அவர் வெங்கலக் குரலில் மார்க்சியத்தைப் பொய்ம்மைப் படுத்தினார். லெனினியத்தை அவர் "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்" என்பதற்குப் பதில் "விவசாயிகள் வர்க்க சர்வாதிகாரம்" என்றழைத்தார்.[60] இங்ஙனம் மனச்சாட்சிக்கு

மதிப்பளிக்காமல் அவர் அபத்தமாக வார்த்தை ஜாலங்களிலிறங்கினார். அவரது மற்றொரு பிரசுரமான **பயங்கர வாதமும் கம்யூனிஸமும்** என்பதில் வர்க்கப் போராட்டத்தின் மார்க்சிய சித்தாந்தத்தை நிராகரித்தார். "முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே ஒரு தெளிவான பிரிவினைக் கோட்டை வரைவது சாத்தியமில்லை." எனப் பிரகடனம் செய்தார். இத்தகைய பிரிவினைகளில் எப்பொழுதுமே சில ஒருதலைப் பட்சமான அம்சங்கள் உள்ளன. அவை சோவியத்துக்கள் என்ற கருத்தையே, ஒரு சர்வாதிகார ஒரு தலைப்பட்ச ஆட்சியின் மிக உயர்ந்த பொருத்தமான அடிப் படையாகத் திருப்புகின்றன"[61] கவுட்ஸ்கி மார்க்சியத்திலிருந்து முற்றிலுமாக ஓடிப் போனதை 1918ம் ஆண்டிலேயே லெனின் அவரது **பாட்டாளி வர்க்கப் புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும்** என்ற நூலில் அம்பலப் படுத்தி விட்டார். எனினும் லெனினியம் மற்றும் அக்டோபர் புரட்சியைப் பற்றிய கவுட்ஸ்கியின் கருத்துக்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்த சந்தர்ப்ப வாதிகளால் அனுசரிக்கப்பட்டது.

இவர்களுள் முக்கியமான ஒருவர் ட்ராட்ஸ்கி. இவர் என்றைக்குமே ஒரு தெளிவான சித்தாந்த நிலையை வரையறுத்துக் கொண்டதில்லை. அவர் கவுட்ஸ்கியின் கருத்துக்களையும், வெறிபிடித்த சந்தர்ப்ப வாதிகளின் கருத்துக்களையும் கூடப் பயன்படுத்தினார். ஒரு வகையான தேடித் திரட்டிய தத்துவத்தில் கலப்பதற்காக அவர் அராஜக வாதக் கருத்துக்களையும் எண்ணற்ற மார்க்சிய எதிர்ப்புப் போக்குகளின் யோசனைகளையும் பயன்படுத்தினார். இதில் கருத்து முதல் வாதம், வறட்டுத் தத்துவம், நேர்க் காட்சி வாதம், ஹெகலியனிஸம், சமூக டார்வின் வாதம், மற்றும் கொச்சைத் தனமான எந்திர நுட்ப வாதம் போன்றவைகள் விசித்திர மான முறையில் கலக்கப்பட்டுள்ளன.

அக்டோபர் புரட்சிக்கு நீண்ட காலம் முன்னரே, லெனினியத்துக்கு விரோதமான தனது நிலையை ட்ராட்ஸ்கி

வெளிப்படுத்தினார். ஆனால் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் லெனினது கருத்துக்கள் பரவிப் படர்ந்து புரட்சியின் வெற்றியைச் சாதித்துக் காட்டியதும் அவர் தனது சொந்தக் கருத்துக்கள் லெனினியத்துக்கு மிக நெருக்க மானவை என்று நிருபிக்க முயன்றார். லெனினது மறை வுக்குப் பின் "அக்டோபரின் படிப்பினைகள்" என்ற தனது கட்டுரையில் ட்ராட்ஸ்கி லெனினியம் தனது சொந்தக் கருத் துக்களின் நடைமுறை அமுலாக்கம்தான் என அறிவித்தார். புரட்சிக்கு கொஞ்ச காலம் முன்னர் லெனின் எழுதியதாவது: "ஒரு நாள் ட்ராட்ஸ்கி ஒரு குழுவின் வியாபாரத்திற்குத் தயாராயிருக்கும் சித்தாந்தத்திலிருந்து கொஞ்சம் எடுத்துப் பயன்படுத்துவார்; அடுத்த நாள் மற்றொரு குழுவுக்குச் சொந்தமானதை எடுத்துப் பயன் படுத்துவார். பின்னர் இரண்டு குழுக்களுக்கும் அப்பாற் பட்டவன், மேலானவன் என்று தன்னைப் பிரகடனப் படுத்திக் கொள்வார்."[62] புரட் சிக்குப் பின் லெனின் திரும்பத் திரும்ப ட்ராட்ஸ்கியின் கருத் துக்களை விமர்சித்தார். கட்சியின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் வண்ணம் அவர் கருத்துக்களை முன் வைப்பதை எதிர்த்தும், சோஷலிசத்திற்கான இயக்கத்தில் ஒரு சரியான கோட்பாட்டை வரையறுக்க வேண்டியது பற்றியும் கட்சியை எச்சரித்தார்.[63]

1924-ல் ட்ராட்ஸ்கி "அக்டோபரின் படிப்பினைகள்" என்ற கட்டுரையைக் கொண்டு வந்ததும் ட்ராட்ஸ்கிய வாதத்தின் சந்தர்ப்பவாத அரசியல் நிலைபாடுகளைக் கட்சி வன்மையாகக் கண்டித்தது. இந்தக் கால கட்டத்தில் நடந் தேறிய விரிவான கட்சி விவாதங்களில் ட்ராட்ஸ்கீயவாதம், லெனினியத்திற்கு எதிரானது; கட்சி விரோதப் போக்கைக் கொண்டது; குட்டி முதலாளித்துவ வர்க்க சாராம்சத்தைக் கொண்டு சித்தாந்த உள்ளடக்கத்தில் கொச்சைத்தனமானது என முடிவு செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டது. ட்ராட்ஸ்கீய வாதம், ஒரு குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாதம் என 15 வது கட்சிக் காங்கிரஸ் என அம்பலப்படுத்தி, கம்யூனிஸ்ட்

கட்சி உறுப்பினர் தகுதிக்கு விரோதமான கருத்துக்களைப் பரப்பியதற்காக கட்சி அணிகளிலிருந்து ட்ராட்ஸ்கியையும் அவரைப் பின்பற்றியவர்களையும் வெளியேற்றியது.

லெனினியம் ஒரு "நடைமுறை" தான் என வியாக்கியானப் படுத்துவதற்காக கட்சியின் மற்றொரு சந்தர்ப்பவாத உறுப்பினரான நிக்கோலாய் புகாரினால் ஒரு புதிய முயற்சி மேற் கொள்ளப்பட்டது. அக்டோபர் புரட்சிக்கு முன்னர் அவரது அராஜகவாத சிண்டிகாலிஸத் தவறுகளுக்காக லெனின் அவரை விமர்சித்திருந்தார். புரட்சிக்குப் பின்னர் இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் (1918) தலைவர் என்ற முறையில் அவர் உறுதியற்ற நிலையை எடுத்ததையும், தொழிற் சங்கங்களைப் பற்றிய விவாதத்தின் போது "பஃபர் குழு" கட்டுரையிலும் (1921), கடைசியாக அவரது "காங்கிரஸுக்கு ஒரு கடிதத்தில்" (1922) "இயக்கவியல் இல்லாத சித்தாந்த கர்த்தா" என வர்ணித்தும் லெனின் அவரை அம்பலப்படுத்தினார். 1920களின் துவக்கத்தில் தன்னை ஒரு சித்தாந்த கர்த்தா என்று பீத்திக் கொண்ட புகாரின் வெளியிட்ட பல நூல்களில் மார்க்சியச் சித்தாந்தத்தையும், சோவியத் யூனியனின் சோஷலிச நிர்மாண நடைமுறையையும் தனது சொந்த வழியில் வியாக்கியானம் செய்தார். அவரது படைப்புக்கள், லெனினியத்தின் சித்தாந்த உள்ளடக்கம் பற்றி கவுட்ஸ்கி மற்றும் ட்ராட்ஸ்கியைப் போன்று கொச்சையான மதிப்பீட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தத்துவார்த்தப் பிரச்சினைகளை அணுகும் போது அவர் தனது சித்தாந்த குருநாதன் ஏ. போக்டனோவின் கருத்துக்களையே பிரதிபலித்தார். குறிப்பாக மார்க்சிய இயக்கவியலுக்கு எதிராக அவர் வகுத்த "நடுநிலைச் சித்தாந்தத்தை"ப் பிரதிபலித்தார். லெனினது கருத்துக்களின் சித்தாந்த மதிப்பை முழுமையாகப் புறக்கணித்து விட்டு அவரை ஒரு வெறும் அரசியல் வாதியாக மட்டுமே புகாரின் கருதினார். இவ்வாறாக, மார்க்சியத்திற்கும் (அதன் பெருமளவு நேர்காட்சிவாத வியாக்கியானத்தில்) லெனினது நடைமுறைச் செயல்

பாடுகளாக அவர் பார்த்த, லெனினியத்திற்குமிடையே ஒரு வேறுபாட்டைச் சிருஷ்டிப்பதற்காகப் பாடுபட்டார்.

லெனினியம் பற்றிய கவுட்ஸ்கியின் கணிப்பையும், ட்ராட்ஸ்கி மற்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களது கருத்துக்களையும் புகாரின் எடுத்த நிலைபாட்டையும், கட்சி, முனைப்புடன் பகுப்பாய்ந்தது. கட்சியின் விமர்சனம் முக்கிய ஆக்கபூர்வமான முடிவுகளைக் கொண்டிருந்தது. இந்தக் கருத்துக்கள் எங்ஙனம் தவறானவை என்று அம்பலப்படுத்திய பொழுதே ஒரு புதிய வரலாற்றுக் கட்டத்தில் மார்க்ஸ்-எங்கெல்ஸ் கருத்துக்களின் வளர்ச்சியில் ஒரு தலையாய போக்காக லெனினியத்தின் மகத்தான சித்தாந்த முக்கியத்துவத்தை கட்சி வலியுறுத்தியது. லெனினது படைப்புக்களைக் கற்றறிய வேண்டியதின் அவசியம் விசேடமாக வலியுறுத்தப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி எதிர் நோக்கியுள்ள பிரதான சித்தாந்தக் கடமை இது தான் என வரையறுக்கப் பட்டது.

1920களில், கார்ல் கோர்ஸ்ச்சும் 'புதிய எதிர்ப்பணி' என்று சொல்லப்பட்ட அவ்வணியின் உறுப்பினர்களும் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இவை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் லெனினிய எதிர்ப்பின் மற்றொரு வடிவமாகும். 1923-ல் அப்பொழுது ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகவிருந்த கார்ல் கோர்ஸ்ச் தனது **மார்க்சியமும் தத்துவமும்** என்ற நூலைப் பிரசுரித்தார். அதில் அவர் மார்க்சியத் தத்துவம் பற்றிய தனது சொந்தப் பொதுக் கணிப்பையும் லெனினது கருத்துக்களில் அதன் தாக்கத்தையும் தந்திருந்தார். பியூவர்பேக் மற்றும் ஹெகலின் ஆராய்ச்சி மெய்ம்மைகளின் ஒரு கலவைதான் மார்க்சியத் தத்துவம் என்று அறிவித்த கோர்ஸ்ச் இவ்வாறாக மார்க்சியம் ஒரு அடிப்படையான உறுதியான சித்தாந்தம் என்பதை மறுத்தார். லெனினியத்தைப் பொறுத்தமட்டில் ''தனது சித்தாந்தப் படைப்புக்களின் பிரதான காரண காரியம் மார்க்சின் மெய்யான போதனைகளை சித்தாந்தப் புனருத்

தாரணம் செய்வதாயிருக்க வேண்டும் என்பதை லெனின் கருத்தில் கொள்ளவே இல்லை'' என்றார் கோர்ஸ்ச்.[64] அந்தச் சமயத்தில் மார்க்சியத்தை வியாக்கியானம் செய்ய மூன்று சுதந்திரமான வழிகள் இருந்ததாக கோர்ஸ்ச் கூறினார்: கவுட்ஸ்கியனிஸம்; ''ஆஸ்ட்ரோ - மார்க்சியம்'' மற்றும் லெனினியம்.[65] ''கடைசியாகக் கூறப்பட்டது சமூக ஜன நாயக மார்க்சியத்தின் அடிமைச் சங்கிலியென்னும் பாரம் பரியங்களிலிருந்து விடுவிக்க உதவுகிறது......உழைக்கும் மக்களின் உணர்வுகளை ஒடுக்குகிறது......பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தில் புதிய புரட்சிகரக் கட்டத்தின் நடைமுறைத் தேவைகளினால் கட்டளையிடப்படுகிறது''[66] என்றார் அவர். லெனினியத்தின் பிரதான உள்ளடக்கம் 20-ம் நூற்றாண்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் உடனடித் தாக்கத்தைப் பெற்றிருந்த ''மார்க்சிய நோக்கு களின்'' வளர்ச்சியே என்று விளக்கம் கொடுத்துக் கொண்டே போனார். இவ்வாறாக அவர் லெனினது கருத்துக்களின் சித்தாந்த மதிப்பை, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நடைமுறைப் பிரச்சினைகளது பிரத்தியேக தனிநபர் வியாக்கியானங்களாகக் குறைத்தார்.

கோர்ஸ்ச்சின் நிலைபாடு உலகெங்கணுமுள்ள மார்க்சிய, லெனினிய வாதிகளின் கோபத்தைக் கிளறியது. கோர்ஸ்ச் வேண்டுமென்றே லெனினியத்தின் உள்ளடக்கத்தைச் சிறுமைப்படுத்தி அதன் சித்தாந்தப் புரட்சிகரச் சத்தையும் சாரத்தையும் திசை திருப்பிக் குழப்பினார் என்பதை லெனினது உண்மையான சீடர்கள் எடுத்துக் காட்டினர். அவரது புத்தகம் வெளிவந்த உடனேயே ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த சந்தர்ப்பவாதிகளை அவர் ஆதரித்ததின் மூலம் இது ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டது. அவரது கருத்துக்கள் உரிய நேரத்தில் ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சியினால் கண்டிக்கப்பட்டு அவர் கட்சி யிலிருந்து வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து அவர் லெனினியம் மற்றும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பரம வைரியானார்.

சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த (போல்ஷ்விக்ஸ்) ''புதிய எதிர்ப்பணி''யின் தலைவர்களான ஸினோவிவ், காமனெவ் ஆகியோர் கோர்ஸ்ச்சின் அதே காலகட்டத்தில் லெனினியத்தைப் பற்றிய தங்களது சொந்த வியாக்கியானங்களுடன் வெளி வந்தனர். 1925-ல் **லெனினியம்** எனத் தலைப்பிட்டு ஸினோவிவ் ஒரு புத்தகத்தைப் பிரசுரித்தார். அதில் அவர் கோர்ஸ்ச்சைப் போன்றே, 20-ம் நூற்றாண்டில் லெனினியத்தின் உள்ளடக்கம், இடம், பாத்திரம் ஆகியவை பற்றி வியாக்கியானம் செய்ய முயன்றிருந்தார். பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள, பெருமளவு விவசாயப் பெருங்குடி மக்களைக் கொண்ட ருஷ்ய நாட்டிற்கு மட்டுமே லெனினது போதனைகள் பொருத்தமானவை என அவர் பார்த்தார். ருஷ்ய நாட்டின் சூழ்நிலைகளுக்கேற்ப மார்க்சியத்திற்கு வால்பிடிப்பவை என லெனினது சித்தாந்தக் கருத்துக்களைச் சிறுமைப்படுத்தினார். அது ஒரு தவறு என வரையறை செய்து, முதலில் ஒரு நாட்டில் மட்டும் சோஷலிசத்தைக் கட்டலாம் என்று லெனின் ஆருடம் கூறியதை நடைமுறை சாத்தியமற்றதென்றும் அவர் பகன்றார். மேலைய நாடுகளின் புரட்சியைத் தொங்கிக் கொண்டு சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிசத்தைச் சமைப்பது—சோவியத் அதிகாரம் தோல்வியைத் தழுவுவதில்தான் போய் முடியும் என்றார் அவர்.

ஸினோவிவின் நெருங்கிய நண்பரும் ''புதிய எதிர்ப்பணி''யின் ஒரு பங்காளியான காமனெவும் மார்க்சியத்தின் வளர்ச்சியில் லெனினியக்கட்டம் என்ற கருத்தமைவை ஒரு சந்தர்ப்பவாத பாணியில் திரித்துக் குழப்புவதற்கு பங்களிப்பை வழங்கினார். **கிரானட் கலைக் களஞ்சியத்**திற்காக தான் எழுதிய லெனினியம் என்ற கட்டுரையில் காமனெவ் ''ஒரு பாட்டாளி வர்க்கப்புரட்சி எங்கு துவங்குகிறது என்பதைப் பற்றிக் கவலையில்லை. பல நாடுகள் பங்கு கொண்டால்தான் புரட்சி வெற்றி வாகை சூடமுடியும்''[67]

என்று சொல்வதே லெனினியச் சித்தாந்தம். 20-ம் நூற்றாண்டின் மார்க்சியத்தின் ஒரு பொது ஆய்வியல் அல்லது கம்யூனிஸ்ட் சித்தாந்தச் சிந்தனையில் ஒரு பொது வான வளர்ச்சிப் போக்கு என்பதற்கு பதிலாக மேற்கண்ட வாறு அவர் லெனினியத்தை அழைத்தார். இவ்வாறாக பல நாடுகளில் புரட்சி வெற்றி வாகை சூடும் சாத்தியம் பற்றிய ஒரு ஆய்வியல்தான் லெனினியம் என அவர் அதைச் சிறுமைப்படுத்தினார். சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய லெனினது கோட்பாட்டை மிலேச்சத்தனமாகத் திருத்தியது மட்டுமல்ல இது; காமனெவின் கருத்துக்கள், ''மார்க் சியத்தின் ஏளனமான சித்தாந்தப் பிரச்சினைகளில் இப்பொழுதுதான் லெனின் ஈடுபட்டுள்ளார். ஒட்டு மொத்த மாக அவரது போதனை மார்க்சியச் சிந்தனையின் ஒரு உறுதியான முன்னேற்றத்தை முன்வைக்கவில்லை'' என்பதை யும் வலியுறுத்துவதாகும்.

ஸினோவிவ் மற்றும் காமனெவ்வின் கருத்துக்களுக்கு சோவியத் மார்க்சியவாதிகள் சுடச்சுடப் பதிலடி கொடுத் தனர். ''புதிய எதிர்ப்பணி'' மிகக்கேவலமான முறையில் தோல்வியைத் தழுவியது அதன் தலைவர்களது கருத்துக் களில் காணப்பட்ட சித்தாந்தத் தோல்வியைத்தான் ஊர்ஜிதப்படுத்தின.

1920களில் தத்துவார்த்த விவாதங்கள் நடந்தேறிய போது லெனினியத்தைத் திரித்துக் குழப்புவதற்கான முயற்சி களின் மூன்றாவது போக்குக்கு ஜார்ஜ் லியூகாக்ஸ் தலைமை தாங்கினார்; அது ஏ. டெபோரின், ஐ.ஸ்க்வோர்ட்ஸோவ்—ஸ்டீபனோவ் தலைமையில் இயங்கிய சோவியத் தத்து வார்த்தக் குழுக்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

1923-ம் ஆண்டு, 1919-ம் வருடத்திய ஹங்கேரியப் புரட்சியில் தீவிரமாகப் பங்கு கொண்ட முன்னணி ஹங்கேரியத் தத்துவஞானி ஜார்ஜ் லியூகாக்ஸ் அவரது

**வரலாறும் வர்க்க உணர்வும்** என்ற நூலைப் பிரசுரித்தார். அது வலதுசாரி திருத்தல் வாதிகளின் வேதப்புத்தகமாகியது. மார்க்சியத்தின் விரோதிகள், தங்களது சால்ஜாப்புகளை நிரூபிக்கும் முயற்சியில் இன்று வரை அதிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்கள். லியூகாக்ஸே சிறிது காலத்திற்குப் பின்னர் தனது புத்தகத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: ''அந்தக் கட்டத்தில், அப்பொழுதுதான் நான் ஹெகலின் தத்துவத்திலிருந்து மார்க்சியத் தத்துவத்திற்கு சென்று கொண்டிருக்கிறேன். இதற்கிடையில் மார்க்சியம் (வரலாறும் வர்க்க உணர்வும் என்ற அவரது நூலில் அவர் வளர்த்த கருத்துக்களைப்பொருள்கொள்கிறார்-சுவோரோவ்) லக்ஸம்பர்க்கைச் சேர்ந்தவர்களது மிச்சசொச்சங்களுடன் அதீதமான செக்டேரியன் வகைகளின் பளுவைத் தாங்கிய வண்ணமிருந்தது. அந்தக் கட்டத்தில் இயக்கவியலின் மிகச் சிக்கலான பிரச்சினைகள் தொடர்பாக எனது நிலை தப்புத் தாளங்களாகவேயிருந்தன. பிரதிபலிப்புச் சித்தாந்தத்தை ஒரு பகுதியாகவும் இயற்கையின் இயக்கத்தை முழுமையாகவும் நான் நிராகரித்தேன்''[68] லியூகாக்ஸின் இந்தச் சுயவிமர்சன அறிக்கை லெனினியத்தின் அடிப்படையான பல முன்மொழிதல் உறுதிகளை அவர் மறுத்தார் என்பதைக் காட்டுகின்றன. லெனினியத்தைப் பற்றிய அவரது மதிப்பீட்டிலும் அவர் பல தவறான தீங்கிழைக்கக் கூடிய தத்துவக் கூறுகளை வழங்கியிருந்தார். உதாரணமாக பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைசிறந்த தலைவர் லெனின் மறைந்த உடன் அவர் எழுதிய ''லெனின்'' என்ற கட்டுரையில் லியூகாக்ஸ் அது மானுட அனுபவம், மக்களின் பின்னிய செயல்விளைவு, மற்றும் அனைத்துச் சமுதாயங்களினதும் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்ததில்தான் லெனினியத்தின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது என்றார். அதன் பொதுவான சித்தாந்த மற்றும் பொதுவான சமூக உள்ளடக்கத்தைப் புறக்கணித்துவிட்டு லெனினியம், ஒரு நடைமுறையின் சித்தாந்தம் மட்டுமே என்று அவர் கருதினார். மார்க்சிய விஞ்ஞானிகள் லியூகாக்ஸின் கருத்துக்

களை கடுமையாக விமர்சித்தனர். 1920-ம் ஆண்டிலேயே லியூகாக்ஸின் ஒரு கட்டுரை தொடர்பாக "அது மிகவும் மோசமானது; அதீத இடதுசாரித் தன்மை கொண்டது; அதிலுள்ள மார்க்சியம் வெறும் வார்த்தை ஜாலமே; தற்காப்பு மற்றும் எதிர்த்துத் தாக்குதல் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டும் அதன் உத்திகள் செயற்கையானவை தெளிவான மற்றும் துல்லிய வரலாற்றுச் சூழல்கள் பற்றி அது திண்ணிய பகுப்பாய்வை வழங்கவில்லை. எது மிகவும் அவசியம் என்பதை அது கணக்கில் எடுத்துக் கொள்ள வில்லை"[69] என்று லெனின் எழுதியிருந்தார். லியூகாக்ஸின் புத்தகம் வெளி வந்ததும் அதுபற்றி சோஷலிசப் பேரவையில் ஒரு விவாதம் நிகழ்ந்தது. லியூகாக்ஸின் கருத்தமைவு "பாட்டாளி வர்க்கக் கருத்து நிலை அல்ல; ஆனால் பிண்டப் பிரமாணமான வாழ்க்கையைப் பற்றிய விஷயஞானமில்லாத ஒரு அறிவாளியின் கருத்தேதான்" என்றும் லியூகாக்ஸின் கருத்துக்கள் "சில புத்தகங்களிலிருந்து, மிகவும் சரியாகச் சொல்வதென்றால் பல்வேறு முதலாளித்துவத் தத்துவ ஞானிகளின் புத்தகங்களிலிருந்து"[70] கடன் வாங்கப் பட்டவை என்றும் புகழ்பெற்ற, ஹங்கேரிய நாட்டு மார்க்சிய வாதியான 'லாஸ்லோ ரியூடாஸ்' குறிப்பிட்டுக் காட்டினார். ரியூடாஸின் நிலையை இதர விஞ்ஞானிகளும் ஆதரித்தனர். மார்க்சியத்திற்கும் அதற்கும் பொதுவான கருத்து ஒற்றுமை எதுவும் கிடையாதென, லியூகாக்ஸின் கருத்து நிலை கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியது. பின்னர் அவர் தனது தவறுகளை ஒப்புக்கொண்டு லெனினும் அவரது கருத்துக்களும் வகித்த பாத்திரத்தின்பால் ஒரு சரியான கருத்தைக் கொள்ளலானார்.

ஒரு முன்னாள் மென்ஷ்விக்கும், பிளெக்கனோவின் மாணவரும் 1920களில் சோவியத் தத்துவத்தில் ஒரு முக்கிய பிரமுகருமான ஏ.டெபோரினும். லியூகாக்ஸின் புத்தகத்தை அதன் சம்பிரதாயமான, குறுகிய அணுகும் முறைக்காக விமர்சித்தார். இருந்தாலும் அவரது சொந்தக் கருத்துக்கள்.

லியூகாக்ஸை ஒட்டியே இருந்தன. சீக்கிரமே இது வெட்ட வெளிச்சமாகியது.

சிறிது காலத்திற்குப்பின் 1924-ல் டெபோரின், லெனினைப் பற்றி **''மார்க்சியப் பதாகையின் கீழ்''** என்ற சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுதினார். பின்னர் அதை விரிவு படுத்தி **சிந்தனையாளர் லெனின்** என ஒரு புத்தகமாகப் பிரசுரித்தார். கட்சியின் தலைவராக, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவராக லெனினது பாத்திரத்தை வலியுறுத்திக் காட்டிய அதே சமயத்தில் லெனின் ஒரு ''அரசியல் பிரமுகர்'' மற்றும் ஒரு ''நடைமுறைச் செயல்வீரர்'' என்பதற்கிடையே ஒரு தெளிவான வேறுபாட்டைக் காட்டினார். பிளெக்கனோவை ஒரு தத்துவஞானியாகச் சித்தரித்தார். ''லெனின் எப்போதாவது அபூர்வமாகத்தான் தனது படைப்புக்களில் தத்துவார்த்தப் பிரச்சினைகளைத் தொட்டிருந்தார். அப்பொழுதும் கூட மார்க்சின் கருத்துக்களை வளர்ப்பதற்குப் பதில் பயன்படுத்தும் முறையிலேயே கையாண்டார்'' என்பது டெபோரினது அபிப்ராயம். லெனினது **''தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்''** என்ற நூலின் முன்னுரையில் டெபோரின் எழுதியதாவது ''அவர் (லெனின்) தான் மேற்கொண்ட நோக்கத்தை நிறைவேற்றி விட்டார். போதுமான அளவுக்கு அவர் இயக்கவியல் பொருள்முதல் வாதத்தை அபிவிருத்தி செய்து அதை ஒரு உயர்ந்த கட்டத்தில் தூக்கி வைத்து விட்டார்.''[71] இது லெனினது படைப்பை உறுதிப்படுத்துவதற்குச் சமமாகும். அவர் திட்டமிட்டு ஆனால் எழுதாத புத்தகத்தின் ஒரு பூர்வாங்கம் தான் அது—ஒரு அணுகும் முறை. இன்றும் கூட நாம் காணக் கூடியது.

டெபோரின் கருத்துப்படி, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அரசியலும் உத்திகளுமே லெனினியத்தின் முக்கிய உள்ளடக்கமாகும்.[72] எனவே அதன் சித்தாந்த உள்ளடக்கம் தனிமைப் படுத்தப் பட்டதுண்டு துக்காணிகளாகக் குறைக்கப்படுகிறது. ஒரே ஒரு முழுமையானதாகச்

சேரவில்லை. டெபோரினது சீடர்களும், சகாக்களும், தங்களது ஆசான் முன்வைத்த கருத்துக்களை விளக்கி மெய்ம்மைப் படுத்த முயன்றனர். இதன் விளைவாக 1920 களின் இறுதிக்குள் சோவியத் தத்துவஞானிகளின் ஒரு குழு தோன்றியது. அவர்கள் தங்களை இயக்கவியல்வாதிகள் என அழைத்துக் கொண்டனர். இருந்தபோதிலும் அவர்களது எதிரிகள் ''மரபுவழி வாதிகள்'' அல்லது ''மரபு வழித்திரிபு'' என அவர்களுக்கு முத்திரை குத்தினர்.

ஒரு முன்னணி மார்க்சியவாதி ஐ. ஸ்க்வோர்ட்ஸோவ்—ஸ்டீபனோவினாலும் மற்றும் பல மேதைகளினாலும், பெரும்பாலும் தத்துவார்த்தப் பிரச்சினைகளில் அக்கறை கொண்ட இயற்கை விஞ்ஞானிகளினாலும் டெபோரின் விமர்சிக்கப்பட்டார். அவர்களது நிலை பெருமளவுக்கு கீழ்க் கண்டவாறு வருணிக்கப்படலாம்: லெனினைப்பற்றியும் லெனினியத்தைப் பற்றியும் ஏராளமான முகஸ்துதி அம்சங் களிருந்தாலும் அவர்கள் தங்களது வழியிலேயே லெனி னியத்தை வியாக்கியானம் செய்தனர்; பொருளின் வேகத் தினது சிக்கலான வடிவங்களை ஒரு சாதாரணமானதாகக் குறைக்கும் ஒரு முயற்சி என்று கருதினர். அதாவது யாந்திரீக மான வேகத்திற்கு 'இயக்கம்' யாந்திரீகமான சட்டங்களின் ஒரு மொழியாக்கப்படலாம் என்பது அவர்களது அபிப்ராயம். 1920களில் நடந்தேறிய இவ்விவாதங்களின் வரலாற்றில் இந்தக் குழுவினர் இயந்திர வல்லுனர்கள் என்று அறியப் பட்டனர். டெபோரினைப் பின்பற்றியவர்களுக்கும் இயந்திர வல்லுனர்களுக்குமிடையேயான விவாவதக் கலை மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் பல முக்கியமான பிரச்சினை களைக் கொண்டிருந்தன. ஆனால் எந்தவிதமான ஆக்கபூர்வ மான பரிகாரங்களையும் சிருஷ்டிக்கவில்லை. ஏனென்றால் இவர்களில் எந்தப் பகுதியினருமே முழுமையாக மார்க்சியத் தைப் பற்றியும் குறிப்பாக லெனினியத்தைப் பற்றியும் சரியான கருத்து நிலையைக் கொண்டிருக்கவில்லை. 1920களின் கடைசியில் விவாதக்கலை மிகவும் அறிவாற்றல்

நிறைந்த திண்ணிய குணாம்சத்தைப் பெற்றது. இரு பக்கங்களிலுமுள்ள தவறான கருத்துக்கள் மேலும் மேலும் புலப் படுத்தப்பட்டன.

1930-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் கம்யூனிஸ்ட் கலைப் பேரவையின் தலைமைக்குழு சோவியத் தத்துவத்தின் நிலைமை பற்றிய விவாதத்தில் இரண்டு நாட்களைக் கழித்தது. டெபோரினைப் பின்பற்றுகிறவர்களை, இயந்திர வல்லுனர்களும் ஆக இருதரப்பினருமே தவறான நிலையைக் கொண்டவர்கள் தான் எனக்குறிப்பிடப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 1928-ல் இயந்திரவியல்வாதம் சோவியத் தத்துவத்தில் நேர்காட்சி வாதத்தின் குறிப்பான புனரமைப்பாகப் பெருமளவிற்குக் காணப்பட்டது. இப் பொழுது இந்த விமர்சனம் தொகுத்தளிக்கப்பட்டது. கீழ்க் கண்ட வாசகத்தைக் கொண்ட ஒரு தீர்மானத்தை தலைமைக் குழு நிறைவேற்றியது. ''டெபோரின் குழுவினரது கருத் துக்கள் கீழ்க்கண்டவற்றின் மூலம் விரிவாகப் பிரதிபலிக்கப் பட்டுள்ளது.(அ)அவை நடைமுறையிலிருந்துசித்தாந்தத்தைப் பிரித்துத் தனிமைப் படுத்துகின்றன (ஆ) லெனினை பொது வாக ஒரு சித்தாந்த கர்த்தா என்பதிலிருந்தும் குறிப்பாக ஒரு மார்க்சியத் தத்துவஞானி என்பதிலிருந்தும் அவை குறைத்து மதிப்பிடுகின்றன. (இ) இயக்கவியல் பொருள் முதல்வாதத் தின் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டமாகத் தத்துவத்தில் லெனினி யத்திற்கு ஒரு இடம் இருப்பதை அவர்கள் மறுக்கின்றனர். (ஈ) தத்துவத்திலும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்திலும் பிளெக்கனோவின் தவறுகளைக் கேடு பயக்குமாறு செய்கின் றனர். (உ) தத்துவத்தில் கட்சி சார்புநிலை என்ற லெனினது கோட்பாட்டை அவர்கள் தவறாக வியாக்கியானம் செய்து திரித்துக் குழப்புகின்றனர்.''[73].

1931-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ம் நாள், **மார்க்சியப் பதாகையின் கீழ்** சஞ்சிகை பற்றி'' மத்தியக்கமிட்டி நிறை வேற்றிய தீர்மானம் கூறுவதாவது: ''அதன் பணிகளில் சில சாதனைகளைக் கண்டிருந்தாலும் குறிப்பாக மார்க்சியத்தைத்

திருத்துவதற்கு முயன்ற இயந்திரவியல் வாதத்தை எதிர்த்த போராட்டத்தில் சில சாதனைகளை ஈட்டியிருந்தாலும் அவை ஒரு புறம் இருக்க அந்தச் சஞ்சிகை லெனினது செயல்துறை அறிவுரைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது......'' இது அதன் தலைவர்கள் எடுத்த இணக்கமில்லா நிலையின் விளைவாகும்—டெபோரின் மற்றும் அவரைப் பின்பற்றிய கரேவ், ஸ்டென், போன்றோர். ''அரசியலிலிருந்து தத்துவத்தைத் தனிமைப்படுத்திப் பிரிக்கும் போது, அதன் அனைத்துப் பணிகளிலும் தத்துவத்தில் கட்சி சார்பு நிலையில் ஒட்டிக்கொள்ளாமல்......சஞ்சிகையின் தலைமைப் பொறுப்பிலிருந்தவர்களின் குழு, இரண்டாவது அகிலத்தின் மிகத்தீங்கு விளைவிக்கக்கூடிய பாரம்பரியங்களில் ஒன்றையும் வறட்டுக் கோட்பாடுகளையும் புதுப்பித்தது. அதாவது நடைமுறையிலிருந்து சித்தாந்தத்தைப் பிரித்துத் தனிமைப்படுத்துவது.இவ்வாறாக அது பல அடிப்படையான பிரச்சினைகளில் மென்ஷ்விக், கருத்து முதல்வாத நிலையை எடுத்தது''[74]. மார்க்ஸியத் தத்துவம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை மேற்கோடிட்டுக் காட்டிய தீர்மானம், **மார்க்சியப் பதாகையின் கீழ்** சஞ்சிகையின் பிரதான கடமை அதற்கென லெனின் வகுத்துக் கொடுத்த திட்டத்தை அமுலாக்குவதாகும்; இயக்கவியல் பொருள் முதல்வாதத்தின் லெனினியக் கட்டத்தில் எழும் பிரச்சினைகளை ஆராய்வது; ஈவிரக்கமற்ற முறையில் மார்க்சிய எதிர்ப்பு மற்றும் லெனினிய எதிர்ப்புத் தத்துவார்த்தக்கூறுகளை விமர்சிப்பது போன்றவை.''[75]

இவ்வாறாக லெனினியப் பிரச்சினைகள் பற்றி 1920களில் நடந்த விவாதங்கள், சோவியத் யூனியனிலும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் மார்க்சியத் தத்துவச் சிந்தனையை வளர்ப்பதற்கு எடுக்கவேண்டிய முக்கிய திசை வழியைச் சித்தரிக்கும் விளைவை ஏற்படுத்தின: அதாவது லெனினியத்தின் தத்துவார்த்தக் கருத்துக்களைக் கற்றறிவது, விரிவாக்குவது, இதயங்களில் பதியச் செய்வது. அதேசமயம் உலகப் புரட்சிகரப் பரிணாமத்தை சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு

ஒன்றியத்தின் சோஷலிச நிர்மாணத்துடன் நடைமுறை நோக்குகளைத் தொடர்வது. இந்த விவதாங்களின் போக்கில் கட்சியைச் சேர்ந்த தத்துவஞானிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களது கருத்துக்கள் மார்க்சிய தத்துவார்த்த விஷயஞானத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் படர்ந்து பரவின. சோவியத் யூனியனிலுள்ள முற்போக்கான இயற்கை விஞ்ஞானிகளுடன் மார்க்சியத் தத்துவஞானிகள் நெருங்கிய தொடர்பேற்படுத்திக் கொண்டு இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களிலும் அதேபோல் சோஷலிச நிர்மாணத்திலும் சம்பந்தப்பட்டுள்ள பல முக்கிய தத்துவார்த்தப் பிரச்சினைகளுக்கு விளக்கமளித்தனர்.

1930 களில் அதாவது சோவியத் யூனியனில் சோஷலிசத்திற்கான அடித்தளங்கள் அமைக்கப்பட்டபிறகு சித்தாந்த ஆய்வியல் துறைகளில் தத்துவார்த்தச் சிந்தனை மகத்தான முறையில் முன்னேறியது. மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டத்தைக் கொண்டு செலுத்துவதற்கு அனைத்து முக்கியமான திசைகளிலும் பரந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்குத் தேவையான மிக அவசியமான சூழல்கள் உருவாக்கப்பட்டன. இவை எல்லாவற்றிலும் மிக முக்கியமானதென்ன வென்றால், லெனினியக் கட்டம் லெனினது மறைவோடு முடிந்துவிடவில்லை என்பது புலப்படுத்திக் காட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டதாகும். அவரது கருத்துக்கள் மார்க்சியத் தத்துவார்த்தச் சிந்தனையின் போக்கை ஒரு நீண்ட வரலாற்று ரீதியான தொலை நோக்குடன் தீர்மானித்தது. அன்று போல் இன்றும் அவரது கருத்துக்கள் வாழ்கின்றன; வளர்கின்றன; செயலாற்றுகின்றன. எனவே வருங்காலத்தில் மார்க்சியத் தத்துவத்தில் பரந்த அளவிலான ஆராய்ச்சி என்பது, மார்க்சியத்தின் தத்துவ விஞ்ஞானம் லெனினால் வகுத்துத் தரப்பட்ட செயல் திட்டத்தை நிறைவேற்றுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

## 4. சோவியத் சோஷலிசக் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிசத்தின் வெற்றியும் லெனினது தத்துவார்த்த மரபுரிமைச் செல்வமும்

1920களின் கடைசியில் மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டம், உலக மார்க்சியச் சிந்தனை வளர்ச்சியின் மையப் போக்குகளில் ஒன்றாக மலர்ந்தது. இங்கு நாம் புதிய வரலாற்றுச் சகாப்தத்தில், அவசியமான நிலையில், மார்க்சியத் தத்துவம் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் முழு அளவு பற்றிப் பேசுகிறோம். 1930களுக்கும் 1970களுக்கும் இடையில் லெனினியக் கட்டத்தின் பிரச்சினைகள் தொடர்பான பணி மூன்று காலகட்டங்கள் எனப் பிரிக்கப்படலாம். முதலாவது கட்டம் 1930 களில் நிலவி, சோவியத் மக்கள் ஹிட்லரின் பாசிஸத்தை எதிர்த்துத் துவக்கிய மகத்தான தேசபக்தப் போருடன் முடிவடைந்தது. இரண்டாவது கட்டம் போர் நடந்த ஆண்டுகளையும் உடனடியாக அதைத் தொடர்ந்த ஆண்டுகளையும் தழுவியதாகும். இந்தக் காலகட்டம் உலக சோஷலிஸ்ட் அமைப்பு முகிழ்த்ததையும், ஏகாதிபத்திய காலனி ஆதிக்க வீழ்ச்சியையும் கண்ட கட்டமாகும். மூன்றாவது கட்டம் 1960களும் 1970களும்—சோவியத் யூனியனில் ஒரு வளர்ச்சி பெற்ற சோஷலிஸ்ட் சமுதாயம் நிறுவப்பட்ட கட்டம். உலக சோஷலிஸ்ட் சமுதாய நாடுகளில் முதிர்ச்சி பெற்ற சோஷலிசம் சமைக்கப்பட்ட கட்டம். இந்தக் கட்டத்தில்தான் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களின் நாடுகளில் இளம் தன்னாட்சி உரிமை பெற்ற அரசாங்கங்கள் தோன்றின. உலக முதலாளித்துவ அமைப்பைக் கட்டிக் காக்கும் நாடுகளில், முதலாளித்துவத்தின் பொதுநெருக்கடி மிகமோசமாக முற்றியதும் இந்தக் கட்டத்தில்தான்.

1930 களில் இயக்கவியல் பொருள் முதல் வாதம் பிரச்சினைகள் பற்றி, சோவியத் மற்றும் வெளிநாடுகளது மார்க்சிய அறிஞர்களால் ஏராளமான நூல்கள் எழுதப்

பட்டன. இவற்றில் இயக்கவியல் மற்றும் பொருள் முதல் வாதம் பற்றிய லெனினது மிகமுக்கியமான முன் மொழி தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டு திண்ணிய வெளிப்பாடும் தரப்பட்டிருந்தன. கம்யூனிஸ்ட் கலைப்பேரவையின் தத்து வார்த்தக் கல்விக் கூடத்தின் அறிஞர்கள் **இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம்** என்ற ஒரு அடிப்படை நூலைப் பிரசுரித்தனர் (கம்யூனிஸ்ட் பல்கலைக் கழகங் களுக்கும் மேல்நிலை தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு மான ஒரு பாடப்புத்தகம்) இந்நூல் 1920களில் மார்க்சிய-லெனினியத் தத்துவார்த்தச் சிந்தனை கடந்து வந்த பாதையைத் தொகுத்துத் தந்தது. இதன் ஆசிரியர்கள் மார்க்சியத் தத்துவார்த்த ஆய்வின் முக்கிய பிரச்சினைகளை எல்லைக் கோடிட்டுக் காட்டினர். சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிசத்தைச் சமைக்கும் போதும் உலகப் புரட்சிப் பரிணாமத்தை விருத்தி செய்யும் போதும், ஒட்டுமொத்தமாக உலக சோஷலிச வளர்ச்சியின் போதும் காணக்கிடைத்த அனுபவங்களை பொதுமைப் படுத்திக்காட்டினர்.[76] இந்த நூல் விஷயங்களை ஒழுங்குப் படுத்தியிருந்த பாங்கும் முன்வைத்த பிரச்சினைகளும் அந்தச் சமயத்தில் தத்துவார்த்தபிரச்சினைகளின்பால்எடுக்கப் பட்ட அணுகும் முறைபற்றியும் அவை பகுப்பாய்வு செய்யப் பட்டதன் தரம் பற்றியும் ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற் படுத்தின. உதாரணமாக இயக்கவியல் பொருள்முதல் வாதம் பற்றிக் கவனித்த புத்தகத்தின் முதல் பாகம் கீழ்க்கண்ட பிரச்சினைகளை பரிசோதனை செய்தது: மார்க்சிய லெனினியம்; பாட்டாளி வர்க்கத்தின் ஒரு உலகப்பார்வை. (இதில் லெனினியம் மார்க்சிய வளர்ச்சியில் ஒரு புதியஉயர்ந்த கட்டமாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது); பொருள் முதல் வாதமும் கருத்து முதல் வாதமும்.(மார்க்சியத் தத்துவ மலர்ச்சியின் தோற்றுவாய்களும் வரலாறும்); இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் சிக்கலான பிரச்சினைகள் (உலகத்தின் பொருள் முதல்தன்மை பொருள் உணர்வுகள், மதிப்பீடு மற்றும் விஷயஞானம் பற்றிய ஆய்வுகள்); இயக்க

வியலின் சட்டங்கள்; மார்க்சியத் தத்துவத்தில் சித்தாந்தப் போராட்டம்; மற்றும் மார்க்சியத் தத்துவ ஆய்வியலில் லெனினியக் கட்டம் பற்றிய பொதுவான கணிப்பு.

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் குறிப்பிட்ட பிரச்சினைகள் பற்றி திரட்டு நூல்களாக எழுதப்பட்ட படைப்புக்களும்—இயக்கத்தின் சில பிரச்சினைகள், இயற்கை விஞ்ஞானங்களில் உள்ள தத்துவார்த்தப் பிரச்சினைகள், விஷயஞானம், தர்க்கவியல், தத்துவத்தின் வரலாறு இன்ன பிறவும் இந்தக் காலகட்டத்தில் பிரசுரிக்கப்பட்டன.[77] இயற்கை விஞ்ஞானத்தில் நவீனப் புரட்சியின்பால் லெனினது கருத்துக்களை மேலும் விரிவாக்கக் கூடிய நூல்களைப் பற்றி விசேடமாகக் குறிப்பிட வேண்டும் தத்துவஞானிகளோடு இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைக் கையாண்ட பல தலைசிறந்த இயற்கை விஞ்ஞானிகளும் இந்த நூல்களுக்குத் தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவர்களுள், அணு பௌதிகவியலைக் கண்டுபிடித்தவர்களுள் ஒருவரான பால்லாங்க்வின், அவரது சீடர் பிரடெரிக் ஜோலியோ-க்யூரி, பிரிட்டிஷ் இயற்கை விஞ்ஞானியும் வரலாற்று அறிஞருமான ஜாண் பெர்னால், என். மற்றும் எஸ். வாவிலோவ் குறிப்பிடத்தக்கவர்கள். தனது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் தலைசிறந்த ருஷ்ய விஞ்ஞானியான ஈவன் பாவ்லோவ், உயர்ந்த நரம்பியல் செயல்பாட்டின் உயிர்இயலில் பங்கு கொண்டுள்ள தத்துவார்த்தப் பிரச்சினைகளை பொருள்முதல் கொள்கை நிலைபாட்டிலிருந்து புலன் ஆய்வு செய்வதில் தீவிரமாகப் பங்கெடுத்தார். மற்றும் வி. நெவ்ஸ்கி, வி. அடோராட்ஸ்கி, ஏ. லூனா சார்ஸ்கி மற்றும் இதர பல முக்கியமான லெனினியக் கம்யூனிஸ்டுகளும் மார்க்சிய லெனினிய உலகக் கண்ணோட்டத்தைப் பரப்புவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு உழைத்தனர்.

1930களில், இயக்கவியல் பொருள் முதல்வாதப் பிரச்சினைகள் பற்றி வெளிவந்த புத்தகங்களில் அடிப்படை, **பிரதிபலிப்பின் ஆய்வியல்** என்ற, தலைசிறந்த பல்கேரிய

மார்க்சியஞானி தோடர் பாவ்லோவ் எழுதிய புத்தகம் விசேடமான பாராட்டுக்குரியதாகும். 1936-ல் அச்சு வாகனமேறி வெளிவந்த இந்தப் புத்தகம் கீழ்க்கண்ட மிக முக்கியமான பிரச்சினைகள் பற்றிப் பரிசீலித்தது. மார்சிய லெனினியத் தத்துவத்தை பொருள் மற்றும் உணர்வின் ஒற்றுமையாக, இலக்கு மற்றும் தோற்றமாக சித்தாந்தம் மற்றும் நடைமுறையாகப் பார்ப்பது; தத்துவத்திற்கும் விசேடப்படுத்தப்பட்ட விஞ்ஞானங்களுக்குமிடையேயான தொடர்பு, உண்மை பற்றிய மார்க்சிய-லெனினிய ஆய்வு இன்னபிற. பாவ்லோவ், ஒருபுறம் தத்துவத்திற்கும் மற்றொருபுறம் பௌதிகம், உளவியல், மொழியியல் மற்றும் விசேட அறிவாற்றலின் இதர துறைகளுக்குமிடையே உள் உறவுகளில் ஒரு தொலைநோக்குடன் கூடிய பகுப்பாய்வை மேற்கொண்டார். இந்தப் புத்தகம் மிக முக்கியமானதாக இருந்ததற்கு காரணம் அது லெனினது பிரதிபலிப்பைப் பற்றிய ஆய்வின் வளர்ச்சிக்கும் மேற்கொண்டுமான புலனாய்வுக்கும் ஒரு உத்வேகத்தை அளித்தது. லெனினியக் கட்டத்தில் மார்க்சிய தத்துவம் பற்றிய முழுமையான கற்றறிதலுக்கு மகத்தான முறையில் விஷயங்களை வழங்கியது.

1939-ல் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றிய விஞ்ஞானப் பேரவையின் தலைவரும் ஒரு முன்னணி சோவியத் பௌதிகவியலாளருமான ஸெர்ஜி வாவிலோவ் மிகவும் பாராட்டத்தக்க முறையிலமைந்த **லெனினும் இயற்பியலும்** என்ற புத்தகத்தைப் பிரசுரித்தார். அதில் அவர் பௌதிக விஞ்ஞானத்தின் அண்மைக்கால முன்னேற்றங்களுக்கு லெனினது தத்துவார்த்தக் கருத்துக்கள் எங்ஙனம் பயன் படுத்தப்பட வேண்டுமென்பதைக் காட்டினார். இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் பௌதிகத்தில் ஏற்பட்ட நெருக்கடி மற்றும் இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்ட நவீனப் புரட்சி பற்றி லெனினது ஆய்வியலை அவர் முழுமையாகப் பகுப்பாய்ந்தார். இது லோகாயுத உலகத்தின் பிரத்தியேகப் புலனாய்வுடன் ஆழமான தத்துவார்த்தப்

பொதுமைப்படுத்தலை ஒருங்கிணைப்புச் செய்வதை லெனின் தனது **பொருள் முதல்வாதமும் அனுபவரீதியான விமர்சனமும்** என்ற நூலில் தந்துள்ளதுபோல் வெளிப்படுத்திக் காட்டுகிறது.

தலைசிறந்த அமெரிக்கக் கணித மேதையும் மார்க்சியத் தத்துவஞானியுமான டிர்க் ஜே. ஸ்ட்ரூயிக் தனது **கணிதமும் மார்க்சியமும்** என்ற நூலில் லெனினது கருத்துக்களை, கணிதத்துறை ஞானத்தில் நவீன முன்னேற்றங்களுக்கு தொடர்புபடுத்தி ஆய்ந்தார். இதே போன்ற ஆய்வுகள் உயிரியல், உளவியல், மொழிஇயல் போன்ற துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1930 களின் இறுதியில், **இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதம்** என்ற தனது நூலில் ஸ்டாலின் வழங்கிய முழுமையான வரம்பற்ற தீர்ப்புக்களின் விளைவாக, இயக்கவியல் பொருள்முதல் வாதம் பற்றிய பிரச்சினை களின்பால் நடந்து வந்த பணிகள் சிக்கல்களுக்குள்ளாயின. 1938-ம் ஆண்டில் அப்போதுதான் மார்க்சிய லெனினியத் தத்துவத்தை கற்றறியத் துவங்கியவர்களுக்கு உதவி செய் வதற்காக எழுதப்பட்ட இந்த நூல் இயக்கவியல் பொருள் முதல்வாதத்தில் சில பிரச்சினைகளை மிகவும் எளிமையான தொரு வழியில் முன்வைத்தது: உதாரணமாக இந்நூலில் லோகாயுத இயக்கத்தின் சட்டங்களையும் அதன் வகை களையும் பற்றிக் குறிப்பிடப்படவேயில்லை; அதே சமயம் பொருள் மற்றும் உணர்வு பற்றிய ஆய்வு மிகவும் பொதுப் படையான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு அணுகும் முறை இயக்கவியல் பொருள்முதல் வாதத்தின் எண்ணற்ற பிரச்சினைகளது, ஒருதலைப்பட்ச வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. இருந்த போதிலும் பல முதலாளித்துவ சோவியத் இயலாளர்கள் உறுதிபடக்கூறியது போல், லெனினியக் கட்டத்தில் இயக்கவியல் பொருள் முதல் வாதப் பிரச்சினைகள் பற்றிய பிரச்சினைகளின் புலன் ஆய்வு "நின்று விடவில்லை." இந்தக் காலகட்டத்தில் தத்துவம் பற்றி வெளிவந்த புத்தகங்களையும் கட்டுரைகளையும் மேலோட்டமாகப் பார்த்தால்கூட அவை இந்தத் துறையில்

ஆராய்ச்சிகள் தொடர்ந்ததையும் விரிவாக்கம் பெற்றதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுவது தெரியும்.[78]

1930களில், வரலாற்றுப் பொருள் முதல்வாதப்பிரச்சினைகளின் பணிகளில் மகத்தான முன்னேற்றம் காணக் கிடைத்தது. உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்ஸ்) காங்கிரஸ்கள், தலை சிறந்த, சோவியத் கட்சி மற்றும் அரசாங்கத் தலைவர்களின் உரைகள் ஆகிய அனைத்தும் சமூக மதிப்பீடு பற்றிய லெனினது கருத்துக்கள் மற்றும் விவரமான பகுப்பாய்வில் தீவிர அக்கரை காட்டின. உதாரணமாக, கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் (1935) பாசிஸத்தின் சமூக சாரத்தை, மூலதன முதலாளித்துவத்தின் மிகவும் பிற்போக்கான பிரதிநிதிகளின் பயங்கரவாத சர்வாதிகாரம் என அம்பலப்படுத்தி, அனைத்து பாசிஸ எதிர்ப்புச் சக்திகளும், சமாதானத்திற்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் போராட ஒரு ஐக்கிய முன்னணியில் ஒன்று பட்டுஅணிதிரள வேண்டுமென அறைகூவல் விடுத்தது. இந்தக் கருத்துக்கள் துளி கூட ஐயத்திற்கிடமின்றி ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியப் பகுப்பாய்வில் ஒரு அடி முன்னேற்றமாக இருந்தது. அண்மைக்கால வரலாற்று அனுபவங்களைக் கொண்டு அதைச் செழுமைப்படுத்தின. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷவிக்ஸ்) 17, 18 வது காங்கிரஸ்களில், கீழ்க்கண்டவை பற்றி பல புதிய கருத்துக்கள் வகுத்தளிக்கப் பட்டன. "சோஷலிச சமுதாயம் மற்றும் அதன் உந்து சக்திகள்; சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் சோஷலிஸ்ட் அமைப்பின் வெற்றிக்குப்பிறகு ஏற்பட்ட வர்க்க மாறுதல்கள், சோஷலிச அரசாங்கத்தின் செயல் பாடுகளில் ஏற்பட்ட மாறுதல்கள், சோஷலிசத்தின் புதிய நிலைமைகளின் கீழ் பொருளாதார, சமூக, அரசியல் பரிமாணங்களையும் விஞ்ஞானம் மற்றும் கலாசாரத்தை வளர்ப்பதற்கான வழி முறைகள்.

மேலே குறிப்பிட்ட பாடப்புத்தகமான **இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின**[79] இரண்

டாம் பாகமும் மிக முக்கியமானதாகவே இருந்தது: அது கீழ்க்கண்ட பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தது: வரலாற்றை லோகாயுத ரீதியில் புரிந்து கொள்ளலின் சத்தும் சாரமும்; சமூகப் பொருளாதார அமைப்பின் மார்க்சிய ஆய்வு, முதலாளித்துவ, சோஷலிச சமூக அமைப்புக்கள், வர்க்கங்கள் மற்றும் அரசாங்கம் பற்றிய ஆய்வு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கான மாற்றமும், சமூக உணர்வு தொடர்பான பிரச்சினைகள், புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினிய ஆய்வு மற்றும் சமூக மதிப்பீடு அம்சத்தில் சித்தாந்தப் போராட்டம். சமூக வளர்ச்சி பற்றிய மார்க்சிய ஆய்வுக்கும் லெனின் வழங்கிய பங்களிப்பின் முக்கியத்துவம் விசேடமாக வலியுறுத்தப்பட்டது. ஏகாதிபத்தியம் பற்றிய லெனினது ஆய்வின் முக்கியத்துவம், சோஷலிசப் புரட்சியின் ஆய்வை அவர் வளர்த்தது, சோஷலிச, கம்யூனிஸ்ட் நிர்மாணங்களை ஆளுமை கொள்ளும் சட்டங்கள் பற்றிய அவரது போதனை போன்ற அனைத்தும் முதன் முதலாக மார்க்சிய இலங்கியங்களில் புலப்படுத்தப் பட்டன. தத்துவம் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. முதலாளித்துவ சமூகவியலை எதிர்த்து லெனினும் அவரது சீடர்களும் நடத்திய சித்தாந்தப் போராட்டம், சமூக சீர்திருத்தவாதத் தத்துவம் வலது மற்றும் இடது சந்தர்ப்பவாதம் மற்றும் திருத்தல் வாதம் போன்றவை மிக விரிவாக வருணிக்கப்பட்டன.

எப். கோரோகோவின் **லெனினும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும்** (1934) என்ற நூலும், மார்க்சியத்தின் சமூக ஆய்வில் லெனினியக் கட்டத்தின் பகுப்பாய்வில் குறிப்பிடக் தக்கதாகும். அது தொடர்ச்சியாக, 20-ம் நூற்றாண்டின் நிகழ்வுகளுக்கும் சோவியத் யூனியனின் சோஷலிச நிர்மாணத்திற்கும் பயன்படுத்தப்பட்ட, வரலாற்றுப் பரிமாணம், வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டம், புரட்சி மற்றும் அரசாங்கம் பற்றிய லெனினது முக்கியமான தத்துவக்கூறுகளையும் பரிசீலித்தது.

1930 களில் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் வரலாறுகள் பற்றியும் ஏராளமான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. இந்தக் காலத்தில் தான் மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டத்தின் சத்து, சாரம் பற்றி விசேட ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்ச்சிப்படைப் புக்களில் புகழ் கோபுரத்தின் உச்சியில் வைக்கப்பட்டது. வி. அடோராட்ஸ்கியின் படைப்பாகும். அவர் மார்க்சியத் தத்துவத்திற்கு லெனின் அளித்த பங்களிப்பு பற்றி ஒரு பொதுவான மேலோட்டத்தை வழங்கினார். லெனினது தலையாய தத்துவார்த்தப் படைப்புக்களான **பொருள் முதல் வாதமும் அனுபவ விமர்சனமும், தத்துவார்த்தக் குறிப் புக்கள்** ஆகியவற்றை விரிந்த அளவில் பகுப்பாய்வு செய்தார். 1940-ல், பி. ஸ்சாகின் என்பாரின், **1890களில் மார்க்சியப் பொருள் முதல் வாதத்திற்காக லெனினது போராட்டம்** என்ற புத்தகம் வெளி வந்தது. ஏ. ஸ்ச்சி குளோவ், வின் **போக்டனோவின் மார்க்சியத் திருத்தலை எதிர்த்து லெனினது போராட்டம்** (1937) என்ற நூலையும் மற்றும் இதர பல படைப்புக்கள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மொத்தத்தில், 1930 கள், மார்க்சிய-லெனினியத் தத்துவம் ஒரு விரிவான, அனைத்துப் பகுதிகளையும் ஈர்த்த பயனுள்ள வளர்ச்சி பெற்றதைக் கண்டன. ஹிட்லர் பாசிஸம் கட்டவிழ்த்து விட்ட போரைச் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படாதிருந்தால் லெனினது கருத்துக்கள் மிக விரிவான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு, ஏராளமான பல ஆய்வு களுக்கு விரிவாக்கம் பெற்றிருக்கும். ஆனால் இந்தப் போர் சோவியத் மக்களுக்கு, அவர்களது சுதந்திரத்திற்கும் சுயாட்சி உரிமைக்குமான, உலகம் முழுவதின் சமாதானத்திற்கும்,சமூக முன்னேற்றத்திற்குமான மகத்தான தேசபக்தப் போராக இருந்தது.

இயல்பாகவே இந்தப் போர் மார்க்சியத் தத்துவஞானி களின் படைப்புக்களில் மகத்தான செல்வாக்கு வீச்சைப் பெற்றது. அவர்களில் பலர் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்த

ஆயுதப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். பின்னாலிருந் தவர்கள் போர் தொடர்பான சித்தாந்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

தத்துவத்தின் தலையாய கடமை சித்தாந்த ரீதியில் பாசிஸத்தை அம்பலப்படுத்துவதாக, அதன் மனிதகுல விரோத நடைமுறைகளின் சித்தாந்த வேர்களை விமர்சிப் பதாக இருந்ததென்பது சொல்லாமலேயே விளங்கும். போர் நடந்த போது டஜன் கணக்கான புத்தகங்களும் நூற்றுக் கணக்கான கட்டுரைகளும் எழுதப்பட்டன. அவை, ஏகாதி பத்தியம் பற்றிய லெனினது ஆய்வின் அடிப்படை, பெரிய முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போது பாசிஸத்தின் வரலாற்று ரீதியான இடம் போன்ற வற்றைக் காட்டின. அதே சமயத்தில் தத்துவார்த்தப் படைப் புக்கள் சமூக முன்னேற்றத்தின் சத்தையும் சாரத்தையும் அதன் நோக்கங்களையும் புலப்படுத்தியதோடு, பாசிஸ்ட் அரசாங்கங்களைத் தோற்கடித்து, இந்த நாசகார சக்தி களையும் நிகழ்வுகளையும் சமுதாய வாழ்க்கையிலிருந்து முற்றாக அகற்ற வேண்டியதின் அவசியத்தையும் மெய்ம்மைப் படுத்தின.

போர்க்காலச் சீரழிவுகளையும் மீறி பொதுவான தத்து வார்த்தப் பிரச்சினைகளின் பால்பட்ட பணிகள் தொடர்ந்தன. இவற்றுள் லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவத்தின் பால்பட்ட பணியும் அடங்கும். இதில் 1920 களிலும் 1930 களிலும் பணிகள் துவங்கின. 1942-ல் சோவியத் தத்துவத்தின் 25 வது ஆண்டு விழாவை சோவியத் தத்துவ ஞானிகள் கொண்டாடினர். இந் நிகழ்வை ஒட்டி விசேடக் கட்டுரைகள் எழுதப்பட்டன. விஞ்ஞான மாநாடுகள் நடத்தப் பட்டன. லெனின் அவர்களால் விருத்தி செய்யப்பட்ட சோவியத் தத்துவார்த்த விஞ்ஞானம் வளர்ந்து வலுப் பெறு கிறது என சோவியத் தத்துவ ஞானிகள் குறிப்பிட்டனர். மார்க்சியத் தத்துவ ஆய்வுப் பதாகையை உயர்த்திப் பிடித்து

முன்னேறிச் செல்லும் லெனினது திட்டம், சோவியத் யூனியனில் செய்து முடிக்கப்பட்ட தத்துவார்த்தப் பணியின் ஒவ்வொரு நோக்கினது சித்தாந்த அடிப்படையையும் அடிக்கோடிட்டு வலியுறுத்துகிறது எனக் குறிப்பிட்டனர்.

1943-ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு, கடுமையான போர்க் காலச் சூழல்களையும் மீறி முழுக்க முழுக்க தத்துவம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையைப் பரிசோதித்தது: **தத்துவத்தின் வரலாறு** என்ற நூலின் முதல் மூன்று தொகுப்புகளின் உள்ளடக்கம்; மார்க்சிய லெனினிய வழி முறையை அடிப்படையாகக் கொண்டு உலகத் தத்துவ வளர்ச்சியை மேலோட்டமாக வருணிக்கும் முதல் முயற்சி. மிகவும் இடரார்ந்த போர்க்காலச் சூழல்களில் ஒரு தத்துவார்த்தப் படைப்பைப் பரிசீலிப்பதின் அவசியத்தை மத்தியக் கமிட்டி கண்டது என்ற உண்மை தத்துவார்த்தத்துறையில் லெனின் வகுத்தளித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான போராட்டத்திற்கான நாட்டின் தத்துவ நிலைக்கு கட்சி அளித்த மகத்தான முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகிறது.

போர் வெற்றிகரமாக முடிந்தபிறகு உலகெங்கணுமுள்ள மார்க்சியத் தத்துவஞானிகளுடன் சேர்ந்து சோவியத் தத்துவ ஞானிகளும், பாசிஸப் படையெடுப்பினால் தடைப்படுத்தப்பட்டிருந்த தங்களது திட்டப்பணியில் மீண்டும் ஈடுபட்டனர். இந்தப் பணிகளில் முதலில் இடம் பெற்றது, லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவத்தை ஆய்வதில், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாகும். 1947-ம் ஆண்டு ஜி. அலெக்ஸாண்ட்ரோவின், **மேற்கு ஐரோப்பியத் தத்துவத்தின் வரலாறு** என்ற புத்தகம் பற்றி ஒரு அனைத்து ஒன்றிய தத்துவார்த்த விவாதம் நடைபெற்றது லெனினியக் கட்டத்தில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய ஒரு பகுப்பாய்வு தத்துவத்தின் மார்க்சிய வரலாற்றுக்கு மையமாக இருந்ததை விவாதத்தில் பங்குகொண்டவர்கள் கோடிட்டுக் காட்டினர். விவாதங்களுக்குப்பின் சோவியத் பல்கலைக்

கழகங்களின் தத்துவத்துறைகள் மார்க்சியத் தத்துவத்தின் ஒரு பொதுப்பயிற்சியை—20ம் நூற்றாண்டின் மார்க்சிய வரலாற்றை, தங்களது பாடத்திட்டங்களில் அறிமுகப் படுத்தின. அதாவது அதன் தெளிவான ஒரு பகுதியாக லெனினியக் கட்டத்தை அறிமுகப்படுத்தின. பெரிய விஞ்ஞான மற்றும் கல்வி மையங்களில் விசேடத் துறைகளும், இலாகாக்களும் அமைக்கப்பட்டன.

1940களின் பிற்பாதியிலும், 1950களின் துவக்கத்திலும், சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்திலும், சோஷலிசப் பாதையில் வழிநடந்த நாடுகளிலும் லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகள் பற்றிய ஏராளமான நூல்கள் பிரசுரிக்கப்பட்டன. வரலாற்றை லோகாயுத ரீதியில் புரிந்து கொள்ளல் பற்றிய லெனினது கருத்துக்கள் **வரலாற்றுப் பொருள் முதல்வாதம்** (1950) என்ற நூலிலும் பல ஆசிரியர் எழுதி எப். கான்ஸ்டாண்டி நோவினால் தொகுக்கப்பட்ட **சமூக உணர்வின் வடிவங்கள்** (1951) என்ற நூலிலும் பரிசீலிக்கப்பட்டன. வரலாற்றில் மக்களின் பாத்திரம்தான் தீர்மானமானது என்ற அம்சம், எம். கம்மாரியின் **வரலாற்றைப் படைப்பவர்களாக மக்கள்** என்ற நூலிலும், மக்களது படைப்பாற்றல் நடவடிக்கைகள், எச். மோம்ஜானின் **சோஷலிச சமுதாயமும் மக்களின் படைப்பாற்றல் நடவடிக்கைகளும்** என்ற நூலிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. இவ்விரு நூல்களும் 1954-ல் வெளிவந்தன. லெனினது கருத்துக்களின் கோணத்தில் காணப்பட்டுக் கருத்துத் தெரிவிக்கப்பட்ட இயற்கை விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் அதன் தத்துவார்த்த நோக்குகளும், எஸ். வாவிலோவின் **ஒரு புதிய கட்டத்தில் சோவியத் விஞ்ஞானம்** (1946) என்ற நூலிலும், ஜாண் பெர்னாலின் **விஞ்ஞானமும் சமுதாயமும்;** டௌஸ்ஸெயின்ட் தேசாந்தியின் **சமூக உணர்வின் ஒரு வடிவமாக விஞ்ஞானம்** (கடைசி இரு புத்தகங்களின் ருஷ்யமொழி பெயர்ப்புக்கள் 1953-ல் வந்தன) போன்ற நூல்களிலும், மற்றும் பல நூல்களிலும் ஆராயப்பட்டன. மார்க்சியத்தின்

பொதுவான தத்துவார்த்தப் பிரச்சினைகள் பிரிட்டிஷ் மார்க்சிய அறிஞர் மாரிஸ்கார்ன்போர்த்தினால் அவரது **இயக்கவியல் பொருள் முதல் வாதம்** (இந்நூலின் ருஷ்ய மொழிபெயர்ப்பு 1956-ல் வெளிவந்தது) என்ற நூலில் புலன் ஆய்வு செய்யப்பட்டது.

1950களின் துவக்கத்தில் உலகெங்கணுமுள்ள மார்க்சியத் தத்துவஞானிகள் பல நூல்களை வெளியிட்டனர். அவற்றில் சில ருஷ்ய மொழியில், ஆக்கம்பெற்று கீழ்க்கண்ட கட்டுரைத் திரட்டுகளில் சேர்க்கப்பட்டன: **ஒரு முற்போக்கான சித்தாந் தத்துக்கான போராட்டத்தில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள்** (1953); **ஒரு முன்னேற்றகரமான சித்தாந்தத்துக்கான போராட்டத்தில் பிரிட்டனின் தோற்றம்** (1954); **ஒரு முன் னேற்றகரமான சித்தாந்தப் போராட்டத்தில் அமெரிக்க முற்போக்காளர்கள்** (1955). இவை அனைத்தும் சமகாலத்து முதலாளித்துவத் தத்துவம் மற்றும் சமூகவியலின் பிரதான போக்குகளை விமர்சித்து, யுத்த பிற்காலச் சூழல்களில் மார்க்சிய—லெனினியத்தின் முக்கியப் பிரச்சினைகளோடு ஆராய்ந்தன.

இந்தப் பணியின் விளைவாக, 1950களின் மத்தியில், ஏகாதிபத்தியக் காலனி ஆதிக்கங்கள் தகர்ந்து, உலக சோஷலிச சமுதாய அமைப்பின் முகிழ்ச்சியில் உலகெங் கணும் சமூக முன்னேற்றத்திற்கும் சமாதானத்துக்குமான ஒரு எழுச்சி ஏற்படுத்தப்பட்டதன் பின்னணியில் மார்க்சிய லெனினிய தத்துவார்த்தச் சிந்தனையின் வளர்ச்சிக்காக ஒரு பரந்த திட்டம் தீட்டப்பட்டது.

இளம் சோஷலிஸ்ட் நாடுகளின் வளர்ச்சியைப் பின்னுக் குத்தள்ளிவிடலாம் என்ற கனவில் 1950களின் மத்தியில் உலக முதலாளித்துவம் சோஷலிசத்திற்கு எதிரான தனது சித்தாந்தத் தாக்குதலை முடுக்கிவிட்டது. ஆனால் மார்க்சியத் தத்துவஞானிகள், லெனினியத்தின் வரலாற்று முக்கியத் துவத்தை திருத்திக் குழப்பி, மறைக்கச் செய்யும் முயற்சி களனைத்திற்கும் கடுமையான பதிலடி கொடுத்தனர்.

1950களிலும், 1960களின் துவக்கத்திலும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்க ஆவணங்களிலும், பிரதானமாக, மாஸ்கோவில் நடந்தேறிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 1957ம் வருடத்துக் கூட்டத்தின் ஆவணங்களிலும் லெனினது கருத்துக்கள் விரிந்த அளவில் வளர்க்கப்பட்டன. இவை உலக சோஷலிச அமைப்பு உருவாகிக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் சமூக வளர்ச்சியின் ஸ்தூலமான அம்சங்களினது தொலை நோக்கான பகுப்பாய்வை உள்ளடக்கியிருந்தன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸ் லெனினியத்திற்கு மெய்யானதும் உருப்படியானதுமான ஒரு பங்களிப்பை வழங்கியது. அது ஸ்டாலினது தனி நபர் வழிபாட்டின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகளையும் தவறுகளையும் பரிசீலித்தது. 1950களின் துவக்கத்தில் நடந்தேறிய விஞ்ஞானத்தின் பால்பட்ட விவாதங்களில் மார்க்சிய—லெனினியத் தத்துவத்தின் ஜீவாதாரமான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன: 'மொழி இயலில்' (1950) 'அரசியல் பொருளாதாரம்' (1951) இன்னபிற.

இவ்வனைத்து ஆவணங்களிலும் லெனினது கருத்துக்கள், வளர்த்துச் செல்லப்பட்டு யுத்த பிற்கால சோஷலிச வளர்ச்சி, முழுமையான உலகப் புரட்சிகரப் பரிமாணம், பூமி உருண்டையின் அனைத்துப் பகுதி மக்களினாலும் சமாதானத்திற்காகவும் முன்னேற்றத்துக்காகவும் நடத்தப்பட்ட சோர்வறியாப் போராட்டம் ஆகியவற்றின் அனுபவங்களைப் பொதுமைப் படுத்தியதின் மூலம் திண்ணிய வெளிப்பாட்டையும் தரப்பட்டிருந்தது.

## 5. லெனினது தத்துவார்த்தக் கருத்துக்களும் இன்றையக் கால கட்டமும்

1970-ம் ஆண்டு உலகம் லெனினது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடியது. அதற்குக் கொஞ்சம் முன்னர்

நிறைவேற்றப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானத்தைக் கொண்ட ஒரு ஆவணம் மார்க்சியத் தத்துவத்தின் லெனினியக் கட்டம் பற்றிய கீழ்க்கண்ட கணிப்பை வழங்கியது; ''லெனினியம் மார்க்சியத்தின் ஒரு புதிய உயர்ந்த கட்டம்; புதிய வரலாற்றுச் சூழல்களில், ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சூழல்களில்; முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கும், கம்யூனிஸத்திற்கும் மனித குலத்தின் மாற்றம் ஆகியவற்றின் ஆக்க பூர்வமான வளர்ச்சி......லெனினது வாழ்க்கைக் காலத் தோடு லெனினியக் கட்டம் நின்று விடவில்லை. ஆனால் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சகோதரக் கட்சிகளின் சித்தாந்த நடவடிக்கைகளில் தொடர்ந்து செல்வதுடன், உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கொள்கைத் தத்துவங்களிலும் மொத்த உருப்பெற்றுள்ளது'' [80]. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆய்வியலான **லெனின் பிறந்த நூற்றாண்டு விழா**, வில் கண்டுள்ள வாசகமாவது; ''புரட்சிகரச் சிந்தனைக்கும், புரட்சிகரச் செயல்பாட்டுக்கும் லெனினியம் ஒரு ஆய்வியலாக உள்ளது... புரட்சியில் லெனின் ஒரு தலை சிறந்த விஞ்ஞானியாகத் திகழ்ந்தார்; விஞ்ஞானத்தில் ஒரு மகத்தான போராளியாக விளங்கினார்; மார்க்சிய சித்தாந்தத்தில் ஒரு புதிய கட்டத்தைத் துவக்கி வைத்த மாமனிதன்; மார்க்சியத்தின் ஒருங்கிணைவான பாகங்களனைத்தையும், அதாவது தத்துவம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான கம்யூனிஸம் ஆகியவற்றைச் செழுமைப் படுத்தியவர்.''[81]

1960 களிலும் 1970 களிலும் சோவியத் யூனியனிலும் மற்றுமிடங்களிலும் உள்ள மார்க்சியத் தத்துவ ஞானிகள், மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டம் பற்றி ஏராளமான நூல்களை எழுதினார்கள். [82] இந்த நூல்கள் லெனினியக் கட்டத்தின் சாரம், அதன் உள்ளடக்கம் மகத்தான சிந்தனையாளரும் உலகப் புரட்சியினது வளர்ச்சியின் தலைவருமாகத் திகழ்ந்தவரின் கருத்துக்களோடு

பிரதான நிலைபாடு ஆகியவை பற்றி ஒரு பொதுவான பகுப்பாய்வை வழங்கியதுடன், 1970களின் திருப்பத்தில் மார்க்சிய—லெனினியத் தத்துவத்தின் பொதுவான நிலை பற்றியும் விரித்துரைத்தன.

**லெனினியம் மற்றும் சமகாலத் தத்துவ ஞானிகளின் பிரச்சினைகளது** நூலாசிரியர்கள் குறிப்பிட்டதாவது; "20ம் நூற்றாண்டின் சமூக விஞ்ஞான வளர்ச்சியின் வரலாற்று அனுபவம், நவீன சகாப்தத்தில் சோஷலிச அமைப்புக் களுக்கும் ஏகாதிபத்தியத்துக்குமிடையேயான மோதல்கள், முதலாளித்துவ சித்தாந்தத்தை எதிர்த்து மார்க்சிய—லெனினிய ஆய்வின் போராட்டம், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தெளிவாகக் காணக் கிடைத்த வறட்டு வாதப் போக்குகள் மற்றும் திருத்தல்வாத ஊசலாட்டங்கள் ஐயத்திற்கிடமின்றி நிரூபித்ததாவது; லெனினியம்—கம் யூனிஸ்டுகளால் உயர்த்திப் பிடிக்கப்படும் அதன் படைப் பாற்றல் உத்வேகம், தொழிலாளி வர்க்கம், பரந்துபட்ட வெகு ஜனங்களின் புரட்சிகர நடவடிக்கைகளுடனான விஞ்ஞான ரீதியான தத்துவார்த்தச் சிந்தனையோடு பிணைக்கப்பட்டுள்ளது. என்றென்றும் தொடர்ந்து முன்னேறிச் செல்லும், மனிதனின் நலன்களின் பால்பட்ட புரட்சிகர உலக மாற்றத்தின் தத்துவார்த்த அறிவாற்றலினது அடையாளச் சின்னமாகியுள்ளது."[83]

மார்க்சியத் தத்துவத்தில் மூலக்கருவாக, தீர்மான மான புரட்சிகரச் சக்தியாகவுள்ள பொருள் முதல் இயக் கத்தின் வளர்ச்சிக்கு லெனின் வழங்கிய பங்களிப்பைப் பரிசீலனை செய்வது இந்தச் சமயத்தில் லெனினியத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு மையமான அம்சமாகும். உலகத் தத்துவார்த்தச்சிந்தனைக்கு மார்க்ஸும் எங்கெல்ஸும் வழங்கிய பங்களிப்பை லெனின் இரண்டே வார்த்தைகளில் அடக்கிக் காட்டினார். "பொருள் முதல் இயக்கம்." இந்தப் பொருள் பொதிந்த வார்த்தைகள்

அனைத்து நியாயங்களுடனும் அவரது சொந்தத் தத்துவார்த்தப் படைப்புக்களுக்குப் பயன் படுத்தப்படலாம்.

அவரது **பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்; தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்கள்; கார்ல் மார்க்ஸ்** ஆகிய நூல்களிலும் இதர படைப்புக்களிலும் லெனின் மார்க்சிய இயக்கவியல் ஆய்வைப் பற்றி விரிவாகச் சித்தரித்துள்ளார். பின்னர் மார்க்சியத் தத்துவ ஞானிகள், உலகத்தைப் பற்றிய மதிப்பீட்டின் பொது ஆய்வு, அதை அறிவாற்றலுக்குட்படுத்தும் ஆய்வு, சித்தாந்த ரீதியான சிந்தனையின் தர்க்கவியல் பற்றிய லெனினது கருத்துக்களுக்கு மகத்தான தனிச் சிறப்பை வழங்கினர். லெனின் இந்தப் பிரச்சினையை இன்னும் தக தகாயமான ஒளியில் எப்பொழுதும் தனது இயக்கவியல் பகுப்பாய்வையும் சேர்த்துக் கொண்டு உலகம் மற்றும் மனிதன் அதை அறிவாற்றலுக்கு உட்படுத்துவதோடு மட்டும் பார்க்காமல் அதன் நடைமுறை மாற்றப் பிரச்சினையோடும் சேர்த்துப் பார்த்தார். 1960 களின் கடைசியிலும் 1970 களின் துவக்கத்திலும் வளர்ச்சியடைந்த சோஷலிசம் ஒரு எதார்த்தமாகியது. சமூகப் பரிமாணத்தை ஒரு விஞ்ஞான வழியில் நிர்வகிப்பது விசேட முக்கியத்துவத்தைப் பெற்றது. ஆய்வு என்ற முறையில் பொருள் முதல் இயக்கம், மக்களது நடைமுறைச் செயல் பாடுகளை வலியுறுத்தும் வழி முறை, இயற்கையின் திட்டவட்டமான சட்டங்களையும் சமுதாயத்தையும் உணர்வு பூர்வமாக உலகத்தை மாற்றுவதற்காகப் பயன்படுத்துவது போன்றவை முன்னுக்குக் கொண்டு வரப்பட்டன. லெனின் திரும்பத் திரும்ப இயக்கத்தின் இந்த நோக்கை வலியுறுத்தினார். நீங்கள் படிக்கும் இந்த நூலாசிரியரின் அபிப்பிராயப்படி, இது இன்றைக்கும் பயன்படுத்தக் கூடிய லெனினியத்தின் முக்கிய பிரச்சினையாகும்.

பிரதிபலிப்பு பற்றிய லெனினது ஆய்வும் இன்றைக்கும் பொருத்தமானதே. 20-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் ''தகவல் வெடிப்பு'' தொடர்பாக பிரதிபலிப்பின் சாரம்

பொருளின் முழு நிறைவான சொத்து என்ற அவரது கருத்துக்கள் விசேட முக்கியத்துவத்தைப் பெற்றன. இன்றைய விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சியின் போக்கில் தகவலின் படித்திரளும், மகத்தான சமூக மாற்றங்களும் தகவல் பற்றிய ஆய்வை நவீன ஆராய்ச்சியின் மையமான மதிப்பு அணுகும் முறையாகவும் மதிப்புப் பகுப்பாய்வாகவும், நடை முறையில் மனிதனைப் பற்றியும் அவன் வாழும் உலகத்தைப் பற்றியுமான அனைத்து அறிவாற்றல் துறையையும் தழுவிக் கொண்டு ஆக்கியுள்ளன. தகவல் பரிமாற்றம் பற்றிய தத்துவார்த்தக் கருத்தமைவுகள் லெனினது பிரதிபலிப்பு ஆய்வை அடிப்படையாகக் கொண்டவை என மார்க்சிய வாதிகளும் லெனினிய வாதிகளும் நிரூபித்தனர். அது சமகாலத்து விஞ்ஞானத்தையும் நடை முறையையும், அறிவாற்றல் இயலுக்கு, மதிப்பீட்டுக்கு, பொருள் முதல் உலகத்தை வியாக்கியானம் செய்வதற்கு, மாற்றுவதற்கு மெய்யானதொரு விஞ்ஞான வழி முறையுடன் ஆயுத பாணியாக்குகிறது.

லெனினியத்தின் நவீன வல்லுனர்கள் பரிசீலித்த மூன்றாவது பிரச்சினை இயக்கவியலின் தர்க்க சாஸ்திரம். இயக்கத்தின் சித்தாந்தச் சிந்தனைப் பிரச்சினை மூலம் லெனின் மகத்தானதொரு சேமிப்பை வைத்துள்ளார். நமது காலத்தில் விஞ்ஞானச் சிந்தனையின் அளவும் வாய்ப்பும் என்றுமில்லாத பெருமளவுக்கு அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருக்கும் வேளையில் இயக்கவியல் தர்க்க சாஸ்திரப் பிரச்சினைகள் குறிப்பிடும் வகையில் முக்கியமானதாய் ஆகின்றன. சமகாலத்து விஞ்ஞானம் இயக்கவியலுடன் உட்புகுந்துள்ளது என நாம் துணிந்து கூறலாம். இது இத்தகைய தத்துவார்த்தப் பிரச்சினைகள் இயக்கவியல் சிந்தனையின் புறவயப்பட்டவை, அகவயப்பட்டவை, உண்மை பற்றிய ஆய்வு, இயக்கவியல் தர்க்க சாஸ்திரத்தின் வகைகள் மற்றும் சட்டங்கள் இன்னபிறவற்றைப் பற்றிய லெனினது ஆராய்தலால் இன்றைய விஞ்ஞான முன்னேற்றம் வளர்ந்தோங்கும் பாத்திரத்தை வகிப்பதை விளக்குகிறது.

சமூக வளர்ச்சியின் இயக்கம் பற்றிய லெனினது கருத்துக்கள் இன்று மகத்தான முறையில் ஆர்வத்தையூட்டக் கூடியவையாகும். உழைக்கும் மக்களின் புரட்சிகர முன் முயற்சியின் அதிகரித்த பாத்திரத்தினால் குணாம்சப்படுத்தப் படும் இருபதாம் நூற்றாண்டின் சமூகப் பரிமாணங்களது இயக்க ஆற்றல் பற்றிய லெனினது கருத்துக்கள் சமகால உலகப் புரட்சிகரப் பரிமாணத்திற்கு பொருத்தமுடையனவா யிருக்கின்றன. மார்க்சியச் சித்தாந்தத்துடன் சேர்ந்து இந்த முன்முயற்சி சமூக மதிப்பீட்டின் முன்னேற்ற வேகத்தை பன் மடங்கு விரிவுபடுத்தியுள்ளது. கடந்த காலத்தில் பல்லாண்டு களாக, நூற்றாண்டுகளாக இழுத்தடித்த பரிமாணங்கள் இப்பொழுது சில ஆண்டுகளிலேயே இதற்கு முன் கண்டிராத அளவுக்கு முழு நிறைவை அடைகின்றன. சமூக வளர்ச்சியில் இயக்கத்தின் தாண்டுதல்கள் மற்றும் படிப்படியான தன்மை, சமகால சமுதாயத்தின் ஒரே மாதிரியான குணாம்சரீதியான மாற்று நடவடிக்கைகளின் இயக்கவியல் சாரம் ஆகியவை பற்றிய லெனினது கருத்துக்கள் மிக மிக முக்கியமானவை. இன்று விஞ்ஞானம், பொதுவான சமூகப் பரிமாணத்தில் தேசீய, சர்வதேசீய இயக்கம் பற்றிய லெனினது கருத்துக் களுக்கு விசேட கவனம் செலுத்துகிறது. இயக்கம் பற்றிய பொதுவான மற்றும் பிரத்தியேகமான, அனைவரும் அறிந்த அவரது முன்மொழிதல்கள் பல்வேறு நாடுகளின் புரட்சி இயக்கங்களிலும், மனிதகுலத்தின் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்குச் செல்லும் பொதுவான மாற்றங்களின் பின்னணியில் முற்போக்குக்கும் பிற்போக்குக்குமிடையிலான போராட்டத்தின் பிரத்தியேக மற்றும் பொது அம்சங்களிலும் திண்ணிய வெளிப்பாட்டைப் பெறுகின்றன.

நவீன தேசீயப் புரட்சி இயக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு உலகப் புரட்சி இயக்கத்தின் நண்பனாக, சேமிப்பாக அவை இருப்பதின் முக்கியத்துவத்தை புலப்படுத்துகின்றன. அதே நேரத்தில் வேறுபட்ட பல நாடுகள் பற்றிய திண்ணிய பரிசோதனை, இந்த இயக்கங்கள் வர்க்கப் போராட்டத்தின்

சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காட்டு கிறது. அதாவது ஒடுக்கப்பட்டிருக்கிற, சார்ந்து வாழ்கின்ற நாடுகளின் முற்போக்கான தேச விடுதலை இயக்கங்களின் ஒரு பொதுவான வரலாற்றுப் போக்கு, முதலாளித்துவத்தை எதிர்த்து உலகப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் சேரவேண்டும் என்பதே. இந்த வளர்ச்சிகள் நவீன உலக சமூக முன்னேற்றத்தைப் பகுப்பாய்வதில் லெனினது கருத்துக்களின் மகத்தான வல்லமையையும் பொருத்தத் தையும் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கின்றன.

சோஷலிச நாடுகளிலும், ஒட்டு மொத்தமாக உலக சோஷலிச சமுதாயத்திலும் சமகாலத்து சமூகப் பரி மாணங்ளைப் பரிசோதிக்கும் போது லெனினது ஆய்வியல் மரபுரிமையின் பொருத்தம் குறிப்பிடத்தக்க முறையில் கண் கண்ட சாட்சியமாகத் திகழ்கிறது. சோஷலிச சமுதாயத்தின் வளர்ச்சி வழியை விஞ்ஞான ரீதியாக முன்னரே எதிர்பார்த்த கருத்துக்களை உள்ளடக்கியது தான் லெனினது சித்தாந்தப் படையல்கள் என்பதை இன்று மார்க்சிய லெனினிய சிந்தனை புலப்படுத்துகிறது. இந்தக் கருத்துக்கள் எல்லாம் அண்மையில் தான் பிண்டப்பிரமாணமான எதார்த்தங்களாக மாற்றப் பட்டன. ஏக காலத்தில் சோஷலிசம் பல நாடுகளிலும் வெற்றிக் கொடியை நாட்டமுடியாது; ஒரு தனித்த உலகப் பரிமாணமாக அமைந்து சோஷலிசப் புரட்சி தேச விடுதலை இயக்கங்களோடு சங்கமிக்கும்; சோஷலிசப் பாதையில் நடைபோடும் சமுதாயங்களைக் கொண்ட நாடுகள் மெல்ல, மெல்ல பெரிதாக விரிவு பெறும்; உலக சோஷலிசத்திற்கும் உலக முதலாளித்துவத்திற்கு மிடையேயான வர்க்கப் போராட்டம், பொருளாதாரத்தில் சமாதான ரீதியான போட்டி, அரசியல் உறவுகளில் சமாதான சகவாழ்வு, சித்தாந் தத்தில் சமரஸமில்லாத போராட்டம் என்ற பிரத்தியேக வடி வத்தைப் பெறும், போன்ற லெனினது ஆருடங்கள் தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சோஷலிச நிர்மாணத்தின் பொதுச் சட்டங்கள் பற்றிய லெனினது

கருத்துக்களின் முக்கியத்துவத்தையும் நாம் வலியுறுத்திக் கூறவேண்டும்— ஒரு சக்திமிக்க லோகாயுத தொழில் நுட்ப அடிப்படையைச் சமைப்பது; புதிய சமூக உறவு களை நிறுவி, ஒரு புதிய சோஷலிச மனிதனை உருவாக்குவது. இந்தக் கருத்துகளனைத்தும் சோஷலிசப்பாதையைத் தேர்ந்தெடுத்த நாடுகளில் அற்புதமான முறையில் உறுதிப்படுத்தப்பட்டிருக் கின்றன.

சோஷலிச சமுதாயத்தின் வளர்ச்சியில் புறவயப்பட்ட மற்றும் அகவயப்பட்ட இயக்கம் பற்றிய லெனினது கருத் துக்கள் குறிப்பாக வரலாற்றில் புறவயப்பட்ட தன்மைக்கும் அகவயப்பட்ட தன்மைக்கும் இடையே பின்னிய செயல் விளைவின் சாரம் பற்றிய அவரது குறிப்புரைகள், சமூக ஞானம் மற்றும் செயல்பாடு, கம்யூனிஸத்தை நோக்கிய மதிப்பீட்டில் விஞ்ஞான வழிகாட்டல் பற்றிய அவரது குறிப்புரைகள் மகத்தான முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சோஷலிசத்தின் கீழ் சமூக வளர்ச்சியின் புறவயப்பட்ட, அகவயப்பட்ட நிலைமைகளின் இயக்கம் அவற்றின் ஒற்றுமை ஒன்றையொன்று சார்ந்திருக்கும் செயல் வேகம் பற்றிய லெனினது தூரதிருஷ்டிகளின்பால் சோவியத் விஞ்ஞானம் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்கிறது. சோஷலிச சமுதாயம் முதிர்ச்சியை நோக்கி முன்னேறும் போது, கம்யூனிஸத்தின் முதல்கட்டத்திலிருந்து படிப்படியாக உயர்ந்த கட்டத்திற்கு மாற்றம் பெறும்போது அகவயப்பட்ட காரணியின் பாத்திரம் வளர்ந்தோங்கும் என்று லெனின் முன் மொழிந்ததும் நமது காலத்திற்கு சாலப்பொருத்தமாயுள்ளது.

பொருளாதாரம், சமூக உறவுகள், சமுதாயத்தின் அறிவாற்றலுடன் கூடிய வாழ்க்கை போன்ற சமூக வளர்ச் சியின் பல்வேறு துறைகளிலும் அகவயப்பட்ட காரணி எங்ஙனம் செயல்பட்டது என்பதை லெனின் காட்டினார் இன்று தனது கோட்பாட்டை உருவாக்குவதற்கு, உழைக்கும் மக்களுக்கு பொருள்முதல் மற்றும் நெறிமுறைகளின் பால்பட்ட ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு கம்யூனிஸ

லட்சியத்தின்பால் அவர்கள் மிகவும் சரியான முறையில் கொண்டிருக்கும் ஆழமான நம்பிக்கையை ஊக்குவிப்பதற்கு கட்சியின் பக்கம் மக்களை அணிதிரட்டி அவர்களுக்கு மார்க்சிய லெனினிய உலகக் கண்ணோட்டத்தை ஊட்டு வதற்கு லெனினது முடிவுகளிலிருந்து கட்சி தனது நட வடிக்கைகளைத் துவக்குகிறது.

அரசியல், சமுதாய வாழ்க்கையில் அது வகிக்கும் பாத் திரம் பற்றிய லெனினது கருத்துக்கள் அவரது சித்தாந்தப் படைப்புக்களில் விசேடமானதொரு இடத்தைக் கொண் டிருக்கின்றன. பொருளாதாரத்தின் ஒரு, 'ஒருமுனைப்பான' வெளிப்பாடே அரசியல் என்ற அவரது விளக்கமும், அதே போல் பொருளாதாரத்தை விஞ்சி அரசியல் இயங்க முடியாது என்ற அவரது ஆய்வியலும் கட்சி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் கம்யூனிஸத்தை நோக்கி முடுக்கி விடப்படும் அரசியல்நடவடிக்கைகளுக்கு உள்ளபடியே உந்து சக்திகளாக விளங்குகின்றன.

ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தின் அரசியல் வாழ்வு இன்று முழுமையாக இந்தக் கருத்துக்களைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தின் விஞ்ஞான அடிப்படையிலான அரசியல் தலைமை முதிர்ச்சி யடைந்த சோஷலிசத்தின் அரசியல் உணர்வை விஞ்ஞானத் தின் பக்கம் நெருக்கிக் கொண்டு வருகிறது. இவ்வாறாக கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோஷலிஸ்ட் அரசாங்கத்தின் கோட்பாட்டை, அவசியம் என விஞ்ஞான வடிவத்திலான நடவடிக்கையாக்குகிறது.

இன்று உலகத்தில் கம்யூனிஸ இயக்கத்திற்கு மேலாக எந்த சமூக சக்தியும் மிகவும் சக்தி வாய்ந்ததாக இல்லை. அது விஞ்ஞானத்தில் வேர்விட்டது என்ற உண்மையில்தான் அதன் சக்தி அடங்கியிருக்கிறது. அதன் நோக்கங்களும், இலட்சியங்களும் மனிதகுலத்தின் மிகப்பெரும்பான்மையான மக்களின், உழைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை யும் அபிலாஷைகளையும் ஒத்திருக்கின்றன. ஆக மனிதகுல நடவடிக்கைகளின் காரண காரியங்கள், இலட்சியங்களின்,

மிகுந்த மனிதத்துவத்தை, அவசியமாகக் கோடிட்டுக் காட்டுவதே கம்யூனிஸக் கோட்பாடு; ஒவ்வொரு உழைப் பாளி மற்றும் மானுடத்தின் ஒட்டு மொத்தத் தேவைகளை ஒத்திருப்பதே கம்யூனிஸக் கோட்பாடு.

சோஷலிசத்தின்கிழ், சமூக வளர்ச்சியின் புறவயப்பட்ட சட்டங்களுக்கேற்ப அரசியல் வாழ்க்கை உருப்பெறுகிறது. வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின்கீழ், கட்சியின் அரசியல் நிலைபாட்டைத் தீர்மானிக்கும் விஞ்ஞானக் கோட்பாடு களின் பாத்திரம் அதிகரித்த அளவில் மகத்தானவையா கின்றன. சோஷலிச உற்பத்தி உறவுகள் அபிவிருத்தியடையும் போது, முன்னேறிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சமூக வளர்ச்சிக்கு தலையாய ஊக்குவிப்பாகின்றன.

லெனின் தனது படைப்புக்களில் திரும்பத்திரும்ப விஞ் ஞானத்தொழில் நுட்ப முன்னேற்றப் பிரச்சினைகளை அணு கினார். ஏகாதிபத்தியத்தை ஒரு வரலாற்றுக் கட்டமாகப் பார்த்த அவர் அதில் சோஷலிசத்திற்கான பொருள் முதல் மற்றும் தொழில் நுட்ப அடிப்படை அமைக்கப்படுகிறது எனக் கண்டார் ஏகாதிபத்தியத்தின் கீழ் விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றம் என்பது சோஷலிசத்தை நோக்கி ஒரு அடி எடுத்து வைப்பதாகும் என்றார்.

20-ம் நூற்றாண்டின் விஞ்ஞானத் தொழில் நுட்பங் களது புரட்சிகர முன்னேற்றங்கள் நவீன உலகப் புரட்சிகரப் பரிணாமம் முழுமைக்கும் இன்றியமையாதன என்ற லெனினது பார்வை இப்பொழுது விஞ்ஞானத் தொழில் நுட்ப புரட்சி நடை போடும் பொழுது குறிப்பிடத்தக்க முறையில் பொருந்தி வருகிறது. விஞ்ஞான அறிவாற்றலின் வளர்ந்தோங்கும் சமூகப் பாத்திரம், சமூக வளர்ச்சியின் அனைத்து மட்டங்களிலும் இன்று முக்கிய அம்சமாகி விட்டது. இந்தச் சூழல்களில் சோஷலிச கம்யூனிஸ நிர் மாணத்தில் விஞ்ஞான அறிவாற்றல் வகிக்கும் மகத்தான பாத்திரம் பற்றிய லெனினது கருத்துக்கள் அதிகரித்த அளவில் நடை முறை முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

சோவியத் யூனியனிலும், சக சோஷலிஸ்ட் நாடுகளிலும் பின்பற்றப்பட்ட விஞ்ஞான அடிப்படையிலான கோட்பாடு விஞ்ஞானத் தொழில் நுட்பத்துறைகளில் செய்யப்பட்ட பணிகளுக்கு பல்வேறு வகையான ஊக்குவிப்புக்களைத் தருவதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் அண்மைக்காலத்தில் காணக்கிடைத்த அளப்பரிய சாதனைகளையும் சோஷலிசத்தின் சாதனைகளையும் ஒருங்கிணைப்பது சோஷலிச உலகத்தின் விஞ்ஞான தொழில் நுட்ப புரட்சிக்கு மகத்தான வாய்ப்புக்களை வழங்குகிறது. அதே சமயத்தில் கட்சியும் அரசாங்கமும் விஞ்ஞானத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொடர்ந்து கவனம் செலுத்துவது விஞ்ஞானத்தின் சமூகப் பாத்திரம் வளர்ந்தோங்குவதற்கும், இன்னும் தீவிரமாகப் பணியாற்றுவதற்கும் ஒரு அடிப்படையை வழங்குகிறது.

மார்க்சிய-லெனினிய ஆய்வியலின் அதிகரித்த பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் நாம் விசேடமாக வலியுறுத்த வேண்டும். ஏனென்றால் சோஷலிசத்தின் பொதுவான சித்தாந்த அடிப்படை அதுவே. வெகுஜனங்களது மார்க்சிய-லெனினியக் கல்வி மற்றும் விஞ்ஞானமும் நடைமுறைச் செயல்பாடுகளும், மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தின் பொதுமைப் படுத்தல் மற்றும் முடிவுகளினால் ஆதரிக்கப்பட்டுள்ள உண்மையும் இந்தச் சூழல்களின் கீழ் பிரமாண்டமான சக்திகளாகவிருக்கின்றன.

விஞ்ஞான ரீதியாக வழி நடத்தப்படும் சமுதாயம் பற்றிய கருத்துக்கள் சம காலத்திய உலகில் முக்கியமடைந்து வருகின்றன. அவை லெனினியத்தின் சித்தாந்தப் போர்ப்பாணியில் மதிப்பிடற்கரியதோர் இடத்தை வகிக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானதாகவிருப்பது நவீன சமூக வளர்ச்சியின் அமைப்பில் நடைமுறை ஆட்சியின் உறவுகளது பாத்திரமும் இடமும் என்ற பிரச்சினையாகும். சோஷலிசம் மற்றும் கம்யூனிஸத்தைக் கட்டும் போது சமூகப் பரிமாணங்களின் ஒரு ஒருங்கிணைந்த வழிகாட்டலின் அவசியம் பற்றிய

லெனினது கருத்துக்கள் மேலும் விரிவாக்கம் பெற்றுள்ளன. சமூக மேலாண்மை நிர்வகிப்பில் விஞ்ஞான ரீதியான தகவலின் முக்கியத்துவம் பற்றிய அவரது ஆருடம், சோஷலிச சமுதாயத்தை நிர்வகிப்பதில் விஞ்ஞானத் தீர்க்கதரிசனம் பற்றிய அவரது கருத்துக்கள் ஆகிய அனைத்தும் இன்றும் பொருத்தமுடையனவாயுள்ளன. அதே சமயத்தில் வரலாற்றுப் பரிணாமத்தில் மக்களின் தீர்மானமான பாத்திரம் பற்றிய அவரது முன் மொழிதல்கள், நவீன சமூக ஆராய்ச்சியின் மிக முக்கியமான சித்தாந்த ஆராய்ச்சி மெய்ம்மைகளாகும்.

இந்த முன் மொழிதல்களனைத்தும் மார்க்சிய-லெனினிய வாதிகளால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு விரிவாக்கப் பட்டுள்ளன. இவர்கள் எழுதிய பல நூல்களில் லெனினது அடிப்படையான கருத்துக்கள் ஆக்க பூர்வமாகப் பயன் படுத்தப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் வளர்ச்சி பெற்ற சோஷலிச அமைப்பின் மேலாண்மை நிர்வகிப்பில் கிடைத்த அனுபவம் ஒரு விஞ்ஞான வழியில் பொதுமைப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தத்துவம், சமூகவியல், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானக் கம்யூனிஸம், மற்றும் சமூக விஞ்ஞானத்தின்இதர கிளைகளையும் தழுவி சோஷலிசத்தின் கீழ் ஒரு உலகு தழுவிய சமூக நடைமுறை ஆட்சியின் ஆய்வியல் உருவாக்கப் பட்டது.

மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டத்தைப் பற்றிய அண்மைக்காலப் படைப்புக்களும் மனிதனைப் பற்றியும் அவனது அறிவு சார்ந்த வாழ்க்கையைப் பற்றியுமான மார்க்சிய லெனினிய போதனைகளின் தொடர் பான பல பிரச்சினைகளைப் பரிசோதனை செய்கின்றன. இவற்றில் கீழ்க்கண்ட முக்கியமான திசை வழிகளைத் தேடிக் காணலாம்: மார்க்சிய லெனினிய மனிதத்துவப் பிரச்சினை களும் இன்றைய நிலைக்கு அவற்றின் பொருத்தமும்; லெனினது சித்தாந்தப் படைப்புக்களில் மனிதனைப் பற்றிய தத்துவார்த்தப் பிரச்சினைகள்; ஒரு புதிய சோஷலிச

மனிதனை உருவாக்கும் பிரச்சினைகள்; சோஷலிசத்தின் கீழ் சமுதாயத்தின் அறிவு சான்ற வாழ்க்கை பற்றிய பொதுவான வர்ணனை; சோஷலிச கலாச்சாரம் மற்றும் அதன் வளர்ச்சி பற்றிய சட்டங்களைப் பற்றி லெனினது போதனை; சோஷலிச சமுதாயத்தில் மதம் மற்றும் நாத்திகப் பிரச்சாரம் பற்றிய விமர்சனம்; கம்யூனிஸ்ட் நன்னெறிகள்; லெனினிய ஒளியில் சம காலத்துப் பிரச்சினைகளின் மதிப்பைப் பகுப்பாய்வது.

மனிதத்துவ சித்தாந்தத்தைப் பற்றி விவாதிக்கும் போது லெனினது அடிப்படை ஆய்வியல் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது மனிதத்துவம், மனிதனை நேசிப்பது மற்றவர்களை ஒரு பொறுப்புணர்வுடன் பார்ப்பது போன்றவை பிரிக்க முடியாதபடி ஜனநாயகத்தின் பொதுக் கருத்தோட்டத்துடன் இணைந்துள்ளன.[84] மார்க்சியத்தைப் பொறுத்தமட்டில், இது சமூகக் கொடுமைகளை ஒழிக்கும் ஆரம்பக் கோட்பாடுகளுக்கு இறங்கி வரவில்லை. ஆனால் மனிதனையும் மனித சமுதாயங்களையும் உணர்வு பூர்வமான படைப்பாற்றல் சக்திகள், என அங்கீகரிப்பதை வலியுறுத்துகிறது. அவர்களது மிக உயர்ந்த வெளிப்பாடு, உழைக்கும் மக்களைச் சுரண்டலிலிருந்து விடுவிப்பதற்கான புரட்சிப் போராட்டம் என்பதை அங்கீகரிக்கிறது. லெனின் மனிதத்துவத்தை விஞ்ஞானத்துடனும் சமூக அறிவாற்றலுடனும் இணைத்தார். இவ்வாறாக அதை கூட்டு மொத்தமான பிண்டப் பிரமாணக் கோட்பாடுகளிலிருந்து உலகத்தை ஒரு புரட்சிகர வழியில் மாற்ற மக்களுக்கு உதவி செய்வதற்காக சித்தாந்தக் கருத்தமைவுகளின் ஒரு அமைப்பாக மாற்றினார். இவற்றில் தான் அவரது வரலாற்றுச் சிறப்பு காணக் கிடைக்கிறது.

மக்களிடம் மெய்யான மனித உறவுகளை வளர்ப்பதில் உற்பத்தி சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் காணக் கிடைக்கும் முன்னேற்றம் ஒரு தீர்மானமான காரணி என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். சமுதாயத்தை மதிப்

பீடு செய்வதில் முதலாளித்துவமும் ஒரு முற் போக்குப் பாத்திரம் வகிப்பதை அவர் குறிப்பிட்டார். இருந்தாலும் சோஷலிசத்தின் கீழ் மட்டும் தான், சுரண்டும் சமுதாய அமைப்பு அகற்றப்பட்ட பின்னர் தான் மெய்யான சமூக முன் னேற்றத்தையும், மக்களிடம் உண்மையான மனிதத்துவ உறவுகளையும் காண்பது சாத்தியம் என்றார்.

மனிதனின் சுதந்திரமான தங்கு தடையற்ற வளர்ச்சியே கம்யூனிஸத்தின் மகோன்னத லட்சியம் என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் எழுதினார்கள். "சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சுதந்திரமான சுபீட்சம் நிறைந்த இன்பம் கொஞ்சும் வாழ்க்கை; அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி."[85] இதை வழங்குவதே வருங்கால சோஷலிச சமுதாயத்தின் லட்சியம் எனக் கூறி லெனின் இந்த ஆய் வியலை மேலும் தனித்தன்மை கொண்ட ஒன்றாக்கினார். இந்த முன்மொழிதல் அண்மைக்கால சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களில் குறிப்பாக 25, 26வது காங்கிரஸ்களின் தீர்மானங்களில் வளர்த்துச் செல்லப்பட்டது. ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தில் ஒரு புதிய மனிதனின் அனைத்துத் துறையிலுமான வளர்ச்சி, எண்ணற்ற பல பிரச்சினைகளைத் தீர்ப்பதில்தான் உள்ளது என்பதை இவை வலியுறுத்தின. இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, பன்மடங்காக விருத்தி செய்வது; நடை முறையையும் விஞ்ஞானத்தையும் இரண்டறக் கலப்பது; சோஷலிச ஜனநாயகத்தை மேலும் வளர்த்துச் செல்வது; மற்றும் உழைப்பு சித்தாந்தம், உழைக்கும் மக்களின் நன்னெறிப் பயிற்சி போன்றவற்றில் ஒரு ஒருமித்த சமநிலை அமைப்புக் காண்பது போன்ற பிரச்சினைகள்.

லெனினது மனிதத்துவக் கருத்தமைவு முதலாளி வர்க்கத்தை எதிர்த்த பாட்டாளி வர்க்கப் போராட்ட ஆய்வுடன் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டுள்ளது. இந்தப் போராட்டம் மட்டுமே அது எந்த வடிவத்தை எடுத்தாலும், மனித சமுதாயம் முழுவதின் ஒருங்கிணைந்த உணர்வாக வலு

வாக உருவாக்கப்பட்ட, சமுதாயம் மற்றும் தனிநபர்களின் நலன்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகள் அகல்வது, சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் ஒரு புதிய வரலாற்றுச் சமுதாயம் மலர்வது போன்ற எந்த வடிவத்தை எடுத்தாலும் அதுவே மனிதத்துவத்தின் உண்மையான விஞ்ஞான வழி வியாக்கியானம் ஆகும். சோவியத் மக்கள் தங்களது பொதுவான உலகக் கண்ணோட்டம் மற்றும் இலட்சியங்களினால், தங்களது இலட்சியத்தின் நேர்மை மற்றும் வரலாற்று நியாயத்தினால் ஒன்று பட்டு அணி திரண்டு நிற்கிறார்கள்.

சமூக முன்னேற்றத்தில் மனிதனின் இடம் மற்றும் பாத்திரம் பற்றிய லெனினது கருத்தமைவும் அவர் பரிசீலித்த கலாசார வாழ்க்கையின் இதர பிரச்சினைகள் போன்று முக்கியமானதே. ஆனால் லெனினியக் கட்டத்தின் மாணவர் களால் சில காலம் வரை அது போதுமான விவரங்களுடன் பரிசீலிக்கப்படவில்லை. இதனால் லெனினிஸத்தின் விரோதி களுக்கு, லெனின் இந்தப் பிரச்சினையைத் தொடவேயில்லை என்று வலியுறுத்திக்கூறும் வாய்ப்புக் கிட்டியது.[86] இருந்த போதிலும் லெனினது சித்தாந்தப் படைப்புக்களைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வு, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அந்த மகோன்னதத் தலைவர் சோஷலிச மனிதத்தத்துவத்தின் பிரச்சினைகள் பற்றி ஒரு ஆழமான விரிந்த குறிப்பை வழங்கி யுள்ளார் என்பதைப் புலப்படுத்துகிறது.

மனிதன்; இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கும் போது கீழ்க்கண்ட தலையாய கோட்பாட்டை லெனின் முன் வைத் தார்: "தனது நடைமுறைச் செயல்பாடுகளில் மனிதன் புறவயப்பட்ட உலகை எதிர் நோக்குகிறான்; அதைச்சார்ந்து நிற்கிறான்; அதனால் தனது நடவடிக்கைகளைத் தீர்மானிக் கிறான்."[87] இந்தப் பிரச்சினைக்கான பரிகாரம், மனிதனது திறமைகளின் வளர்ச்சியைத் தடுக்கும் அனைத்திலிருந்தும் அவனை விடுவிப்பது; மக்களிடையே சோஷலிச கம்யூனிஸக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு மெய்யான ஒருங்

கிணைப்பை நிறுவுதல் போன்றவைதான் என அவர் உணர்ந்தார்.

அக்டோபருக்குப் பிந்திய காலகட்டத்தில் புதிய சமுதாயத்தைக் கட்டும் கடமை முன்னுரிமை பெற்றதும், சோஷலிசத்தின் விலை மதிக்க முடியாத சொத்து மனிதனும் அவனது வாழ்க்கையும் தான் என்பதை லெனின் மீண்டும் ஒரு முறை வலியுறுத்தினார்.[88] ஒருங்கிணைவான வளர்ச்சியையும் செழுமையான அறிவார்ந்த வாழ்க்கையுடன் நன்கு படித்த மனிதனையும், சமுதாயத்துடன் பெருமளவிலான விதம்வித மான தொடர்பையும் உருவாக்க வேண்டியது சோஷலிச நிர்மாணத்தின் சத்தும் சாரமுமாகவிருந்தது என அவர் விளக்கினார்.[89] ஒவ்வொரு மனிதனதும் தனித்தனியான சிறப்பியல்புகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு கல்வியின் புதிய வடிவங்களை நோக்கும் பொழுதே இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு மனிதகுலம் சேமித்து வைத்துள்ள அனைத்துக் கலாசாரச் சொத்துக்களையும் பயன்படுத்த வேண்டுமென்று லெனின் அறைகூவி அழைத்தார்.[90] இந்தக் கருத்துக்களனைத்தும், சோவியத் மக்களின் கம்யூனிஸக் கல்வியில் தலைசிறந்த பாத்திரத்தை வகித்தன. இன்று அவை, ஒரு புதிய மனிதனை, படைப்பாற்றல் திறனுடன் கூடிய மனிதனை, தன் தலைவிதியை தானே நிர்ணயித்துக் கொள்ளும் மெய்யானதொரு எஜமானனை உருவாக்கும் பணியில் பிரதான நோக்கங்களுக்கும் வழிமுறைகளுக்கும் ஒரு விஞ்ஞான அணுகும் முறையுடன் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு முதலீடு செய்கின்றன.

தனி நபர் பற்றிய தனது ஆய்வை மனிதனின் பிரச்சினை யோடு நெருங்கிய தொடர்புபடுத்தி லெனின் விரிவாக்கி னார். 19-ம் நூற்றாண்டில் உழைக்கும் தனிநபர் அவனே உருவாக்கிய லோகாயுத கலாசார சமூக மதிப்புக்களிலிருந்து அன்னியப் படுத்தப்படுவது மற்றும் தனிநபருக்கும் சுரண்டும் சமுதாயத்திற்குமிடையே பகைமையுடன்கூடிய முரண்பாடுகள் பற்றியதுமான தன்கருத்தை மார்க்ஸ் முன்வைத்தார். 20-ம்

நூற்றாண்டின் புரட்சிகளின் ஆதாயத்தினது அனுபவங்களுக்கும், சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தில் துவங்கிய சோஷலிச நிர்மாணத்திற்கும் பயன்படுத்தி லெனின் இந்தக் கருத்துக்களை வளர்த்தெடுத்தார். தனது சித்தாந்த அரசியல் நடவடிக்கைகளின் முதல் சில ஆண்டுகளில், தனி நபர் பற்றிய மார்க்சியக் கருத்தமைவை லெனின் பரிசோதித்தார். இயற்கை மற்றும் வரலாற்று நிர்ப்பந்தங்கள் காரணமான மானுடத்தின் செயல்பாடுகளை விளக்கிய நியதி வாதக் கோட்பாட்டின்பால் மார்க்ஸ் அவரது தனிநபர் பற்றிய விஞ்ஞானக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டதை அவர் சுட்டிக் காட்டினார். இந்தக் கோட்பாடு வரலாற்றில் தனி நபரின் தீவிரப் பாத்திரத்தை மறுக்கவில்லை என்றார் லெனின். தனிநபரின் செயல்பாட்டைக் கணிக்கும்போது, அவனது செயல்பாடுகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான நிலைமைகள் எவை, இந்தச் செயல்பாடுகள் அவற்றிலிருந்து மாறுபட்ட செயல்பாடுகளின் ஒட்டப் போட்டியில் தோற்று தனிமைப்பட்டு நிற்கமாட்டா? என்பதை உத்திரவாதப் படுத்துவது எது போன்றவைகளை பகுப்பாய வேண்டுவதை இது வற்புறுத்துகிறது.[91]

சோவியத் காலகட்டத்தில், ஒரு புதிய சோஷலிச மனிதனைப் பயிற்றுவிப்பதற்கான பொதுவான கோட்பாடுகளை லெனின் வகுத்தளித்தார். இவற்றுள் பிரதானமான ஒன்றைப்பற்றி லெனின் கம்யூனிஸ்டுகளுக்கு அறைகூவல் விடுத்தார் ''நம்மிலிருந்தே நாம் துவக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளோம்.''[92] அடுத்து முக்கியமாக இருப்பது தனது சொந்தத் தவறுகளை வெளிப்படுத்தி ஆய்வு செய்யும் திறமை. அவர் எழுதியதாவது: நாம்........செய்த தவறுகளை அடிப்படையாகக் கொண்டு எங்ஙனம் போராட்டத்தை சிறந்த முறையில் ஸ்தாபனப்படுத்தலாம் என்பதற்கு உடனடியாகப் படிப்பினைகளைக் கற்றறிய வேண்டும்''[93] எனினும் நாடு தழுவிய பிரச்சினைகளைச் சமாளித்து புதிய சமுதாய அமைப்புக்களின் நடைமுறை ஆட்சியைக் கொண்டு

செலுத்த உலகெங்கணுமுள்ள மக்களை மகத்தான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கிளப்பிவிடும் மற்றொரு கோட்பாடும் உள்ளது. சோஷலிச சமுதாயத்தின் முன்னேற்றத்தோடு, இந்தக் கருத்துக்களும் ஒரு சோஷலிச மனிதனை உருவாக்குவதற்கு திட்டங்களாக உருக்கொண்டன. அவை அனைத்தும் அண்மைக்கால சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு கட்சியினது காங்கிரஸ்களின் முடிவுகளிலும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் விரிவாக்கக் கூட்டங்களிலும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் தீர்மானங்களிலும் ஆக்கபூர்வமாக வளர்க்கப்பட்டு விரிவான முறையில் ஆராயப்பட்டன.

சமுதாயத்தின் கலாசார வளர்ச்சியின் பொதுவான பிரச்சினைகளுள் மதசம்பந்தமான கருத்துக்களை விமர்சிப்பது மற்றும் விஞ்ஞான ரீதியான நாத்திகத்தைப் பிரசாரம் செய்வதின் அவசியத்தையும் லெனின் சுட்டிக்காட்டினார். அக்டோபர் புரட்சிக்கு முன் அவர் எழுதிய பல நூல்களில் இந்த மிக முக்கியமான பிரச்சினைக்கு மார்க்சியத்தின் பொதுவான அணுகும் முறையை அவர் வகுத்தளித்தார். சோவியத் கால கட்டத்தில் அவர் கட்சியின் மத எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு விதத்திலும் வளர்க்கப்பட வேண்டும், விஞ்ஞான ரீதியான நாத்திகக் கருத்துக்கள் திட்டமிடப்பட்டுப் பரப்பப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இந்தக் கடமையைச் செய்து முடிக்க, இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களின் சாதனைகளைப் பிரசாரம் செய்வதற்கு வரிசையான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; உழைக்கும் மக்களிடம் ஒரு மெய்யான விஞ்ஞானக் கண்ணோட்டத்தையும், பல்வேறு விஞ்ஞானங்களிலும் அண்மைக் காலத்தில் காணக்கிடைத்த சாதனைகளின் கூட்டு மொத்தத்தையும் இணைத்து மார்க்சியச் சித்தாந்தக் கருத்து நிலைபாட்டில் வாழ்க்கையை எடைபோடும்

திறமையையும் போதிக்க வேண்டும். நவீன ''மதத்துறையில் பட்டம் பெற்ற விகாரத் தோற்றமுடைய பிறவிகளை'' எதிர்த்து ஒரு ஈவிரக்கமற்ற முறையான போராட்டத்தை நடத்த வேண்டியதும் அவசியம் என லெனின் குறிப்பிட்டார்.

''சோஷலிசத்தின் கீழ் கலாசார முன்னேற்றத்தின் சத்தும் சாரமும், அக்டோபர் புரட்சிக்கு முன் மானுடத்தின் மேதாவிலாசம், மனிதனின் மூளை தொழில்நுட்ப, கலாசாரப் பயன்களை ஒரு சிலருக்காக மட்டுமே படைத்து இதர மக்களுக்கு இன்றியமையாத் தேவைகளான கல்வி, வளர்ச்சி போன்றவைகளை மறுத்தது. இப்பொழுது முதல் விஞ்ஞானத்தின் அனைத்து அற்புதங்களும், கலாசாரத்தின் ஆதாயங்களும் ஒட்டுமொத்தமாக நாட்டுக்குச் சொந்தம்; இனி எந்தக் காலத்திலும் மனித மூளையும், மானுடத்தின் மேதாவிலாசமும் ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் பயன் படுத்தப்பட மாட்டாது''[94] என லெனின் எழுதினார். ''இதை நடைமுறைப்படுத்த சோஷலிசம் ஒட்டுமொத்தமான மிகவும் செழுமையான, வரலாற்று ரீதியில் இன்றியமையாத தும் நமக்கு அவசியமானதுமான கலாசார சேமிப்பின்பால் திரும்பவேண்டும். முதலாளித்துவத்தினால் தேக்கி வைக்கப் பட்டுள்ள அறிவாற்றலையும் தொழில் நுட்பத்தையும், முதலாளித்துவத்தின் ஒரு உபகரணம் என்பதிலிருந்து சோஷலிசத்தின் உபகரணமாக மாற்றவேண்டும்''[95] என்றும் எழுதினார்.

கம்யூனிஸ்ட் நெறிமுறைகளின் சாரம், சோஷலிசத்தின் கீழ் உழைக்கும் மக்களை ஒழுக்க நெறியில் பயிற்றுவிப்பதற் கான வழிமுறைகள் பற்றிய லெனினது மெய்ஞ்ஞானங்கள் இன்றைய தினத்திற்கும் பொருத்தமாயுள்ளன. அக்டோபர் புரட்சிக்குமுன் அவர் எழுதியுள்ள பல நூல்களிலும், அதற்குப் பின் அவர் ஆற்றிய பல உரைகளிலும், நன்னெறிகளின் சாரத்தை, வரலாற்று வளர்ச்சியின் திட்டவட்டமான சட்டங்

களினால் வழி நடத்தப்பட்ட ஒரு விசேட வடிவம் எனப் புலப்படுத்தினார். அதேசமயத்தில், மூன்றாவது கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தின் காங்கிரஸில், அவர் வழங்கிய புகழ் பெற்ற "வாலிபர் கழகங்களின் கடமைகள்" என்ற அறிக்கையில், சோஷலிசம் மற்றும் கம்யூனிஸத்திற்கான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் நெறிமுறைகள் வல்லமை பொருந்திய ஆயுதம் எனக்குறிப்பிட்டு வலியுறுத்தினார். கம்யூனிஸ்ட் நெறிமுறையின் நியதி பற்றிய அவரது மெய்ம்மை அதாவது கம்யூனிஸ இலட்சியத்தை விருத்தி செய்கிற ஒழுக்கம்—சோஷலிஸ சமுதாயத்தின் நன்னெறிக் கருத்தின் முக்கிய அம்சங்களையும் பொருள் அடக்கத்தையும், கட்சியின் உறுப்பினர்களிடம் ஒரு கம்யூனிஸ்ட் உணர்வை எப்படி ஊட்டுவது என்பதையும் புலப்படுத்துகிறது.

இறுதியாக, அறிவாற்றல், சமுதாயத்தின் மதிப்பு உறவுகளின் சாரத்தை மதிப்பிடுதல் ஆகியவற்றின் ஒற்றுமை பற்றிய லெனினது மெய்ம்மைகள் இன்று வளர்ந்தோங்கியுள்ள முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

இன்று லெனினியத்தின் பரந்த அளவிலான முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவதற்காக நாம் முக்கிய பிரச்சினைகளைம் பரிசீலித்தோம். அண்மைப் பல பத்தாண்டுகளில், மார்க்சிய தத்துவார்த்த இலக்கியம் மார்க்சியத் தத்துவ ஞானத்தில் பிரத்தியேகத் திசை வழிகளுக்கு லெனினது தத்துவார்த்தக் கருத்துக்களின் பொருத்தத்தைத் தெளிவுபடுத்திக் காட்டும். பல படைப்புக்களின் மூலம் இணைப்புப் பெற்றதை குறித்துக் கொள்ளவேண்டும்.[96] லெனினது கருத்துக்கள் வாழ்கின்றன; அவை வளர்ச்சி பெறுகின்றன; செழுமைப்படுத்தப்பட்டு நடைமுறையில் பயன்படுத்தப் படுகின்றன என்பதை இவ்வனைத்துப் படைப்புக்களும் நிரூபிக்கின்றன. மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக் கட்டம் லெனினது மறைவோடு முடிவடைந்து விடவில்லை. உலகெங்கணுமுள்ள அனைத்துக் கம்யூனிஸ்ட்

கட்சிகளிலுமுள்ள அவரது சீடர்களும் அவரைப் பின்பற்றுகிறவர்களும், உலக சோஷலிசத்தின் நடைமுறை விவகாரங்களிலும், மார்க்சிய ஆய்வியலும் அவரது லட்சியத்தைப் பறை சாற்றுகின்றனர். இன்று லெனினியம் மேலும் மேலும், உலகத்தின் மிகப்பெரும் சக்தி வாய்ந்த சித்தாந்தப் போர்ப் பாணியாக உள்ளது.

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கள் கட்சிகளின் சர்வ தேச மாநாடுகள், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சகோதரக் கட்சிகளின் காங்கிரஸ்கள்; சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி ஆகியவற்றின் ஆவணங்களிலும், ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தின் சித்தாந்த சமூக வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி ஆராயும் ஆவணங்களிலும் லெனினது கருத்துக்கள் ஒரு புதிய உந்து சக்தியாகத் தரப்பட்டன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது காங்கிரஸில் உரையாற்றிய லியோனிட் பிரெஷ்னேவ் கூறியதாவது: ‘‘என்றென்றும் வாழும், வளரும் போதனையான லெனினியம் கட்சியின் சித்தாந்த வாழ்க்கையின் முடிவுத் தீர்வுக்குரிய திருப்பமாக உள்ளது. அதன் புரட்சிகர மாறுதல், நடவடிக்கைகளுக்கு ஒரு அடிப்படையாக உள்ளது. தொடர்ந்து அவ்வாறே இருக்கும். லெனினது சித்தாந்த மரபுரிமையைக் கடைப்பிடித்து, லெனினது கருத்துக்கள் மற்றும் ஆய்வியலை அடிப்படையாகக் கொண்டு கம்யூனிஸ நிர்மாணத்தின் சூடேறிப் போன பிரச்சினைகளைத் தீர்க்க பரிகாரம் காண்பதை கட்சி தனது முக்கிய கடமையாகக் கொண்டிருக்கிறது’’[97] சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது காங்கிரஸ் ஆவணங்களில் லெனினியம் இன்றைக்கும் பொருத்தமாயிருப்பது பற்றிய இந்த வருணனை விரிவாக்கப்பட்டுகீழ்க்கண்டவையும் சேர்க்கப்பட்டுள்ளது: சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸ்ட் கல்விக்கு, அதன் முழுமையான புரட்சிகர மாற்றம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்குக் கொண்டிருப்பது போன்று, மார்க்சிய-லெனினிய ஆய்வியலின் உறுதியான

அடித்தளத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. சரியான இலக்கையும் உத்திகளையும் வகுப்பதற்கு மார்க்சிய லெனினியம் மட்டுமே ஒரு நம்பற்குரிய அடிப்படை. அது ஒரு வரலாற்றுத் தொலைநோக்குத் தன்மையை நாம் புரிந்து கொள்ளுமாறு செய்கிறது. எதிர் வரும் ஆண்டுகளில் நமது சமூகப் பொருளாதார அரசியல் வளர்ச்சியின் நிலைபாடுகளை நாம் தீர்மானிப்பதற்கும் சர்வதேச வளர்ச்சிப் போக்குகளில் நமது இடத்தைத் துல்லியமாகக் கண்டுபிடிக்கவும் அது உதவி செய்கிறது. அதன் தொடர்ச்சியான ஆக்க பூர்வமான வளர்ச்சியிலிருந்துதான் மார்க்சிய லெனினியம் அதன் சக்தியைப் பெறுகிறது. இதைத்தான் மார்க்ஸ் போதித்தார். இதைத்தான் லெனின் போதித்தார். அவர்களது போதனை களுக்கு, கட்டளைகளுக்கு நமது கட்சி என்றென்றைக்கும் விசுவாசமாக இருக்கும்!."[98]

கம்யூனிஸத்தின் சித்தாந்தப் போர்ப் படைக்கு, சோஷலிச நிர்மாணத்தின் நடை முறைக்கு, முழுமையான உலகப் புரட்சிப் பரிமாணத்திற்கு லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவ விஞ்ஞானம் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. இந்தப் பங்களிப்பு ஒட்டுமொத்த மானுட அறிவாற்றல் வளர்ச்சியின் பிரதான நிலைபாட்டை தெளி வாகக் காட்டுகிறது. சமுதாயத்தின் சம காலத்துப் புரட்சிகர வளர்ச்சிக்கு ஒரு விஞ்ஞானத் தத்துவார்த்த அடிப்படை யாகவும், முற்போக்கான மனிதகுலத்தின் மிகவும் கவர்ச்சி கரமான, அதிகார பூர்வமான சித்தாந்தச் சக்தியாகவும் லெனினியம் உறுதியாக நிறுவப்பட்டுவிட்டது. இன்று மார்க்சிய-லெனினியத் தத்துவம் புரட்சிகரச் சிந்தனைக்கும் செயல்பாட்டுக்கும் ஒரு ஜீவனுள்ள ஆதர்சமாகத் திகழ்கிறது. கம்யூனிஸத்துக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் போராடு கிறவர்களுக்கும் அது மட்டுமே ஒரு சரியான சித்தாந்தத் தையும் அவர்களது மகோன்னத இலட்சிய ஈடேற்றத்துக்கான வழிமுறைகளையும் வழங்குகிறது.

1980-ம் வருடம் முற்போக்கு மனோபாவம் படைத்த மனிதகுலம் அனைத்தும் லெனின் பிறந்த 110 வது ஆண்டு விழாவைக் கொண்டாடின. "லெனின் பிறந்த 110 வது ஆண்டு விழாவைப் பற்றிய" சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானம் லெனினது கருத்துக்களின் சாரத்தையும் இன்றைய நிலையில் அவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியது. தீர்மானத்தின் ஒரு பகுதியினது வாசகமாவது: "ஏகாதிபத்தியம், சோஷலிசப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், கட்சி, ஜன நாயகத்திற்கும் சோஷலிசத்திற்குமான போராட்டத்தில் பாட்டாளிகளின் வர்க்க நண்பர்கள், அடிமைத் தளைகளி லிருந்து சமூகத்தை விடுவிப்பது மற்றும் நாட்டு விடுதலைக் கிடையேயான பிரிக்க முடியாத தொடர்பு, அதே போல் வேறுபட்ட சமுதாய அமைப்புக்களில், நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகள் ஆகியவை பற்றிய லெனினது போதனைகள் எல்லா நாடுகளிலுமுள்ள புரட்சிப் போராளி களுக்கும் மதிப்பிடற்கரிய சித்தாந்த தத்துவார்த்த, ஆய் வியல் ஆயுதமாயிற்று. சோஷலிசத் தாய்த்திரு நாட்டின் பாதுகாப்புக்கு அவரது கருத்துக்கள் மிக முக்கியமானவை ஆகும், சோஷலிச, கம்யூனிஸ வளர்ச்சிக்கான வழிகள் பற்றி அவர் உருவாக்கிய விஞ்ஞானம் அவரது தத்துவார்த்த மரபுரிமையின் புகழ் கோபுர உச்சியாகும்." [99]

லெனினியத்தின் தத்துவார்த்த சாரம் பற்றிய ஒரு தொலைநோக்கான கணிப்பும், நவீன சமூக முன்னேற்றத் துக்காக அதன் வளர்ந்தோங்கும் முக்கியத்துவமும், லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் தலைவர்களது படைப்புக்களிலும் உலகெங்கணுமுள்ள சகோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைசிறந்த தலைவர்களது படைப் புக்களிலும் அடங்கியுள்ளன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் மக்கள் அனைவரும் அதே போல் உலக சோஷலிச

சமுதாயத்தின் சகோதர நாடுகளும் லெனினது கருத்துக் களின் உறுதியான அடித்தளத்தையே தங்களது நடவடிக் கைகளின் அடிப்படையாகக் கொள்கிறார்கள். அந்தக் கருத்துக்களை அவர்கள் ஆக்கபூர்வமாக வளர்க்கிறார்கள். சம காலத்துச் சமூக வளர்ச்சியில் எழும் நடை முறை விவகாரங்களுக்கு அவற்றைப் பயன் படுத்துகிறார்கள்.

1981ம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடை பெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸ், லெனினியத்தின் தத்துவார்த்தக் கருத்துக்களுக்கு ஒரு புதிய ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்கியது. சம கால உலக வளர்ச்சியின் இயக்கம் பற்றிய லெனினது போதனையின் வரலாற்று உண்மையை அது மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியது. 1970 களில் உலக உருண்டையில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் பரப்பளவு மேலும் சுருங்கியது. அதே சமயத்தில் முதலாளித்துவ நாடுகளின் உள் முரண் பாடுகளும் அவற்றிற்கிடையேயான பகைமையும் தீவிர மடைந்தன. சோஷலிச நாடுகளில், பொருளாதாரம், சமூக உறவுகள் கலாசாரம் போன்றவற்றின் வளர்ச்சி, அவற்றின் உள்நாட்டு வெளிநாட்டுப் பிணைப்புக்கள் மற்றும் ஒத்துழைப்பு ஸ்திரப்படுத்தப்பட்டு வலுப்பெறுவதுடன் சேர்ந்து வெகு துரிதமாகவும் முறையாகவும் காணக் கிடைத்தது. இந்தக் கால கட்டத்தில் உலகத்தில் அனைத்து மக்களிடையேயும் தொடர்பு மற்றும் பிணைப்புக்களின் விரிவாக்கம் ஒரு முன் மாதிரியானதாகும். ''பழைய காலத்திலிருந்தே சர்தேச ரீதியில் நாடுகளுக்கிடையேயான நல்லுறவுகளுக்கு அழைப்புக்கள் விடப்பட்டன. ஆனால் நமது காலத்தில் மட்டுமே சோஷலிச உலகத்தில் நாடுகளுக் கிடையேயான நல்லுறவுகள் ஒரு உண்மையாகியுள்ளது.[100] மேற்கண்டவை, லெனினியத்தின் வரலாற்று உண்மை யையும், சோஷலிசத்தை நோக்கி சமூக முன்னேற்றப் பாதையில் மனித குலம் முன்னேறுவதை யாராலும் தடுக்க முடியாது என்ற அதன் போதனையையும், மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்துகின்றன.

வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தின் உள்ளார்ந்த இயக்கத்தைப் புலப்படுத்திய சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸ், கம்யூனிஸத்தை நோக்கிய அதன் மலர்ச்சியில் பொருளாதார சமூகக் கடமைகளின் ஒற்றுமையை வலியுறுத்தியது. ''பொருளாதார மேலாண்மை நிர்வகிப்பின் பிரச்சினைகள் வெறும் பொருளாதாரத்தின் பால் பட்டவை அல்ல; ஆனால் அரசியல், கட்சிப் பிரச்சினைகளாகும்''[101] என்றார் லியோனிட் பிரெஷ்னேவ். இது வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்தில் தெளிவாக வெளிப்பாடு பெற்றுள்ளது. ''சமூக, அரசியல் மற்றும் கலாசார முன்னேற்றத்துடன் பொருளாதார முன்னேற்றத்தின் உள் உறவு முதிர்ச்சியடைந்த சோஷலிச நிலைமைகளின் கீழ் மிகவும் நெருக்கமாக வளர்கிறது.''[102] இங்கும் கூட, சமுதாயத்தின் பொருளாதார அரசியல் மற்றும் கலாசார வளர்ச்சியின் ஒற்றுமை அதன் விஞ்ஞான அடிப்படையிலான வழிகாட்டல் ஆகியவை பற்றிய முன் மொழிதல்கள் வரலாற்று ரீதியாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன.

சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளில், லெனின் தனது தத்துவார்த்தப் படைப்புக்களில், சோஷலிசத்தின் கீழ் விஞ்ஞானத்தின் அதிகரித்த பாத்திரம், நடைமுறையுடன் அது இரண்டறக் கலப்பது போன்றவற்றிற்கு அதிக இடத்தை அர்ப்பணித்தார். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸ் அண்மைக் காலங்களின் அனுபவத்தைக் கொண்டு இந்த முன் மொழிதல்களை ஆக்கபூர்வமாக விரிவாக்கியது. காங்கிரஸில் உரையாற்றிய பிரெஷ்னேவ் ''விஞ்ஞானம் இல்லாமல் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதென்பது நடக்க முடியாதது''[103] என்பதை வலியுறுத்திக் காட்டினார். நடைமுறைக் கடமைகளை நிறைவேற்ற அறிவாற்றல் நிறைந்த மேதைகளின் மகத்தான முயற்சிகள் தேவைப்படும். வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தில் விஞ்ஞானம் மற்றும் நடைமுறையின் இயக்கவியல் ஒற்றுமையை வர்ணித்தார். அதே சமயத்தில்,

தேங்கிப் போவது, மற்றும் பின்னடைவுகளின் அடையாளங்கள் காணக் கிடைக்கும், இன்றைய அறிவாற்றலின் அளவு வேகமான வெற்றிகரமான முன்னேற்றங்களைக் காணும் பிரதேசங்களைச் சுட்டிக் காட்டி ''விஞ்ஞானமே அடிக்கடி தொல்லைகளை உருவாக்குவதாகவும் இருக்கிறது'' என்றார்.[104] ''சம கால வரலாற்றில் விஞ்ஞானம் மற்றும் உற்பத்தியின் நெருங்கிய ஒருங்கிணைப்பு இன்றியமையாததாகும்[105] என்பதை காங்கிரஸ் வெளிப்படுத்திக் காட்டியது.

ஒரு புதிய சமுதாயத்தின் நடைமுறை ஆட்சியின், வளர்ச்சியில் 'மானுடத்தின் காரணக்கூறுக்கு' லெனின் மகத்தான முக்கியத்துவம் வழங்கியது அனைவருமறிந்ததே. இந்தப் பிரச்சினை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது காங்கிரஸில் ஆக்கபூர்வமான விரிவாக்கத்தைப் பெற்றது. பணிகளில் லெனினது பாணி பற்றிய பிரச்சினைகள் வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்: துணிச்சலான முன்முயற்சி மற்றும் ஸ்தாபனப்படுத்தலுடன் உறுப்பு ரீதியாக திறமையையும், கட்டுப்பாட்டையும் இணைக்கின்ற பணியின், பாணி பற்றிய மதிப்பீடே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நடைமுறை மற்றும் காரியார்த்தமான கிரஹிப்பு; மகோன்னத லட்சியங்களுக்காக அர்ப்பணித்துக் கொள்ளல்; பின்னடைவுகள் சம்பந்தமாக ஒரு கவலையுடன் கூடிய அணுகும் முறை; நாம் தேர்ந்தெடுத்துள்ள பாதையின் வரலாற்றுச் சாதகங்களின்பால் முழு நிறைவான நம்பிக்கை போன்றவை.''[106] ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தில் இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண லெனினது கருத்துக்கள் ஒரு திண்ணிய தத்துவார்த்த அடிப்படையாக விளங்குகின்றன. மார்க்சிய-லெனினியக் கட்சி, நடக்கக் கூடிய அனைத்து நிகழ்வுகளையும் முறையாகப் பார்த்து கவனம் செலுத்தா விட்டால், புதிய நிகழ்வுகளை படைப்

**பாற்றல் திறனுடன் வளரும் மார்க்சிய-லெனினியச் சித்தாந் தத்துக்கு**[107] பொதுமைப்படுத்துதலுக்கு கவனம் செலுத்தா விட்டால் அது தனது பாத்திரத்தை நிறைவேற்ற முடியாது. சமுதாயம் கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறும் பொழுது சமகாலத்து சித்தாந்த மற்றும் நடைமுறை சமூகக் கடமை களை நிறைவேற்றுவதற்கு உதவி செய்ய, லெனினியம் புதிய நோக்குகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது. சமகால சோஷலிசத்திற்கும், சமாதானம், ஜன நாயகம் மற்றும் சமூக முன்னேற்றப் பாதையில் நடை போடும் மனித குலத்தின் வளர்ச்சிக்கும் லெனினது போதனை அதிகரித்த அளவு பொருத்தமாகி வருகிறது.

## குறிப்புகள்

1. வி. ஐ. லெனின், ''தீவிரப் பொருள் முதல் வாதத்தின் முக்கியத்துவம் பற்றி,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 33, பக்கம் 234.

2. வி. ஐ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 28, பக்கம் 323.

3. வி. ஐ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 28, பக்கம் 323.

4. லெனின் கட்டுரைத் தொகுப்பு 11, மாஸ்கோ, லெனின் கிராட் 1929, பக்கம் 357 (ருஷ்ய மொழியில்).

5. வி. ஐ. லெனின், ''ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரஸ்,'' (போல்ஷ்விக்ஸ்) மார்ச் 18-23 1919, **நூல்திரட்டு**, தொகுப்பு 29, பக்கங்கள் 156-157.

6. வி. ஐ. லெனின், ''தொழிற்சங்கங்கள், இன்றைய நிலையும் ட்ராட்ஸ்கியின் தவறுகளும்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 32, பக்கங்கள் 27-28.

7. வி.ஐ. லெனின், ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிக்கடமைகள்,'' தொகுப்பு 27, பக்கங்கள் 273-274.

8. பார்க்கவும், வி. ஐ. லெனின், ''மீண்டும் தொழிற்சங்கங்களைப் பற்றி, தற்போதைய நிலையும் ட்ராட்ஸ்கி மற்றும் புகாரினின் தவறுகளும்.'' **நூல்திரட்டு**, தொகுப்பு 32, பக்கம் 94.

9. வி. ஐ. லெனின், ''மகத்தான துவக்கம்.'' **நூல்திரட்டு**, தொகுப்பு 29, பக்கம் 421.

10. வி. ஐ. லெனின். ''நமது வெளி நாட்டு மற்றும் உள் நாட்டு நிலைபாடும் கட்சியின் கடமைகளும்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 31, பக்கம் 419.

11. அதே புத்தகம், பக்கம் 420.

12. விடு முறை நாட்களில் ஊதியமின்றி தாங்களாகவே வேலை செய்வது.

13. வி. ஐ. லெனின், ''இடதுசாரிக் கம் கம்யூனிஸம்—ஒரு இளம் பிள்ளைவாதம்,'' **நூல திரட்டு**, தொகுப்பு 31. பக்கங்கள் 103-104.

14. அதே புத்தகம், பக்கங்கள் 80-81.

15. வி.ஐ. லெனின், ''வாலிபர் கழகங்களின் கடமைகள்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 31, பக்கம் 287.

16. அதே புத்தகம், பக்கம், 289.

17. வி. ஐ. லெனின், "ஒய், எம், கிரிஸ்ஸிஸ்-னோவ்ஸ்கி" **நூல்திரட்டு**, தொகுப்பு 35, பக்கம் 435.

18. வி. ஐ. லெனின், "ஒருங்கிணைந்த பொருளாதாரத் திட்டம்," **நூல்திரட்டு**, தொகுப்பு 32, பக்கம் 140.

19. வி.ஐ. லெனின், "டெய்லி எக்ஸ்பிரஸ் நிருபரின் கேள்விகளுக்குப் பதில்," **நூல்திரட்டு** தொகுப்பு 30, பக்கம் 368.

20. வி.ஐ. லெனின், "சோவியத்துக்களின் 8வது அகில ருஷ்யக் காங்கிரஸ்," டிசம்பர், 22-29, 1920, **நூல்திரட்டு**, தொகுப்பு 31, பக்கம் 518.

21. வி.ஐ. லெனின், "மின்சார மயமாக்குவது பற்றிய குறிப்புக்கள்," **நூல்திரட்டு**, தொகுப்பு 42, பக்கம் 280.

22. வி.ஐ. லெனின், தொழில் நுட்பக்கல்வி பற்றி" **நூல்திரட்டு**, தொகுப்பு 36, பக்கம் 534.

23. கார்ல்மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ், 'பாரிஸ் கம்யூன்பற்றி' முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ 1976, பக்கம் 139.

24. அதே புத்தகம், பக்கம், 162.

25. வி.ஐ. லெனின், "நமது புரட்சி," **நூல் திரட்டு**, தொகுப்பு 33, பக்கங்கள் 478-480.

26. வி.ஐ. லெனின், "தீவிரவாதப் பொருள் முதல் வாதத்தின் முக்கியத்துவம் பற்றி," தொகுப்பு 33, பக்கம் 227.

27. அதே புத்தகம், பக்கம் 233.

28. வி.ஐ. லெனின், ''தீவிரப்பொருள் முதல் வாதத்தின் முக்கியத்துவம் பற்றி,'' தொகுப்பு 33, பக்கம் 234·

29. அதே புத்தகம், பக்கம். 229.

30. ஸ்மெனாவெக். உள்நாட்டுப் போரில் (1917—1921) எதிர்ப்புரட்சி தோல்வியுற்ற பிறகு கேடட் கட்சியின் இடதுசாரி அணியில் எழுந்த ஒரு சித்தாந்த அரசியல் போக்கு. அதன் தலைவர்கள் என். உஸ்டிரியாலோவ், (ஒரு வரலாற்று அறிஞர்) யூ. கிளியச்னிகோவ். (ஒரு வழக்கறிஞர் ) ஆகியோர் சோவியத் அதிகாரத்திற்காகப் பாடும்படி ருஷ்ய அறிவாளிகளுக்கு அழைப்பு விடுத்தனர். அதாவது அதன் 'திருப்பு முனை'' (ருஷ்ய மொழியில் வெக்கி) யின் நோக்கங்களை மாற்றுமாறு அழைப்பு விடுத்தனர். இந்தப் பத்திரிகை முந்திய ஆண்டுகளில் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளைத் தீர்மானித்தது. (வெக்கி இதழ்களின் தொகுப்புக்களில் அச்சான கட்டுரைகள்). சோவியத் அமைப்புக்களின் பணிகளில் முதலாளித்துவ அறிஞர்கள் பெருமளவாகப் பங்கு கொள்வது, சோவியத் அதிகாரம் முதலாளித்துவத் திசைவழிக்குச் செல்லும் என ஸ்மெனா-வெக்கைச் சேர்ந்தவர்கள் நம்பினார்கள். கட்சியின் 11வது காங்கிரஸில் லெனின் ஸ்மெனாவெக் கூட்டத்தினரின் வர்க்க நிலைபாடுகளை வெளிப்படுத்தினார். எனினும் முதலாளித்துவ வல்லுனர்களின் அழைப்பை ஏற்று பொருளாதாரத்தில் பணியாற்றுமாறு கம்யூனிஸ்டுகளுக்கு அறிவுரை வழங்கினார்.

31. வி. ஐ. லெனின். ''இனி என்ன செய்ய வேண்டும்?'' நூல்திரட்டு, தொகுப்பு 5, பக்கம் 464.

32. வி.ஐ. லெனின், குபெர்னியா மற்றும் உய்ஸ்ட் கல்வி இலாகாக்களின் தொழிலாளர்களது

அகில ருஷ்ய அரசியல் கல்வி மாநாட்டில் ஆற்றிய உரை, நவம்பர், 3—1920, **நூல்திரட்டு**, தொகுப்பு 31, பக்கம் 372.

33. வி.ஐ. லெனின், அகிலருஷ்ய தொழிற் சங்கங்களின் மத்தியக் கவுன்சில் கம்யூனிஸ்ட் குழுவினரின் கூட்டத்தில் ஆற்றிய உரை, மார்ச் 15, 1920, **நூல்திரட்டு**, தொகுப்பு 36, பக்கம் 521.

34. வி ஐ. லெனின், ''நல்லவை கொஞ்சமாயிருந்தாலும் நல்லவையாகவே இருக்கட்டும்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 33, பக்கம் 494.

35. வி.ஐ. லெனின், ''மார்க்சியமும் மக்கள் கிளர்ச்சியும்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 26, பக்கம் 27.

36. பார்க்கவும், கார்ல் மார்க்ஸ், கிரண்ட்ரிஸ் டெர்கிரிட்டிக் டெர்பாலிட்டிஸ்சென் ஒக்கனாமிக். வெர்லாக் பர் ப்ரெம்

37. வி.ஐ. லெனின். ''தத்துவார்த்தக் குறிப்புப்புத்தகங்கள்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 38, பக்கம் 187.

38. அதே புத்தகம், பக்கம் வ.189

39. இந்தக் கோட்பாடு 16-ம் நூற்றாண்டின் அரசியல் வாதியான நிக்கோலோ மாக்கியவல்லியால் வகுக்கப்பட்டது. நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்கள் தங்களது காரியங்களை நிறைவேற்ற எந்த சாதனத்தைப் பயன் படுத்தினாலும் அது 'சரியே' என இவர் பிரகடனம் செய்தார். பின்னர் இக்கோட்பாடு மிகவும் பிற்போக்கான முதலாளித்துவ ஆய்வியலாளர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

40. பிரடெரிக் எங்கெல்ஸ். டூரிங்குக்கு எதிர்ப்பு. முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ 1975. பச்கம் 137.

41. வி. ஐ. லெனின், ''மக்களின் நண்பர்கள் யார். அவர்கள் சமூக ஜனநாயகவாதிகளை எதிர்த்து எங்ஙனம் போராடுகிறார்கள்,'' **நூல் திரட்டு**, தொகுப்பு 1, பக்கம் 165.

42. வி. ஐ. லெனின், ''கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்'' ஜூலை 19, ஆகஸ்ட் 7, 1920.'' **நூல்திரட்டு**, தொகுப்பு 31, பக்கம் 232.

43. வி. ஐ. லெனின், ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 27, பக்கம் 274.

44. வி. ஐ. லெனின், ''காங்கிரஸுக்கு எழுதிய கடிதம்'' **நூல்திரட்டு**, தொகுப்பு 36, பக்கம் 596.

45. வி. ஐ. லெனின், ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்'' என்ற கட்டுரையின் மூல வாசகம். **நூல்திரட்டு**, தொகுப்பு 42,பக்கம் 71.

46. பார்க்கவும். எப். எங்கெல்ஸ் ஜெர்மனியில் விவசாயிகளின் போர் முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ 1965, பக்கங்கள் 21-23.

47. வி. ஐ. லெனின்,தொழிற்சங்கங்கள் பற்றி மீண்டும் ஒரு முறை. தற்போதைய நிலைமைகளும் ட்ராட்ஸ்கி மற்றும் புகாரின் செய்த தவறுகளும் **நூல்திரட்டு**, தொகுப்பு 32, பக்கம் 83.

48. சிந்தாந்த அரசியல் மற்றும் கல்விப் பணிகளை மேலும் அபிவிருத்தி செய்வது பற்றி. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானங்கள். ஏப்ரல் 26, 1979-மாஸ்கோ 1979, பக்கம் 3 (ருஷ்ய மொழியில்).

49. பார்க்கவும். வி. ஐ. லெனின், ''மீண்டும் ஒரு முறை தொழிற் சங்கங்கள் பற்றி தற்போதைய நிலைமையும் ட்ராட்ஸ்கி மற்றும் புகாரின் செய்த தவறுகளும் **நூல்திரட்டு**, தொகுப்பு 32, பக்கம் 94.

50. வி. ஐ. லெனின், ''ஒரு பத்திரிகையாளரின் நாட்குறிப்பிலிருந்து,'' **நூல்திரட்டு**, தொகுப்பு 26, பக்கம் 52.

51. பிராவ்டா, டிசம்பர் 1, 1920.

52. இந்த ஆவணத்தின் ஒரு அசல் பிரதி. பொருத்தமான பாராவில் லெனினது குறிப்புக் களுடன். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி யினது மார்க்சிய-லெனினியக் கல்விக் கூடத்தின் மத்திய கட்சி ஆவணப் பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ளது. 17/60/43.

53. தீர்மானங்களில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி......பாகம் 1, மாஸ்கோ 1953, பக்கம் 784 (ருஷ்ய மொழியில்).

54. ஜே. வி. ஸ்டாலின், ''லெனினியத்தின் அடிப்படைகள்'' ஸ்வெர்ட்லோவ் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள், **நூல் திரட்டு**, தொகுப்பு 6, அன்னியமொழிகள் பதிப்பகம், மாஸ்கோ 1953, பக்கம் 73.

55. எம். ஐ. காலினின், நடந்து முடிந்த ஆண்டு களில் புத்தகம் 2, மாஸ்கோ, லெனின்கிராட், 1916, பக்கம் 240 (ருஷ்யமொழியில்).

56. பார்க்கவும். தீர்மானங்களில் சோவியத் யூனியன்கம்யூனிஸ்ட் கட்சி......பாகம் 1, பக்கம் 877.

57. பார்க்கவும். ஒய்.எம். யாரோஸ் லாவ்ஸ்கி, "தொழிலாளி வர்க்கத்தின் தலைசிறந்த தலைவர்—வி.ஐ. உலியனோவ்-லெனின்." மாஸ்கோ, 1918. எம்.செ. ஓல்மின்ஸ்கி. "லெனின்" வெஸ்ட்னிக் ஸிஸ்னி (வாழ்க்கையின் தூதர்) எண்.2—1918 வி.ஐ.நெவ்ஸ்கி, வி.ஐ. உலியனோவ் லெனின்) மாஸ்கோ, 1920. வி.வி. அடோராட்ஸ்கி"லெனினது படைப்புக்களில் மார்க்சிய இயக்கவியல்" பாட்டாளி வர்க்கப்புரட்சி எண். 2, 1923, இன்னபிற (அனைத்தும் ருஷ்ய மொழியில்).

58. உதாரணமாக, லெனினது படைப்புக்களில் எதைப் படிக்க வேண்டும், எப்படிப் படிப்பது, மாஸ்கோ 1924 (ருஷ்ய மொழியில்).

59. கே. கவுட்ஸ்கி, டை டிகாடர் டெஸ்பிராலி டேரியட்ஸ் வியன்னா 1918, பக்கம் 13.

60. கே.கவுட்ஸ்கி, டை டிகாடர் டெஸ் பிராலி டேரியட்ஸ் வியன்னா 1918, பக்கம் 35.

61. கே. கவுட்ஸ்கி, "பயங்கர வாதமும் கம்யூனிஸமும்" பெர்லின் 1919, பக்கம் 115.

62. வி. ஐ. லெனின், "ருஷ்யாவில் நடைபெறும் உட்கட்சிப் போராட்டத்தின் வரலாற்றுப் பொருள்," **நூல்திரட்டு**, தொகுப்பு 16, பக்கம் 391.

63. பார்க்கவும். வி. ஐ. லெனின், "காங்கிரஸுக்கு எழுதிய கடிதம்." **நூல்திரட்டு**, தொகுப்பு 36, பக்கம் 595.

64. கே. கோர்ஸ்ச், மார்க்சியமும் தத்துவமும், மாஸ்கோ 1924, பக்கம் 36 (ருஷ்ய மொழியில்).

65. அதே புத்தகம், பக்கம் 34.

66. அதே புத்தகம், பக்கம் 51.

67. பார்க்கவும், கிரானட் கலைக் களஞ்சியம், 7-ம் பதிப்பு, தொகுப்பு 40, பக்கம் 607 (ருஷ்ய மொழியில்).

68. மெஸ்ஸ வென்ஞ்சர்ஸ், டி. லான்டி மார்க்ஸிசம்ஸ் லெஸ் மாத்யூர்ஸ் டி, எம், மெர்லியு பன்டி, அரவன்புனி லெட்டர் டி, ஜார்ஜ் லியூகாக்ஸ், எடிஸன்ஸ் சோஷியல்ஸ், பாரிஸ் 1956, பக்கங்கள் 158-59.

69. வி. ஐ. லெனின், ''கம்யூனிஸம்'' தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான கம்யூனிஸ்ட் அகிலத்தின் பத்திரிகை.'' **நூல்திரட்டு**, தொகுப்பு 31. பக்கம் 165.

70. கம்யூனிஸ்ட் பேரவையின் தூதர் புத்தகம் 10, பக்கம் 66 (ருஷ்ய மொழியில்).

71. லெனின் கட்டுரைத் தொகுப்பு, தொகுப்பு 9, பக்கம் 3 (ருஷ்ய மொழியில்).

72. ஏ. ஐ. டெபோரின், சிந்தனையாளர் லெனின், மாஸ்கோ, 1929, பக்கம் 12 (ருஷ்ய மொழியில்).

73. தத்துவத்தில் கருத்து வேறு பாடுகள், மாஸ்கோ, லெனின்கிராட் 1931, பக்கம் 279 (ருஷ்ய மொழியில்).

74. பார்க்கவும், சோவியத் பத்திரிகைகளில் கட்சி சார்பு நிலை பற்றி. 1954 பக்கம் 406 (ருஷ்ய மொழியில்).

75. அதே புத்தகம், பக்கம் 407.

76. "இயக்கவியலும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும்" பாகம், 1, மாஸ்கோ, 1934 (ருஷ்ய மொழியில்).

77. புத்தகப் பட்டியல் பார்க்கவும்.

78. புத்தகப் பட்டியல் பார்க்கவும்.

79. இயக்கவியலும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் மாஸ்கோ 1932, பாகம் 2, வரலாற்றுப் பொருள் முதல் வாதம்(ருஷ்ய மொழியில்).

80. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர், மாஸ்கோ 1968, பக்கங்கள் 15-16 (ருஷ்ய மொழியில்).

81. லெனின் பிறந்த நூறாவது ஆண்டு விழா, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஆய்வியல், மாஸ்கோ 1969, பக்கம் 5 (ருஷ்ய மொழியில்).

82. இவற்றுள் முக்கியமானவை, லெனினியமும் சமகாலத் தத்துவார்த்தப் பிரச்சினைகளும், மாஸ்கோ மைஸ்ல் பிரசுராலயம், 1970, தத்துவ ஞானி லெனின், மாஸ்கோ மைஸ்ல் பிரசுராலயம், 1970, மார்க்சியத் தத்துவத்தில் லெனினியக்கட்டம். மாஸ்கோ, நாவ்கா பிரசுராலயம். மார்க்சிய இயக்கவியலின் வரலாறு, லெனினியக் கட்டம், மாஸ்கோ மைஸ்ல் பிரசுராலயம், 1973, (அனைத்தும் ருஷ்ய மொழியில்) மேலும் விவரங்களுக்குப் புத்தகப் பட்டியல் பார்க்கவும்.

83. லெனினியமும் சமகாலத்து தத்துவார்த்தப் பிரச்சினைகளும் மைஸ்ல் பிரசுராலயம், மாஸ்கோ, 1970, பக்கம் 16 (ருஷ்ய மொழியில்).

84. பார்க்கவும். வி.இ. லெனின், முதலாவது ருஷ்யப் புரட்சியில் (1905-1907) சமூக ஜன நாயகத்தின் விவசாயத் திட்டம், **நூல்திரட்டு,** தொகுப்பு 13, பக்கங்கள் 244-245.

85. வி. இ. லெனின், "பிளெக்கனோவின் இரண்டாவது பூர்வாங்கத்திட்டம் பற்றிய குறிப்புரைகள்" **நூல்திரட்டு**, தொகுப்பு 6, பக்கம் 54.

86. அடுத்த அத்தியாயத்தைப் பார்க்கவும்.

87. வி.இ. லெனின், "ஹெகலது புத்தகமான "தர்க்கவியலின் விஞ்ஞானம்" பற்றிய மதிப்பீடு, **நூல்திரட்டு**, தொகுப்பு 38. பக்கங்கள் 187-188.

88. பார்க்கவும். வி.இ. லெனின், "மாஸ்கோ சோவியத்தின் விரிவாக்கக் கூட்டத்தில் ஆற்றிய உரை" நவம்பர் 20, 1922, **நூல்திரட்டு,** தொகுப்பு 33, பக்கங்கள் 439-440.

89. பார்க்கவும். வி.இ. லெனின். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத் மற்றும் அகில ருஷ்யத் தொழிற்சங்க காங்கிரஸ் ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரை, ஜனவரி 17-1919, **நூல்திரட்டு**, தொகுப்பு 28, பக்கம் 393.

90. அதே புத்தகம், பக்கம் 394.

91. பார்க்கவும். வி.இ. லெனின், "மக்களின் நண்பர்கள் எவ்வாறிருக்கின்றார்கள், அவர்கள் சமூக ஜனநாயகவாதிகளை எதிர்த்து எங்ஙனம் போராடு கிறார்கள்," **நூல்திரட்டு**, தொகுப்பு 1, பக்கம் 159.

92. வி. ஐ. லெனின், "பி. எப். வினோக்ரடோவுக்கு அனுப்பிய தந்தி", **நூல்திரட்டு**, தொகுப்பு 44, பக்கம் 80.

93. வி.ஐ. லெனின், "கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ்", தொகுப்பு 32, பக்கம் 477.

94. வி.ஐ. லெனின், தொழிலாளர்கள், போர் வீரர்கள், விவசாயிகளின் டெபுடிகளது சோவியத்துக்களின் அகில ருஷ்ய காங்கிரஸ், ஜனவரி 10-18, (23-31), 1918, **நூல்திரட்டு**, தொகுப்பு 26, பக்கங்கள் 481-482.

95. வி. ஐ. லெனின். "பொருளாதாரக் குழுக்களின் முதலாவது காங்கிரஸில் ஆற்றிய உரை" மே 26—1918 **நூல்திரட்டு**, தொகுப்பு 27, பக்கம் 412.

96. புத்தகப் பட்டியலைப் பார்க்கவும்.

97. எல். ஐ. பிரெஷ்னேவ் லெனினது அடிச்சுவட்டைத் தொடர்ந்து, சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், 1972, பக்கங்கள் 438—439.

98. எல். ஐ. பிரெஷ்னேவ் சோவியத் யூனியன் கம்யூனிட் கட்சியின் அறிக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிக் கடமைகளும், பிப்ரவரி 24, 1976 மாஸ்கோ, நோவாஸ்டி, பிரஸ் ஏஜன்சி பிரசுராலயம் 1976 பக்கம் 127.

99. பிராவ்தா டிசம்பர் 16, 1979.

100. எல்.ஐ.பிரெஷ்னேவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸ்க்கு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையும், உள்நாட்டு வெளி

நாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிக் கடமைகளும் பக்கம் 10.

101. எல். ஐ. பிரெஷ்னேவ் சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது காங்கிரஸுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு வெளி நாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிக் கடமைகளும், பக்கம் 90.

102. அதே புத்தகம், பக்கம் 92.

103. அதே புத்தகம், பக்கம் 75.

104. எல். ஐ. பிரெஷ்னேவ், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது காங்கிரஸுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, மத்தியக் கமிட்டியின் அறிக்கை, பக்கம் 75.

105. அதே புத்தகம், பக்கம் 77.

106. அதே புத்தகம், பக்கம் 90.

107. அதே புத்தகம், பக்கம் 138.

அத்தியாயம் 4

# லெனினது தத்துவார்த்த மரபுரிமைச் செல்வத்தின் பால் இன்றையச் சித்தாந்தப் போராட்டம்

## 1. லெனினியமும் இருபதாம் நூற்றாண்டின் முதலாளித்துவத் தத்துவமும்

மேலே குறிப்பிட்டது போல் இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், லெனினியத்தை தனக்கென வெளிப்படையாக ஒரு தத்துவார்த்த அடிப்படையில்லாத சித்தாந்தம் என முதலாளித்துவத் தத்துவ ஞானிகள் நிராகரித்தனர். இருந்தாலும் லெனினியத்தின் கருத்துக்கள் பரவியதினால், சமுதாயத்தின் அனைத்து முற்போக்குப் பகுதிகளும் அவற்றை நோக்கி அணி திரண்டதால், இந்த விஞ்ஞான மற்ற நிலைபாடு முற்றாக நிலைக்காது என்பது அதிகரித்த அளவில் தெளிவாயிற்று. 1930 களின் பிற்பகுதியின் துவக்கத்தில் முதலாளித்துவத் தத்துவஞானிகள், லெனினியத்தின் தத்துவார்த்தக் கோட்பாடுகள் பற்றி தங்களது இஷ்டம் போல் வியாக்கியானம் செய்யும் வழக்கத்தை மேற் கொண்டனர்.

அதின் மூலம் உலக, சமுதாயச் சிந்தனையில் அதன் செல் வாக்கு மேலும்பரவாதபடி தடுக்க முயன்றனர். இந்தப் போக்கு இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஸ்தூலமாகத் தென்பட்டது. அப்போது தான் சோவியத் யூனியன் சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தன்னால் முடிந்ததனைத்தையும் செய்து காட்டியது உலக சோஷலிச அமைப்பு முகிழ்த்து அது உலக காலனி ஆதிக்க அமைப்பு வீழ்ச்சியைத் துரிதப்படுத்தியது. முதலாளித்துவமற்ற ஒரு வளர்ச்சிப் பாதையை வகுத்துக் கொண்டு ஆசிய, அமெரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும் குழுக்களான இளம் தேசீய அரசுகள் மலர்ந்ததும் இந்தப் போக்கின் வளர்ச்சிக்கு அளப்பரிய முறையில் தெம்பூட்டின.

1940 களின் பிற்பாதியில், லெனினியத்தைப் பற்றிய தங்களது சொந்தக் கணிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவத் தத்துவஞானிகள் மற்றும் சமூக வியலாளர்களின் பல படைப்புக்கள் தோன்றின. "ருஷ்யக் கருத்து." என். பெர்ட்யேவ் (1946); ருஷ்யத் தத்துவத்தின் ஒரு வரலாறு." வி. ஸென் கோவ்ஸ்கி (1948) "ருஷ்யத் தத்துவத்தின் வரலாறு என்.லாஸ்கி (1951) மற்றும் பாகுனினிலிருந்து லெனின் வரை. "ருஷ்யப் புரட்சி சித்தாந் தத்தின் வரலாறு." 1840-1895 பி. ஸ்ச்ஸீ பெர்ட் (1956) போன்றவை இவற்றில் அடங்கும்.

ஒரு தத்துவார்த்த ஆய்வியலான லெனினியத்தின் சத்தையும் சாரத்தையும் திசைதிருப்பிக்குழப்பும் கருந்துக்கள் இந்த நூல்களில் அடங்கியிருந்தன. உதாரணமாக என். லாஸ்கி, தனது 'ருஷ்யத் தத்துவத்தின் வரலாறு' என்ற நூலில் லெனினியம் ஒரு வகையான யாந்தீரீகப் பொருள் முதல் வாதம். 18-ம் நூற்றாண்டின் பிரெஞ்சு நாட்டுச் சிந்தனை யாளர்களின் கருத்துக்களை ஒத்தது என்று நிரூபிக்க விழைகிறார். மற்றொரு கருத்து முதல் வாதியான பெர்ட் யேவ்' லெனினியம் ஒருவறட்டுக் கோட்பாடாயாயிருப்பதால் மனிதனின் திறமையை, செயல் பாட்டை, படைப்பாற்றல்

திறனை மறுக்கிறது என வசைமாரி பொழிந்தார். இதே மாதிரியான லெனினியத்தின் பால் தொடுக்கப்பட்ட முதலாளித்துவத் தாக்குதல் அலை அது ருஷ்ய ஆய்வியலின் ஒரு பிராந்திய வாதம் என்று பிரதிநிதித்துவப் படுத்தும் போக்கையும் கொண்டிருந்தது. உதாரணமாக பெர்ட்யேவ், ருஷ்ய மக்களைப் பொறுத்த மட்டில் லெனின் ஒரு கருத்துக் களின் அமைப்பை மறுபதிப்பாக்கி முன்வைத்தார். ருஷ்யப் புரட்சியின் போது சமரஸம் செய்து கொண்டு கிறித்துவ மதக் கருத்துக்களை மறு பதிப்பாக்கி வைத்தார் என்று காட்ட முனைந்தார். மார்க்சியத்திலிருந்து லெனினி யத்தைக் கிழித்தெடுத்து அதை ஒரு புதிய மதமாகப் பிரதி நிதித்துவப்படுத்தும் முயற்சியே அது. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தத் தத்துவஞானிகள் லெனினியத்தை ருஷ்யாவில் இருந்த இடதுசாரி நரோடிஸச் சுழற்சியோடு இணைக்க முயன்றார்கள். இவ்வாறாக அவர்களில் பலர், பாகுனின் ட்காச்சேவ், ஆகியோரையும் பயங்கரவாதி நெச் சாயீவையும் பின்பற்றியோரது அராஜகவாத சுழல் போக் கோடு லெனினியத்தின் கருத்துக்களை இணைத்தனர்.

1950 களின் துவக்கத்தில் இந்தப் படைப்புக்கள் ஓரளவு முக்கியத்துவத்தைப் பெற்றன. மேலைநாட்டு முதலாளித்துவ பத்திரிகைகளில் லெனினியத்தைப்பற்றி ''மெய்யான ஆய்வுகள்'' இவை என எல்லா வகையாலும் விளம்பரப் படுத்தப்பட்டது. இருந்தாலும் இன்று, அவை, லெனினியத் தின் தத்துவார்த்தப் பிரச்சினைகள் பற்றிய சித்தாந்தப் போராட்டத்தைப் பகுப்பாயும் போதுதான் நினைவில் கொள்ளப்படுகின்றன.

இவற்றைத் தொடர்ந்து லெனினியத்தை எதிர்த்த போராட்டத்தில், முதலாளித்துவத்தத்துவத்தின் மேலும் கணிசமான சக்திகள் சேர்ந்தன. 1950 களின் துவக்கத்திலும், 1960களின் துவக்கத்திலும் மேலைநாடுகளில்,சில பாரம்பரியக் கருத்து முதல்வாதப் பாசறைகளின் கீழ்க்கண்ட மிகவும் நன்கு அறியப்பட்ட தலைவர்களால் லெனினியத்தைப் பற்றிய

ஏராளமான நூல்கள் வெளியிடப்பட்டன. நியோ-தோமிஸ்டு களான, ஜோஸப் போச்சென்ஸ்கி, குஸ்டாவ் வெட்டர், நிகழ்ச்சியுணர்வுகள் இயலாளர் மாரிஸ் மெர்லியூ-போண்ட்டி, நேர்காட்சி வாதி கார்ல் போப்பர்; தன்னகங்காரச் செருக் காளர் ஸிட்னி ஹீக் ஆகியோரும் இழிதகை கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் ரேமண்ட் ஆரோன், கிளாஸ்மெஹ்னெர்ட், ஆல்பிரட் மெய்யர், போன்றோரும்.

இந்தக் கைங்கரியத்தை முதலில் துவக்கியவர் ஜே. போச்சென்ஸ்கி. (1950களிலும், 1960களிலும் இவர் லெனினியம், சோவியத் தத்துவார்த்த ஆய்வுகள் பற்றி பத்துக்கும் மேற்பட்ட நூல்களைப் பிரசுரித்தார்) சோவியத் யூனியனில் அவரது தத்துவார்த்த விஞ்ஞானம் பற்றிய முதல் புத்தகம் சோவியத் ருஷ்ய இயக்கவியல் பொருள் முதல்வாதம் (டயமட்) எனத் தலைப்பிடப்பட்டு 1950-ம் ஆண்டு பெர்ன் நகரில் பிரசுரிக்கப்பட்டது. பல தொகுதிகளைக் கொண்ட இப்புத்தகத்தில் அவர் லெனினியத்தின் சித்தாந்தத் தோற்று வாய்கள் மற்றும் தத்துவார்த்தக் கருத்துக்களுக்கு தனது சொந்த வியாக்கியானத்தைத்தர முயன்றார். மூன்று முக்கிய தோற்றுவாய்களிலிருந்து லெனினியம் தோன்றியது என்றார் போச்சென்ஸ்கி—ஹெகலின் தத்துவம், மார்க்சின் சமூக ஆய்வியல், 19-ம் நூற்றாண்டின் பிற்பாதியின் ருஷ்யத் தத்துவஞானிகளது பொருள் முதல் வாதம் அல்லது போச் சன்ஸ்கி அவர்களை ருஷ்ய ''நிகிலிஸ்டுகள்'' என அழைத்தது போல், போச்சன்ஸ்கி தனது வியாக்கியானத்தை நிரூபிக்க எந்த உண்மைகளையும் மேற்கோள்காட்ட முயலக்கூட இல்லை என்பது நிச்சயம். லெனினது கருத்துக்களின் பால் மௌனம் சாதித்து விட்டு தனது திட்டத்தை மட்டும் அவர் முன் வைத்தார் உதாரணமாக **மூன்று தோற்றுவாய்கள்; மார்க்சியத்தின் மூன்று ஒருங்கிணைந்த பாகங்கள்** என்ற நூலில் லெனின் வெளியிட்ட கருத்துக்களைப் பற்றி அவர் எதுவுமே பேசவில்லை.

"லெனினியம் மூன்று அடிப்படை உறுப்புக்களை உள்ளடக்கியுள்ளது—"நிகிலிஸ்டுகளின்" (செர்னி செவ்ஸ்கி, ஹெர்ஷன் போன்றோர்) பொருள் முதல்வாதம்; ஹெகலின் இயக்கவியல், மார்க்சின் சமூக ஆய்வியல்", என்பதை எந்த வித ஆதாரமும் தராமலேயே அவர் கூறினார். எனவே போச்செ‌ன்ஸ்கி விளக்கிக்காட்டியதற்கொப்ப லெனினியம் ஒரு முழுமையானதல்ல. ஒன்றுக்கொன்று எந்தவிதத் தொடர்புமில்லாத பல்வேறான முரண்பட்ட கூறுகளின் யாந்திரீகமான கதம்பத்திரள்தான்.

லெனினியத்தின் வளர்ச்சியில் முக்கியமான காலகட்டங் களைத் தீர்மானிப்பது என போச்சன்ஸ்கி முடிவு கட்டியிருந் தார். அவரது கருத்துப்படி இந்தக்கால கட்டங்களில் ஒவ் வொன்றும், ஒரு பிரத்தியேகத் தனிநபரின் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்ந்தது. லெனினைத் தவிர மற்றவர்கள் அனைவர் பெயரையும் போச்சன்ஸ்கி சுட்டிக்காட்டினார். ஆரம்பத்தில் லெனினியத்தின் வளர்ச்சி ட்ராட்ஸ்கியின் கருத்துக்களினாலும் பின்னர் புகாரின், டெபோரின், ஸ்டாலின், ஜடானோவ் போன்றோரது கருத்துக்களினாலும் தீர்மானிக்கப்பட்டது என்று அவர் கூறுகிறார். இவ்வாறாக அவரது கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்றால், லெனினது கருத்துக்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு பிரமுகர் அல்லது வேறொருவரால் (எந்த வழி மூலமாகவு மல்ல, லெனினாலும் அல்ல) வளர்க்கப்பட்டது; இந்த வளர்ச்சியின் ஒவ்வொரு புதிய திருப்பமும் முந்தைய தலைவரை 'அகற்றுவதில்' பங்கு கொண்டுள்ளது என்பதை ஒப்புக் கொள்வதாகும். இந்தத் திட்டத்தின் பயனற்ற தன்மைக்கு எந்த நிரூபணமும் தேவையில்லை. எனவே மேலை நாடுகளின் பத்திரிகைகளில் ஏகப்பட்ட விளம்பரங் களும், பாராட்டுக்களும் தரப்பட்டாலும்கூட போச்சென்ஸ் கியின் கருத்துக்கள் மேலை நாடுகளது பொது மக்களிடம் எடுபடவில்லை என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

லெனினியத்தைப் பற்றியும், 20-ம் நூற்றாண்டின் மார்க்சியத் தத்துவம் பற்றியுமான போச்செஸ்கியின் கருத்துக்கள் ஒரு கிறித்துவ மதவாதியான, நியோ-தோமிஸ்ட் குஸ்டாவ் வெட்டரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டது. 1950 களின் துவக்கத்தில் அவர் இன்னும் வலுவானதொரு கட்டுரைத் தொகுப்பை இயக்கவியல் பொருள்முதல்வாதம் சோவியத் யூனியனில் அதன் வரலாறும் அமைப்பும் என்பதை வெளியிட்டார். அவரது புத்தகம் எதைப்பற்றியது என்பதை வெட்டரே விளக்குகிறார். "இயக்கவியல் பொருள்முதல் வாதத்தை முறையாக தத்துவார்த்த ரீதியாகப் பொதுவாகக் கணித்தால் போச்செஸ்கியின்கருத்துக்களை நாம் ஒப்புக்கொள்ளலாம்.மேலும் அதைக் கொண்டு செல்லும் போது......ஒரு அமைப்பு என்ற முறையில் இயக்கவியல் பொருள் முதல்வாதம் மிகவும் வேறுபட்ட பெரும்பாலும் ஒட்டுமொத்த எதிர்மறை தத்துவார்த்த நிலைபாடுகளின் பலவற்றிலிருந்து ஒட்டுமொத்த எதிர்மறை தத்துவார்த்த நிலைபாடுகளின் பலவற்றிலிருந்து மெடுத்த ஒரு கலவையே."[1]

இதே போன்று லெனினியத்தைப் பற்றி மாரிஸ் மெர்லியூ-போண்டியும் பிரலாபித்துள்ளார். 1955-ல் அவர், இயக்கவியலின் வீரச் செயல்கள் என்ற தனது நூலைப் பிரசுரித்தார். அதில் அவர் "இயக்கவியல் உறவுகள் நமது அனுபவத்திலிருந்து பரிசீலிக்கப்படும் போதுதான், விஷயம், பொருள் மற்றும் இதர விஷயங்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் போதுதான் தெளிவாகிறது."[2] இயக்கவியல் உலகம் என்ற பொருளை ஆளுமை கொள்ளும் பொதுவான புறவயப்பட்ட சட்டங்களின் விஞ்ஞானம் அல்ல; முழுக்க முழுக்க அகவயப்பட்ட ஆய்வியலே என அவர் வியாக்கியானப் படுத்துவதே இதன் பொருள். "தனி நபருக்கும் வெளி உலகத்துக்குமிடையே; அகத்துக்கும் புறத்துக்குமிடையேயுள்ள விருப்பத்தின் ஒரு வெளிப்பாடே" மார்க்சியத் தத்துவத்தின் மொத்த கருப் பொருள் என்பதுதான் மெர்லியூ-போண்டியின் வியாக்

கியானம்.[3] அடிப்படையான ஒருங்கிணைப்பு பற்றி ஒரு கருத்து முதல்வாதக் கருத்தமைவே. என்பதை இது தெளிவாக அடையாளம் காட்டுகிறது லெனின் தனது "பொருள் முதல் வாதமும் அனுபவரீதியான விமர்சனமும்" என்ற நூலில் இதை ஆழமாக ஆராய்ந்து விமர்சித்துள்ளார். சோஷலிசப் புரட்சியைப் பற்றிப் பேசும் போது, "அது இயக்கவியலுக்கு எதிரானது; ஏனென்றால் எதிர்ப்பில்லாமல் இயக்கம் கிடையாது" என வாதிக்கிறார் மெர்லியூ-போண்ட்டி." "இயக்கங்கள் என்ற முறையில் புரட்சிகள் உண்மையானவையே; ஆட்சிகள் என்ற முறையில் பொய் யானவையே."[4] என்பதுதான் அவரது மையக் கருத்து. மெர்லியூ-போண்டியின் முயற்சிகளனைத்தும், லெனினியத்தை (ஆய்வியல் என்ற முறையிலும் நடைமுறை என்ற ரீதியிலும்) இயக்காவியலேடு முரண்பட்டது என பிரதிநிதித்துவப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்பதைப் பார்க்க சிரமம் ஏதும் கிடையாது. இயக்கவியலை அவர் அகவயப்பட்ட வழியில் கையாள்கிறார். எனவே மார்க்சியமும் லெனினியமும் வறட்டுக் கோட்பாடுகள் என் அவர் முடிக்கிறார்.

20-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் முதலாளித்துவ தத்துவஞானிகள் வகுத்த முக்கிய நோக்கத்தின் ஈடேற்றத்துக்கு, போச்சென்ஸ்கி, வெட்டர், மெர்லியூ-போண்டி, ஆகியோரது எழுத்துக்களும் இதரர்களது எழுத்துக்களும் எந்த வழியிலும் குறிப்பிடத்தக்க முறையிலான பங்களிப்பை வழங்கவில்லை. நவீன உலகத்தில் லெனினியத்தை சிறுமைப் படுத்தி, திசை திருப்பி அதன் சித்தாந்த செல்வாக்குப் பரவுவதைத் தடுக்கவே இந்தக் காரியங்கள் மேற்கொள்ளப் பட்டன. மார்க்சிய ஆசிரியர்கள் அவர்களுக்குச் சரியான பதிலடி கொடுத்தனர். எனினும் லெனினியத்தை எதிர்த்து முதலாளித்துவத் தத்துவத்தில் நடத்தப்பட்ட சித்தாந்தப் போராட்டத்தின் பொதுவான கணிப்பைப் பொறுத்தமட்டில் இந்த முயற்சிகள் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் அடிப்

படையான தத்துவக் கூறுகளை பொய்ம்மைப் படுத்த முதலாளித்துவச் சித்தாந்தத்தின் இயலாமையைக் காட்டுவதற்குச் சரியான உதாரணமாகும்.

மார்க்சிய-லெனினிய தத்துவத்தைப் பொய்ம்மைப் படுத்துதல்களுக்குமற்றுமொரு உதாரணம் அமெரிக்கநாட்டின் தத்துவார்த்தச் சிந்தனையின் தலைவர்களுள் ஒருவரால் அவரது நூல்களில் தரப்பட்டுள்ளது. அவர் முன்னாளைய ட்ராட்ஸ்கியவாதி. தற்போது வறட்டுக் கோட்பாட்டு வாதியான அவரது பெயர் சிட்னி ஹூக். சில ஆண்டுகளாக அவர் மார்க்சிய-லெனினியத்துக்கு மாற்றாக ஒரு தத்துவத்தை உருவாக்க முயன்று கொண்டிருந்தார். அவரது **மார்க்சும், மார்க்சியவாதிகளும்** என்ற நூலும் இதர படைப்புக்களும் நவீன காலத்து மார்க்சிய லெனினியச் சிந்தனை, மார்க்சின் உண்மையான கருத்துக்களை முற்றிலும் நிராகரிக்கிறது எனச் சித்தரிக்கின்றன. ''மார்க்சை தங்களது சொத்து என கம்யூனிஸ்டுகள் பிரகடனம் செய்வதற்கு அனுமதித்தது ஒரு மாபெரும் வரலாற்று, அரசியல் தவறாகும். கம்யூனிஸத்தை விமர்சிப்பதற்கு, மார்க்சியம் ஒரு மிகச் சிறந்த கருத்தோட்டமாகும்.''[5] என ஹூக் மிக வெளிப்படையாக எழுதினார். ''சோவியத் யூனியனைப் போன்று ஒரு இயக்கம் என மார்க்சியம் வெற்றிக் கொடி நாட்டிய இடங்களில் அதன் சோஷலிச இலட்சியங்கள் தோற்றுவிட்டன அல்லது அவற்றிற்கு துரோகமிழைக்கப்பட்டு விட்டன மேலை நாடுகளைப் போல் ஒரு இயக்கம் என்ற முறையில் அது தோல்வியடைந்தவிடங்களில் அதன் லட்சியங்கள் கணிசமான அளவுக்கு முன்னேறிச் சென்றன''[6] என்று அவர் கருத்துத் தெரிவித்தார். இந்தப் பொதுவான அறிக்கைகளிலிருந்து லெனினியத்தைப் பற்றிய அவரது கண்ணோட்டத்தைக் காணலாம். அவர் லெனினியம் மார்க்சியத்தோடு சம்பந்தப்பட்டதில்லை; ஒரு வகையான நேர்காட்சி வாதம்தான் என்கிறார். ஹூக்கின் கருத்துப்படி அதன் கோட்பாடுகளை வகுத்த முக்கிய நபர் லெனின் அல்ல; ட்ராட்ஸ்கியே.[7] இதன் நோக்கமும் இதைப்

போன்ற மற்ற வாதங்களின் நோக்கமும் மார்க்சிய-லெனினியத்தை, கம்யூனிஸ சித்தாந்தம் மற்றும் நடைமுறையை எதிர்ப்பதே. இந்த முயற்சிகள் அனைத்திற்கும், நியோதோமிஸ்டுகளின் கதியே ஏற்பட்டது: சிறிது காலம் மிகவும் பரபரப்புடன் பேசப்பட்ட அவை பின்னர் முற்றிலும் மறக்கப்பட்டன. பின்னர் மார்க்சிய லெனினியத்தை எதிர்த்துப் போராட புதிய வழிகளைத் தேடும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மார்க்சிய-லெனினியத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய வழிகளில் ஒன்று, புதிய நேர்காட்சி வாதிகளால் துவக்கப்பட்ட தாக்குதலாகும். மேக்கிஸ்டுகளுக்குப் பின், புதிய நேர்காட்சிவாதிகள் விஞ்ஞானத்தின் திட்டவட்ட தன்மைகளை முழுக்க முழுக்க கருத்து முதல்வாத வடிவங்களில் வியாக்கியானம் செய்ய முயன்றனர்.

இந்த சிந்தனைப் போக்கின் ஆதரவாளர்கள் மார்க்சிய-லெனினியத்திற்கு மாற்றாக, குறிப்பாக வரலாற்றின் லோகாயுதக் கருத்தமைவுக்கு மாற்றாக ஒரு தத்துவத்தை வழங்க முயற்சித்தனர். இவ்வாறாக ஒரு முன்னணி புதிய நேர் காட்சிவாதப் பிரமுகர் கே. போப்பர், விஞ்ஞான நிலைபாட்டிலிருந்து எதிர் காலம் பற்றிய எந்த ஞானமும் சாத்தியமில்லை எனப்பறை சாற்றினார். 'காண்ட்' டைப் பின்பற்றி, இவரும் சமூக அறிவாற்றலின் வளர்ச்சி என்பது வெறும் உண்மைகளின் வருணனையே, என்றார். அவற்றின் உறவுகளையும் ஒன்றையொன்று சார்ந்திருத்தலையும் மறுத்தார். வரலாறு, பொருளற்றது என்றார் போப்பர். இந்தச் சிந்தனைப் போக்கின் மற்றொரு பிரதிநிதியான ஏ. ஆயர். ''மார்க்சிய லெனினியச் சிந்தனை முடங்கி விட்டது. ஏனென்றால் அது வரலாற்று நிகழ்வுகளுக்கிடையே தர்க்கவியல் உறவைக் கண்டு பிடிக்க முயன்றது'' எனப் பிரலாபித்தார்.

சோவியத் யூனியன், சகோதர சோஷலிச நாடுகள் மற்றும் முதலாளித்துவ சமுதாய அமைப்பு நாடுகளிலுமுள்ள மார்க்சியத் தத்துவஞானிகள் தங்களது தத்துவார்த்த நிலைபாடுகளுக்கு எதிரான இந்தத் தாக்குதல்களை, தீர்க்க மாக ஆய்ந்து கணித்தனர். ஆனால் அவர்களது இறுதியான பகுப்பாய்வுகள், அந்தத் தாக்குதல்கள் வரலாற்றினால் நிராகரிக்கப் பட்டதை நிரூபித்தன. அதன் போக்கே மனித குலத்தின் ஒட்டு மொத்த சமூக நடவடிக்கையின் மூலம் பல்வேறு வகையாலும், மார்க்ஸ், லெனின் கருத்துக்கள் உண்மையானவை என மறுக்க முடியாதபடி காட்டுகின்றது. இதன் காரணமாக, பெர்ட்யேவ், போச்சென்ஸ்கி, ஹீக் ஆகியோரும் அவர்களைச் சார்ந்தவர்களும் லெனினியத்தை எதிர்த்துத் தொடுத்த தாக்குதல்கணைகள் வெறும் கட்டுக் கதைகளாகி விட்டன. கண்ணால் காணக்கூடிய சாயல்களைக் கூட அவை விட்டுச் செல்லவில்லை.

சமீபத்திய பல பத்தாண்டுகளில் கருத்து முதல் வாதத் தத்துவார்த்தப் பாசறையின் பிரதிநிதிகளால், யுத்த பிற்கால ஐரோப்பிய சித்தாந்தச் சிந்தனையின் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர்களால் மார்க்சிய - லெனினியத்திற்கு எதிராக மிகவும் நாசுக்கான ஆனால், மிகுந்த ஆபத்தை விளைவிக்கக் கூடிய தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளன. இங்கு நாம் புறமெய்ம்மைகளை மறுக்கும் வாழ்வியல் மெய்ம்மைத் தத்துவத்தைக் (எக்ஸிஸ்டென்ஸியலிஸம்) குறிப்பிடு கிறோம். இந்தப் போக்கை பிரபலப்படுத்தியவர்கள் மாறு பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். இவர்களிடையே மதக்கருத்துக்களின் காவலர்களான கார்ல் ஜாஸ்பர்ஸ், காபிரியேல் மார்ஷல் ஆகியோரும் நாத்திகவாதப் போக்கைக் கொண்டிருந்த ஜீன் பால் சாத்ரே, சைமன் டி போவர் ஆகியோருமிருந்தனர்.

எக்ஸிஸ்டென்ஸியலிஸத்தின் சமூக நிலைகளும் ஒரே கலவையாகத்தானுள்ளன. அவர்களுள் அப்பட்டமான பிற்

போக்கை ஆதரித்தவர்களும் (மார்ட்டின் ஹெய்டெக்கர்) சமாதானத்திற்கான போராட்டக் கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்க முயன்றவர்களும் (முழுக்க முழுக்க மனிதாபிமான நோக்கில்)—சாத்ரே, ஜாஸ்பர் போன்றவர் களுமிருந்தனர். எனினும் மார்க்சியம், லெனினது தத்துவார்த்தக் கருத்துக்களின் பால் அவர்களது கண்ணோட்டத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஒன்றுபட்டிருக் கின்றனர். அவர்கள் மார்க்ஸ், லெனின் போதனைகளின் கீழ்க்கண்டதை எதிர்க்கின்றனர். "உலகத்தை மாற்றி யமைக்கும் நடவடிக்கையில், மனிதனின் எதையும் சாதிக்கும் தன்மையையும், சமூகப் பரிமாணத்தை தெரிந்து கொள்ளும் சாத்தியத்தையும் அவனது வாழ்க்கையில் அரை உணர்வு மற்றும் உள்ளார்ந்த உணர்வுக் கோட்பாடுகளைப் புகழ் வதின் மூலம் காண்பது." இதை அவர்கள் தனியாக வாழும் "ஒரு சமூக அணு" சமுதாயத்திற்கு நிரந்தர பயங்கரத்தை ஏற்படுத்தும் உறவில் உள்ளது எனக் கருதுகின்றனர்.

சில எக்ஸிஸ்டென்ஸியலிஸ வாதிகள் இயக்கவியல் பொருள் முதல் வாதம் பற்றிய தங்களது ஆக்க பூர்வவமான ஆதரவுக் கோட்பாட்டை அறிவித்துள்ளனர். எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறாக தனது **இயக்கவியல் ஆய்ந்தறிதல் பற்றிய திறனாய்வு** (1960) என்ற நூலில் சாத்ரே "அவரது சமூக அரசியல் ஆய்வை மார்க்சியத்தோடு இணைத்துக் கொள்ளலாம்; அது மார்க்சியத்திற்கு எதிரானதல்ல" 8 என்று சொன்னார். இத்தகைய அறிவிப்புகளால் இக்கோட் பாட்டின் விஞ்ஞானமற்ற இயல்பு மாறிவிடாது. எக்ஸிஸ் டென்ஸியலிஸம் திட்டவட்டமான முறையில் முதலாளித் துவத் தத்துவார்த்தப் பிற்போக்குத் தன்மைகளைப் பிரதி பலிக்கிறது. ஆகவே அது மார்க்ஸ்-லெனின் தத்துவத்தின் பரமவைரிகளில் ஒன்றாகும்.

20ம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்த முதலாளித்துவத் தத்துவ ஞானிகள், சமூகவியலாளர்களில் சிலரது நடவடிக்

கைகள் மார்க்சிய—லெனினியத் தத்துவத்தைக் குழப்பி பொய்ம்மைப் படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. இவர்களுள் ஏற்கனவே குறிப்பிட்ட ஆர்—ஆரோன் (பிரான்ஸ்) கே. மெஹ்னர்ட் (மேற்கு ஜெர்மனி) ஏ. மெய்யர் (அமெரிக்கா) ஆகியோருமடங்குவர்.

1950 களின் இறுதியில் வரலாறு பற்றிய மார்க்சியக் கருத்தமைவுக்கு மாற்றாக கருதப்பட்ட "இயந்திரத்தொழில் சார்ந்த சமுதாயம்" என்ற ஆய்வியலின் முக்கிய ஆசான் களுள் ஒருவராக ரேமண்ட் ஆரோன் தோன்றினார். இயந்திரத் தொழில் சார்ந்த சமுதாயம், சமூக அடுக்கமைவு ஆகியவற்றின் வளர்ச்சி பற்றி சோர்போனில் நிகழ்ந்த சொற்பொழிவுகளின் போக்கில் அவர் தனது ஆய்வியல் சோஷலிச-முதலாளித்துவ முரண்பாட்டிற்கு ஒரு வடிகால் என உரைத்தார். [9]" சமுதாயத்தின் வளர்ச்சி சமூக முரண் பாடுகளைச் சார்ந்திருக்க வில்லை; ஆனால் வெறும் தொழில் நுட்ப பொருளாதார வேகங்களைச் சுட்டிக்காட்டுவதைத் தான் சார்ந்திருக்கிறது என்பது ஆரோனின் வாதம். அவ் வாறானால் அவரது காரணகாரிய ஆய்வுப்படி, அனைத்து இயந்திரத் தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளும் அவற்றில் உடைமை கொண்டிருப்பதின் இயல்பு எவ்வாறிருந்த போதிலும் அவை ஒரே திசையில்தான் செல்கின்றன; தவிர்க்க முடியாதபடி ஒரு மித்த சமுதாய வகையாக சங்கமிக்கின்றன என்பதாகும். இது 'சங்கமிப்புச் சித்தாந்தம்' உருவெடுப் பதற்கு வகை செய்கிறது. நவூன கால கம்யூனிஸ்ட் எதிர்ப் பாளர்கள் இந்தச் சித்தாந்தத்தைத் தான் வரலாற்றுப் பரிணாமத்தின் மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்துக்கு மாற்றுச் சித்தாந்தமாகப் பார்க்கிறார்கள். அவர்கள் சமுதா யத்தின் முன்னேற்றம், முதலாளித்துவத்திலிருந்து சோஷ லிசத்திற்குச் செல்வதில் இல்லை; ஆனால், சமூக வாழ்க்கை யின் அனைத்து வடிவங்களும் சோஷலிச அமைப்பும் முதலா ளித்துவ அமைப்பும் சங்கமித்துத்தானாக வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட, சமுதாயத்தின்

தொழில் நுட்ப வசதிகளின் வளர்ச்சியில் தான் உள்ளது'' என நிருபிக்க முயல்கிறார்கள்.

இந்த ஆய்வியல் நமது காலத்தின் கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சித்தாந்தத்தில் எழுந்து நிற்கிறது. சமூக முன்னேற்றத்தின் ஒரு நியதி என்ற முறையில் அது ஒரு இலட்சியத்தின் பால் பட்ட கோட்பாட்டை அல்லாமல் முழுக்க முழுக்க லோகா யுதக் கோட்பாடுகளையே முன் வைக்கிறது. அதாவது தொழில் நுட்ப வளர்ச்சி பின்னர் இந்தக் கருத்தமைவுக்கு வேறு வாசகங்களும் முகிழ்த்தன. ''பயன் படுத்துவோர் சமுதாயம்'' (டபுள்யூ-ரோஸ்டோவ்) '' இயந்திரத் தொழில் மயமான பின்புள்ள சமுதாயம்'' (ஆர். ஆரோன்; டி. பெல்) ''தொழில் நுட்ப மயச்சமுதாயம்'' (இசட்-பெர்ஸிஸினஸ்கி) இத்யாதி. மேலைநாட்டுச் சமூகவியலில் தொடர்ந்து இந்த ஆய்வியல்கள் ''தொழில் நுட்பத் நியதி வாதம்'' என்ற பொதுவான பெயரில் தெரியலாயிற்று. அதாவது சமூக வளர்ச்சியின் தரம் தொழில் நுட்ப வளர்ச்சியைச் சார்ந்தே யிருக்கிறது என்பதாகும். இன்று வரை இந்த அனைத்து ஆய்வியல்களினதும் சமூக தத்துவார்த்தக் கோட்பாடுகளின் பொதுவான கருத்து முதல்வாத இயல்பு அப்படியே இருக் கின்றன. மார்க்சும், லெனினும் காட்டியது போல், தொழில் நுட்பத்தின் அடிப்படையில் முகிழ்க்கும் உற்பத்தி, சமூக அரசியல் உறவுகளை முறையாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், தொழில் நுட்பத்தின் பாத்திரத்தை ஒரு தலைப்பட்சமாக வலியுறுத்துவது, நுணுக்கமானது, பல பட்டரையானது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்த ஆய்வியல்களோடு நெருங்கிய உறவு கொண்ட இன்னுமொரு மார்க்சிய எதிர்ப்புக் கருத்தமைவு, 1950 களிலும் 1960 களிலும் உரத்த குரலில் பிரகடனம் செய்யப்பட்டது. இதுதான் அந்தச் ''சித்தாந்தமற்ற நிலை'' ஆய்வு. இதன் மூலவர்கள், ஆர். ஆரோன், டி. பெல் மற்றும் முதலாளித்துவ சமூக வியலின் செயல் பாட்டுப்பள்ளிச்

சிந்தனையைப் பின் பற்றிய, செல்மூர் லிப்செட், ஹென்றி அய்க்கண் மற்றும் சிலர். இந்த ஆய்வியல், 20-ம் நூற்றாண்டில் சித்தாந்தத்தின் முடிவை' அறிவித்தது. இவ்வாய்வியலின் ஆசிரியர்கள், இயந்திரத்தொழில் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் (அவற்றின் சமூக அரசியல் அமைப்புக்கள் எவ்வாறிருந்தாலும்) சித்தாந்தம் சமூகப் பிரச்சினைகளை ஆய்வதற்குரிய ஒரு சாதனம் என்ற முறையில், சமுதாயத்தின் வாழ்க்கைக்கு எந்த முக்கியத்துவத்தையும் கொண்டிருக்க வில்லை என அறுதியிட்டுக் கூறினர். இது சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் விஞ்ஞானம் ஊடுருவியிருப்பதோடு நெருங்கிய பிணைப்புக் கொண்டிருப்பது தெளிவு. (இங்கு சித்தாந்தம் பற்றிய நோக்கை விஞ்ஞானத்திற்கு மாறுபட்ட ஒரு வகை பொய்ம்மை உணர்வின் உள்ளடக்கம் என முதலாளித்துவச் சமூக சிந்தனை பயன்படுத்தியதை நாம் திரும்பிப் பார்ப்பது நலம்). சித்தாந்தம், ஒரு விசேட வகையான அறிவாற்றல் நடவடிக்கையாக, தொழில் நுட்பப் புரட்சி சகாப்தத்தில் அதன் பயனை இழந்து விடுவதாகக் கருதப்படுகிறது. உள்ள படியே இந்த ஆய்வியலை முன் மொழிந்தவர்கள் தங்களது சொந்த சித்தாந்தக் கோட்பாடுகளின் ஏலாத்தன்மையையும், பலஹீனத்தையும் ஒப்புக் கொள்கிறார்கள். சித்தாந்தம் பற்றிய தங்களது கணிப்புக்களை ஒட்டு மொத்த சமுதாயச் சித்தாந்த வாழ்க்கையின் பின்னுக்குத் தள்ளி விட்டு விடுகிறார்கள். இந்தக் கணிப்புக்களின் குறி, அவற்றை மார்க்சிய-லெனினிய ஆய்வுக்கும் விரிவுபடுத்துவதே; எல்லாவற்றிற்கும் மேலாக 20-ம் நூற்றாண்டில் சமுதாய வளர்ச்சி பற்றிய லெனினது கணிப்புக்கு அவற்றை நீட்டிப்பதே.

சித்தாந்தமற்ற நிலையின் ஆய்வு மேலை நாட்டுப் பத்திரிகைகளில் பெருமளவு விளம்பரத்தைப் பெற்றது. இருந்தாலும் வெகு சீக்கிரத்திலேயே அதன் மலட்டுத்தன்மை, அதன் மூலவர்களாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டது. 1960 களின் இறுதியில், 1970களின் திருப்பத்தில் சமூக வளரச்சிக்கு,

சித்தாந்தப் புனரமைப்பின் துவக்கம் பற்றிப் பேசத் தலைப்பட்டனர். இங்கு 'சித்தாந்தப் புனரமைப்பு' என்பது சமுதாயத்தில் முக்கியத்துவம் இழந்ததாகக் கூறப்பட்ட சித்தாந்தத்தை மீண்டும் கொண்டு வருவதைக் குறிக்கிறது.

இவ்வாறு காரணப்படுத்துதலின் சமூக அரசியல் பாதிப்பு வெட்ட வெளிச்சமானதே. ''மார்க்சிய—லெனினியம் சமகாலத்து சமூக வளர்ச்சியில் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டதாம்'' அது கூறுகிறது. சித்தாந்தப் புனரமைப்பு, ஒரு வர்க்கமற்ற அடிப்படையில் சித்தாந்தத்தின் மறு உருவாக்கமே என்றும் அது பகர்கிறது. அறிவாற்றல் இயலின்படி, குறைவின்றியும் அல்லது கூடுதலின்றியும் சித்தாந்தத்தில் ஒரு மூன்றாவது வழியை மெய்ம்மைப் படுத்தும் பாசாங்குதான் இது. வாய் வீச்சுத்தனமாக ஒரு வகையான உலகு தழுவிய அல்லது பொதுவான மனிதத் துவப் போக்கை, இப்பொழுது இருந்துவரும் எதிர் எதிரான சித்தாந்தத்திற்கு எதிராக வேறுபடுத்திக் காட்டுவதற்காக வகுக்கப்பட்டது—முதலாளித்துவ பாட்டாளி வர்க்கச் சித்தாந்தங்கள்.

**இனி என்ன செய்ய வேண்டும்?** என்ற நூலில் முன்னரேயே ஒரு 'மூன்றாவது' சித்தாந்த வழியைத்தேடிய முயற்சிகளுக்கு லெனின் சரியான பதிலடி கொடுத்திருந்தார். ''கருத்துக்களின் போராட்டத்தில் நடுவாந்திர வழி ஏதும் கிடையாது. ஒன்று முதலாளித்துவச் சித்தாந்தம் அல்லது சோஷலிசச் சித்தாந்தம் அவ்வளவுதான்'' என லெனின் எழுதினார். நவீனகாலத்து முதலாளித்துவத் தத்துவ ஞானிகளாலும் சமூகவியலாளர்களாலும் இத்தகைய ஒரு மூன்றாவது வழியின் சாத்தியம் சம்பந்தமான நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே புதைக்கப்பட்ட கட்டுக் கதைகளை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சிகள் உள்ளபடியே மற்றுமொரு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கையைத்தான் காட்டுகின்றன. இன்று மார்க்சிய—லெனினியக் கருத்துக்களின் செல்வாக்கு,

கொடி கட்டிப் பறப்பதைத் துண்டித்தெறியும் முயற்சியே அது.

முதலாளித்துவத்தின் சமகாலத்திய லௌகீக பரிவுணர்ச்சி படைத்தவர்களது, ஒளிவு மறைவில்லாத கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சித்தாந்தங்களின் சோர்வில்லாத பிரச்சாரத்தை இங்கு குறிப்பிட வேண்டும். இல்லையென்று சொல்லிவிட்டாலும் அடிக்கடி, இன்று சோவியத் வாழ்க்கையின் பல்வேறு நோக்குகளிலும், அந்த சோவியத் இயலின் பகைப்புலனில் சோவியத் யூனியனது வளர்ச்சியிலும் கம்யூனிஸ எதிர்ப்பின் செயல்பாடு இருக்கத்தான் செய்கிறது. இதற்கு மிகவும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய உதாரணங்களில் ஒன்றை மேற்கு ஜெர்மனியின் சோவியத் இயலாளர் கிளாஸ் மெஹ்னர்ட்டின் எழுத்துக்களில் காணலாம்; அவரது நூல்களான "சோவியத் மனிதனும்" "பீகிங்கும் மாஸ்கோ"வும் அக்டோபர் புரட்சியோ அதற்குப்பின்சோவியத்சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்தின் சோஷலிச வளர்ச்சியோ மார்க்சின் கருத்துக்களது ஈடேற்றமல்ல என்று கூறுகின்றன. மெஹ்னர்ட்டின் கருத்துப்படி அக்டோபருக்குப் பிந்திய சோவியத் யூனியனது வளர்ச்சி வரலாற்றின் பிரதான உண்மைகள் "மத நம்பிக்கை வழக்கம்" "சுதந்திரத்தின் பாரம்பரியங்கள் இல்லாமை"[10] போன்றவையே. எனவே அவருக்கு கம்யூனிஸம் என்பது சில தனிநபர்களது தன்னிச்சை எழுச்சியே; (முதலாவதாக லெனின்) ஒருமித்த பெரும்பான்மைக்கு பொறுமையுடன் உட்படுத்திக் கொள்வதே.

மற்றொரு தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளரும் சோவியத் இயலாளருமான ஆல்பிரெட் மெய்யரும் இதே முறுக்குடன் எழுதுகிறார். சமூக வளர்ச்சியின் இயக்கவியல் பொருள் முதல்வாதப் பகுப்பாய்வு விஞ்ஞானத்தின்பால்பட்டதல்ல; ஏன் என்றால் அது முன்னேற்றத்தில் ஒரு வறட்டுத்தனமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என அவர் மார்க்சியம்; லெனினியம் ஆகிய தனது புத்தகங்களில்

அறிவிக்கிறார். மெய்யரின் கருத்துப்படி மனிதன் தனது வரலாறு முழுவதிலும்'' நிரந்தரமாகவும் மாற்றப்பட முடியாதவனுமாக'' இருப்பதால் சமூக முன்னேற்றம் என்பது ஒரு கற்பனையைத் தவிர வேறொன்றுமில்லை.[11] இதே கருத்துக்களைக் கொண்ட கேர்ருஹண்ட், மற்றும் லெனினது சீடர்களாலும், அவரைப் பின்பற்றியவர்களாலும் வகுக்கப் பட்ட மார்க்சிய—லெனினியச் சித்தாந்தம், தனிச்சை எழுச்சி; அகவயப்பட்ட தன்மையைக் கொண்டிருப்பது எனச் சித்தரிக்கப்படலாம் என்கிறார்.[12]

ஒத்தகருத்துடைய கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்களால் லெனினியத்தை விமர்சிப்பதற்கு, அடிக்கடி கையாளப்படும் முறைகளில் ஒன்று அதை மனிதத்துவத்திற்கு விரோத மானது''; ''தனி நபர்களின் நலன்களைப் புறக்கணிப்பது''; ''அனைவருக்குமாகத் தனிநபரைத் தியாகம் செய்வது'' என்றெல்லாம் குற்றம் சாட்டுவது. இந்த கண்டுபிடிப்புக்கள் எல்லாம், சமகாலத்து முதலாளித்துவ, ''மனித உரிமைகளின் பாதுகாவலர்கள்'' அல்லது இன்னும் தெளிவாக, தனிநபர் சுதந்திரம், மனிதத்துவம் போன்றவைகளை முழுமைப்படுத்தி வியாக்கியானம் செய்யும் இத்தகைய கருத்தோட்டங்களை ஹேஷ்யப்படுத்தும் மிகவும் அண்மைக் காலமாக இயங்கும் கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பாசறைகளின் வியாபாரத்துக்குத் தயார் நிலையிலிருப்பவற்றிலிருந்து எடுத்தவைகளே. சோவியத் யூனியனிலும், இதர சோஷலிஸ்ட் நாடுகளிலும் ''சுதந்திரங்களின் ஒடுக்குமுறைகளை''ச் சித்தரித்துக் காட்ட கருப்பு வண்ணம் கிடைக்காமல் போனதற்காக முணு முணுத்துக்கொண்டே இந்த எழுத்தாளர்கள், முதலாளித்துவ உலகில் காணப்படும் வன்முறை, பாகுபாடு போன்ற உண்மைகளின்பால் வாய்மூடி மௌனிகளாகிவிடுகிறார்கள். அவர்கள் கம்பூச்சியாவின் போல்பாட் கும்பலைப் போன்ற வர்களது அப்பட்டமான கொலை வெறித்தாண்டவங் களையும், அறுவறுக்கத்தக்க இனவெறியையும் கண்டிக்க வில்லை. அதே நேரத்தில் அவர்கள் சோஷலிஸ்ட் நாடு

களையும், மார்ச்சிய லெனினிய உலகக் கண்ணோட்டத்தையும் திசை திருப்பிக் குழப்புவதில் வரம்பு மீறிச் செயற்படுகிறாரகள்.

சமீப வருடங்களில், கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சித்தாந்த கர்த்தாக்கள், மார்க்சிய—லெனினியத்தைப் பொய்ம்மைப் படுத்துவதற்காக மற்றுமொரு தந்திரத்தைக் கையாண்டார்கள் 20-ம் நூற்றாண்டின் மார்க்சிய சிந்தனை வளர்ச்சியில் காணக்கிடைத்த பல போக்குகளில் ஒன்றுதான் லெனினியமும் என அவர்கள் அநிகரித்த அளவில் எழுதினார்கள். இந்தக் கருத்தமைவு 'புளூலரிஸ்டிக் மார்க்ஸீய'' ஆய்வு என்றழைக்கப்பட்டது. 1917 லிருந்து மார்க்சியம் மாறுபட்ட, பரஸ்பரம் தனித்த நிலைபாடுகளில், வழக்கமாக அந்த பாரம்பரிய மார்க்சியத்தைக் கொண்டு வளர்ச்சி பெற்றது என்று இதன் ஆசிரியர்கள் பிரலாபித்தார்கள். அதாவது வலதுசாரி சமூக ஜனநாயகத் தலைவர்களான கே. கவுட்ஸ்கி அவரது மிக அண்மைக் காலத்துப் பின்பற்றுபவர்களான பெனிடிக்கி கவுட்ஸ்கி, புருனோ கிரெய்ஸ்கி, வில்லிபிராண்ட் மற்றும் பலரின் எண்ணங்களும் கருத்துக்களும். ட்ராட்ஸ்கீயவாதம், பிராங்க்பர்ட் பள்ளியின் சிந்தனை, எர்னஸ்ட் பிளாக், ஜார்ஜ் லியூகாக்ஸ், யூகோஸ்லேவிய பிராக்ஸிஸ் குழுவினரின் வாதம் போன்றவை விசேடப் போக்குகளாகக் கருதப்பட்டன.

இத்தகைய தீர்ப்புக்களின் அரசியல் காரணகாரியம் தெளிவானதே: லெனினியத்தைச் சிறுமைப்படுத்துவதையும் எண்ணற்ற பல கோட்பாடுகளுக்கு இணையாக அதையும் வைத்து அதன் மூலம் இன்று மார்க்சியத்திற்கு தனியான ஒரு வரலாறு கிடையாது ஒருமித்த சித்தாந்த அடிப்படை கிடையாது என்று மெய்ப்பிப்தையும் அவை தங்கள் கடமையாகக் கொண்டன. மார்க்சிய லெனினியத்தை நேரடியாகத் தாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் அதன் ஆசிரியர்கள் எதிர பார்த்த பலனைக் கொடுக்கத்தவறி விட்டதைத்தான்

இது காட்டுகிறது. இப்பொழுது அவர்கள் எண்ணற்ற பல லெனினிய எதிர்ப்புச் சித்தாந்தங்களின் சுழற்சியை உருவாக்க முயல்கிறார்கள். அவை, ஒற்றை உருப்பாக இருக்கும் கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டதை அதனுள்ளேயே சுட்டுச் சாம்பலாக்க உதவி செய்யும் என்று நம்புகிறார்கள்.

சோவியத் யூனியன், சகோதர சோஷலிஸ்ட் நாடுகள் மற்றும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மார்க்சியத் தத்துவ ஞானிகள் இந்தத் தாக்குதல்களனைத்திற்கும் உறுதியான முறையில் பதிலடி கொடுத்தார்கள். கம்யூனிஸ்ட் எதிர்ப்பு எங்ஙனம் நிதானமில்லாதிருக்கிறது; அந்தப் பதாகையைத் தூக்கிப்பிடிப்பவர்கள் எங்ஙனம் சூதாடிகளாக இருக்கின்றனர் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.[13] இந்தப் போராட்டத்தின் போக்கில் மார்க்சிய லெனினியத் தத்துவத்தின் தலையாய போக்குகளில் பல மேலும் வளர்க்கப் பட்டன. இங்கு முதலாளித்துவத் தத்துவத்தை விமர்சிக்கும் போது, அதன் அடிப்படையான பிரச்சினைக்கும் கருத்தமைவுக்குமான முழு மொத்தத்தில் அதன் அடிப்படைத் தத்துவார்த்த முடிவுகளுக்கும் இயக்கவியல் பொருள் முதல்வாதத்திற்கு மிடையேயான ஒப்பீடு பிரதான கோட்பாடாயிருக்க வேண்டும். அதே சமயத்தில் தத்துவத்தில் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்கான இந்த விமர்சனத்தின் போக்கில் பல்வேறு லெனினிய எதிர்ப்பு எழுத்துக்களுக்கும் மிகவும்பிற்போக்கான ஏகாதிபத்திய தத்துவார்த்த ஆய்வியல்களுக்கும் அவற்றின் கட்சி சார்பு, வர்க்க இயல்புக்கும் இடையே ஒரு பாசம் புலப்படுத்தப்பட்டது. இது மக்களைச் சுரண்டி வாழும், கம்யூனிஸத்தை நோக்கிச் செல்லும் மனிதகுலத்தின் சமூக வளர்ச்சியைப் பின்னுக்குத்தள்ளப் பாடுபடும், மரணப்படுக்கையிலிருக்கும் ஒரு சமூக அமைப்புக்குத் தீவிரமாக வக்காலத்து வாங்கும் சாதனமாகத் திகழும். அவற்றின் சமூகப் பாத்திரத்தைத் தெளிவாக்கிக் காட்டுகிறது.

## 2. லெனினியமும் குட்டி முதலாளித்துவத் தத்துவார்த்த நிலவரங்களும்

1920-ம் ஆண்டில் தனது "**இடதுசாரி கம்யூனிஸம்-ஒரு இளம்பிள்ளைவாதம்**' என்ற நூலில் லெனின், ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் இரண்டாவது காங்கிரஸில் கட்சியை விட்டு வெளியேற்றிய ஒரு செக்டேரியன் குழு வினரது இடது சாரித் தவறுகளைப் பகுப்பாய்ந்திருந்தார். இந்தக் குழுவினரின் கருத்துக்கள், "பிராங்க்பர்ட் ஆண் மெயினிலுள்ள ஒரு ஸ்தலக் குழுவினரால், "பிரசுரிக்கப்பட்ட **ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு** என்ற பிரசுரத்தில் வகுத்தளிக்கப்பட்டிருந்தன.[14] "முதலாளித்துவ ஜனநாயகத்தை அழித்தொழிக்காமல், முதலாளித்துவ அரசாங்கத்தை புரட்சியின் மூலம் தகர்த்துத் தரை மட்ட மாக்க முடியாது; கட்சிகளை அழித்தொழிக்காமல் முதலாளித்துவ ஜனநாயகத்தைத் தகர்த்துத் தரைமட்ட மாக்குவது சாத்தியமில்லை"[15] என்பதே அவர்களது கருத் துக்களின் மூலக்கரு. இதன் மூலம் எதிரணியிலிருந்தவர்கள், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தயார் நிலையிலிருக்கிறோம் என்ற சாக்கில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைக்குமாறு பரிந் துரைத்தனர். இந்தக் குழுவினர் மார்க்சியத்தைப் பின்பற்று கிறோம் என்ற பொதுவான அறிவிப்புக்களின் திரை மறை விலேயே இத்தகைய அறைகூவல்களை விட்டனர். இந்தக் குழுவினரின் தவறுகளைப் பகுப்பாய்ந்த லெனின் "அவர்கள் தேர்ந்து தெளிந்த மார்க்சியவாதிகள் எனத் தங்களைக் கருதிக் கொள்கிறார்கள். ஆனால் நம்ப முடியாத முட்டாள்தனமான விஷயங்களை எள்ளி நகையாடும் முறையில் பேசி தங்களுக்கு மார்க்சியத்தின் அரிச்சுவடி கூடத் தெரியாதென்பதைப் புலப் படுத்துகின்றனர்"[16] எனக் குறிப்பிட்டார். இத்தகை யோருக்கு, நாங்கள் மார்க்சியத்தைப் பின்பற்றுகிறோம் என்று சொல்ல வேண்டிய அவசியமிருந்தது. ஏனென்றால் ஜெர்மனியில், 1920-களின் துவக்கத்தில் முதலாளித்துவகுட்டி முதலாளித்துவ எழுத்தாளர்களிடையே மார்க்சியம் ஒரு

நாகரீகத்தின் பால்பட்டதாயிருந்தது. ஆனால் லெனின் குறிப்பிட்டுக் காட்டியதாவது: "மார்க்சியத்தை ஒப்புக் கொள்வது மட்டுமே ஒருவனைத் தவறுகளிலிருந்து காப்பாற்றாது. ருஷ்ய மக்களாகிய நாம் இதை நன்கறிவோம். ஏனென்றால் நம் நாட்டில் அடிக்கடி மார்க்சியம் ஒரு "நாகரீகமாக" உள்ளது."[17]

இப்பொழுது "பிராங்க்பர்ட் ஆண்மெயினிலுள்ள ஸ்தலக் குழுவினர்" உள்ளபடியே யார் என்று சொல்வது கடினம். இருந்தாலும் மார்க்சியத்தை அதன் வழி புரிந்து கொண்டதாகத் தம்பட்டமடிக்கும் அந்த பிராங்க்பர்ட் சிந்தனை அங்கு 1930 லியே முகிழ்த்திருக்க வேண்டுமென்பது தெளிவு. 1920 களின் இறுதியில், பிராங்க்பர்ட் ஆண் மெயினில் ஒரு சீர்திருத்தவாதக் குட்டி முதலாளித்துவ அறிவாளிகளின் வட்டம் தோன்றியது. இதில், முழுமையான மனிதத்துவ நிலைபாட்டிலிருந்து முதலாளித்துவ சமுதாய விமர்சனம் என மார்க்சியத்தை "உண்மையாகப் புரிந்து கொண்டவர்கள்" என்று அறிவித்த மேக்ஸ் ஹோர்க்ஹீமர், தியோடர் அடோர்னோ, ஹெர்பர்ட் மார்க்யூஸ் போன்றோரிருந்தனர். 20-ம் நூற்றாண்டு மார்க்சியத்தின் ஒரு பொதுவான நிலைபாடுதான் லெனினியம் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள மறுத்தனர். தொழிலாளி வர்க்க இயக்கம் ஒரு சாதாரண அமைதி வழிப் போர் அணிதான். அதில் சமுதாயத்தின் நெருக்கடி மிகுந்த உத்வேகத்தில் முக்கியமான புரட்சிகர அணியாக உருப்பெற்றிருப்பது அறிவார்ந்த போரணி அதாவது அறிவாளி வர்க்கத்தினர் என அவர்கள் கணித்தனர்.

1930-ல் பிராங்பர்ட் பல்கலைக் கழகத்துக்குள்ளேயே முதலில் தோன்றிய சமூக அறிவு ஆய்வுக் கல்விக்கூடத்தின் தலைவராக ஹோர்க் ஹீமர் இருந்தார். அப்பொழுதுதான் பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளி நிறுவப்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்ததும் பிராங்பர்ட் சிந்தனைப்பள்ளி ஜெர்மனியைக் காலி செய்தது. அதன் முக்கிய உறுப்பினர்கள் அமெரிக்காவுக்கு நாடு கடந்தனர். யுத்தம் முடிந்த பிறகு ஹோர்க்ஹீமரும், அடோர்னோவும் ஜெர்மனிக்குத் திரும்பி பிராங்பர்ட் சமூக அறிவு ஆய்வுக் கல்விக் கூடத்தை மறுபடியும் திறந்தனர் (1950). சீக்கிரத் திலேயே, பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளியின் இரண்டாவது தலைமுறை உறுப்பினர்கள் என்றழைக்கப்பட்ட—ஜர்கென் ஹேபர்மாஸ், ஆல்பிரெட் ஸ்மிடிட், ஒஸ்கார்நெக்ட் ஆகியோரும் மற்றவர்களும் கல்விக் கூடத்தில் சேர்ந்தனர். அந்தக் கால கட்டத்தில் அவர்கள் தங்களைத் தாங்களே "அதிகார பூர்வமான மார்க்சிஸ்டுகள்" எனப் பிரகடனப் படுத்திக் கொண்டனர். அதாவது மார்க்சியத்தைப்பற்றிய தங்களது ஆய்வுக்கேற்ப சொந்தம் சொண்டாடினர். அவர்கள் தங்களது சொந்த விசேடமான "மேலை நாட்டு வகையி லான மார்க்சியத்தை பிரகடனம் செய்தனர். வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளுக்குரித்தானது அது என்று கூறப்பட்டது. ("கிழக்கு ஐரோப்பிய மார்க்சிசத்திலிருந்து வேறுபட்டது" அதாவது லெனினியம்)

அவற்றின் சாரத்திலும் உள்ளடக்கத்திலும் பிராங்பர்ட் பள்ளியின் கருத்துக்கள் குட்டி முதலாளித்துவம் குழப்பித் திரிப்பதை ஒத்ததாகவே இருந்தது. அதற்கேற்ப லெனி னியத்தை விமர்சிப்பதாகவிருந்தது.

பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளியின் லெனினிய எதிர்ப்புக் கருத்துக்கள், அடோர்னோவின் 'எதிர் மறை இயக்கம்' என்ற நூலில் மிகுந்த ஒரு முனைப்பான வடிவத்தில் தரப் பட்டுள்ளன. இந்தப் புத்தகம், சமுதாயத்தில் தத்துவத்தின் பாத்திரத்தையும் இடத்தையும் பற்றிய, பிராங்பர்ட் நியோ-மார்க்சிஸ்டுகள் ஊட்டி வளர்த்த கருத்துக்களின் ஒரு பொது வான வெளிப்பாட்டைத் தருவதாகும். அத்துடன் சோவியத் யூனியனிலும் சோஷலிஸ்ட் நாடுகளிலும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் மார்க்சியத் தத்துவார்த்தச் சிந்தனையின்

வளர்ச்சி பற்றிய வெளிப்படையான தீர்ப்புக்களையும் கொண்டதாகும். அதாவது இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் லெனினியக்கட்டம். அடோர்னோ (பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளியின் இதர உறுப்பினர்களைப் போன்று) "கிழக்கத்திய மார்க்சியம்" "டயமட்" இன்னபிற சொற்றொடர்களைப் பயன்படுத்தி லெனினியத்தைப் பற்றிய அபிப்ராயத்திலிருந்து நழுவுவது குறிப்பிடப்பட வேண்டிய தாகும். அடோர்னோவுக்கு தத்துவத்தின் காரணகாரியம், நிலவுகின்ற நிலைமைகளை விமர்சிப்பதேயாகும். (உண்மை யைத் தேடும் விஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டது) "தத்துவத்திலிருந்து ஆக்கபூர்வமான எதையும் பெறமுடி யாது"[18] என அவர் எழுதுகிறார். மேக்ஸ் ஹோர்க் ஹீமரும் அதையே எழுதினார். "தத்துவத்தின் உண்மையான செயல்பாடு, நிலவுகின்ற சூழலை விமர்சிப்பதுதான்"[19] என அவர் அறிவித்தார். முதலாளித்துவத்தை எதிர்த்த போராட் டத்தில் ஒரு முக்கிய கருவி என பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளி பார்க்கிறது. இது நம் உள்ளத்தில் விமர்சன ஆயுதங் களையும், ஆயுதங்களிலான விமர்சனத்தையும் குழப்பிக் கொள்ளக்கூடாது என்ற மார்க்சின் மணிமொழியை நினைவு படுத்துகிறது.[20] ஆனால் மார்க்ஸை நாங்கள்தான் "அதிகார பூர்வமாகப் படித்தறிந்துள்ளோம்" எனப் பீத்திக் கொள்ளும் இந்தக் குட்டி முதலாளித்துவத் தத்துவஞானிகள் அவரது மெய்யான சிந்தனைகளைப்பற்றி துளிகூட அக்கரை கொள்ள வில்லை. உண்மையில் அடிக்கொருதடவை ஹெகலை மேற்கோள் காட்டினாலும் கூட அவர்களது நிலைபாடுகள் இன்னும் அந்த நியோகேண்டியனின் "நன்னெறிவழி சோஷலிசம்" போன்றே இருக்கின்றன. அதாவது அவர்கள், சமூகம் முழுவதுமான ஒற்றுமை, உறவுகளுக்கு அப்பால்பட்டு முழு நிறை மனிதர்கள் என்று கருதப்படுகிற சில தனிநபர் களை நேரடியாகச் சார்ந்தே சமூக முன்னேற்றத்தைக் காண் கிறார்கள்.

அடோர்னோ இயக்கவியல் பொருள் முதல் வாதத்திற்கு அதாவது லெனினியத்திற்கு தனது சொந்த வியாக்கியானத்

தையும் தருகிறார். ''இயக்கம்'' என்ற சொல்லின் பொருள், பொருட்கள் அவற்றைப் பற்றி கருத்துக்களில் புலப்படுத்தப் படவில்லை என்பதைத் தவிர வேறொன்றுமில்லை என அவர் அறிவிக்கிறார்.[21] அடோர்னோவுக்கு இதன் பொருள் ''இயக்கம்'' என்பது முழுக்க முழுக்க அகவயப்பட்ட நிகழ்வு தான். அதற்கும் வெளிப்புற லோகாயுத உலகிற்கும் உறவு இல்லை என்பதேயாகும். அது பொருளின் நடவடிக்கையில் மட்டுமே இருக்கிறது அல்லது மிகவும் துல்லியமாக எண்ணு வதில்தான் இயக்கம் நிலவுகிறது. இதுதான் பிராங்க்பர்ட் ,'மார்க்சிய வாதிகள்'' (அல்லது மார்க்சியத்தைத் திசை திருப்பிக் குழப்புகிறவர்கள். அவர்களை அவ்வாறுதான் அழைக்க வேண்டும்) வகுத்தளித்த முடிவாகும். இம்முடிவு, இயக்கவியல் பொருள் முதல்வாதத்தை வளர்ப்பதற்காக, 1850 களுக்கும் 1880 களுக்கும் இடையே, மார்க்ஸும், எங்கெல்ஸும், 20-ம் நூற்றாண்டில் லெனினும் செய்த பணி களனைத்தும் தவறானவை; அவர்களால் புறப்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்ட இயக்கத்தின் புறவயப்பட்ட மெய்ம்மை ''நிலவவில்லை.'' என்பதுதான்.

இன்னும் அதிகச் சுருக்கமாக, அடோர்னோ, மனித சிந்தனையின் அகவயப்பட்ட இயக்கத்தின் விஞ்ஞானம் என எங்கெல்ஸினால் வருணிக்கப்பட்ட இயக்கவியல் தர்க்கத்தை ஆய்ந்தார். இந்த ''அதிகார பூர்வமான'' தத்துவஞானி இயக்கவியல் தர்க்கம், நேர்காட்சி வாதத்தை விட நேர்காட்சி யாளராகவே தோன்றுகிறது என ஆணித்தரமாக உறுதிப் படுத்துகிறார். எனவே சிந்தனையின் அகவயப்பட்ட இயக்கம் லோகாயுத உலகின் புறவயப்பட்ட இயக்கத்தைப் பிரதிபலிக் கிறது என்று சொன்ன எங்கெல்ஸும் லெனினும் மீண்டும் தவறிழைத்து விட்டார்கள் என்றாகிறது. உள்ளபடியே இயக்கவியல் பகுப்பாய்வு, சுய விருப்பத்தின் மூலம் பார்ப் பதற்கு வெறும் ''தர்க்கவியல் கோரிக்கைகளின் ஒட்டு மொத்தமாக்கப் பட்டு விட்டது.''[22] நிலவுகின்ற சூழலின் விமர்சனத்தை, முதலாவதும் முக்கியமானதும் மனித சிந்தனையின் விமர்சனமாக அடோர்னோ பார்க்கிறார்.

லோகாயுத உலகைப் பொறுத்த மட்டில் அது பற்றிக் குறிப் பிடப் படக் கூட இல்லை.

நல்லது. விஷயம் இன்னும் முற்றுப் பெறவில்லை. மிகவும் மதிப்பிழந்து போன முதலாளித்துவத்தைப் பற்றி ஏதாவது பேச வேண்டி வந்தால், உடனே அடோர்னோ மிகவும் தன்னடக்கத்துடன் புறவயப்பட்ட முன்னேற்றத்தின் இயக்கம் பற்றிய சில வகைகளை வரையறுப்பார். பகைமை உணர்வைப் பற்றிய அவரது கருத்தமைவு விசேடமாகக் குறிப்பிட வேண்டியதாகும். பகைமையுடன் கூடிய சமுதாயத் துக்கு ஒரு ஆரம்பமும் உண்டு; ஒரு முடிவும் உண்டு என்பதை அடோர்னோ ஒப்புக் கொள்கிறார். ஆனால் "சமுதாயத் திற்கு துன்ப துயரங்களை ஏற்படுத்தாமல் பகைமை நிற்ப தில்லை."[23] ஆக அது அப்படித்தான்! சமூகப் பரிமாணங் களின் அடிப்படையாக இருப்பதாகக் கூறப்படும் உயிரியல் கோட்பாடுகளிலிருந்து புறவயப்பட்ட முரண்பாடுகள் முகிழ்ப் பதாக அது தோற்றமளிக்கிறது. இங்கு அகவயப்பட்ட தன்மைக்கும், சமுதாயத்தின் உயிரியல் தொடர்பான கருத் தமைவுகளுக்கும் இடையே ஒரு செயற்கையான திருமணம் நிகழ்வதை நாம் காணலாம். முழுக்க முழுக்க கருத்து முதல்வாத வரட்டுக் கோட்பாடு.

விஞ்ஞானக் கம்யூனிஸ ஆய்வையும், தத்துவத்தில் நடை முறைக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள ஒற்றுமை தொடர் பான மார்க்சிய லெனினியக் கோட்பாட்டுக்கும் எதிராக ஒரு விசேட ஆர்வத்துடன் அடோர்னோ பிரசாரம் செய்கிறார். முதலாவதாக அவர் இந்தக் கோட்பாட்டை "புறக்கணிக்க வேண்டிய நியோ-ஹெக்லியனிஸத்தின் ஒரு நுணுக்கம்" (!) என்கிறார். இதன்மூலம் அவர் வரலாற்று ரீதியில் மலட்டுத் தனமான இடதுசாரி ஹெகலியனிஸம்"[24] என்கிறார். இந்தக் கருத்துக்களிலுள்ள வெறும் சித்தாந்தக் குழப்பத்தைப்பற்றி இங்கு விவாதிப்பது அவசியமற்ற ஒரு செயலாகும். இன்னும் ஒரு திகைப்பூட்டும் முடிவை ஏற்படுத்துவதற்குத்தான் அடோர்னோவுக்கு அவை தேவைப்படுகின்றன—"மேலை

நாட்டு "அதிகாரபூர்வ மார்க்சிஸ்டுகள்" இந்தக் கொலை பாதகக் கருத்திலிருந்து மனித குலத்தைக் கைகழுவி விட்டு விட்டனர். ஆனால் கீழைநாடுகளில் மார்க்சியத் தத்துவத்தை (லெனினியத்தை) அவர்களது கலாசார ஆர்வம் காரணமாக கை கழுவ மாட்டார்கள்."[25] இதன் பொருள், நமது காலத்தில் லெனினது கருத்துக்களது மகத்தான முக்கியத்துவத்தின் வேரும், மூலமும் பிற்பட்ட நிலைமையிலுள்ள கீழைநாட்டு மக்களின் 'கலாசார ஆர்வத்தில்' தானிருக்கின்றன என்பதே யாகும். கீழைநாடுகளில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட இந்த ஆர்வத்தை அப்படியே மறந்து விட்டுத்தான், அடோர்னோ நடைமுறைக்கும் சித்தாந்தத்துக்குமுள்ள ஒற்றுமைக்கோட் பாட்டை மேலும் எதிர்க்கிறார் என்பது உண்மைதான். அவர் எழுதுகிறார்: "நடைமுறைக்கும் சித்தாந்தத்துக்கும் ஒற்றுமை என்ற கோட்பாடு பற்றிய கோரிக்கை, சித்தாந் தத்தின் அந்தஸ்து வெறும் காகிதப்பூ என்ற அந்தஸ்துக்குக் குறைந்து விட்டது; ஒவ்வொரு ஆய்விலிருந்தும் கோரப்படும் (மார்க்சியவாதிகள், லெனினியவாதிகள் மத்தியில்-ஆசிரியர்) நடைமுறைக்கான அனுமதி ஒரு தணிக்கை முத்திரையென ஆகிவிட்டது; மார்க்சிய-லெனினியச் சிந்தனையில் காணப் படும் சித்தாந்த, நடைமுறை ஒற்றுமையில் சித்தாந்தம் வீழ்ந்து விட்டது; நடைமுறை அரசியலின் ஒரு பகுதியாகி விட்டது"[26] இத்யாதி இத்யாதி. இந்த "நடை முறை எதிர்ப்பு" அம்சத்தின் குறும்புத்தனம், அதிகாரபூர்வமான தத்துவஞானிகள் "சித்தாந்தம் தனது சுதந்திரத்தை மீண்டும் வென்றெடுக்கும். அது நடைமுறையின் நலன்களின்பால் பட்டதே"[27] என்று அறிவித்ததின் மூலம் வெளிப்படையாகி விட்டது. அவர் பொருள் கொள்வது எந்தச் சுதந்திரத்தை? நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளி இங்ஙனம் உள்ளத்தைத்தொடும் வகையில் ஆர்வம் காட்டும் நடைமுறையின் நலன்கள் யாவை? இதற்கு ஒரே ஒரு பதில்தான் உண்டு. அவர்கள் முன்வைக்கும் சித்தாந்த "சுதந்திரத்தின்" பொருள் மக்களின் உழைக்கும் மக்களின், சமூக முன்னேற்றப் போராளிகளின் நலன்கள், தேவைகளி

லிருந்து அதைத் தனிமைப் படுத்துவதே. அடுத்து அந்த அதிகாரபூர்வமான தத்துவஞானி குறிப்பிட்ட நடை முறையின் நலன்கள் என்பது, உலக சோஷலிசத்தையும், புரட்சிப் பரிமாணங்களையும் சித்தாந்த ரீதியில் பலவீனப் படுத்துவதற்காக முட்டுக்கட்டையாக நிற்கும் முதலாளித்துவ நலன்களை முழுமையாக பூமிக்கடியில் நிறுத்துவதைத்தவிர வேறொன்றுமில்லை. உள்ளபடியே நிலவுகின்ற சூழ்நிலை பற்றிய "விமர்சனத்தின்" உண்மையான பொருள் இது தான். அதாவது "பிராங்பர்ட் சிந்தனைப்பள்ளி" முழு நிறை வான வசதிகளுடன் இருக்கும் முதலாளித்துவ உலகத்தின் சூழ்நிலை.

ஹோர்க் ஹீமர், அடோர்னோ, ஹேபர்மாஸ் ஆகியோரை லெனினியத்தைப் பற்றிய அவர்களது விமர் சனத்தில் ஒருசேர மதிப்பிடலாம். ஆனால், 1930களின் துவக்கத்தில் பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளியில் தீவிரமாக யிருந்து அதைப் பின்பற்றிய இருவர் இப்பொழுது ஒரு விசேட நிலையைக் கொண்டிருக்கின்றனர். எனவே அவர் களது கருத்துக்கள் தனியான கணிப்புக்குத் தகுதி பெற்றிருக் கின்றன. அவர்கள் ஹெர்பர்ட் மார்க்யூஸ், எரிச் ப்ரோம் ஆகியோர்.

அமெரிக்காவுக்கு நாடு கடந்தபின் இரண்டாவது உலகப் போரின்போது மார்க்யூஸ் ஒரு அமெரிக்க உளவுத்துறை அதிகாரியாகவிருந்தார். 1950களில் கொலம்பியா பல்கலைக் கழக ருஷ்யக் கல்விக் கூடத்திலும், ஹார்வர்ட் பல்கலைக்கழக ருஷ்ய ஆராய்ச்சி மையத்திலும் ஒரு வல்லுனராகப் பணி யாற்றினார். 1965-ம் ஆண்டு வரை கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் அவர் ஒரு பேராசிரியராகவிருந்தார். 1930களிலும் 1940களிலும் கூட மார்க்யூஸ் பிராங்பர்ட் பள்ளியின் இதர சனாதனிகளைப் போலல்லாது ஹெகலியனி ஸத்தை, நியோ பிராய்டிஸத்தோடு இணைக்க முயன்றார். 1950களில் அவர் லெனினியத்தைப் பற்றிய கடுமையான தாக்குதல்களில் தன்னை விசேட நிபுணராக்கிக் கொண்

டார்.[28] 1960களில் சிறிது காலம் அவர் ட்ராட்ஸ்கியவாத, மாவோவாத பிடிப்புக்களைக் கொண்டிருந்த குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரையும், இடது அராஜகவாத இளைஞர்களையும் ஒன்றுபடுத்திய "புதிய இடது சாரி அணி" என்றழைக்கப்பட்ட அந்த அணியின் சித்தாந்தத் தலைவராக விளங்கினார். 1930களுக்கும் 1950களுக்கும் இடையில் மார்க்யூஸ் முன்வைத்த கருத்துக்கள் உலக தத்துவார்த்த சமுதாயத்தின் கவனத்தைக் கவரவில்லை. அடோர்னோவும், அவரை ஒத்தவர்களும் கையாண்ட அதே வழிமுறைகளைப் பயன்படுத்திய லெனினியத்தின் எண்ணற்ற விரோதிகளில் மார்க்யூஸும் ஒருவராகவிருந்தார்.

1960களில், பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி போன்ற வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் வளர்ந்தோங்கிய முரண்பாடுகள், எல்லாவற்றையும் மறுக்கும் இடதுசாரிச் சிந்தனையை ஆதரித்த மாணவர்களைச் செயல் வீரர்களாக்கின. அவர்கள் முதலாளித்துவ நிறுவனத்தைத் தகர்த்துத் தரை மட்டமாக்க கங்கணம் கட்டினர்.

**ஓர் உருக் கொண்ட மனிதன்** (1964) **கற்பனையின் முடிவு** (1967) **விடுதலை பற்றி ஒரு கட்டுரை** (1969) போன்ற அவரது நூல்களில் மார்க்யூஸ் வகுத்தளித்த கருத்துக்கள் இந்த இடதுசாரிக் குழுவினரிடம் ஒரு புதிய பாணி நாகரீகமாகத் திகழ்ந்தன.

மார்க்யூனின் பொதுவான கருத்தமைவு "ஒரே இயந்திரத் தொழில் மய சமுதாய"ச் சித்தாந்தத்துடன் உடனடி உறவு கொண்டதாகும். "விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியோடு, ஒரு காலத்திய புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ உறவுகளின் அமைப்பில் "இரண்டறக் கலந்து" விடுகிறது. தனது புரட்சிகர செயல்திறனை இழந்து விடுகிறது. பெருங்கூட்டமான மக்களிடமிருந்து ஓர் உருக்

கொண்ட மனிதனாக, வெளி நிலைமைகள் நிலவுவதைப் பற்றியோ அல்லது தனது சொந்த நடவடிக்கைகள் பற்றியோ ஒரு தீவிரப் போக்கைக் கொள்ளாத மனிதனாக ஆகி விடுகிறது'' என்று அவர் மார்தட்டினார்.

இந்தச் சூழலில் புரட்சிகர சமூகக் கோட்பாடு ''வெளியாரிடம்'' உருக்கொள்ளத் துவங்குகிறது. அதாவது பாட்டாளிகளின் பொறுக்கி வர்க்கத்தினரிடம், ஒடுக்கப்பட்ட சிறுபான்மையோரிடம், வேலையில்லாதவர்களிடம் இது போன்றவர்களிடம், ''வெளியார்'' என்ற வகையில் சுதந்திரமான சமூகக் குழுவினராக, அறிவாளிகள், இளைஞர்கள், வரலாற்று ரீதியாக சமுதாயத்தில் ஏமாற்றப்பட்டவர்கள் என தாய்க்குலத்தினரையும் மார்க்யூஸ் சேர்த்துக் கொண்டது குறிப்பிடக் கூடியதாகும். உலக வளர்ச்சியின் புரட்சி மையம், முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் சரிசமமாக விரோதமாயிருக்கும், வளர்ச்சி பெறாத ஏழை நாடுகளுக்கு மாற்றப்பட்டு விட்டது என்பது மார்க்யூஸின் வாதம். இந்த நிலைபாட்டிலிருந்து மார்க்யூஸ் முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்கான சட்டபூர்வமான வழிகளைக் கைவிட வேண்டுமாறு அறை கூவுகிறார். புரட்சி மனோபாவம் படைத்தவர்கள் தங்களது பழகிப்போன வாழ்க்கை பாணிகளை உதறி யெறிந்து விட்டு அவற்றை முற்றாக நிராகரிக்குமாறு அழைப்பு விடுக்கிறார்.

ஒரு கால கட்டத்தில் இந்தச் சித்தாந்தம் அதைப் பின்பற்றுகிறவர்களிடம் ''மா-மா-மா-யிஸம்;'' ''மார்க்ஸ்-மாவோ-மார்க்யூஸ்'' ஆகியோரது மறைகுறிப்பு எனத் தெரிந்திருந்தது. உள்ளபடியே, மார்க்யூஸனிஸத்திற்கும், மார்க்சியத்திற்குமிடையே எந்தவித உண்மையான தொடர்பும் கிடையாது. தனிநபர் சுதந்திரம் பற்றிய சுருக்கமான பார்வை பற்றி மார்க்சின் ஆரம்பகால அறிக்கைகளிலிருந்து சிலவற்றை மார்க்யூஸ் தனதாகத் திருப்ப முயன்றார். பழையனவற்றைத் தகர்த்துத் தரைமட்டமாக்குவதில் புரட்சிகர ஆவேசம் கொண்டுள்ள இளைஞர்களின் தீர்மானமான முக்கியத்துவம்

பற்றிய மாவோவின் கருத்துக்களையும் மார்க்யூஸ். இந்தச் சித்தாந்தத்தின் தனது சொந்த மூலக்கூறுகளுடன் சேர்த்துக் கொண்டார். இது, ப்ராய்டியப் பொருளில் மனிதனது உயிரியல் உந்துதலோடு புரட்சியைத் தொடர்புபடுத்துவதாகும்.

மார்க்யூனியன் சித்தாந்தத்தில் மற்றுமொரு விசேட அம்சம் அதன் தீவிர தொழில் நுட்ப எதிர்ப்பு வாதமாகும். மனிதன் தொழில் நுட்பங்களுக்கு அடிமையாயிருப்பதிலிருந்து ''விடுதலை'' பெற வேண்டுமென அவர் அறை கூவுகிறார். நிலவுகின்ற சமுதாய பாணிகளை ஒழிப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றின் லோகாயுத, தொழில் நுட்ப அடிப்படைகளையும் ஒழிக்க வேண்டும் என்கிறார். ''இவ்வாறு ஒழிக்கும் போக்கில் ஒருபுறம் உண்மையான கண் கூடாகத் தெரிகிற மனித வாழ்க்கையின் கோட்பாடுகள், மனிதனது ''உண்மையான தேவைகள்'' வெளிச்சத்திற்கு வருகின்றன. மறுபுறம் சமுதாயத்தின் உண்மையான மானுட முன்னேற்றத்தைச் சாதிப்பதற்கான வழிமுறைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப் படும்'' என்கிறார் அவர்.

1960 களின் கடைசியில் மார்க்யூஸின் கோட்பாடு, பல வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் மாணவர்கள் அறிவாளிகள் மத்தியில் பெருமளவு செல்வாக்கைப் பெற்றது. 1968-ம் ஆண்டு பிரான்ஸிலும், இத்தாலியிலும் பெரும் அரசியல் நிகழ்வுகள் நடை பெற்ற போது, தனது கருத்துக்களை மாணவர்களிடம் நேரில் விளக்கிக் கூறுவதற்காக மார்க்யூஸ் ஐரோப்பாவிற்கு வந்தார்; அவர் கூறியதைக் கேட்டவர்கள் அவரது நிராகரிப்புக் கோட்பாட்டின் இறுதி லட்சியம் எதுவாக இருக்குமென்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டனர். மார்க்யூஸின் சித்தாந்தம் இதற்குச் சரியான பதிலை அளிக்க வில்லை. அளிக்கவும் முடியாது. இது பற்றிப் பின்னர் யோசிக்கலாம். அதற்கு கால அவகாசம்

உள்ளது என்று சொல்லியதின் மூலம் அவர் யாருக்கும் மன நிறைவை அளிக்கவில்லை. மார்க்ஸியனிசத்தின் செல்வாக்கு மிகவேகமாகக் குறைந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் மார்க்யூஸ் காலமானார். ஒரு காலத்தில் மிக ஆர்வத்துடன் அவரைப் பின் பற்றியவர்களனைவரும் அவரை மறந்தே விட்டனர்.

மார்க்யூஸின் ஆய்வியல்களில் காணக்கிடைத்த பொதுவான லெனினிய எதிர்ப்புப் போக்கு மார்க்சியத்திற்கும்-லெனினியத்திற்கும் மாற்றாக ஒரு ஆகப் பெரிய புரட்சிச் சித்தாந்தத்தை வழங்குவேன் என்று அவர் கூறியதிலும் துளி யளவு கூடச் சந்தேகம் கிடையாது. ஆனால் நவீன உலகத்தின் புரட்சிப் போராட்ட நடைமுறை மார்க்ஸியனிசத்தின் உண்மையான சித்தாந்த சமூக இயல்பை; அது ஒரு குட்டி முதலாளித்துவ, சமூக கற்பனாவாத, முன் நிகழ்வுகளில் அராஜகவாத சித்தாந்தம்; விஞ்ஞானக் கம்யூனிஸத்தையும் அதன் தத்துவார்த்த அடிப்படைகளையும் எதிர்த்த முதலாளித்துவத்தின் சித்தாந்தப் போராட்டத்தில் முதலாளித் துவத்திற்கு திட்டவட்டமாக ஒரு கருவியாகப் பயன்படும் சித்தாந்தம் என்பதை புலப்படுத்தி விட்டது.

அண்மை, சில பத்தாண்டுகளின் குட்டி முதலாளித்துவச் சித்தாந்தங்களுள் முன்னணியிலிருப்பது எரிச் ப்ரோம் முன் வைத்ததாகும். மார்க்யூஸைப் போன்று இவரும் ஆரம்பத்தில் பிராங்பர்ட் சிந்தனைப் பள்ளியின் உறுப்பினராக விருந்து பின்னர் அமெரிக்காவுக்கு நாடு கடந்தார். அங்கு பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் பொழுதே, மனவியல் மருத்துவத் தொழிலையும் நடத்தினார். 1960 களில் ப்ரோம் கீழ்க்காணும் நூல்களையும் வேறு பல நூல் களையும் பிரகரித்தார். **மனிதனைப் பற்றிய மார்க்சின் கருத் தமைவு** (1961) **பிரம்மையின் சங்கிலிகளுக்கு அப்பால்; மார்க்ஸ் மற்றும் பிராய்டுடன் எனது போராட்டம்.** (1962)

ப்ரோம் லெனினியத்தைப் பற்றி நேரடியாகப் பேச வில்லை. ஆனால் அவரது கருத்தமைவு மார்க்சிய சிந்தனையின் வரலாற்றிலிருந்து அவர் சத்தமின்றி லெனினியத்தை நீக்கியுள்ளதைத்தான் விளக்குகிறது. மார்க்ஸைப் பொறுத்த மட்டில் ப்ரோம், முந்தைய அணுகும் முறையைத்தான் கொண்டிருந்தார். தனது முழு மனிதத்துவ, சமுதாயத்தைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் சொந்த உயிரியல் கருத்துக் களுக்கேற்ப அந்தப் பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட் டத்தின் மூலவரை மாமனிதரை வருணித்தார். உண்மையில் ப்ரோமின் ஆய்வியல், ஒரு எதிர்கால எக்ஸிஸ்டென்ஷி யலிஸக் கருத்துக்களுடன் கூடிய புரட்சிகர ஆய்வியலுக்கு முதலீடு செய்யும் முயற்சியாகவேயிருந்தது.

ஆரம்ப கால மார்க்சிடமிருந்து, முதலாளித்துவத்தின் கீழ் மனிதன் அன்னியமாவது பற்றிய அவரதுகருத்துக்களைக் களைக் கடன் வாங்கிக் கொண்டு ப்ரோம், முதலாளித் துவத்தை எதிர்த்த புரட்சிப் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என யோசனை கூறினார். இதைச் செய்ய, ஒருவனது உண்மையான தேவைகளை ஸ்தாபிக்க வேண்டு மென அவர் சொன்னார். (ஆம். இந்தத் தத்துவஞானி வரலாறு, மற்றும் வளர்ச்சியின் பகைப்புலனுக்கு அப்பாற் பட்டுத்தான் விஷயங்களை அணுகுகிறார்).இதன் விளைவாக ப்ரோம் அனைத்து சமூக முரண்பாடுகளையும், கட்டளை முரண்பாட்டு இணையமாகச் சுருக்குகிறார். அதாவது அறிவு சார்ந்த அறிவுக்கொவ்வாத முரண்பாடுகளைச் சமாளித்து விடலாம்; எல்லாவற்றிற்கும் மேலாக மனிதத்துவ எக்ஸிஸ் டென்னியலிஸத்தின் அடிப்படையில் சமாளித்து விடலாம்'' என்பதே. இவ்வாறாக அவர் வரலாற்றை ஒரு உண்மையான உயிரியலாளராக அணுகுகிறார்.

சமூக அநீதிகளை எதிர்த்துப் போராடுவது தொடர்பாக ப்ரோம் ஒரு ''இனவழி சோஷியலிசத்தை'' வளர்க்க வேண்டு மென அறைகூவுகிறார், அதாவது தனியான, பொருளாதார உறவுகளற்ற, குடும்ப அமைப்புக்களை அவைகளுக்

குள்ளாகவே ''ஸ்திரமான சமூக உறவுகளுடன்'' நிறுவ வேண்டுமென்கிறார். முதலாளித்துவமோ, சோஷலிசமோ, உண்மையான வடிவத்தில் உருப்பெறுவது பற்றி ப்ரோம் சிறிதும் அக்கரை கொள்ளவில்லை. அவரது இனவழி அமைப்புக்கள், எந்த உறவுகள் நிலவினாலும் எங்கு வேண்டுமானாலும் முகிழ்த்து நிலவும் என்கிறார்.

1960 களில் ப்ரோமின் கருத்துக்கள் செல்வாக்குப் பெற்று விளங்கின—எனினும் பலபெரிய முதலாளித்துவ நாடுகளில், சமுதாயத்தின் குட்டி முதலாளித்துவப் பகுதிகளில் மார்க்யூஸைவிட மிகக்குறைந்த அளவு செல்வாக்கையே பெற்றிருந்தன. பல்வேறு நாடுகளில் சில அராஜகவாத, மாவோயிஸ இயக்கங்கள் அவற்றைப் பயன்படுத்த முயன்றன. இந்தக் கருத்துக்கள் அனைத்தும், லெனினியத்திற்கு மற்றுமொரு மாற்றைத் தயாரிப்பதற்காக லெனினியத்தின் வளர்ந்தோங்கும் சமூக முக்கியத்துவம் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தை மறுப்பதற்கு ஒரு சாதனமாக்குவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிதான் என்பதில் சந்தேகமேகிடையாது.

*　　　*　　　*

குட்டி முதலாளித்துவத் தத்துவத்திலுள்ள லெனினிய எதிர்ப்புக் கருத்துக்களை நாம் விவாதித்த போது சில தத்துவார்த்தப் பள்ளிகளின் பிரதான கருத்துக்களையும் போக்குகளையும் பகுப்பாய்ந்தோம். குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாதம் லெனினியத்தை சிறுமைப்படுத்தி பொய்மைப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றிய வருணனை, சமகாலத்து முதலாளித்துவ உலகின் முக்கிய குட்டி முதலாளித்துவ அரசியல் குழுக்கள் கொண்டிருந்த கருத்துக்களைப் பற்றிய வருணனை இல்லாமல் முற்றுப் பெறாது.

நமது கால வரலாற்றில் குட்டி முதலாளித்துவச் சித்தாந்தம் அராஜக வாதிகள், ட்ராட்ஸ்கீயவாதிகள்,

மாவோயிஸ்டுகள் இன்னபிற குழுவினரது நடவடிக்கைகளில் வெளிப்பாடு பெறுகிறது. அனைத்துக் குழுவினரும் ஒன்று சேர்ந்து புதிய இடதுசாரி அணியினர் என்றறியப்படுகின்றனர். இதில் பார்க்க வேண்டியதென்னவென்றால், 1920 களுக்கும் 1950களுக்குமிடையே பாரம்பரிய அராஜகவாத, ட்ராட்ஸ்கீயவாத இயக்கங்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக அரசியல் தோல்விகளினால் அவதிப்பட்டன. இதன் விளைவாக 1960களின் துவக்கத்தில் அவர்களுள் சிறந்தவர்கள் என மிஞ்சி நின்றதெல்லாம் சில விரல்விட்டு எண்ணக்கூடிய ஒற்றுமையில்லாத சண்டையிடும் குழுவினரே. 1960 களில், சமுதாயத்தின் பொதுவான சமூக வளர்ச்சியிலும், உலகப் புரட்சிப் பரிமாணத்திலும் முரண்பாடுகள் முற்றியதால் அவர்கள் ஓரளவு உயிர்த் துடிப்புடனிருந்தனர். எனவே இந்தக் குழுவினரது நடவடிக்கைகள், லெனினியத்தின் சித்தாந்த விரோதிகள் இவ்வாண்டுகளில் கிடைக்கப்பெற்ற வரலாற்று ஆதாயங்களுக்கு எதிராகத் தொடுத்த போராட்டத்துடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தன.

1960 களிலும், 1970 களிலும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள புதிய இடதுசாரி அணியினர், மாறுபட்ட பல வேடங்களில் தோன்றினர். அதில் ப்ரோமைப் பின்பற்றுகிறவர்களையொத்த ஒரு இடதுசாரித் தோற்றத்தைக் கொண்ட அந்தச் சீர்திருத்த வாதிகளுமிருந்தனர். டேனியல்கான்—பென்டிட் மற்றும் பயங்கரவாதக் குழுவினரைப் போன்ற பிரெஞ்சு அராஜகவாத வகையிலான வீர சாகஸச் செயல்புரிவோர்; அவக்கியாதி பெற்ற ''சிவப்புப்படை அணியினர்'' அல்லது பாடர்மெயின்ஹோப் கும்பல் போன்றோருமிருந்தனர். அவர்களனைவரும், உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் மற்றும் மார்க்சிய—லெனினியத்தின் பால் உள்ள பொது விரோதத்தால் ஒன்று கூடினர். அரசியல் ரீதியாக இந்தக் கூட்டத்தினர் அதிகரித்த அளவில் சமகால ஏகாதிபத்தியத்தின் மிகவும் பிற்போக்கான பகுதிகளின் சேமிப்புப் படையாக, நண்பர்களாக விளங்கி அதன் கட்டளைகளை நிறைவேற்றினர்.

இவ்வாறாகப் பல்வேறு நாடுகளில் செயல்படும் மாவோ ஆதரவுக் குழுக்கள் சோவியத் யூனியன் மற்றும் உலக சோஷலிச சமுதாயத்திற்குப் பகையான பீகிங் நிலைபாட்டைப் பிரசாரம் செய்கின்றன; உலகப் புரட்சிப் பரிமாணங்களின் ஒருமைப்பாட்டை மறுத்துப் பிரசாரம் செய்கின்றன. தேசீய வாதத்தையும், குறுகிய இனவெறியையும் பரப்பி வன்முறைகளைத் தூண்டி சர்வதேச உறவுகளில் விரோதத்தை ஏற்படுத்துகின்றன. முதலாளித்துவ நாடுகளில் செயல்படும் 'மாவோ'யிசக் குழுக்கள் (20லிருந்து 30 உறுப்பினர்களைக் கொண்டகுழுக்களே) மார்க்சிய—லெனினியத்தை எதிர்த்து—அந்தத் தத்துவத்தைப் பிரசாரம் செய்யும், விஞ்ஞானக் கம்யூனிஸம் என்ற தகர்க்க முடியாத அஸ்திவாரங்களில் நிற்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்தை எதிர்த்து உரத்த குரலில் அவதூறுப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றன.

அதிகரித்த அளவில், அப்பட்டமான சோவியத் எதிர்ப்பில் வளர்ந்து வரும் மாவோயிஸம் பீகிங் தலைவர்களது இனவெறி, ஆதிக்கக் கோட்பாடுகளின் பேரால் ஏகாதிபத்தியத்துடன் எத்தகைய சமரஸத்தையும் மேற்கொள்ளத் தயாராயிருக்கும் ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது. எனவே இப்போதைய லெனினியத்திற்கான போராட்டம், நவீனகுட்டி முதலாளித்துவச் சித்தாந்தத்தின் மிகவும் பிற்போக்கான போக்குகளில் ஒன்றாக உருவெடுத்துள்ள மாவோயிஸத்தை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்துவதையும், விமர்சிப்பதையும் வலியுறுத்துகிறது.

எப்பொழுதும் போலவே, ட்ராட்ஸ்கீயவாதிகள் அதிதீவிர இடதுசாரி இயக்கங்களின் தலைமைப் பதவியைக் கைப்பற்ற முயல்கிறார்கள். ஆனால் இந்தப் போக்கு துவங்கிய காலத்திலிருந்தே உள்ள உட்கட்சிச் சண்டைகள் தொடர்வதினால் அவை அவர்களது முயற்ச்சிக்குத் தடைபோடுகின்றன. இன்று எண்ணற்ற சர்வதேசீய ட்ராட்ஸ்கீயவாதக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவினரும் ஒட்டு

மொத்த இயக்கத்தின் பிரதிநிதிகள் நாங்கள் தான் என உரிமை பாராட்டுகிறார்கள். அதே சமயம் பல நிகழ்வுகளில் அவர்கள் 'மாவோ' யிஸ்டுகளுடன் ஒரு கூட்டணியை ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர். ஆனால் பீகிங் அவர்களுக்கு உத்தரவு போட முயன்றது பிடிக்காமல் இப்பொழுது அவர்கள் மாவோயிஸ்டுகளை, "வலதுசாரி சந்தர்ப்பவாதிகள்" என்றும் "எதிர்ப்புரட்சிச் சக்தியினர்" என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.

குட்டி முதலாளித்துவச் சித்தாந்தங்களின் இன்றையப் போக்குகளில் முக்கியமாகத் திகழ்வது அராஜகவாதக்குழுக்களாகும். இந்தக் குழுக்களில் உள்ளவர்கள் "பாரம்பரிய அராஜகவாதிகள்" அல்லது பிரௌதன் மற்றும் பாகுனினைப் பின்பற்றுகிறார்கள் "நியோ-அனார்க்கிஸ்டுகள்" எனப் பிளவு பட்டு "புதிய பாதைகளை" நோக்கிய வண்ணமிருக்கின்றனர். நியோ-அனார்க்கிஸ்டுகள் மேலும் உப பிரிவுகளாகச் சில எழுத்தாளர்களால் பிளக்கப்பட்டு அராஜகவாத தாராளவாதிகள், அராஜகவாத சோஷலிஸ்டுகள், அராஜகவாத மார்க்சிஸ்டுகள்"[29] என்றார்கள். இத்தாலிய "சிவப்புப் படை அணி" யினரால் உதாரணப் படுத்தப்பட்ட அந்த "புரட்சிகர பயங்கர வாதமும்" அல்லது மேற்கு ஜெர்மனியிலிருந்த பாடா-மெயின்ஹோபின் "செம்படைப் பிரிவும்" போர்க்குரல் எழுப்பியதோடு ஓரளவு தீவிரமாகவும் பணியாற்றத் துவங்கின.

மாவோயிஸம், ட்ராட்ஸ்கீயவாதம் போன்ற இந்த அனைத்துப் போக்குகளும், மார்க்சிய லெனினியத்திற்கு ஒரு மாற்று என அதிகாரபூர்வமான முதலாளித்துவச் சித்தாந்தத்தின் ஆதரவையும், அரவணைப்பையும் ஓரளவு அனுபவிக்கின்றன. சோவியத் யூனியனிலும், சோஷலிச சமுதாய நாடுகளிலும் உண்மையான சோஷலிசம் ஈட்டிய ஆதாயங்களைச் சிறுமைப்படுத்தவும், திசை திருப்பிக் குழப்புவதற்குமான அவர்களது முயற்சிகளுக்கு மேலை நாட்டுப் பத்திரிகை

களில் பெருத்த விளம்பரம் தரப்பட்டு, பச்சையான கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்களால், 20-ம் நூற்றாண்டில் மார்க்சியம் ஒரு பன்மை வாதம் என நிரூபிக்க அவர்கள் எடுத்த முயற்சிகளில் பயன்படுத்தப்பட்டது.

தனது சித்தாந்தத்திலும் நடைமுறையிலும் ஓரளவு மார்க்சியக் கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளோம் எனக் கூறும் "அராஜக வாத மார்க்சியத்"தின் போக்கை சுருக்கி வருணிப்போம். பல்வேறு நாடுகளிலும் விரல் விட்டு எண்ணக் கூடிய சில உறுப்பினர்களையே கொண்ட இந்தச் சிறிய குழுக்கள், விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சி பொருள் முதல் உற்பத்தி பற்றிய மிகவும் தீவிரமான விவாதங்களில் பங்கு கொண்டன. அதி தீவிரவாதக் குழுவினரால் போதிக்கப் பட்ட பயங்கரவாதத்தையும் வன்முறைகளையும் நிராகரித்த இந்தக் குழுக்கள், உற்பத்தி ஒருமுனைப்படுத்தப் படுவதால் உற்பத்திச் சக்திகளின் முன்னேற்றம், (உடைமை கொண் டிருப்பவர்களின் வகை எவ்வாறிருந்தாலும்) மனிதனை அடிமையாக்குவதில் கொண்டு போய் விடுகிறது. மக்களின் முன் முயற்சியை நசுக்கி விடுகிறது என்று கூறின. "சுதந்திர மான சோஷலிசத்தை" உருவாக்க முதலாளித்துவ நாடுகளி லும், சோஷலிஸ்டு நாடுகளிலும் நிலவுகின்ற வகைகளை ஒரே மாதிரி நிராகரிக்க விழைந்தன. முழுக்க முழுக்க ஒரு புதிய சமூக, தொழில்நுட்ப, இயற்கையான மாதிரியைக் காண இதைச் செய்ய வேண்டுமென்றன."[80] இந்த வாய்வீச்சுக் கருத்தமைவுகள், குட்டி முதலாளித்துவ மனோபாவத்தின் சத்தையும் சாரத்தையும் பிரதிபலிக்கின்றன: சமூகத்தில் திடீர் மாற்றங்கள் நிகழும் போது அதிதீவிரப் புரட்சி வாதம்! சிறந்த வாழ்க்கை வசதிகளுக்கான உழைக்கும் மக்களின் அன்றாடப் போராட்டத்தின் வெற்றியில் எப்பொழுதுமே சந்தேகம்; முழுக்க முழுக்க நம்பிக்கையின்மை. இவ்வாறாக இந்த வெகு சிலரான தனி நபர்கள் மார்க்சிய பதப் பிர யோகங்களைச் சுரண்டி, உள்ளபடியே நிகழ்கின்றவைகளின் பரிமாணங்களை விஞ்ஞான ரீதியாகக் கணிக்க முயலும் போது நிர்க்கதியாயிருப்பதை நிரூபிக்கிறார்கள். தங்களிடம்

உருப்படியான லட்சியங்களோ திட்டங்களோ கிடையாது என்ற உண்மையை; தங்களது கருத்துக்களின் பயனற்ற தன் மையைப் புலப்படுத்துகின்றனர். இந்தக் கருத்துக்கள் எல்லாம் முதலாளித்துவ சித்தாந்தத்தினால் ஏன் போற்றிப் புகழப்படு கின்றன என்பது இப்பொழுது தெளிவாகிறது. இதிலிருந்து கூட இந்தப் போக்குகள் சமகாலத்து மார்க்சிய எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு வாதங்களின் கருவிகளாகச் செயல்படுவது பற்றிய சரியான கணிப்பைக் காணலாம்.

இன்றைய லெனினிய எதிர்ப்பு குட்டி முதலாளித்துவ சித்தாந்தப் போக்குகளை வருணிக்கும் போது, அண்மையில் மக்களின் கவனத்துக்கு வந்த மற்றுமொரு போக்கான பிரெஞ்சு நாட்டு ''புதிய தத்துவ ஞானிகளை''ப் பற்றிக்குறிப் பிட வேண்டியது அவசியமாகும். மேலை நாட்டுப் பத்திரிகை யாளர்கள் அவர்களை, புதிய இடதுசாரிகளோடு ஒத்த கருத் தமைவு கொண்ட புதிய வலது சாரிகள் எனப் பட்டம் சூட்டினர்.

இந்தத் தத்துவ ஞானிகளின் முதல் பிரசுரங்கள் 1975-ம் ஆண்டில் தோன்றின. இந்தச் சமயத்தில்தான் ஆண்ட்ரே கிளக்ஸ்மேனின் சமையல்காரனும் தன் இனத்தையே உண்ணும் அரக்கனும் என்ற நூல் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. 1977-ல் கிளக்ஸ்மேனின் மற்றொரு புத்தகமான ''சிந்திக்கும் தந்தையர்'' வெளி வந்தது. அதே 1977-ம் ஆண்டு கிளக்ஸ்மேனின் சக சிந்தனையாளர் பெர்னாட்-ஹென்றி லெவி தனது மனித முகத்துடன் கூடிய காட்டுமிராண்டித் தனம் என்ற நூலை வெளியிட்டார். இவையனைத்தும் தனித் தனியான படைப்புக்களல்ல. இதே கால கட்டத்தில் கீழ்க் கண்ட நூல்களும் வெளிவந்தன. எல். ஏஞ்ச் தேவதை கைலார்ட்ருவும், கிறிஸ்டியன் ஜாம்பெட்டும் எழுதியது; கடவுள் கடவுளே. காட் டேமிட் மற்றும் இந்த யூதன் சாக்ரட்டீஸ் மாரிஸ் கிளாவல் எழுதியது. இன்னபிற. இந்த புத்தகங்களின் ஆசிரியர்கள் 1968-ம் வருடத்திய மாணவர் ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டவர்கள்.

இடதுசாரி முழக்கங்களை எதிரொலித்தவர்கள்தான் மார்க்யூஸ், கான்பென்டிட் கருத்துக்களிலிருந்த மயக்கம் அகன்றதும் இவர்கள் அவற்றிற்கு நேர் எதிர் திசையில் அதி தீவிர வலதுசாரி முகாமின் முழக்கங்களுக்கு பண் இசைத்தனர்.

மார்க்சியம் தனிநபரை வன்முறை மூலம் ஒடுக்குவதற்கு இட்டுச் செல்கிறது. எனவே அதை ஒதுக்கித் தள்ள வேண்டும் என்பதை நிருபிக்க புதிய வலதுசாரி அணி தன்னைப் பணித்துக் கொண்டது. தனது முதல் புத்தகத்தில் கிளக்ஸ் மேன் இந்த அம்சத்தை, எல்லாவற்றிற்கும் மேலாக லெனினைப் பொறுத்து இந்த அம்சத்தை விவாதித்தது இங்கு குறிப்பிடத் தக்கது. இந்த விவாதத்தின் நோக்கம், புரட்சி ஒரு பொழுதும் முன்னேற்றத்தையோ அல்லது மனிதனுக்கு நன்மையையோ கொண்டு வராது என்ற கருத்து நிலைபாட்டை மெய்ப்பிப்பதே. எனவே வரலாற்றை நம்பிக்கையுடன் பார்ப்பதற்கு பதிலாக நம்பிக்கை வறட்சியுடன்தான் பார்க்க வேண்டும். மக்கள் மீது சக்தியை எறிந்து, அது அவர் மீதே விழுந்து அசிங்கப்படுத்தப்பட்ட ஸோல் ஸெனிட்ஸ்யாவின் அவதூறு நிறைந்த எழுத்துக்களை இந்தப் புதிய வலதுசாரியினர் போற்றிப் புகழ்ந்தனர். அதே காலத்தில் அவர்கள் சோஷலிசம் என்ற கருத்தையே "ஒரு அபத்தமான கனவு" என அழைத்து சமரஸம் காண முயன்றனர்:

உள்ளபடியே இந்தக் கும்பலின் "புதிய தத்துவம்" புரட்சியையே நிராகரிப்பதற்கு அறைகூவல்விடுக்குமளவுக்குப் போய் விட்டது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியை சமூக முன்னேற்றத்தில் பகுத்தறிவதின் முக்கியத்துவத்தை நிராகரிக்கக் கோருமளவுக்குப் போய் விட்டது. இதற்கு மாறாக வலதுசாரி அணியினர் பகுத்தறிவுக் கொவ்வாததை. கடவுள் தன்மையை, நீட்ஸ்ச்சின் சித்தாந்தமான நன்மை தீமைகளைக் கடந்தவர்கள் எவரோ அவர்கள் மற்றவர்களை ஆள்வது போன்றவற்றை ஆதரித்தனர். இந்தச் சித்தாந்தம் ஒரு புதிய பாசிஸ்ட் சித்தாந்தத்தைச் சார்ந்ததாகும்.

இவ்வாறாக குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாத சித்தாந்தங்களுக்கு எதிரான மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் போராட்டம் இந்தக் கருத்துக்களின்போராட்டத்தின் ஒத்த குணாம்சத்தை புலப்படுத்திக் காட்டுகிறது. லெனினியத்தை எதிர்த்த வெளிப்படையான தாக்குதல்களில் ஏற்பட்ட தோல்வியினால் துவண்ட முதலாளித்துவ சித்தாந்தம், வேறுபட்ட புரட்சிகரமான குட்டி முதலாளித்துவக் கருத்தமைவுகளில் தன்னைத்தானே அதிகரித்த அளவில் உருமாற்றிக் கொள்கிறது.

## 3. லெனினியமும் சமூக சீர்த்திருத்தவாதத் தத்துவமும்

இரண்டாவது அகிலத்தின் காலத்திலிருந்து சமூக சீர்திருத்த வாதம் கீழ்நோக்கிப் போக ஆரம்பித்தது. முதல் உலகப் போரின் துவக்கத்தில் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பற்றிப் பேசும் போது, அவர்கள் சமூக இனவெறியைத் தழுவிக் கொண்ட பின்னர் அதன் தலைவர்கள் மார்க்சின் தத்துவார்த்தப் பொருள் முதல் வாதத்தையும் புரட்சிகர இயக்கத்தையும் முழுமையாக நிராகரித்து விட்டனர். முதல், இரண்டாவது உலகப் போர்களுக்கிடையேயான கால கட்டத்தின் சமூக சீர்திருத்த வாதத்தினது சோக வரலாறு அனைவருமறிந்ததே. வெய்மர் குடியரசின் சமூக சீர்திருத்தவாத ஆட்சியாளர்கள் தங்களது வர்க்க சமரசம், ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை பாதுக்காக்க மறுப்பது ஆகிய கொள்கை நிலையுடன் நாஜிகள் அதிகாரத்திற்கு வருவதற்கான பாதையை வகுத்துக் கொடுத்தனர். பிரான்ஸ், இத்தாலி நாடுகளிலுள்ள வலது சாரி சோஷலிஸ்டுகள் பிரிட்டனின் தொழிற்கட்சி போன்றவை அந்த நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய, முதலாளிகளின் மிகவும் வசதியான சக்திகளாகத் திகழ்ந்து முதலாளிகள் இட்ட கட்டளைகளை சிரமேற் தாங்கி பணிவுடன் நிறைவேற்றின.

1977ல் மார்க்ஸுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விசேடக் கருத்தரங்கு ட்ரையரில் (மேற்கு ஜெர்மனி) ஏற்பாடு செய்யப்பட்டது. கருத்தரங்கின் மூலப்பொருள் "சுதந்திரமும் சோஷலிசமும்", விஞ்ஞான சோஷலிசத்தையும் இயக்கவியல் பொருள் முதல் வாதத்தையும் தோற்றுவித்த மூலவரின் கருத்துக்களை முற்றாக மறுப்பதற்கு ஒரு திரையாகப் பயன்பட்டது. சோஷலிச அகிலத்தின் தலைவரான வில்லி பிராண்ட் கருத்தரங்கில் கூறியதாவது; இன்று மார்க்சியத்தை ஒரு விசேட விஞ்ஞானம் எனப்பேசுவதென்றால், அதன் காலத்தில் காணக்கிடைத்துள்ள விஞ்ஞான சாதனையின் மகோன்னதத்தை ஒருவன் முழுமையாக மதித்துப் போற்றும்போது, அது பேசுகிறவனைக் குறைந்த அறிவுடையவனாக்கி விடுகிறது......அது (மார்க்சியம்—ஆசிரியர்) வியாக்கியானச் சண்டையில் மெல்ல மெல்ல அதன் வலிமையை இழந்து விட்டது, பல பத்தாண்டுகளுக்குப் பின் வரை, பகுதியாக வேறு சமூக வர்க்கங்களில் அது ஒரு மறு மலர்ச்சியைக் கண்டது, மூல விஞ்ஞானச் சித்தாந்தங்களின் உண்மையிலிருந்து பெருமளவுக்குத் தனித்து சுயேச்சைத் தன்மை கொண்டதாகி விட்டது." [31] சமூக சீர்திருத்த வாதத்தைப் பற்றி சமகாலத்தில் இந்தச் சுய மதிப்பீட்டில் மேலும் சேர்ப்பதற்கு எதுவுமே கிடையாது. மார்க்சியத்தை மறுப்பது, சமுதாயத்தின் பாட்டாளி வர்க்கமல்லாத பகுதியினரை நோக்கிய ஒரு தோற்றுவாய், மார்க்சியமல்லாத சித்தாந்தக் கோட்பாடுகளின் ஒரு நம்பிக்கை, போன்றவைகளே சமகாலத்திய சமூக சீர்திருத்த வாதத்தின் சமூக சித்தாந்த வேர்களாகும்.

மார்க்சியம் பற்றிய தங்களது எதிர்மறையான கணிப்பை நியாயப்படுத்துவதற்காக சமூக சீர்திருத்த வாதிகள் வழக்கமாக இரண்டு முக்கிய வாதங்களை முன் வைக்கிறார்கள். முதலாவது, சித்தாந்த ஒற்றுமைக்கான கோரிக்கை, உண்மையான சோஷலிஸ்டுகளின் சுதந்திரத்திற்கு, எதிரானது. என்பதாகும். இரண்டாவது, மக்கள்

வெவ்வேறு விதமானவர்களாக விருப்பதால், ஒரு பொதுவான உலகக் கண்ணோட்டத்தை வகுப்பதென்பது முடியாத காரியமாகும். இதனால், பொதுவான வரலாற்றுச் சட்டங்கள் பற்றி, விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் பற்றி, சித்தாந்த ஒற்றுமை, இன்னபிறவற்றைப் பற்றி பேச முடியாது.

பின்னர், சமகாலத்து சமூக சீர்திருத்த வாதத்தின் அடிப்படைத்தான் என்ன? அது பின் பற்றும் அரசியல், சமூக குறிக்கோள்கள் யாவை? இந்தக் கேள்விகளுக்கான பதில் வில்லி பிராண்ட்டினால் பட்டவர்த்தனமாக, நேர் நிகரற்ற முறையில், 1977ம் வருடம் நடைபெற்ற சோஷலிஸ்ட் அகிலத்தின் 13 வது காங்கிரஸில் "அகிலத்தின் எதிர்காலக் கடமைகள்" பற்றிய உரையில் தரப்பட்டது. "முதலாளித் துவத்தையும்......கம்யூனிஸ்ட் கூட்டமைவையும் எதிர்த்து குடிமக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு" சமூக ஜனநாயக வாதிகளின் சித்தாந்த அடிப்படையாகும் என்று அவர் கூறினார். "என்னைப் போன்றவர்கள் புதிய மனிதனை உருவாக்கும் காலாவதியாகிப் போன கற்பனை வாதத்தை வெகு காலத்திற்கு முன்னரே நிராகரித்து விட்டோம். நமது பணியும் நமது போராட்டமும் மனிதனும் மனிதகுலம் தொடர்ந்து வாழ்வதற்குத்தான்" [32] என அவர் குறிப்பிட்டார். இவ்வாறாக, அனைத்து வகை கூட்டமைவுகளையும் எதிர்த்த போராட்டம் புதியனவற்றின் ஒரு படைப்பல்ல; சாத்தியமான அனைத்து வழிகளிலும் பழையனவற்றின் சேமிப்பே. ("தொடர்ந்த வாழ்க்கை")—சமூக சீர்திருத்தவாதத்தின் பதாகையில் பொறிக்கப்பட்டிருப்பது இதுவே.

ஏகாதிபத்தியத்தையும், பாசிஸத்தையும் எதிர்த்த போராட்டத்தில், தொழிலாளர் கட்சிகளின் அனைத்து முயற்சிகளையும் ஒற்றுமைப்படுத்துவதற்கு உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தினால் எத்துணை காரியங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை நாமறிவோம். 1935-ம் ஆண்டு கம்யூனிஸ்ட் அகிலத்தின் 7 வது காங்கிரஸில் "நாஜி ஆக்கிரமிப்பும்"

நாஜிஸத்தை எதிர்த்து, தொழிலாளர்களது ஒற்றுமைக்கான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் கடமைகளும்'' என்ற பொருளில் ஜார்ஜ் டிமிட்ரோவ் உரையாற்றினார். சமூக சீர்திருத்த வாதத் தலைவர்களின் வர்க்க சமரஸக் கோட்பாடுகளின் காரணமாக தொழிலாளர்கள் பிளவுபட்டதினால் மட்டுமே நாஜிகள் அதிகாரத்திற்கு வர முடிந்தது என்பதை அவர் காட்டினார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் பெரும்பாலான சமூக சீர்திருத்தவாதத் தலைவர்கள், தாங்கள், தங்களது கோட்பாட்டுக்கு மார்க்சியத்தை சித்தாந்த அடிப்படையாகக் கருதவில்லை என பகிரங்கமாகவே கூறினர். போருக்குப் பின்னர் அமுலாக்கப்பட்ட ஆஸ்டிரிய சோஷலிஸ்ட் கட்சியின் திட்டத்திற்குப் பின்னணியிலிருந்தவர்களில் ஒருவரான பெண்டிக்ட் கவுட்ஸ்கி 1958-ல் எழுதியதாவது: "ஒரு மார்க்சியவாதியாலும், மார்க்சியத்தைப் பின்பற்றாத ஒரு நபராலும், அதே போல் ஒரு நாத்திகவாதியாலும், மத நம்பிக்கையுள்ள சோஷலிஸ்டினாலும் அனைவராலும் முழுமையாக ஒப்புக்கொள்ளப்படக்கூடிய ஒரு திட்டத்தை நாம் உருவாக்க விழைகிறோம்''[33] 1950 களிலும், 1960 களிலுமிருந்த "ஜனநாயக சோஷலிசத்தின்'' சித்தாந்த கர்த்தாக்கள் இத்தகைய சித்தாந்தக் கலவைகளை "சட்ட பூர்வமானவை'' என நியாயப்படுத்துவதற்கு கஷ்டப்பட்டு முயன்றனர். ஆனால் மார்க்சியத்தின் சர்வதேசச் செல்வாக்கைச் சிறுமைப்படுத்த எடுத்துக்கொண்ட இம்முயற்சிகள் எல்லாம், உலக சோஷலிசத்தின் வெற்றிகளது வரலாற்று உண்மையின் பின்னணியில்தான் மேற்கொள்ளப்பட்டன. சமூக சீர்திருத்தவாதிகளின் அனைத்து எதிர்ப்பு முயற்சிகளையும் மீறி மார்க்சியம் உலகெங்கணுமுள்ள முற்போக்கு மனித குலத்தின் பெரும்பகுதியினரது அனுதாபத்தையும் கவனத்தையும் ஈர்த்தது. 1970 களில், புதிய வரலாற்று சகாப்தத்தில் மார்க்சியத்தின் வளர்ச்சியில் ஒரு கட்டம் என்ற முறையில் மார்க்சிய லெனினியத்தின்பால் எத்தகைய

போக்கைக் கொள்வது என்ற பிரச்சினையில் சமூக சீர்திருத்த வாதிகள் அதிகரித்த அளவில் 'பல்டி' அடித்தனர்.

1977-ம் ஆண்டு ஒரு ஸ்பானிய சோஷலிஸ்ட் சஞ்சிகை "**மார்க்சியம் ஒரு வழிமுறை**" என்பது பற்றி ஒரு தலையங்கம் தீட்டியது. அதன் வாசகம்: வரலாற்றைக் கற்றறிவதற்கு மார்க்சியம் நமக்கு ஒரு ஆய்வியலாகும். இன்றையப் போராட்டத்தின் இலக்கையும், சோஷலிசத் திசைவழியின்பால் சமுதாயத்தைப் பயிற்றுவிப்பதற்கான இலக்கையும் தீர்மானிப்பதற்கு ஒரு சாதனம்"[34]. சமூக சீர்திருத்தவாதப் பத்திரிகைகளில் ஒரு "மார்க்சிய மறுமலர்ச்சியை"ச் சுட்டிக் காட்டும் இத்தகைய நிகழ்வுகள் அண்மை ஆண்டுகளில் அடிக்கடி நிகழ்கிறது. இருந்தாலும், இதை சமூக சீர்திருத்த வாதச் சித்தாந்தத்தில் ஒரு குணாம்ச ரீதியான மாற்றம் எனக் கருதுவது மிகப்பெரும் தவறாகும்.

அவர்களை மார்க்சியவாதிகள் என்றழைத்தால், இந்த மார்க்சியவாதிகளின் அறிக்கைகளை ஆழமாகப் பார்க்கும் போது, அவர்கள் 'மார்க்சியம்' என்று பட்டம் சூட்டுகின்றவற்றில் வழக்கமான பெர்ன்ஸ்டீயனிஸத்தைத்தான் காணலாம். ட்ரையர் கருத்தரங்கில் பிராண்ட் கூறியதாவது: "அண்மை ஆண்டுகளில் பல அம்சங்களில் பெர்ன்ஸ்டீனின் படைப்புக்களில் காணப்படும் தனிச்சிறப்பு பெற்ற நவீனத்துவத்தின்பால் கவனம் செலுத்தப்படுகிறது."[35] இப்பொழுது பல சமூக ஜனநாயக வாதிகள் தங்களது பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும், லெனினியத்தை மறுப்பதற்கு பெர்ன்ஸ்டீனால் வடிவமைக்கப்பட்ட ஒரு "செயல்பாட்டு ஆய்வியல்" என பெர்ன்ஸ்டீனின் சித்தாந்தத்தை மாற்றியமைக்க முயல்கின்றனர்.[36]

இங்கு லெனினியத்தின் பால் எடுக்கப்பட்ட நோக்குத்தான் பிரதானமானது. ருஷ்ய நாட்டில் நடந்தேறிய புரட்சியின் அனுபவம், சோவியத் யூனியனிலும், உலக சோஷலிச சமுதாயத்தின் சகோதர நாடுகளிலும் சோஷலிசம்

கட்டப்படுவது, இளம் தேசீய அரசாங்கங்கள் மற்றும் இன்னும் கூட காலனி நாடுகளாகவும், ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களாகவும் இருக்கின்ற மக்களின் நாட்டு விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுடன் சோஷலிச உலகம் நெருங்கி ஒன்று படுவது ஆகிய அனைத்தும், லெனினது கருத்துக்களின் உண்மையான சக்தியை, அவற்றின் ஜீவவலிமையை, வரலாற்று உண்மையைப் புலப்படுத்து கின்றன. இவை அனைத்தும், தற்போதைய மிகவும் வலிமை வாய்ந்த சித்தாந்த சக்தியாக இன்றைய லெனினியத்தை ஆக்கியுள்ளன. இந்த சக்திக்கு எதிராகத் தான் சமூக சீர் திருத்தவாதத் தலைவர்கள் தங்களது தாக்குதலைத் தொடுத் திருக்கிறார்கள்.

1918; 1919-ம் ஆண்டுகளில் கே. கவுட்ஸ்கி அக்டோபர் புரட்சியைப் பற்றி அவதூறு பொழிந்து எழுதியது. அல்லது கெடுபிடி யுத்த காலத்தில் வலதுசாரி சோஷலிஸ்டுகள் எழுதியது, பேசியது போன்று அல்லாமல் அவர்கள் காட்டுத் தனமாகவும், இழிமொழிகளைப் பயன் படுத்தியும் பேசுவது, எழுதுவதும், இப்பொழுதெல்லாம் குறைந்து விட்டது உண்மை தான். இதற்கும் மேலாக சமூக சீர்திருத்த வாதத்தின் சமகாலத்துச் சித்தாந்த கர்த்தாக்கள், லெனினி யத்துக்கும் உண்மையான சோஷலிசத்தின் வரலாற்று அனு பவத்திற்கும் அடிக்கடி புகழாரம் சூட்டுகின்றனர். இவ் வாறாக இடது தொழிற்கட்சிப் பத்திரிகையான **ட்ரிப்யூன்** எழுதியதாவது: "உலக வளர்ச்சியில், பொருளாதாரத்திலும் சரி, சமூக வளர்ச்சியிலும் சரி, 1917-ம் வருடத்திய ருஷ்யப் புரட்சியின் மகத்தான தாக்கத்தை யாரும் மறுக்க முடியாது. மறுக்கவும் கூடாது. என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு வழிகாட்டியாகச் செயல் படுவதற்கு, சோவியத் யூனியனில் எவ்வளவோ இருக்கின்றன."[37] இன்றைய உலகில் கம்யூனிஸத்தின் பாத்திரத்தையும்; இடத்தையும் பற்றி விவாதிக்கும் போது இத்தாலிய சோஷலிஸ்ட் ஜினோ பியான்கோ கூறியதாவது: கம்யூனிஸம் லெனினோடு

துவங்கியது. எனவே ஸ்தாபன அமைப்பின் அடிப்டையாக விருந்த லெனினியத்தின் தொலை நோக்குக்கும், தனிச் சிறப்புப் பண்புகளுக்கும் என்ன நிகழும் என ஒருவன் தன்னைத்தானே கேட்கலாம். ......ஐரோப்பியக் கம்யூனிஸ்டு களது இந்தக் கட்சிகளது மாற்றம்.''[38] லெனினியத்தின் முக்கியத்துவம் பற்றிய இந்த அங்கீகாரம் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இப்பொழுது அதன் சமூக சீர்திருத்தவாத எதிரிகள் கூட, எப்பொழுதும் போலவே உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் லெனினது கருத்துக்களை நடைமுறைப் படுத்தி வரு கிறது; இன்று கம்யூனிஸ்ட் கட்சிகளது நடவடிக்கைகளுக்கு லெனினது தீர்க்க தரிசனங்கள் அடிப்படையாக உள்ளன என்ற உண்மையை மறுக்க மாட்டார்கள். இந்த அறிக்கை களில் தொக்கி நிற்கும் பொருள் அவற்றின் பதப்பிரயோகத் திலிருந்து மாறுபட்டதாகும். லெனினியத்தின்பால் இந்தத் தலை தாழ்த்தலும், துர்ப்பணப் பணிகளும், சமூக சீர்திருத்த வாதிகள், ஏற்கனவே கம்யூனிஸ்ட் இயக்கத்தில் உள்ள கருத்து வேறுபாடுகளை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கு உதவி அதனால் சில கம்யூனிஸ்ட் கட்சிகள் லெனினியத்திலிருந்து துண்டு முறித்துக் கொண்டதைக் கண் கூடாக்கின. இது தொடர்பாக பியாங்கோ கூறுவதாவது: ''கம்யூனிஸச் சித்தாந்தம் துண்டு துக்காணிகளாக விழும் போது, ஈரோ கம்யூனிஸ திருத்தல்வாதத்தின் மலர்ச்சி, ஜனநாயக சோஷ லிசத்தின் வளர்ந்தோங்கும் வலிமையையும், அதிகரித்த அளவில் அதன் ஈர்த்திழுக்கும் சக்தியையும் காட்டுகிறது.''[39]

இத்தகைய அறிக்கைகள் பல்வேறு நாடுகளிலுமுள்ள சமூக சீர்திருத்த வாதப் பிரசுரங்களில் அடிக்கடி காணக் கிடைப்பதாகும். ஒரு மேற்கோளாக இடது தொழிற் கட்சியின் உறுப்பினர் பென்னர் பிராக்வே ட்ரிப்யூனில் எழுதி யதைப் பார்ப்போம்: சோவியத் யூனியனில் ஒரு முனைாப் பான விமர்சனம் அடிக்கடி அங்கு நடந்த புரட்சி பற்றிய சித்தாந்தப் பகைமையை அடிப்படையாகக் கொண்டே உள்ளது......ஆனால் அந்தப் புரட்சி முதலாளித்துவத்திற்கு

முடிவு கட்டிவிட்டது. அனைத்துப் பொருள் உற்பத்தியும் மக்களுக்குச் சொந்தமாகிவிட்டது. அத்துடன் பழையகால ஆரம்பகாலச் சமுதாயத்திலிருந்து, ஒரு நவீன விஞ்ஞானத் தோற்றுவாயைக் கொண்ட சமுதாயத்துக்கு மாற்றம் ஏற்படுத்தும் அற்புதமானதொரு சாதனையைச் சாதித்துக் காட்டியிருக்கிறது.'' மீண்டும் இங்கு தீர்க்கமானதொரு கணிப்புக்கான அறைகூவலும் பின்னர் இவற்றை வெளிக் கொணரும் உண்மைகளும் காணக்கிடைக்கின்றன. அடுத்து என்ன வரும்? இந்த முடிவுதான். ''சோவியத் யூனியன் ஒரு ஜனநாயக சோஷலிச சமுதாய அமைப்பு அல்ல''[40] இத்தகைய சம்பவங்களின் எண்ணிக்கையை எத்தனை மடங்காக வேண்டுமானாலும் பெருக்கிக் கொள்ளலாம்.

தொகுத்துக் கூறுவதென்றால் 20-ம் நூற்றாண்டின் சமூக சீர்திருத்தவாதத்தின் பொதுவான சித்தாந்த ரீதியான மலர்ச்சி மூன்று காலகட்டங்களைக் கொண்டதாகும்—ஆரம்பப் பல பத்தாண்டுகளில், பெர்ன்ஸ்டீன், கே. கவுட்ஸ்கி ஆகியோரின் வலதுசாரி திருத்தல்வாத ஆய்வியல்கள்; 1940 களிலும், 1950களிலும் மார்க்சியத்தை முற்றிலுமாக மறுத்தல் (பெனிடிக்ட், கவுட்ஸ்கி, லயோன்பிளம், குர்ட் ஷீமாச்சர், மற்றவர்கள்) 1960களிலிருந்து, பெரும்பாலான ஐரோப்பிய சமூக சீர்திருத்தவாதக் கட்சிகளின் சித்தாந்தத்தில் லெனினியத்தையும், உண்மையான சோஷலிசத்தையும் விமர்சிக்கிற ஒரு மார்க்சிய ''மறுமலர்ச்சி'' இயக்கம். இந்த அணுகும் முறையை எடுத்துக் கொண்டு வரலாற்றினால் எப்பொழுதோ புதைக்கப்பட்டுவிட்ட பெர்ன்ஸ்டீனின் கருத்துக்களுக்கு அவர்கள் ஒத்தடம் கொடுக்கிறார்கள். மார்க்ஸை ஒரு மனிதத்துவவாதியாக்கி, லெனினிடமிருந்தும், லெனினியத்திடமிருந்தும் வேறுபடுத்தும் முதலாளித்துவ மார்க்சிய இயல் முன்வைத்த சித்தாந்தங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.

மேலே கூறப்பட்ட அனைத்தும் சோஷலிச சீர்திருத்தவாதச் சித்தாந்தத்தின்பால் மார்க்சிய-லெனினிய நோக்கின் சிக்கல் நிறைந்த இயல்புபற்றி ஒரு கருத்தை வழங்குகின்றன.

சமூக ஜனநாயகக் கட்சிகள் இன்றும்கூட கணிசமான அளவிலான உழைக்கும் மக்களை எல்லாவற்றிற்கும் மேலாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினரையும் கொண்டிருக்கின்றன என்பதை ஒரு பொழுதும், ஒரு கணநேரம்கூட லெனினியக் கம்யூனிஸ்ட்கள் மறக்கமாட்டார்கள். எனவேதான் சமூக ஜனநாயகவாதிகளுடனான அரசியல் தொடர்புகளை கம்யூனிஸ்டுகள் நிராகரிப்பதில்லை. அதுமட்டுமல்லாமல், முதலாளித்துவத்திற்கு பகிரங்கமாக வக்காலத்து வாங்குபவர்களை எதிர்த்த போராட்டத்தில் கம்யூனிஸ்ட்களுக்கும், சோஷலிஸ்டுகளுக்குமிடையே ஒரு நடவடிக்கைக்கான ஒற்றுமையை நோக்கி சாத்தியமான அனைத்து வழிகளையும் மேற்கொண்டு பாடுபடுகிறார்கள். அதே நேரத்தில் சித்தாந்தம் மற்றும் தத்துவத்தின்பால்பட்ட விஷயங்களில் எந்தவித சமரஸமும் திட்டவட்டமாகக் கிடையாது. அந்தக் கேள்விக்கே இடமில்லை. இதைப் பொறுத்தமட்டில் மார்க்சிய-லெனினியவாதிகள் சமூக சீர்திருத்த வாதத்தை எதிர்த்து இடைவிடாத போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். தற்சமயம் குட்டி முதலாளித்துவச் சித்தாந்தத்தின் ஒரு வடிவமாகத் தோன்றும் சமூக சீர்திருத்தவாதம் முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஆளும் வர்க்கங்களினால் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பிளவுபடுத்தப் பயன்படுத்தப்படுகிறது. ஆளும் வர்க்கத்தினர் தொழிலாளி வர்க்கத்தினரிடமே தங்களது சொந்த வர்க்கக் கோட்பாட்டைக் கொண்டு சென்று அவர்களை தங்களது சொந்த சித்தாந்த செல்வாக்குக்குட்படுத்துகின்றனர்.

சோவியத் யூனியனிலும் இதர நாடுகளிலும் உள்ள மார்க்சிய-லெனினியவாதிகள் சமூக சீர்திருத்தவாதத்தின் தத்துவார்த்தக் கோட்பாடுகளை தொடர்ந்து விமர்சித்து வருகிறார்கள்.

கம்யூனிஸ்ட் இயக்கம் பின்லாந்து, பெல்ஜியம், ஜப்பான், கிரேட் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் உள்ளிட்ட பல நாடு

களின் சோஷலிஸ்ட் கட்சிகளுடனும், சமூக ஜனநாயகக் கட்சிகளுடனும் குறிப்பிடத்தக்க முறையில் தனது தொடர்பு களை விரிவுபடுத்தியுள்ளது என சோவியத் யூனியன் கம் யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸில் குறிப்பிடப் பட்டது. 1979-ம் ஆண்டில் ஒரு சோஷலிஸ்ட் அகிலத்தின் தூதுக்குழு மாஸ்கோவுக்கு வருகை தந்து, சோவியத் யூனியன் கம் யூனிஸ்ட் கட்சித் தலைமையுடன், சமாதானம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்தில் நடவடிக்கை ஒற்றுமை காண்பதற்காக ஆக்கபூர்வமான பேச்சு வார்த்தை களை நடத்தியது.

சில சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர்கள், குறிப்பாக அரசுகட்டிலில் அமர்ந்திருக்கும் தலைவர்கள், ஆயுதங்களின் போட்டியையும் அதீத ஏகாதிபத்திய பிற்போக்குச் சக்தி களையும் எதிர்த்த போராட்டத்தில் மிகவும் வல்லமை வாய்ந்த முன்னணிப் படையோடு, சோஷலிசம் மற்றும் முதலாளித்துவ அமைப்புக்களுக்கிடையே சமாதானத்திற்கும், சமாதான ரீதியான பொருளாதாரப் போட்டிக்கும் பாடுபடும் சக்தி மிக்க முன்னணிப் படையோடு தொடர்புகளை வலுப் படுத்த வழிமுறைகளைத் தேடுகிறார்கள்.

இவ்வாறாக சமகாலத்து சமூக சீர்திருத்த வாதத்தின் சித் தாந்த நிலைபாடுகளை வரையறுத்து ஆஸ்டிரிய சோஷலிஸ்ட் கட்சித் தலைவரும், ஆஸ்டிரியக் குடியரசின் சான்ஸலருமான ப்ருனோ கிரெய்ஸ்கி 1978-ம் ஆண்டு ''சமூக ஜனநாயகமே இலட்சியம்'' என்றதலைப்பில் எழுதிய கட்டுரையில்அறிவித்த தாவது: ''......சமுதாயத்தை விரிந்த அளவுக்கு ஜனநாயகப் படுத்தும் இந்தப் பரிணாமம், சமூக ஜனநாயகத்தின் ஈடேற்றம்......என்றுமே முடிவடையாத ஒன்றாகும்.''[41] ஆனால் இன்று வரை சமூக ஜனநாயகம் என்றால் (அல்லது ஜனநாயக சோஷலசம்) என்ன என்று தெளிவாகத் தெரிய வில்லை. ''மார்க்ஸ் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை வருணித்து விளக்கம் தருவதற்கான ஒரு

முயற்சியை மேற்கொண்டார்'' என்றார் கிரெய்ஸ்கி.[42] இது ஒருபுறமிருக்க ''மார்க்ஸோ எங்கெல்ஸோ அல்லது ஆரம்ப காலத்து லெனினோ அந்த விஷயத்தில் உலகத்தில் ருஷ்யா ஒரு முதல் சோஷலிஸ்ட் நாடாக மலரும் என்று கற்பனை செய்து பார்க்கவில்லை. உண்மையில் இன்று வரை அவ்வாறு ஆகவில்லை.''[43] நவீன முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்குமிடையே வேறுபாடு ஏதும் கிடையாது; வடிவங்களில் தான் வித்தியாசமே தவிர உள்ளடக்கத்தில் இல்லை. இத்தகைய சுருக்கம்தான் கிரெய்ஸ்கியின் கருத்துக்கள்.

கிரெய்ஸ்கியின் கருத்துக்களை, இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சியின் தேசீயச் செயலாளரும், சோஷலிஸ்ட் அகிலத்தின் உபதலைவருமான பெட்டினோ கிராஸ்கி எதிரொலித்தார். சோஷலிசம் அடிப்படையிலேயே பன்மைவாதமாயுள்ளது என்றார் அவர். லெனினியத்துக்கு முரணாக (எனவே மார்க்சிசத்துக்கு முரணாக) கம்யூனிஸ சமூக மாற்றத்தின் முதல் வளர்ச்சிப்படியான சோஷலிசத்தின் அம்சங்கள் பற்றி ஒரு தெளிவான வரையறுப்பைக் கொண்ட லெனினியத்துக்கு முரணாக, சோஷலிசச் சிந்தனையின் வரலாற்றில் ஒரு சீரான கருத்தமைவு கிடையாது என கிராக்ஸி வாதிக்கிறார். மார்க்ஸ், லெனின் தத்துவத்தின் அடிப்படைகளான கூட்டமைவையும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும் அவர் நிராகரிக்கிறார். இவற்றிற்கு பதிலாக அவர் சமூக உறவுகளில் பன்மைவாதத்தையும், ஸ்தாபனப் படுத்தல்களையும் ஆதரிக்கிறார். இதிலிருந்தும் கூட அவர் லெனினியத்திற்கும், விஞ்ஞானக் கம்யூனிஸத்திற்கும் எதிராக விஷம் தோய்ந்த தாக்குதல் கணைகளை ஏவுகிறார். ''லெனினியமும் பன்மைவாதமும் நேர் எதிரானவை. ஒன்று வாழ்ந்தால் மற்றொன்று சாகிறது'' என அவர் எழுதுகிறார்.[44]

இவ்வாறுதான் சமூக சீர்திருத்தவாதத்தின் லட்சியத்தை கிராக்ஸி வகுத்துத் தருகிறார்: ''நாம் பன்மை வாதத்தை

நோக்கிப் புறப்பட விரும்பினால் லெனினியம் சுட்டிக்காட்டும் திசைக்கு எதிர் திசையில் செல்ல வேண்டும்: சாத்தியமான அளவு பொருளாதார, அரசியல், கலாசார சக்தியைப் பரப்ப வேண்டும்.''[45]

சமூக சீர்திருத்த வாதத்தின் இதர அரசியல் சித்தாந்த தலைவர்களின் உரைகளிலும் எழுத்துக்களிலும் இதே போன்று சில உள்ளன. அவர்கள் அனைவரும் ஒரு வழியிலோ அல்லது மற்றொரு வழியிலோ: சோஷலிசத்திற்கான பாதையை வரையறுப்பதில் சோவியத் யூனியனும், அக்டோபர் புரட்சியும் பெற்ற அனுபவங்களை நிராகரிக்கின்றனர். இந்த ''சோஷலிஸ்டுகள்'' கூறுவதில் சோஷலிசத்தின் கருத்துப்பாங்கை பெருமளவுக்கு இழந்து விட்டனர். கம்யூனிஸக் கருத்துப் பாங்கைப் பொறுத்தமட்டில் அவற்றில் எதுவும் கிடையவே கிடையாது. இவ்வாறாக மார்க்சின் கருத்துக்களை அவர்கள் முற்றாக மறுத்தளிப்பதையே நாம் காண்கிறோம்.

தற்போதைய கட்டத்தில், சமூக சீர்திருத்தவாதக் கட்சிகளின் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் பயன்படுத்தி தங்களது நாடுகளில் ஏகாதிபத்திய முதலாளித்துவம் தொழிலாளி வர்க்க இயக்கங்களில் சமூகப் பரிமாணங்களில் தனது சொந்தக் கருத்துக்களை திணிக்க விழைகிறது. அதற்கேற்ப அதனால் தரப்படும் ஒரு சமூக ஒழுங்குமுறையை ஸ்தாபித்து நிறைவேற்றுவதே சமூக சீர்திருத்தவாதத்தின் பாத்திரம் என்பது அதிகரித்த அளவில் உள்ளங்கை நெல்லிக் கனியாகிவிட்டது. எனவேதான் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் கீழ்க்கண்டவற்றைச் சுட்டிக் காட்டியது: விஞ்ஞான கம்யூனிஸத்திற்கும் சமூக ஜனநாயக வாதிகளின் சீர்திருத்தவாதத்துக்குமிடையே. சித்தாந்த ஒருங்கிணைப்பு என்ற கேள்விக்கே இடமில்லை, இன்னும் கூட சமூக ஜனநாயக வாதிகளில் மிகப்பெரும் பாலோர் தங்களது முழுமையான நடவடிக்கைகளுக்கும், கம்யூனிஸ எதிர்ப்பையும் சோவியத் எதிர்ப்பையும் அடிப்

படையாகக் கொண்டிருக்கிறார்கள்.''[46] இவையனைத்தையும் கம்யூனிஸ்டுகள் தீர்மானமான உறுதியுடன் எதிர்த்து முறியடிக்க வேண்டும்; ஏனென்றால் அவை பிற்போக்காளர் களின் கரங்களையே பலப்படுத்தும் என காங்கிரஸ் வலியுறுத் தியது.

அட்லாண்டிக் ஒருமைப்பாடும் ஆயுத உற்பத்திப் போட்டியும் என்றழைக்கப்பட்ட வலது சாரி சமூக ஜனநாயக வாதிகளின், கூட்டத்தில் ஏகாதிபத்திய வாதிகளுடன் சமரஸம் செய்து கொள்ள வேண்டும் என்று வகுக்கப்பட்ட கோட்பாட்டை கம்யூனிஸ்டுகள் மறுக்கின்றனர். அதே நேரத்தில்'' சமாதானத்திற்கும், ஜனநாயகத்திற்கும் பயன் படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் பூரண ஆதரவு தருமாறு'' சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது காங்கிரஸ் வலியுறுத்தியது. ''சர்வதேச நிலையில் இன்று ஏற்பட்டுள்ள சிக்கலான நிலமைகளைக் கருத்தில் கொண்டு, சமூக ஜனநாயக வாதிகள், தொழிற் சங்கங்கள், மதப்பற்றுக் கொண்ட வட்டாரங்கள், மற்றும் யுத்தம் வருவதைத் தடுத்து சமாதானத்தைப் பலப்படுத்துவதில் நாட்டம் கொண்டுள்ள அனைத்து ஜனநாயக, சமாதானத்தை நேசிக்கும் சக்திகளுடன் ஒத்துழைப்புக் கொள்வதற்கு நாங்கள் முக்கியத்துவம் தருகிறோம்.''[47] என்று காங்கிரஸ் கூறியது. மார்க்சிய—லெனினியச் சித்தாந்தத்தை தனது நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகக் கொண்டு உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் எப்பொழுதுமே இது சம்பந்தமாக நல்லெண்ணத்தைத் தெரிவித்து முன் முயற்சிகளை எடுத்துக் கொள்கிறது.

இருந்தாலும் வலதுசாரி சமூக ஜனநாயக வாதிகளின் சித்தாந்த அடிப்படைகளைக் கம்யூனிஸ்டுகள் கூர்மையாக விமர்சித்தனர். அது சீர்திருத்தவாதத் தன்மையைக் கொண்டது. ஏகாதிபத்தியத்துடன் சமரஸம் செய்து கொள் ...லலது முதலாளித்துவத்தினிடம் தொழிலாளி

வர்க்கத்தின் சித்தாந்தத்தையே மண்டியிடச் செய்வதை நோக்கமாகக் கொண்டது எனக் கண்டித்தனர். சமூக சீர்திருத்த வாதத்தின் சித்தாந்த நிலைபாடு லெனினது படைப்புக்களில் விமர்சிக்கப்பட்டிருந்தன. இந்தப் பிரச்சினையில் அவரது நிலைபாடு இன்றைய நமது சகாப்தத்தில் சமூக சிர்திருத்தவாதச் சித்தாந்தத்தை எதிர்த்த மார்க்சிய லெனினிய வாதிகளின் போராட்டம் முழுவதிற்கும் ஒரு வழிகாட்டியாய் அமைந்துள்ளது.

## 4. லெனினியமும் நவீன திருத்தல்வாதமும்

மார்க்சியத் தத்துவச் சிந்தனையின் திருத்தல்வாதச் சீர் குலைவுகள், 20ம் நூற்றாண்டில் தொடர்ச்சியாக லெனினிய வாதிகளால் விமர்சிக்கப்பட்டன. தனது சித்தாந்தப் பணிகளின் துவக்கத்தில் ஈ. பிரென்ஸ்டீன், மற்றும் அவரைப் பின்பற்றியவர்கள் முன்வைத்த நியோ—கேண்டியன் மார்க்சியத் திரிபு வாதத்தை அம்பலப்படுத்துவதில் லெனின் தனது அதிகபட்ச பலத்தையும் சக்தியையும் அர்ப்பணித்தார். இந்தச் சமயத்தில் உலகம் ஏகாதிபத்திய, பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தில் நுழைந்த காலத்தில், மார்க்ஸ், எங்கெல்ஸ் கோட்ப்பாட்டின் உண்மையான புரட்சிகரத் தாத்பரியத்தை ஸ்தாபிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. லோகாயுத உலகு பற்றிய அக்கோட்பாட்டின் பொருளை, அதன் வளர்ச்சி பற்றிய திட்பமான சட்டங்கள் பற்றி, இரண்டாவது அகிலத்தில் சமூக சீர்திருத்தவாத சந்தர்ப்பவாத இலக்குகளுக்கும், உத்திகளுக்கும் அடிப்படையை வழங்கிய பெர்ன்ஸ்டீயனிஸ சித்தாந்தங்களின் நுணுக்கமான பலபட்டரைத் தன்மைகளை நிராகரிப்பதற்கும் அதன் உண்மையான தாத்பரியத்தை ஸ்தாபிக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

பின்னர், 1905—1907ம் வருடத்திய முதல் ருஷ்யப் புரட்சி தோல்வியைத் தழுவியதின் பின் லெனின் தனது

பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும் என்ற நூலில் ''இரண்டாவது அலை'' திருத்தல் வாதம் பற்றி விரிவான ஸ்தூலமான மதிப்பீட்டை வழங்கினார். இந்த இரண்டாவது அலை 'மேக்' தத்துவத்தின் அகவயப் பட்ட கருத்து முதல்வாத நிலைபாட்டிலிருந்து மார்க்சியக் கருத்துக்களைத் திருத்த முயன்றது. உலகத்தை நடை முறையில் புனர் அமைக்கும் பணியில் மனித அறிவாற்றலின் தீவிரப் பாத்திரம் பற்றிய மார்க்சின் கருத்துக்களின் பதாகையை லெனின் உயர்த்திப் பிடித்ததோடு அக்கருத்துக் களை மேலும் வளர்த்தார். தத்துவார்த்த அறிவாற்றலின் கட்சி சார்பு, வர்க்க குணாம்சத்தையும் சமூக நடை முறையுடனுள்ள அதன் ஒற்றுமையையும் வெளிப்படுத்திக் காட்டினார்.

மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி வாகை சூடியபின், கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிநடத்தப் பட்ட சோவியத் மக்கள் ஒரு சோஷலிச சமுதாயத்தை அமைக்கும் பணியை மேற் கொண்டபின் சர்வதேச மார்க்சியச் சிந்தனையில் ''மூன்றாவது அலை'' திருத்தல் வாதம் முகிழ்த்தது. இந்தச் சமயத்தில் ஒரு புறம் ஹெகலைப் பின்பற்றியவர்களாலும் மற்றொரு புறம் புதிய நேர் காட்சி வாதிகளாலும் இரண்டு திசை வழிகளில் மார்க்சிய—லெனினியம் திருத்தப் பட்டது. லெனினும், தொடர்ந்து அவரைப் பின் பற்றியவர்களும் இரண்டு முனைகளிலிருந்து தத்துவார்த்தப் போராட்டத்தை நடத்தினார். மனித உணர்வுகளின் ஒரு ஆய்வு, சிந்தனையின் பலவடிவங்களது ஒரு விஞ்ஞானமே மார்க்சியத் தத்துவம் என வியாக்கி யானப் படுத்துவதற்கான முயற்சிகளை எதிர்த்து, ஒரு முனையில்; தத்துவத்தின் இயக்கவியல் உள்ளடக்கம் உலகத்தின் ஒருமித்த வளர்ச்சியினது அனைத்துப் பரிமாணங் களுக்கும் பொதுவானது என்பதை மறுத்து, பிரத்தியேக மான சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மட்டுமே அவசிய மானது என தத்துவத்தின் பாத்திரத்தைக் குறைப்பதற்கு முயன்ற நேர் காட்சி வாதிகளின் தத்துவத்தைத் சுருக்கும்

வாதத்தை எதிர்த்து ஒரு முனையில் 1930 களின் துவக்கத்தில் சோவியத் யூனியனிலும் இதர நாடுகளிலுமுள்ள மார்க்சிய—லெனினிய வாதிகள் விரிவான முறையில் லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவத்தின் பிரச்சினைகளது பிரதான அளவு பற்றிய தெளிவுக்காக, சர்வதேசத் திருத்தல் வாதத்தை எதிர்த்த போராட்டத்தின் அனைத்துக் கட்டங்களிலும் பகுப்பாய்வு செய்யத் துவங்கினர். எனினும் மேற்கொண்டு காணப்பட்ட வளர்ச்சிகள், திருத்தல் வாதத்தை எதிர்த்த போராட்டம் எந்தக்காரணம் கொண்டும் முடிவடைந்து விடவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டி விட்டன.

இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனியை எதிர்த்து வெற்றி வாகை சூடியபின் ஆசிய ஆப்பிரிக்க கண்டங்களில் பல நாடுகளது மக்களும் லத்தீன் அமெரிக்க நாடுகளது மக்களும் கூட சோஷலிசத்திற்கான போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். 1940களின் கடைசியிலும் 1950களின் துவக்கத்திலும் ஒரு உலக சோஷலிச அமைப்பு மலர்ந்தது. இதே கால கட்டம் தான் உலக காலனி ஆதிக்கத்தின் வீழ்ச்சியையும் கண்டது. ஆசிய, ஆப்பிரிக்க, ஓஷியானியா, அமெரிக்கக் கண்டத்தில் முன்பு உலக ஏகாதிபத்தியத்துக்குச் சொந்தமாயிருந்த நாடுகளில் இளம் தேசீய அரசாங்கங்கள் தோன்றின. சுயேச்சையான பொருளாதாரம், அரசியல் லௌகீக வளர்ச்சிக்காக ஒடுக்கப்பட்ட மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெகுஜனப் போராட்டமாக மலர்ந்தது. இந்த இளம் அரசுகளில் பல முதலாளித்துவமற்ற பாதையைத் தேர்ந்தெடுத்து ஒரு சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கான அடிப்படைகளைச் சமைப்பதற்குத் தங்களைப் பணித்துக் கொண்டன. இந்தப் பரிமாணங்கள் எல்லாம் கண் கூடானதை. அவை நடை முறைக்கு வருவதற்கு நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னரேயே தீர்க்க தரிசனத்துடன் உரைத்த மார்க்சிய—லெனினியத்தின் வரலாற்று உண்மைக்கு

பிண்ட பிரமாணமான சாட்சியமாகும்.சித்தாந்தத் துறையில் அவை மேலும் மேலும் வளர்ந்து உலக அரங்கில் லெனினியத்தை புகழ் கோபுரத்தின் உச்சிக்குக் கொண்டு சென்று அதன் அந்தஸ்தை உயர்த்தின. அதன் பட்டொளி வீசிப்பறக்கும் பதாகையின் கீழ் மனிதகுலத்தின் முற்போக்குப் பகுதிகள் மேலும் வலுப்பெற்றன. 20ம் நூற்றாண்டின் பிற்பாதியின் துவக்கத்தில், உலகச் சோஷலிசச் சிந்தனையின் சித்தாந்தப் போக்கில் வலுவான, மிகுந்த செல்வாக்கு வீச்சைக் கொண்டதாக லெனினியம் மலர்ந்து மணம் வீசியது. லெனினியக் கருத்துக்கள் பரவிப் படர்வதைத் தடுக்க கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சக்திகள் பயன்படுத்திய முறைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதில் இந்த உண்மை மந்தமாயிருக்கவில்லை. லெனினியத்தை எதிர்த்த பகிரங்கப் போராட்டத்தில் தோல்வி கண்ட விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் எதிரிகள் நெருக்கடி நேரங்களிலெல்லாம் வழக்கமாகப் பயன்படுத்தும் ஆயுதத்தை, திருத்தல் வாதத்தின் புதிய அலையை சிருஷ்டிப்பதைக் கையாண்டனர்.

1970 களின் இறுதியிலும் 1930 களின் துவக்கத்திலும் இந்தப் போக்கு தாற்காலிகமாக 'திருத்தல் வாதம்' எனச் சித்தரிக்கப்பட்டது உண்மைதான். இங்கு கவனிக்க வேண்டியதென்னவென்றால் மேலே குறிப்பிடப்பட்ட கருத்துக்களை பிரசாரம் செய்தவர்களனைவருமே 'திருத்தல் வாதிகள்' என்பதின் உள்ளார்ந்த பொருளில் செயல்பட்டதை நீண்ட காலத்திற்கு முன்பே நிறுத்திக் கொண்டனர். ஆரம்பத்தில் ஏதோ திருத்தங்களைச் செய்யப் போகிறோம். என "மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்தின் கட்டமைப்புக்குள்ளேயே செயல்பட்ட" அவர்கள் வெகு விரைவிலேயே மார்க்சிய—லெனினியத்திலிருந்து முற்றாகப் பின் வாங்கி விட்டனர் என்பதில் சந்தேகம் கிடையாது. உலகக் கம்யூனிஸ நடைமுறையோடும் உண்மையான சோஷலிசத்தோடும் துண்டு முறித்துக் கொண்ட அவர்கள் ஏகாதிபத்திய பிற்போக்குச் சக்திகளின் பக்கம் சாய்ந்து விட்டனர். இந்த

முன்னாள் திருத்தல் வாதிகளை இப்பொழுதெல்லாம், கம்யூனிஸ இயக்கத்தின் துரோகிகள், ஏகாதிபத்திய பிற் போக்குச் சக்திகளின் கையூட்டுப் பெறும் ஏஜண்டுகள் என்று தான் அழைக்க வேண்டும்.

இந்த நீரோட்டத்திலான கருத்துக்களை எதிர்த்து 1950 களின் மத்தியிலிருந்தே லெனினியம் ஒரு காரியார்த் தமான கருத்துப் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. எனவே இந்தப் போராட்டத்தை அதன் பிரதான திசைவழி களிலிருந்து ஆய்வியல் ரீதியில் பரிசீலிப்பது நல்லது.

1950 களிலும், 1960களிலும் தத்துவார்த்தத் திருத்தல் வாதத்தை எதிர்த்த மார்க்சிய-லெனினிய வாதிகளின் போராட்டத்தினது வளர்ச்சியைப் பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டும். அந்தக் காலத்தில் திருத்தல்வாதம் எளிதில் வேறுபடுத்திப் பார்ப்பதற்கேற்ற இரண்டு விதப் போக்கு களைக் காட்டியது. அதில் ஒன்றை ஹெகலிய வழி பல பட்டரை எனச்சித்தரிக்கலாம். இதன் மூலம் 1922-ல் ஜார்ஜ் லியூகாக்ஸ் எழுதிய **வரலாறும் வர்க்க உணர்வும்** என்ற நூலில் உள்ளது. பின்னர் இந்தப் புத்தகம் எண்ணற்ற பல மார்க்சிய லெனினிய வாதிகளின் கடுமையான விமர்சனத் துக்குள்ளாகியது. உலக மார்க்சியச் சிந்தனை வட்டத்தினால் நீண்ட காலம் மறக்கப்பட்ட அந்தப் புத்தகத்தின் ஆசிரிய ரால் (மேலே பார்க்கவும்)கூட அது விமர்சிக்கப்பட்டது. திடீரென, உலக சோஷலிச சமுதாயம் அமைக்கப்பட்ட சமயத்தில், உண்மையில் அதை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் அவரது கருத்துக்கள், சில மார்க்சியப் பகுதிகளில் லெனினியத்திற்கு ஒரு மாற்று எனச் செல்வாக்குப் பெற்றன. முதலாவதாக இந்தக் கருத்துக்கள் ஹங்கேரியில் ''பிடோப்பி வட்டத்தினரால்'' 1956-ம் வருடத்திய தீடீர் எதிர்ப் புரட்சிக்கு சிறிது காலம் முன்னர் பரப்பப்பட்டது. சமூக சிந்தனையின் வரலாற்றை, பொருள் முதல் வாதத்திற்கும் கருத்து முதல் வாதத்திற்குமிடையேயான இயக்கவியலுக்கும், வறட்டுக் கோட்பாட்டுக்கும் இடையிலான ஒரு போராட்டம்

அல்ல; மாறாக பகுத்தறிவுக்கும் பகுத்தறிவின்மைக்கும் எதிரான போராட்டமே என்று முன் வைக்க இந்தக் கருத்துக்கள் முடுக்கி விடப்பட்டன. அதாவது பகுத்தறிவை மறுப்பது. இதிலிருந்து, கம்யூனிஸ்டுகள் உழைக்கும் மக்களது இதயத்தைக் கவர்வதற்காகப் போராடும் முயற்சிகளை ஒரு கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் முழுக்க முழுக்க கல்வித்துறை நடவடிக்கைகளிலேயே ஈடுபட வேண்டும்; தத்துவத்தை அரசியலிலிருந்தும் நடைமுறையிலிருந்தும் பிரித்துவிட வேண்டும். இவ்வாறாக இவர்கள் சோஷலிசத்தையும் கம்யூனிஸத்தையும் சமைப்பதில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள்ள தலைமைப் பாத்திரத்தை நிராகரிக்குமாறு பிரசாரம் செய்தனர்.

பின்னர் 1960 களின் மத்தியில் சில திரிபுவாத எழுத்தாளர்கள் இந்தக் கருத்தமைவுக்கு சில கட்டுமானக் கருத்துக்களை வழங்கினர். கட்டுமான வாதம் (STRUCTURALISM) ஒரு நாகரீக கருத்து முதல்வாதத்தத்துவ நீரோட்டமாகும். அது உலகத்தின் நின்று நிலவும் தன்மை, அதன் வேகம், அது பற்றிய மனிதனது அறிவாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டுமான உறவுகளை வெளியே வைக்கிறது. இவ்வாறகா செக்கோஸ்லோவேகியத் திருத்தல்வாதி காரல் கோஸிக் தனது படாடோபமான **திண்ணியமானதின் இயக்கவியல்** என்ற நூலில் நடை முறையைப் புரிந்து கொள்வதில் அகவயப்பட்ட தன்மையுடன் கூடிய கருத்தை முன் வைத்தார். புறவயப்பட்ட தர்க்கவியல் நம்மைச் சுற்றியுள்ள பொருட்களின் ஒற்றுமை ஆகிய பிரச்சினைகளுக்குரிய தத்துவார்த்தப் பகுப்பாய்வை ஒதுக்கி விட்டார். தனது சக சிந்தனையாளர்களான மிகைலோ மார்க்கோவிக் (யூகோஸ்லேவியா), லெஸ்செக் கோல கோவ்ஸ்கி (போலந்து) மற்றும் பலரையும் போன்று, பொருள், அது நின்று நிலவுவதற்கான சட்டங்கள், இயக்கவியல் பிரதிபலிப்பின் இயல்பு, சமூக நடைமுறை, அறிவாற்றலின் ஒற்றுமை ஆகியவை பற்றிய முக்கியமான மார்க்ஸ், லெனின் கருத்துக்களை, கோஸிக்கும் திருத்தினார்.

மக அண்மைக் காலத்து மற்றுமொரு திருத்தல் வாதப் போக்கை மார்க்சிய-லெனினியவாதிகள் சுருக்கமான மனித இன ஆராய்ச்சி என பகுப்பாய்வு செய்துள்ளனர். இதைப் பிரதானமாக வெளிப்படுத்தியவர்கள், பிராக்ஸிஸ் சஞ்சிகை, கோர்க்குலா தத்துவார்த்தப் பள்ளி (யூகோஸ்லேவியா) ஆகியவற்றுடன் இணைந்த தத்துவஞானிகள் ஆவர். காஜோ பெட்ரோவிக், பிரெட்ராக் ப்ரானிக்கி, ரூடி சூபெக் போன்ற வர்கள் இந்தப் பள்ளியின் முக்கிய பிரதிநிதிகள். மார்க்சி யத்தின் வரலாற்றில், 19 ம் நூற்றாண்டிலும் கூட தெளி வாகத் தெரிந்த ஒன்றையொன்று எதிர்க்கும் இரண்டு போக்குகள் இருந்தன என்று அவர்கள் கூறினார்கள். அவற்றில் ஒன்று, மார்க்சின் ஆரம்ப காலப்படைப்புக்களில் வகுத்தளிக்கப்பட்ட ''இயல்பு வாதம்-மனிதத்துவம்'' அல்லது மனிதனது வாழ்க்கையின் சமூக நிலைமைகளைப் பற்றிய திறனாய்வு மற்றொன்று எங்கெல்ஸ், லெனின் படைப்புக்களுடன் இணைந்தது. விஞ்ஞான வாதம் அல்லது தத்துவத்தின் வளர்ச்சியை பொதுவாக விஞ்ஞான வளர்ச் சியின் சேமிப்போடு உறவு கொள்ளச் செய்யும் முயற்சி.

தத்துவம் ஒரு விஞ்ஞானம் அல்ல என்றில்லாமல் மானுட வாழ்க்கையின் நிலைமைகளை அவை எந்த லோகாயுத உறவு களால் தீர்மானிக்கப் படுவதாயிருந்தாலும் சரி விமர்சிப்பதே உண்மையின்பால் பட்டது என இந்தத் தத்துவஞானிகள் கருதுகிறார்கள். இதுவே ''இயல்பு வாதம்-மனிதத்துவம்'' ஆகும். மற்றொருபுறம் லெனினியம், தத்துவத்தை ஒரு விஞ்ஞான அணுகும் முறையுடன் மாற்றியமைப்பதால் (அதாவது விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளை அது ஆய்வு செய்வதால்) அதைப் ''பொய்மை'' என அவர்கள் கருது கிறார்கள். இந்த முயற்சியின் காரண காரியம் விஞ்ஞானக் கல்வித் துறைகளின் வீச்சிலிருந்து தத்துவத்தை அகற்றுவது; உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தை சித்தாந்த ரீதியாக நிராயுத பாணியாக்குவது; மார்க்ஸ்-லெனினால் வழங்கப்பட்டு கடந்த நூற்றாண்டில் வரலாற்று நடை முறை என்றும்

நெருப்புப் பிழம்பில் போட்டு சோதிக்கப்பட்ட சித்தாந்த அடிப்படையைத் தகர்த்தெறிவது போன்றவையேயாகும்.

1960 களில் இந்தக் கருத்தமைவுகள் பல்வேறு நாடுகளிலுமுள்ள பல திருத்தல் வாதத் தத்துவ ஞானிகளால் விவாதிக்கப்பட்டன. அவர்களது தலையாய, ஊரறிந்த நோக்கம் லெனினியக் கட்டத்தில் மார்க்சியத் தத்துவத்தைத் திசை திருப்பிக் குழப்பிப் பொய்ம்மைப் படுத்துவதே. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் லெனினியத்திற்குப் பதிலாக, முதலாளித்துவத் தோற்றுவாயின் இந்த அல்லது அந்த கருத்து முதல் வாதச் சித்தாந்தத்தை முன் வைத்து மெய்ம்மைப்படுத்துவதே. இத்தகைய முயற்சிகளில் மூன்று போதுமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டவை, அவற்றைத் தனிமைப் படுத்திப் பார்க்கலாம். லெனினியத்தைப் பற்றிய இந்தப் புத்தகங்களை எழுதியவர்கள்: மெஹ்மத்பிலிப் போவிக் (யூகோஸ்லேவியா), ரோகர் கரௌடி (பிரான்ஸ்) எர்னஸ்ட் பிஸ்ச்சர்; பிரான்ஸ் மாரெக் (ஆஸ்டிரியா).

**லெனின்-அவரது சிந்தனை பற்றிய தனிஆய்வு;** என்ற பிலிப்போவிக்கினால் எழுதப்பட்ட நூல் 1968-ல் வெளி வந்தது. அது வந்த உடனேயே, லெனினியத்தைப் பற்றி திண்ணிய வருணனைகளுடன் கூடிய முழுமையான நூல் என மேலை நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகளினால் போற்றிப் புகழப்பட்டது. அதில் என்ன தானிருக்கிறது? இதற்கு முன் வந்த மார்க்சிய இலக்கியங்களில் அனைத்திலும் வந்துள்ள லெனினைப் பற்றிய கணிப்புக்கள் முடிந்த முடிவைக் கொண்டவை; திரித்துக் கூறப்பட்டவை என்று கூறி பிலிப்போவிக் தனது நூலைத் துவங்குகிறார். 'திரித்துக் கூறப்பட்டது' என்பதற்கு அவர் லெனினியத்தைப் பற்றிய ஸ்டாலினது வரையறுப்பை மேற்கோள் காட்டுகிறார். "மார்க்சியத்தின் வளர்ச்சியில் லெனினியக்கட்டம்" 48 என்ற ஆய்வியல் அதன் பிற்சேர்க்கையானது. இதன் விளைவாக மார்க்சிய லெனினியத்தின் உறவு முறையும்

அதன் தொடர்ச்சியும், லெனினியத்தைப் பற்றிய மார்க்சியக் கணிப்புக்களில் 'முக்கிய தவறு' என்பதே பிலிப்போவிக்கின் கருத்து.

இவ்வாறானால் லெனினியத்தைப் பற்றிய பிலிப் போவிக்கின் கண்ணோட்டம் யாது? இது ''முழுமையாக மார்க்சியத்துக்குள்ளேயே இருக்கும் சித்தாந்த ஆய்வியலின் ஒரு விசேட அமைப்பு''[49] என்று அந்த நூல் கூறுகிறது. இந்த அமைப்பு, ஹெகலியனிஸம், அகவயவாதம், பொருள் முதல் வாதம் ஆகியவற்றின் ஒரு மொத்த அமைப்பாக மாறுகிறது. நூலில், இதற்கும் இயக்கவியல் மற்றும் பொருள் முதல் வாதத்தின் ஒற்றுமை பற்றிய மார்க்சியக் கருத்தமைவுக்கு மிடையே உள்ள உறவு ஹெகலின் தீர்க்கமான கருத்துக்கள், அகவயப்பட்ட சித்தாந்தங்களை (உதாரணம்: நரோடிஸம், மேக்கிஸம், சமூக இனவெறி வாதம் இன்னபிற) லெனின் அம்பலப்படுத்தியது போன்றவை பற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லை.

இந்த ஒரு தலைப்பட்சமான திட்டத்தில் தொடங்கி பிலிப்போவிக், மார்க்சியப் போக்குக்குள்ளேயேயான குழப் பத்தைச் சமாளிக்கப் போகிறோம் என்று சொன்ன அந்த ஸ்டாலின்மய லெனினியத்துக்கு வக்காலத்துவாங்கியதோடு லெனினையும், லெனினியத்தையும் வியாக்கியானப் படுத்து வதற்கான உரிமை எனக்கு மட்டுமே உண்டு என்றுஉரிமையும் கொண்டாடினார்.''[50] பிலிப்போவிக்கின் கருத்துப்படியான இந்தப் பொய்ம்மைப் படுத்தலை, லெனினது ஆழ்ந்த ஆராய்ச்சியின் பால்பட்ட, இயற்கை பற்றிய பியூபர் பேச்சியன் கண்ணோட்டத்திலிருந்து சமாளித்து வெற்றி கொள்ளலாம். இது லெனினது தத்துவார்த்த வளர்ச்சியின் முதற்படியையும், ஹெகலியனிஸத்தில் அவரது வளர்ச்சியின் இரண்டாவது படியை சித்தரிப்பதையும் ஒத்தது எனக் கூறப் பட்டது. லெனின் **பொருள் முதல் வாதமும் அனுபவ ரீதியான விமர்சனமும்** நூலை எழுதிய ஆண்டுகளை முதல் வளர்ச்சிப் படி என்றும் **தத்துவார்த்தக் குறிப்புப் புத்தகங்களை** எழுதிய

காலத்தை இரண்டாவது வளர்ச்சிப்படிஎன்றும் பிலிப்போவிக் வருணித்ததையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். முந்திய அத்தியாயங்களில் காணக்கிடைத்த உண்மைகளின் வெளிச் சத்திலிருந்து, இந்த முழுக்க முழுக்க ஒருதலைப் பட்சமான கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் தீவிர பரிசீலனைக்குரியவை அல்ல என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

இதே போன்ற மற்றொரு நூல் 1960களில் வெளிவந்தது ஆர். கரௌடி எழுதிய **லெனின்**[51] என்ற இந்த நூல் 1968-ம் ஆண்டு பாரிஸ் நகரில் பிரசுரிக்கப்பட்டது. ரோகர் கரௌடி பல ஆண்டுகள் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் அதன் மத்தியக் கமிட்டியிலும் உறுப்பினராகவிருந்தார். ஒரு குறிப் பிட்ட காலத்தில் அவர் திரும்பத் திரும்ப லெனினியக் கருத் துக்களின்பால் தனக்கிருந்த அர்ப்பணிப்புடன் கூடிய ஈடு பாட்டை வெளிப்படுத்தினார். 1949-ல் அவர் **லெனினும் தத்துவமும்** என்ற ஒரு கட்டுரை எழுதினார். இக்கட்டுரையில் அவர் ''லெனினியம் கம்யூனிஸ்டுகளின் ஒரு சித்தாந்த ஆயுதம். வர்க்கப் போராட்டத்தின் மாறியுள்ள நிலைமை களில் இந்த ஆயுதம் முனை மழுங்கவில்லை. மாறாக, தொழிலாளி வர்க்கத்தின் நாற்பது ஆண்டு போராட்டத்தின் போக்கில், வெற்றிகளின் போக்கில் கூர்மைப்பட்டுள்ளது. சித்தாந்தப் போர் அணியில் ஒரு தீர்மானமான உறுதியுடன் களத்திலிறங்கிப் போராடுமாறு நம்மை அனுமதித் துள்ளது''[52] என எழுதியுள்ளார். இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் ஒரு பகிரங்க லெனினிய எதிர்ப்பு நூலை வெளி யிட்டார். அதில் அவர் அனைவரும் அறிந்த உண்மைகளை, தனது ஒருதலைப் பட்சமான திட்டத்திற்கு பொருந்துமாறு தவறாகப் பயன்படுத்தினார். லெனினது தத்துவார்த்தப் படைப்பின் சத்தையும் சாரத்தையும் பொய்ம்மைப் படுத் தினார். லெனினைப் பற்றிய அவரது புத்தகம் மூன்று பாகங் களைக் கொண்டது. (1) லெனினது வாழ்க்கை வரலாறு. (2) லெனினியத்தைப் பற்றிய ஒரு கணிப்பு (3) லெனினது படைப்புக்களிலிருந்து தனியான மேற்கோள்கள்.

இந்நூலின் முதற் பகுதியிலேயே கரெளடி உண்மையை மறைக்கிறார். ஒரு சித்தாந்த கர்த்தா என்ற ரீதியில் லெனின் தத்துவார்த்தப் பிரச்சினைகளை அணுகவில்லை என்கிறார் சில தத்துவார்த்தப் பிரச்சினைகளை அவர் ஒரு நடைமுறை வாதியாக அரசியல் வாதியாக நின்று மாற்றிவிட்டார் என்பது கரெளடியின் வாதம். இதற்கு மேல் அவர் லெனினது தத்துவார்த்தப் படைப்பை மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறார்: 1894–1905–ருஷ்ய எதார்த்தத்தின் வரலாற்று அம்சங்களைப் பற்றிய ஒரு பகுப்பாய்வும், குட்டி முதலாளித்துவச் சித்தாந் தங்களைப் பற்றிய திறனாய்வும் இந் நடவடிக்கை, கவுட்ஸ்கி மற்றும் பிளெக்கனோவின் கருத்துக்களது முழுமையான செல் வாக்கு வீச்சினால்எடுக்கப்பட்டது. அடுத்து 1905–1914–1905ம் வருடத்திய புரட்சியின் படிப்பினைகளிலிருந்து பொதுமைப் படுத்தி, விஞ்ஞான விவரங்களின் ஒரு லோகாயுத வியாக் கியானம். எங்கெல்ஸின் கருத்துக்களும் கவுட்ஸ்கி மற்றும் பிளெக்கனோவிடனான முறிவும் இதற்கான சித்தாந்த அடிப் படையை உருவாக்கின. மூன்றாவது காலகட்டம்; 1914–1924– ஏகாதிபத்தியத்தின் பிரச்சினைகளைப் பற்றிய ஒரு பகுப் பாய்வு. சந்தர்ப்ப வாதத்தைப் பற்றிய ஒரு விமர்சனம். அரசாங்கம், ஜனநாயகம், மனிதத்துவம் ஆகியவைகளைப் பற்றிய ஒரு ஆய்வு லெனினது சிந்தனையின் இந்தக் கால கட்டம் ஹெகலின் கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டியது.

தொகுத்துப் பார்க்கும் போது லெனினதுதத்துவார்த்தப் பணியின் முதல் கால கட்டத்தில் கரெளடியின் கருத்துப்படி லெனின் ஒரு கவுட்ஸ்கீய வாதியாயிருக்கிறார். இரண்டாவதில் அவர் எங்கெல்ஸின் விஞ்ஞானியினது நிலையை மேற்கொள் கிறார். மூன்றாம் கால கட்டத்தில் அவர் ஒரு ஹெகலிய வாதி யாகிறார். எனவே லெனினியத்தின் சொந்த சுயேச்சையான உள்ளடக்கம் காற்றோடு காற்றாக ஒன்றுமில்லாமல் கரைந்து விடுகிறது.

கரெளடியின் கூற்றுக்கள் எங்ஙனம் தன்னிச்சையானவை; விருப்பத்திற்கேற்ப கூறப்பட்டவை என்பதை உண்மைகளின்

மூலம் மார்க்சியத் தத்துவஞானிகள் உள்ளங்கை நெல்லிக் கனியெனக் காட்டினர்.[58] தனது புரட்சிகர வாழ்க்கையின் துவக்கத்திலேயே லெனின் மார்க்சியத் தத்துவத்தின் புனி தத்தைக் காத்துக் கொண்டு, கவுட்ஸ்கி பிளெக்கனோவின் கருத்துக்களை பயனற்ற ஜடப் பொருளாக்கினார். சில சந் தர்ப்பங்களில் அவற்றை கடுமையாகவும், அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலும் விமர்சித்தார். கரௌடியின் கூற்றை ஒப்புக் கொண்டால் லெனினது தத்துவார்த்த வளர்ச் சியின் உச்சக்கட்டம் ஹெகலைப் பற்றிய அவரது ஆய்வாகும். இவ்வாய்வை அவர் 1914-ம் ஆண்டுக்கும் 1916-ம் ஆண்டுக்கு மிடையே மேற்கொண்டார் என கரௌடி கூறுகிறார். ஆனால் 19-ம் நூற்றாண்டின் இறுதியிலேயே லெனின், ஹெகலை முழுமையாக ஆய்ந்தறிந்து தனது படைப்புக்கள் பலவற்றில் அவரை மேற்கோள் காட்டியுள்ளார் என்பது அனைவரும் அறிந்ததாகும்.

கரௌடியின் நூல் அவரது மூளையில் உதித்து சொந்த மாக எழுதப்பட்டதல்ல. அந்நூலின் மையமான கருத்துக்கள், முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ, லெனினியலாளர்கள், லெனினியத்தைப் பொய்ம்மைப் படுத்தியதை, ஆதரிப்பன வாகும். சம காலத்து திருத்தல் வாதத்தின் லெனினிய எதிர்ப்பு நிலைபாடுகள் எங்ஙனம், மார்க்சிய லெனினிய விரோதிகளின் சித்தாந்தத்தோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கின்றன என்பதை அவரது நூல் மீண்டும் ஒரு முறை காட்டுகிறது.

லெனினைப் பற்றிய மூன்றாவது புத்தகம் "**லெனின் உண்மையில் என்ன சொன்னார்**" என்பது 1960 களின் திருத்தல்வாத இலக்கியத்தில் ஓரளவு சிறப்பான இடத்தைப் பெற்றது. 1969-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட இப்புத்தகத்தை ஆஸ்டிரிய நாட்டுத் திரிபு வாதிகளான ஈ. பிஷ்ச்சரும், எப். மாரெக்கும் எழுதியிருந்தார்கள். பிஷ்ச்சர்எழுதியதாவது: "லெனின் வாழ்ந்த காலத்தில், அவர் தலைமை தாங்கி

நடத்திய ருஷ்ய சமூக ஜனநாயகத்தின் (போல்ஷ்விக்குகள்) குழுவினரது கருத்தோட்டத்திற்கு லெனினியம் என்ற பெயர் தரப்பட்டது.''[54] இந்த ஆசிரியர் ஒன்று உண்மைகளை மறைக்க வேண்டும் அல்லது வேண்டுமென்றே அவற்றைத் திருத்திக் குழப்புகிறார் என்பதை இது தெளிவாகச் சுட்டிக் காட்டி விட்டது. முந்திய அத்தியாயங்களில் காட்டியது போல், லெனின் வாழ்ந்த வரை எந்தக் காலத்திலும், எந்த விடத்திலும் 'லெனினியம்' என்ற வார்த்தை பயன்படுத்தப் படவில்லை. இதற்கு முற்றிலும் மாறாக, 1920 களின் மத்தியில் லெனினது ஆதரவாளர்கள் ருஷ்ய நாட்டில் போல்ஷ்விக் கட்சியைக் கட்டியதோடல்லாமல், ஐரோப் பாவின் பல நாடுகளிலும் எண்ணற்ற பல புரட்சிக் குழுக் களைத் தோற்றுவித்தார்கள். 1918-ம் ஆண்டுக்கும் 1921-ம் ஆண்டுக்குமிடையே இந்தக் குழுக்கள் உலகின் பல நாடு களிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் எழுச்சியை ஏற்படுத்தின. அவை 1919-ம்ஆண்டின் துவக்கத்தில் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தை அமைத்தன. லெனினியம் என்ற நாமம் மார்க்சியச் சித்தாந்தத்தின் வளர்ச்சியில் பொதுவான நிலை பாட்டுக்குப் பயன் படுத்தப் பட்டதாகும். அதுவே அக்டோபர் புரட்சிக்கும், இன்றைய சகாப்தத்தின் உலகக் கம் யூனிஸ்ட் இயக்கம் முழுமைக்கும் சித்தாந்த அடிப்படை யாகும்.

லெனினைப் பற்றிய அவர்களது புத்தகத்தில் பிஷ்ச்சரும், மாரெக்கும் முன் வைத்த கருத்து, லெனின் ஒரு சித்தாந்த கர்த்தா என்பதை விட ஒரு நடைமுறை வாதியே என்ற கருத்து, முதலாளித்துவ சித்தாந்தத்திலிருந்து தொழிலாளர் களது இயக்கத்துக்குள் நுழைந்தது. இங்கு பயன்படுத்தப் படும் முக்கியமான வழிமுறை லெனின் என்ற அரசியல் வாதி யிடமிருந்து மார்க்ஸ் என்ற தத்துவ ஞானியைப் பிரித்துக் காட்டுவதே. ''சர்வதேச உழைக்கும் மனிதர்களது கழகத்தல் அவரது தலைமைப் பாத்திரம் ஒரு புறம் இருந்தாலும் எல்லா வற்றிற்கும் மேலாக மார்க்ஸ் ஒரு சித்தாந்த கர்த்தா. அவரது

சித்தாந்தப் படைப்புக்கள் ஒரு புறம் இருந்தாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, லெனின், புரட்சியின் இலக்குகளையும், உத்திகளையும் நிர்ணயிப்பவர்''[55] என இவ்வாசிரியர்கள் எழுதுகிறார்கள். 1920 களின் திருத்தல்வாதக் கருத்துக்களை இந்தக் குற்றச்சாட்டு ஆதரித்து நிற்பதை சுலபமாகப் பார்க்கலாம். இக் குற்றச்சாட்டு பரந்த அளவில் விஞ்ஞான ஆய்வுடன் கூடிய புரட்சிகர நடைமுறையை மறுத்தளிக்கும் சமூக சீர்திருத்த சந்தர்ப்பவாத வறட்டுக் கோட்பாட்டை திரும்பச் சொல்வதைத் தவிர வேறொன்றுமில்லை.

ருஷ்ய நாட்டின் எதார்த்தங்களுக்கேற்ப மார்க்சிய போதனைகளை லெனின் எங்ஙனம் பயன்படுத்தினார் என்பதை பிஷ்ச்சரும் மாரெக்கும் விரிவாக எழுதுகிறார்கள். ''பயன்படுத்தினார்'' என்ற வார்த்தையைக் குறித்துக் கொள்ளுங்கள். லெனினை எதிர்த்து சித்தாந்தப் போராட்டம் துவங்கிய காலத்திலிருந்து அவரது எதிரிகள் அனைவரும் லெனின் முன் வைத்த கருத்துக்கள் புதியன அல்ல; அவரது சொந்தக் கருத்துக்கள் அல்ல என்பதை நிரூபிக்க நியாய மற்ற, வழியில்லா வழிகளில் சென்றனர். லெனினியத்தின் உள்ளடக்கம் முழுக்க முழுக்க மற்றவர்களது கருத்துக்களின் (மார்க்ஸ், எங்கெல்ஸ் கவுட்ஸ்கி, பிளெக்கனோவ் போன்றோரின்) தழுவலோ அல்லது பயன்படுத்தலோதான் என அவர்கள் வியாக்கியானப்படுத்தினார்கள்.

லெனினியம், சமூகத்தைத் தீர்மானிப்பது பற்றிய மார்க்சிய ஆய்வைப் போதுமான அளவுக்குப் பயன்படுத்தவில்லை என்பதில் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்படுகிறது, என பிஷ்ச்சரும், மாரெக்கும் கூறுவது லெனினது கருத்துக்களின் தன்னிச்சையைக் சுட்டிக் காட்டுகிறது. இரண்டாவதாக பாட்டாளி வர்க்கப் புரட்சியில் விவசாயிகள் பங்கு கொள்வதை நியாயப்படுத்த முயல்கிறது. வரலாற்றில் அகவயப்பட்ட காரணியின் முக்கியத்துவத்தை ஒரு புதிய உயர் ரகத்திற்குக் கொண்டு செல்வதில் மார்க்சியக் கருத்துக்களின் வளர்ச்சியை உயர்த்தினார் என்பது உண்மைதான். ஆனால்

இது தீர்மான வாதத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகாது மாறாக அதை மிக ஆழமாகப் புரிந்து கொள்வதாகும். விவசாயப் பிரச்சினைக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் விவசாயிகள் பங்கு கொள்ளும் பிரச்சினைக்கும் லெனின் பெருமளவு கவனம் செலுத்தினார் என்பதும் உண்மைதான். நாம், ''லூயிஸ் போனபார்ட்டின் 18 வது ப்ரூமைரிலிருந்து'' மார்க்சின் புகழ் வாய்ந்த முன் மொழிதல்களை நினைவு கூர்வோம். பாட்டாளி வர்க்கம் தனது போராட்டத்தில் விவசாயிகளையும் ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்று அதில் கூறப்பட்டிருந்தது. இந்தக் கருத்துக்களைத்தான் மார்க்ஸ் சமூகப் புரட்சி பற்றிய தனது ஆய்வியலுக்கு அடிப்படையாகக் கொண்டார். வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் முகிழ்த்த போது ''விவசாயிகள் தங்களது இயல்பான நேச சக்தியை, நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்தில் தனது தலைமையை முதலாளித்துவ ஆட்சியைத் தகர்த்தெறியும் கடமையைக் கொண்ட தலைமையைக் கண்டு கொண்டார்கள்''[56] என மார்க்ஸ் எழுதினார். மார்க்சிய முன் மொழிதல்கள் லெனினால் அமுல் நடத்தப்பட்டது. 20-ம் நூற்றாண்டின் புரட்சிகளின் அனுபவங்களை மேற்கோள் காட்டி லெனினால் வளர்க்கப்பட்டது. (முக்கியமாக ருஷ்யப் புரட்சிதான். இதற்கும் மேலாக மற்றப் புரட்சிகள்)

பிஷ்ச்சர், மாரெக் ஆகியோரின் படைப்புக்கள் 1960களின் இதே போன்ற லெனினியத்தைத் தாக்கி எழுதப்பட்ட மற்றவர்களின் படைப்புக்களைப் போன்றே அவற்றின் ஆசிரியர்களுக்கு புகழையோ அல்லது படிப்போரின் உள்ளத்தைத்தொடும் விளைவையோ தரவில்லை. லெனினியத்தின் பால் உலக மக்கள் செலுத்திய கவனத்தைக் குறைப்பதில் அவர்கள் தோல்விகண்டனர். இதற்கு நேர்மாறாக, பல்வேறு நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களின் பரந்த பகுதியினரிடம் லெனினது கருத்துக்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் வளர்ந்தோங்கியது. இதற்குக் காரணம் எல்லாவற்றிற்கும் மேலாக, லெனினது சித்தாந்த ஆருடங்கள் நமது காலத்தின்

பிரத்தியேக வரலாற்றில் மேலும் மேலும் நடைமுறை உண்மைகளாகி விட்டதுதான். லெனினது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும், உலகெங்கணுமுள்ள சகோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகளும், தொழிலாளர் கட்சிகளும் சமாதானத்துக்காகவும், புவிக்கோளத்து மக்களது மகிழ்ச்சிக்காகவும் அனைத்து முற்போக்கு மனிதகுலத்தின் போராட்டத்தின் தொலைநோக்கான, தற்போதைய இலட்சியங்களைத் தீர்மானிக்கின்றன. திருத்தல்வாதிகள் எதை வேண்டுமென்றாலும் கூறட்டும். லெனினது சித்தாந்த மரபுரிமை மட்டும்தான் இன்றைய விஞ்ஞான ஆய்வியலாகும். மானுடத்தின் சரிநிகர்சமானமான சமூக உறவுகளை சோஷலிசத்தை, கம்யூனிஸத்தைப் போன்ற உறவுகளை கொண்டு வரவேண்டும் என்ற சாதாரண மக்களின் நம்பிக்கைகளையும் அவர்களது உண்மையான நல உரிமைகளையும் சிரமேற்தாங்கி அவற்றின் ஈடேற்றதுக்கு இடைவிடாது பாடுபடும் சித்தாந்த மரபுரிமையாகும்.

மேலே பரிசீலிக்கப்பட்ட லெனினிய எதிர்ப்புப் படைப்புக்கள், வலதுசாரி திருத்தல் வாதத்தின் பால் பட்டவையாகும். அதாவது மார்க்சிய—லெனினியச் சித்தாந்தத்தை, வர்க்க சமரஸ நிலைபாட்டிலிருந்து திருத்துவதற்கான முயற்சிகள். தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கும், முதலாளித்துவத்தை நியாயப்படுத்தும் கருத்துக்களைத் திணிப்பது கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளது பிரதிநிதிகளின் சர்வதேசக் கூட்டங்களில் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டது போல் (1957, 1960, 1969ம் வருடத்தியக் கூட்டங்கள்) இவ்வகையிலான திருத்தல் வாதம், தங்களது கோட்பாட்டின் புனிதத் தன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் சித்தாந்தப் போராட்டத்தை நடத்தி வரும் மார்க்சிய—லெனினிய வாதிகளுக்கு பெரும் அபயமாக நிற்கிறது.

''இடது சாரி'' திருத்தல் வாதம் அதாவது குட்டி முதலாளித்துவ தீவிர வாத நிலைபாட்டிலிருந்து கம்யூனிஸக்

கருத்துக்களைத் திசை திருப்பிக் குழப்புவதும், அதன வளர்ச்சியில் மார்க்சிய — லெனினியத்திற்கு எதிராக தாக்குதல்களைத் தொடுத்தது. 1960களில் ''மாவோயிஸத்'' தினால் மார்க்சிய — லெனினியத்திற்கு ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இது ஒரு வகை இடதுசாரி திருத்தல் வாத மாகும். மார்க்சிய-லெனினியத்தில் எதிர் வரும் வளர்ச்சி யனைத்தையும் மறுப்பதை மாவோயிஸம் வலியுறுத்துகிறது. மார்க்சிய-லெனினியத்திற்குப் பதில் தங்களது கிறுக்குத் தனமான தேசீயத் தற்புகழ்ச்சிக் கருத்துக்களை முன்வைக்க மாசே-துங் கும்பல் விழைந்தது. மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான, தொழிலாளி வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசீயத்தின் உலகு தழுவிய வரலாற்றுப் பாத்திரம், ஒரு புதிய வகையிலான கட்சி பற்றிய லெனினது ஆய்வியல், சோஷலிசத்தைச் சமைப்பதற்கான திட்டவட்டமான சட்டங்கள் பற்றிய கோட்பாடு போன்றவைகளை மாவோயிஸம் நிராகரித்தது. உண்மைகளைக் கற்றறிவதற்குப் பதிலாக, உலக வளர்ச்சியின் திட்ட வட்டமான சட்டங்களின் செயல்பாடுகளைக் கணக்கி லெடுத்துக் கொள்ளாமல், விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு வழியிலும் சோஷலிச வழி வாழ்க்கைக்கு, சோஷலிச உள்ளுணர்வுக்கு அவற்றை வளர்க்காமல், மாவோயிஸம் தலைவர்களது தவறிழைக்காத் தன்மையில் குருட்டு நம்பிக்கை கொண்டு, தலைவர்கள் இடுகின்ற கட்டளையை மக்கள் கைகட்டி வாய் பொத்தி நிறைவேற்ற வேண்டுமெனக் கோரியது.

மாவோயிஸம் என்றுமே சித்தாந்த தத்துவரீதியான கோட்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை மார்க்சியச் சொற் றொடர்களை வாய் வீச்சுத் தனமாக சுரண்டி அது உள்ள படியே இயக்கவியல் பொருள்முதல்வாதத்தையும் விஞ்ஞானக் கம்யூனிஸத்தையும் நிராகரிக்கிறது. அனைத்து முரண்பாடு களையும் முழுக்க முழுக்க வெளி மோதல்கள் எனக் குறைத்து அவற்றை ஆயுதங்களின் வன்முறை மூலமாகவே தீர்க்க

வேண்டுமென்கிறது. மானுடத்திற்கு எதிரான அதன் போர் வெறி, மனிதனின்பால், பொதுவாக உழைக்கும் மக்களின் பால் அதன் அருவருப்பான கண்ணோட்டம், அதன் மனச் சாட்சியற்ற அரசியல் போன்றவற்றினால், மாவோயிஸம் வெகுவேகமாக அதன் இடதுசாரித் திருத்தல்வாதப் போக்கி லிருந்து வெளிப்படையாக மார்க்சிய எதிர்ப்பு, லெனினிய எதிர்ப்புப் போக்குக்கு மாறியது. பொய்ம்மைத் தோற்றப் புரட்சிவாத வேஷத்துடன் சிலிநாட்டு ஆப்பிரிக்க பாசிஸ்டு களுடனும், இஸ்ரேல் தேசீய வாதிகளுடனும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் உலகின் மிக அதீதப் பிற்போக்குச் சக்திகளுடனும் மாவோயிஸம் நேச அணி காண முயல்கிறது. சீன நாட்டுடன் சுமுக உறவுகள் வைத்துக் கொள்ள சோவியத் மக்களின் தயார் நிலையை அறிவித்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் அதே சமயத்தில் எந்தவிதத் தயக்கமுமின்றி மாவோ வாதி களின் கோட்பாடு ‘‘முழுக்க முழுக்க சோஷலிசத் தத்துவங் களுக்கும் இலட்சியங்களுக்கும் அன்னியமாகிப் போனது மட்டுமல்லாமல், அதன் விளைவாக, சோஷலிசத்திற்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் போராட்டத்தில் ஏகாதி பத்தியத்தின் முக்கியமான எடுபிடியாகவும் ஆகிவிட்டது’’ என்பதையும் பிரகடனம் செய்தது.[57]

கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டத்தில் எந்தத் திரிபு வாதத்தை எதிர்த்தும் அதே போல் முதலாளித்துவ சித்தாந் தத்தை முழுமையாக எதிர்த்தும் லெனினியம் நடத்தும் போராட்டத்தில் இன்று உலகெங்கணுமுள்ள கம்யூனிஸ்டுகள் தங்களது சித்தாந்த நடவடிக்கைகள் முழுவதையும் அர்ப் பணித்துப் பணியாற்றுவது தலையாய கடமையாகும்.

## குறிப்புகள்

1. ஜி. ஏ. வெட்டர், ‘‘இயக்கவியல் பொருள் முதல் வாதம் சோவியத் யூனியனில் அதன் அமைப்பும் வரலாறும்,’’ வெர்லாக் ஹெர்டர், வியன்னா 1958, பக்கங்கள் 627-628.

2. எம். மெர்லியூ-போண்டி, இயக்கவியலின் வீர சாகஸங்கள், பாரிஸ் 1955, பக்கம் 273.

3. அதே புத்தகம், பக்கம் 47.

4. அதே புத்தகம், பக்கம் 279.

5. பார்க்கவும், எஸ். ஹீக், கார்ல் மார்க்ஸ் விட்டுச் சென்றதென்ன? சாட்டர்டே ரெவ்யூ 1956, எண் 6, பக்கம் 58.

6. எஸ். ஹீக், "மார்க்சும் மார்க்சியவாதிகளும்," டி. வான் நாஸ்டிரன்ட் கம்பெனி, நியூயார்க் 1955, பக்கம் 3.

7. அதே புத்தகம், பக்கம் 92.

8. ஜே. பி. சாத்ரே, இயக்கவியல் பகுத்தறிவு பற்றிய விமர்சனம், பாரிஸ் 1960, பக்கம் 22.

9. பார்க்கவும், ஆர். ஆரோன், "எந்திரத் தொழில் மயமாக்கப்பட்ட சமுதாயத்தின் வளர்ச்சியும் சமூகப் பிரிவுகளும்" பாரிஸ் 1956, பக்கம் 25.

10. கே. மெஹ்னர்ட். பீகிங்கும் மாஸ்கோவும், ட்யூட்ஸ்ச்-வெர்லாக்-அ ன் ஸ் ட ா ல் ட், 1962, பக்கம் 81.

11. பார்க்கவும், ஏ. மெய்யர், மார்க்சியம், சித்தாந்தம் மற்றும் நடைமுறையின் ஒற்றுமை, ஒரு நுண் ஆய்வுக் கட்டுரை, ஹார்வர்ட் யுனிவர்சிடி பிரஸ், கேம்பிரிட்ஜ், 1954.

12. பார்க்கவும், ஆர். என். காரு ஹண்ட், கம்யூனிஸ்ட் விளங்காத மொழிக்கு ஒரு வழி காட்டி, ஜியாப்ரே பிரஸ், லண்டன், 1957.

13. புத்தக விளக்கப் பட்டியல் பார்க்கவும்.

14. வி. ஐ. லெனின், **நூல்திரட்டு**, தொகுப்பு 31, பக்கங்கள் 39-46.

15. அதே புத்தகம், பக்கம் 43.

16. அதே புத்தகம், பக்கம் 43.

17. அதே புத்தகம், பக்கம் 43.

18. தியோடர். டபுள்யூ. அடோர்னோ, எதிர் மறை இயக்கவியல், பிராங்க்பர்ட் ஆம் மெயின், 1966, பக்கம் 147.

19. எம். ஹோர்க் ஹீமர். "தத்துவத்தின் உண்மையான செயல்பாடு நிலவுகின்ற சூழலை விமர்சிப்பதே." பிராங்க்பர்ட் ஆம் மெயின், பக்கம், 282.

20. கார்ல் மார்க்ஸ்–ஹெகலின் சட்டத்தின் தத்துவம் பற்றிய திறனாய்வுக்குப் பங்களிப்பு கார்ல் மார்க்ஸ்; பிரெடரிக் எங்கெல்ஸ், **நூல்திரட்டு**, தொகுப்பு 3, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, பக்கம் 182.

21. தியோடர். டபுள்யூ, அடோர்னோ, எதிர் மறை இயக்கவியல், பிராங்க்பர்ட் ஆம் மெயின், 1966, பக்கங்கள் 14-15.

22. அதே புத்தகம், பக்கம் 142.

23. அதே புத்தகம், பக்கம் 142.

24. அதே புத்தகம், பக்கம் 144.

25. அதே புத்தகம், பக்கம் 144.

26. அதே புத்தகம், பக்கம் 144.

27. அதே புத்தகம், பக்கங்கள் 144-145.

28. பார்க்கவும், எச். மார்க்யூஸ், சோவியத் மார்க்சியம், ஒரு நுண்ணிய பகுப்பாய்வு, கொலம்பியா யுனிவர்சிடி பிரஸ், லண்டன், 1958.

29. பார்க்கவும், பீட்டர் லோஸ்ச். 'அராஜக வாதம்.'' டார்ம்ஸ்டட். 1977, பக்கங்கள் 20-21.

30. ஒரு முழுமையான புதிய சமூக தொழில் நுட்ப இயற்கை மாதிரி, பெர்லின், (மேற்கு) 1976, பக்கங்கள் 113-114.

31. சோஷலிச விவகாரங்கள், லண்டன், ஜுலை-ஆகஸ்ட் 1977, தொகுப்பு 27, எண்-4 பக்கங்கள் 90-91.

32. அதே புத்தகம், தொகுப்பு 27, எண் 1, பக்கம் 28.

33. ஆர்பெய்ட்டர் ஸெய்டுங், வியன்னா. மே 15, 1958.

34. சோஷியலிஸ்ட், மாட்ரிட் 1977, எண் 1, பக்கம்2.

35. சோஷலிச விவகாரங்கள், ஜுலை-ஆகஸ்ட் 1977, தொகுப்பு 27, எண் 4.

36. அதே இதழ், பக்கம் 88.

37. ட்ரிப்யூன். லண்டன், நவம்பர் 11, 1977, எண் 45, பக்கம் 7.

38. சோஷலிச விவகாரங்கள்-செப்டம்பர்-அக்டோபர் 1977, தொகுப்பு 27, எண்5, பக்கம் 120.

39. அதே இதழ், பக்கம் 124.

40. ட்ரிப்யூன். நவம்பர் 11, 1977, எண் 45, பக்கம் 7.

41. டை நியூ கெஸல்ஸ்சாப்ட் பான், எண்10, அக்டோபர் 1978, பக்கம் 829.

42. அதே புத்தகம், பக்கம் 830.

43. அதே புத்தகம், பக்கம் 831.

44. அவந்தி! ஆகஸ்ட் 23, 1978, பக்கம் 7.

45. அதே இதழ்

46. எல். ஐ. பிரெஷ்னேவ். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையும், உள்நாட்டு வெளி உறவுக் கோட்பாட்டில் கட்சியின் உடனடிக் கடமைகளும் நோவாஸ்ட்டி

பிரஸ் ஏஜென்சி பிரசுராலாயம், மாஸ்கோ 1976. பக்கம் 55.

47. எல். ஐ. பிரெஷ்னேவ். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு வெளி உறவுக் கோட்பாட்டில் கட்சியின் உடனடிக் கடமைகளும் பக்கம் 33.

48. மெஹ்மத் பிலிப்போவிக் "லெனினியம் பற்றிய ஸ்டாலினின் விளக்க உரை." 1969. பக்கம் 15.

49. அதே புத்தகம்.

50. அதே புத்தகம், பக்கம் 138.

51. ஆர். கரௌடி லெனின் பிரெஞ்ச் யுனிவர் சிடி பிரஸ். பாரிஸ் 1968.

51. "கம்யூனிஸ்டுகளின் சித்தாந்த ஆயுதம்" ஏப்ரல் 1949, எண் 4, பக்கம் 462.

53. உதாரணத்திற்கு பார்க்கவும். ஜே. ஜே. கோப்லோட் லெனினிது அறிவார்ந்த வாழ்க்கைச் சரிதம் பற்றி எண் 143. பிப்ரவரி 1969. பக்கங்கள் 80-88 எச். மோம் ஜாண். மார்க்சியமும் துரோகி கரௌடியும் நாவ்கா பிரசுராலயம், மாஸ்கோ, 1974 (ருஷ்ய மொழியில்).

54. எர்னஸ்ட் பிஷ்ச்சர். உண்மையில் மார்க்ஸ் சொன்னதென்ன? வெர்லாக் பிரிட்ஸ் மோல்டெர்ன் வியன்னா - மூனிச் - சூரிச் 1968, பக்கம் 158.

55. எ. பிஷ்ச்சர். எப். மாரெக். உண்மையில் லெனின் சொன்னதென்ன? வெர்லாக் பிரிட்ஸ் மோல்டெர்ன் வியன்னா-மூனிச்-சூரிச் 1969, பக்கம் 11.

56. கார்ல் மார்க்ஸ்—லூயிஸ் போன பார்டின் 18வது ப்ரூமைர். கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ் **நூல்திரட்டு**, தொகுப்பு 11, பக்கம் 191.

57. எல். ஐ. பிரெஷ்னேவ்: சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு, வெளி உறவுக் கோட்பாட்டில் கட்சியின் உடனடிக் கடமைகளும் பக்கம் 18.

# முடிப்புரை

20ம் நூற்றாண்டில் மார்க்சிய—லெனினியத் தத்துவார்த்தச் சிந்தனை கடந்து சென்ற பாதை, சோஷலிசம், கம்யூனிஸத்தை நோக்கிய மனிதகுலத்தின் பொதுவான முன்னேற்றத்தோடு பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டதாகும். இந்த சகாப்தத்தில், மார்க்சிய-லெனினியத் தத்துவம் சுமுகமாக ஒரே நேர் வழியில் வளர்ந்து செல்கிறது எனக்கூறுவது தவறாகும். ஒரு கூர்மையான போராட்டம், இடர்ப்பாடுகள், பிழைகள், தவறுகள் அனைத்துமே நடந்தேறின. ஆனால் மார்க்சிய சித்தாந்தத்துக்கு, லெனினும் அவரது சீடர்களும் அவரைப் பின் பற்றியவர்களும் தந்த பங்களிப்பைச் சிறுமைப் படுத்துவது மிகப் பெரிய பிழையாகும் அல்லது வேண்டும் என்றே இந்தப் பரிணாமத்தின் உள்ளடக்சுத்தைக் குழப்புவதாகும்.

லெனினியக் கட்டத்தில், மார்க்சியத் தத்துவம், உலகத் தத்துவார்த்தச் சிந்தனையின் கருவூலத்தில் அளப்பரிய சேமிப்பைச் செலுத்தியுள்ளது. நவீன விஞ்ஞான அறிவாற்றலின் பிரதான போக்கை மேலும் வளர்க்கிறது. சமகாலத்து உலகப் புரட்சிப் பரிமாணத்திற்கும், சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும், சோஷலிச சமுதாயத்தில் நடைமுறையிலுள்ள சித்தாந்தத்திற்கும் லெனினியம் ஒரு விஞ்ஞானத் தத்துவார்த்த அடிப்படையாக, பரந்த அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முற்போக்கு மனிதகுலம் லெனினது

கருத்துக்களின்பால் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கும், அவற்றின் செல்வாக்குக்கும் ஒப்புவமை கிடையாது.

இன்று மார்க்சிய—லெனினியத்தத்துவம் புரட்சிகரச் சிந்தனைக்கும், புரட்சிகரச் செயல்பாட்டுக்கும் ஒரு ஆதர்சமாகத் திகழ்கிறது. அது நவீனகால காலகட்டத்தின் அடிப்படைச் சட்டங்களைப் புலப்படுத்தி, விஞ்ஞான நடைமுறைச் செயல்பாடுகளின் நவ நவமான சாதனைகளுடன் சமுதாய முன்னேற்றத்திற்காக இடைவிடாது போராடுகிறவர்களை ஆயுதபாணிகளாக்குகிறது.

அனைத்து நாடுகளிலுமுள்ள மார்க்சிய—லெனினியவாதிகள், அனைத்து உண்மையான புரட்சிப் போராளிகளதும், புதியதோர் வாழ்வைச் சமைப்பவர்களதும் ஒற்றுமையை வலியுறுத்தும் கோட்பாடுகளின் பதாகையை உறுதியாக உயர்த்திப் பிடிக்கிறார்கள்.

இந்து ஒற்றுமை, சித்தாந்த நடைமுறை ஒற்றுமை பற்றிய லெனினியக் கோட்பாடு பாட்டாளி வர்க்க சர்வதேசியம், கம்யூனிஸ்ட் கட்சி சார்புநிலை, முதலாளித்துவ, சமூகசீர்திருத்தவாத, திருத்தல்வாதச் சித்தாந்தங்களை எதிர்த்து சமரசமற்ற சித்தாந்தப் போராட்டம் ஆகியவற்றின்பால் முழுமையான அர்ப்பணிப்பை நம்பியே உள்ளது. இந்தக் கோட்பாடுகளின் உண்மையும் தீவிரத் தன்மையின் இயல்பும், நமது காலத்தின் வரலாற்று வளர்ச்சிகளினால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன.

மார்க்சிய—லெனினியத்தத்துவம் சமகாலத்துப் புரட்சிப் பரிணாமத்தையும் விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியையும் ஆழ்ந்து அறிந்துள்ளது. இன்றைய உலகில் எந்தவித முன் கருத்தையும் கொண்டிராத புலனாய்வாளர்களின் முன்னால், மேலும் மேலுமென அடிக்கடி அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கான விஞ்ஞான ரீதியான தீர்வுகள், லெனின்

கூறிய வழிகளைப் பயன்படுத்தும்போது காணக்கிடைக்கின்றன.

மார்க்சிய—லெனினியத் தத்துவத்தின் மிகமுக்கியச் செயல்பாடுகளில் ஒன்று, மனிதகுல மேதைகளின் தத்துவார்த்தச் சிந்தனையில் உதித்த மகோன்னதங்களை, மார்க்சினால் உருவாக்கப்பட்டு லெனினால் செழுமைப்படுத்தப்பட்ட விஞ்ஞானத்தில் மொத்த உருவகத்தைப் பெற்றுள்ள அந்த மகோன்னதங்களை, மக்கள் தொகையின் மிகப்பரந்த அளவிலானவர்கள் புரிந்து கொள்ளும்படி போதனை செய்வதாகும்.

சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கமும், அண்மைக்கால சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ்களிலும், சோவியத் யூனியன் கம்யூனியஸ்ட்கட்சி மத்தியக் கமிட்டியின் விரிவாக்கக் கூட்டங்களிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும். அமுலாக்கத்திற்கான ஆவணங்களும் இன்றையக் கட்டத்தில் லெனினது சித்தாந்த மரபுரிமையின் மகத்தான பொருத்தத்தை புலப்படுத்திக் காட்டுகின்றன. இது தொடர்பாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது காங்கிரஸ் (1981) தீர்மானங்களும், விஷயங்களும் மிக முக்கியமானவையாகும். இந்தக் காங்கிரசுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளர் லியோனித் பிரெஷ்னேவ் சமர்ப்பித்த அறிக்கையில் வலியுறுத்தியதாவது: ''சித்தாந்த ரீதியில் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கம் ஈட்டிய வெற்றிகளும், சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு ஒன்றியத்திலும் இதர சோஷலிச சமுதாய நாடுகளிலும் ஒரு புதிய சமுதாயத்தைச் சமைப்பதில் காணக்கிடைத்த வெற்றிகளும், மார்க்சிய—லெனினிய போதனைகளை ஆயுதமெனத்தரித்த கம்யூனிஸ்டுகள், உலகப் பரிணாமங்களின் சத்தையும், சாரத்தையும், சாத்தியக் கூறுகளையும் வேறு யாரையும் விட மிக ஆழமாகவும் சரியாகவும் பார்த்து அவற்றிலிருந்து தொழிலாளி வர்க்க நல உரிமை

களுக்கான போராட்டத்திற்கு தங்களது நாடுகளின் உழைக்கும் மக்களது போராட்டத்திற்கு, ஜனநாயகத்திற்கு, சமாதானத்திற்கு சோஷலிசத்திற்கான போராட்டத்துக்கு சரியான முடிவுகளை மேற்கொள்வதையே ஆதார சுருதியாகக் கொண்டிருக்கின்றன."*

1970களில், உலகத்தில் 94 நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தீவிரமாகச் செயல்பட்டன. மேற்கு ஐரோப்பாவில் மட்டும் 8 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கட்சி அணிகளில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். கம்யூனிஸ்டுகள் ஒன்றுபட்ட அமைப்புக்களைத் தோற்றுவித்தனர். தங்களது நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் நேசிப்பது போன்ற கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் பல அரசியல்கட்சிகளுடன் தொடர்புகளை வைத்து கூட்டணிகளையும் அமைத்தனர். இந்தக் கோட்பாடுகள் மக்களிடையே உண்மையான சமத்துவத்தையும் மானுட உறவுகளில் ஜனநாயகத்தையும் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு உழைக்கும் மக்களின்பால் அவர்களது தேவைகளின் பால், நல உரிமைகளின்பால் மரியாதையையும் மதிப்பையும் அடிப்படையாகக் கொண்டதாகும். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸில் நட்பு,ஒத்துழைப்பு உறவுகள் பரந்த அளவுக்கு நடைமுறைப்படுத்திக் காட்டப்பட்டன. இந்தக் காங்கிரஸ், 123 கம்யூனிஸ்ட், தொழிலாளர், தேசீய ஜனநாயகக் கட்சிகளின் தூதுக்குழுக்களையும் இதர கட்சிகளின் தூதுச்குழுவினரையும்,இந்த பூமி உருண்டையின் அனைத்துக் கண்டங்களையும் சார்ந்த 109 நாடுகளின்

---

* எல். ஐ. பிரெஷ்னேவ்: சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது காங்கிரஸுக்கு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினது அறிக்கையும்,உள்நாட்டு வெளிஉறவுக் கோட்பாடுகளில் கட்சியின் உடனடிக் கடமைகளும். பக்கம் 31.

பல்வேறு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் வரவேற்று உபசரித்தது.

இது சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின், லெனினால் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின், 20-ம் நூற்றாண்டின் வரலாற்று நிகழ்வுகளினால் ஒரே ஒரு உண்மையான போதனை—மெய்ஞ்ஞானம் என ஊர்ஜிதப்படுத்தப்பட்ட லெனினியத்தின் வளர்ந்தோங்கும் சர்வதேசிய அந்தஸ்துக்கு, மற்றுமொரு வெளிப்பாடாக இருந்தது.